பாரத ரத்னா புரட்சித் தலைவர்

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின்

எழுச்சிமிகு உரைகள்

1977 - 1987

‘பாரத ரத்னா’, புரட்சித் தலைவர்,

டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின்

எழுச்சிமிகு உரைகள்

1977-1987

மாண்புமிகு புரட்சித்தலைவி

அம்மா அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்

சிறப்பு வெளியீடு எண் : 13

ஜனவரி 2018

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
அரசு மைய அச்சகம்
சென்னை – 600 079.

எடப்பாடி K. பழனிசாமி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009

அணிந்துரை

சத்துணவுத் திட்டம் என்னும் சரித்திரத் திட்டத்தைத் தந்தவர்... 'தமிழுக்கென்று தனியாக பல்கலைக்கழகம் கண்டவர்... பாரதிக்கு நூற்றாண்டு விழா எடுத்து பார் எங்கும் புகழ் பரவச் செய்தவர்... ஒப்பில்லா வகையில் உலகத் தமிழ் மாநாடு நடத்தியவர்... தன்னிறைவுத் திட்டம் என்னும் தன்னிகரில்லா திட்டம் தந்தவர்... மக்கள் நலனுக்காக புதிய மாவட்டங்களை உருவாக்கியவர்... என நீண்டு கொண்டே போகும் வரலாற்றுச் சாதனைகளுக்கு சொந்தக்காரரான மக்கள் போற்றும் மகத்தான தலைவர், பொன்மனச் செம்மல், மக்கள் திலகம், பாரத ரத்னா, மாண்புமிகு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், 1977 ஆம் ஆண்டு முதல் 1987 ஆம் ஆண்டு வரை, தமிழ்நாட்டின் மக்கள் போற்றிய மகத்தான முதலமைச்சராக முத்திரை பதித்த காலத்தில், அவர் கலந்து கொண்ட பல்வேறு அரசு விழாக்கள், முக்கிய நிகழ்வுகள், புதிய திட்டங்களின் தொடக்க விழாக்கள் முதலான பல்வேறு முக்கிய நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகளை, ஆண்டு வாரியாகத் தொகுத்து, எழில் மிகுந்த நூலாக வடிவாக்கி தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை உங்கள் கரங்களில் வந்து சேர்த்துள்ளது.

புகழும் பெருமையும் கொண்டு, வரலாறு படைத்த மாண்புமிகு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா ஆண்டு முழுவதும் கொண்டாடப்படும் என்று மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த ஆணையை சிரம் மேல் கொண்டு, மாண்புமிகு அம்மாவின் வழி நடக்கும் தமிழ்நாடு அரசு, மாண்புமிகு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவினை தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மிகச் சிறப்பாக ஆண்டு முழுவதும் கொண்டாடி மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் புகழுக்குப் பெருமை சேர்த்தது.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாக்கள் மூலம், இதுவரை நடைபெற்ற (கன்னியாகுமரி மற்றும் சென்னை

மாவட்டம் நீங்கலாக) 30 மாவட்டங்களில், மொத்தம் 5397 கோடியே 52 லட்சம் ரூபாய் செலவில் 8,11,481 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும், 5127 கோடியே 11 லட்சம் ரூபாய் செலவில் 2329 திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும், 5712 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் 3200 புதியத் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் மகத்தான மக்கள் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இப்போது இருந்திருந்தால் மக்களுக்கு எத்தனைத் திட்டங்களை வாரி வழங்கியிருப்பாரோ, அவற்றிற்கு சற்றும் குறையாத அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் வழி நின்று திட்டங்களை மக்களுக்கு வழங்கியிருக்கிறோம்.

தமிழ்நாடு அரசின் சார்பில் மிகுந்த சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்படும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவின் ஓர் அங்கமாக **“பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் எழுச்சிமிகு உரைகள்”** என்னும் தலைப்பில் பொலிவோடும் புதுமையோடும் இந்நூலை உருவாக்குவதில் மிகச்சிறப்புடன் பணியாற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, அரசு செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர்கள், தமிழ் வளர்ச்சித்துறை அலுவலர்கள் ஆகியோருக்கு எனது வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த எழுதுபொருள் அச்சுத் துறையின் அலுவலர்கள் மற்றும் மைய அச்சக பணியாளர்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், தமிழ் வளர்த்த சான்றோர்கள் மீதும் நாட்டுக்கு உழைத்த நல்லவர்கள் பாலும், எத்தகைய மதிப்புக் கொண்டிருந்தார் என்பதையும், தமிழ்நாட்டை, தமிழ்நாட்டு மக்களை, தமிழ்மொழியை எந்த அளவு நேசித்தார் என்பதையும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக எவ்வாறெல்லாம் திட்டங்கள் தீட்டி செயல்படுத்தினார் என்பதையும் எடுத்துக் காட்டுகின்ற கருத்துக் களஞ்சியமாக திகழ்ந்து கொண்டிருக்கும் **“பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் எழுச்சிமிகு உரைகள்”** என்னும் தலைப்பிலான இந்நூலை தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் படித்து பயன் பெற்றிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

K. பழனிசாமி
தமிழ்நாடு முதலமைச்சர்

தோரண வாயில்...

ஒரு மனிதருடைய சிந்தனைகளும் செயல்களும்தான் அந்த மனிதரை எதிர்காலச் சந்ததியின் நினைவுகளிலும் வாழச் செய்கிறது. அதே நேரத்தில், சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளி இல்லாத அவர்களுடைய வாழ்க்கை முறை, வாழும் மனிதர்களுக்கு முன்மாதிரியாக அமைகிறது! அத்தகைய மகத்தான மாமனிதர்தான் ‘**பாரத ரத்னா**’, **புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்** அவர்கள்!

வசதியான குடும்பச் சூழலில் பிறந்த புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் தந்தையின் இறப்பிற்குப்பின் சொல்லொணாத் துயரங்களைச் சந்திக்க நேரிட்டது. சத்தியா தாயின் அரவணைப்பு ஒன்றே வாழ்க்கையின் ஆரம்பகாலச் இன்னல்களை எதிர்கொள்ள புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுக்குத் துணை நின்றது.

நாடக மன்றங்களில், நடிப்புக் கலையை தொடங்கி, திரைப்படத் துறையில் எட்டவொண்ணாச் சிகரத்தில் காலூன்றிக் கொடி நாட்டியவர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

திரைப்படத்தில் அவர் நடித்த கதாபாத்திரங்கள் போன்றே, வாழ்விலும் மகளிர் மீது மதிப்பும் மரியாதையும் கொண்டவராகவும்; கொடுமைகளை எதிர்கொண்டு முறியடிப்பவராகவும்; துயருற்ற மனிதர்களுக்குத் தோள் தந்து நிற்பவராகவும் – மொத்தத்தில் தூய தொண்டுள்ளம் கொண்ட மாமனிதராக வாழ்ந்து, சிறந்தவர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்!

திரைப்படத்தின் மூலம் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் புகழைப் பெற்றார். அந்தப் புகழைக் கொண்டு அவர் மக்களுக்குச் செய்த சேவையும், தொண்டும் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களைத் தமிழக முதல்வராகத் தகுதி பெறச் செய்தது. அந்தப் பதவியிலும் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் முத்திரை பதித்தார்கள்.

அத்தகைய மாமனிதர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழக முதல்வராக இருந்தபொழுது தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் நலத் திட்டங்களைத் தொடங்கி வைத்தும், சான்றோர்கள் பற்றியும், கலையுலக நிகழ்வுகளிலும் ஆற்றிய நல்லுரைகளை இந்த நூலில் தொகுத்துப் பதிவு செய்திருக்கிறோம்.

எதிர்காலத் தலைமுறையினருக்கும் சந்ததிகளுக்கும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களைப் பற்றி ஆய்வு மேற்கொள்ளும் ஆய்வாளர்களுக்கும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் பற்றாளர்களுக்கும் இந்த நூல் பேருதவி புரியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு என்றும் உண்டு.

மலர்க் குழுவினர்

பொருளடக்கம்

வ. எண்	பொருள்	பக்கம்

1977

1. தமிழ் மக்களின் தனித்தலைவர்..1
2. தடைகளைத் தகர்த்துக் கடமைகளை நிறைவேற்றுவோம்!..6
3. உறவுகள் தொடரட்டும்—வளரட்டும்!...7
4. தொண்டனாக, தோழனாகத் தோளோடு தோள் நின்று உங்களோடு இணைந்திருப்பேன்!..15
5. நமது தாயகம் தன்னிகரில்லாத பொலிவையும், தரங்குன்றாத வலிவையும் பெற உறுதி ஏற்போம்!.................... 29
6. இன்னுயிர் ஈந்தும் இந்தியச் சுதந்திரம் காப்போம்!.................. 35
7. இராஜாஜி கண்ட கனவை நனவாக்குவோம்!........................... 40
8. எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! 44

1978

9. வரலாறு படைப்போம்! வறுமையை வெல்வோம்!.......................51
10. சமுதாய மறுமலர்ச்சிக்கு உதவும் சாதனம் திரைப்படம்!.. 59
11. இளந்தளிர்களே, எதிர்காலச் செல்வங்கள்!................................ 64
12. நாட்டுக்கும் தமிழகத்திற்கும் உயர்வு தேடித்தாருங்கள்!... 67
13. உரிமையை விட்டுக்கொடுக்காமல் கடமையாற்றும் உடன்பிறப்புகள் 71
14. மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைக் காப்பாற்ற முயற்சிப்பேன்! 75
15. தியாகத்தின் அடையாளச் சின்னம்!...77
16. சமதர்ம சமுதாயத்தை உருவாக்க சபதமேற்போம்! 79

வ. எண்	பொருள்	பக்கம்

17. எல்லாரும் எல்லாம்பெற தொண்டாற்றுவோம்!........................ 86

18. அவர் ஒரு சகாப்தம்!.. 89

19. எதிர்கால மக்களின் வாழ்வுக்காக இளைஞர்கள் பாடுபடவேண்டும்!.. 90

20. குழந்தைகளின் வளர்ச்சிதான் நாட்டின் எதிர்காலம்............... 92

21. தாய்க்குலத்தின் சம உரிமைக்காக வாழ்க்கையைத் தியாகம் செய்தவர்!... 94

22. தமிழுக்குப் பெருமை சேர்த்தவர்! 95

23. உழைக்கும் வர்க்கம் உயரவேண்டும் உழைப்பவர் வசதி பெறவேண்டும்.!... 96

24. இசையச் செய்யும் இசை 99

1979

25. நாட்டு மக்களைப் பற்றித்தான் சிந்தித்துச் செயல்படுகிறது அரசு!.. 110

26. அச்சம் தவிர்க்க துணிச்சல் வேண்டும் கலைஞர்களுக்கு! 112

27. குழந்தைகளின் அறிவு முதிர்ச்சிதான் நாட்டை வளப்படுத்தும்!.. 114

28. கலாச்சாரத்தின் கண்ணாடி கைவினைப் பொருள்களே!..... 117

29. பல்வேறு நல்ல திட்டங்கள் உருவாக வாய்ப்பு ஏற்படும்!........120

30. பாருக்கு நல்ல பணி செய்வோம்!... 121

31. கனிம வளங்கள் நாட்டுக்கே சொந்தம்!.......................................127

32. சாதி பேதமற்ற சமுதாயம் அமைய சபதமேற்போம்...................130

33. அண்ணா அவர்கள் நூல்களை அரசே வெளியிடும்!.............133

34. “தவறு செய்வோர் திருந்திட....” 134

35. மாணவர்கள் யாருடைய தூண்டுதலுக்கும் இரையாகக் கூடாது!..137

வ. எண்	பொருள்	பக்கம்

1980

36. காமராஜரைப் போல வாழ்க்கையைக் கடைப்பிடிக்க வேண்டும்! 138

37. கலைஞர்களுக்குப் பாராட்டே ஊட்டச்சத்து! 140

38. அச்சம் தவிர்ப்போம்! அறவழி நடப்போம்! 141

39. சமாதானம், சமத்துவம், சகோதரத்துவப் பணியில் யுனெஸ்கோ ஆற்றிவரும் பங்கு மகத்தான பணியாகும்! 145

40. அத்தனைத் தடைகளையும் எதிர்த்து தொடர்ந்து வெற்றிபெற ஒத்துழைப்புத் தேவை! 149

41. நாட்டின் ஆண்மையைக் காப்பாற்றுவோர் காவல்துறையினரே! 154

42. ஒவ்வொரு குடிமகனின் நெஞ்சிலும் தேசிய ஒருமைப்பாடு நிலைக்க வேண்டும்! 158

43. நாட்டு மக்கள் ஒன்றுபட்டு வாழ்க! 165

1981

44. உலகத் தமிழர் அனைவரும் அறிவால் ஒன்றுபடுவோம்! 166

45. உலகத் தமிழ்ச் சங்கம் பற்றிய வரலாற்றுத் திரைப்படம்! 169

46. தமிழருக்கு, தமிழ்நாட்டிற்கு, தமிழுக்குத் தொடர்ந்து தொண்டாற்றுவோம்! 170

47. தமிழகம் தன் கடமையைச் செய்தே தீரும்! 173

48. திருக்குறளை இந்தியாவின் தேசிய நூலாக ஆக்க வேண்டும்! 175

49. கிராமத்தொழில்களால் கிராம மக்களின் பொருளாதாரம் முன்னேற வேண்டும்! 177

வ. எண்	பொருள்	பக்கம்

50. கட்டுப்பாடு, ஒழுங்கு, நேர்மை, பண்பாட்டுடன் நடந்து கொள்வதும் கலைதான்! 179

51. மாநிலங்களுக்கு உதவிட மத்திய அரசு முன்வர வேண்டும்! 183

52. அனைவரும் தமது ஆற்றலை, அறிவை, உழைப்பை சமுதாயத்துக்கு உதவும் வகையில் பாடுபடவேண்டும்! 186

53. அனைத்து மாவட்டங்களிலும் தமிழை ஆட்சிமொழியாக்கி வருகிறோம்! 189

54. சாதிக் கொடுமைகள் வேண்டாம் – அன்பு தன்னிற் செழித்திடும் வையம்! 190

55. வாழ்க சமத்துவ சமுதாயம்! 196

56. கலைஞர்கள் எச்சரிக்கையோடும், துணிவோடும் இருக்க வேண்டும்! 201

57. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இருப்பதற்கு சமுதாயத்தின் உரைகல்லாகக் காவலர் இருக்க வேண்டும்! 203

58. தஞ்சையில் தமிழ்ப்பல்கலைக்கழகம் புனிதமான தமிழகக் கோயில் 205

59. சென்னையில் புறநகர் மின்சார இரயில் நிலையம்! 208

60. யாரிடம் எந்தச் செய்தி வருகிறது என்பதன்று; எத்தகைய கருத்து வருகிறது என்பதைப் பார்த்து அதை எடுத்துச் செயல்படுகிறோம்! 210

61. 10 முதல் 15 வரை உள்ள குழந்தைகள்தான் 21ஆம் நூற்றாண்டில் உலகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய குடிமக்களாக இருப்பார்கள்! 212

62. தியாகம் செய்தவர்களை, மக்கள் மனதில், என்றும் நிலைத்து நிற்க வைக்கும் அடையாளச் சின்னமாகப் பதக்கம் கொடுக்கப்படுகிறது! 215

வ. எண்	பொருள்	பக்கம்
63.	ஏற்றத்தாழ்வை அகற்றுவோம்!	217
64.	புதியதோர் சமுதாயம் அமைப்போம்!	220
65.	படத்தின் மையக் கருத்துக்களை வைத்துப் பாத்திரங்களை உருவாக்க வேண்டும்!	224
	1982	
66.	தமிழறிஞர்கள் வாழ்ந்தால்தான் எங்கள் பணியைத் தொடர முடியும்!	225
67.	ஒழுங்காக நடைபோடுவதும், ஒழுங்காகப் பணியாற்றுவதும் அனைவருடைய இன்றியமையாத கடமை!	229
68.	கைத்தறித்தொழில் வாழவேண்டும்! வளரவேண்டும்!	233
69.	வேர் நிலைத்தால்தான் மரம் நன்கு வளரும்	238
70.	தேசிய ஒருமைப்பாட்டுக்கு இலக்கணம்!	242
71.	பழைய மதிய உணவுத்திட்டத்திற்கும், புதிய சத்துணவுத் திட்டத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன ?	244
72.	சத்துணவுத் திட்டம் சமுதாயப் புரட்சித்திட்டம்!	251
73.	தன் தாயை விட, பல சமூக நீதிகளால் நோய் வாய்ப்பட்டிருக்கும் பல தாய்மார்களுக்கு வாழ்வளிக்கச் செய்த காமராஜர்!	256
74.	எங்கெங்கே அன்பையும் பண்பையும் காணுகிறோமோ அங்கெல்லாம் இறைவனைக் காண்கின்றோம்!	259
75.	இன்னொரு மாநிலத்திலிருந்து மின்சாரம் வாங்குவதைத் தவிர்த்திடும் வகையில் மின்சார உற்பத்தியை நாம் பெருக்கிக் கொள்ள வேண்டும்!	265
76.	மாணவர்கள் தங்களுடைய கடமையில் இருந்து சிறிதும் விலகாமல், பொறுப்பை உணர்ந்து படிக்க வேண்டும்!	268

வ. எண்	பொருள்	பக்கம்

77. நமது கடமை! 272

78. சமத்துவ சமுதாய மலர்ச்சியே விடுதலைத் திருநாளின் வெற்றி! 275

79. சுதந்திரம் என்பது தன்மானத்தைக் காப்பது! 281

80. தமிழைக் காத்து, வளர்த்துப் பெருமை சேர்த்து, மொழியால், தமிழினத்தை ஒன்றுபடுத்த முடியும் எனக் கூறும் நாள்! 284

81. சத்துணவுத் திட்டத்தால் பெற்றோர்களுக்குச் சுமை குறைகிறது! 285

82. வனத்தைப் பாதுகாப்பது நாட்டின் வளத்தைப் பாதுகாப்பதாகும்! 288

83. அண்ணாவின் எண்ணத்தைச் செயல்வடிவம் பெறச் செய்கிறோம்! 291

84. நாட்டின் நன்மையே நமது குறிக்கோளாகட்டும்! 293

85. இதயத்தின் குரல்! 297

86. முதியோருக்கும் கல்வி தேவை! 300

87. ஈடு இணையற்ற கவிஞர் பாரதியார்! 304

88. தாயகத்திற்குச் சிறப்புச் சேர்ப்பீர்! சமுதாயத்திற்கு உயர்வு தருவீர்!! 311

1983

89. பால்வளம் பெருக்கி, உடல் நலம் வளர்ப்போம்! 320

90. சகோதர பாசத்திற்கு எடுத்துக்காட்டாக நடக்கின்ற விழா! 323

91. சொன்னதைச் செய்வோம்! 326

92. என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்ச்சி! 330

வ. எண்	பொருள்	பக்கம்

93. நோயை விரட்டுங்கள்; மனத்தைப் பண்படுத்த உதவுங்கள்! 332

94. குடிசையிலே இருக்கிறவர்களை நல்ல வீடுகளில் அமர்த்த வேண்டும்! 336

95. ஒருமைப்பாடு முக்கியம்! 339

96. இந்திய வல்லுநர்கள் செயல் வீரர்கள்! 340

97. சமத்துவ இலட்சியம் வெல்க! 341

98. பசியைப் போக்கிப் படிப்பை வளர்ப்போம்! 345

99. அண்ணாவின் கனவு நனவாகிறது! 348

100. அண்ணாவின் தத்துவங்களை ஆய்வு செய்ய சென்னைப் பல்கலைக் கழகத்தில் தனிப்பிரிவு! 349

101. வயிற்றுக்கு உணவு, அறிவுக்குப் படிப்பு, வாழ்க்கைக்கு வேலை! 352

102. பதவி தேடி வரவேண்டும்; தேடிப் போகக்கூடாது! 355

103. டாக்டர் அம்பேத்கர் பெயரில் நீரிழிவு ஆராய்ச்சி மையம்! 357

104. மாணவ, மாணவியர்களுக்குத் தொழிற் கல்வியையும் சேர்த்து சொல்லிக் கொடுக்கவேண்டும்! 361

105. கடமையைச் செய்யும்போது எச்சரிக்கையுடன் செயல்படவேண்டும்! 362

106. இசையின் மூலம் அமைதியையும் கோப தாபத்தையும் காட்ட முடியும்! 364

107. களஞ்சியப் பணியில் தமிழ்ப் பல்கலைக் கழகம்! 367

108. காவிரிப் பிரச்சினையில் நல்ல முடிவு ஏற்படும்! 369

வ. எண்	பொருள்	பக்கம்
109.	கெட்டதை மறக்க வேண்டும் நல்லதை நினைக்க வேண்டும்!	371

1984

வ. எண்	பொருள்	பக்கம்
110.	மக்கள் எவ்வழி அரசும் அவ்வழி!	374
111.	இனிய தமிழுக்காக இந்த அரசு எதையும் செய்யும்!	377
112.	வெள்ளி விழாக் கண்ட மின்வாரியம்!	383
113.	நமது கலை நாட்டு மக்களுக்காக – மக்களை மகிழ்விப்பதற்காக!	384
114.	ஆசிரியர்கள் பிரச்சினை என் சொந்தப் பிரச்சினை!	386
115.	அன்னை தெரெசா பாராட்டிய சத்துணவுத் திட்டம்!	389
116.	கடமையைச் செய்கின்றவர்கள், ஒன்றே குலம் என்ற கொள்கைக்குச் சொந்தக்காரர்கள்தான்!	390
117.	திட்டங்கள் கிராமத்திலிருந்து நகரங்களுக்குச் செல்ல வேண்டும்!	392
118.	தமிழறிஞர்களைத் தமிழக அரசு மறக்காது!	394
119.	சிறப்புக்குரிய தமிழகக் காவல்துறை!	395
120.	தமிழினத்தின் அற்புத முத்து!	397
121.	மக்கள் கூட்டமும், அறிஞர் ஆதரவும், இளைஞர் எழுச்சியும் ஒன்றுபட்டால் வெற்றி காணமுடியும்!	398
122.	மக்களுக்கு நன்மை அளிக்கும் பல திட்டங்கள் நிறைவேறும்!	399
123.	பதவி வரும்போது பணிவு வர வேண்டும்!	401
124.	பெண்களுக்குள்ள உரிமை, ஆண்களுக்கும் வேண்டுமென்று வாதிடும் நிலை வரும்!	403

வ. எண்	பொருள்	பக்கம்
125.	தொலைநோக்கோடு வருங்காலத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்!	405
126.	தொலைக்காட்சியில் மாநில மொழிகளைப் பயன்படுத்தி ஒலிபரப்பைச் செய்க!	407
127.	ஓட்டுநரும் நடத்துநரும் மனிதர்கள்தாம்!	410
128.	நாட்டின் ஒற்றுமைக்குத் தொலைக்காட்சி பாடுபடவேண்டும்!	412
129.	அன்று சொன்னோம்! இன்று செய்கிறோம்!	415

<u>1985</u>

வ. எண்	பொருள்	பக்கம்
130.	நதி நீரைப் பங்கீடு செய்ய, மாநிலங்களுக்கிடையே ஒத்துழைப்பு தேவை!	419
131.	ஏழைகளின் நம்பிக்கை நட்சத்திரம்!	420
132.	வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டம்!	422

<u>1986</u>

வ. எண்	பொருள்	பக்கம்
133.	தமிழ்க் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகத்தை நிலைநாட்ட வேண்டும்!	427
134.	கரும்புச் சக்கையைப் பயன்படுத்திக் காகித உற்பத்தி செய்யும் தொழிற்சாலை இந்தியாவிலேயே இது ஒன்று தான்!	428
135.	பிரிவுகளைத் தூண்டும் தீய சக்திகளை ஒழிப்போம்!	429
136.	நாட்டு விடுதலைப் போரில் தூத்துக்குடிக்குத் தனிச் சிறப்புண்டு!	430
137.	ஒற்றுமை, அமைதி, முன்னேற்றம் என்கிற உயர்ந்த நெறிகளுக்காக ஓரணியில் திரள்வோம்!	432

வ. எண்	பொருள்	பக்கம்

138. ஏழை மக்களுக்கான திட்டங்களை நிறைவேற்ற, பொதுமக்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும்! 433

1987

139. மக்கள் முன்னேற்றமே என் மூச்சு! 435

140. பாரதியார் மகாகவி! 437

141. அரசின் வளர்ச்சிப் பணிகளின் பலனை முழுமையாக மக்கள் பெறவேண்டும்! 439

142. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசு மக்களுக்காகப் பாடுபடும் அரசாக இருக்க வேண்டும்! 442

143. ஏழை, எளிய மக்களுக்கான திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது! 443

144. மக்கள் முன்னேற்றமே என்னுடைய குறிக்கோள்! 444

145. அனைத்து கிராமங்களும் குடிநீர் கிடைக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம்! 445

146. நாடு போற்றும் நல்லவர்! 447

147. என் மீது அக்கறை காட்டிவருபவர் எழுதிய நூல்! 448

148. என்னை மக்களிடமிருந்து யாராலும் பிரிக்க முடியாது! 449

149. பாமரரைப் படிக்க வைத்த பத்திரிக்கையாளர்! 452

150. மக்கள் சேவையில் ஈடுபட முழுமையாக அர்ப்பணித்துக் கொள்வோம்! 454

151. வாழ்க சுதந்திரம்! வணங்குவோம் தியாகிகளை! 457

❖ ❖ ❖

தமிழ் மக்களின் தனித்தலைவர்

"அண்ணா"

இந்தப் பெயர் இன்று இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு மகத்தான சக்தியாகத் திகழ்கிறது. இரும்புத் திரை போட்டு மாற்றார்களால் இருட்டடிப்புச் செய்யப்பட்டு வந்த அந்தச் சக்தி, மறைக்க முடியாத ஆற்றல் மிக்க சக்தியாக உருவாகியிருக்கிறது. அரசியலின் ஆழ்ந்த ஞானம், சமூகத்தைப் பற்றிய தெளிவான அறிவு, மனித உள்ளத்தைப்புரிந்து கொள்ளும் மன தத்துவம், பொருளாதாரக் கூறுபாடுகள், கலாச்சார வரையறை, விஞ்ஞான சாதனைகள் போன்ற பல துறைகளையும் உணர்ந்துகொண்டு, அவற்றின் உண்மையான கோட்பாடுகளில் இரண்டறக் கலந்து, மறுமலர்ச்சி சக்தியாக அந்த சக்தி மலர்ந்திருக்கிறது.

பல துறைகளிலும் ஆழ்ந்த அறிவு பெற்றுள்ள இந்தக் காரணத்தாலேயே, தெளிந்த உள்ளங்களின் ஒருமித்த பாராட்டையும், பெருமதிப்பையும் அந்தச் சக்தி பெற்றிருக்கிறது. இந்திய அரசியலில் ஜனநாயகத்தை முழு அளவில் நம்பியிருந்த, வளர்க்க விரும்பிய உண்மையான ஜனநாயக அரசியல் அறிஞர் அண்ணா அவர்களே. எதிரிகள் ஆனாலும் அவர்களுடைய கருத்தையும் கேட்க வேண்டும் என்ற நெறியையும், எதிரிகளையும் தம் கருத்துக்கு இசையவைக்கும் ஆற்றலையும் படைத்துக் காட்டி, பண்புமிக்க அரசியலை இந்த நாட்டில் உருவாக்கியவர் அண்ணா அவர்கள்.



அறிஞர் அண்ணா அவர்களின் அரசியல் நுழைவுக்குப் பிறகுதான், வெவ்வேறு கருத்துடையவர்கள் ஒரே மேடையில் சந்தித்து விவாதிக்க முடியும் என்ற உயர்ந்த அரசியல் நாகரிகம் உருவாக ஆரம்பித்தது. அரசியல் இயக்கம் என்பது உணர்ச்சிகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் இடையே போடப்படுகிற ஒரு 'கணக்கு' என்ற நிலையை மாற்றி, ஓர் இயக்கத்தில் ஈடுபட்ட அத்தனை பேரையும் குடும்ப உணர்ச்சி கொள்ள வைக்கும் ஒரு புதிய சித்தாந்தத்தை ஏற்படுத்திய தத்துவவாதி அண்ணா அவர்களே. விஞ்ஞானத்திலே ஈடுபட்டவர்கள் மனித வாழ்க்கை முறையைப் பற்றியோ, பண்பாட்டைப் பற்றியோ அதிகம் சிந்திப்பதில்லை ஏன், சிந்திப்பவர்களே குறைவு என்றும் கூறலாம்.

ஆனால், விஞ்ஞானம் ஏனைய துறைகளோடு கலந்து, பண்பாட்டோடு இணைந்து, மனிதனை ஆக்கும் சக்தியாக வளர வேண்டும் என்று விரும்பியவர் அண்ணா அவர்கள். மனிதர்களுடைய மனம் எதையும் சரியாக எண்ண வேண்டும் என்பதும், அந்த எண்ணத்தை வளர்ப்பதற்கு எல்லாவற்றையும் பற்றிய அறிவை அவர்கள் பெற்றே ஆக வேண்டும் என்பதும் அண்ணா அவர்களின் நோக்கம்.

பொருளாதாரத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு சமூக மேம்பாட்டுக்குரிய தேவைகளைப்பற்றிச் சிந்திப்பது அரசியல்வாதிகளிடையே வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால், மனித மனத்தையும், பொருளாதாரத்தையும், இயற்கைத் தத்துவத்தையும் ஒன்றாக இணைத்து, ஒரு புதிய சமுதாயத்தைக் காண கனவுக் கண்டுகொண்டிருந்தவர், அண்ணா அவர்கள்.

ஆற்றல் மிக்கவர்கள் மட்டுமே அரசியலில் தலைவராக வர வேண்டும் என்றிருந்த இலக்கணத்தை மாற்றி, ஆற்றல் மட்டும் போதாது, அன்பும், நல்ல பண்பும் வேண்டும், அப்பொழுதுதான் வளமான ஜனநாயகம் அரசியலில் வளர முடியும் என்ற புதிய அரசியல் கோட்பாட்டை உருவாக்கி, அதற்கு இலக்கியமாக ஓர் இயக்கத்தை நடத்திக் கொண்டிருந்தவர் அண்ணா அவர்களே!

எல்லோராலும் "தகுதியுள்ள ஓர் உயர்ந்த ஸ்தானத்தைப் பெறும் அரசியல்வாதி" என்று பாராட்டப்படும் நிலை யாருக்கும் எளிதில் கிடைத்து விடாது. எந்தத் தனி மனிதரும் பிறரால் பாராட்டப்படும் போதோ, உற்சாகப்படுத்தப்படும்போதோ, பெருமைப்படுத்தப்படும்போதோ தன்னையே மறந்து விடும் நிலையை அடைவது தவிர்க்க முடியாததாகும்.

சர்வாதிகார நிலைமையில் செயல்படும் போக்கு அந்தக் குறிப்பிட்ட மனிதரிடம் உண்டாவதும் இயற்கையாகும். ஆனால், அண்ணாவைப் பொறுத்தவரையில் இது நேர்மாறானது. எவ்வளவுக்கெவ்வளவு அவர் உயர்த்தப்பட்டாரோ, தோழர்கள், தொண்டர்கள், பின்பற்றி வருபவர்கள் முதலியவர்களால் எவ்வளவுக்கெவ்வளவு பாராட்டப்பெற்றாரோ– அந்த அளவுக்கு மனத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு முன்னிலும் அதிக அடக்கத்தோடு, தன்னை மிக மிகச் சாதாரண குடிமகனாக்கிக் கொள்ளும் பண்பை அண்ணாவிடத்தில் நான் கண்டேன்.

உலக அனுபவமே பெறாத சிறு குழந்தைகளுக்கும் கூடப் பழி வாங்கும் நோக்கம் உண்டாவது தவிர்க்க முடியாததாயிருக்கிறது. ஆனால், அண்ணா அவர்களோ, தன்னையே இகழ்ந்து தலைகுனியச் செய்யும் அளவுக்கு ஏசிச் செயல்படும் ஒருவர், தமது கட்சிக் கட்டுப்பாட்டுக்குள் இருப்பவராயிருந்தால் கூட, தம் கட்டளையை மீறிக் கட்சியில் இருக்கவே முடியாதவர் என்றாலும் கூட, அவர் மேல் அனுதாபத்தைச் செலுத்துவாரே தவிர– அவருக்காக மற்றவரிடம் பரிந்து வாதாடுவாரே தவிர– பழிவாங்கும் உணர்வு அவர் உள்ளத்தில் இடம் பெறாத ஒன்றாகும்.

அண்ணா அவர்கள் சொல்லியிருக்கும் ஒரு வாக்கியமே இதற்கு உதாரணமாக அமைந்திருப்பதைச் சொல்லலாம். “என்னை யார் வேண்டுமானாலும் வெறுக்கட்டும்: என்னை அழித்துவிடவே முயலட்டும். ஆனால் நான்மட்டும் யாரையும் இழக்க முடியாது. அதைச் செய்ய வேண்டுமென்றால் அதற்கு வேறு ஆளைப் பாருங்கள்”. அவர்தான் அண்ணா! தமிழ் மக்களின் தனித் தலைவர். ஆனால் சில சமயம், இவருடைய நல்ல பண்பைச் சிலர் தங்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்துகிறார்கள் என்று தெரிந்தும்கூட அவர்களும் ஒரு காலத்தில் திருந்தி நல்வழிக்கு வந்து விடுவார்கள் என்று நம்பிக் காத்திருந்தவர் நம் அண்ணா. பலமுறை அப்படி நிறைவேறியும் இருக்கிறது. தம்முடைய கட்சி வெற்றிபெற வேண்டும் என்பதற்காகச் சமுதாய நலனையோ, தனிமனிதர்களின் வளர்ச்சியையோ, சிந்திக்காமல் செயல்படுவதை அறவே வெறுத்தவர் அண்ணா. அவருக்குத் தனி மனிதர்களின் வளர்ச்சியும், அதன் மூலம் சமுதாய வளர்ச்சியுமே முக்கியம்.

கட்சி என்பது என்ன? பல மனிதர்களின் சேர்க்கைதானே? சமூகமும் அப்படித்தானே! தனி மனிதர்களை வளர்க்க முடியாத கட்சி, சமுதாயத்தை எப்படி வளர்க்க முடியும்? அதனால் தமது கட்சியில் உள்ள எல்லோருமே அறிவிலோ, அனுபவத்திலோ, திறமையிலோ, தியாக உணர்விலோ, தகுதியிலோ குறைந்தவர்களாக இருக்கக் கூடாது என்று அவர் கருதினார். பொதுவாகவே அரசியல் கட்சிகளில் உள்ள தலைவர்கள் திறமை மிகுந்த பிறர் தங்கள் கட்சிக்குள் வந்தால், எங்கே தங்களுடைய பதவிக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று அஞ்சுவதைக் காண்கிறோம். இதற்கு மாறாக அண்ணா அவர்கள், அறிவும், திறமையும் மிகுந்தவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகக் கட்சியில் இருக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு கட்சிக்கு நல்லது என்று கருதியவர். அவர்களை வரவேற்கவும் செய்தார்; வளர்க்கவும் செய்தார். வளர்ந்த கடாவே மார்பில் பாய்வது அரசியல் இயக்க வரலாறுகளிலே வழக்கமாக நடைபெற்று வருகிற சம்பவம் என்றாலும் கூட, அப்படிப்பட்ட தீய சக்திகளால் தம்மை அழித்துவிட முடியாது என்ற தன்னம்பிக்கையும், ஆற்றலும் படைத்திருந்தவர்.

எத்தனையோ அரசியல் கட்சிகளில் ஒவ்வொரு தகுதியில் சிறந்தவர் வளர்வதைக் கண்டிருக்கிறோம். ஆனால், அழகு தமிழில் எழுதக் கூடிய ஆற்றல் பெற்றோரை, உணர்ச்சிமிக்க தமிழில் உரை நிகழ்த்தும் திறன் மிக்கோரை, புதுமைக் கருத்துப்படைக்கும் சிறப்பு வாய்ந்த நாடக ஆசிரியர்களை, துள்ளும் தமிழ் நடையிலே கவிதைகள் பொழியும் நல்ல பல கவிஞர்களை, பகுத்தறிவுடன், இன்பத்தைக் கலந்து

அளிக்கும் இலட்சியம் உள்ள கலைஞர்களை, பண்புமிக்க அரசியலை நடத்தக்கூடிய தகுதிமிக்க தலைவர்களை இன்னும் பலப்பல அரிய சக்திகளையெல்லாம் இந்த நாட்டில் தோற்றுவித்திருக்கும் பேராற்றல் மிக்க மாபெரும் சக்தி, அறிஞர் அண்ணா அவர்கள் தான் !

இவரால் தோற்றுவிக்கப்பட்டவர்களில் பலர் வேறு இயக்கங்களில் இருப்பார்கள். ஆனால் தோற்றுவிக்கும் சக்தியாக இருப்பவர் அவர் என்பது நான் கண்கூடாக அறிந்த உண்மை! எத்தனையோபேர் தொண்டர்களால், தலைவர்களாக்கப்படுகின்றனர். ஆனால், அண்ணாவின் ஸ்தானம் யாராலும் அளிக்கப்பட்டதில்லை. அந்த ஸ்தானத்துக்காகவே அவர் உருவானவர்! அவருடைய செயல் அவருக்கு அந்த ஸ்தானத்தைக் கொடுத்ததே தவிர, பிறருடைய செயலால் கொடுக்கப்பட்டதுமில்லை: பிறரிடமிருந்து வாங்கிக் கொடுக்கப்பட்டதுமில்லை. அவருக்கு என்று இருந்தது அந்த ஸ்தானம். அவருக்கே சொந்தமாகிவிட்டது அந்த ஸ்தானம். இந்த உயர்ந்த ஸ்தானத்தின் ஏகப் பிரதிநிதியாகத் திகழ்ந்த அவர், மக்களின் பிரதிநிதிகள் என்ற பெயரில் ஆட்சி நடத்திய ஆட்சியாளர்களின் அடக்குமுறைக்கும், எதிர்ப்புகளுக்கும் ஈடு கொடுத்து பொது இயக்கங்கள், போராட்ட இயக்கங்கள் ஆகியவற்றை நடத்துகிற முறையில், அமைதியையும் அற வழியையும் தாம் துன்பத்தை ஏற்றுக்கொண்டு, பிறருக்குத் துன்பம் தராத உள்ள பண்பையும் மேற்கொண்டதில் காந்தியடிகளுக்கு இணையாக விளங்கினார்!

அண்ணாவின் எழுத்து, மனித உள்ளத்தைப் பண்படுத்தும்! அண்ணாவின் பேச்சு மனிதனை மனிதனாக்கும்! அண்ணாவின் சிந்தனை நாட்டின் நலிவைப் போக்கும்! அண்ணா சிரிப்பார், தம்மை இழிவுபடுத்துபவர்களைப் பார்த்து, அண்ணா கண்ணீர் சிந்துவார்: எதிரிகளேயானாலும்கூட அவர்களுக்கு ஏற்படும் துன்பத்தைக் காணச் சகிக்காமல் அண்ணா வெகுண்டெழுவார். பிறர் ஜாதி பேதத்தை வியாபாரமாக்கும்போது, அண்ணா தொல்லைப்படுவார்; மக்களுக்கு அரசியல் விழிப்பு ஏற்படுவதற்காக அண்ணா நடிப்பார்; சமூகத்தின் சீரழிவைப் போக்குவதற்காக அவர் ஒரு புதிய சமுதாயத்தின் சிற்பி.

திறமை, தந்திரம், கண்டிப்பு இவற்றையெல்லாம் கடந்த பாச உணர்வுத் தீ கொழுந்து விட்டு எரிய அந்தப் பண்புச் சுடர் ஒளி வீசுகின்ற மனித குலத்தின் தத்துவவாதி! பழைமையையும் புதுமையையும் இணைத்து, பாசத்தின் அடிப்படையில் ஜாதி பேதம் போன்றவைகளை ஒழித்து, மனித இனத்தை ஒன்றாக்கிய அரசியல் ஞானி! விஞ்ஞானத்தில் மெய்ஞ்ஞானத்தைக் கலந்து, வாழ்க்கையில் வளம் பெருகச் செய்து, “அன்பு” என்னும் அகன்று விரிந்த சமதர்மக் கோட்பாட்டின் செந்நெறிகளைச் செயற்படுத்தும் இலட்சியத்தை மேற்கொண்டு, புதிய சமுதாயத்தைத் தோற்றுவித்த வழிகாட்டி! அவர்தான் அண்ணா.

(1977ஆம் ஆண்டு பேறறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி சென்னையில் ஆற்றிய உரை)

தடைகளைத் தகர்த்துக்
கடமைகளை நிறைவேற்றுவோம்!

அன்புக்குரிய தாய்க்குலமே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புகளே! இதயதெய்வம் அண்ணாவின் மீது ஆணையிட்டு, இங்கே உறுதி எடுக்க விரும்புகிறேன். அங்கு (இராஜாஜி மண்டபத்தில்) நடந்தது அரசாங்கச் சடங்கு. ஆனால், இங்கே நடப்பது உங்களின் கட்டளையை எதிர்பார்த்து நடக்கும் சடங்கு. “மக்கள் குரலே மகேசன் குரல்” என்ற அண்ணாவின் தத்துவப்படி மக்களின் பிரதிநிதிகள் என்ற எண்ணம் தவறாமல் இந்த அரசாங்கத்தை நடத்துவோம். எங்கள் அமைச்சரவையின் சார்பில் தமிழகத்தில் உள்ள மக்களுக்கும், இந்தியத் துணைக்கண்டத்தின் பிற மாநிலங்களில் வாழ்கிற தமிழ் மக்களுக்கும் நாங்கள் உழைப்போம்.

மக்களின் எண்ணங்களை – மக்களின் விருப்பங்களை – சட்டமாக்கவும், அவர்களது தேவைகளை நிறைவேற்றவும் தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சட்டமன்றத்துக்கு அனுப்பப்படுகிறார்கள்” என்று அமரர் அண்ணா அவர்கள் சொன்னதைப்போல அதனை உள்ளத்திலே இருத்தி, இலஞ்ச லாவண்யம் இல்லாத, ஊழலற்ற, நீதித்துறையில் நிர்வாகம் தலையிடாத அரசை நடத்துகிற மாபெரும் பணியைச் செவ்வனே செய்ய உயிரைக் கொடுத்தாகிலும் பாடுபடுவோம். எங்களின் வாழ்வு வசதிகள் அத்தனையும் இழக்க வேண்டிய நிலை வந்தாலும் அதற்காக எதிர்ப்படுகிற அத்தனை தடைகளையும் எதிர்த்து எங்கள் கடமைகளை நிறைவேற்றுவோம். இதனை அமரர் அண்ணா அவர்களின் மீது ஆணையிட்டு அமைச்சரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பொழுது உங்களது ஆசி பெற்று எங்களது பணியைத் தொடரச் செல்கிறோம்.

அண்ணா நாமம் வாழ்க!

(1977ஆம் ஆண்டு முதல்முறையாக முதலமைச்சராகப் பதவியேற்ற பின்னர், அண்ணா சிலை அருகே அமைக்கப்பட்டிருந்த பிரம்மாண்டமான மேடையில் ஆற்றிய உரை)

உறவுகள் தொடரட்டும்–வளரட்டும்!

சில நேரங்களில் ஒரு சிலருக்குக் கிடைப்பதற்கரிய வாய்ப்புக் கிடைப்பதுண்டு. அதைப்போன்ற ஒரு வாய்ப்பு இன்று எனக்குக் கிடைத்திருக்கிறது.

இங்கே பேசிய மாண்புமிகு நீதிபதி (இஸ்மாயில்) அவர்கள் இந்த நூலைத் தேர்வு செய்த குழுவில் ஒருவராக இருந்த காரணத்தால், இந்த விழாவில் கலந்து கொள்வதற்கு அவருக்குத் தகுதி இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

அவரைப்பற்றி, எழுத்தாளர் மத்தியில் அவரது தமிழறிவைப் பற்றி, எப்படி எல்லாம் மதிக்கப்படுகிறார் என்பது பற்றி நீங்களும் நானும் அறிந்து வைத்திருக்கிறோம். அவரைப்பற்றிப் பேச நான் அச்சப்படுகிறேன்.

எந்த ஒரு மனிதனும் வாழ்க்கையில் தனது மனத்தில் தன்னுடைய அறிவுக்கேற்பத் தோன்றும் எண்ணங்களின் விளைவுப்படி வாழ விரும்பும்போது, அவனைச் சுற்றி ஒரு உலகம் உருவாகிறது. சூழ்நிலைக்கேற்ப அந்த உலகம் பெரியதாகவோ, சிறியதாகவோ இருக்கலாம். தன்னைப்பற்றி அவன் என்னென்ன கருத்துக்களை நினைக்கிறானோ, சிந்திக்கிறானோ அதனால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட சுற்றுச் சூழ்நிலைகளுக்கு அப்பால் அது எதிரொலிக்கின்றது. அவன் சிந்திக்கின்றவை, நினைப்பவைகளுக்கு மாறாக – அவன் எதிர்பாராதது நடந்து விடுகிறது.

இங்கே உள்ள உங்களில் எத்தனை பேர் எழுத்தாளர்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனாலும் நான் உங்களை எல்லாம் எழுத்தாளர்கள் என்றே கருதி எனது கருத்தைக் கூறினால், அது தவறாகாது என்று கருதுகின்றேன். எழுத்தாளர்கள் என்றால் எழுத்தை ஆள்பவர்கள் என்று கருதுவதால், அந்த எழுத்துக்கு அவர்கள் உரிமையுள்ளவர்கள் எனக் கருதுவதால், உங்களிடம் இவ்வளவு பெரிய பொறுப்பு வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த வேளையில் சிந்தித்துப் பார்க்கின்றேன்.

எழுத்துக்கள் என்பதில் பல்வேறுவகை இருக்கின்றன. பிறரைச் சிந்திக்க வைக்கிற மாதிரி எழுதுவது ஒரு வகை, பிறரைப் புண்படுத்தாமல் எழுதுவது ஒரு வகை. பிறரைச் சிரிக்க வைத்துச் சிந்திக்க வைப்பது என்பது ஒரு வகை, அப்படிச் சிந்திக்க மறுப்பவர்களைச் சந்திக்கு இழுப்பது என்பது ஒரு வகை.

எழுத்தாளர்களின் திறமை என்பது காலப்போக்கில் மாறுவது என்றாலும் அந்த எழுத்தாளர்களின் எழுத்துக்கள், எதிர்காலச் சந்ததிகளின் தலையெழுத்தை நிர்ணயிக்கின்றவைகள் என்பதை அழுத்தந் திருத்தமாக நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எழுத்து என்றால் அழகாக எழுதுவதல்ல. சிலருடைய கையெழுத்து மிக அழகாக இருக்கும்; ஆனால், அது யாருக்கும் பயன்படாது. பயன்படாத எந்த எழுத்துக்களும் நாட்டுக்குத் துரதிர்ஷ்டமாகக் கருதப்படுபவையாகும். அந்த எழுத்துக்கள் நாட்டின் எழுத்தை மாற்றக் கூடியதல்ல.

சில நேரங்களில் நேரடியாக எழுத்துலகில் பங்கு பெற முடியாவிட்டாலும், சில பரிதாபத்துக்குரியவர்கள் தாங்கள் எழுதி, யாருடைய பெயரிலோ வெளியிடுகிறவர்களாக இருக்கிறார்கள் என்றாலும், அப்படிப்பட்ட நிலை இங்கே இல்லாமல், தகுதி உள்ளவர் எழுதி, அதை நல்லோர் மத்தியில் பாராட்டக்கேட்டுப் பரிசு பெறுகிற இந்த விழாவில் நான் கலந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

போட்டி என்பது வேறு – பொறாமை என்பது வேறு என்பதை நாம் அறிந்து இருக்கிறோம்.

தங்களது கருத்துக்களை யாருடைய தீர்ப்புக்கோ விட்டுவிட்டு, ஒன்றிரண்டு பேரின் கருத்துக்கள் தான் பரிசைப்பெறும் என்று தெரிந்தும் மீதி உள்ளவர்களது கருத்துக்கள் பரிசு பெறாது என்று தெரிந்ததற்குப் பிறகும்–போட்டியில் துணிந்து கலந்து கொண்ட மற்றவர்களையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பத்தாயிரம் ரூபாய் பரிசு என்பது எவ்வளவு உயர்ந்த தொகை என்பதை இன்றையச் சூழ்நிலையில் எழுத்தாளர்களுடன் நெருங்கிப் பழகுகிறவன் என்ற காரணத்தால் நான் நன்றாக அறிவேன்.

மக்களுக்குப் பயன்படும், – மக்களுக்காகவே பயன்படும் கருத்துக்களை முன்வைத்து, – அவை மக்களால் ஏற்கப்படுகின்றனவா என்பதைப் பற்றிக் கவலைப்படாமல், அவை மக்களுக்கு நிச்சயம் பயன்படும் என்று கருதி, இப்படிப்பட்ட போட்டியில் பங்கு பெறுவது என்பது நாட்டுக்கு எழுத்தாளர்கள் செய்கிற தியாகம் ஆகும்.

எழுத்தாளர்களை பற்றிப் பேசுவதற்கு எழுதத் தெரியாத என்னை அழைத்திருப்பதற்கு நான் வருத்தப்பட்டேன். என்னை ஏன் அணுகுகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு, என்னை அழைத்தவர்கள், நீங்களும், எழுதியிருக்கிறீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும் என்று சொல்லிக் கூப்பிட்டார்கள். அதைத்தான் நான் நல்லதொரு வாய்ப்பு என்று பேச்சின் துவக்கத்தில் குறிப்பிட்டேன்.

“இங்கே உறவுகள்” நூலை எழுதிய சகோதரர், எழுத்தில் புதிய முறையைக் கையாண்டுள்ளார். இந்த எழுத்தில் அவர் எந்த அளவுக்கு ஊக்கமாய்ச் செயல்பட்டிருக்கிறார் என்பது புரிகிறது. அவர் படைத்திருக்கிற பாத்திரங்கள் அதனதன் அனுபவத்துக்குத்தக்க மாதிரி, உணர்வுகளைக் கொட்டுகிற வகையில் படைத்திருக்கிறார் என்பதை நூலைப் படிக்கிறவர்கள் உணர முடியும்.

கமலாம்பாள் சரித்திரத்தையும் படித்திருக்கிறோம். இப்போது 'உறவுகளை''யும் படிக்கிறோம். கமலாம்பாள் சரித்திரத்தை எழுதியபோது, எழுதியவரை ஒரு ஆசிரியராக ஏற்றிருப்பார்களா என்பது ஆச்சரியத்துக்குரியது தான்.

சிலர், அவரை கேலி செய்திருக்கவும் கூடும், எந்த எழுத்தாளர்களும் எதிர்காலத்துக்கான படி அமைத்துக் கொடுப்பவர்கள் – பாலம் அமைத்துக் கொடுப்பவர்கள் என்பதை மனத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

தமிழ் மொழியை யார் எப்படி பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றாலும் அப்படி எல்லாம் பயன்படத்தக்க அளவுக்குத் தமிழ்மொழி பரவி, விரிந்து தேவையான சொற்களை வழங்குகிற மொழியாக இருக்கிறது. நான் இதனைக் கூறுவது எனது பேராசையின் வெளியீடு என்றோ அல்லது இப்படிப் பேசினால் தான் அது பேச்சாக இருக்கும் என்று கருதிப் பேசுவதாகவோ நீங்கள் நினைத்துக்கொள்ள வேண்டாம்.

பாலி மொழியிலிருந்து, – சமஸ்கிருத மொழியிலிருந்து, – தமிழுக்கு எத்தகைய சோதனைகள் ஏற்பட்டன என்பதை மறந்துவிடக்கூடாது.

நான் ஒருவரிடம் நாடகம் ஒன்றை எழுதித்தரும்படி கேட்டேன். பாண்டிய நாட்டை ஆண்ட ஒருவரது சரித்திரத்தை அவர் எழுதிக் கொடுத்தார்;

தமிழ் இலக்கியத்தை அழித்தாலொழிய, தமிழர்களை அடக்க முடியாது; தமிழுணர்வைச் சிதைக்க முடியாது – என்று கருதியவர்களிடமிருந்து பாண்டிய இளைஞன் ஒருவன் இலக்கியத்தைக் காத்து, தமிழைக் காத்து, பாண்டிய நாட்டை மீண்டும் தமிழருக்கே சொந்தமாக்கிக் கொடுத்தான்!

இந்தக் கதையை அந்த நண்பர் எனக்கு எழுதிக் கொடுத்தார்.

விஞ்ஞான வளர்ச்சியில் எப்படி எல்லாம் மாற்றம் ஏற்படுமோ என்று கருதத்தக்க நிலையில் விளையும் உணர்வுகள், விளைவுகள், அத்தனையும், தமிழால், அதன் சுற்றுச் சார்புள்ளனவாக இருக்கும் என்பதைக் கவனிக்கும் அவசியத்தில் இந்த நாடு உங்களைப் பாராட்டியே தீரும்.

ஒரு கதாசிரியர், ஒரு கதாநாயகனை உருவாக்குகிறார் என்று வைத்துக் கொள்வோம். பிறகு ஒரு வில்லன் பாத்திரம் ஒன்றை உருவாக்குகிறார் என்று வைத்துக்கொள்வோம்.

கதாசிரியர் எதை நியாயம் என்று கருதுகிறாரோ, அது நீதிக்கு மாறுபட்டது அல்ல என்று கருதுகிறாரோ அதனை அந்தக் கதாநாயகன் பாத்திரத்தில் வைப்பார். அதற்கு எதிர்மாறான கருத்தை–குணாதிசயத்தை–எதிரியின் பாத்திரத்தில் வைப்பார். அப்படி அவர் சொல்கிறபோது இந்தச் சமுதாயம் எப்படி இருக்க வேண்டும் என்று அவர் அந்த எழுத்தில் கூறுகிறார் என்று அர்த்தமாகிறது.

ஆனால் அதே எழுத்தாளர் கதாநாயகன், வில்லன் குணாதிசயங்களை மாற்றியமைத்திருப்பாரானால், அவர் இந்த நாட்டுச் சூழ்நிலையை மாற்ற முயலுகிறார் என்று அர்த்தம். ஆக எழுத்தாளர்களின் கடமை மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

தமிழர்க்குரிய பண்பை – தமிழர்க்குரிய கலாச்சாரத்தை நிறைவேற்றும் காரியத்தைச் செய்ய எழுத்தாளன் என்று யார் முன்வந்தாலும்–அவர்களது கருத்தை மக்கள் ஏற்கிறார்களா இல்லையா என்பது பிரச்சினையல்ல–ஆனால் அந்த எழுத்தாளர்கள் தங்களின் எழுத்தைப் பயன்படுத்தி எத்தனை பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதை சிந்தித்துப் பார்க்க கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே இளைஞர் ஒருவர் ‘உறவுகள்’ என்று எழுதி, நமது உறவுகள் எப்படிப்பட்டது, எப்படி இருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அவரது “உறவுகளில்” ராஜகோபால், பரமேஸ்வரன், சிவகாமி என்று வருகிற எந்தப் பாத்திரமானாலும் அதன் உணர்வுகள் – அந்தப் பாத்திரம் மூலம் அவர் தெரிவிக்கிற கருத்துக்கள் – நிலைமைகள் சமுதாயத்தில் ஆங்காங்கே நடைபெறுகிற ஒரு பிரச்சினையின் எதிரொலிகள்தான் என்பதைப் படிப்பவர்கள் உணர முடியும்.

கணவனை இழந்த ஒரு தாய் அனாதையாக்கப்படும்போது, அவரது மகன் 12 வயதுப் பையன் ஒரு மரத்தடியின் கீழ் சென்று வேலை செய்கிறேன் என்று ஆசிரியர் குறிப்பிட்டுக் காட்டியிருப்பது ஆங்காங்கே நடைபெறும் நிகழ்ச்சிகளின் வரைகோள் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

12 வயதுப் பையன் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக வேலைக்குப் போகிறேன். உழைக்கிறேன்–தியாகியைப்போல் வாழ்கிறேன் என்பதல்ல பிரச்சினை. இந்த நாட்டில் வாழ்வதற்கு உரிமையுள்ள அவன் படித்துப் பட்டம் பெற்று வேலைக்குச் செல்ல முடியாத நிலை இருக்கிறது–இந்தச் சமூகம் அப்படிப்பட்ட நிலையில் இருக்கிறது என்பதைத்தான் ஆசிரியர் உணர்த்திக் காட்டுகிறார். எழுத்தாளர் எதைக் கூறினாலும், அது இந்தச் சமுதாயத்தின் நிலையை உணர்த்துவதாகவே இருக்கும்.

முன்பு முப்பது, முப்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் ‘மணிக்கொடி’ வாரப்பத்திரிக்கை வெளிவந்ததை நீங்கள் அறிவீர்கள். அந்தப் பத்திரிக்கையில், புதிய எழுத்தாளர்களை ஊக்குவித்தார்கள். அதன் விளைவாக, ‘பாரதியார் தேசிய கவியா ? மகாகவியா ?’ என்ற விவாதத்தைக் கூட நடத்தினார்கள். இன்னும் என் மனத்தில் அது பசுமையாக இருக்கிறது. ஆனால் அப்போது எனக்குள் ஏற்பட்ட கேள்வி எல்லாம் நான் அப்போது காங்கிரஸ்காரன் என்பதை உங்களுக்குச் சொல்லி விடுகிறேன்– பாரதியார் மகாகவியா ? தேசிய கவியா ? என்பதற்காக இப்படி எழுத்துக்களைப் பயன்படுத்துகிறார்களே –அவர் தேசியக்கவியாக இருந்தால் என்ன ? மகாகவியாக இருந்தால் என்ன ? அவர் எப்படி இருந்தாலும் சுதந்திரத் தாக்கத்தை – விடுதலை

உணர்ச்சியை – ஏற்படுத்தியவர் தானே என்று நான் கருதியதுண்டு என்பதை இங்கே தெரிவித்துக்கொள்வதில் தவறில்லை என்று கருதுகின்றேன்.

எழுத்தாளரைப் பொறுத்தவரையில் எதிர்காலத்தில் அவர்களது உள்ளத்து உணர்வுகள் இன்னும் நம்பிக்கையுள்ளதாக – வன்மையுள்ளதாக ஆகுமே தவிர – பக்குவம் அதிகமாகுமே தவிர அதில் எப்போதும் குழப்பம் இருக்காது.

நான் இங்கே ஒன்றை உறுதியாகச் சொல்வேன். இந்த நாட்டின் எதிர்காலம் உங்களது கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு விஷயத்தை நான் பல இடங்களிலும் சொல்லியிருந்தாலும் இங்கே சொல்வது பொருத்தம் என்று கருதுகின்றேன்.

மணிக்கொடி பத்திரிகையில் ஒரு கதைப் போட்டி நடத்தப்பட்டது. அதில் மாணவர்கள் கலந்துகொண்டார்கள். ஒரு மாணவன் தற்கொலை செய்து கொள்ளும்போது என்ன உணர்வு இருக்கும் என்ற நிலையில் ஒரு பாத்திரத்தை அமைத்திருந்தான். தற்கொலை செய்துகொள்ளும் முன் என்ன உணர்வைப் பெற்றிருப்பார்கள் என்பதை எழுத்தில் காட்ட நினைத்த அந்த மாணவன் எதுவுமே தோன்றாத நிலையில், தானே தற்கொலை செய்து கொண்டு அந்த நேரத்தில் என்ன உணர்வு தோன்றுகிறது என்பதை அறிந்து கொள்ள ஆசைப்பட்டு ஒரு கத்தியை எடுத்து, தன்னையே அவன் குத்திக் கொண்டான். ஆனால், அவனுக்கு அப்போது என்ன உணர்வு தோன்றிற்று தெரியுமா ? சாவதற்குள் எழுதி முடித்து விட வேண்டும் என்று தான் அந்த மாணவனுக்குத் தோன்றிற்று, அவனது முயற்சி வீணாயிற்று. புதிய எழுத்தாளர்கள் உருவாவதற்கு மணிக்கொடி காரணமாக இருந்தது என்பதை அனைவரும் அறிவீர்கள்.

மணிக்கொடி பத்திரிகையில் அப்போது ஒரு அறிவிப்பு வெளியிட்டிருந்தார்கள் ‘எழுதுகிற கதை வேறு மொழியைச் சார்ந்தது என்றால், யாருடையது என்பதை எழுதிவிடுங்கள்’ என்று அந்த அறிவிப்பு வெளிவந்தது. அப்போதே எவ்வளவு எச்சரிக்கையாக இருந்திருக்கிறார்கள் என்பதற்காக இதனைக் கூறுகின்றேன். இப்படிப்பட்ட பரிசுத்தொகைகள் அறிவிக்கப்படாத காலத்திலும் கூட, எப்படி எழுத்தாளர்கள் எழுத முன்வந்தார்கள் என்பதற்காகவும் இதனைச் சொல்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் எழுத்தாளர்களுக்குப் பஞ்சமில்லை. தமிழ் எழுத்தாளர்களுக்குப் பஞ்சமில்லை. தமிழ் எழுத்தாளர்களும், படித்த எழுத்தாளர்களும் இங்கே நிறையப் பேர் இருக்கிறார்கள்.

நான் ‘சிவகாமியின் சபதம்’ கதையைப் படமாக தயாரிக்கத் தீர்மானித்திருந்த நேரத்தில் எனக்கு மலேசியா, ஊட்டி போன்ற இடங்களில் இருந்து கடிதங்கள் வந்தன. “இங்கெல்லாம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்கள் இருக்கின்றன. வாருங்கள்”

என்று பலரும் கடிதம் எழுதியிருந்தார்கள். அந்த அளவுக்கு வரலாற்று விவரம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள்.

நான் கூறுவேன்! எழுத்தாளர்களுக்குப் பஞ்சம் என்று கூறுவதை நான் ஏற்கமாட்டேன்; இப்படிப்பட்ட பரிசுத்தொகை தரப்படுவது சாலப் பொருத்தமான செயல் என்பேன்!

எந்த நேரத்தில், எந்தக் கருத்தை, எப்படி சொல்வது என்பதைப் பொறுத்துத்தான், அவர்களது தியாகமும், அறிவாற்றலும் இந்த நாட்டில் புகழுக்குரிய இடத்தில் போய்ச் சேருகிறது.

டாக்டர் அண்ணாமலை செட்டியார் தமிழிசைக்குச் செய்த சேவை பற்றி இங்கே சொன்னார்கள். தண்டபாணி தேசிகர் தமிழிசையைப் பாடினார். அவரை மேடையேறச் செய்து மிளிரச் செய்தவர் அண்ணாமலை செட்டியார் அவர்கள். மறைந்திருக்க வேண்டிய கட்டத்தில் பல இசைக்கலைஞர்கள் இருந்தபோது, அவர்களில் பலரைக் காத்து தனது கடமையைச் செய்தவர் அண்ணாமலை செட்டியார்.

நீங்கள் ஆற்றும் தமிழ்த் தொண்டுகள் பாராட்டப்படாமலும் இருக்கலாம். ஆனால், உங்கள் எழுத்துக்கள் எதிர்காலத்தில் இந்த நாட்டை ஆளப்போகின்றன.

தமிழ்க் கருத்து—தமிழ்ப் பண்பாட்டுக்கான உறவுகள்—என்றைக்கு இந்த நாட்டை முழுமையாக ஆள்கிறதோ அன்று தான் தமிழ் எழுத்துக்கள் விருப்பு, வெறுப்பின்றி காப்பாற்றப்படும்.

பணம் வைத்திருப்பது பெரிதல்ல, அதைப் பிறருக்காகப் பயன்படுத்துவது தான் அர்த்தமுள்ளதாக இருக்கும். அந்த வகையில் எம்.ஏ.சிதம்பரம் அவர்கள் இப்படிப்பட்ட நல்ல காரியங்களைத் தொடர்ந்து செய்வதன் காரணமாக, நான் அவரது குடும்பத்தாரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்ட அளவில் எழுத்தாளர்களுக்குப் பரிசு!

இந்த அறக்கட்டளை நடத்தி வருவதைப்போல, தமிழக அரசும் விரைவில் எழுத்தாளர்களுக்கான ஒரு சீரிய திட்டத்தைக் கொண்டு வர இருக்கிறது.

பரிசுத் திட்டத்தை பெரிய அளவில் வைத்து அது ஒரு பரிசாக இல்லாமல், மாவட்ட வாரியாகப் பரிசுகளை வழங்கத் திட்டம் கொண்டுவரப்படும்.

இது உங்கள் பணம்தான். மக்களின் பணம் மக்களுக்கே பயன்படட்டுமே என்ற நோக்கத்தில் இதைத் தெரிவிக்கிறேன்.

தமிழில் அக்கறை எடுத்துப் படிப்போர் எதிர்காலத்தில் என்ன செய்வது என்ற கவலையில்லாமல் இருக்கச் செய்ய வேண்டும். தமிழ் படித்தவர்களுக்கு,

தமிழர்களுக்கு, எதிலும் முதலிடம் தரப்பட்டாக வேண்டும் என்று நான் கூறுவது நியாயத்தின்பால் பட்டது என்பதை நீங்கள் உணர வேண்டும்!

தகுதிகளைப்பற்றி—உறவு பற்றி ஆசிரியர் எழுதியிருக்கிறார். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், தமிழ் உறவு, தமிழர் உறவு, சமுதாய உறவு சமுதாயத்துக்கும் பண்பாட்டுக்கும் உள்ள உறவு—நிதிக்கும்—நாணயத்துக்கும் (காசு) உள்ள உறவு—ஒழுங்குக்கும், மனிதனுக்கும் உள்ள உறவு— மனிதனுக்கும் நாட்டுக்கும் உள்ள உறவு, சாதிக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு, எழுத்துக்கும், மனிதனுக்கும் உள்ள உறவு – இவை பற்றி நீங்கள் எழுதுவீர்களேயானால், நீங்கள் தமிழகத்தில் நல்ல காரியத்துக்கு வித்திட்டவர்கள் ஆவீர்கள். அந்தவித்து வேரூன்றி வளர்ந்துவிடும்.

உங்களது உள்ளத்தில் என்னென்ன கேள்விக் குறிகள் இருக்கின்றன என்பது தெரிகிறது. எழுத்தை – அதிலும் தமிழ் எழுத்தை – ஆளுகிற நீங்கள் கேள்விக் குறிகளை கொண்டிருக்கிறீர்கள் என்பது புரியாமலில்லை.

நீங்கள் என்ன கூறினாலும், யாரைப்பற்றி கூறினாலும்—பெரியோர் எதைக்கூடாது என்றனரோ அதைத் தவிர்த்து—நீங்கள் தமிழ்ப் பணியை வெளிக்காட்டுகிற கருத்தாக வெளியிடுங்கள்.

எல்லோருடைய கருத்தும் எல்லோருக்குமே ஏற்றதாக இருப்பதில்லை. உங்கள் கருத்து சிலருக்கு வெறுப்பானதாகக்கூட இருக்கலாம். தவறு செய்யும் சூழ்நிலைகள் அனுமதிக்கப்பட்டிருக்கிற இந்த நாட்டில், உங்களின் நல்ல கருத்துக்கள் சிலருக்கு வெறுப்பையூட்டலாம். அது குறித்து நீங்கள் கவலைப்படாமல் தமிழ்ப் பண்பாட்டை நீங்கள் வளர்த்து, மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நம்மால் மதிக்கப்படுகிற 'கல்கி'' அவர்கள் எழுதிய எழுத்து எனது நினைவில் பசுமையாக இருக்கிறது. இரண்டு பேருக்கு வாக்குவாதம் நடைபெறுகிறது. ஒருவர் வசதியில் உள்ள பெரியவர்—மற்றவர் தெருச்சண்டை போடுகிறவர். இருவரும் வாதம் புரிகின்றனர். அந்தத் தெருச் சண்டைக்காரர், மூதாதையர்களையெல்லாம் சந்திக்கு இழுத்தார் என்று 'கல்கி' சுருக்கமாக எழுதியிருந்தார். மூதாதையரைச் சந்திக்கு இழுத்தார் என்று எழுதியிருப்பதில் நாம் அதன் உள்ளர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது அல்லவா?

ஒரே வார்த்தையில் பிரச்சினையை விளக்கிய 'கல்கி'யைப் போன்ற எழுத்தாளர்கள் நம்மிடையே இருக்கிறார்கள்.

நான் எழுத்தாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன், எழுதும்போது எங்களையும் மறந்து விடாதீர்கள் என்று. இப்படி நான் கூறுவது உங்கள் உள்ளத்தை ஈர்ப்பதற்காக அல்ல!

நான் அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திப்பவன் கிடையாது. மக்களின் வாழ்வைப்பற்றிக் கவலைப்படுகிறவன்!

இந்த மூன்று மாதக் காலத்தில் நான் பல பேர் கூறிய பிரச்சினைக்கு வாதம் செய்து அதைப் பெரிதுபடுத்தாமல் மக்களின் பிரச்சினைகளையே கவனித்து வருகிறேன். மக்களுக்கு நானும், எனது நண்பர்களும் சரியாகக் கடமையாற்றுகிறோமா என்பதில் தான் கவனம் செலுத்தி வருகிறேன்.

எப்படி கடமையாற்றினால் தமிழர்களின் வாழ்வு பின்னால் மேன்மையுறும் என்று ஆய்ந்து பணிபுரிகிறோம். நீங்கள் சுட்டிக்காட்டும் குறைபாடுகளை எங்களுக்கு வழிகாட்டுகிறவைகளாக ஏற்போம்.

நீங்கள் நேரடியாகச் சுட்டிக் காட்டாவிட்டாலும் கூட, கதையாக, வரலாறாக, குறிப்பிட்டுச் சொல்லலாமே!

இந்தச் சமூகத்தில் எதைக் காண்கிறீர்களோ, அதை—அறிவின் மூலம் நிறுத்துப் பார்த்து கூறுங்கள்.

சாதி, பணம் பற்றி கவலைப்படாதீர்கள். உங்கள் எழுத்து தான் இந்த நாட்டை உருவாக்கிடும். உங்களுக்கென்று குடும்பம் இருந்தாலும், அந்தப் பிரச்சினை தான் இங்கும் எதிரொலிக்கிறது என்பதை நினைவில் வைத்து உங்கள் கடமைகளைச் செய்யுங்கள்.

இந்த நாட்டின் பண்பாட்டை, யாரும் தகர்க்க முடியாத அளவுக்கு உங்கள் எழுத்துக்கள் பயன்பட வேண்டும்.

ஒரு பக்கம் நீதிபதி—மறுபக்கம் வழக்கறிஞர்—இடையில் நான். இங்கே சமுதாயத்தில் முக்கியத்துவம் வாய்ந்த அனைவரும் கூடியிருக்கிறீர்கள்.

இந்த உறவுகள் தொடரட்டும்—வளரட்டும்.

இந்த உறவுகளின் சொந்தக்காரர் இன்னும் பல்லாண்டு எழுத்துச் சேவையாற்றிட என் அன்னையை இறைஞ்சுகின்றேன்.

(1977ஆம் ஆண்டு நடைபெற்ற நீல பத்மநாபன் எழுதிய "உறவுகள்" என்னும் தமிழ் நாவலுக்கு நினைவுப் பரிசு வழங்கி ஆற்றிய உரை)

தொண்டனாக, தோழனாகத் தோளோடு தோள் நின்று உங்களோடு இணைந்திருப்பேன்!

“**கொ**டுத்து, கொடுத்துச் சிவக்க வேண்டிய கரங்களாக” என்னை ஆக்கிவிட்டிருக்கிறார்கள் என்பதையும் நாடு புரிந்திருக்கும்: நீங்கள் நன்கு தெரிந்து கொண்டிருப்பீர்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. நாட்டிலே உள்ள பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்பதை, ஐந்தாண்டுகள் அல்லது ஆறு ஆண்டுகள் இடையே பதவிக்கு வந்து செல்கிறவர்கள், ஒரு முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்று கற்பனை செய்வதை விட அறியாமை வேறு இருக்காது என்பதை நீங்கள் நிச்சயமாக ஒப்புக்கொள்வீர்கள். இருபது, முப்பது ஆண்டுகளாக அனுபவம் பெற்ற நீங்கள், இந்நாட்டுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதைச் சிந்தித்து, இன்னமும் உழைக்கின்றீர்கள் என்பதை எண்ணிப் பார்க்கும் போதே, மக்களால் அவ்வப்போது ஏற்படுகின்ற சூழ்நிலைக்கேற்ப நம்பிக்கைக்கு ஏற்பத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஒரு அமைச்சு, ஐந்தாண்டு அல்லது ஆறு ஆண்டுக் காலத்தில் எதைத்தான் தீவிரமாக– திட்டவட்டமாக – தீர்த்து வைத்து நிறைவேற்ற முடியும் என்பதை உங்கள் சிந்தனைக்குக் கேள்வியாக வைத்து, உங்களுக்குத் தெரியாத ஒன்றை உங்களுக்குப் புரிய வைக்க முற்படுவதான ஒரு நிலையை உருவாக்க நான் விரும்பவில்லை.

எந்த அமைச்சர்களானாலும், எப்படிப்பட்டத் திறமை படைத்த அமைச்சர்களானாலும், பதவியிலே வந்து உட்காரும்பொழுது அவர்கள் பதவியைப் பற்றி எண்ணுவார்களேயானால், எவ்வளவு உயர்ந்த பதவி என்று நினைப்பார்களேயானால், மற்ற எல்லோரையும் விட மக்கள் நம்மைத்தான் அறிவாளி, விஷயம் தெரிந்தவர், உண்மையானவர் என்று நம்பியிருக்கிறார்கள் என்று நினைத்து ஒரு கண நேரம் தம்மை மறந்து அகந்தையிலே மூழ்கிவிட்டார்களேயானால் அதன் விளைவு எவ்வளவு பயங்கரமாக ஒரு நாட்டைத் தாக்கும் என்பதை வரலாறு நமக்கு எடுத்துக்காட்டியிருக்கிறது.

நான் ஒன்றை உங்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். பல்வேறு நேரங்களில் இவைகளை நான் வற்புறுத்திக் கூறியவன் என்றாலும், உங்களுக்கு முன்னால் இதைச் சொல்லுவது மிக மிகத் தேவை என்றே நான் கருதுகின்றேன். நீங்கள் பெற்றிருக்கின்ற ஆற்றல், அடைந்திருக்கின்ற அனுபவம் படித்திருக்கின்ற கலை நுணுக்கங்கள், நுண்ணறிவு இவை அத்தனையும் இந்த நாட்டின் பொதுச்சொத்து என்பதை நான் வற்புறுத்திக் கூற விரும்புகின்றேன். ஒரு மனிதன் சம்பாதிக்க உழைக்கின்றான் என்றால், முதலில் தான், தனது குடும்பம் என்று எண்ணுவது இயல்பு என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், அந்த மனிதன்

செய்கின்ற காரியத்தின் விளைவு, எத்தனை மக்களுடைய வாழ்வுக்கு அடிகோலுகிறது என்பதை எண்ணிப் பார்த்துத்தான், அந்த மனிதனுடைய செயலையும், ஆற்றலையும், கடமையுணர்வையும், பொறுப்புணர்வையும் ஒரு நாடு மதிக்கும் என்பதை நீங்கள் நன்கு புரிந்துகொண்டவர்களாக இருப்பீர்கள் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

ஒரு நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கின்றவர்கள் மக்களேதான் என்பது மக்களாட்சித் தத்துவத்திலே ஒரு முடிவான உண்மைதான் என்றபோதிலும், நடத்தித் தருபவர்கள் மக்களின் தேவையை நிறைவேற்றுவதற்கு உதவி செய்பவர்கள் உங்களைப் போன்ற பொறுப்புமிக்கவர்கள்தான் என்பதை இந்த நாடு என்றும் மறக்கக்கூடாது என்பதை நான் பல்வேறு நேரங்களில் கூறியிருக்கிறேன்.

இங்கு உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுவதெல்லாம், இங்கே நண்பர்கள் பேசும் போதும் சொன்னார்கள். இங்கே இருக்கின்ற உங்களுக்குத் தெரிய ஒன்றைச் சொல்லுவதற்கு நான் இங்கே வந்திருப்பது போல, அவர்கள் நமக்கு சொல்ல இருக்கின்றார்கள் என்ற கருத்தை வெளியிட்டார்கள். நாங்கள் இங்கே சொல்ல வரவில்லை, தெரிந்து கொள்ள வந்திருக்கின்றோம். உங்களைப் புரிந்து கொள்ள வரவில்லை. உங்களின் நிலைமைகளைப் புரிந்து கொள்ள வந்திருக்கின்றோம். ஊழியர்கள் என்ற பெயரையே நான் வெறுக்கிறேன் என்பதை இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். யாருக்கும் யாரும் ஊழியர்களாக இருக்க வேண்டிய நிலை தமிழகத்தில் இருக்கக் கூடாது என்பதிலே எனக்கு நிச்சயமாக அக்கறை உண்டு. விரைவில் ‘ஊழியர்கள்’ என்ற பெயரையே மாற்றியமைக்க வேண்டும் என்ற ஆசையிலே நான் இருக்கின்றேன்.

இதை நான் சொல்லுவதற்குக் காரணம் இந்த நாட்டிற்காக உழைக்கின்ற நீங்கள் தான் இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள் என்பது மட்டுமல்ல கோடிக்கணக்கான தமிழகத் தாய்மார்களின் மானத்தையும், தமிழகக் குழந்தைகளின் எதிர்காலத்தையும், தமிழ்நாட்டின் உயர்வையும் காப்பாற்றி, பேணி வளர்த்து, மற்ற மாநிலங்களில், இன்னும் சொல்லப்போனால் வெளிநாடுகளில், அங்கே இருக்கின்ற ஆன்றோர்கள் அனைவரும் உங்களைப் பார்த்து பொறாமைப்பட வேண்டிய மிகப் பெரிய பொறுப்பை நீங்கள் ஏற்றிருக்கிறீர்கள் என்பதை இங்கே நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நாடு யாரை நம்பியிருக்கின்றது? 1967ஆம் ஆண்டு அமரர் பேரறிஞர் அண்ணாவின் கையிலே இந்தத் தமிழகத்தை ஒப்படைத்த நேரத்தில், அண்ணா அவர்கள் சொன்ன தத்துவத்தை, கொள்கையை, இலட்சியத்தை இந்த நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குப் பொருத்தமானது என்ற நம்பிக்கையில், அதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் மக்கள் உணர்ந்து அந்த நிலைமையை உருவாக்கினார்கள் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால், மீண்டும் என்னைப்

போன்றவர்கள் மக்களிடத்திலே எங்கள் எண்ணங்களைச் சொல்லி, அமரர் பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகள் நாட்டில் சட்டங்களாக, திட்டங்களாக மாற்றப்பட்டு, அந்தக் கொள்கைகள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அமைப்புகளைச் செவ்வனே சீராக நிறுவித் தருகின்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்கிற நிலைமை தோற்றுவிக்கப்பட்டு, இன்றைய தினம் நாங்கள் வந்திருக்கின்றோம் என்றால் நாங்கள் அமைத்த ஒரு கட்சி தோன்றி ஏறத்தாழ ஐந்தாண்டு காலம் கூட ஆகவில்லை. இந்த இடைக்காலத்தில் நாங்கள் பட்ட துன்பங்கள் எதுவாக இருந்தாலும், தொல்லைகள் எப்படிப்பட்டவைகளாக இருந்தாலும், எத்தனையோ இளைஞர்கள் சாவுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களாக இருந்தாலும், நாங்கள் அதைப் பற்றி இப்போது பேச விரும்பவில்லை என்றாலும் ஐந்தாண்டு இடைக்காலத்தில் ஒரு கட்சி தோன்றி, மக்களுடைய அனுதாபத்தைப் பெற்று ஆதரவைப் பெற்று ஒரு ஆட்சியை அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நேரத்தில் உங்களுடைய நல்ல உள்ளங்களுக்கு சில கேள்விகளை வைக்க விரும்புகின்றேன்.

இந்நிலை ஏன் ஏற்பட்டது ? எந்தச் சூழ்நிலையில் ஏற்பட்டது ? தமிழக மக்கள் அமரர் பேரறிஞர் அண்ணாவைப் போல் என்னை நம்பிவிட்டார்கள் என்று நான் நினைக்கப் போகிறேனா ? சொல்லப் போகிறேனா ? நிச்சயமாகக் கிடையாது ! அமரர் பேரறிஞர் அண்ணாவைப் போல நான் ஆட்சி செய்து விடுவேன். அவ்வளவு திறமையுள்ளவன் என்ற நம்பிக்கையிருப்பதாக மக்களிடம் சொல்லப் போகிறேனா ? இல்லை. ஆனாலும், இந்த மாற்றம் ஐந்தாண்டுக் கால இடைக்காலத்திற்குள் ஏன் ஏற்பட்டிருக்கிறது என்றால், மக்கள் அனுபவித்த துன்பங்கள், மக்களுடைய தேவைகள் இந்த நிலையை உருவாக்கியிருக்கிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

நண்பர்கள் எடுத்துக் கூறினார்கள். நண்பர் ஒருவர் ஒரு கதையையே சொன்னார்கள். என்னைச் சோழனாக்கினார். அவரைக் குந்தவையாக்கிக் கொண்டார். நல்ல வேளை ! இங்கும் அந்த வேடங்களைப் போட வேண்டிய அவசியம் எங்கள் இருவருக்கும் ஏற்படவில்லை. இங்கே ஏற்படுத்தவும் வேண்டாம் என்று நான் கருதுகிறேன். நான் இதனைச் சொல்வதற்குக் காரணம், கோட்டைக்குள் என்ன நடக்கின்றது என்பதைக் கவனிக்காமல் இருக்கின்ற ஆட்சி இருக்கக் கூடாது என்ற பேரார்வத்தில், எனது நண்பர் அவர்கள் அந்தக் கதையை அழகாக எடுத்துச் சொல்லும் பொழுது நான் உண்மையிலேயே பெருமைப்படுகின்றேன்; நல்ல வேளையாக இன்று தான் முதன் முதலாகக் கோட்டையிலே நான் அடியெடுத்து வைத்திருக்கின்றேன். ஆகவே, அந்தக் குற்றச்சாட்டு என்னைப் பாதிக்காது என்பதும், அந்தக் குறைபாடு என்னிடத்தில் இருக்கிறதா ? இல்லையா ? என்பதைச் சோதிப்பதற்கு நாட்கள் இருக்கின்றன என்பதையும் எண்ணிப் பார்க்கும் பொழுது அந்தக் குற்றச்சாட்டு யாருக்கோ, எங்கோ



போய்ச் சேருகிறது என்பதோடு நான் திருப்தி அடைந்தாலும் உண்மையில் நான் அதை எச்சரிக்கையாக எடுத்துக்கொள்கின்றேன்.

நானோ எனது நண்பர்களோ நிச்சயமாக உங்களுடைய குறைகளை ஆராய்வதிலும், உங்களுடைய தொல்லைகளைத் தீர்ப்பதில் அக்கறை காட்டுவதிலும், உங்களோடு இணைந்து நான் முதலமைச்சர் என்ற பதவியில் இருந்தாலும் தோளோடு தோள் நின்று, உங்களுடைய தொண்டனாக, தோழனாக, நண்பனாக இருப்பேன் என்பதை நீங்கள் நிச்சயமாக நம்பவேண்டும்.

இரகசியம் போய்விட்டது என்று உத்திரவாதம் கொடுத்தார்கள் நான் சந்தேகிக்கவில்லையே. நீங்கள் ஏன் சொல்லிக்காட்டுகிறீர்கள் ? இவ்வளவு அவசரப்பட வேண்டிய தேவை இல்லை. யாரையும் சந்தேகிப்பதற்காக இங்கே நாங்கள் வரவில்லை. நம்பித்தான் வந்திருக்கின்றோம். உங்களது அறிவையும், நாணயத்தையும் ஆற்றலையும் நேர்மையையும் நம்பித்தான் நாங்கள் இந்த ஆட்சியிலே அமருகின்றோமே தவிர, நாங்கள் யாரோ பதினான்கு பேர்கள் இங்கே உட்கார்ந்து கொண்டு எல்லாவற்றையும் நாங்களே செய்து முடித்து விடுவோம், எல்லா இரகசியத்தையும் நாங்களே வைத்துக் கொள்ளுவோம் என்ற நிலையில் நான் இங்கே வரவில்லை, நண்பர்கள் வரவில்லை. நாங்கள் உங்களை நம்பித்தான் வந்திருக்கின்றோம். எங்கள் ஆசைகளை நிறைவேற்றிக்கொள்வது என்றால், எங்களுக்காக அல்ல. உங்களை வாழ வைக்கின்ற தெய்வங்களாக இருக்கின்ற தமிழ்நாட்டு மக்களுக்காக நீங்கள் நிச்சயமாகத் தொண்டு செய்வீர்கள் என்பது மட்டுமல்ல, அவர்களுக்காக உழைப்பீர்கள் என்ற உத்திரவாதத்தைத் தருகின்ற நேரத்திலேயெல்லாம் உண்மையிலே நான் புல்லரித்துப் போனேன் என்பதை சொல்லித்தான் ஆக வேண்டும்.

இந்த நாடு யாரை நம்பியிருக்கிறது ? ஐந்தாண்டுக் காலம், இரண்டாண்டுக் காலம் அல்லது ஓராண்டுக் காலம் அல்லது பத்தாண்டுக்காலம் அல்லது ஏழாண்டுக் காலம் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த இடைக்காலத்தில் வந்து போகின்ற அமைச்சர்களை மட்டும் நம்பியா இந்த நாடு இருக்கிறது ? மனிதனுடைய ஆயுள் எவ்வளவு என்பதைச் சொல்ல முடியாத சூழ்நிலையில் நாமிருக்கின்றோம். வேலையை விட்டு வீடு திரும்பும்போது ஒரு பத்தாயிரம் ரூபாய் கிடைக்காதா ? கையிலே கொண்டு போகமாட்டோமா ! எனக் கேட்கின்ற அளவிலேதான் மக்களுக்குத் தொண்டு செய்கின்ற நீங்கள் இருக்கின்றீர்கள் என்று நண்பர்கள் எடுத்துக்காட்டுகின்ற சூழ்நிலை உள்ளது. இந்த நாட்டில் எவ்வளவு தான் தேவைகள்—எவ்வளவு தான் நல்ல எண்ணங்கள், எவ்வளவு தான் சூழ்நிலைகள் உதவினாலும், வற்புறுத்தப்பட்டாலும்; எந்த ஒரு அரசியல் கட்சியாலும் தனிமையில், அல்லது சில அமைச்சர்களால் அல்லது ஆயிரக்கணக்கான நண்பர்களால், தொண்டர்களால், ஒரு கட்சியினுடைய அமைப்புக்களால் நிச்சயமாக எதையும் சாதித்து விட முடியாது என்பதை நான் இங்கே திட்டவட்டமாக எடுத்துச்

சொல்ல விரும்புகிறேன். ஒன்றைச் சாதிக்க முடியும். அரசியல் கட்சிகள் அவ்வப்போது தங்களுடைய எண்ணங்களை மக்களிடம் சொல்லி, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகின்ற சூழ்நிலையைச் சாதகமாக உருவாக்குகின்ற திறமையுள்ளவர்கள் வேண்டுமானால் சில நேரங்களில் சில சமயங்களில் வெற்றிபெற்றதாக ஒரு தோற்றத்தை உலகத்திலே தோற்றுவிக்க அவர்களால் முடியுமே தவிர, எந்த அரசியல் கட்சியும் நுண்ணறிவு படைத்தவர்களுடைய, திட்டமிட்டுத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற ஆற்றல் படைத்தவர்களுடைய ஒத்துழைப்பில்லாமல் எந்தக் காரியத்தையும் சாதித்து விட முடியாது என்பதை நான் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதை நான் நன்கு உணர்ந்தவன்.

அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியிலே இருந்தபொழுது, சிறுசேமிப்புத் துணைத் தலைவராக நான் இருந்த நேரத்தில் நான் எழுதியவை கோப்புகளில் உள்ளன. அந்தக் கோப்புகளை எடுத்துப் பார்ப்பீர்களானால் நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். அவற்றிலே பிரச்சினைகள் வரும்பொழுது, பல இடங்களில் நான் குறிப்பிட்டிருக்கிறேன். எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் தவறு செய்திருந்தால் தயவுசெய்து கண்டிப்பாக நடவடிக்கை எடுத்தேயாக வேண்டும் என்று நான் கோப்புகளில் எழுதியவை, பேரறிஞர் அண்ணா அவர்களிடம் குறையாகக் கொண்டுபோய் காட்டப்பட்டதுண்டு. அவர்கள் என்னை அழைத்துப் பாராட்டியதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். இதை சொல்லுவதற்குக் காரணம், நாம் யாருக்காக இங்கே வந்திருக்கின்றோம் என்பதை நாங்கள் என்றும் மறந்துவிடமாட்டோம்.

தமிழகத்தில் உள்ள யாரோ ஒரு குடும்பம் யாரோ ஒரு தனி மனிதர், எங்கோ கஷ்டப்பட்டால் நமக்கு என்ன என்று நினைக்கின்ற மனநிலை, அலட்சியம், அந்த சுயநலம், யாருக்கும் வந்துவிடக்கூடாது என்பதிலே நாங்கள் மிக மிக எச்சரிக்கையாக இருப்போம் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டியது என்னுடைய நீங்காத கடமையாகக் கருதுகின்றேன்.

நாடாளுமன்றத் தேர்தலின்போது சென்னையிலே நான் ஒரு செய்தியினை வெளியிட்டேன். அதை நண்பர்கள் பத்திரிகைகளிலே திரித்துக் கூறினார்கள். நாடாளுமன்றத் தேர்தலையொட்டித் தமிழகத்தை சுற்றி வந்தபொழுது அதற்கு முன் பல கூட்டங்களில் பேசுவதற்கும், வாக்குகளைக் கேட்பதற்குமாக மக்களைச் சந்தித்ததுண்டு. ஆனால், நாடாளுமன்றத் தேர்தலின்போது நான் சுற்றியது போல மக்களைச் சந்தித்தது போல நான் சென்ற இடங்களில் கண்டது அது தான் முதல் தடவை என்பதிலே நீங்கள் நம்பிக்கை வைத்தாக வேண்டும். அப்படிப்பட்ட நிலைமைகளைக் கண்டறிந்து வந்த பிறகு தான், நான் தியாகராய நகரிலே பேசும்பொழுது தெளிவாகச் சொன்னேன். 500 ரூபாய் சம்பளம் வாங்குகின்றவர்கள் தனக்கு இன்னொரு ஐந்தோ,

பத்தோ வேண்டுமெனக் கேட்கும்பொழுது, அந்த 500 ரூபாய் கூடக் கிடைக்காமல் இருக்கின்ற மக்களைப் பற்றியும் சிந்திக்க வேண்டும் என்று நான் சொன்னதைத் திரித்துக் கூறி, 500 ரூபாய்க்கு மேல் யாருக்கும் சம்பளமே கொடுக்கக்கூடாது என்று எம்.ஜி.ஆர் சொல்லுகிறார் எனப் பிரச்சாரம் செய்தார்கள். இது எத்தனை நாட்களுக்கு நிற்கும் ? நாடாளுமன்றத் தேர்தலோடு அந்தப் பிரச்சினை முடிந்தது. பிறகு சட்டமன்றத் தேர்தல் வந்தது. நிலைமைகளை நாம் கண்கூடாகக் கண்டோம்.

இவைகளை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், யார் எவ்வளவு நல்ல திட்டங்களைத் தீட்டினார்கள் அல்லது தீட்டவில்லை என்பது பற்றி இங்கே பிரச்சார மேடையாக்க நான் விரும்பவில்லை. யாரையும் குறை கூறி மகிழ்வதற்கு நான் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளத் தயாராக இல்லை. ஒன்றைச் சொல்லுவேன். தயவுசெய்து இங்கே இருக்கின்ற அதிகாரிகளாகிய நீங்கள் எவ்வளவு அழகாக திட்டங்களைத் தீட்டியிருந்தாலும் அல்லது தீட்டுவதற்கு முற்பட்டிருந்தாலும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் பெரும்பாலான கிராமங்களில், ‘குடிநீர் இல்லை’, குடிநீர் இல்லை என்ற பிரச்சினை இருக்கிறது என்பதைத் தயவுசெய்து நீங்கள் அலட்சியப்படுத்தி விடக்கூடாது என்பதற்காகத்தான் அந்த ஒன்றை மட்டும் இங்கே நான் வெளியிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். குடிப்பதற்குத் தண்ணீர்தான் கேட்கின்றார்கள். நல்ல தண்ணீர்தான் அவர்களுக்குத் தேவை. எங்கு போனாலும் இந்தக் குறை இல்லாமல் இல்லை.

நான் வெற்றி பெற்று வந்த தொகுதி அருப்புக்கோட்டை என்பதற்காகப் பேசவில்லை. இத்தனை ஆண்டுகளாக ஆட்சி செய்திருக்கின்றோம். சுதந்திரம் கிடைத்துவிட்டது என்ற நிலைமை ஏற்பட்ட பிறகும், ஒரு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அந்த மாவட்டம் ஆண்டுக்கொரு முறை பஞ்சத்திற்குச் சொந்தமாகிறது. பஞ்சம் ஏற்படுகிறது என்றால் அதைப் பற்றி முடிவு செய்ய வேண்டாமா ? யார் சிந்திக்க வேண்டும் ? அரசியல்வாதிகள் சிந்தித்தால் மட்டும் போதாது, அரசியல்வாதிகள் அங்கே வாக்குறுதிகள் கொடுக்கலாம். நாங்கள் பதவிக்குச் சென்றால் இதை நிறைவேற்றலாம் என்றிருக்கிறோம் எனச் சொல்லலாம். நிறைவேற்றித் தருபவர்கள் அதை ஒழுங்குபடுத்திச் சீராக வெற்றிபெறச் செய்பவர்கள் நீங்கள்தான் என்பதை நாங்கள் மறந்துவிடவில்லை என்பதையும் நன்றாகப் புரிந்து கொண்டுள்ளோம் என்பதையும் இங்கே சொல்லிக்கொள்ள வேண்டியது என் கடமை என்று கருதுகிறேன்.

அங்கே இருப்பவர்கள் குடிநீரில்லாது கஷ்டப்படுகிறார்கள். தருமபுரி மாவட்டமும் அப்படித்தான். திருச்சியிலே பல இடங்களிலேயும் அப்படித்தான். இப்படிப்பட்ட கொடுமைகள் நாட்டில் இன்னமும் இருக்கின்றன. ஏறத்தாழ 500 கோடி ரூபாய் செலவு செய்கிறோம் என்று நிதிநிலை அறிக்கையிலே நாம் சொல்லிவிட்டால் மட்டும் போதாது. இவைகளுக்கு என்ன செய்திருக்கிறோம் என்பதை மனசாட்சியுள்ள நாம்,

நம்மை நாமே கேள்வி கேட்டுக்கொள்ள வேண்டாமா ? இந்த உயர்வில் சொன்னதை இப்படி திரித்துக் கூற முற்படுகிறார்கள் என்றால் நான் வேதனையோடு சொல்வேன் இப்படிப்பட்ட அரசியலை கவனிக்காமல் ஒதுக்க வேண்டியது உங்களுடைய கடமை என்று வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

இங்கே ஒரு நண்பர் சொன்னார். நாங்கள் எந்த அரசியல் கட்சிக்கும் சொந்தமல்ல என்றார். மன்னிக்க வேண்டும். அரசியல் கொள்கைகளைத் தங்கள் கொள்கையாக ஏற்றுக் கொள்வது யாருக்கும் உரிமையுள்ள ஒன்று. நான் அதில் தலையிட மாட்டேன் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அவரவர்களுக்குச் சில நம்பிக்கைகள் இருக்கலாம். அவரவர்களுக்குச் சில கொள்கைகளில் பிடித்தம் இருக்கலாம். அவரவர்களுக்கு சில செயல்களிலே இப்படித்தான் இருக்க வேண்டுமென்ற நம்பிக்கை இருக்கலாம். அதிலே நான் குறுக்கிடவில்லை. குறுக்கிட மாட்டேன். அது அவர்களுடைய பிறப்புரிமை, வாக்குகள் அளிப்பதற்கு, ஒரு மனிதனுக்குச் சுதந்திரமிருக்கிறதென்றால் யாருக்கு வாக்களிப்பது ? எதற்காக வாக்களிப்பது ? என்பதைப் புரிந்து கொள்ள அவர்களுக்குச் சுதந்தரமில்லையென்று சொல்லுவது நியாயமல்ல என்று நான் கருதுகின்றேன். ஆனால், நாலரைக் கோடி தமிழர்களின் வாழ்க்கையைப் பற்றி சிந்திக்கும்பொழுது எந்த அரசியலும் குறுக்கிட்டுவிடக் கூடாது என்பது ஒன்று தான் எனது அக்கறையே தவிர, வேறு எதுவுமல்ல என்பதை மட்டுமே நான் சொல்லிக்கொள்வேன்.

இந்தச் சாதிக்காக ஒன்று, இந்த மதத்திற்காக ஒன்று, இந்த பிரிவுக்காக ஒன்று என்ற நிலைமையை நாம் ஏற்படுத்துவோமானால், சிந்திப்போமானால் – நம்முடைய அறிவு, நேர்மை, உழைப்பு, நம்முடைய திறமை, நல்ல எண்ணம் ஆகியவை வீணாகிவிடும் என்ற அச்சம் எனக்கு நிறைய உண்டு. ஆகவே நாம் அதற்கெல்லாம் அப்பாற்பட்டு ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டிய கட்டாயம் இன்று நாட்டிலே உருவாக்கப்பட்டு இருக்கிறது.

ஒன்றை உங்களிடம் சொல்வேன். நிதிநிலை அறிக்கையை உங்களுக்குத் தெரியாமல் வெளியிடப்பட போவதில்லை. உங்களுக்குத் தெரிந்து, நீங்கள் தருகின்ற திட்டங்களின் வழியாக எங்கள் ஆசைகளை நிறைவேற்ற எப்படி உருவாக்கி வகுத்துத் தருகின்றீர்களோ அதற்கேற்ப, நிதிநிலை அறிக்கை உருவாக்கப்படும் என்பது – என்னைவிட உங்களுக்கு நன்றாகத் தெரியும். உங்களுக்குத் தெரியாமல் நாங்கள் எதற்காகவும் தனியாக பிரித்துப் பார்த்து ஒதுக்கிவிட முடியாது. இந்த நேரத்தில், ஆறு மாதங்கள் கழிந்த பிறகு எப்படி நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறதென்பதும், தமிழகத்தின் நிதிநிலை எப்படி இருக்கின்றது என்பதும் உங்களுக்கு மிக மிக நன்றாகத் தெரியும். இருந்தாலும் என்னைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்லுவேன். என் நண்பர்களைப் பற்றிய உறுதியோடு

நான் சொல்லுவேன். உங்களுக்குத் தேவையானவற்றை உங்கள் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை உங்கள் வாழ்க்கையின் எதிர்காலத்திற்கு உத்திரவாதமளிக்கக்கூடிய சூழ்நிலையை உங்களுடைய உழைப்புக்கும் தகுதிக்கும் ஏற்ப யாரும் உங்களுடைய ஆற்றலுக்கு விலை நிர்ணயித்து விட முடியாது என்பது எனக்குப் புரிந்த ஒன்றாகும். ஏனெனில் ஒரு நாட்டின் தலைவிதி உங்கள் கையிலே இருக்கிறது. அதற்கு யார் சம்பளத்தை நிர்ணயிப்பது ? இவ்வளவுதான் என்று வரையறுக்க முடியுமா ? ஒரு நாட்டை உயர்த்தி, வேலையில்லாத் திண்டாட்டத்திலிருந்து மக்களைக் காப்பாற்றி, குடிநீர் கொடுத்து, விவசாயிகளுக்கும், உழைக்கும் வர்க்கத்திற்கும் பாதுகாப்புத் தந்து, மேம்படுத்தக்கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கக்கூடிய உங்களுடைய உழைப்புக்கு இதுதான் சம்பளம் – இதுதான் விதி – இவ்வளவுதான் வரையறை – என்பதை யாராவது நிர்ணயிக்க முடியும் என்று சொன்னால், நான் நிச்சயமாக அதை, யார் சொன்னாலும், ஒப்புக்கொள்ளமாட்டேன்.

ஒரு நாட்டை வாழ்விக்கின்றவர்களுடைய வாழ்க்கை நிச்சயமாகப் பாதுகாப்போடு அமைய வேண்டுமென்பதிலே அக்கறை கொண்டிருக்கிறேன் என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நிதியமைச்சராக சி.எஸ். அவர்கள் இருந்த சமயம் பேசியபோது குறிப்பிட்டிருந்தேன். ஆசிரியர் ஒருவர் பள்ளிக்கூட மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வரும்பொழுது, வீட்டிலே என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை வாழ்க்கைத் துணைவியோ அல்லது உடன் பிறப்புக்களோ சொல்லி அந்த வேதனையோடு அங்கே வந்து அந்தச் சிந்தனையில் மூழ்கியிருக்கின்ற ஒரு ஆசிரியர், எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டிய ஒரு மாணவனை, எப்படிச் சரியான பாதையில் உருவாக்க முடியும் ? அவனுக்கு அறிவு தரமுடியும் ? என்ற கேள்வியை நான் அங்கே வைத்தேன். அப்போது சி.எஸ். கல்வி அமைச்சராகவும் இருந்தார். அதைப் போல் நான் உணருகின்றவன். வீட்டிலே வறுமையைச் சந்தித்து விட்டு வந்து, இங்கே ஏழைகள் வாழ்வு மலர வேண்டுமென்று திட்டம் போடுகின்ற உங்களை 'ஏழை மக்களுக்கு வாழ்வு கொடுங்கள்' என்று கேட்க இந்த நாட்டில் யாருக்கும் உரிமையில்லை என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அந்த வகையில், எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் வேறுபாடின்றி, எங்கள் உள்ளத்திலே வேறு ஏதாவது எண்ணத்தை வைத்துக் கொண்டு, மீண்டும் சொல்கிறேன் – நாங்கள் சந்தேகத்தோடு வரவில்லை. நம்பிக்கையோடு வந்திருக்கிறோம். யாரையும் சந்தேகிக்கவில்லை. உங்களிடம் நம்பிக்கை வைத்திருக்கிறோம். அந்த வகையில் சொல்லுகின்றேன். இருக்கின்ற பிரச்சினையும், பொறுப்பும் மிக மிக மகத்தானதாகும். நீங்கள் அறியாதது அல்ல. நாட்டு மக்கள் சதவிகிதத்தை எடுத்துக் கொண்டால்,

எத்தனை பேர் படித்து வேலையில்லாத் திண்டாட்டத்திலே இருக்கிறார்கள் என்பதை நீங்கள் கணக்கிட்டு வைத்திருப்பீர்கள். அவர்களுக்கு எப்படி வேலை கொடுப்பது என்கின்ற பிரச்சினை, வேலை கொடுத்தாலும் அவர்களுக்குத் தேவையான வருமானம் எவ்வளவு கிடைக்க ஏற்பாடு செய்ய முடியும் என்ற பிரச்சினை, தாய்க் குலத்துக்குச் சொத்துரிமை இல்லாத பிரச்சினை, இப்படி ஒவ்வொரு பிரச்சினையையும் மாணவர் நலனை எடுத்துக் கொண்டால், சாதிப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் இவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்துவது எளிதான காரியமல்ல. எந்தனையோ பேர் முயற்சித்து, 'செய்துவிட்டோம்', 'செய்துவிட்டோம்' என்ற புள்ளி விவரங்கள் கொடுக்க முடிந்திருக்கின்றதே தவிர, நான் குறிப்பிட்டதைப் போல நான் இங்கே பட்டியல் கொண்டு வந்துள்ளேன். எந்தெந்த ஊரில் என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை வைத்துப் பார்ப்பீர்களானால், உண்மையிலேயே நாம் உழைத்தது போதாது என்பதையும், நீங்கள் திட்டம் தீட்ட வேண்டிய முறைகளையே மாற்றியமைத்தாக வேண்டும் என்பதையும், வேறு கண்ணோட்டத்தில் திட்டங்களை உருவாக்க நீங்கள் முன்வரவேண்டுமென்பதையும், இந்த நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயத்திற்கு நீங்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதையும், தயவு செய்து நினைவில் வைத்துக்கொள்ள வேண்டுமென நான் விரும்பி வேண்டிக் கொள்கிறேன். அந்த நிலை உருவாகியிருக்கிறது.

பொருளாதாரத் திட்டங்கள் – பொருளாதார அமைப்புக்கள் – அதனால் ஏற்படுகின்ற விளைவுகளைப் பற்றி இதுவரை எல்லோரும் பேசியுள்ளார்கள். பணக்காரன் பணக்காரனாகிவிட்டான். ஏழை ஏழையாகிவிட்டான். முன்பு டாட்டா முன்னால் நின்றார். இப்போது பிர்லா முன்னால் வந்துவிட்டார். முன்பு 600 கோடி அவருக்கிருந்தது. இப்போது 900 கோடி இவருக்கு வந்திருக்கிறது. இப்படிச் சொல்லுகிறார்கள். திட்டங்கள் தீட்டியதிலே தவறுகள் இல்லை. தீட்டுகின்ற திறமையாளர்களுக்கு எந்த எண்ணத்தின் அடிப்படையில் திட்டங்கள் தீட்டவேண்டுமென்று சொல்லத் தவறிவிட்டார்கள் என்ற நிலைமையைப் பெரியவர்கள் பலமுறை சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். ஆகவே, நான் வேண்டுகோளாக வைக்கின்றேன். நீங்கள் நிதிநிலை அறிக்கையைத் தரும்போதோ மற்ற திட்டங்களை உருவாக்கும் போதோ, இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அடிப்படையிலேயே நாம் மாற்றத்தைக் கண்டாக வேண்டும். பொருளாதார அடிப்படையில் நாம் மிகப் பெரிய மாற்றத்தை உருவாக்கினால் அன்றி இவைகளுக்கெல்லாம் ஒரு முடிவு காண இயலாது. நல்ல ஏற்பாட்டைச் செய்து நாம் முன்னேற முடியாது என்ற அச்சமும் அவநம்பிக்கையும் கூட எனக்கு இருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கின்றேன். இவற்றையெல்லாம் நாங்கள் யாரிடம் ஒப்படைக்கப்போகிறோம் ? யாரை நம்பி நிறைவேற்றப் போகிறோம் ? உங்களை நம்பித்தான், எங்களுக்கு வேறு வழியில்லை. உங்களைத்தான் நாங்கள் நம்பியிருக்கின்றோம். நீங்கள் தான் தமிழ்நாட்டிற்கு ஒரு நல்ல முடிவைச் செய்து

தரவேண்டும். நீங்கள் நினைத்தால் செய்து தர முடியும். நீங்கள் உட்கார்ந்து பேச வேண்டுமென்பது என் விருப்பம்.

இங்கே சொன்னார்கள்; இரண்டு அல்லது மூன்று மாதத்துக்கு ஒரு முறை எங்களையெல்லாம் சந்தித்து நாங்கள் எப்படியிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள். அதோடு நான் ஒன்று சொல்லுவேன். நீங்களும் எங்களைப் பார்த்து நாங்கள் எப்படியிருக்கிறோம் என்பதையும் கவனிக்க வேண்டும். அதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது.

அந்த நிலைமையில் நான் சொல்ல விரும்புவது ஒன்று. நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து பதவி என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர நாம் எல்லோரும் மனிதர்கள் தான். எல்லோரும் ஓர் குலம்தான். எல்லோரும் ஓரினம் தான். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற எங்கள் அமரர் அண்ணாவின் கொள்கை அடிப்படையில் நாம் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து, எதையும் நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையில் சொல்லுகிறேன்.

நாம் வேறுபாடு காணாத வகையில், வேற்று எண்ணங்களுக்கு அடிமையாகாமல், சிந்தை குலையாமல், சஞ்சலத்திற்கு ஆட்பட்டு விடாமல் செயல்படுகிற முடிவுக்கு நாம் வருவோமேயானால், நிச்சயமாக மற்ற மாநிலங்களை விடத் தமிழகம் உயர்ந்திருக்கிறது. தமிழக மக்கள் நல்வாழ்வு பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை ஐந்தாண்டுக் காலத்திற்குள் இந்தியத் துணை கண்டத்திற்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்ப முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மாற்றத்தைச் செய்ய நீங்கள் துணை புரிய வேண்டும். பொருளாதாரத் திட்டத்தை அடிப்படையிலேயே மாற்றியமைக்க நீங்கள் எனக்கு உதவ வேண்டும்.

நாங்கள் எடுத்துக் கொடுத்து, 'நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லுவதைவிட நீங்கள் எடுத்துக் கொண்டு மிச்சத்தை மக்களுக்குத் தாருங்கள் என்று சொல்லுகிற அளவுக்கு இங்கே நான் துணிவு படைத்தவனாக இருக்கின்றேன். நீங்கள் கணக்கிட்டுத் தீர்ப்புச் சொல்லுங்கள். மக்களுக்கு எவ்வளவு கொடுக்கலாம். நாம் எவ்வளவு எடுத்துக் கொள்ளலாம் என்பதை நீங்கள் சிந்தியுங்கள். நான் குறுக்கே வரவில்லை. நிச்சயமாக வரமாட்டேன். தடை சொல்லவே மாட்டேன். நீங்கள் உறுதியாக நம்பலாம். இத்தனை கோடி ரூபாய்களை வரியாகப் பெறுகின்றோம். அதில் மக்களுக்கு எத்தனை கோடி ரூபாய் செலவு செய்கின்றோம்? நாம் எவ்வளவு எடுத்துக்கொள்ளுகின்றோம்? இப்படிக் கணக்கிட்டுப் பார்த்து, உங்களுக்குத் தேவை எவ்வளவு என்று விரும்புகின்றீர்களோ அதை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள் என்று நான் சொல்லுவேன். நீங்கள் விரும்பினால் நிறையப் பலனை உண்டாக்க முடியும்.

வருகின்ற வரிப் பணம் போதாது என்றால், உங்களால் நிறைய மக்கள் கஷ்டப்படாத வகையில் வரியை விதித்து அல்லது வரியைப் பெறுகின்ற வகையில் உங்களால் நிலைமையை உருவாக்கித் தர முடியும். தமிழகத்திலே உள்ள எத்தனையோ அதிகாரிகள் இதில் பங்கு கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அரசுக்கு வரவேண்டிய உண்மையான வரி, நான் வெளியிலேயிருந்து கவனித்த வரையில் ஏறத்தாழ 70 அல்லது 80 கோடி ரூபாய்கள் நேரிடையாக அரசுக்கு வராமல் அங்கங்கே சிதறிப்போகின்றன என்பதை உங்களுக்கு நான் சொல்லிக் காட்ட வேண்டியவனாக இருக்கின்றேன். நீங்கள் ஒழுங்காக வரியைப் பெறக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யக்கூடிய துணிவை, நீங்கள் தாட்சண்யமின்றி நடந்து, வரியைப் பெற முயற்சிப்பீர்களேயானால், முன்வருவீர்களேயானால் எந்தக் குறையும் உங்களுக்கு இல்லாத வகையில் என்னால் உங்களுக்கு நிச்சயமாகத் தொண்டு செய்ய முடியும். நான் உங்கள் பக்கம் இருப்பேன் என்பதைத் தயவு செய்து நம்பலாம்.

இப்படிச் சொல்வதால், என்ன ? "முன்னால் பார்த்தால் செட்டியார் குதிரை, பின்னால் பார்த்தால் முதலியார் குதிரை" என்று சாட்சி சொன்னது போல் இங்கேயும் இல்லாமல், அங்கேயும் இல்லாமல் இருப்பதை எல்லாம் நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள் ? என்கிறார். வரியை வாங்கி கொடுங்கள் என்கிறார். 'இப்படி சொல்லிவிட்டுப் போகிறாரே' என்று தவறாகக் கருத வேண்டாம்.

நிச்சயமாக உங்களுக்காக, உங்கள் மனதுக்குத் திருப்தி அளிக்கின்ற வகையில் ஏதாவது செய்தாக வேண்டும் என்ற எண்ணத்திலே நாங்கள் இருக்கின்றோம். அதைச் செய்வதற்கு நாங்கள் முயலுவோம் என்பதை, நிச்சயமாக – உளப்பூர்வமாக – நாங்கள் அதற்கு முயற்சி எடுத்துக் கொள்வோம் என்று சொல்லுகின்ற நேரத்தில் இறுதியாக ஒன்றைக் கூறுகின்றேன் !

தமிழக மக்கள் பொறுமையற்று இருக்கின்றார்கள். கிராமப்புறப் பகுதிகளுக்கும் மற்ற இடங்களுக்கும் போனால் மக்கள் வேதனைகளை சொல்லிச் சொல்லி சோர்ந்து போய் இருக்கிறார்கள். பொறுத்துப் பொறுத்து பார்த்து சகிக்க முடியாத நிலைமைக்கு ஆளாகி அதன் விளைவாக ஏற்படுகின்ற ஆத்திரம், வெறுப்பு, சமூகத்தின் மேலேயே ஒரு அருவருப்பு இதன் காரணமாகத் தோன்றுகின்ற நிலைமை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

நான் உங்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலே மட்டுமல்ல. இந்தியத் துணை கண்டம் எப்படியிருக்கிறது என்பதை நான் சொல்வது தவறு என்றாலும், வேதனையில் இருப்பவர்கள், விரக்தி நிலைக்குப் போகின்றவர்கள், வெறுப்பு நிலைக்குச் சென்று வெறி நிலைக்கு மாறுவார்கள் என்றால் இந்த நாடு எவ்வளவு கொடுமையைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதைத் தயவுசெய்து நீங்கள் மறந்துவிடக்கூடாது. ஆகவே, நாம் புதியமுறையில் பொருளாதாரத் திட்டங்களை

உருவாக்கி, அடிப்படையிலேயே நாம் மக்களுக்குச் செய்ய வேண்டிய அவசியத் தேவைகளை நிறைவேற்றித் தரும் மாபெரும் பொறுப்பை நிறைவேற்றினால் தான் – கொஞ்சமாவது நிறைவேற்றினால் இப்படிப்பட்டவர்களைத் தோற்றுவிக்காமல் தடுக்க முடியுமே தவிர, வெறும் சட்டமும், பிரச்சாரமும் மக்களுடைய தூண்டுதலைத் தடுக்க முடியாவிட்டாலும் அல்லது போலீசை வைத்துக் கொண்டு இவர்களைத் தடுத்துவிடலாம் என்று நினைத்தாலும், நீண்ட நாட்களுக்கு அது தொடர்ந்து நடைபெறுமா என்பதிலே எனக்கு அச்சமிருக்கின்றது.

நான் பொறுப்பேற்றிருக்கின்ற நிலைமையில் இதைச் சொல்ல வேண்டியது என் நீங்காத கடமை. மனத்தில் எதையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்பது என் கருத்து, ஆகவே சமுதாயத்தை, தமிழகத்தைக் காப்பாற்றி, எந்த ஒரு அழிவுப் பாதைக்கும் இளைஞர்களை இழுத்துச் செல்வதற்கு மற்றவர்கள் வாய்ப்புத் தராமல், தடைபோட வேண்டிய அறிவால், ஆற்றலால், திட்டங்களால் நிறைவேற்ற வேண்டிய மிகப் பெரிய பொறுப்பை – நம்மிடம் தமிழக மக்கள் இந்த 1977ஆம் ஆண்டில் ஒப்படைத்திருக்கிறார்கள்.

நண்பர் சொன்னார். அது 1967. இது 1977 என்றார். அன்றைக்கு அறிஞர் அண்ணா இருந்தார்கள். நான் சாதாரணமான ஒருவன். ஆனால் எண்ண அலைகள், குமுறல்கள், மக்களுடைய உள்ளத்தில் எப்படியிருக்கின்றன என்பதை மட்டும் நிச்சயமாக என்னால் சரியாகப்பிரதிபலிக்க முடியும். அவைகளை மட்டும் நீங்கள் உணர்ந்து எங்களுக்கு உதவி செய்வீர்களேயானால், உண்மையிலேயே சொல்லுகிறேன், எதிர்காலம் உங்களுக்கு வரலாற்றிலே இடத்தைத் தந்து உங்களைப் போற்றும், புகழும், என்றும் தமிழகம் உங்களை மறக்காது என்பதைச் சொல்லி, இன்று இதுபோதும் என்ற நிலையோடு நான் நிறுத்திக் கொண்டு, உங்களுக்குத் தொண்டனாக இருப்பேன். தோழனாக இருப்பேன். உங்களுடைய எண்ணத்தை எந்த அளவு பிரதிபலிக்க முடியுமோ அதை நிறைவேற்ற நாங்கள் நிச்சயமாக முயல்வோம் என்பதை மீண்டும் கூறிக்கொண்டு, இந்த வாய்ப்பைத் தந்த தலைமைச் செயலருக்கும், நண்பர்களுக்கும், பொறுமையாக இருக்கின்ற உங்களுக்கும் நன்றி கூறி, நாம் தொடர்ந்து பணியாற்றி தமிழகத்திலே ஒரு புதுமலர்ச்சியை ஏற்படுத்த முயன்று வெற்றி பெறுவோம் என்ற என் ஆவலையும், நம்பிக்கையையும் தெரிவித்துக் கொண்டு, உங்கள் நல்ல உள்ளங்களுக்கு வணக்கம் கூறி, அண்ணா நாமம் வாழ்க என்று சொல்லி. விடைபெறுகிறேன்! வணக்கம்.

அண்ணா நாமம் வாழ்க!

(30.06.1977 அன்று, தமிழ்நாடு தலைமைச் செயலக அதிகாரிகள் சங்கம், தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலர்கள் சங்கம் ஆகியவற்றின் சார்பாக தலைமைச் செயலக திடலில் நடைபெற்ற கூட்டத்தில் ஆற்றிய உரை)

நமது தாயகம் தன்னிகரில்லாத பொலிவையும், தரங்குன்றாத வலிவையும் பெற உறுதி ஏற்போம்!

ஆகஸ்டு 15 அடிமை விலங்கை முறித்தெறிந்த நாள்! வீர நாள்! இந்த மண்ணின் கொடியை விண்ணில் பறக்க விட்ட நாள்! விழிப்புற்று, ''வீறுகொண்டு எழுந்து விட்டது இந்தியா'' என்பதை உலகுக்கு உணர்த்திய நாள்! கோழையை வீரனாக்கி கூனனையும் நிமிரச் செய்த நாள்! சிந்தை – அணு ஒவ்வொன்றையும் சிலிர்க்க வைக்கும் நாள்! இந்த நன்னாளில் தமிழக மக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியையும், அன்பார்ந்த வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விடுதலை நாள் என்பது ஒரு நாட்டின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒரு புனிதமான நாளாகும். நம்முடைய நாட்டை அடிமைப்படுத்திக் கொண்டிருந்த ஆதிக்கம் அகன்று முப்பதாண்டுகள் முடிந்திருக்கின்றன.

காடும் மேடும், மலையும் மடுவும், ஆறும் வயலும் நிறைந்த மண்வெளி மட்டுமே ஒரு நாடாகி விடாது. அங்கே வாழ்கின்ற மக்களாலே தான், அந்த நாடு மதிப்பு பெறுகின்றது.

ஆதிக்க கொடுமையிலிருந்தும், அந்நிய பிடியிலிருந்தும் இந்தத் திருநாட்டை விடுவிப்பதற்காகவும், மக்களின் பிறப்புரிமையாம் சுதந்திரத்தை அடைவதற்காகவும், ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை – சிறைவாசத்தை – சித்திரவதையைத் தீவாந்திர சிட்சையை – தூக்குமேடையைக் கூட – மனமுவந்து ஏற்றுக் கொண்டு விடுதலை வாழ்வை நமக்குத் தந்த பெருமக்களை, தியாக மறவர்களை இந்த நன்நாளில் நன்றியோடு போற்றி வீர வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

எவ்வளவு உயர்ந்த பொருளும் ஒரு நாட்டின் சுதந்திரத்திற்கு ஈடாகாது. ஒரு பெண்ணின் கற்புக்கு எப்படி விலை மதிக்க முடியாதோ, அதுபோல, தாயகத்தின் சுதந்திரத்திற்கு எதையும் ஈடாகச் சொல்ல முடியாது. ''வீர சுதந்திரம் வேண்டி நின்றார், பின்னர் வேறொன்றும் கொள்வாரோ'' என்பது விடுதலைக் கவி பாரதியின் வீர முழக்கமாகும், சுதந்திரம் பெறுவதை விட, பெற்ற சுதந்திரத்தை பேணிக்காப்பது எவ்வளவு கடினமானது என்பதை முப்பதாண்டு காலமாக நமது நாடு அனுபவித்து வருகின்றது. ''நான் விரும்புவது அரசியல் சுதந்திரம் மட்டுமல்ல, பொருளாதார மேம்பாடு, சாதி–சமய பேதமற்ற சமதர்மச் சிந்தனைப் போக்கும் கொண்ட முழுமை நிறைந்த நல்வாழ்வைத்தான் சுதந்திரம் என்று நான் கருதுவேன்'' என்று உலக உத்தமர் காந்தியடிகள் குறிப்பிட்டார்கள்.

அத்தகைய சுதந்திரத்தை விரும்பியதால்தான் உத்தமர் காந்தியடிகளின் உயிருக்கு ஆதிக்கக்காரர்களின் காலத்திலே ஏற்படாத ஆபத்து, அவர் பெற்றுத் தந்த சுதந்திர

நாட்டிலே ஏற்பட்டது. விலை மதிக்க முடியாத தன் இன்னுயிரைத் தியாகம் செய்தார் என்ற நெஞ்சை உருக்கும் நிகழ்ச்சியை இந்த சுதந்திரத் திருநாளில், இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் நினைவிற் கொள்ள வேண்டும் என்பது என் பேரவா.

சாதிகள் மலிந்த நாட்டில் ஜனநாயகம் வெற்றி பொறாது. சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வும், பொருளாதாரத்தில் பேதமும் ஊடுருவி புரையோடிப் போன நாட்டில் சோஷலிசம் வெற்றி பெறாது. அதனால் தான் சாதிக் கொடுமையை எதிர்த்துச் சாடினார் காந்தியடிகள். தமிழகத்தில் அதே இலட்சியத்திற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள் தந்தை பெரியார், முதறிஞர் ராஜாஜி, பேரறிஞர் அண்ணா ஆகியோர்.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்பதே பண்டைத் தமிழர் பண்பாடாகும்.

“எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம்” என்றார் பாரதியார்.

“குள்ள உள்ளத்தைக் கொலை செய்! கூனாதே, நிமிர்ந்து நட” என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

“சுரண்டலற்ற சம வாழ்வுதான் சுதந்திர வாழ்வினுடைய அடிப்படையாகும். எளிய ஏழைகளையும் கூட, ‘இது தங்கள் நாடு’ என்று எண்ண வைக்க வேண்டும். இந்த நாட்டின் அமைப்பில், இந்த நாட்டின் ஆட்சியில், நல்வாழ்வில், தங்களுக்கு முக்கிய பங்கும், முழு உரிமையும், அதிகாரமும் உள்ளன என்பதை அவர்கள் உணருமாறு செய்ய வேண்டும். ஏற்றத்தாழ்வு இல்லாமல் எல்லோரும் இணைந்து நாட்டின் மேம்பாட்டுக்குப் பாடுபட வேண்டும்” என்றார் பேரறிஞர் அமரர் அண்ணா அவர்கள்.

அந்நிய ஆட்சி ஒழிந்துவிட்டால் மட்டும் போதாது; மக்களாட்சி முழுமையாக மலர வேண்டும்; நடைமுறையில் அது நிரூபிக்கப்பட வேண்டும்; கல்வி பரவ வேண்டும்; தொழில்கள் பெருக வேண்டும்; சாதி மத நோய்கள் மடிய வேண்டும்; தீண்டாமை ஒழிய வேண்டும்; கிராமங்கள் சீர்பட வேண்டும், தங்களைப் புத்தி தெளிவற்றவர்களாகத் தாங்களே மாற்றிக் கொண்டு அழிகின்ற கொடிய மதுப்பழக்கம் போக வேண்டும்; வறுமையும், சுரண்டல் முறையும் சமுதாயத்தை விட்டு அகல வேண்டும்.

எனக்குத்தான் எல்லாம் எனும் கள்ள மனம் போய், எல்லாருக்கும் எல்லாம் என்னும் அமரர் அண்ணாவின் நல்ல மனம் அமைய வேண்டும்.

கணக்குத் தீர்த்த நாளும்!

கணக்குப் பார்த்த நாளும் !!

‘கடவுளை நான் தரித்திர நாராயணர்களின் உருவத்தில் காணுகின்றேன்’ என்று உள்ளம் உருகினார் உத்தமர் காந்தியடிகள்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும், பிற்பட்ட வகுப்பினருக்கும் நாம் என்னென்ன நலன்களைச் செய்து தந்தோம் என்று இந்த விடுதலை நன்னாளில்

கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். 1947, ஆகஸ்டு 15, அன்னியர் ஆட்சிக்கு, ‘கணக்கு தீர்த்த நாள்’ என்றும் அதைத் தொடர்ந்து ஆண்டுதோறும் கொண்டாடுகின்ற ஆகஸ்டு 15 சுதந்திரத்தினாலே பெற்றப் பயன்களைக் ‘கணக்குப் பார்க்கிற நாள்’ என்றும், சுட்டிக்காட்டினார்கள். ஒரு வெள்ளி விழாக் கொண்டாடிய பின்னும் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு விடிவு காலம் வந்ததா ? என்ற கேள்விக்குறியை இந்த விடுதலை நாளில் நாம் ஆழமாகச் சிந்தித்தாக வேண்டும்.

பழம்பெருமை மிக்க நமது நாடு சிற்றூர்களைப் பெருவாரியாகக் கொண்டுள்ளது. நமது நாட்டில் நூற்றுக்கு 80–க்கு மேற்பட்டவர்கள் நாட்டுப்புறங்களில் வாழ்பவர்கள். வேளாண்மையைத் தங்கள் வாழ்வாகக் கொண்டு இருக்கிறார்கள். இந்த இருபதாம் நூற்றாண்டு, மின்னல் வேகத்தில் அறிவியல் வளர்ச்சியால், மகத்தான மாற்றங்களைக் கண்டு வருகின்றது. இந்த நிலையில் பழமையான பண்பாடும், தொன்மையான நாகரிகச் சிறப்பும் கொண்ட ஒரு நாடு, திடீரென்று வளர்ச்சி பெற்று, பிற நாடுகளை அப்படியே பின்பற்றி வாழ்ந்துவிட முடியாது. பிற நாட்டினுடைய செயல் திட்டங்கள் எந்த வகையில் பொருந்தும் என்பதை எண்ணிப் பார்த்து, ஆற அமர ஆராய்ந்துதான் திட்டங்களை வகுக்க வேண்டியுள்ளது. தீவிர முற்போக்கு என்ற ஆவேசத்திற்கு ஆட்படாமல் மிதமான போக்கு என்ற பெயரால் சீர்திருத்தங்களை ஒதுக்காமலும் முறையான செயல் திட்டங்களில் நெறியாக ஈடுபட வேண்டும்.

“மண்ணுக்கு ஏற்ற விதையைத் தூவ வேண்டும்” என்பது தான் உத்தமர் காந்தியடிகள், அமரர் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் இலட்சியங்களாகும். உண்மை, உழைப்பு, ஊக்கம், நேர்மை, நியாயம், எளிமை, தூய்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை நம்முடைய செயல்களுக்கு அடிப்படையாகக் கொண்டால் தான் நாம் மேற்கொண்டுள்ள பணிகள் வெற்றியைத் தரும்.

சுதந்திரம் என்றால் எங்கும் எதற்கும் கட்டுப்பாடற்ற உரிமை என்ற பொருளில் சில இடங்களில் விபரீதங்கள் நடைபெறுகின்றன. அடிமைத் தன்மையில் இருந்து, அறியாமையிலிருந்து, விடுதலை பெற வேண்டுமே ஒழிய நாம் ஆற்ற வேண்டிய பொறுப்பிலிருந்தும், கடமையிலிருந்தும் விடுதலை பெற்றோமென்று நாம் கருதிவிடக் கூடாது.

சுதந்திரம் என்றால், எவரும் எதையும் செய்யலாம் என்பது பொருள் ஆகாது. ஒருவரின் சுதந்திரம் அடுத்தவருடைய சுதந்திரத்தைப் பறிப்பதாக ஆகிவிடக்கூடாது.

இந்தச் சுதந்திர நன்னாளில் தமிழ்நாட்டு மக்கள் அமரர் அண்ணாவின் அரசினை ஆட்சியில் அமர்த்தி பொறுப்பினை எங்கள் தோள்களில் சுமத்தியுள்ளனர். உத்தமர் காந்தியடிகள், அமரர் அண்ணா ஆகியோரின் நெறிகளை, இரண்டு விழிகளாகக் கொண்டுள்ள இந்த அரசை நிறைந்த நம்பிக்கையோடு தமிழக மக்கள் குறிப்பாக ஏழை எளியவர்கள் அரியணையில் அமரச் செய்துள்ளனர்.

வேளாண்மை என்பது விஞ்ஞானத் தொழில் நுட்பங்களோடு இணைந்த ஓர் உயர்ந்த தொழில் முயற்சியாகக் கருதப்பட வேண்டும். வேளாண்மைதான் எதிர்காலப் பொருளாதார வளத்திற்கு ஆணிவேராக அமையும். வேளாண்மையில் ஏற்படுகின்ற அந்த உற்பத்தியைப் பொருத்துத்தான், நாடு வளம் பெற முடியும். புதிய அறிவியல் நுணுக்கங்களை நாம் வேளாண்மைத் துறையிலே இன்னும் வளர்த்தாக வேண்டும்.

பழங்கால ஏர்க்கருவிகளையும் பழமையில் ஊறிய பயிர் முறைகளையும், கால மழையையும், தங்கள் கைகால்களையும் மட்டுமே நம்பிக்கொண்டு அவல வாழ்வை நடத்திக் கொண்டு இருக்கின்ற விவசாயப் பெருமக்களின் வேதனைப் போக்கை மாற்றியாக வேண்டும்.

விதைப்பண்ணைகளை விரிவுபடுத்தவும், ஊட்டமான பலன்களைத் தருகின்ற விதைகளை பெருமளவுக்குப் பகிர்ந்தளிக்கவும், மண்வளத்தைக் காக்கவும், வேளாண் பெருமக்களுக்கு உரிய உதவிகளை வழங்கவும், நமது அரசு தனது நிதிநிலை அறிக்கையில் முன்னுரிமை வழங்கியுள்ளது.

ஜப்பான், தைவான், தென் கொரியா போன்ற நாடுகளில் உள்ள உழவர்கள், ஒரு ஏக்கருக்குக் குறைந்த நிலப்பரப்பில், இரண்டு மடங்கு மனித ஆற்றலைப் பயன்படுத்தி, தீவிர அறிவியல் முறைகளால் ஆண்டு ஒன்றுக்கு மூன்று முதல் ஐந்து போகம் வரைச் சாகுபடி செய்ய முடியுமென்று நிரூபித்திருக்கின்றார்கள். பயிர்கள் நன்றாக வளர்வதற்கு ஏற்ற தட்ப வெப்ப நிலை இங்கே இருப்பதுபோல், அந்நாடுகளில் இல்லாதிருந்த போதிலும், அவர்கள் விளைச்சலைப் பெருக்கி உள்ளார்கள் என்ற செய்திகள் நம்முடைய வேளாண் பெருமக்களுக்கு எடுத்து விளக்கப்பட வேண்டும். இஸ்ரேல் நாட்டில் பள்ளிக்கூடங்களில் முதல் படிவத்திலிருந்தே மாணவர்களுக்கும், வேளாண்மை என்பது கட்டாயப் பாடமாக கற்பிக்கப்படுகிறது என்பது போன்ற உலக நாடுகளின் வளர்ச்சியைப் பற்றியும் நாம் உழவர் பெருமக்களுக்கு உணர்த்தியாக வேண்டும், செய்தியும், விளம்பரமும், தகவல் தரும் வானொலி போன்ற சாதனங்களும் தரமான பத்திரிக்கைகளும் இப்படிப்பட்ட மக்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும், சாதனைக்குத் தூண்டுகிற சாதனங்களாகவும் தொண்டாற்ற வேண்டும்.

கல்வியும், தொழிலும் தான் ஒரு நாட்டின் இரு கண்கள் என்பார்கள். தொழில் வளர்ச்சியில் நாம் மெல்ல மெல்ல முன்னேறி வருகிறோம். பெரிய ஆலைகளை நிறுவுவதோடு கிராமச் சூழ்நிலைகளுக்கேற்ற வகையில் சிறுதொழில் வளங்களைப் பெருக்கவும், வேலைவாய்ப்பை வளர்க்கவும், இப்போது சிந்தனைகள் செழித்து வருகின்றன.

ஒரு நாட்டின் தன்னாற்றல் என்பது 'மின்னாற்றல்தான்' என்று சொல்வது பொருத்தமாகும். மின்வசதி நாட்டு மக்களுடைய இருளைப் போக்குகின்ற ஒரு

அறிவியல் நன்கொடையாகும். அந்த மின் வசதியைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

பாதைகள் இல்லாத சிற்றூர்கள் இல்லை, குடிநீர் கிடைக்காத கிராமங்கள் இல்லை, மின்விளக்கு இல்லாத தெருக்கள் இல்லை, தீண்டாமை என்ற பேதமில்லை என்ற சமதர்மத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு, கிராம மக்கள் விடுதலை வாழ்வின் முழுப்பலனையும் கண்டாக வேண்டும்.

“மனிதருள் பேதத்தையும், அச்சத்தையும் மூட்டிவிடக்கூடிய எந்த ஏற்பாடும் சுதந்திரத்தின் பரம விரோதிகள்”. – இது பேரறிஞர் அண்ணாவின் பொன்மொழி.

“அறியாத இனங்கள் என்று ஒதுக்கப்பட்டிருந்த அரிஜனங்கள் எல்லா உயர்நிலைகளையும் பெற்றாக வேண்டும்” என்பதும் நம்முடைய குறிக்கோளாகும்.

“எல்லாம் நான்” என்ற நிலை போய், “எல்லாம் நாம்” என்று சொல்லுகின்ற மனநிலை உருவாக வேண்டும். பொதுமக்களுக்கு நன்மை செய்ய இருக்கிறோம் என்ற புனித உணர்வு நமக்கு ஏற்பட வெண்டும். ஊரை ஏமாற்றுகின்ற உணர்வும், ஊழலும், லஞ்சமும் அறவே தகர்த்தெறியப்படவேண்டும்.

ஆயிரக்கணக்கான தேனீக்கள் ஒன்றாகச் சேர்ந்து தேனடையைக் கட்டுவது போல், ஒரு கூட்டு முயற்சியால் தான் நாட்டு நலம் உருவாக வேண்டும். ஆராய்ந்து முடிவு செய்கின்ற நேர்மையும், அஞ்சாமல் செயலாற்றும் ஆண்மையும், எல்லாரும் சமம் என்னும் எண்ணமும் கரையும் களங்கமும் இல்லாத அரசியல் தூய்மையும் தான் சுதந்திர நாட்டுக் குடிமக்களின் குறிக்கோளாக வேண்டும்.

நமது தாயகம் தன்னிகரில்லாத பொலிவையும், தரங்குன்றாத வலிவையும் பெற உறுதி எடுத்துக் கொள்வோம். நாட்டுப்புறத்து மக்களின் அகமும், முகமும், மகிழவும், சகல மக்கள் நலமடையவும், சரிநிகர் சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கவும், நம்மை நாம் ஈடுபடுத்திக் கொள்வோம்.

சுதந்திர வாழ்வில் மூன்று பத்தாண்டுகளை முடித்து, முப்பத்தி ஓராவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்தியத் திருநாட்டை மகிழ்ச்சியோடு வாழ்த்துவோம்.

“உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்,
வீணில் உண்டுக் களித்திருப்போரை நிந்தனை செய்வோம்”

என்று இந்த சுதந்திரத் திருநாளில் சபதமேற்போம்.

வாழ்க சுதந்திரம் ! வளர்க சமத்துவம் !! அண்ணா நாமம் வாழ்க!!!

(15.08.1977 அன்று, அனைத்திந்திய வானொலியில் ஆற்றிய உரை)

இன்னுயிர் ஈந்தும் இந்தியச் சுதந்திரம் காப்போம்!

எனது வணக்கத்திற்கும், அன்பிற்கும் உரித்தான தமிழ்நாட்டுப் பெருமக்களே! தலைமைச் செயலாளர் அவர்களே! செயலாளர்களே! முப்படைத் தளபதிகளே! முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களே! நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! மற்றும் இந்த சுதந்திர விழாவில், இந்த நிகழ்ச்சியில் பங்கு கொண்டுள்ள பெரியோர்களே, தாய்மார்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

உங்கள் அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துகளையும், என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் நான் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நாடு அடிமைப்பட்டுக் கிடக்கிற மாபெரும் கொடுமையை விட வேறு ஒரு கொடுமை உலகில் எங்கும் இருக்க முடியாது என்பதை நாம் ஒவ்வொருவரும் நன்கு உணர்ந்தவர்களாக இருக்கிறோம். இங்கே கொடியேற்றி வைக்கிற இந்த தினத்தில், இந்த நேரத்தில் – என் நினைவுகள் பல ஆண்டுகளுக்குப் பின்னாலே சென்று பல சுதந்திரப் போராட்ட நிகழ்ச்சிகள் என் கண் முன் தோன்றுகின்றன என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன்.

சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டு, தன் உடைமைகளையும், சொத்து சுகங்களையும், பதவிகளையும், பட்டங்களையும் துறந்து, இந்த நாடு சுதந்திர நாடாக மிளிர வேண்டுமென்ற ஒரு போராட்டத்தில், ஆசையில், சுதந்திர உணர்வில், அவர்கள் செய்த தியாகத்தை நாம் இந்த நேரத்தில் நினைவு கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்!

இங்கே கொடியேற்றி வைக்கிற நேரத்தில், ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது, ஆங்கிலேயர்கள் இந்தக் கோட்டையைச் சுற்றி தன் படைகளை வைத்துப் பாதுகாத்துக் கொண்டிருந்த நேரம், கோட்டையில் கொடியேற்ற முடியுமா என்ற கேள்வி தியாக தொண்டர்களுக்கு கூட உயிரைப் பணயம் வைத்தவர்களுக்குக்கூட சந்தேகம் ஏற்பட்ட நேரம். ஒரு நாள் விடியற்காலையில் இங்கேயிருந்த வெள்ளையர்கள் ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக இந்த கோட்டையைச் சுற்றி இருந்த வீரர்கள், அவர்களுடைய படையினர் மேலே பார்த்தபோது தேசியக் கொடி பறந்து கொணடிருந்ததைக் கண்டு திகைத்தார்கள், யாரோ ஒரு இளைஞன் இவர்களுக்கெல்லாம் ஈடுகொடுத்து, கொஞ்சம் கூட கவலைப்படாமல் தன் உணர்வை மக்களுடைய கருத்தை உலகுக்கு எடுத்துக்காட்டி, இந்தக் கொடியை இங்கே ஏற்றி வைத்தார் என்பதை எண்ணி நான் திகைத்த நாள் உண்டு! இந்த நாளில் என் வணக்கத்தை அவர்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த உணர்வுகள் நீடித்து நிலைக்க வேண்டுமென்பதற்காகவும், சுதந்திரம் அடைந்த ஆண்டுகளின் நினைவுகள் நம்மை எத்தனை ஆண்டுகள் முன்னுக்கு அழைத்துச் செல்கின்றன என்பதை எண்ணிப் பார்ப்பதற்கும், முன்னேற வேண்டுமென்று

நினைக்கிற எல்லாரும் சமதர்ம தத்துவத்தை ஏற்று, சமத்துவ நிலையடைந்து, ஜாதி பேதமற்ற நிலையை ஏற்படுத்தி, மதமோ ஜாதியோ குறுக்கிட அனுமதிக்காமல் “எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்” என்ற நல்லுணர்வோடு இணைந்து வாழ்ந்து ஏழை–பணக்காரன் என்ற பேதம் இன்றி, இந்த நாடு வாழவேண்டுமென்ற நம்முடைய கொள்கையை நிறைவேற்றிக் கொள்ள இன்னும் நாம் செய்யவேண்டிய கடமைகள் எல்லாவற்றையும் எண்ணிப் பார்க்கிற நாளாகும் இது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தியாகம் செய்தவர்களுக்கு நன்றி கூறுவது நமக்குள்ள இயற்கையான ஒரு பண்பாடாகும். “நன்றி மறந்தவர்கள் அல்ல தமிழக மக்கள்” என்பதை உலகம் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறது. “இந்த உலகத்தின் கண்கள் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன என்பது மட்டுமல்லாமல், 30 ஆண்டுகளுக்குள் இந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறார்களே. உலகத்திலே அதிக மக்கள் வாக்களித்து தேர்ந்தெடுக்கிற ஒரு குடியரசு உலகத்திலே இந்தியத் துணை கண்டம் ஒன்று தான் இருக்கிறது” என்று நினைத்துப் பார்க்கும் போது அவர்கள் திகைக்கிறார்கள்! பொறாமை படக்கூட சந்தர்ப்பம் இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

ஒன்றை நான் தெளிவாகக் கூறிக் கொள்கிறேன். மக்கள் சக்தியை மக்கள் நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நாடு புரிந்து கொள்கிற ஒரு நல்ல வாய்ப்பு ஆகத்தான் சென்ற தேர்தல் நடந்தது என்பதை நான் தெளிவாகச் சொல்லிக் கொள்வேன். மக்கள் எதைச் சரியென்று கருதுகிறார்களோ அதை நிறைவேற்றித்தர, அதை நம்புகிறவர்கள் – அவர்களால் நம்பப்படுகிறவர்கள் – எப்படிச் செயல்படவேண்டுமென்று எடுத்துக்காட்ட ஒரு நல் வாய்ப்பாக நடந்து முடிந்த தேர்தல் நமக்கு உறுதியளித்து இருக்கிறது என்பதை நினைத்து நாம் பெருமைப்படவேண்டும்.

நம்முடைய கடமை மிகப்பெரியது. விவசாயிகள், தொழிலாளர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள், மலைவாழ் பெருங்குடி மக்கள், தாய்மார்கள், ஆதரவற்ற தாய்மார்கள், இவர்கள் அனைவரும் மகிழ்ச்சியோடும், மனநிறைவோடும் வாழ்கிற நாள் என்றோ அந்த நாள் தான் மகாத்மா காந்தி அடிகள் எதிர்பார்த்த நாள் என்றும், நம்மை ஆளாக்கிய அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்பார்த்த நாள் என்றும், நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். எந்த ஒரு தனி அரசியல் கட்சியோ எந்த ஒரு தனி மனிதனோ அந்தப் பெரும் தலைமை நினைத்ததையெல்லாம் செய்ய முடியாது. நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து, நமக்குள் இருக்கிற கருத்து வேறுபாடுகளைக் கொள்கை வேறுபாடுகளாக ஆக்காமல், தெளிவான கருத்துக்களை நேர்மையான வழியல் தெரிவித்துக்கொள்கிற பாங்கை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை உலகத்திற்குத் தமிழக மக்களும், தமிழகச் சட்டமன்றமும் எடுத்துக் காட்டிக்கொண்டு இருக்கின்றன. அதுமட்டுமல்ல, என் வேண்டுகோள், தமிழகத்திற்கு நாம் செய்ய வேண்டிய கடமையை எந்தெந்த வகைகளில் செய்யவேண்டுமென்று விரும்புகிறோமோ அவைகளை நாம் ஜாதியைத்

தூக்கியெறிந்து, மதத்தின் பெயரால் நாட்டைப் பிளவுபடுத்துகிற தேவையற்ற நம்பிக்கைகளைத் தூக்கியெறிந்து, நாம் எல்லாரும் ஒன்று சேர்ந்து சிறப்பாக உழைத்து இந்த நாட்டுக்குப் புரிய வேண்டிய கடமையைச் செய்யவேண்டிய ஒரு உறுதியை எடுத்துக்கொள்கிற நாளாக இதை நாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தமிழக மக்களை வேண்டிக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் ஒன்றை நான் சொல்லிக்கொள்கிறேன். எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் ஆக இருந்தாலும், வேறு எந்த நம்பிக்கை உடையவர்களாக இருந்தாலும், நாட்டுக்கு நல்லது செய்தால் அவர்களைப் போற்ற வேண்டும் என்பதை மனிதத்தன்மை உள்ள ஒவ்வொருவரும் உணர்ந்திருக்கிறோம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்த சுதந்திரக் கொடி ஏற்றி வைப்பது மேதகு ஆளுநர் என்ற முறையில் இருந்தது. அந்த முறையை மாற்ற வேண்டுமென்று கோரிய—போராடிய—அந்த உரிமையைப் பெற்றுத்தந்த, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அ.இ.அ.தி.மு.க. பிரதிநிதியான—முதலமைச்சராக இருக்கிற – நான் இந்த கொடியை ஏற்றி வைக்க உதவி செய்த கலைஞர் கருணாநிதி அவர்களை நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நல்லது செய்வதைப் பாராட்டவும், தீமையை எதிர்த்துப் போராடவும் கடமைப்பட்டிருக்கிறோம் என்பது நமக்குள்ள கடமையாகும்.

நாட்டிலே மக்கள் வாழ்வது என்றால், ஒரு சிறு மாளிகையில் வாழ்வது மட்டும் என்பது ஆகாது. அது நிறைவு பெறாது. மக்கள் மனத்திலே நல்ல மாற்றம் வேண்டும். கிராமத்தில் இருக்கிற மக்கள், இந்த நாட்டை முழுமையாகச் சுதந்திரம் பெற்ற நாடாக மனத்தில் நினைக்கிற அளவுக்கு, அவர்களுக்கு இன்னும் அத்தகைய வாய்ப்புக் கிடைக்கவில்லை. நகரத்தில் இருப்பவர்களுக்கு எந்தெந்த வாய்ப்புக்கள் கிடைக்கிறதோ, அவைகள் அத்தனையும் கிராமப்புற மக்களுக்கும் கிடைக்க வேண்டும் – கிடைக்கச் செய்வோம் என்று, அண்ணாவின் மேல் – மகாத்மாவின் மேல் சூளுரை எடுத்துக் கொள்வோம்.

இந்தச் சுதந்தரம் பெறுவதற்கு எந்தெந்த வகைகளில் துன்பத்தையும், துயரத்தையும் தாங்கிக்கொண்டார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். தொடக்கத்தில் வன்முறையில் போராடினால் தான் – ஆங்கிலேயர்களுக்கு அந்த மொழிதான் புரியும் – என்று வன்முறையைத் தொடர்ந்த நாள் உண்டு. எத்தனையோ பேர் வன்முறையில் ஈடுபட்டு உயிரிழந்ததும் உண்டு. வாஞ்சிநாதன் போன்றவர்கள், வெள்ளையர்களைச் சுட்டுக்கொன்றுவிட்டு, தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டவர்களும் – தூக்குமேடை ஏறியவர்களும் உண்டு – நாடு விடுதலை பெற வேண்டுமென்ற காரணத்திற்காக.

மகாத்மா காந்தியடிகள் வன்முறையைத் தூக்கியெறிந்துவிட்டு அறவழியில் – அகிம்சை வழியில் – போராடி நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்து, உலகத்திற்கு எடுத்துக்காட்டிய முன்மாதிரியானவர் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, அந்த

வழியைப் பின்பற்ற வேண்டும் என்று அமரர் அண்ணா அவர்கள் எத்தனையோ முறை சொல்லியிருக்கிறார்கள் என்பதை நினைவு கூற வேண்டும்.

சுதந்திரம் என்பது, எதையும் யாரும் செய்யலாம் என்பதல்ல என்றும் மக்கள் நல்வாழ்வு பெறவேண்டும். அதனால் எதிர்காலத்திற்கு உதவியையும் பெறவேண்டும். அதற்காகச் சட்டமும், பழக்க வழக்கங்களும் அமைய வேண்டுமென உணர்கிறோம். பிறருடைய சுதந்தரத்தை மதிக்கிற ஒவ்வொருவரும் சுதந்திரவாதியாக வாழ முடியும். நமக்கு மற்றவர்கள் அடிமைப்பட்டவர்கள் என்றோ, சில சுகபோகத்தில் இருந்தவர்கள் இன்னும் அந்த எண்ணத்தில் இருந்தால் இந்தச் சுதந்திர நாளில் தமிழக மக்களின் சார்பாக அந்த எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று – மக்கள் மாற்றுவதற்கு முன்னால் நீங்கள் மாற்றிக்கொள்ளுங்கள் என்று சொல்லக் கூடிய முறையில் – மக்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

இந்தியச் சுதந்திரம் பெற்று 30 ஆண்டுகளுக்குள் எதிரிகளால் இது கேள்விக்குறி ஆகியிருக்கிறது ஆக்கப்பட்டிருக்கிறது –அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். காடும், மேடும், வயலும், நதியும், மக்களும் கொண்டது தான் சுதந்திர நாடு என்பது அல்ல. மக்கள் சுதந்தரமாக வாழ்ந்து, பேச்சுரிமையை, எழுத்துரிமையை, எண்ணுகிற உரிமையை நிலை நாட்டினால் தான் இந்த நாடு சுதந்திர நாடு என்று குறிப்பிட முடியும் என்று உணர்ந்திருக்கிறோம். நாம் செய்கிற செயலும் இந்த நாட்டின் வாழ்விற்காக என்றும், ஆக்க வழியில் உதவி செய்து காட்டவேண்டுமே தவிர, ஒருவரை அழித்து ஒருவர் வாழ்வதோ, ஒரு கொள்கையை அழித்து ஒரு கொள்கையை நிலை நாட்டவோ யாருக்கும் அந்த நிலை இங்கே ஏற்பட்டுவிடக்கூடாது என்று இந்தச் சுதந்திர நாளில் நான் சொல்லிக்கொள்வேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், இதைப்போன்ற மலைவாழ் பகுதிமக்கள் இவர்களுக்கெல்லாம் இன்றைய தினம் வாழ்வில் மறுமலர்ச்சி கிடைக்கிறதோ, வாழ்வின் உறுதி தரப்படுகிறதோ, அன்று தான் நம்முடைய நாடு பெற்ற சுதந்திரம் முழுத் தன்மையை அடையும் நாளாக அமையும் என்பதை இங்கே சொல்லி, நாம் அனைவரும் ஜாதி பேதம் இன்றி, மத வேறுபாட்டின்றி இந்தச் சுதந்திரத்தைக் காப்பாற்ற, இந்தக்கொடிக்கு எந்த அவமானமும், தரக்குறைவும் ஏற்படாமல் காப்பதற்கு உயிரையும் ஈந்து காப்பாற்றுவோம் என்று சூளுரை ஏற்றுக்கொண்டு, அதை நீங்களும் ஏற்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இப்போது நான் சொல்லும் ‘‘இந்திய சுதந்திரம்’’ என்ற வார்த்தைக்குப் பின் ‘‘வாழ்க’’ என்று சொல்ல வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

(15.08.1977 அன்று, இந்திய சுதந்திரத் திருநாள் விழாவையொட்டி சென்னை கோட்டைக் கொத்தளத்தில் ஆற்றிய உரை)

இராஜாஜி கண்ட கனவை நனவாக்குவோம்!

“**த**ன் மனதில் தோன்றுவதை வெளிக்காட்டி அதைச் செயல்படுத்தப் பின்வாங்குபவன் பொறுப்பேற்கத் தகுதியற்றவன்'' என்று மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சொன்னார்கள்.

இராஜாஜி அவர்களின் நேர்மையைப் பற்றியும், நிருவாகத் திறனைப் பற்றியும் இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். யாருக்கும் அஞ்சாமல், விட்டுக்கொடுக்காமல், கருத்தை எடுத்து வைப்பதில் வல்லவர் இராஜாஜி அவர்கள்.

அதுபோல என் உள்ளத்தில் எழுந்த கருத்தைச் சொல்வது அவரைப் பின்பற்றுகிற நீங்களும், மேடையிலே அமர்ந்திருப்பவர்களும், விரும்புவார்கள் என்று நம்புகிறேன்.

ஒருமுறை இராஜாஜி அவர்கள் டெல்லியில் ஒரு கூட்டத்தில் பேசியபோது, அசம்பாவித நிகழ்ச்சி ஒன்று நடந்தது. மரியாதை தெரியாத ஒருவன் – இங்கிதம் தெரியாத ஒருவன் –பெரியவர்களை மதிக்கத் தெரியாத ஒருவன் – அழுகிய கோழி முட்டையை அவர் மீது எறிந்துவிட்டான்.

அந்த அழுகிய கோழி முட்டை அவர் சட்டையில் பட்டுவிட்டது. ஆத்திரப்படாமல் துடைத்துக் கொண்டார். அப்போது அவர், ''நான் எதற்காகப் பாடுபடுகிறேன், உழைக்கிறேன் என்றால், இப்படிப்பட்ட அழுகிப் போனவர்களின் உள்ளத்தைத் திருத்த வேண்டும் என்பதற்காகத்தான்'' என்றார்.

இராஜாஜி அவர்களின் பணிகளை எண்ணி, அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைகளை நிறைவேற்ற செயல்பட்டு வருகிறேன் என்பதில் பெருமைப்படுகிறேன். மக்கள் நாணயமாக வாழ வேண்டும் என்று இராஜாஜி அவர்கள் விரும்பினார்கள். மக்கள் நாணயமாக வாழ்வதற்குப் பாதுகாப்புத் தர வேண்டியது அரசின் கடமை என்பதை நான் உணருகிறேன்.

இங்கே பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்களும், புத்தகங்களும் வழங்கப்பட்டதைப் பார்த்தீர்கள்.

எதற்காக இவைகள் எல்லாம் வழங்கப்படுகின்றன. இவர்களின் பேரன், பேத்திகள் இவர்கள் பெற்ற பரிசுகளைப் பார்க்கும்போது, மூதறிஞர் இராஜாஜியின் 100ஆவது பிறந்த நாள் விழாவில் பெரியவர்கள் மற்றும் ஆளுநர் முன்னிலையில், முதலமைச்சர்

வழங்கினார் என்ற செய்தியைப் பார்க்கும்போது அவர்களுக்குப் பெருமையாக இருக்கும்.

அதற்கு மாறாகத் தனது தாத்தா வெடிகுண்டு வைத்தார்; தீ வைத்தார்; பஸ்ஸைக் கொளுத்தினார்; கல்லெறிந்து பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தினார்; பெண்கள் என்றும் பாராமல் கல்லெறிந்து, அவர்களைக் காயப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார், கொலை முயற்சியில் ஈடுபட்டார் என்ற செய்தியைப் பார்ப்பார்களேயானால், அவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் இருக்க, அவர்கள் ஆக்க முயற்சியில் ஈடுபட, ஊக்கம் அளிக்கும் பணியில் அனைவரும் ஈடுபட வேண்டுகிறேன்.

இன்றைக்கு மூதறிஞர் இராஜாஜி அவர்களை எதற்காகப் பாராட்டுகிறோமோ, அந்த மூதறிஞர் பிறந்த நாட்டில், நாட்டின் முன்னேற்றத்திற்காக யார் தடையாக இருந்தாலும் – அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்கள் மன்னிக்கப்பட மாட்டார்கள். ஆட்சியில் இருக்க உரிமை வழங்கும் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற மூதறிஞர் இராஜாஜி அவர்கள் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் செயல்பட்டார்கள். இராஜாஜி அவர்கள் பதவிக்குச் சென்று சட்டமன்றத்தில் பேசும்போது ஒன்றை அடிக்கடி குறிப்பிடுவார்கள் என்பதை நான் கூறியிருக்கிறேன்.

“நான் தொலைநோக்குப் பார்வையோடு 100 ஆண்டுகளுக்குப் பயன்படும் திட்டத்தைப் போடுகிறேன். ஆனால், அதே நேரத்தில் அடுத்த வினாடி பதவி விலக ராஜினாமா கடிதத்தை சட்டைப் பையில் வைத்திருக்கிறேன்” என்று குறிப்பிடுவார்கள். மாஜிஸ்திரேட்டாக இருந்து, நீதிபதியாக, உயர்நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெறுவதை நாம் பார்த்திருக்கிறோம்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக, உயர்ந்த பதவியில் இருந்தவர். ஆனாலும்; இராஜாஜி அவர்கள் உயர்ந்த பதவி, சின்னப் பதவி என்று கணக்குப் பார்க்காமல், மக்களுக்குத் தொண்டாற்றுவதில் தனது வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டார்.

இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக இருந்த இராஜாஜி அவர்கள் மேற்கு வங்கத்தின் கவர்னராகவும் பணியாற்றி இருக்கிறார்கள்.

அதற்குப்பிறகு, தமிழகத்தில் பல மாநிலங்கள் ஒன்றாக இருந்த சென்னை மாநிலத்தில், காங்கிரஸ் கட்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் குறைவாக இருந்த



நேரத்தில் காங்கிரஸ் கட்சியைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக – வேறு கட்சி ஆட்சிக்கு வருவதைத் தடுப்பதற்காக– முதலமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

அப்போது திறமையான நிருவாகத்தால், தூய்மையான ஆட்சியை நடத்தினார். தனக்கு கெட்ட பெயர் வரும் என்று கருதாமல் மக்கள் நலனுக்காகத் துணிச்சலோடு செயல்பட்டார். கட்சி நலன் கருதாமல், பொதுமக்களின் நலனையே முக்கியமாகக் கருதி செயல்பட்டார்.

தமிழகத்தில் மீண்டும் உண்மையான மதுவிலக்கைக் கொண்டு வர வேண்டும் என்று இராஜாஜி அவர்கள் கூறினார்கள். இராஜாஜி அவர்கள் கண்ட கனவை நனவாக்க மதுவிலக்கு கண்டிப்பாக அமல்படுத்தப்படும்.

உறவு, கட்சி, ஜாதி, மதம், வசதி படைத்தவர்கள், வேண்டியவர்கள் என்று எதைப்பற்றியும் பாராமல், இராஜாஜி அவர்களின் கொள்கையான மதுவிலக்கு அமல் நடத்தப்படும். மூதறிஞர் இராஜாஜி, பேரறிஞர் அண்ணா ஆகியோரின் கொள்கையை நிறைவேற்ற எது குறுக்கே நின்றாலும் அது அகற்றப்படும்.

மூதறிஞர் இராஜாஜியின் 101ஆவது பிறந்த நாள் விழாவில் இராஜாஜியின் திருவுருவச் சிலை சென்னை பாரிமுனையில் வைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள், தியாகத்தால்–அறிவாற்றலால்–மக்கள் தொண்டால்–உயர்ந்து நின்றார். அவரின் அறிவாற்றலை உலகம் போற்றியது. அவருக்குச் சிலை வைப்பது பொருத்தமானது என்று கருதுகிறோம்.

சென்னை நகரமே விழாக் கோலம் பூண்ட நகரமாக அமையும் விதத்தில் இராஜாஜி சிலை திறப்பு விழா கோலாகலமாக நடைபெறும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

(08.12.1977 அன்று, சென்னை இராஜாஜி மண்டபத்தில்
மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 100ஆவது பிறந்த நாள் விழாவில்,
திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரை)

எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!

இன்று, தமிழ் இசைச் சங்கம் 34 ஆண்டுகளைக் கடந்து வீறுநடை–வெற்றி நடைபோடுகிறது. தனது கடமையிலிருந்து வழுவாமல், சிறப்பாகப் பணி செய்து வருவதைப் பார்க்கும்போது பெருமைப்படுகிறேன். அதைத் தொடர்ந்து மற்றவர்களும் தமிழ் இசை வளர பாடுபடக் கேட்டுக்கொள்கிறேன்.

பதவியையும், பணத்தையும் வாழ்க்கையின் சுகபோகங்களுக்காக மட்டும் பயன்படுத்தாமல், தன்னை உயர்த்திக்கொண்டால் மட்டும் போதும் என்று கருதாமல், தமிழ்மொழி வளர, தமிழிசை வளர, நாட்டை, நாட்டு மக்களை உயர்த்த, வழிகாட்டியவர்களை, அதற்கு முன்னின்று தமிழிசையைத் தொடங்கி வைத்தவர்களை, நாம் எல்லோரும் போற்றுகிறோம்! நமது வருங்காலச் சந்ததியினரும் எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகும் பாராட்டுவார்கள். செட்டிநாட்டு அரசர் அண்ணாமலை செட்டியார் அவர்களுக்கு நன்றி கூறுவார்கள்.

தமிழுக்குச் சொந்தக்காரன் என்ற உரிமையோடு நான் இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் மொழி–தமிழ் இசைக்குப் பாதுகாப்பு ஏற்படுத்த–பிற மொழிகளால் தமிழ் மொழி–தமிழ் இசை–பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக–பிற மொழிகள் தமிழ் மொழி மேல்–தமிழ் இசை மேல்–மேலாதிக்கம் செலுத்தாமல் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான்–தமிழிசைச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது என்று கருதுகிறேன்.

நான் இப்படிக் கூறுவதில் தவறு இருந்தாலும் இல்லாவிட்டாலும் உண்மைக் காரணம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று எனது உள்ளத்தில் நம்பிக்கை எழுகிறது.

சிலரை மட்டும் ஈர்க்க என்று இல்லாமல் படித்தவர்கள், பாமரர்கள், எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் அனைவரையும் ஈர்க்கும் சக்தி இசைக்கு உண்டு.

அத்தகைய இசையின் வழியாக தமிழ் மக்களின் நெஞ்சங்களில் கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழ் உணர்ச்சியை–தமிழ்ப் பண்பாட்டை–ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தோடுதான் தமிழிசைச் சங்கம் தொடங்கப்பட்டது.

இசையின் மூலம் எல்லோரையும் ஈர்க்க முடியும் என்பதை உணர்ந்து அந்த இசையைப் பயன்படுத்த தமிழிசைச் சங்கம் கண்ட, செட்டி நாட்டரசர் அண்ணாமலை செட்டியார் அவர்களின் நுண்ணிய அறிவை–ஆற்றலை–தமிழ் மீது கொண்டுள்ள பிணைப்பை எண்ணி மகிழ்ச்சி கொள்கிறோம்.

தமிழிசையைக் கேட்டு மகிழ்பவன் நான். தமிழ் மொழிக்காக, தமிழ்ச் சமுதாயத்திற்காக உழைத்தவர்கள், தியாகம் செய்தவர்கள், அதற்காகத் தமது இன்னுயிரையே இழந்தவர்கள், தமிழகத்தின் எல்லையைக் காக்கப் போராடியவர்கள், இப்படிப்பட்ட பெரியவர்களையும் இந்த நேரத்தில் நினைவுகூர்ந்து அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழிசைக்காகப் பாடல்கள் இயற்றித் தந்த கவிஞர்களையும்—தாங்கள் ஒதுக்கப்படுவோம் என்று தெரிந்திருந்தும் அச்சப்படாமல் துணிந்து தமிழுக்குக் கடமையாற்ற வந்த கவிஞர் பெருமக்களையும்—இந்த நேரத்தில் நினைவுகூர்ந்து பாராட்டுத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழிசையைக் காப்பதில் என்ன அவ்வளவு அக்கறை ? இது தேவை தானா ? என்று சிலர் கேட்கலாம். பண்டைத் தமிழிலக்கியத்திலேயே தமிழிசையின் பெருமை குறித்தும்—அதன் வளர்ச்சி குறித்தும்—பாடல்கள் உள்ளன என்ற செய்தியினை சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் குறிப்பிட்டதாக இங்கே தலைமை ஏற்கும் பெரியவர் கூறினார்.

அப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழிசையை—செழுமை மிகுந்த தமிழிசையை மீண்டும் சொந்தம் கொண்டாட தமிழிசைச் சங்கம் 35 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது என்பதை எண்ணி மகிழ்ச்சி கொள்கிறோம். எனவே, தமிழை—தமிழ் இசையைக் காப்பதில் ஏன் இவ்வளவு அக்கறை என்று கேட்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

தமிழ் மொழி எப்படி இருந்தது என்பதையும் நாம் இப்போது எண்ணிப் பார்த்திட வேண்டும். இமயமலை தோன்றாக் காலத்தில் தமிழகம் எப்படி இருந்தது என்ற வரலாற்றை உணர்ந்து தெரிந்தவர்கள், தங்களது அறிவாற்றலைத் தமிழக மக்கள் மனத்தில் பதிய வைத்திருக்கிறார்களா என்பதையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

இமயம் தோன்றாக்காலத்திற்கு முன்னரேயே குமரிக்கண்டம் இருந்தது என்ற வரலாற்றினை நாம் அறிகிறோம். அத்தகைய இமயம் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய தமிழக மக்களின் நாகரிகத்தை – பண்பாட்டை – கலாச்சாரத்தை—எல்லாத் தமிழக மக்களிடமும் பரப்பி இருக்கின்றோமா ? என்பதையும் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

தமிழுக்கு சிறப்புச் சேர்ப்பது இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழாகும். நாம் ரசிக்கின்ற—கேட்டு மகிழ்கின்ற நாத ஒலியை—இசையை—ஒழுங்குபடுத்தி, சீர்படுத்தி வெளிப்படுத்துகிறார்கள்.

வரிவடிவத்தில் உள்ள எழுத்துக்கள் வார்த்தைகளாகி, வாக்கியங்களாகி, பாடலாக—இசையாக—ஒலியாக—வெளிப்படுகின்றன. அது நாடகமாகவும், கூத்தாகவும் மாறி நடித்துக் காட்டப்படுகிறது. இந்த முறையில் பெரியவர்கள் முத்தமிழை வளர்த்தார்கள்.

தமிழ் மக்கள் தங்கள் வரலாற்றை முழுமையாகத் தெரிந்து கொள்ள, கடமையாற்ற வேண்டிய பொறுப்பு அரசியலில் ஈடுபட்டவர்களுக்கு மட்டுமல்ல, அறிஞர் பெருமக்களுக்கும் உண்டு.

நம்மால் மதிக்கப்படுகிற, சிலரால் சில காலங்களில் ஒதுக்கப்பட்ட இசைப்பேரரசு தண்டபாணி தேசிகர் அவர்களை இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கின்றோம். தமிழிசை பாடியதற்காக அவரைச் சங்கீத வித்வான் என்று ஏற்றுக்கொள்ள மறுத்தவர்களும் உண்டு. சங்கீதத்திற்கும் தமிழிசைக்கும் சம்பந்தமில்லை என்று கூறியவர்களும் உண்டு.

தமிழிசை பாடிடும் வித்வான்கள் எல்லாம் இரண்டாம் தரம் என்று பேசியவர்களும் உண்டு. இப்படிப்பட்ட கருத்துக்களைக் கேட்கின்ற நேரத்தில் நான் ஆத்திரப்பட்டது கூட உண்டு.

இசை தமிழர்களுக்குப் புதுமையானது அல்ல! தமிழர்களின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்தது இசை. இசையை இரவல் வாங்கிப் பாட வேண்டிய அளவிற்குத் தமிழர்கள் எந்தக் காலத்திலும் இருந்திருக்கவில்லை என்பதைத்தான் நமக்கு வரலாறு எடுத்துக் கூறுகிறது.

இங்கே சின்னஞ்சிறு இளவல்—இளந்தளிர்—நாதஸ்வர இசையைத் திறமையாக வாசித்ததை அனைவரும் கேட்டு மகிழ்ந்து கைதட்டி வரவேற்றதைப் பார்த்தோம்.

நாதஸ்வர இசையில் புலமை பெற்றவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறார்கள். ஒரு காலத்தில் இன்னார்தான் இந்த நாதஸ்வர இசையை வாசிக்க வேண்டும் என்ற நிலைமை இருந்தது. இன்று அந்த நிலைமை மாறிவிட்டது.

இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்த காலத்தில், தவுல் மீனாட்சி சுந்தரம் பிள்ளை போன்றவர்கள்—நாதஸ்வரக் கலையில் நம்மால் பாராட்டப் பெற்றவர்கள் எல்லாம் கூட—பல்லக்கில் அலங்கரிக்கப்பட்ட சுவாமி ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படுகிற நேரத்தில் இரவு முழுவதும் சுவாமி பல்லக்குக்கு முன்னே நாதஸ்வரம் வாசித்ததை நான் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை போன்றவர்கள் எல்லாம் தவுலைத் தூக்கிக்கொண்டு, நடந்து கொண்டே வாசித்து மக்களை மகிழ்வித்து இந்தக் கலையை வளர்த்த காலம் உண்டு. இன்று அந்த நிலைமை மாறிவிட்டது.

இப்போது, நாதஸ்வர இசையை வளர்ப்பதில் ஈடுபட்டிருந்த குடும்பங்கள் கூட இந்தத் தொழிலை மறந்து மற்றவர்களைப் போலத் தங்கள் பிள்ளைகளும் படித்துப் பட்டம் பெற்று வேலை பார்க்கின்ற நிலையில் வர வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

நாதஸ்வர இசை, குலத்தொழில் ஆகக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்துவதில் மற்றவர்களைப் போல நான் முன்னால் நிற்கிறேன்.

நெஞ்சில் தொடங்கி, நாக்கில் தவழ்ந்து மூச்சை அடக்கி வெளிப்படும் நாதம்தான் நாதஸ்வரம், தங்கள் உயிர் மூச்சைத் தந்து மக்களை மகிழ்விக்கிற நாதஸ்வரக் கலையை காப்பாற்றத் தமிழக அரசு விரும்புகிறது.

படிப்புக்குக் குந்தகம் ஏற்படாமல் நாதஸ்வரக் கலையை முறையாகப் பயில ஆர்வமிக்கவர்கள் யார் முன் வந்தாலும் அவர்களுக்குத் தேவைப்படுகிற வசதியைத் தமிழக அரசு செய்து கொடுக்கும். அவர்களுக்கு மாதா மாதம் உதவித் தொகை ரூ.500/–க்குக் குறையாமல் கொடுக்கத் தமிழக அரசு உத்தேசித்துள்ளது.

இதைப்போல, கோயில்களில் இசையின் மூலம் பக்தியைப் பரப்பி வந்த ஓதுவார்கள் இன்றைய தினம் குறைந்து கொண்டே வருகிறார்கள் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

எனவே, கோயில்களில் ஓதுவார்கள் தமிழ் இசைமூலம் பக்தியைப் பரப்பினாலும் சரி ‘‘எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் நிறை’’, ‘‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’’ என்ற கருத்தைப் பரப்பினாலும் சரி மக்கள் கோயில்களுக்குச் செல்லும்போது ‘தமிழ், தமிழ் என்ற இனிமையான ஒலி கேட்க வேண்டும்!’ என்ற ஆசை–பேரவா இந்த அரசுக்கு உண்டு!

எந்தெந்தக் கோயில்கள் என்று இல்லாமல், எல்லாக் கோயில்களிலும் நாத வெள்ளம் மக்கள் உள்ளத்தைக் கவர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். தமிழிசையைக் காப்பாற்ற வேண்டும் என்று கூறுகிற அதே நேரத்தில் ஒன்றை உயர்த்தி, ஒன்றைக் குறைத்துக் கூறுகிறோம் என்று அர்த்தமல்ல!

1942ஆம் ஆண்டு விக்டோரியா மெமோரியல் ஹாலில் ஆர்.கே. சண்முகம் செட்டியாரும், செட்டி நாட்டு அரசரும், அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களும், மற்றும் பெரியவர்களும் தமிழ் இசையைப் பற்றி விவாதித்தார்கள். அப்பொழுது தமிழ் வளர தமிழ் இனம் காக்கப்பட வேண்டும் என்ற கருத்தை அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்தினார்கள்.

புதிய புதிய பாடல்கள் தமிழிசையில் சேர்க்கப்பட வேண்டும் என்று தமிழக அரசு விரும்புகிறது. சிறந்த புதிய தமிழ்ப்பாடல்களைப் புனையும் கவிஞர் பெருமக்களைப் பாராட்டி அவர்களை மகிழ்விக்கும் முறையில், இசை வல்லுநர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து அதன் மூலம் சிறந்த பாடல்களைத் தேர்ந்தெடுக்கும். அதனை இயற்றிய கவிஞர்களுக்கு ரூ.5 ஆயிரம் பரிசு வழங்கத் தமிழக அரசு உத்தேசித்துள்ளது.

இசையில் எத்தனையோ இராகங்களை வைத்திருக்கிறார்கள். மேலும், புதிய புதிய இராகங்களைக் கண்டு, மக்களுக்கு அளித்து, இசையைச் செழுமைப்படுத்தவேண்டும் என்று இசைப் பேரறிஞர்களை கைகூப்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

கர்நாடக சங்கீதத்தின் வரைமுறைகளை மீறாமல் புதிய இராகங்களைத் தருகிற இசைப் பேரறிஞர்களையும் இந்த அரசு ஊக்குவிக்க விரும்புகிறது.

நம்முடைய உணர்வை வெளிப்படுத்த எந்த மொழி தாய்மொழியோ—சொந்த மொழியோ—அதைப் பயன்படுத்துகிறோம். அந்த மொழியை வளர்ப்பதற்கும் பாதுகாப்பதற்கும் நமக்கு உரிமை உண்டு.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இசைக் கலையைப் பயில்கிறவர்கள் கல்வி பயிலாமல், இசைக் கலையை மட்டும் கற்பது என்றால் அதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

இசையைக் கற்கின்ற அதே நேரத்தில், மொழியை—அறிவியலை—வரலாற்றை—இலக்கியத்தைக் கற்க வேண்டும். இரண்டையும் சேர்த்து கற்கச் செய்யப் பெற்றோர்கள் அக்கறை காட்ட வேண்டும்.

எந்த நாட்டிலும் மொழிப்பற்று இல்லாதவர்கள் முன்னுக்கு வந்ததாக வரலாறு உண்டா ? மொழி என்பது இரத்தத்தோடு இரத்தமாகக் கலந்த உணர்வாகும்.

மொழியைக் காப்பாற்றும் பணியில் நமக்கு எத்தனை எத்தனையோ சோதனைகள் ஏற்படலாம்!

பலர் நம்மைக் குறை சொல்லலாம். ஆனால், நாம் தொடர்ந்து அந்தப் பணியைச் செய்தால், வருங்கால சந்ததி நம்மைப் பாராட்டத் தயங்காது என்பதையும் இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சினிமா வந்த பிறகுதான் கர்நாடக சங்கீதம் கெட்டுவிட்டது. வடநாட்டு, மேல் நாட்டு சங்கீத பாணி இங்கே ஊடுருவி விட்டது என்று சிலர் குறை கூறுகிறார்கள்.

சினிமாத்துறையில் தியாகராஜ பாகவதர், பி.யு. சின்னப்பா போன்றவர்கள் இருந்தபோது, வடநாட்டு—மேல்நாட்டு சங்கீத பாணி தமிழ் திரைப்படத் துறையில் தலை காட்டவில்லை!

எப்போது மேல்நாட்டு, வடநாட்டு சங்கீதம் நுழைந்தது என்பதைப் பார்க்க வேண்டும். பாபநாசம் சிவன் போன்ற பாடலாசிரியர்கள் சினிமாத் துறையில் இருந்த போது கர்நாடக மெட்டுகளில் பாடல்கள் இருந்தன.

இவர்கள் எல்லாம் திரைப்படத் துறையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலகியதால் தான், மேல்நாட்டு பாணி சங்கீதம் தமிழ்த் திரைப்படத் துறையில் நுழைந்தது.

பெரியவர்கள் எல்லாம் நமக்கு ஏன் இந்த வம்பு, நமக்குத்தான் வயதாகி விட்டதே என்று ஒதுங்கிக் கொள்வதனால்தான், இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

நாட்டுக்கு, மொழிக்கு, எது நல்லது என்பதைப் பெரியவர்கள் சொல்லாமல் இருப்பார்களேயானால், அது, இந்த நாட்டுக்குப் பேரிழப்பாகும்.

தமிழிசை வளர வேண்டும். அதன் தனித்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்று நீங்கள் பாடுபடுவீர்களேயானால் – போராடுவீர்களேயானால் உங்கள் பக்கம் தமிழக அரசு நிற்கும்.

பெரியவர்கள் நமக்கு ஏன் இந்த வம்பு என்று ஒதுங்காதீர்கள். உங்கள் அனுபவமும், ஆலோசனையும் தமிழகத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும்.

தமிழ் மொழியை அழியவிட மாட்டோம். அதைப் பாதுகாப்போம். இது நம் அனைவரது கடமையாகும். இந்த உணர்வு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது. இதை நாம் தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

“எங்கும் தமிழ், எதிலும் தமிழ்” என்று எல்லாத் துறைகளிலும் தமிழ் மொழி வளர நாம் பாடுபட வேண்டும்.

ஒரு மொழி வளர வேண்டும் என்று கூறும் போது இன்னொரு மொழி அழிய வேண்டும் என்று பொருளல்ல. ஒரு நோயாளி குணமாக வேண்டும் என்று சொல்லும்போது இன்னொருவர் இறக்கட்டும் என்று அர்த்தமல்ல.

நாங்கள் எங்கள் மொழியை வளர்க்க–காப்பாற்ற–விரும்புகிறோம். அதே நேரத்தில் இன்னொரு மொழி வளரக்கூடாது என்று நாங்கள் கூறவில்லை. அவரவர்களுக்குச் சொந்த மொழி எந்த மொழியோ, அதை அவர்கள் வளர்க்க நாங்கள் தடையாக இருக்க மாட்டோம்.

தமிழகத்தில் தாய்மொழியை வளர்க்க நாங்கள் விரும்புகிறோம். தமிழக அரசு, தமிழிசை வளர வேண்டும் என்று விரும்பினால் இன்னொரு மொழிக்கு எதிராக அல்ல. நிகழ்ச்சி சிறப்பாக அமையவேண்டும் என்பதற்கு அடையாளமாக, இளம்தளிர் கலைஞர் இதைத் தொடங்கி வைத்திருக்கிறார். எனவே, தமிழிசை பூத்துக் குலுங்கி, காய்த்துக் கனியும் என்று நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

❖ ❖ ❖

(23.12.1977 அன்று, தமிழிசைச் சங்கத்தின் 35ஆவது ஆண்டு விழாவில் ஆற்றிய உரை)

வரலாறு படைப்போம்! வறுமையை வெல்வோம்!

இன்றைக்கு இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கும் திருவள்ளுவர் திருநாள் நமக்கெல்லாம் மன நிறைவையும், மகிழ்ச்சியையும் அளிக்கிறது. கட்சி சார்பற்ற முறையில், அரசியல் சார்பில்லாத நிலையில் நடைபெறும் இந்த நல்ல விழாவில் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த வள்ளுவர் கோட்டத்தை உருவாக்கக் காரணமாயிருந்த கலைஞர் கருணாநிதி அவர்களைப் பாராட்டுகிறேன். குறைகள் – தவறுகள் நடந்திருக்கலாம். இப்படிப்பட்ட திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாட வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பட்டதற்கும் அதற்குக் காரணமானவர்களுக்கும் பாராட்டுத் தெரிவிப்பது எனது கடமை என்று கருதுகிறேன்.

உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற போது அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் வள்ளுவருக்குக் கோட்டம் அமைக்கப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார்.

அண்ணா அவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் நோக்கத்தில் தான் இங்கு வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பட்டது.

வள்ளுவர் கோட்டத்தில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ள இந்தப் பெரிய மண்டபத்தில் பேசுகிறவர்களின் பேச்சுக்கள் எதிரொலிக்கின்றன. இதனால் கேட்பவர்களுக்குக் குழப்பம் ஏற்படுகிறது.

எனவே, தமிழக அரசு இந்த மண்டபத்தை அழகாக, சீராக, சிறப்பாக, சரியாக உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நடைபெறும் இந்த விழா தமிழர் திருநாள், தமிழ் மொழிக்கும்–தமிழகத்திற்கும் சிறப்புச் சேர்க்கும் திருநாள், உலக மக்கள் அனைவரும் எப்படி வாழ வேண்டும் என்று வழிவகுத்துத் தந்த திருவள்ளுவரை தமிழகத்திற்குச் சொந்தமாக்கிட சென்னையில் மட்டும் விழா எடுத்தால் போதாது.

தமிழகத்தில் எல்லா நகரங்களிலும் ஊராட்சிகள், நகராட்சிகள், அரசுக்குச் சொந்தமான அமைப்புகள்–ஏன், பட்டி தொட்டிகள் எங்கும் வள்ளுவர் திருநாளைக் கொண்டாட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். கேட்டுக்கொண்டதோடு மட்டுமல்லாமல் உத்தரவே பிறப்பித்து இருக்கிறோம்.

வள்ளுவருக்கு–குறளுக்குச் சிறப்பு சேர்க்க எண்ணுகிற அதே நேரத்தில், சென்னை நகரில் மட்டும் இந்த விழா நடைபெற்றால் இங்கே கூறப்படுகிற சில செய்திகள் மட்டும் பத்திரிகைகளில் வெளியாகும். முழுமையான கருத்தைத் தமிழகம் முழுவதிலும் உள்ள மக்கள் அறிந்து கொள்ள முடியாது.

எனவே, தமிழகம் எல்லாம், தமிழர்கள் வாழும் இடமெல்லாம் திருவள்ளுவர் திருநாளை நடத்தி, அதில் அறிஞர் பெருமக்களைப் பங்குபெறச்செய்து, திருக்குறளின் பெருமையைப் பரப்ப வேண்டும் என்பதுதான் எங்களது பேரவா.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். “வள்ளுவர் திருநாள் இங்கே மட்டும் சிறப்பாக நடைபெற்றால் போதாது. உலகமெல்லாம் வள்ளுவருக்கு விழா எடுக்க வேண்டும். அதுதான் எனது ஆசை” என்றார்கள். வாய்ப்புக் கிடைத்தால் சிலம்புச் செல்வரின் ஆசையைத் தமிழக அரசு நிச்சயமாக நிறைவேற்றும் என்று கூறிக்கொள்கிறேன்.

அமெரிக்காவில் உள்ள தமிழர்கள், பாரிசில் உள்ள தமிழர்கள், அல்ஜீரியாவில் உள்ள தமிழர்கள் வள்ளுவர் திருநாளைக் கொண்டாட முடியும். திருவள்ளுவரைத் தமிழர்கள் உரிமை கொண்டாடினாலும், உலகம் முழுவதிலும் உள்ள நன் மக்கள் அனைவருக்கும் வள்ளுவருக்கு விழா எடுக்க உரிமை உண்டு.

தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் இங்கு தலைமை உரை நிகழ்த்தியபோது, தன்னுடைய ஆங்கிலப் பேச்சைத் தமிழிலே மொழி பெயர்த்துக் கூறும்படிக் கூறினார்கள். அந்த அளவிற்குத் தமிழ் மொழிக்கு நாட்டில் மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கே அறிஞர் பெருமக்கள்—கலைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது. புலவர் பெரு மக்களுக்கும் உதவித் தொகை வழங்கப்பட்டது. அதை உதவித்தொகை என்று சொல்ல மாட்டேன் காணிக்கை என்றுதான் சொல்வேன்.

இங்கே வழங்கப்பட்ட உதவித்தொகை நன்றாக வாழ்வதற்குப் போதுமானதா என்று கேட்கக் கூடும். நன்றாக வாழ்வதற்குப் போதுமானது இல்லைதான். அடையாளமாக – ஆரம்பக் கட்டமாக – இந்த உதவித் தொகையை வழங்க முனைந்துள்ளோம். நிதி நிலைமை சீரானவுடன் போதுமான அளவிற்கு உதவித்தொகையை உயர்த்துவோம்.

தமிழ் கற்ற – தமிழைப் பரப்புகிற – புலவர்கள் ஏழ்மையில் வாழ்ந்துதான் தீரவேண்டும் என்ற சமுதாய அமைப்பு இருக்குமானால் அதை மாற்றி அமைக்க இந்த அரசு பாடுபடும். தமிழ் கற்ற புலவர்களின் குடும்பமும் – சுற்றுச் சார்பும்—மகிழ்ச்சியோடு இருக்க நாங்கள் பாடுபடுவோம்.

தமிழ் கற்ற புலவர்களைத் தமிழக அரசு கைவிடாது. அவர்கள் வறுமையில் வாழ, இந்த அரசு இடம் கொடுக்காது என்பதையும் உறுதியோடு சொல்லிக்கொள்கிறேன்.

எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதைச் சொல்லும் அளவிற்கு எனக்குத் தெரியாது.

எதிர்காலத்தைப் பற்றி ஆரூடம் கணிக்கின்ற நிமித்திகன் அல்ல நான். ஒன்றை மட்டும் நான் உறுதியாக நம்புகிறேன்.

எதிர்காலத்தில் தமிழ் கற்றவர்களுக்கு—தமிழுக்குச் சொந்தக்காரர்களுக்கு—முதலிடம் அளிக்கப்படும். அப்படி அளிக்கப்பட்டால் நான் ஆச்சரியப்படமாட்டேன். அத்தகைய நிலை வர வேண்டும். தமிழ் கற்றவர்களுக்கு வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்பதே எனது ஆசை.

இது இன்று நேற்று ஏற்பட்ட ஆசை அல்ல. நமது பெரியவர்களால் பல ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கப்பட்ட குறிக்கோள்—இலட்சியமாகும். அந்த உரிமை—நம்பிக்கை செயல்பட நேரிடும்போது இதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது என்று கருதுகிறேன்.

தமிழில் விஞ்ஞானம் கற்றுத் தரும் நிலைமை உருவாக வேண்டும். ஆங்கிலத்தில் சொல்வதுபோலத் தமிழில் விஞ்ஞானச் சொற்களைச் சொல்ல முடியுமா என்று கேட்கும் நிலைமை மாறி வருகிறது.

தமிழ் மொழியில் இலக்கியத்தை—வரலாற்றை—அறிவியலை—கணிதத்தை கற்றுக்கொடுக்கும் நிலைமையை உருவாக்க வேண்டும். “எங்கும் தமிழ்—எதிலும் தமிழ்” என்ற நிலை வர வேண்டும். நீதிமன்றங்களில் தமிழில் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று நாம் கூறியதை மறந்து விடவில்லை. நீதிபதிகள் நன்றாக தமிழ் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும்.

நீதிபதிகள் தமிழ் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என்று நான் சொல்வதை யாரும் சந்தேகிக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். அப்படிக் கூறுவது தமிழக மக்களின் உரிமை. “தமிழ் கற்றதால் நாம் என்ன கண்டோம் ? அவல நிலையைத்தான் கண்டோம்” என்ற நிலைமை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நமது கடமையாகும். யார் ஆட்சியில் இருந்தாலும் சரி, தமிழ் கற்றவர்கள் ஏழ்மையில் வாழக்கூடாது.

ஒரு காலத்தில் நாதசுரக் கலைஞர்கள் ‘கிராப்’ வைக்கக் கூடாது என்றும், சட்டை போடக் கூடாது என்றும் நிலைமை இருந்தது. அதை அன்றைக்கே மாற்றிக் காட்டியவர் நாதசுர மேதை ராஜரத்தினம் பிள்ளை. அவர் சட்டை போட்டு ‘கிராப்’ வைத்து நாதசுரம் வாசித்தார். அந்தக் கலையில் அனைவராலும் பாராட்டும் வகையில் சிறப்புப் பெற்றார்.

ஒரு கலை, இந்தச் சாதிக்குத்தான் சொந்தம் என்பதை நாம் மாற்றியாக வேண்டும். எந்தக் கலையையும்—எந்தத் தொழிலையும் விரும்புகிற யாரும் செய்யலாம் என்ற நிலைமையை உருவாக்கிக் காட்ட வேண்டும்.

நாதசுரம் பயிலும் கலைஞர்களுக்கு 500 ரூபாய் உதவிப் பணம் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம். இதற்கு என்ன காரணம் ? நாதசுரக் கலையில் யார் யாருக்குத் திறமை இருக்கிறதோ, ஆர்வம் இருக்கிறதோ, அவர்கள் கற்றுத் தேர்வதற்கு இந்தத் தொகை வழங்கப்படுகிறது.

ஏதோ பணம் கிடைக்கிறது. காலத்தைக் கடத்தலாம் என்று யாராவது நினைப்பார்களேயானால் அவர்கள் ஏமாந்து போவார்கள். யாரிடம் அவர்கள்

நாதசுரக் கலையை பயில்கிறார்களோ, அவர்களுடன் நாங்கள் தொடர்பு வைத்துக் கொண்டிருப்போம். கற்றுக்கொள்ளும் கலைஞர் முறையாகப் பயிலவில்லை; அதில் அவருக்கும் ஆர்வம் இல்லை என்று தெரிந்தால் உதவித்தொகை நிறுத்தப்பட்டுவிடும். எதற்காகப் பணம் செலவழிக்கப்படுகிறதோ அது பலன் அளிக்க வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.

அறிஞர் பெருமக்களுக்கு இங்கே ஓய்வு ஊதியம் அளிக்கப்பட்டது. அளிக்கப்பட்ட தொகை சிறு தொகை தான். அப்போது அவர்கள் முகத்தைக் கவனித்தேன். அவர்கள் முகம் மலர்ந்திருந்தது. வழங்கப்படும் தொகை காரணமாக அவர்கள் முகம் மலரவில்லை. நம்மையும் மதிக்கிறார்களே என்றுதான் அவர்கள் பெருமிதப்படுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

தமிழ் படித்தவர்கள்– தமிழை வளர்ப்பவர்கள்–வீட்டிலே கண் கலங்காமல் இருக்கும் நிலை உருவானால்தான், தமிழ் கற்ற அறிஞர்களுக்கு நாம் உரிய மரியாதையை அளித்திருக்கிறோம் என்று அர்த்தம்.

இங்கே பேசிய சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள், “இரண்டு தலைகளும் ஒட்டி உறவாடுகிறது. அதைப் பிரிக்க முடியாது; பிரிக்கவும் கூடாது” என்று கூறினார். நாங்கள் ஒட்டிப் பேசியதில்லை. ஒன்றும் இரகசியம் இல்லை. இரகசியம் தமிழைப் பற்றியும், ம.பொ.சி. பேச்சைப் பற்றியும், நாட்டைப் பற்றியும்தான் நாங்கள் பேசினோம்.

ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், இதுவரை தமிழகத்திற்குக் கிடைக்காத சிறப்புடையவராக நமக்குக் கிடைத்திருக்கிறார்.

நான் இப்படிக் கூறுவதால் இதற்கு முன்பு இருந்த ஆளுநர்களைக் குறை சொல்வதாக அர்த்தமில்லை. ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்களை போற்றிப் புகழ்வதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. இயற்கையின் சீற்றத்தால் தமிழகம் வரலாறு காணாத அளவிற்குப் புயல், வெள்ளக் கொடுமைகளுக்கு ஆளானபோது துயர் துடைப்புப் பணிகளில் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்தார்கள் என்பதை நாம் மறந்து விட முடியாது.

மக்களின் துயர் துடைப்புப் பணிகளுக்காக நாம் இங்கே நிவாரண நிதி திரட்டிக்கொண்டிருந்த நேரத்தில், குஜராத் மாநிலம் சென்று, தமிழ் மக்களுக்காக நிதி சேர்த்தார். பம்பாய்க்குச் சென்று நிதி திரட்டினார். பம்பாயிலிருந்து முதல் தவணையாக 25 இலட்சம் ரூபாய் அனுப்பி வைத்தார்.

தமிழ் மக்களின் துன்ப, துயரங்களில் இரண்டறக் கலந்து அவர்களுக்கு உதவுவதற்கு முன்வரும் ஆளுநரை எப்படிப் பாராட்டாமல் இருக்க முடியும்?

துன்ப துயரங்களிலிருந்து மக்களைக் கரை சேர்ப்பதில் நாங்கள் முனைந்து செயல்படுகிறோம். இதுதான் எங்கள் இருவருக்குமிடையே உள்ள உறவு. பொதுத் தொண்டு செய்யும்போது வேறுபட்ட கருத்துக்களுக்கு இடமளிக்கக் கூடாது.

அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல எதையும் தாங்கும் இதயம் இருந்தாக வேண்டும் என்ற உறுதிப்பாட்டோடு கடமையாற்றி வருகிறோம். நம் உள்ளத்தைப் புண்படுத்தி, வேதனைப்படுத்தும் அளவிற்கு மற்றவர்கள் இகழ்ந்தாலும் அதைப் பற்றி கவலைப்படாமல், மக்களிடம் எதைச் சொல்லி இங்கே வந்தோமோ அதை நினைத்து, அந்தப் பொறுப்புகளை நிறைவேற்றும் கடமை உணர்வோடு—பொறுமையோடு—செயல்பட்டு வருகிறோம்.

அவர்கள் எவ்வளவுதான் இகழ்ந்து பேசினாலும், எனக்குக் கோபத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் விரும்பினாலும் எனக்குக் கோபமே வராது; ஆத்திரம் ஏற்படாது.

மக்கள் எங்களிடத்தில் அதிகாரத்தை அளித்திருக்கிறார்கள். அவர்கள் எங்களுக்குத் துணையாக நிற்கிறார்கள். மக்கள் அளித்த அந்த அதிகாரத்தைத் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காகவோ கோபதாபத்திற்காகவோ பயன்படுத்துவது எவ்வளவு தவறானது என்பது எங்களுக்குத் தெரியும்.

அப்படிச் சொந்த விருப்பு—வெறுப்புக்காக, சுயநலத்திற்காக, அதிகாரத்தைப் பயன்படுத்தினால் அது அக்கிரமக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரம் ஆகும். பொறுப்பு அதிகம் ஆக ஆக, பொறுமையை அதிகமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வள்ளுவர் நமக்குக் கற்றுத் தந்திருக்கிறார்.

இங்கே பேசிய தமிழறிஞர்கள், "அகர முதல எழுத்தெல்லாம் ...." என்ற குறளை வள்ளுவர் தொடங்கி முப்பாலையும் பாடி முடித்திருக்கிறார் என்றும், "அகர முதல .... என்று தொடங்கிய பாடல் கடவுளை முன்னிலைப்படுத்தியதாகும்" என்றும் கூறினார்கள்.

திருவள்ளுவரைப் பற்றி எத்தனையோ கதைகள் கேட்டிருக்கிறோம். சரியான வரலாற்றை நாம் அறிந்து கொள்ள முடியவில்லை. வள்ளுவர் கலப்பு மணம் புரிந்து கொண்டவர் என்றும், நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தார் என்றும் சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரிசைப்படுத்தி—வகைப்படுத்தி—அறிவுரை புகன்ற ஒரு மாபெரும் புலவரைப் பற்றிய வரலாற்றினை, சரியாக—முறையாக—நாம் தெரிந்துகொள்ள முடியவில்லை.

தமிழகத்தின் உண்மையான வரலாற்றைத் தமிழ் அறிஞர்கள்—வரலாற்று ஆசிரியர்கள்—உருவாக்க முனைய வேண்டும். இரண்டாயிரம் ஆண்டு தமிழகத்தின் வரலாற்றைப் படைக்க முடியாவிட்டாலும், முதலில், தமிழகத்தின் ஆயிரம் ஆண்டுகளின் வரலாற்றையாவது உருவாக்க முயலவேண்டும் என்று அறிஞர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தின் உண்மையான வரலாற்றைத் தயாரிக்க முனையும் அறிஞர் பெருமக்களுக்குத் தமிழக அரசு எல்லா வித உதவிகளையும் செய்யும். 5 ஆண்டுக் காலமோ அல்லது 10 ஆண்டுக் காலமோ பிடித்தாலும் நமது எதிர்காலச் சந்ததியினர் அறியும் வண்ணம் தமிழகத்தின் உண்மையான வரலாற்றினை நாம் தயாரித்தாக வேண்டும். குமரிக் கண்டம் இருந்த காலம் தொட்டுத் தமிழக வரலாற்றை அறிய நாம் விரும்புகிறோம். நமது வரலாறு, தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, பத்துப் பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, இன்னா நாற்பது என்று பேசலாம்.

இலக்கியம் தந்தவர்களை – அதற்கு வரைமுறை ஏற்படுத்தித் தந்தவர்களை – இலக்கணம் – நிகண்டு தந்தவர்களை நாம் மறக்கப் போவதில்லை. ஆனால், தமிழகத்தின் முந்தைய கால வரலாறு முழுமையாக இதுவரை இல்லை. அதை உருவாக்குவதில் தமிழ் அறிஞர்கள் தங்கள் ஆராய்ச்சியைப் பயன்படுத்த வேண்டும்.

தமிழ் இலக்கியங்களை – நூல்களை – ஒரு மாணவன் நூறு ஆண்டுக் காலம் படித்தாலும் படித்து முடிக்க முடியாது. அந்த அளவிற்கு தமிழ் இலக்கியம் நம்மிடம் நிறைந்திருக்கிறது.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலை உருவாக இந்த அரசு பாடுபடும். கொள்கை அளவில் மட்டும் அல்ல. அதை நடைமுறைப்படுத்தவும் இந்த அரசு பாடுபடும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அமெரிக்காவிற்குச் செல்லும்போது அங்குள்ள தமிழக மக்களைச் சந்தித்து, அங்கு ஏற்கெனவே வள்ளுவர் மன்றங்கள் இருந்தால் சரி, இல்லாவிட்டால் இந்திய அரசின் துணையுடன் அங்கு புதிதாக வள்ளுவர் மன்றங்களைத் தொடங்கி வைக்க விரும்பி உள்ளேன்.

நான் ஏற்கெனவே மொரீஷியஸ் நாட்டிற்குச் சென்றிருந்த போது அங்குள்ளவர்கள் தமிழ்ப் பற்றுள்ளவர்களாக இருப்பதைக் கண்டேன். அவர்கள் என்னிடம் தமிழ் இலக்கிய நூல்கள் அனுப்பி வைக்கும்படிக் கேட்டார்கள். நான் இங்கு வந்ததும் தமிழ் இலக்கிய நூல்களை அனுப்பி வைத்தேன். அந்த நூல்கள் என்ன காரணத்தினாலோ ஒன்றரை ஆண்டுகள் கழித்துக் கிடைத்திருக்கின்றன.

தமிழ் வளர, வளர–உயர, உயர–இந்த நாடு செழிக்கும் என்பதை மற்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இங்கே பேசிய சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் “இந்தியா தெய்வம், தமிழகத்தைத் தாய் என்று மதிக்கிறேன்” என்று குறிப்பிட்டார். தாயைத் தெய்வமாக மதிக்கிற நாம், தாய் மொழியாகிய தமிழ் மொழியைத் தெய்வமொழி என்று அழைப்பதில் தவறு இருக்க முடியாது என்று நினைக்கிறேன்.

எதிர்க்கட்சிகள் கொள்கையிலே மாற்றம் உள்ள கட்சியாக இருக்கலாம். ஆனால், எதிர்க்கட்சியாக இருந்து அழிக்கவும் ஒழிக்கவும் முனைந்தால் அது நாட்டுக்கு நல்லதல்ல.

மழை நீர் பூமிக்கு வந்து சேரும்போது நல்ல நீராகத்தான் வருகிறது. அது பூமிக்கு வந்தவுடன் எந்த மண்ணில் அந்த நீர் படுகிறதோ, அதற்கு ஏற்ப அந்த நீரின் நிறமும், தன்மையும் மாறுகிறது.

அதுபோல ஓர் அரசியல் கட்சியின் கொள்கை நல்ல கொள்கையாக இருக்கலாம். ஆனால் அந்த அரசியல் கட்சி சேருகிற இடத்திற்கு ஏற்ப அதன் கொள்கைகள் அமைகின்றன. ஒரு மனிதனுக்கு நல்ல எண்ணம் வேண்டும். எப்போதும் கொள்கைப் பசி இருக்க வேண்டும். நல்ல குறிக்கோளும், இலட்சியமும் இருக்க வேண்டும். தன்னை எடைபோட்டுக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் எதிரியையும் எடைபோட மறந்து விடக்கூடாது. மாற்றான் வலிமையை எடைபோடத் தெரியாதவன் ஏமாறுகிறான்.

இலக்கியத்தை, இசையை, கலையை, நாட்டியத்தை, வரலாற்றை, அறிவியலை, சட்ட நுணுக்கத்தை வளர்க்க ஆஸ்தான புலவர்களைப் போல ஒவ்வொரு துறையிலும் வல்லுநர்களைத் தேர்ந்தெடுத்து நியமிக்க இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

இங்கே ஓய்வூதியம் அளிப்பதற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழறிஞர்கள் தான் திறமையானவர்கள், தகுதியானவர்கள் மற்றவர்கள் திறமையும், தகுதியும் அற்றவர்கள் என்று யாரும் கருதிவிட வேண்டாம்.

இந்த ஓய்வூதியத் திட்டத்தில் இடம் பெறாத எத்தனையோ அறிஞர் பெருமக்கள் திறமையும், தகுதியும் உடையவர்களாக இருக்கிறார்கள். ஆரம்ப கட்டமாக, 5 பேரை குழு தேர்ந்தெடுத்துள்ளது!

தனிப்பட்ட முறையில் யாரையும் போற்றிப் பாராட்டி வளர்க்க வேண்டும் என்று ஆசைப்படுபவன் நான் அல்ல.

மற்றவர்கள் எந்த வகையிலும் தகுதி குறைந்தவர்கள் அல்ல. அறிஞர் பெருமக்கள் அனைவரையும் ஒரே நோக்கோடு தான் நான் பார்க்கிறேன். இப்போது ஓய்வூதியம் அளிக்கப்பட்டுள்ள ஐந்து எண்ணிக்கை, ஐம்பதாக, நூறாக உயரும். தமிழ் படித்து நொந்து போய் இருக்கும் புலவர்களுக்கு பல பொறுப்புகளை அளிக்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

❖ ❖ ❖

(1978 அன்று, சென்னை வள்ளுவர் கோட்டத்தில்
நடைபெற்ற திருவள்ளுவர் திருநாளில் ஆற்றிய உரை)

சமுதாய மறுமலர்ச்சிக்கு,
உதவும் சாதனம் திரைப்படம்!

மாண்புமிகு மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. அத்வானி அவர்களே!

வருகை தந்துள்ள அனைத்து நாட்டுப் பிரதிநிதிகளே! தாய்மார்களே! பெரியோர்களே! நண்பர்களே!

இந்த உலக திரைப்பட விழாவிற்கு வந்துள்ள உங்கள் அனைவரையும் தமிழக மக்களின் சார்பில் பேரன்போடும் பெரு மகிழ்ச்சியோடும் வரவேற்பதிலே பெருமையடைகிறேன். மத்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சகத்தின் சார்பில் திரைப்பட விழாத் துறையினர் இந்த விழாவினைக் கொண்டாடுவதற்கு தமிழகத்தின் தலைநகரான சென்னையைத் தேர்ந்தெடுத்தமைக்காக அவர்களுக்கு நான் முதலில் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மனித உணர்வை கலைச்சிறப்புடன் வெளியிட இன்றைய உலகில் திரைப்படம் ஆற்றல்மிக்க ஒரு கருவியாக பயன்பட்டு வருவதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். பல்வேறு மக்களையும் ஒன்று கூட்டி, தங்களது கலாச்சார உணர்வுகளைப் பரிமாறிக்கொள்ளவும், ஒரு நாட்டின் கலாச்சாரச் சிறப்பினை மற்ற நாட்டினர் அறிந்து பாராட்டவும் இதுபோன்ற விழாக்கள் மக்களுக்கும் கலைஞர்களுக்கும் உதவுகின்றன. இந்தியா உயர்வான தொன்மைக் கலாச்சாரம் உடைய ஒரு துணைக்கண்டம் என்பதை உங்களில் பலர் அறிந்திருக்கக்கூடும். அத்தகைய சிறப்புப்பெற்ற இந்தியத் திருநாட்டில் இந்த விழா நடைபெறவிருக்கின்ற தமிழகம் மூத்ததொரு கலைப் பாரம்பரியத்திற்கு உரிமையுடையது என்பதையும் இந்த நேரத்திலே உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவது எனது கடமையாகும். உயர்ந்த சிந்தனைகளையும், ஆழ்ந்த எண்ணங்களையும் கலை வடிவங்களாக வெளியிடுவது எங்கள் நாட்டைப் பொறுத்தவரை புதிய விஷயம் அல்ல. திரைப்படக் கலையிலிருந்து, விஞ்ஞான உதவிகளால் விளையும் தொடர்புகளை நீக்கிவிட்டால், இந்தக் கலைக்கு அடிப்படையாக அமைவது நாடகக் கலையாகும். நாடகக் கலையின் பரிணாம வளர்ச்சிதான் திரைப்படக் கலை. இந்தக் கலையோடு தொடர்புகொண்ட, இந்தக் கலையை உருவாக்கி உயிரூட்டும் கலைஞர்களை இரண்டு பிரிவாகப் பிரித்தால், ஒன்று நடிப்புக் கலைஞர்கள், மற்றொன்று தொழில்நுட்பக் கலைஞர்கள். இந்த நடிப்புக் கலைஞர்களை ஆரம்பத்தில் உருவாக்கியது நாடக மேடை. தொழில்நுட்பக் கலைஞர்களை ஆரம்பத்தில் உருவாக்கியது விஞ்ஞான அறிவு. ஆகவே, இந்தத் திரைப்படக் கலைக்கு அடிப்படையாக அமைந்த நாடகக் கலையும், அந்தக் கலைக்கு

உயிரூட்டிய கலைஞர்களும் நீண்டகாலத்திற்கு முன்பே பெருமை சேர்த்த ஒரு நாட்டிற்குத் தான் நீங்கள் வந்திருக்கிறீர்கள்.

இந்த விழா நடைபெறுகிற இந்தியாவின் இந்தப் பகுதியில் – தமிழகத்தில் – ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே நாடகக்கலை ஆக்கம்பெற்று விளங்கியது. அதனால், நடிப்புக் கலைஞர்கள் தங்களின் ஆற்றல்மிக்க கலைப்பணி மூலம் மக்கள் சமுதாயத்தை மகிழ்வித்ததோடு சமுதாயமாற்றங்களுக்கும் தங்களின் கலைப்பணியைக் காணிக்கையாக்கினார்கள். இந்திய விடுதலைப் போராட்டத்தில்கூட தமிழ் நாடகக் கலைஞர்கள் பாமர மக்களிடம் தேசிய உணர்ச்சியை ஊட்டி, பட்டிதொட்டிகளிலெல்லாம் நாடகம் நடத்தி, மக்களை அரசியல் விழிப்புணர்ச்சி பெறச் செய்தனர். சுதந்திரப் போராட்டத்தினை அடக்கி ஒடுக்க அன்று இந்தியாவை ஆண்டவர்கள் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டபொழுது, நாடகக் கலைஞர்கள் பலர் ராஜ துரோகக் குற்றத்தின்கீழ் கைது செய்யப்பட்ட சூழ்நிலையும், இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில், இருந்தது. இது தமிழ்நாட்டிற்கோ இந்தியாவிற்கோ மட்டும் உரிமையான வரலாறு அல்ல. உலகம் முழுவதிலும் பல்வேறு நாடுகளிலே அந்தந்த காலகட்டங்களில் கலைஞர்கள் தங்கள் கலைப்பணியை நாட்டுப் பணியாக மாற்றிக்கொண்ட வரலாறுகள் நம்மிடையே உண்டு.

எண்ணங்களை வெளியிடும் கருவியாகப் பயன்படுவதில் நாடகத்துறைக்கு இல்லாத பல வசதிகள் திரைப்படத்துக்கு உண்டு. உலகத்தின் மூலைமுடுக்குகளில் வாழும் மக்களிடையே ஒரே நேரத்தில் சென்று அடையும் மகத்தான சாதனம் திரைப்படம். வாழ்க்கைச் சம்பவங்களைத் தொகுத்து அளிப்பதோடு மட்டுமன்றி அறிவூட்டும் சாதனமாகவும் திரைப்படத்தைப் பயன்படுத்த முடியும் என்பதை உலகெங்கணும் உள்ள கல்வி நிபுணர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இலட்சக்கணக்கான மக்களைக் கவர்ந்திழுக்கும் ஆற்றலில் திரைப்படத்துக்கு இணையாக வேறொரு கலையைச் சொல்லமுடியாது. இந்தியாவில் இதன் சக்தி அடிநாளில் இருந்து உணரப்பட்டு வந்திருக்கிறது. தாதா சாகிப் பால்கே இந்திய திரைப்படத் தொழிலில் ஒரு முன்னோடியாக விளங்கியவர். அவர் நடத்திய போராட்டங்களும், சாதனைகளும் இந்தியத் திரைப்பட வரலாற்றில் ஒளிமிக்கதொரு அத்தியாயமாகும். அவர் அமைத்த பாதையில் புதிய பல சாதனைகள் புரிந்த படத்தயாரிப்பாளர்களும், இயக்குநர்களும் உண்டு. இவர்களில் நம்முடைய காலத்தில் மூன்று பெருமக்கள் என்னுடைய நினைவுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் வருகிறார்கள். மராட்டிய மண்டலத்தில் திரு. சாந்தாராம் அவர்களும், வங்காளத்தில் திரு. சத்தியஜித் ரே அவர்களும், தமிழகத்தில் காலஞ்சென்ற திரு. எஸ்.எஸ். வாசன் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

இந்தியத் திரைப்படத் துறைக்கு தேசிய, சமுதாய நோக்கத்தை உருவாக்கிக் கொடுத்த சிறப்புக்கு உரியவர் திரு. சாந்தாராம். ஏழைகளின் எளிய வாழ்வை, சமுதாய முரண்பாடுகளை எடுத்துக்காட்டி சர்வதேச அரங்கில் இந்திய திரைப்படத்திற்கு தனியானதொரு மரியாதையைப் பெற்றுக்கொடுத்தவர் சத்தியஜித் ரே. விஞ்ஞான வசதி குறைவாக இருந்த நிலையிலும், உலக வளர்ச்சியோடு போட்டிபோட்டு பிராந்திய மொழிப்படங்களை மிகப்பெரிய படங்களாகத் தயாரித்து புகழ்பெற்றவர் திரு. வாசன் அவர்கள்.

தொழில்நுட்பத் துறையிலே தங்களுடைய ஆற்றலின்மூலம் இந்தியத் திரைப்படக் கலையை உயர்த்தியவர்கள் இவர்கள். இதே போன்று உலகம் முழுவதிலும் அரும்பெரும் தொழில்நுட்பக் கலைஞர்கள் தோன்றி தங்கள் நாட்டின் புகழை உயர்த்தியிருக்கிறார்கள். அவர்களின் பெயர்களை நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இருக்கமாட்டீர்கள். ஆனால், நடிப்புக் கலைஞர்களில் அண்மையில் காலஞ்சென்ற திரு. சார்லி சாப்ளின் உலகப்புகழ்பெற்ற ஒரு குறிப்பிடத்தக்க கலைஞர் ஆவார். “திரைப்படத்துறை உலகுக்கு அளித்த ஒரே ஒரு மேதை சார்லி சாப்ளின்” என்று புகழ்பெற்ற நாடக ஆசிரியர் பெர்னாட் ஷா அவர்கள் பாராட்டியுள்ளார்கள். தனது அருமையான பாத்திரப் படைப்புகளின் மூலம் சர்வதேசத் திரைப்படக்கலையரங்கில் கம்பீரமாக பவனி வந்த பெருமைக்குரியவர் சார்லி சாப்ளின். அவர் சித்தரித்துக் காட்டிய நாடோடிப் பாத்திரம் சாகாவரம் பெற்றுவிட்டது. அவர் அமரராகிவிட்டாலும் ஒரு நடிகராக, இயக்குநராக, படத்தயாரிப்பாளராக அவர் புரிந்த சாதனைகள் உலகம் முழுவதும் என்றென்றும் நமக்கு உற்சாகமூட்டிக் கொண்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

சார்லி சாப்ளினைப் பற்றி பேசுகின்றபொழுது, தமிழகத்தில் மிகச் சிறந்த நகைச்சுவை நடிகராக விளங்கிய மறைந்த கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் என்னுடைய நினைவுக்கு வருகிறார். நாம் இப்பொழுது இந்த விழாவிற்காக கூடியிருக்கிற இந்த அழகான அரங்கம் அந்தக் கலைஞரின் பேரால் கலைவாணர் அரங்கம் என்று அழைக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அறிவுபூர்வமான அவரது நகைச்சுவை கருத்துக்களும் பாத்திரங்களுக்கு உயிரூட்டிய அவரது நடிப்பும் தென்னிந்தியத் திரையுலகில் அவருடைய முத்திரையை அழியாமல் பதித்துவிட்டன. கலை, கருத்துப் பிரச்சாரக் கருவி என்பதில் அமரர் அண்ணாவை கலைவாணர் தன்னுடைய வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டிருந்தார். இந்த நேரத்தில் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களைப்பற்றிக் கூறாவிட்டால் எனது கடமையைச் செய்யத்தவறியவன் ஆவேன்.

சமூகமாற்றத்தை உருவாக்குவதற்கு வலிமைமிக்க கருவியாக நாடகக்கலையை – திரைப்படக்கலையை அமரர் அண்ணா அவர்கள் கருதினார்கள். கருதியதோடு மட்டுமில்லாமல் நாடகக்கதைகளை – திரைப்படக்கதைகளை உருவாக்கினார்கள். ஆற்றல்மிக்க எழுத்துவலிமையால் புதிய சமுதாயத்தை உருவாக்க கலைத் துறையின் மூலம் அஸ்திவாரமிட்டார்கள். அப்படிப்பட்ட தூய பணிக்கு கலைஞர்களை உருவாக்கினார்கள். அதன்மூலம் கலைஞர்கள் மக்களிடையே பாராட்டுகளை மட்டுமின்றி, பெருஞ்சிறப்புக்களையும் உயர்ந்த மரியாதைகளையும் பெற்றார்கள். அரசியல்வாதிகள் கலை உணர்வுபெற்ற கலைஞர்களாகத் திகழவேண்டும் என்ற புதிய தத்துவத்தை உருவாக்கி தமிழகத்தில் வெற்றிபெற வைத்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் இத்தகைய பெரியவர்களை நினைவு கூர்வதன் மூலமாக திரைப்படத் துறையின் சக்தியினையும் நம்மால் நினைவுபடுத்திக்கொள்ள முடிகிறது. ஆகவே, இந்தத் துறையின் சமூகத் தேவையை யாரும் குறைத்து மதிப்பிட்டு விடமுடியாது. திரைப்படத்துறையை ஒரு கலை என்று சொன்னாலும் தொழில் ரீதியாக தேவைகளை அடிப்படையாகக் கொண்டு அது இயங்க வேண்டி உள்ளது. சமூகப் போக்குகளை உருவாக்குவதில் திரைப்படம் பெரும்பங்கு வகிப்பதால் இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு மகத்தான சமூகப் பொறுப்புகளும் கடமைகளும் உண்டு. அவைகளை நாம் புறக்கணித்துவிட முடியாது. வியாபார நோக்கங்களுக்கு பழுது ஏற்படாத வகையில் இத்துறையின் கலை அம்சத்தை, பயனை, எப்படி கட்டிக் காப்பது என்பது நம்முன் உள்ள மிகப்பெரிய பிரச்சினையாகும். இங்கு வந்திருக்கின்ற பிரதிநிதிகள் இதுபற்றி எல்லாம் விவாதித்து நல்ல முடிவுகளுக்கு வந்து இந்த கலைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பயன்படும் வகையில் ஆலோசனைகளை கூறவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவைகளைப்பற்றிஎல்லாம்சிந்திக்கும்பொழுதுகலைஎன்றுஎதைச்சொல்லுகிறோம் என்கிற கேள்வி தானாகவே பிறக்கிறது. கலை என்பதற்கு பலரும் பலவிதமாக இலக்கணம் சொல்லி இருக்கிறார்கள். கலை என்பதை இதுதான் என்று அறுதியிட்டு வரையறுப்பது சற்று கடினம் என்றாலும் கலையின்மூலம் எதை உணர்த்த வேண்டும். எப்படி அந்த உணர்வை வெளியிட வேண்டும் என்று வரையறை செய்துவிடமுடியும். “நாகரீகம் என்பதே ஒரு கலை வடிவம்தான். வெற்றிபெற்ற, சந்தர்ப்பங்களால் விளைந்த கலைவடிவமாக அது இருக்கலாம். என்றாலும், நாகரீகம் ஒரு கலை வடிவம்தான்” என்று ஒரு பெரியவர் குறிப்பிட்டுள்ளதாக நான் படித்திருக்கிறேன். அப்படியானால், பல்வேறு கலை அமைப்புகளே, நாகரீகத்தை உருவாக்குகின்றன என்பது தெளிவாகிறது. இந்தக் கோட்பாட்டினை நீங்கள் ஏற்றுக்கொண்டால் சக்தி வாய்ந்த கலையான திரைப்படத்துறை, மக்களின் வாழ்க்கையோடு இணைந்து உருவாகும் மிக உன்னதமான கலை வடிவம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான்

வேண்டும். ஆகவேதான், இந்தத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் சமூகப் பொறுப்பு மகத்தானது ஆகிறது. உங்களின் கலைப்படைப்புகள் ஒவ்வொன்றும் மனித வாழ்க்கையை மாற்றவும், உயர்த்தவும் பயன்படும் ஒரு சாதனமாகும் என்பதை நீங்கள் உணர்ந்து செயல்படவேண்டும். உதாரணமாக, இந்தியாவின் விடுதலையைப் பெற்று தருவதற்காக போராட சத்தியவழிகளை கடைப்பிடிக்க வேண்டுமென்ற உணர்வை உத்தமர் காந்தி அடிகளுக்கு ஏற்படுத்தியது 'அரிச்சந்திரா' என்ற ஒரு நாடகம்தான். ஆகவே, நீங்கள் எதைச்செய்தாலும் மிகுந்த கவனத்தோடும், கடமை உணர்வோடும் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறீர்கள். இங்கே கூடியுள்ள திரைப்படத் துறை கலைஞர்கள் அனைவரும் இந்தக்கலையை வெறும் வர்த்தக நோக்குடன் மட்டும் அணுகாமல் மனித சிந்தனையை உன்னதப்படுத்துவதற்கும், வாழ்க்கை அனுபவங்களை முழுமையாகத் துய்ப்பதற்கும் அடிப்படையாக அமைந்த கலைவாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் என்கிற உயர்ந்த நோக்கத்தோடு செயல்படவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். ஜெர்மானிய தத்துவக் கவிஞரான கோதே (Gothe) "மகத்தான உண்மையின் உருவகத்தைத் தோற்றத்தின்மூலம் செய்து காட்டுவதுதான் கலையினுடைய பிரச்சினையாகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

திரைப்படத் துறையின் முன்னால் உள்ள பிரச்சினையும் இதுவே ஆகும். திரைப்படத் துறையில் ஈடுபட்டுள்ளோருக்கு இது ஒரு சவால் மட்டுமல்ல; அருமையான வாய்ப்பும் ஆகும். இந்தத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் வியாபார நோக்கம் கொண்ட தொழிலாக மட்டும் இதில் ஈடுபடவில்லை. ஏனெனில் ஒரு திரைப்படத் தயாரிப்பாளரோ அதனோடு தொடர்புகொண்ட கலைஞர்களோ பொருளாதார இலாபம் கிடைத்துவிட்டால் மட்டும் திருப்தி அடைவதில்லை. மக்களின் பாராட்டைத்தான் திரைப்படக் கலைஞர்கள் பெரிய இலாபமாகக் கருதுவார்கள். மனித சிந்தனையை உன்னத நிலைக்கு உயர்த்துகின்ற, மனித வாழ்க்கையை பயனுள்ளதாக ஆக்குகின்ற, ஒரு சிறந்த கலைத்துறையில் முழுமனதோடு ஈடுபட்டிருக்கிறீர்கள் என்கிற உணர்வை உலகெங்கும் பரவிக்கிடக்கின்ற மக்களுக்கு உணர்த்துகின்ற முறையில் உங்கள் பணி சிறக்கவேண்டுமென வாழ்த்துகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

நன்றி. வணக்கம்.

(03.01.1978 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற திரைப்பட திருவிழா 78இன் துவக்க விழாவில் ஆற்றிய உரை)

இளந்தளிர்களே, எதிர்காலச் செல்வங்கள்!

இளம் தளிர்களான குழந்தைகளின் உள்ளத்தில் ஆரம்பக் காலத்திலேயே நல்ல கல்வியைப் பதிய வைத்தால்தான் அவர்களின் எதிர்கால வாழ்க்கை ஒளிமயமாக அமையும். குழந்தைகளிடம் ஒழுங்கை, கட்டுப்பாட்டைக் காணுகிற நேரத்தில் அந்தக் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு எவ்வளவு பூரிப்பு ஏற்படும்!

நாட்டின் எதிர்காலச் செல்வங்கள் இந்த இளம் தளிர்களே! இங்கே பேசியவர்கள், மாணவர்களை மலர்கள் என்றார்கள். இந்த நாடு பல்வேறு மலர்களைக் கொண்ட பல்வேறு மணம் பரப்புகின்ற தோட்டமாக அமைந்திருக்கிறது. பல்வேறு மதத்தைச் சேர்ந்த இளம் தளிர்களிடத்தில் ‘‘எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் நிறை’’ என்ற உணர்வை வளர்க்க வேண்டும்.

பிஞ்சு உள்ளங்களில் உயர்வு, தாழ்வு என்ற எண்ணங்கள் ஏற்படாமல் ஆசிரியர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். இங்கே இருக்கின்ற இளம் தளிர்களையெல்லாம் பார்க்கும்போது, நாட்டின் எதிர்கால வளர்ச்சி குறித்து என் உள்ளத்தில் நம்பிக்கையும், மகிழ்ச்சியும் ஏற்படுகிறது.

இங்கே மாணவர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது. எதற்கெல்லாம் பரிசு வழங்கினார்கள் என்பதைப் பார்த்தீர்கள்; பல மாணவர்கள் சகலகலா வல்லவர்களாக உள்ளனர் என்பதையும் பார்த்தீர்கள். பல்வேறு கலைகளில் நுண்கலைகளில், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த இளம் தளிர்கள் பரிசுகள் பெறும்போது நாம் எத்தகைய கற்பனைகளில் மூழ்கியுள்ளோம்! ஒரு குழந்தையை வளர்க்க எவ்வளவு துன்ப, துயரங்களை ஏற்க வேண்டிவரும் என்பது எனக்குத் தெரியும்.

இங்கே இந்தப் பள்ளியில் ஆயிரக்கணக்கான மாணவர்களைப் பயிற்றுவிக்கிறார்கள். எல்லாக் குழந்தைகளும் கல்வி கற்பதில் ஒரே தரத்துடன் விளங்குகிறார்கள். இந்தப் பள்ளியில் கல்வியின் தரம் நூற்றுக்கு நூறாக இருக்கிறது. சிரத்தையுடனும், அக்கறையுடனும் கல்வி போதிக்கும் இந்தப் பள்ளி ஆசிரியர்களை நான் பாராட்டுகிறேன்.

‘‘தாயைப் போல் பிள்ளை நூலைப் போல் சேலை’’ என்பார்கள். ஆசிரியர்கள் போலத்தான் மாணவர்களும் இருப்பார்கள். ஆசிரியர்கள் நல்ல கல்வியைப்

போதிப்பதில் மட்டும் மாணவர்களின் தரம் உயர்ந்து விடப்போவதில்லை. ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் போதிக்க வேண்டும். ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் போதிக்கும் ஆசிரியர்கள் அதன்படி தாங்களும் நடந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் மாணவர்களிடத்தில் ஒழுக்கத்தை வளர்க்க முடியும். தாங்கள் கற்பிப்பதற்கு நேர்மாறாக நடந்து கொண்டால் உண்மையான கல்வியைக் கற்பிக்க முடியாது.

இங்கே பேசியவர்கள் மாணவர்களை மலர்கள் என்றார்கள். மலர்களை எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்பதையும் உணர வேண்டும். ரோஜா மலரைச் சற்று கவனக்குறைவாகப் பறித்தால் மலரின் முள் குத்திவிடும். அதுபோல, குழந்தைகளிடம் அன்பு செலுத்துவதில் நாம் சற்றுக் கவனக் குறைவாக நடந்து கொண்டால், அந்த இளம் உள்ளங்கள் வாடி வதங்கிவிடும். கொண்டாடும் இடத்தில்தான் குழந்தையும் தெய்வமும் என்பார்கள். அதுபோல, குழந்தைகளின் நம்பிக்கைக்குச் சொந்தக்காரர்களாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும்.

குழந்தைகளுக்கு புத்தகக் கல்வியோடு ஒழுங்கையும், நேர்மையையும், பகுத்தறிவையும் போதிக்க வேண்டும். அத்தகைய கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மீண்டும் எனது பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாணவர்கள் ஏட்டுக் கல்வி பயில்வதோடு நின்றுவிடாமல், தங்கள் சொந்தக் காலில் நின்று, வாழ்க்கையை அமைத்துக்கொள்ளத் தொழில் கல்வியையும் பயில வேண்டும்.

தமிழக அரசு 10+2+3 என்ற புதிய கல்வி முறையைக் கொண்டு வந்துள்ளது. அந்தக் கல்வி முறையின் சிறப்பை உணர்ந்து மாணவர்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும். நாட்டு மக்களின் தகுதியை, வாழ்க்கையின் தரத்தை உயர்த்த, இந்தப் புதிய கல்வி பயன்படும். புதிய கல்வி முறையினால் ஏழ்மையை அகற்ற முடியும். இல்லாமையைப் போக்கமுடியும்.

அண்ணா நாமம் வாழ்க!

❖ ❖ ❖

(26.02.1978 அன்று, சென்னை எழும்பூரிலுள்ள டான் பாஸ்கோ மெட்ரிகுலேஷன் பள்ளியின் – சிறார் பள்ளியின் (கிண்டர் கார்டன்) புதிய கட்டடத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை)

நாட்டுக்கும் தமிழகத்திற்கும் உயர்வு தேடித்தாருங்கள்!

தமிழ்நாட்டவர்கள் சேர, சோழ, பாண்டியர் காலத்திலிருந்து வீரப்பரம்பரையினராகத் திகழ்ந்து வருகிறார்கள் என்பதை வரலாறு தெள்ளத்தெளிவாகச் சொல்லி வருகிறது.

மனிதன் என்று பிறக்கின்றானோ அன்றே அவனுக்கு மரணம் என்ற ஒன்று இருக்கிறது என்பது உறுதியாகி விடுகிறது. உலகத்தில், தோன்றுவது மறையும்; வளருவது வாடும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியத் துணைக்கண்டத்தில் குறிப்பாக தென்னிந்தியாவில், தமிழகத்தில் இளைஞர்கள் மிகப்பெரிய அளவில், ஆயிரக்கணக்கில் இலட்சக்கணக்கில் இராணுவத்தில் சேருவதற்காகத் திரண்டு வந்திருப்பது, மகிழ்ச்சிக்குரியதாகும். வீரத்திற்குத் தகுதியுடையவர்களாக அவர்கள் தங்களை ஆக்கிக்கொள்ள முன் வந்திருப்பது போற்றுதலுக்குரியது.

இராணுவத்துக்கு ஆள் எடுப்பது, கூலிக்கு ஆள்பிடிக்கும் வேலை என்ற கருத்து ஒரு காலத்தில் நிலவி வந்தது. இராபர்ட் கிளைவினால் உருவாக்கப்பட்ட படை முதலில் எதற்காக ஏற்பட்டது என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்தியாவிற்கு, வியாபாரம் செய்வதற்காக வந்த ஆங்கிலேயர்கள்–நமது நாட்டை வியாபாரச் சந்தையாக்கிக் கொண்டார்கள்; தங்களது வியாபார பணிக்காக ஒரு சில வீரர்களைத் துணையாக வைத்துக் கொண்டார்கள், பின்னர் சிறிது சிறிதாக ஒரு படையை உருவாக்கினார்கள்; முதன் முதலில் வங்காளத்திலே படையைத் துவக்கிப் பின்னர் விக்டோரியா ராணியின் காலத்திலே இந்தியத் துணை கண்டத்தையே ஆளுகின்ற தகுதியுடையவர்களாகத் தங்களை ஆக்கிக் கொண்டார்கள். அப்போது நமது நாட்டிலிருந்தே வீரர்களைத் தேர்ந்தெடுத்து நம்மை மிரட்டி வந்தார்கள்–அடிமைப்படுத்தி வந்தார்கள் என்ற வரலாற்றினை நீங்கள் நினைவுகொள்ள வேண்டும்.

அவர்களிடமிருந்து 1947இல் நாடு விடுதலை பெற்ற பிறகு 1950இல் நாடு குடியரசாக மலர்ந்த பிறகு–குடியரசுத் தலைவரின் ஆட்சி தொடர்ந்தது; இன்று முப்படைத் தளபதிகள் இருக்கிறார்கள். அவர்கள் அந்நியர்கள் அல்ல, இந்தியத் துணை கண்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நாம் நினைவு கொள்ள வேண்டும்.

தமிழகத்தில், சமீபத்தில் உருவான புயல், வெள்ளம் ஆகியவற்றினால் ஏற்பட்ட சேதங்களை நீக்குவதற்காக, தமிழக அமைச்சரவை வேண்டுகோள் விடுத்தபோது, இராணுவ வீரர்கள், நண்பர்களைப் போல விளங்கி, பாதுகாப்புச் செய்தார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த நாட்டில் கண்ணியத்தை, கடமையை, கட்டுப்பாட்டைக் காப்பாற்றும் பொறுப்பு இராணுவ வீரர்களுக்கு இருக்கிறது. உலக நாடுகளின் மத்தியில் நாம் உயர்ந்து விளங்க–நமது நாட்டை எதிரிகளிடமிருந்து காக்க, நமது நாட்டில் அமைதி நிலவும் என்ற உத்தரவாதத்தை நல்க, வீரர்கள் வாய்ப்பளிக்கப்படுகிறார்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

1947க்குப் பின் ஏற்பட்ட பாகிஸ்தான் போராட்டத்திலே, ‘போர்’ அல்ல அது, அதனால் தான் போராட்டம் எனக் குறிப்பிடுகிறேன். அப்போது, காஷ்மீரிலே, கோவாவிலே நமது இராணுவ வீரர்கள் செய்த தொண்டு மகத்தானது. 1971ஆம் ஆண்டில் பங்களாதேஷ் விடுதலையடைவதற்கு,இந்தியஇராணுவம்தான்உதவிசெய்ததுஎன்றுகூறவேண்டும். சமாதானப்படை தேவை என்று உலகநாடுகளின் மன்றம் தீர்மானம் செய்தபோது, நமது இந்தியத் துணைக்கண்டத்து இராணுவ வீரர்கள், வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று காத்தார்கள்; போரைத் தடுக்க உதவினார்கள்.

அந்நியர் ஆட்சியின்போது இராணுவத்துக்கு ஆள் சேர்த்த விதம் வேறு; தற்போதுள்ள விதம் வேறு. இராணுவத்திற்கு ஆள் எடுப்பதில், தமிழகத்தவர்களுக்கு எடை, உயரம் போன்றவைகளில் சில விதி விலக்குகள் அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தை, நான் முதலமைச்சர் பதவி ஏற்றவுடன் தெரிவித்தேன். என்னுடைய வேண்டுகோளை ஏற்று, இங்குள்ள இராணுவ அதிகாரிகள், தங்களது மேலதிகாரிகளுக்குத் தொடர்பு கொண்டு, இந்த வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தமிழக அரசின் சார்பில் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இராணுவ வீரர்கள் தங்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்றுத் திரும்பும்போது, மத்திய அரசும், மாநில அரசும் அவர்களுக்கு உதவுகின்றன. நிதிநிலை அறிக்கைகளை உருவாக்கும்போது, இராணுவ வீரர்களுக்கென சில திட்டங்களைத் தீட்டுகின்றன; அவர்களுக்கு எந்தெந்த வகையில் உதவி செய்ய முடியுமோ, எங்கெங்கே அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தர முடியுமோ அவைகளை எல்லாம் செய்து தருகின்றன. ஆளுநர் தலைமையில் உள்ள குழு, ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களின் நலனில் அக்கறை செலுத்துகிறது.

நாட்டின் மானத்தைக் காக்கும் தொண்டில், இராணுவ வீரர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்; அவர்கள் எல்லை ஓரத்தில் இருந்து நாட்டைக் காத்து வரும் முயற்சியில்தான், நாம் இங்கே வீடுகளில் நிம்மதியாக இருக்கிறோம்; வீதிகளில் பயமின்றி உலவுகிறோம்.

காலையில் நன்றாக இருக்கும் இளைஞன் ஒருவன் மாலையில் மரணம் அடைகிறான். ஸ்கூட்டரிலே செல்லும்போது லாரி மோதி இறந்து விடுகிறான். இப்படி மரணம் திடீரென்று வந்து விடுகிறது. எனவே அந்த உயிர் நாட்டைக் காக்கும் பணியில் போவது பாராட்டுக்குரியது. இராணுவ வீரர்களின் உயிர் பிரியும்போது அவர்கள் அனாதைகளாவதில்லை. எந்தத் தொண்டும் செய்யாமல் ஓர் இராணுவ வீரன் மடிவதில்லை.

1971ஆம் ஆண்டிலே யுத்தம் நடைபெற்ற போது இங்கே திரை அரங்குகளில் திரைப்படம் ஓடவில்லையா? அலுவலகங்களில் அலுவல்கள் நடைபெறவில்லையா? அமைச்சர்கள் தங்கள் கடமைகளை ஆற்றவில்லையா? அவையெல்லாம் எப்படி முடிந்தது? இங்கே உள்ள அதிகாரிகளின் பணியினால் மட்டுமல்ல, அங்கே இருந்த இராணுவ வீரர்கள் போராடியதன் விளைவாக, இங்கே நாம் நிம்மதியாக உலவ முடிந்தது; மக்கள் அமைதியாக வாழ்க்கை நடத்த முடிந்தது. ஆலைகள் தடையின்றி ஓடிக் கொண்டிருந்தன. இதற்கெல்லாம் காரணம் இராணுவ வீரர்கள் ஆற்றிய கடமை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இன்றைக்கு இங்கே அகில இந்திய அளவில் இராணுவத்திற்கு ஆள் எடுக்கப்படுகிறது. இந்தியாவிலேயே இதுவரை இவ்வாறு நடந்ததில்லை. இதுதான் முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலுமிருந்து தமிழகத்திற்கு மக்களை வரவழைத்துத் தேர்ந்தெடுக்கும் முறை செயல்படுத்தப்படுகிறது.

ஒருவகையில் எனது நீண்டகால ஆசை, பல வருட எண்ணம் இன்றைக்கு நிறைவேறுகிறது. ஒருமுறை படப்பிடிப்பிற்காக நான் காஷ்மீர் சென்றிருந்தபோது, அங்கே என்னைச் சந்தித்த இராணுவ வீரர் ஒருவர், “தமிழகத்திலிருந்து இராணுவத்திற்கு வீரர்கள் அதிகமாக வருவதில்லையே, ஏன்?” என்று கேட்டார்.

அப்போது நான், “காலம் வரும்” என்று அவருக்குப் பதில் சொன்னேன். அந்தக் காலம் இப்போது தான் மலர்ந்திருக்கிறது.

எனக்கு 20 வயதிருந்தபோது, நான் இராணுவத்தில் சேருவதற்கு ஆசைப்பட்டேன். எனக்கு அந்த வாய்ப்புக் கிடைக்காமல் போய்விட்டது; எனக்கு வாய்ப்புக் கிடைத்திருந்தால் நான் எப்படியிருந்திருப்பேனோ எனக்குத் தெரியாது, இன்று உயிருடன் இருந்திருப்பேனோ என்னவோ! ஆனால் நான் நிம்மதியாக இருந்திருப்பேன் என்பது மட்டும் உறுதி.

இராணுவத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் தமிழ்நாட்டு இளைஞர்கள் சேர, சோழ, பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆதலால் வீரத்திலும் தீரத்திலும் துணிவிலும் யாருக்கும் பின்தங்கியவர்கள் அல்லர் என்பதைக் காண்பிக்க வேண்டும்; வெற்றி வாகை சூடுவதற்கு உரியவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். வெற்றி பெறுங்கள்! நாட்டுக்குப் பெருமையை ஏற்படுத்துங்கள்! தமிழகத்திற்கு உயர்வு தேடித் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அ;ணணா நாமம் வாழ்க!

(01.03.1978 அன்று, பல்லாவரத்தில் நடைபெற்ற அனைத்திந்திய இராணுவ ஆள் சேர்ப்பு விழாவில் ஆற்றிய உரை)

உரிமையை விட்டுக்கொடுக்காமல் கடமையாற்றும் உடன்பிறப்புகள்

“இந்த நிகழ்ச்சி, தமிழக மக்கள் நல்வாழ்விற்காக, மீனவ சமுதாயத்தின் நன்மைக்காக, உதவி செய்யும் விதத்தில் அமைந்துள்ளது. மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் விஞ்ஞான முறையில் மீன்பிடி தொழிலில் ஈடுபட வகை செய்யும் இந்த முயற்சியை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

இயந்திர நுணுக்கம் வாய்ந்த மீன்பிடிக்கும் இரண்டு டிராலர்கள் வாங்கப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு டிராலர்களையும் வெள்ளோட்டம் விடும் வாய்ப்பு இங்கே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வெள்ளோட்டம் விடுவது என்றால் ஒத்திகை பார்ப்பது போன்றதாகும். இந்த டிராலர்கள் வாங்குவதற்கு முன்னால் பரிசோதித்துப் பார்த்து இங்கே வந்தாலும் மற்றவர்கள் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வெள்ளோட்ட நிகழ்ச்சி ஏற்படுகிறது.

ஒரு நாடு முன்னேற, மக்கள் நல்வாழ்வு வாய்ப்புப் பெற, ஒவ்வொரு துறையிலும் நல்ல மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். அத்தகைய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டால் அனைத்து மக்களும் பயன் அடைவார்கள். அந்த நாடு செழிப்படையும். இங்கே எனக்கு மாலை அணிவித்தார்கள். கட்டுமரத் தொழிலாளர்கள் சார்பிலும், விசைப்படகு உரிமையாளர்கள் சார்பிலும் மாலை அணிவிப்பதாகக் கூறினார்கள்.

கட்டு மரத்தோடு தன் வாழ்வை இணைத்துக் கொண்டவர்கள். உடல் பலம் அனுபவத்தை நம்பிக் கடலில் செல்பவர்கள் இங்கே எனக்கு மாலை அணிவித்தார்கள். இந்த நேரத்தில் இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். விசைப் படகு ஓட்டுகிறவர்கள் அல்லது விசைப் படகு சொந்தக்காரர்கள், கட்டுமரம் ஓட்டுகிற மீனவர்கள் ஆகிய இருவருக்கிடையே நாம் விரும்பாத, நாகரிக உலகம் ஏற்காத வகையில் போராட்டம் நடைபெறுகிறது.

அண்ணன், தம்பிகளாக உள்ளவர்கள் சண்டை சச்சரவு செய்துகொண்டு ஒருவரையொருவர் தாக்கிக் கொள்கிறார்கள்; கைகால்கள் முறிகின்றன. மீனவர்களுக்கிடையே போராட்டம் உச்சகட்டம் அடைகிறது என்று பத்திரிகைகளில் செய்தி வெளிவருதைப் பார்த்திருப்பீர்கள். இவர்களின் மோதலை அனுபவ ரீதியாகக் கண்ட அதிகாரிகள் இங்கே இருப்பார்கள்.

இங்கே இதையெல்லாம் நான் குறிப்பிடக் காரணம், இரு தரப்பினரும் எனக்கு மாலை அணிவித்ததே. இரு தரப்பினரும் பிரிந்து வந்து மாலை அணிவிப்பது தேவை தானா? இரு தரப்பினரும் ஒன்றுபட்டு, உரிமையை விட்டுக் கொடுக்காமல் நீதியின்பால் கடமையாற்றும் உடன்பிறப்புகள் என்று கேள்விப்பட்டால் எத்தனை மகிழ்ச்சியாக இருக்கும்!

மீனவ சமுதாயத்தினர் எப்படி விஞ்ஞான ரீதியாக மீன்பிடி தொழிலில் ஈடுபட முடியும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அமைச்சர் எட்மண்ட் ஜப்பான் செல்கிறார். இந்த நிகழ்ச்சி அவருக்கு வழி அனுப்பு நிகழ்ச்சியாக அமைந்து விட்டது என்று எண்ணி உண்மையிலேயே பெருமைப்படுகிறேன்.

இங்கே டிராலர்களை ஓட்டி வைக்க வேண்டிய கடமை எனக்கு உண்டு. நான் தள்ளினாலும் அது ஓடப் போவதில்லை. இங்கே ஒரு பொத்தானை அழுத்தினால் அது ஓடும். இவை எல்லாம் ஒரு சடங்குதான். உண்மையிலேயே இதை ஓட்டுபவர்கள் மற்றவர்கள்தான்.

மக்களின் பணம் ரூபாய் 80 இலட்சம் முடக்கப்பட்டிருக்கிறது. 7 ஆண்டுக் காலத்தில் 80 இலட்சம் ரூபாய்க்கு மீன் பிடித்து அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு நிபந்தனை விதித்துள்ளது. டிராலர்களைக் கொண்டு மீன்பிடிப்பதுடன் தமிழக அரசின் பணி முடிந்துவிடுவதில்லை. பிடித்த மீன்களைப் பக்குவப்படுத்தி டின்களில் அடைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். விற்பனை செய்யப்படுகிற கோடிக்கணக்கான ரூபாய்களை நமது உரிமை என்ற வகையில் தமிழக மக்களுக்குத் திட்டங்கள் நிறைவேற்றப் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்றால் மனநிறைவு ஏற்படும்.

வீடு கட்டினாலும் சரி, கப்பல் வாங்கினாலும் சரி, மீன் பிடி தொழில் செய்தாலும் சரி அதன் மூலம் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்த முடியும்? அதன்மூலம் எவ்வளவு இலாபம் கிடைக்கும்? என்பதுதான் நமது முதல் கேள்வி. எதைச் செய்தாலும் அதன் மூலம் கிடைக்கும் இலாபத்தின் மூலம் மக்களுக்கு என்ன நன்மை செய்ய முடியும் என்பதே அடிப்படையாகக் கொண்டுள்ளோம். நான் வெளிநாடு சென்றிருந்தபோது விருந்து கொடுக்கப்படும் விதத்தைப் பார்த்தேன். இறால்வகை உணவுப் பண்டத்தைப் படைத்தால் அதைத்தான் மிகப்பெரிய விருந்தாக அவர்கள் கருதுகிறார்கள்; பெருமையாக நினைக்கிறார்கள்.

அப்படிப்பட்ட இறால் மீன்களைப் பிடித்து அரசுக்குச் சொந்தமான பாக்டரியில் பக்குவப்படுத்தி வெளிநாட்டிற்கு அனுப்பினால் ஏராளமான வெளிநாட்டுச் செலாவணி பெற முடியும். தனிப்பட்ட முதலாளிகள் மனமிரங்கிக் கொஞ்சம் விட்டுக் கொடுத்தால் இந்த நோக்கம் நிறைவேறும். வசதி மிக்கவர்கள் இதைவிட்டு விலகிவிட வேண்டும் என்பதல்ல எங்கள் எண்ணம். வசதி இல்லாதவர்களை உயர்த்த வசதி மிக்கவர்கள் சற்று விலகி இருக்க வேண்டும் என்றுதான் கேட்டுக்கொள்கிறோம்.

டாக்ஸி ஓட்டுகிறவர்கள் எப்படிச் சொந்தத்தில் டாக்ஸி வைத்திருக்கிறார்களோ அதைப்போல உண்மையிலேயே கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தொழிலாளர்களுக்குப் படகு சொந்தமாக இருக்க வேண்டும். இதைப்பற்றித் தமிழக அரசு பரிசீலித்து வருகிறது. அப்போதுதான் ஒருவருக்கொருவர் மோதல் ஏற்படாமல் இருக்கும். கடலில் 3 மைல்களுக்கு அப்பால்தான் விசைப் படகுக்காரர்கள் மீன் பிடிக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தை விசைப்படகுக்காரர்கள் மீறக் கூடாது. அதேபோல எல்லையை மீறி விசைப் படகு வந்து விட்டதே என்ற சந்தேகக் கண்ணோடு கட்டுமரத் தொழிலாளர்கள் பார்க்கக் கூடாது.

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட இந்த இரண்டு மீன் பிடி டிராலர்களைக் கொண்டு ஏராளமான மீன்களைப் பிடித்து அதைப் பக்குவப்படுத்தி வெளிநாட்டிற்கு அனுப்பி அந்நியச் செலாவணியைப் பெறுவதில் இதில் ஈடுபட்டிருப்போர் முனைய வேண்டும். மீன் பிடிப்பதில் விஞ்ஞான ரீதியில் புதிய யுக்திகளைக் கையாள இந்த டிராலர்கள் தருவிக்கப்பட்டுள்ளன. இந்த டிராலர்களில் பலர் பணியாற்ற வேண்டியிருக்கும்.

மேற்கு வங்கத்திலிருந்து நம்மிடம் மீன் கேட்கிறார்கள். அங்கேயும் நாம் மீன் ஏற்றுமதி செய்யலாம். வெளிநாட்டிற்கும் ஏராளமாக மீன் ஏற்றுமதி செய்யலாம். இங்கே இரண்டணா, நாலணாவிற்கு விற்கப்படும் இறால் வெளிநாடுகளில் 10 ரூபாய் 12 ரூபாய் என்று விற்கப்படுவதையும் நாம் மறந்துவிடக் கூடாது. எனவே, நாம் மீன் வளத்தைப் பெருக்கி அதிக அளவில் அந்நியச் செலாவணியைப் பெற வேண்டும்.

இந்த முயற்சிக்கு மக்களின் ஆதரவுடன், ஆசியுடன், நல்லெண்ணத்துடன் இந்த மீன்பிடி டிராலர்களைத் தொடங்கி வைக்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

(11.03.1978 அன்று, சென்னை துறைமுகத்தில் நடைபெற்ற தஞ்சை, நெல்லை என்ற இரண்டு மீன்பிடி கப்பல்களின் வெள்ளோட்ட விழாவில் ஆற்றிய உரை)

மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைக் காப்பாற்ற முயற்சிப்பேன்!

மதுத் தீமையை ஒழிப்பதற்குத் தமிழக அரசு பல்வேறு திட்டங்களையும் உருவாக்கிக் கொண்டு வருகிறது. மதுவிலக்கை அமல் செய்வதற்காகத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சட்டத்தை மீறி மது அருந்துகிறவர்களையும், கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களையும் தண்டிப்பதற்கான சட்டங்கள் மேலும் கடுமையாக்கப்படும்.

மற்ற மாநிலங்களில் மது விலக்கு முயற்சி தோற்றுவிட்டது என்பதற்காகத் தமிழகத்திலும் அது தோல்வி அடையவேண்டும் என்கிற அவசியமில்லை. மது விலக்குக் கொள்கை வெற்றி பெறுவதும் தோல்வி அடைவதும் அந்த மாநிலத்திலுள்ள மக்களுடைய விருப்பத்தையும், மனோபாவத்தையும் பொறுத்த விஷயம். அண்டை மாநிலங்கள் மதுவிலக்கை அமல் செய்யத் தயக்கம் காட்டுகின்றன என்பதற்காக அந்த விஷயத்தில் நாம் பின் வாங்கத் தேவையில்லை.

இந்திமொழி மீது நமக்கு வெறுப்பு இல்லை. இந்தி ஆட்சி மொழியாக ஆவதை நாம் எதிர்ப்பதற்குக் காரணம் உண்டு. இந்தி மட்டுமே ஆட்சி மொழியானால் இந்தி பேசாத மக்களை அது இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கிவிடும். பல ஆண்டுகளுக்கு முன் மேற்குவங்க முதலமைச்சராக இருந்த பி.சி. ராய் அவர்கள், "மேற்கு வங்கத்தின் மீது இந்தி திணிக்கப்படுமானால் அது பிரிவினையில் தான் போய் முடியும்" என்று மத்திய அரசை எச்சரித்து இருக்கிறார். இந்தி திணிப்பால் இந்திய ஒருமைப்பாடு பாதிக்கப்படும் என்று நாம் சொல்லுகிறோம். மொழி விஷயத்தில் நம்முடைய உணர்ச்சிகளை இந்தி பேசுகிறவர்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். மத்திய–மாநில உறவுகளுக்குத் தொடர்பு மொழியாக ஆங்கிலத்தை வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லுகின்றவர்கள் மாநிலத்துக்கு மாநிலம் தொடர்பு மொழியாக இந்தி மொழி இருக்கலாம் என்று கூறுவது எப்படி என்று எனக்குப் புரியவில்லை. மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே தொடர்பு மொழியாக ஆங்கிலம் இருக்கலாம் என்றால் அதே ஆங்கிலம் மாநிலங்களிடையே தொடர்பு மொழியாக ஏன் இருக்கக்கூடாது? மத்திய அரசோடு ஆங்கிலத்தில் தொடர்பு வைத்துக்கொள்ளும் மாநில அரசின் அதிகாரிகள் ஆங்கிலத்தில் பயிற்சி பெற்றவர்களாக இருப்பார்கள். ஆகவே, இன்னொரு மாநிலத்தோடு நிருவாகத் தொடர்பு வைத்துக்கொள்ளும்பொழுது ஆங்கில மொழியைப் பயன்படுத்துவதுதானே அவர்களுக்கு வசதியாக இருக்கும்? ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக ஏற்றுக்கொண்டுவிட்ட பிறகு, இந்தி எதற்காகத் தேவை என்றே எனக்குப் புரியவில்லை.

வெறும் விளம்பரத்திற்காக இந்த அரசு எந்தக் காரியத்திலும் ஈடுபடாது. மக்களுக்காக என்ன செய்கிறோம் என்பதுதான் முக்கியமானதே தவிர, என்ன செய்யப் போகிறோம் என்று சொல்லி விளம்பரங்கள் செய்துகொண்டு இருப்பதால் யாருக்கும் எந்தவிதமான பயனும் இல்லை.

நான் பத்திரிக்கைக்காரர்களை அடிக்கடி சந்திப்பது இல்லை என்கிற குறை இருந்து வருவது எனக்குத் தெரியும். ஓர் அரசு வெற்றிகரமாகச் செயல்பட்டு அதனுடைய கொள்கைகளையும், திட்டங்களையும் அவ்வப்போது பத்திரிக்கைகள் வாயிலாக மக்களுக்குத் தெரிவிப்பது எவ்வளவு அவசியமானது என்பதை அறியாதவன் அல்ல நான்.

ஆனால், நான் அரசின் சார்பாக வெளியிடுகின்ற எண்ணங்களையும், கருத்துக்களையும் எந்த அளவுக்குப் பத்திரிக்கைகள் திரித்துப் போடாமல் அப்படியே வெளியிடும் என்பது பற்றி எனக்குக் கொஞ்சம் அச்சம் உண்டு. கருத்துக்கள் சரியான முறையில் பத்திரிக்கைகளில் வெளியாகாமல் போய்விடுகிறபோது, எந்த நோக்கத்துக்காக அந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டனவோ அந்த நோக்கமே வெற்றி பெறாமல் போவதற்கு அது வழி வகுத்து விடக்கூடும். ஆகவேதான் பத்திரிக்கையாளர்களைச் சந்திப்பது பற்றித் தயக்கம் காட்ட வேண்டியவனாக இருந்தேன். இப்போது இந்த அரசு பொறுப்பு ஏற்று ஓர் ஆண்டு முடியப்போகிறது. இனி, பத்திரிக்கையாளர்களைச் சந்திக்கும் வாய்ப்பை நிறைந்த அளவில் நான் பயன்படுத்திக்கொள்கிறேன்.

மக்கள், நான் நல்லவன் என்று நம்பித்தான் என்னைப் பெரிய பொறுப்புக்குத் தேர்ந்து எடுத்து இருக்கிறார்கள். எனக்கு வேறு எந்தத் தகுதியும் இருப்பதாக நான் கருதவில்லை. நான் நல்லவனா, இல்லையா என்பதைப் பற்றிக்கூட நானாக ஒன்றும் சொல்லமுடியாது. வருங்காலச் சந்ததியர்கள்தான் அதைப்பற்றி அபிப்பிராயம் சொல்ல முடியும். ஆனால், என்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்துகொள்ள என்னாலான எல்லா முயற்சிகளையும் செய்வேன் என்று மட்டும் என்னால் உறுதியாகச் சொல்லமுடியும். ஆகவேதான், என்னுடைய ஒவ்வொரு நடவடிக்கையிலும் நான் மிகுந்த கண்காணிப்புடனும் விழிப்புடனும் இருக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

(11.06.1978 அன்று, சென்னை பத்திரிகை நிருபர்கள் சங்கத்தில் ஆற்றிய உரை)

தியாகத்தின் அடையாளச் சின்னம்!

தியாகத்தின் அடையாளச் சின்னம் காமராஜர். அந்த அடிப்படையில் காமராஜர் இல்லத்தை அரசுடைமையாக்கி நினைவு இல்லமாக்கும் பணியை இங்குத் தொடங்கி இருக்கிறோம்.

காமராஜர் எப்போதும் தன்னிடம் ஒரு சிறிய பெட்டியை வைத்திருப்பாராம். அதை யாரையும் திறக்க அனுமதிப்பதில்லையாம். இப்போது அதைத் திறந்து பார்த்தபோது, அதில் இருந்த முக்கியமான பொருள் என்னவென்றால், அது அவரது தாயாரது படம்தான்!

அந்தத் தாய் நோய்வாய்ப்பட்டபோதுகூட அவர் போய்ப் பார்க்கவில்லை. பாசம், கடமை, உரிமை, உணர்வு அத்தனையும் அவருக்கு இருந்த போதிலும் பிறருக்காக, நாட்டுக்காகத் தொண்டு செய்யும் பண்பு இருந்ததே–அதுதான் தியாகம்!

போராடிப் போராடி, வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டுக்கொண்டு தம்மை உயர்த்திக்காட்டியவர் காமராஜர். இன்றைக்கு நான் பல கோப்புகளைப் பார்க்கிறேன். காமராஜர் முதல்வராக இருந்தபோது, வீணாகச் சட்டப் பிரச்சினையை வைத்து, அவர் செய்யவேண்டிய காரியங்களைத் தள்ளிப் போட்டதில்லை; மக்களுக்காகத்தான் சட்டமே ஒழிய, சட்டத்துக்காக மக்கள் அல்ல என்பதைச் செயலில் காட்டியவர்!

தமிழ்நாட்டு மக்களும், தமிழக அரசும் நல்லவர்களின் தியாக உணர்வைப் போற்றிப் பாராட்ட கடமைப்பட்டவர்கள். தியாக உள்ளம் படைத்தவர்களின் நினைவை எல்லோர் உள்ளத்திலும் நிரந்தரமாக இடம்பெறச் செய்ய தமிழக அரசு ஆவன செய்யும்.

கல்லூரிக்குக் காமராஜர் பெயர் சூட்ட வேண்டும் என்று கேட்டார்கள். மதுரைப் பல்கலைக்கழகத்துக்குக் காமராஜர் பெயர் சூட்டப்படும் என்று நான் இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, அழுத்தப்பட்ட, தூக்கியெறியப்பட்ட மக்களின் உள்ளத்திலே உறுதியும் வீரமும் துணிவும் அறிவும் வர, செயல்பட்ட காமராஜருக்குப் பல்வேறு வகையில் நினைவு கூரத்தக்கவகையில் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்த அனைத்தையும் அரசு செய்யும்.

அண்ணா நாமம் வாழ்க!

(15.07.1978 அன்று, பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 76ஆவது பிறந்த நாளன்று சென்னை, தியாகராய நகரில் காமராஜ் நினைவு இல்லத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரை.)

சமதர்ம சமுதாயத்தை உருவாக்க சபதமேற்போம்!

ஒரு மனிதன் வாழ்க்கையில் உயர்வது என்பதும், புகழ் பெறுவது என்பதும், மற்றவர்களுடைய நம்பிக்கையைப் பெறுவது என்பதும் எளிதல்ல, அதைவிடக் கடினம் அவைகளை காப்பாற்றிக் கொள்வது. அதுபோல், இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு உழைத்த இந்தியத் தந்தை மகாத்மா காந்தி அவர்களை நினைத்துக் கொள்கிற இந்த நேரத்தில், அவர்களோடு அவர்கள் கருத்தை ஏற்று வெவ்வெறு கொள்கைக்கு சொந்தக்காரார்களாக இருந்தாலும், நாட்டின் விடுதலைக்காக உழைத்த அத்தகைய தியாகம் செய்த அந்த நல்லவர்களுக்கு நாம் இப்போது மட்டுமல்ல எப்போதும் எந்தத் தலைமுறையிலும் நன்றி காட்டக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

நன்றி என்பது, வார்த்தை அளவில் அழகுறச் சொல்லிவிட்டால் அது பயனுள்ளதாகாது. பெரியவர்களை நினைக்குந்தோறும் அவர்கள் இந்த நாட்டிற்காகச் செய்த தொண்டினை, தியாகத்தை நினைக்கும்போது மிகுந்த மகிழ்ச்சியுடன் பாராட்டுவது நம்முடைய கடமையாகும் என்று நினைத்தாலும் கூட அதே நேரத்தில் அவர்களுடைய நல்ல கொள்கையை நாம் பயன்படுத்துவோமானால்தான் நம்முடைய நன்றியைச் செவ்வனே செலுத்துகிறோம் என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டிய கடமைப்பட்டுள்ளவர்களாக இருக்கிறோம். அந்தச் சுதந்தர தாகத்தைத் தீர்த்தவர்கள் யார் யார் எங்கெங்கே இருக்கிறார்கள்? எவ்வளவு துன்பங்களுக்கு அவர்கள் ஆளாக்கப் பட்டிருக்கிறார்கள்? அவர்களுடைய குடும்பங்கள் எங்கே இருக்கின்றன? என்று பட்டியல் போட்டுக் கணக்கிட்டு அதற்கு முனைந்தால் கூட செய்ய முடியாத வகையில் எங்கோ ஒரு மூலையில் அவர்கள் துன்பத்தில் இருக்கிறார்கள் என்பதையும், அவர்களுக்காக என்னைப் போன்றவர்களுக்கு இந்தப் பதவியைப் பெறுகிறபோது, அவர்களை நினைத்துப் பார்க்க தவறினால் நாங்கள் எங்கள் கடமையிலிருந்து வழுவுகிறோம் என்று பொருளாகிவிடும்.

இந்த நல்ல நேரத்தில் இயற்கை நம்மை உள்ளம் குளிரும் வகையிலும், அதே நேரத்தில், துன்பத்தை ஏற்படுத்தாமல் நாம் இங்கே எப்படி எந்த முறையில் நிற்பது என்கிற நிலைமையை உருவாக்கித் தருகிற நேரத்தில், இதைப்போன்ற இந்த நாடு பல வகையிலும், அகத்திலும் புறத்திலும் சுதந்தரத்தோடு, தனி மனித உணர்வோடு, பெற்ற உரிமையோடு வாழக் கூடிய நிலைமையை நாம் பெற்றுவிட்டோமா? என்று நாம் சிந்தித்துப் பார்த்தாக வேண்டும்.

அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் “இந்த நாட்டில் சமூகம் என்று ஒன்று இருக்குமானால், அந்தச் சமுதாயத்தில் இருக்கிற மக்கள் அனைவரும், வகுப்புவாத வெறிக்கோ, அந்த நம்பிக்கைக்கோ ஆளாகி அதைச் செயல்படுத்த முனைகிற நேரம், ஒரு நிமிடமாவது இந்த நாட்டில் இருந்தால், அது சுதந்திரத்திற்குப் பாதகமாகும்” என்ற கருத்தைப் பல்வேறு நேரத்தில் அவர்களுக்கே உரிய வார்த்தையில் சொல்லியிருக்கிறார்கள்.

நாம் இங்கே இந்தியத் துணைக்கண்டத்தில் பல்வேறு பகுதிகளில் நடக்கிற நிகழ்ச்சிகளிலும், அந்த நிகழ்ச்சிகளையும், தியாகம் செய்தவர்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அதற்காக மகாத்மா காந்தியிலிருந்து, நேருஜியிலிருந்து, பெரியாரிலிருந்து, நேதாஜியிலிருந்து, இதுபோன்ற அத்தனை மக்களும், இளைஞர்களும் மற்றவர்களும், மாணவர்களும், அண்ணாவும் இந்திய சுதந்திரத்தை எப்படி போராடிப் பெற்றுத்தந்தார்கள், தியாகத்திற்குத் தங்களை சொந்தக்காரர்களாக்கி உழைத்தார்களோ, எத்தனை இன்னல்களுக்கு ஆளானார்களோ, இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் 32ஆவது ஆண்டு என்று சொல்கிற இந்த நேரத்திலும்கூட இந்த நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்று சொன்னால், அந்தக் கொள்ளைகள் முழுமை பெற்றுவிட்டதா ? என்றால் இல்லையென்று சொல்கிற பதிலைத்தான் பெறுகிற வகையில் ஆங்காங்கு வகுப்புப் பூசலும் மத வெறியும், ஜாதி முரண்பாடும் தலைதூக்கிக் கொண்டு இருக்கின்றன என்பதும், அவ்வப்போது அவைகளைச் சமாளித்து அடக்குவதும், அந்த எண்ணங்களை மாற்ற முயற்சிக்கவும், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், உரிமையோடு மற்றவர்களோடு ஒத்து வாழவேண்டுமென்ற கொள்கையைச் செயல்படுத்துகிற ஒரு உரிமைக்குச் சொந்தக்காரர்களாக இல்லை என்று எண்ணி நாம் ஏமாற வேண்டாம் என்றாலும், இந்தியத் துணைக்கண்டத்தில் ஆங்காங்கு நடைபெறுகிற நிகழ்ச்சிகள் சில நம் முன் நிழலாடிக்கொண்டிருக்கின்றன.

புறத்தால் கட்டுப்படுவது என்பது சட்டம். அகத்திலே கட்டுப்படுவது என்பது மனச்சாட்சி. இவைகள் இரண்டையும் ஒன்றாக்குவதுதான் அண்ணா அவர்களின் கொள்கையாகும். ஒரு மனிதன் எவ்வளவுதான் ஆற்றலும், அறிவும் பெற்றவனாக இருந்தாலும், எவ்வளவுதான் திறமை பெற்றவனாக இருந்தாலும், ஒரு தனி மனிதன் மட்டும் எதையும் இந்த உலகத்தில் சாதிக்க முடியாது என்பதும், மற்றவர்கள் உள்ளம் தியாகத்திற்குச் சொந்தமாக இருந்தால்தான், விஞ்ஞான நுணுக்கங்கள் மூலம் முழுமை பெறும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உங்களையெல்லாம் காணுகிற இந்த நேரத்தில், என் உள்ளத்திலே ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறது. உண்மையிலேயே அந்த உணர்ச்சியைப் பெறுகிறேன். ஜாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று நான் நம்புகிறேன். நீங்கள் முயற்சித்தால், நீங்கள் முனைந்து நின்றால் இந்த நாட்டில் நடக்கும் கொடுமைகள்

நீக்கப்படும் என்று அண்ணாவும் ஐயாவும் சொல்லியிருந்தாலும், அவர்களின் கடைசித்தொண்டனாக நான் இன்று முதலமைச்சராக இருந்தாலும் நான் அதைச் சொல்வதில் பெருமையடைகிறேன்.

மனிதன் தன்னுடைய சுய அறிவோடு இருக்கிறபோதே தவறுகள் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. படித்தவர்களாக இருந்தாலும், பெரியவர்களாக இருந்தாலும் தவறு செய்வது தவிர்க்க முடியாதது. அப்படியிருக்கும்போது சுய நினைவையும் இழந்து நாம் பல தவறுகளைச் செய்யும்போது நம்மை ஏதோ ஒரு மயக்கத்திற்கு உள்ளாக்கக்கூடிய வகையில் நம்முடைய வாழ்க்கையை அமைத்துக்கொண்டால், நீங்கள் அனைவரும் உங்கள் முன்னால் சொல்கிற இந்தச் செய்தி, தமிழகம் முழுவதும் பரவவேண்டும். மது அரக்கன் என்ற பேயை நாம் தமிழகத்திலிருந்து விரைவில் ஓட்டியாக வேண்டும்.

நான் தஞ்சைக்குச் சென்றபோது, மூன்று தாலுக்காக்களில் மதுவை அறவே மக்களாகவே ஒழித்து விட்டார்கள் என்பதையும், அங்கே மக்களாகவே ஒரு மாநாட்டை நடத்தினார்கள் என்பதும், இங்கே நான் வரும்போது, மக்கள் ஒன்றுபட்டு நாட்டிலே நன்மையை உருவாக்குவது என்ற முடிவுக்கு வந்தால் அதைத் தடுக்கும் சக்தி எதற்கும் இருக்கமுடியாது.

மாணவர்கள் கல்வி பயிலத்தான் வேண்டும் என்பதில் எனக்குள்ள ஆர்வத்தை அதிகமாகச் சொல்லி, பெருமைப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. மூன்றாவது வகுப்பு வரையில் படித்து, ஏழ்மையின் காரணமாக அதற்குமேல் படிக்க முடியாமல் நாடகத்தில் சேர்ந்து வேலை செய்துதான் சம்பாதிக்க வேண்டும், வேறு வழியில்லை என்ற நிலை எனக்கு எப்படி ஏற்பட்டதோ அதுபோல் எத்தனையோ குழந்தைகள் இன்று வேலை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது. அவர்களுக்கு எல்லாம் கல்வி அளிப்பதன் மூலமும் அவர்களை இந்தியா முழுவதும் மட்டும் இல்லாமல் உலகத்தில் ஆங்காங்கு இருக்கிற நல்லறிவாளிகள், விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், பகுத்தறிவுவாதிகள், அத்தனைபேரும் பாராட்டி, நல்லவர்களை, திறமையாளர்களை, அங்கே காணவேண்டும், தமிழகத்தில்தான் மீண்டும் காணவேண்டும், அந்தப் புகழ் மீண்டும் தமிழகத்திற்குக் கிடைக்கவேண்டும் என்று நாம் எல்லாரும் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டும் என்பது என் பணிவான வேண்டுகோளாகும்.

அதோடு மட்டுமல்ல, கல்வி பயிலுபவர்கள், ஏதோ படித்துப் பட்டம் பெறுகிறோம் என்று இல்லாமல், நாம் ஒருவர் கல்வி பெறுவதன் மூலம், 1,000 பேருக்காவது வாழ்வுதர இந்த வாலிப வயதில், இளமைப் பருவத்தில் கொள்ளும் அந்தக்கொள்கையை, உறுதியைப் பெற்றாக வேண்டும். அதேபோல் தொழிலாளப் பெருமக்கள், இந்த நாட்டில் உழைக்கிறவர்கள், ஏதோ யாருக்கோ அடிமையாக இருக்கிறோம் என்று எண்ணாமல்,

இந்த எண்ணத்தைத் தூக்கியெறிந்து விட்டு, இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள் நாம் என்ற எண்ணத்தில், உழைப்பவர்கள்தான் உரிமை படைத்தவர்கள் என்ற நிலையில் அவர்கள் நல்ல உணர்வோடு அந்த எண்ணத்தைப் பெற்று, தொண்டு செய்யவேண்டும் என்று நான் உங்களையெல்லாம் வேண்டிக்கொள்கிறேன்.

இந்தக் கஷ்டங்கள், துன்பங்கள் வரினும் நம்மைக் காப்பதற்காகவே வருகின்றன என்று எண்ண வேண்டும். இன்றையதினம், விவசாயிகள் யாருடைய கைப்பாவையாகவும் இல்லாமல், தம்முடைய தேவையை, தங்களுக்கு இருக்கிற கஷ்ட நஷ்டங்களைச் சொல்லி, விவாதத்தின் மூலம் தீர்த்துக் கொள்ளக்கூடிய வகையில் அனைத்துப் பிரச்சினைகளிலும் ஒரு நல்ல நிலைமையை உருவாக்கி இருப்பதை எண்ணி நான் உண்மையிலேயே பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

ஒவ்வொரு மனிதனும் எத்தனைகாலம் உயிரோடு வாழ்கிறான் என்று கருதாமல், இந்த இடைக்காலத்தில் என்னென்ன நற்பணிகளைச் செய்தான் என்று கணக்கிட்டுப் பார்த்து நாம் இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள் என்று எண்ணி, பதவிகள் என்னென்ன பெற்றோம் என்று பார்க்காமல், நல்லதை எவ்வளவு செய்து இருக்கிறோம் என்று எண்ணினால், நமது எண்ணத்தை மாற்றிக்கொள்ள முடியும் என்ற உணர்வை, உறுதியை தமிழகத்தில் இருக்கிற பெரும்பாலான மக்கள் நன்றாகப் பதியவைத்து, தன் உரிமையை நிலைநாட்டிக்கொள்ள அரசோடும், மற்றவர்களோடும் ஒத்துழைக்க வேண்டும்.

தமிழக அரசு பல வழக்குகளை வாபஸ் பெற்றுக் கொண்டிருக்கிறது என்று கூறுகிறபோது, வழக்குகளைப் போடுவதால் ஒரு அரசுக்குப் பெருமை வந்துவிடாது, அப்படிப் பெருமைப்படுகிறது என்று சொல்வதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆனால்வழக்குகளேஇல்லாமல்,எந்தக்குற்றங்கள்செய்தாலும்கேள்விகேட்பார்இல்லை என்று சொல்வது தொண்டுக்கு ஆதாரமாக அமையாது என்பதை அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சொன்னால் மக்கள் அதை அனுமதிக்கமாட்டார்கள். பழி வாங்கும் தன்மை தமிழக அரசுக்கு நிச்சயமாக இல்லை. அப்படி எந்தக் காரியத்தையும் செய்யாது என்று அமரர் அண்ணாவின் மீது ஆணையிட்டுச் சொல்லிக்கொள்கிறேன். உண்மை என்று இருந்தால்தான், நியாயமாக காரியங்கள் நடக்கிறது என்று இருந்தால்தான் இந்த அரசு ஈடுபடுமே ஒழிய பழிவாங்கும் காரியங்களில் தவறான செய்கையில் இந்த அரசு ஈடுபடாது.

இந்த நேரத்தில் உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். என்னிடமோ, என்னுடன் இருப்பவர்களிடமோ, அரசாங்க அதிகாரிகளிடமோ, அரசு செயலாளர்களிடமோ, தலைமைச் செயலாளரிடமோ, காவல் துறையினரிடமோ தவறுகள் இருந்தால் சுட்டிக்காட்டுங்கள். அவர்கள் தவறு செய்யமாட்டார்கள் என்ற உறுதி கூறும்போதே, அப்படி தவறுகள் இருந்தால், மக்கள் சுதந்திரமாக அதை சுட்டிக்

காட்டக்கூடிய நிலையில் இருக்கிறோம் என்ற நம்பிக்கையும் ஆசையும் ஆகும். இந்த அரசு மீது, அரசு அதிகாரிகள் மீது, உங்களுக்கு ஏதாவது தவறான செய்திகள் கிடைத்தால் தயவு செய்து இந்த அரசுக்கு தெரியப்படுத்தலாம். அதை நான் வரவேற்கிறேன்.

இந்தச் சுதந்திரம் மக்களுக்குக் கிடைக்க வேண்டும். ஒருவன் இலட்சாதிபதியாக ஆகிவிட்டால் மட்டும் முழு வாழ்வு பெற்றவனாகி விடமுடியாது. வாழ்வுக்கு நிரந்தரமான உத்தரவாதம் தேவை. குழந்தைகளுக்கு எதிர்காலத்தில் என்ன நிலைமை ஏற்படுமோ என்ற ஏக்கம், அச்சம் எந்தத் தாய் தந்தையர்க்கும் இருக்கக் கூடாது. அந்த நிலைமையை நாம் ஏற்படுத்தியாக வேண்டும். எங்கள் குடும்பத்தைப் பற்றி எனக்குக் கவலையில்லை. அதை அரசு பார்த்துக்கொள்ளும். எங்கள் கடமையைச் செய்வோம் என்ற நம்பிக்கையான சூழ்நிலை என்று உருவாகிறதோ, எல்லோரும் சமநிலை, சமத்துவ சமதர்ம சமுதாயத்தை அமைக்க என்று பாடுபடுகிறோமோ அன்றுதான் நமக்கு நல்வாழ்வு ஏற்படும். அந்த உறுதியான நம்பிக்கை ஒன்றுதான் இந்த நாட்டிற்கு வாங்கித்தந்த சுதந்திரமாகும். அப்படிக் கிடைத்த சுதந்திரத்தின் சொந்தக்காரர்களாக இருக்க முடியும். சமுதாயத்தில் மறுமலர்ச்சியும் மாற்றமும் தேவை. பொருளாதார அடிப்படைத் திட்டங்களை மாற்றியாக வேண்டும். அடுத்த தலைமுறை நாட்டில் பிரச்சினையை சந்திக்கக் கூடாத வகையில் நாம் திட்டங்களைத் தீட்டியாக வேண்டும்.

துரித கதியில் சொல்கிற எந்தக் கருத்துரையாக இருந்தாலும்கூட கடைசிவரையில் அந்தக் காரியத்தை நாம் முடித்தேயாக வேண்டும். அப்படிப்பட்ட திறமைசாலியாக இருந்தால் மட்டும் போதாது. புகழும் இருந்தாக வேண்டும். சமுதாயத்தையும் பொருளாதாரத்தையும் இந்திய சுதந்திரத்தையும் நாம் ஒருமைப்படுத்தி, நாம் பணிபுரிய வேண்டும். அதன் மூலம் வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்க வேண்டும். சில கோடிகளை வைத்திருக்கிற ஒரு சில பெரிய மனிதர்களுக்காக மட்டும் இல்லாமல், ஏழை மக்கள் உழைக்கும் வர்க்கத்தினருக்கு இந்தத் திட்டங்கள் பயன்பட வேண்டும் என்று சொல்லக்கூடிய வகையில் வேலையில்லாமல் மக்கள் இருப்பதற்கு மாறாக எல்லோருக்கும் வேலை என்ற நிலை வரவேண்டும். மற்ற மனிதர்கள், எந்த எந்த வசதியைத் தேவையான அளவுக்குப் பெற்று வாழ்கிறார்களோ அதைப்போல் வாழ்கிற நிலைமை தமிழகத்தில் மட்டும் அல்ல, தமிழகத்தின் மூலமாக, இந்தியத் துணை கண்டம் பூராவுக்கும் பரவவேண்டும் என்ற ஆசை, அண்ணாவின் கொள்கையின் விளைவை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த விளைவை நாம் அறுவடையாக்கிக் கொள்ள தயாராக வேண்டும். அந்த அறுவடையை எப்படிச் செய்வது என்று சொல்லும்போது, பயிர்களை அரிவாளால் அறுத்து அதை நெல்மணிகளாக ஆக்கும்போது நாம் பயனடைகிறோம்; அந்த அரிவாள் மக்களை அறுக்க பயன்படக் கூடாது. அது மக்களை வாழ்விக்க வேண்டும்.

நாம் குழந்தைகளை, இளைஞர்களை இப்போதே நாம் நமது தொண்டைச் செய்ய, புதிய சமுதாயத்தை உருவாக்க அவர்களைத் தயார் செய்யவேண்டும். பொருளாதாரச் சமத்துவத்தை உருவாக்கி, ஒன்றுபட்டு வாழும் நிலைமைக்கு இந்த நாட்டில், ஐயாவும், அமரர் அண்ணாவும், ராஜாஜியும், காமராஜர் அவர்களும் பாடுபட்டார்கள். அந்தக் கொள்கையை நிறைவேற்றும் அளவுக்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு மகாத்மா காந்தியை நினைத்து இந்த அறப்போரில் வெற்றிபெற்று, எத்தனை தடைகள் இருப்பினும் அவைகளை தகர்த்தெறிந்து நாம் நமது கொள்கையைப் பெற்றாகவேண்டும்.

அதேபோல், நம்முடைய இந்தப் புதிய சமுதாயத் திருத்தத்திற்குப் பொருளாதார அமைப்பை மாற்றி, ஒற்றுமையையும் உழைப்பையும் பயன்படுத்தி வெற்றிபெறும் வகையில் அறவழியில் உருவாக்கிக்கொள்ள வேண்டுமென்று தமிழ்ச் சமுதாயத்து மக்களைக் கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய கடமையைச் செய்யப் பின்வாங்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தாலும், அந்தக் கடமையை செய்யும்போது உங்களுக்குப் பாதுகாப்பு தருகிறவகையில் காவல் துறையும், இராணுவமும் தயாராக இருக்கும். இந்தத் தியாகத்தை செய்யவும், உங்களுக்கு பாதுகாப்புத் தரவும் தயாராக இருக்கிறார்கள். குறைகள் எங்கிருந்தாலும் சுட்டிக்காட்டுங்கள். என்னிடம் இருந்தாலும் சொல்லுங்கள் என்று கூறி, இந்த சுதந்திர நாளில் நாம் சுதந்திர மக்களாக வாழவேண்டுமென்று கூறி, நாம் அத்தகைய முடிவுக்கு வந்து விட்டோம் என்று சொல்லி, புதிய பொருளாதார அமைப்பை, புதிய சமுதாயத்தை அமைப்போம் என்ற உறுதியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் தமிழக மக்கள் அனைவரையும் கை கூப்பி வேண்டிக்கொள்வது எனது கடமையாகும். ஒரு மனதோடு இருங்கள், ஜாதி பேதத்தை ஒழியுங்கள், மத நம்பிக்கையின் பெயரால் நாமே பிளவுபட அனுமதிக்காதீர்கள் என்று உங்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கிட இன்றையதினம் சபதம் ஏற்போம் என்று கூறி, இந்தச் சுதந்திரத்தை நாம் எங்கே இருந்தாலும், காஷ்மீரோ கன்னியாகுமரியோ எங்கிருந்தாலும் ஒன்றாகச் சேர்ந்து பாதுகாப்போம் என்று கூறி, இந்தச் சுதந்திரத்தை எந்தத் தியாகம் செய்தாவது காப்போம், காத்தே தீருவோம் என்ற உறுதிமொழியை எடுத்துக்கொண்டு,

இந்திய சுதந்திரம் வாழ்க ! இந்திய மக்கள் வாழ்க ! தமிழக மக்கள் வாழ்க ! தமிழ்நாடு வாழ்க, அண்ணா நாமம் வாழ்க என்று கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

அண்ணா நாமம் வாழ்க !

(1978ஆம் ஆண்டு, விடுதலை நாளன்று சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் கொடியேற்றி வைத்து ஆற்றிய உரை)



எல்லாரும் எல்லாம்பெற தொண்டாற்றுவோம்!

வணக்கத்திற்குரிய தமிழகப் பெரியோர்களே! அன்புக்குரிய தாய்மார்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புக்களே!

இன்று இந்தியத் துணைக்கண்டத்தின் விடுதலை நாள்!

அந்நிய ஆட்சியின் பிடியிலிருந்து இந்திய நாடு விடுதலை பெற்ற 31ஆவது ஆண்டினைக் குறிக்கும் இந்த நல்ல நாளில் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்த நல்லோர், அதனைப் பாதுகாத்து, நாட்டின் நிலையை உயர்த்திட நாளும் பாடுபடும் அனைவருக்கும் நன்றி, வணக்கம் செலுத்திடும் நல்ல நாளாக இந்நன்னாள் அமைந்துள்ளது.

விடுதலைக்கு வழிகோலிய தியாக மறவர்களுக்கு வீர வணக்கம் செலுத்திடும் இந்நாளில், அந்தத் தியாகிகளால் உருவாக்கப்பட்ட சுதந்திர நாட்டில், தமிழகத்தின் அரசுப் பொறுப்பினை ஏற்று அமரர் பேரறிஞர் அண்ணாவின் கொள்கையினைச் செயலாக்க வாய்ப்பளித்த தமிழக மக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழை, எளிய, உழைக்கும் மக்களின் நல்வாழ்வுக்காகவும், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்கிற வேற்றுமை அகலவும், நாட்டின் உயிர்நாடியாகிய கிராம மக்கள் எல்லா வசதிகளையும் பெற்று நிறைந்த வாழ்வு பெறவும் நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம் என்றும் இந்நன்னாளில் உறுதி கூறுகிறேன்.

சுதந்திரம் என்பது புறத்திலும், அகத்திலும் இருக்க முடியாது. அதே நேரத்தில் புறத்திலும் அகத்திலும் சில கட்டுப்பாடுகள் இருந்தாக வேண்டும். ஒரு மனிதன், அவன் எந்த மொழியைப் பேசுகிறவனாக இருந்த போதிலும், அவன் தன்னுடைய உள்ள உணர்வுகளை வெளியிட, அவற்றை உண்மையாகப் பிரதிபலிக்க உதவுவது அந்தந்த மாநில மொழிதான் என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

இயற்கை வளத்தினை ஒரு மனிதன் தன் வாழ்வுக்காக மட்டும் பயன்படுத்த விரும்பக் கூடாது. இந்த நிலைமை உள்ளத்திலும், புறத்திலும் இருந்தாக வேண்டும். மன

நிறைவு என்பது அந்தந்த மனிதனுடைய அவசியத் தேவைகள், முழுமை பெறுவதால் மட்டும் ஏற்பட்டு விடாது. ஆற்றலும், அறிவும், விஞ்ஞான நுணுக்கத் திறமையும் மனித வாழ்வின் வளத்துக்கு குறிப்பாக எதிர்கால உலகத்திற்கு உத்தரவாதமாகப் பயன்படக்கூடிய நிலைமை உருவாக்கப்படவேண்டும்.

திறமையும், அளவிடற்கரிய அறிவும், ஆற்றலும் ஒருவர் பெற்றிருந்தாலும் கூட, இன்னொருவருடைய உழைப்பு அறிவு கல்வித் திறன் ஆகியவற்றின் உதவியின்றி வாழமுடியாது. அதுபோல் எந்த ஒரு தனி மனிதனும் தனக்காக மட்டுமே உழைப்பது என்று நினைத்தாலும், வாழ்க்கை முறையில் அது பிறருக்குப் பயன்பட்டே தீரும். இதை முழுமையாக உணர்ந்தால், பொது சுதந்திரத்தின் சிறு அங்கம்தான் தனி மனித சுதந்திரம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

தனி மனித சுதந்திரத்தின் மொத்த உருவம்தான் ஒரு நாட்டின் சுதந்திரம், அந்த நாட்டின் சுதந்திரம்தான் அந்த நாட்டு மக்களின் வளமான வாழ்க்கைக்குத் தரும் உத்தரவாதமாகும்!

அனைத்து மக்களின் தியாக உணர்வில்தான் எதிர்காலச் சந்ததிகளின் சுதந்திரம் உறுதி செய்யப்படுகிறது. இதில் சாதியோ – மதமோ, உயர்வோ–தாழ்வோ மற்றும் உழைக்காதவர்–உழைப்பவர், வசதி மிக்கவர்–வசதியற்றவர் என்ற பேதங்களின் இடர்பாடுகள் குறுக்கிட அனுமதிக்காமல் இருப்பதுதான் ஒவ்வொரு தனி மனிதனுடைய கடமையாகும். அந்தக் கடமையை நிறைவேற்றி, இந்தியத் துணை கண்டத்திற்குச் சுதந்திரம் பெற்றுத் தந்த மகாத்மா காந்தி அடிகளையும், அவரைப் பின்தொடர்ந்து இந்திய சுதந்திரத்திற்குத் தியாகம் செய்த அனைவரையும் இந்த நேரத்தில் வாழ்த்தி வணங்குவது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

அரசியலை, ஒரு நாட்டிற்கு விடுதலை வாங்கித் தருவது என்ற நோக்கத்தோடு மட்டுமல்லாமல், சமுதாய அமைப்பிலுள்ள குறைபாடுகளையும், மனித மனத்திலிருந்த தவறான நம்பிக்கைகளையும் போக்கவும் மகாத்மா பாடுபட்டார். நமது நாட்டில் வாழும் மக்களுக்குச் சாதியாலோ–மதத்தாலோ உயர்வு–தாழ்வு கற்பிப்பதை நீக்கி சமத்துவ சுதந்திர உரிமை கிடைப்பதற்கும் ஏழை–பணக்காரர் என்ற நிலையை மாற்றி உழைப்பவர்கள் அனைவரும் நல்வாழ்வு பெறவும் பயன்படுத்தவேண்டுமென்று அய்யா பெரியார், பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் இராஜாஜி போன்ற பெரியவர்கள் உழைத்ததன் பலன் இன்னமும் முழுமை அடையவில்லை.

ஒவ்வொரு மனிதனும் தன்னை ஒழுங்கிற்கும் அதன் வாயிலாக ஒழுக்கத்திற்கும் சொந்தக்காரராக ஆக்கிக் கொள்ளவும் மது, சாதி வெறி, மத வெறி போன்றவற்றின் பிடியிலிருந்து விடுபடவும் மகாத்மாவிலிருந்து இப்போது குறிப்பிடப்பட்ட அனைவரும், அவர்களைப் பிற்பற்றுகிறவர்களும் அக்கறையோடு, இன்னமும் உழைக்கின்றனர்.

மக்களும், குறிப்பாக அரசியல்வாதிகளும் மனத்தூய்மை உள்ளவர்களாகவும் புனிதமானவர்களாகவும் இருந்தாக வேண்டுமென்ற தத்துவத்தைப் பின்பற்ற வேண்டியது நம் ஒவ்வொருவருடைய நீங்காக் கடமையாகும். அதுவே தனி மனித சுதந்திரத்திற்கு அடிப்படை என்பதை இந்த நேரத்தில் நாம் ஒவ்வொருவரும் நினைவுபடுத்திக் கொண்டு, அந்த அறவழியில் ஒருமை உணர்வோடு, ஒன்றுபட்ட மனத்தோடு, ஒய்வில்லா உழைப்பைத் தந்து நாட்டின் சுதந்திரத்தை மட்டுமல்லாமல், தனிமனித சுதந்திரத்தையும், “உழைப்பவரே உயர்ந்தவர்” என்ற பேரறிஞர் அண்ணாவின் தத்துவத்தையும் காப்பாற்றுவோம் என்று இந்தச் சுதந்திர நாளில் நாம் எல்லோரும் உறுதி எடுத்துக் கொள்வோம்.

“ஒன்றே குலம் ஒருவனே தேவன்”

“எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம்”

என்ற உடன்பிறப்புணர்வோடு ஒன்றுபட்டு, அனைத்து மக்களும் சமத்துவத் தகுதியோடு, சமதர்ம உரிமையோடு, நமது நாட்டின் சுதந்திரத்தை நாட்டின் ஒற்றுமையை நமது தமிழ் மொழியைக் காப்போம் என இந்தச் சுதந்திர நாளில் அண்ணா மீது ஆணையிட்டு நமது கடமையை நிறைவேற்ற ஒன்றுபடுவோம்!

வாழ்க இந்திய சுதந்திரம்!

வாழ்க இந்திய மக்கள்!

அண்ணா நாமம் வாழ்க!

(15.08.1978 அன்று, வானொலி – தொலைக்காட்சியில் ஆற்றிய உரை)

அவர் ஒரு சகாப்தம்!

இன்று தமிழக அரசே கலைவாணர் விழாவை நடத்துகிறது என்றால் அதற்குக் காரணம் கலைவாணர் நடந்து காட்டியதுதான். எனது 17ஆவது வயதில் எனக்கு அரசியலை சொல்லித்தந்தவர் கலைவாணர். நாடகக் கம்பெனியில் சமபந்தி போசனத்தை உருவாக்க அரும்பாடுபட்டவர். மனிதன் ஒரு தத்துவத்துக்கு, கொள்கைக்குச் சொந்தக்காரனாக இருக்க வேண்டும்; பிறர் மதிக்கத்தக்க வகையில் அவன் வாழ்ந்தாக வேண்டும். இந்த இரண்டு கொள்கைகளையும் அவர் கற்றுத் தந்தார்.

ஒரு மனிதன் எப்படி வாழக் கூடாது என்பதை வாழ்ந்து காட்டியிருக்கிறார். ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதை சொல்லிக் காட்டியிருக்கிறார். ஒரு விஷயத்தை உங்களிடம் இன்று சொல்கிறேன். கலைவாணர் வாழ விரும்பாமல்தான் நம்மையெல்லாம் விட்டுச் சென்றார். கொடுத்த மாத்திரைகளை எல்லாம் சாப்பிடாமல் அவர் தூக்கி எறிந்துவிட்டார். அந்த அளவுக்கு அவர் வேதனையில் இருந்தார். புகழும் பணமும் நிரந்தரம் என்று சிலர் நடக்கிறார்கள். அந்தக் காலத்தில் கலைவாணர் செய்ததுபோல் தர்மம் யாரும் செய்யவில்லை. கலைவாணர் ஒரு சகாப்தம். ஆனால் அது முடிந்து விட்ட சகாப்தம். இன்று அவர் இருந்திருந்தால் எனக்கு இந்தக் கஷ்டமில்லை. அவர்தான் முதலமைச்சராக இருந்திருப்பார். அவருக்கு நான் உதவியாக இருந்திருப்பேன். தமிழ்ப் பண்புக்கும், தமிழ்க் கலாச்சாரத்துக்கும் தமிழர்கள் எப்படி வாழ வேண்டும் என்பதற்கும் இலக்கணமாக இருந்தவருக்கு மரியாதை காட்டவே இந்த விழா நடத்தப்படுகிறது.

(30.08.1978 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கில்
கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் நினைவு நாள் விழாவில் ஆற்றிய உரை)

எதிர்கால மக்களின் வாழ்வுக்காக இளைஞர்கள் பாடுபடவேண்டும்!

இந்த நாட்டின் எதிர்காலம் இளைஞர்களாகிய உங்களைப் போன்றவர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பொறுப்புடன் நீங்கள் நடக்க வேண்டியவர்கள் என்பதை எப்பொழுதும் மறந்துவிடக்கூடாது.

உங்களுடைய எண்ணங்கள், வேறு எங்கோ இழுத்துச் செல்லப்படுவதற்கு நீங்கள் அனுமதிக்கக்கூடாது. குறிப்பாக எந்த அரசியல் பிரச்சினைகளுக்கும் இடம் கொடுக்காதீர்கள். அரசியல் கட்சிகள் உங்களிடையே தலையிட்டு, அவர்களுக்கு நீங்கள் அடிமையாகக் கூடிய சூழ்நிலையை உருவாக்கி விடாதீர்கள்.

அரசியல்வாதிகளை, உங்களுக்குச் சாதகமாக, உங்கள் நன்மைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமேயன்றி அவர்களுடைய இச்சைகளுக்கு உங்களை நீங்களே பலியிடக்கூடாது.

திறமை வாய்ந்த, ஆசிரியர்கள், பேரறிஞர்கள், நுண்ணறிவாளர்களைப் பின்பற்றிக் கல்வி கற்பதில் அக்கறை செலுத்திட வேண்டுமென்று மிகவும் பரிவுடன் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். 2000 ஆண்டுகளாக வளராமல் இருந்த விஞ்ஞானம், அறிவாற்றல் 20 ஆண்டுகளில் வளர்ந்துள்ளது என்பதை நினைத்துப் பெருமிதம் அடையும்போது, அதற்காக உழைத்த அறிஞர்களை நினைத்துப் பார்த்து, அவர்கள் சென்ற வழியில் தமது கடமையைத் தொடர மாணவர்களாகிய நீங்கள் முன்வரவேண்டும்.

விஞ்ஞானத் துறையில் வழிகாட்டிகளாக இருந்த முன்னோர்களின் கருத்துக்களை உறுதுணையாகக் கொண்டு எதிர்கால மக்களின் வாழ்வு வளம்பெற இளைஞர்கள் பாடுபடவேண்டும். நீங்கள் எந்தெந்தச் சூழ்நிலையில் கல்வி கற்க நேர்ந்தாலும் கல்வி கற்றுத்தரும் ஆசிரியர்களை மதித்து, அவர்களுடன் நீங்களும் ஒத்துழைக்க வேண்டும் ஆசிரியர்கள் அனைவரையும் போற்றி மதித்து நடக்கவேண்டும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சமுதாயத்தில் மறுமலர்ச்சி காண வேண்டும் என்பதற்காக வாழ்நாள் முழுவதும் அயராது பாடுபட்டார். அவரது பெயரால் அமைந்துள்ள ஒரு கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் அண்ணாவின் கொள்கைகளை, அறிவுரைகளைக் கடைபிடித்து நாட்டு முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டும்; உங்களுடைய அறிவும், ஆராய்ச்சித் திறனும் இந்நாட்டிற்குப் பயன்பட வேண்டும்.

(04.09.1978 அன்று, அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக துவக்க விழாவில் ஆற்றிய உரை)

குழந்தைகளின் வளர்ச்சிதான் நாட்டின் எதிர்காலம்

குழந்தைகள் தொடக்கத்தில் எப்படி வளர்க்கப்படுகிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் அவர்கள் வாழ்வு அமைகிறது. அந்தக் குழந்தைகளின் வளர்ச்சியிலிருந்துதான் நாட்டின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது. தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் பண்பட்டவர்களாக வெளிவர வேண்டும். இந்த அமைப்புகள் நிம்மதியாக இயங்க—நிலைமை, சூழ்நிலை சிறப்பாக அமைய எண்ணுவது எங்களது சிறப்பான கடமை ஆகும்.

தமிழக அரசு பாலமந்திருக்குக் கடனாகக் கொடுத்த ரூ.2 இலட்சம், மானியமாக மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அமைப்பு யாரிடமும் கையேந்தாமல் இருக்குமளவிற்கு தமிழக அரசு பார்த்துக் கொள்ளும். எத்தனை கோடி ரூபாய் கல்விக்குச் செலவழித்தாலும் அது நமது சமுதாயத்திற்குச் செய்யும் தொண்டு.

(04.09.1978 அன்று, சென்னை பாலமந்திர் தொடக்கப் பள்ளிக் கட்டடத்தைத் திறந்துவைத்து ஆற்றிய உரை)

தந்தை பெரியார் ஈ.வெ.ரா

தாய்க்குலத்தின் சம உரிமைக்காக வாழ்க்கையைத் தியாகம் செய்தவர்!

பெரியார் தன்மான உணர்வையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தினார். நாடு போற்றக்கூடிய நல்ல பணியைச் செய்தார். பெரியார் அஞ்சல் தலையை வெளியிடுவதால் அவருக்குப் பெயர் புகழ் ஏற்படுமா என்றால், அது இல்லை. ஆனாலும், இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பெரியார், அஞ்சல் தலையை வெளியிடுமாறு மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்தபோது, மத்திய அரசில் இருந்தவர்கள் அதை ஏற்றுக்கொள்ளாமல் தாமதப்படுத்தி வந்தார்கள். ஆனால், இப்போதுள்ள மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்தபோது, பரிசீலனை செய்கிறோம் என்று கூறி சில வாரங்களில் கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்கள். இதற்காக மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசு அய்யாவின் அஞ்சல் தலையை வெளியிடத் தாமதப்படுத்தியதற்குக் காரணம், அய்யா பெயர் சொன்னால் அச்சப்படுகிறவர்கள் தமிழ்நாட்டில் மட்டும் அல்லாமல், இந்தியா முழுவதும் இருக்கிறார்கள். தாழ்ந்த சமுதாயத்தை நிமிர்ந்து நிற்கச் செய்த அய்யாவை நினைத்துப் பார்க்கும்போது அச்சப்பட்டாலும், அஞ்சல் தலையை வெளியிட மத்திய அரசு ஏற்றுக்கொண்டதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அஞ்சல் தலையைப் பார்க்கும்போது என் உள்ளத்தில் தோன்றியது என்னவென்றால்,

100 ஆண்டுகள் கழித்து அந்த அஞ்சல் தலையைப் பார்க்கும் சமுதாயத்தினர் என்ன பேசுவார்கள் என்று சிந்தித்தேன். அய்யாவின் அஞ்சல் தலையை வெளியிட்டது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் 50 இலட்சம் அஞ்சல் தலை வெளியிடப்பட்டுள்ளது. இதைக் காண்பவர்கள் உள்ளத்தில் ரவீந்திரநாத் தாகூர் போன்றுள்ள இவர் யார் என்ற கேள்வி எழாமல் இருக்காது.

பெரியார், சமுதாயப் பணிக்குப் பாடுபட்டார். தாய்குலத்திற்குச் சம உரிமைக்குத் தன் வாழ்நாள் முழுவதும் தியாகம் செய்தார்.

இந்த விழா கொண்டாடுவது என்னைப் பெருமைப்படுத்திக் கொள்வதற்காக அல்ல. பெரியாரின் கொள்கைக்காக இரத்தம் சிந்திய தொண்டர்களுக்கே இந்தப் பெருமையின் பங்கு ஏற்படும். அந்தத் தொண்டர்களுக்கு நன்றி கூறுவது நம் முதல் கடமை. தொண்டர்களுக்கு நன்றி கூறாவிட்டால், அது பெரியாருக்கு நாம் செய்யும் துரோகம்.

(17.09.1978 அன்று, ஈரோட்டில் நடைபெற்ற தந்தை பெரியார் நூற்றாண்டு தொடக்க விழாவில் ஆற்றிய உரை)

தமிழுக்குப் பெருமை சேர்த்தவர்!

செப்டம்பர் மாதம் மிகவும் நல்ல மாதம். நல்லவர்களின் பிறந்த தினங்கள் இந்த மாதத்தில் வருகிறது. பெரியார் பிறந்தது செப்டம்பர் 17இல், அமரர் அண்ணா பிறந்தது செப்டம்பர் 15இல், ராஜா அண்ணாமலை செட்டியார் பிறந்தது செப்டம்பர் 30இல் ஒருவர் அண்ணா. இன்னொருவர் அண்ணாமலை. இடையில் பெரியார். இத்தகைய ஒற்றுமையைக் கண்டு நான் வியக்கிறேன்.

பல்வேறு நாடுகளுக்குச் சென்று அங்குள்ள அரசியல், உழைக்கும் சக்தி, கல்வித்திறன் இவைகளை அறிந்து வந்து தனது ஓயாத உழைப்பு, நியாயமான சேமிப்பு இவைகளால் நல்ல பணிகளைச் செய்து தொண்டாற்றிய பெரியவர் அண்ணாமலை செட்டியார் ஆவார்.

பணம் உள்ள அனைவரும் இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்து விடுவார்களா என்றால் இல்லை.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கல்வியை மட்டும் சொல்லித்தரவில்லை. பல தலைவர்களை குறிப்பாக பல திராவிடரியக்கத் தலைவர்களை உருவாக்கித் தந்திருக்கிறது. நாவலர், அன்பழகன், மதியழகன் போன்ற பலபேர் அங்குதான் உருவாகினார்கள்.

திராவிடரியக்கத்தின் தொடர்ச்சியாக பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டு அவரது வழியில் நான் இன்று முதலமைச்சராக இருப்பதற்கும் அண்ணாமலை செட்டியார் காரணமாகிறார்.

தமிழ் வளர்ச்சிப் பணியில் நகரத்தாருக்கு முக்கியப் பங்கு உண்டு. நகரத்தாரின் பிரதிநிதியாக இருந்து இசைத்தமிழ், தமிழ் இசை என்று மாற்றி அதை ஓர் இயக்கமாகவும் மாற்றி அதற்காகச் சங்கம் கண்டவர் அண்ணாமலைச் செட்டியார்.

தமிழிசையை வளர்க்க அண்ணாமலை அரசர் பாடுபட்டது எனது நினைவுக்கு வருகிறது. சிறுபையனாக இருந்தபோது பத்திரிகைகளில் இதுபற்றி நடந்துவந்த விவாதங்களை எண்ணிப்பார்க்கிறேன். எந்தத் தண்டபாணி தேசிகரை ஒதுக்கி வைத்திருந்தார்களோ அந்த தண்டபாணி தேசிகரை அழைத்துப் பாடவைத்து அவரைப் பெரிய சங்கீத வித்வானாக நாட்டுக்கு அடையாளம் காட்டியவர்.

சிதம்பரம் ஜெயராமன் என்ன தான் பாடும் ஆற்றல் பெற்றிருந்தாலும் அவரைப் பாடச் செய்து விளம்பரம் உள்ளவராக மாற்றியவர் அண்ணாமலை செட்டியார்தான். அப்படி தமிழ் பாடுகிறவர்களுக்குப் பெருமை ஏற்படக் காரணமாயிருந்தவர் அவர்.

அண்ணா நாமம் வாழ்க!

(30.09.1978 அன்று, ராணி சீதை மன்றத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை)

உழைக்கும் வர்க்கம் உயரவேண்டும்
உழைப்பவர் வசதி பெறவேண்டும்!

ஏறத்தாழ ஐந்து வாரகாலம் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த நான், இன்று உங்கள் ஆசியுடனும் உங்கள் அரவணைப்பினால் கிடைத்த உறுதியோடும் திரும்பிவந்து உங்கள் முன் நிற்கிறேன்.

பல்வேறு நாடுகளில் அறிஞர்களையும், அதிகாரிகளையும், பொதுமக்களையும் சந்திக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அமெரிக்க அரசாங்கத்தின் சார்பில் அழைப்பு விடுத்த பிரதிநிதிகளையும் இந்தியாவிலுள்ள, குறிப்பாக சென்னையிலுள்ள தூதுவர்களையும், அவர்கள் எடுத்த அக்கறை, செயல்பட்டவிதம் குறித்தும் தமிழக அரசின் சார்பில் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு நாடுகளுக்குச் சென்று ஐந்துவார காலமாக நான்பெற்ற அனுபவத்தைத் தமிழகத்தின் எதிர்கால நலனுக்காக எந்தெந்த வகைகளில் பயன்படுத்த முடியுமோ அந்தந்த வகைகளில் பயன்படுத்திக்கொள்வேன்.

அந்தப் பொறுப்பைத் தமிழக மக்களின் பிரதிநிதியாக உள்ள அனைத்திந்திய அண்ணா தி.மு.கழக அரசு ஏற்றிருக்கிறது. இந்த வகையில் அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகத்தின் பிரதிநிதியாகவும், தமிழக அரசின் முதலமைச்சர் என்கிற பொறுப்பிலும், அண்ணாவின் தம்பி என்கிற நல்ல நம்பிக்கையோடும் தமிழக மக்களுக்கு நான் சொல்லும் செய்தி இதுதான், தமிழகம் எதிர்காலத்தில் உழைத்து வருகின்ற மக்களுக்கு சொந்தமாக்கப்பட வேண்டும்.

தொழிலாளர்கள், உழைக்கும் வர்க்கம் உயரவேண்டும். இந்த நாட்டில் உழைப்பவர் வசதிபெற வேண்டும். உரிமை பெறவேண்டும் அந்த நாள்தான் இந்த நாட்டின் உண்மையான சுதந்திர நாள் என்று பேரறிஞர் அண்ணா சொன்னதை இங்கு நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை வாயளவில் சொல்லாமல் செயளலவில் செய்து இந்த நாட்டையும், தமிழகத்தையும், உயர்த்த என்னென்ன திட்டங்கள் தேவைப்படுகிறதோ, அதற்கு வெளிநாடுகளிலிருந்து நான் பெற்ற அனுபவத்தை தக்க நேரத்தில் பயன்படுத்துவேன் என்று அண்ணாவின் சிலை முன் நின்று உறுதி கூறுகிறேன்.

18 மாதங்களுக்கு முன்பு பதவி ஏற்றபோது மக்களுக்கு அளித்த வாக்குறுதியில் நாங்கள் சொன்னதைச் செய்ய முடியாமல் போகும்போது, எங்கள் பதவியைத் தூக்கியெறிந்துவிட்டு மக்களோடு மக்களாக வந்து நிற்போம் என்பதை இங்கே மீண்டும் உறுதிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இளைஞர்கள் எதிர்காலத்தில் எதிர்பார்த்துக் காத்திருக்கும் பொறுப்புகளைப் பெற்றாகவேண்டும். அதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் மாபெரும் பொறுப்பு நமக்கு உண்டு.

உழைப்பவர்களே உயர்ந்தவர்கள் என்ற தத்துவத்தைத் தமிழகத்தில் உருவாக்கிக் காட்டுவோம் என்று உறுதி கூறுகிறேன். நான் வெளிநாட்டிற்குச் சென்றிருந்தபோது போராட்டங்கள், கலவரங்கள் இல்லாமல் தமிழகத்தில் அமைதி நிலவ வழிவகுத்த அரசியல் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தலைமைச் செயலாளர் அவர்களுக்கும் மற்றும் அனைத்துத்துறை அமைச்சர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கடமையைச் செய்வதில் கண்ணியத்தோடும், பொறுப்போடும் கட்டுப்பாட்டோடும், பொறுப்புணர்வோடும் நடந்துகொள்ளவேண்டும். எதிர்காலத்தில் அனைவரும் உழைத்துத்தான் பிழைக்க வேண்டிய மக்களாக வேண்டும். நான் சென்ற மேலைநாடுகளில் வேலைக்கு ஆள் இல்லை என்கிறார்கள். இங்கே ஆளுக்கு வேலை இல்லை. இந்த நிலையை மாற்றிக் காட்டுவோம். அதற்காகப் பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துவது எதிர்காலக்கடமை என்பதை உணர்ந்து செயல்படுவோம். அந்த வகையில் நாங்கள் செய்யும் முயற்சிகளுக்கு உங்களுடைய ஒத்துழைப்பைத் தரவேண்டும்.

அண்ணா நாமம் வாழ்க!

(09.12.1978 அன்று, அமெரிக்கா சென்று தாயகம் திரும்பிய போது ஆற்றிய உரை)

இசையச் செய்யும் இசை!

சென்னை இசைக் கழகத்தின் தலைவர் அவர்களே! நிர்வாகிகளே! இங்குக் கூடியுள்ள இசை வல்லுநர்களே!

இசையை வளர்ப்பதில் பேரார்வம் கொண்டு ஆதரவு நல்கும் பெரியோர்களே! தாய்க்குலமே! விருப்பு வெறுப்பின்றி இசைப் பேரறிஞர்களுக்கும் மக்களுக்கும் இடையில் நல்லதொரு தொடர்பேற்படுத்த அயராது உழைக்கும் இசைத் திறனாய்வாளர்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கங்களைக் காணிக்கையாக்குகிறேன்.

இசைக் கலைக்கு தொண்டு செய்யும் விற்பன்னர்களும் இசைக் கலையை இல்லத்தில் வளர்க்கும் தாய்மார்களும் நல்ல இசையை ரசனையுடன் பாராட்டிப்போற்றும் பெரியோர்களும் இங்கு இசை விழாவைத் தொடங்கி வைக்கக் கூடியிருக்கிறீர்கள். இத்தகைய மேலோர் குழுமிய அவையில் நிகழவிருக்கும் இசை விழாவைத் தொடங்கி வைக்குமாறு என்னை அழைத்திருக்கிறார்கள். ஆனால் இந்த விழாவைத் தொடங்கி வைப்பது உண்மையில் நானல்ல; நீங்கள்தான்!

இறைவனின் தேரை இழுப்பதற்காக, அவ்வூர் மரபுப்படி குறிப்பிட்ட ஒருவரையோ அல்லது அமைச்சர் ஒருவரையோ அழைப்பார்கள். அவரும் தேரின் வடத்தைத் தொடுவார். அதை ஒருவர் தூக்குவதுகூட எளிதல்ல. ஊர் மக்கள் ஒன்று கூடித் தேரை இழுத்து, ஊர்வலம் சுற்றி மீண்டும் தேரை நிலைக்குக் கொண்டு வருவார்கள். ஆனால் ஏடுகளிலே வெளிவரும், "அமைச்சர் அல்லது ஒரு பிரமுகர் தேரை இழுத்தார்" என்று. அதுபோல உங்களில் ஒருவனாக, இசையை, இசை மேதைகளை ஆராதிக்கும் முதற்தொண்டனாக, இந்தப்பணியில் ஈடுபட வாய்ப்பளித்துள்ளீர்கள். தமிழகத்தின் முதல்வர் என்பதற்காக அல்லாது, இசை, இசையோடு தொடர்பு கொண்ட நாடகம், மற்றும் நுண்கலைகள் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்ட ஒரு ரசிகன் என்ற முறையிலும் இந்த உயர்வு எனக்கு அளிக்கப்பட்டிருப்பதாகவே நான் கருதுகிறேன்.

இந்த இசைக் கழகம் பொன்விழாச் சிறப்பு பெற்று இப்பொழுது 52ஆவது விழாவை எட்டியிருக்கிறது. 52 என்ற எண்ணின் கூட்டுத் தொகை ஏழு. இசை, ஏழு ஸ்வரங்களில் உண்டாவது. ஆகையால் இந்த விழா இசையோடு எவ்வளவு நயமாக ஒட்டியிருக்கிறது என்பதை இதிலேயே உணர்ந்து நான் ரசிக்கிறேன். "ஏழிசையாய் – இசைப் பயனாய் நின்றவன்"என்று நம் முன்னோர்கள் வழிபாட்டில் கூறியுள்ளார்கள். அந்த ஏழு இங்கேயும் இருக்கிறது. நாத உபாசனை என்பார்கள் பெரியோர்கள். இசை மூலமாக இறைவழிபாடு செய்வது என்று அதற்குப் பொருள்.

இறைவழிபாடு என்றால் இறைமைக் குணங்களை கைக்கொண்டு வழிப்படுதல் என்றும் பொருள் கொள்ளலாம். மனிதன் மனிதனாக வாழ்ந்தால் அவன் கடவுளின்

வாரிசாகக் கருதப்படுவான். அந்த மனிதத் தன்மையை அடைவதற்குத் தன்னைப் போல் பிறரை நினைக்கும் குணம் தேவை. எல்லாம் ஒன்று என்ற எண்ணம் உண்டாக வேண்டும். இசை ஒன்றுதான் "ஒன்ற" வைக்கும் ஆற்றல் கொண்டது. பாடுகின்றவர் சுருதியோடு ஒன்றும் போது, மற்றவர்கள் அவரோடு ஒன்றிவிடுகிறார்கள். சுருதி கொஞ்சம் கலைந்தால்கூட ஒன்றுகிற நிலை கலைந்துவிடும். உருகிப் பாடும்போது கண்களில் நீர் மல்குவதைக் காண்கிறோம். இது தனக்காக உகுக்கும் கண்ணீரல்ல. மற்றவருக்காக மற்றவரின் மனத்தில் நிலையான ஆனந்தத்தை ஏற்படுத்த உகுக்கின்ற கண்ணீர்!

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி"

என்ற செய்யுள் வரியை நாம் கேட்டிருக்கிறோம். கண்ணனைக் காதலனாக–சேவகனாக–சற்குருவாக–சீடனாக–காதலியாகக் கூட பாவித்துப் பாடினார்கள். அந்த பாவம் ஐக்கியமடைந்த ஆன்மாவின் புனித சங்கமத்தில் உருவாகும் உன்னத நிலை. நாத உபாசனை (இசை வழிபாடு) இருக்கிறதே, இதில் எந்த விதமான பேதத்திற்கும் இடம் கிடையாது. மனம் உள்ளவர்களின் மனங்களையெல்லாம் ஈர்க்கும் ஆற்றல், அதாவது இசையவைக்கும் சக்தி கொண்டது அந்த இசை.

நாத உபாசனை என்று சொல்வதோடு–
"நாதயோகம்" என்றும் சொல்வார்கள்.
"பூதங்கள் ஒத்துப் புதுமை தரல் விந்தையெனில் நாதங்கள் சேரும்
நயத்தினுக்கு ஈடாமோ." என்றார் பாரதியார்.

நாதங்கள் சேரும் நயம் தான் நாத யோகம். அத்தகைய புனிதமான பேரானந்த மண்டலத்திற்கு நம்மை அழைத்துப் போகும் நல்லிசை– மரபுவழி இசையாகும்; அதாவது கருநாடக சங்கீதமாகும். பொதுவாக–இசை நம்முடைய தமிழ்க் குடும்பங்களில் ஒன்றிப் போன ஓர் அம்சம் ஆகும். சின்னஞ் சிறு குழந்தையைத் தூங்கவைக்க, தாய் குழந்தையைத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டுப்பாடுவது வழக்கம்.

அம்மானை ஆடுவதற்கு ஒருவகைப் பாட்டு–இசையும்; பந்தாடுவதற்கு இன்னோரு வகைப்பாட்டு இசையும் இருந்தன. காவடியாட்டத்திற்கும் இறை வழிபாட்டுக்கும் சந்தமும் உருக்கமும் கொண்ட இசையை நம்முடைய தமிழ்க் குடும்பங்களில் பின்பற்றினார்கள்.

அக்கால இலக்கியத்தைப் பார்த்தாலும் இசையினுடைய முக்கியத்துவம் நமக்குப் புலப்படுகிறது. அன்று வாழ்ந்த பாணர்கள் மன்னர்களைக்கண்டு யாழ் மீட்டி, இசை பாடித் தம் திறமைக்கு ஏற்ப அன்பளிப்பாகப் பொன்னும் மணியும் பெற்று வீடு திரும்புவார்களாம்.

வழியிலே பாலை நிலங்கள், காடுகள், ஆகியவற்றைக் கடந்து வரும்போது–அவர்களைக் கள்ளர்கள் வழிமறித்துக் கொள்ளையடிக்க முயலுவார்களாம். அந்தப்

பாணர்கள் இனிமையான பாடல்களைப் பாடி, அந்தக் கள்ளர்களையும், மயக்கி, அவர்களிடமிருந்து தப்பித்துச் சென்று விடுவார்களாம்.

கோவில்களில் மங்கல விழாக்களில் நாதசுரம் இசைப்பது தமிழர்களுடைய வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. இந்த நாதசுரம் மங்கல விழாவுக்கே உரியது.

மங்கல இசைக்கு என்று தனியாகவும், மற்றைய நிலையை வெளிப்படுத்த வேறு வகையாகவும் வாத்தியங்களை வகுத்துக் கையாண்டவர்கள் நம் மூதாதையர்கள்.

அக்காலத்திலிருந்து நாட்டியம் தனிச் சிறப்புப் பெற்று வந்திருக்கிறது! இசை, காதால் கேட்டு அனுபவிப்பது, நாட்டியமோ கண்ணால் பார்த்தும் காதால் கேட்டும் அனுபவிப்பது!

தமிழ் நூலான சிலப்பதிகாரத்தில் இசையையும் நாட்டியத்தையும் பற்றிய எண்ணற்ற விசேடக் குறிப்புகள் கூறப்பட்டுள்ளன. நாட்டியம் மகேசனைத் தொழுவதற்கும் மன்னர்களை மகிழ்விப்பதற்கும் பயன்பட்டது. நாட்டியமாடுவதற்கென்றே ஒரு பகுதியினர் இருந்த காலம் அது, பிற்காலத்தில் அந்த அற்புதக் கலை எல்லோருக்கும் பொதுவாகப் பரவி, இன்னார் தான் ஆடவேண்டும் என்ற நிலை மாறி, ஆடற்கலையில் வல்லவர்களாக எல்லோருமே ஆகலாம் என்ற அளவுக்கு, விரிவடைந்திருக்கிறது.

ஏன் அப்படி!...

காதில் இன்பத் தேனைப் பாய்ச்சுகிறது இசை! அந்த இசையின் ஒலி இதயத்தில் எதிரொலிக்கிறது!

அதோடு உடல் முழுவதும் பரவுகிறது. ஒவ்வொரு நரம்பையும் தட்டி எழுப்புகிறது!

பரவசம் ஊட்டுகிற ஓர் அபூர்வ மின் சக்தியாகி, நம்முடைய உடலின் ஒவ்வோர் அணுவையும் தீண்டி, ஒருவிதப் புதுமைக் கிளர்ச்சியை—மலர்ச்சியை— நெகிழ்ச்சியை— பூரிப்பை உண்டாக்கி விடுகிறது. நம்மிடமுள்ள எல்லாவற்றையுமே தன்வசப்படுத்திக் கொண்டு விடுகிறது.

சோர்வு உற்சாகமாகிறது.
கவலை களிப்பாக மாறுகிறது.
கோபம் சாந்தமாகிறது.
பகைமை நட்பாகிறது.
ஆழ்வார் பாசுரங்களில் ஒன்று நினைவுக்கு வருகிறது.

“கோவிந்தன் குழல் ஊதின போது
மட மயில்களோடு மான்பிணை போல
மங்கைமார்கள் மலர்க் கூந்தல் அவிழ,
உடைநெகிழ, ஓர் கையால் துகில் பற்றி
ஒல்கி, ஓடரிக்கண் ஓட நின்றனரே!”

என்று பாடுகிறார். குழலின் மெல்லோசை தருகின்ற பரவச நிலையை இப்படிச் சுவை ததும்ப வருணிக்கிறார் ஆழ்வார்.

“பாராகிப் பண்ணாகிப்

பாடலாகிப் பரஞ்சுடராய்”

என்று பாடுகிறார் நாவுக்கரசர்.

“நாதமே முக்கலை—நாதம் மூவெழுத்து

நாதமே முக்குணம்—நாதமே முப்பொருள்

நாதம் மூவுலகாகி விரிந்து—

நாதமாம் பரத்தில் லயித்தது பாரே.

நாதம் பரத்தில் லயித்திடும் அதனால்

நாதம் அறிந்திடப் பரமும் அறியலாம்”

இது ஓர் அகவல் பாடல்.

மேற்சொன்னவாறு மூன்று மூன்றாக விவரிக்கப்பட்ட இந்த நாதத்தின் மும்மூர்த்திகளாத் திகழ்ந்தவர்கள் தியாகராசர், தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகிய மூவரும் ஆவார்கள். இவர்கள் மூவருமே ஆரூரைச் சார்ந்தவர்கள். ஆனாலும் ஓரூரைச் சேர்ந்தவர்கள் அல்லர். இந்தியத் துணைக்கண்டம் முழுவதற்கும், உலகத்தில் இசையை ரசிக்கின்றோர் வாழ்கின்ற அத்தனை இடங்களுக்கும் சொந்தமானவர்கள் இவர்கள். அறிவியல் துறையிலே மிக உயர்ந்து நிற்கும் அமெரிக்கா போன்ற நாடுகளில்கூட, நமது இசைக் கலைஞர்கள் நமது கருநாடக இசையை முழக்கிப் புகழ்பெற்றுத் திரும்புகிறார்கள். இசையரசி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் அண்ணல் காந்தியடிகளின் உள்ளத்தை உருகவைத்ததையும். ஐக்கிய நாடுகள் சபையிலே பலநாட்டு மக்களின் ரசனையையும் ஒன்றுபடுத்தி, அவர்களால் புகழப்பட்டதையும், நாம் அறிவோம்! நம் இசை நாடு கடந்த, கடல் கடந்த ஒரு கலையாகும். அது போலவே, காலம் கடந்தும் நிலைத்து நிற்பதாகும்.

இசையாகிய தேனைப் பருகுவதற்கு அடிப்படை வடிவம். அந்த வடிவத்தைக் கீர்த்தனைகளாக்கி வழங்கிய மேலோர்கள் இந்த மும்மூர்த்திகள். முற்காலத் தமிழக சிறப்புக்கும், பண்பாட்டு மேன்மைக்கும், சேர, சோழ, பாண்டியர்களாகிய மூவேந்தர்கள் காரணமாக இருந்தது போல, பழம்பெரும் கருநாடக இசையின் மேம்பாட்டுக்கும் வளர்ச்சிக்கும் இந்த இசை— மூவேந்தர்கள் அடித்தளம் அமைத்துத் தந்திருக்கிறார்கள். ஆனால், இவர்களின் பாடல்கள் வடமொழியிலும் தெலுங்கு மொழியிலும் அமைந்திருக்கின்றன. அவற்றைக் கேட்கும் போது மனம் உருகினாலும். அந்த உருக்கம் அவற்றின் பொருளையும் நாம் அறிந்து கொள்ளும்போது இன்னும் அதிகமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

“தமிழ்த் தியாகய்யா” என்று போற்றப்படும் பாபநாசம் சிவன், அரிகேசநல்லூர் முத்தையா பாகவதர், கோபாலகிருஷ்ண பாரதியார், முத்துத்தாண்டவர் முதலானவர்களின் பாடல்களைப் பாடக் கேட்கும் போது, இசையின் இனிமையோடு, பொருளையும் சுவைக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

சிலர், தமிழில் இந்த இசைப்பாடல்கள் அமைந்தால் அவற்றின் சிறப்பு குன்றிவிடுமோ என அய்யப்படுகிறார்கள். தமிழ் மொழி எந்த மொழிக்கும் புனிதத்தில் குறைந்ததில்லை. நம் தமிழகத்தில் பிறந்து, தமிழிலேயே பாசுரங்கள் இயற்றிய பன்னிரு ஆழ்வார்கள் வழங்கியுள்ள தேவாரத்திற்கும் தனிப்பட்ட சிறப்பும் பெருமையும் உண்டு என்று தெய்வத்தொண்டில் ஈடுபட்ட ஆன்றோர்களும் கூறியுள்ளார்கள்.

“செந்திறத்த தமிழோசை வட சொல்லாகி என்கையாலே, தமிழ் மறைகளும் மிகமிகத் தொன்மையானவை. வடமொழி மறை ஒன்று சமஸ்கிருத வேதத்தைச் சொல்வது, தமிழ் மறைகள் என்றென்றும் உண்டு என்று நினைத்தே தான் சொல்லப்படுகிறது. நான்கு வேதங்களுக்கு ஆறு அங்கங்கள், எட்டு உபாங்கங்கள் இருப்பதுபோல, நம்மாழ்வார் பணித்த தமிழ் மறைக்குத் திருமங்கையாழ்வார் பாடியருளிய ஆறு அங்கங்களும் மற்றைய எட்டு ஆழ்வார்கள் பாடிய பிரபந்தங்களும் அமைந்திருக்கும்” என்று, சிறப்பு மிகுந்த எம்பார் விஜயராகவாச்சாரியார் கூறியிருக்கிறார்.

இசை, மொழியைக் கடந்தது என்றாலும், சொந்த மொழியில் பாடல்கள் அழகாகப் பாடப்படும் போது அவற்றின் பொருளையும் சேர்த்து அனுபவிக்க முடிவதால், இனிமை – ரசனை அதிகமாகிறது. கீர்த்தனைகள் ஆனாலும், பாடல்களானாலும் சொற்களுடைய அழகும், பாவமும் தெரியும்படியாகப் பாடவேண்டும். ஒரு சில இசைப் பேரறிஞர்கள் உணர்ச்சிவசப்பட்டு பாடும் போது சொற்கள் உருவிழந்து போகின்றன என்பது, ரசிகர்கள் பலரும் சொல்லிக்கொள்ளும் குறையாகும். ஆனால், தமிழ்ப்பாடல்களையும் கீர்த்தனைகளையும். சொற்களுடைய அழகு சிறிதும் குறையாமல் நயமாகத் திருமதி கே. பி. சுந்தராம்பாள். திருமதி டி. கே. பட்டம்மாள் முதலானவர்கள் பாடக் கேட்டு ரசித்திருக்கிறேன்.

இந்த விழாவிலே பாராட்டப் பெறும் டாக்டர் பால முரளி கிருஷ்ணா அவர்கள்கூட, தெலுங்கிலே கீர்த்தனைகளை இவ்வாறு அழகுடன் பாடுவதை நான் பலமுறை கேட்டு அனுபவித்திருக்கிறேன். ரசித்து மகிழாதவர் இல்லை.

இசை, மொழிக்கு அழகு தருவது மட்டுமல்லாமல், அதனுடைய வளர்ச்சிக்கும் உதவ வேண்டும் என்பதே என் ஆசை. மதுரையிலே தமிழ் வளர்க்கும் பல்கலைக்கழகத்தில் இசை ஆராய்ச்சிக்கும் ஒரு பகுதியை நிறுவியிருப்பது, இத்தகைய ஆர்வத்தினால்தான் என்று இங்கே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

“நாதப்பிரும்மம்” என்பார்கள். இதிலிருந்து அதற்குண்டான தனி மதிப்பை நாம் அறிய முடியும். ஓசையை உண்டாக்கும் சக்திதான் காற்று. வசந்த காலத்திலும் காற்று வீசுகிறது. கடல் குமுறிக் கொந்தளித்தும் காற்று வீசுகிறது. முன்னதற்குத்தான் தென்றல் என்று பெயர். பின்னதற்குப் பெயர் புயல் அல்லவா!

ஸ்வரம், சுருதி, ராகம் இவை மூன்றும் நாதத்தின்– அதாவது ஓசையின் நல்லிசைக்குரிய ஜீவ அம்சங்கள். ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் இவை ஏழும் இசையின் ஸ்வரங்கள். இந்த ஏழையும் தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

தேவாரம், திருவாய்மொழிப் பாடல்களுக்குப் பல வகையான பண்கள் உள்ளன. அந்தப் பண்களுக்கு ஏற்ற இராகங்களை ஆராய்ந்து வருகிறார்கள்.

எடுத்துக்காட்டாகச் சிலவற்றைச் சொல்லலாம். தமிழில் உள்ள பண்ணான நட்டபாடைக்குரிய இராகம் நாட்டை.

இந்தளம் – மாளவ கௌளை
தக்கேசி – காம்போதி
கௌசிகம்– பைரவி
குறிஞ்சி – அரிகாம்போதி

இந்தப் பண் ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று விரைவில் எல்லாப் பண்களுக்கும் உரிய இராகங்களை அறியும் வாய்ப்பு ஏற்படக்கூடும் என்று தெரிகிறது.

தமிழ்நாட்டுக்கு என்று ஒரு பண்பு இருக்கிறது. அதே போல கருநாடக இசைக்கும் ஒரு பண்பு இருக்கிறது.

தமிழ்மறையான திருக்குறளில் கூறப்பட்டுள்ள நீதி முறைகள் எல்லாமே தமிழ்ப் பண்புகள்! அன்புடைமை, அருளுடைமை, அடக்கமுடைமை, வாய்மை இப்படி எத்தனையோ பண்புகள்.

அவ்வாறே, கருநாடக இசைக்கும் பல இலக்கணங்கள் உண்டு. மனித இலக்கணம் போல, இசைக்கும் இலக்கணம் இருக்கிறது. குறிப்பிட்ட கட்டுக்கோப்பைத் தாண்டக் கூடாது என்று வரம்பு உண்டு. சுதியோடு சேர்ந்து பாடவேண்டிய அவசியம் உண்டு தாளம் தவறக்கூடாது. இப்படிப்பட்ட விதிகள் ஏராளம். அவை அனைத்தையும் அறிந்து, தெளிந்து முறைப்படி கடைப்பிடிக்கவேண்டும். ஆதலால் இதற்கு மிகவும் 'சாதகம்' தேவை அதாவது பயிற்சி வேண்டும். பயிற்சியில் முதிர்ச்சி பெறுவதற்குப் பொறுமை வேண்டும். ஆர்வமும் ஈடுபாடும் அசைவிலாத ஊக்கமும், அனைத்துக்கும் மேலாக ஒரு பக்தியும் வேண்டும்.

ராகங்களுக்கு எத்தனையோ பெயர்கள் இருக்கின்றன. அவற்றில் பெரும்பாலானவைக்கு மாதர் திலகங்களின் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள்.

கல்யாணி–பைரவி
நீலாம்பரி– ஜகன்மோகினி

வசந்தா இப்படிப் பலப்பல. இதற்கு என்ன காரணமாக இருக்கும்!

'விண்' என்ற உத்தரத்தில், அன்பு என்கிற தாம்பு இட்டு, 'மண்' என்ற தொட்டிலிட்டு, 'கண்வளராய்' என்று கனிவோடும் கருணையோடும், அக்கறையோடும்

ஆர்வத்தோடும், அன்போடும் அரவணைப்போடும் ‘இன்னிசை’என்றும் செல்வச் சேயைத் தாலாட்டிச் சீராட்டும் தாய்க்குலத்தினர் அல்லவா அவர்கள்!

அதனால் தான் பெரும்பாலான இராகங்களின் பெயர்களில் அவர்கள் கொலுவிருக்கிறார்கள்.

பாட்டோடு பண் இணைய வேண்டும். இது மிகவும் முக்கியமாகும். திருவள்ளுவர் இதை ஆணித்தரமாகக் குறிப்பிடுகிறார்:

“ பண் என்னாம் பாடற்(கு) இயைபின்றேல் கண் என்னாம்

கண்ணோட்டம் இல்லாத கண்!” என்கிறார்.

தாட்சண்யம் என்பார்களே, அது இல்லாதபோது, கண் இருந்தும் பயனில்லை என்ற கருத்தைச் சொல்லவந்தவர், உவமையாகப் பண் பற்றிச் சொல்லுகிறார். “பாடலோடு இணையாவிட்டால் பண் என்ன ஆகும்?” என்று கேட்கிறார்.

நம்முடைய அன்றாட வாழ்க்கையிலே ‘டென்ஷன்’ எனப்படும் உணர்ச்சி வேகம் நிறைய இருக்கிறது. எல்லாத் துறைகளிலுமே பொறுப்புள்ளவர்களுக்குப் பொதுவாக ஏற்படும் பரபரப்பு நிலை இது!

இப்படிப் பரபரப்பான நிலை உண்டாவதால் உடல் நிலை பாதிக்கப்படும் என்றும், மனத்தை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் டாக்டர்கள் சொல்வதுண்டு. இதற்கு ஒரு வரப் பிரசாதம் போன்றதுதான் இன்னிசை.

“துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா”

என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடியிருக்கிறார். “இயற்றியிருக்கிறார்” என்று நான் சொல்லவில்லை. அது செய்யுளாக மட்டுமாக இருந்தால் அப்படிச் சொல்லலாம். இசையோடும் இணைந்திருப்பதால் ‘பாடியிருக்கிறார்’ என்று குறிப்பிட்டேன்.

தமிழிலே மாபொரும் கவிஞர்கள் பல கவிதைகளை இயற்றியிருக்கிறார்கள். அவர்களின் கவிதைகள் இசையுடன் பாடப்படும் போதுதான் உயிர் பெற்று உலவும் நிலை பிறக்கிறது.

நந்தனார் கீர்த்தனையை அனுபவிக்கிறோம். மாபெரும் கவிஞரான கோபால கிருஷ்ண பாராதியார் சுடர்விட்டுத் திகழ்கிறார்.

‘சின்னஞ் சிறு கிளியே’என்ற கவிதை இசையோடு ஒலிக்கிறது–மகாகவி பாராதியார் ஒளி வீசுகிறார்.

“தமிழுக்கு அமுதென்று பேர்!”–இசையோடு ஒலிக்கிறது–பாவேந்தர் காட்சி அளிக்கிறார்.

தத்துவப் பாடல் ஒன்று, பாடப்படுகிறது. மாயூரம் வேதநாயகம் பிள்ளை நம்முன்னே காட்சி அளிக்கிறார்!

இப்படி, கவிஞர்களின் படைப்புகள் இசையோடு கலக்கும் போது, அவற்றிற்கும் அவற்றைப் படைத்தவர்களுக்கும் புகழ் உண்டாகிறது.

“ ஆன்ம வெளியில் மூழ்கித் திளைப்போர்க்கு

அச்ச முண்டோடா! மனமே!

தேன்மடை இங்கே திறந்தது கண்டு

தேக்கித் திரிவமடா!”

என்கிறார் பாரதியார்.

“தேன்மடை திறந்து விட்டது, தேக்கி மகிழ்ந்து ஆடுவோம்” என்றால், என்ன தேன் அது! இசைத் தேன்! இனிமை மயமான சங்கீதத் தேன் அது!

நான் எனது மிகச் சிறிய பிராயத்திலேயே இசைக்கு முக்கியத்துவம் கொடுத்த நாடகக் கம்பெனியில், என்னுடைய வாழ்க்கையைத் தொடங்கியவன். அந்தக்காலத்தில் நாடகம் என்றால் வள்ளித் திருமணம், சம்பூர்ண இராமாயணம், மகாபாரதம், சத்தியவான் சாவித்திரி, நந்தனார் என்பவை போன்ற இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நாடகங்களாகத்தான் இருக்கும். மேடையிலே எஸ்.ஜி. கிட்டப்பா, கே.பி. சுந்தராம்பாள், சுப்பையா பாகவதர் போன்றவர்கள் அற்புதமான பாடல்களை விரிவாகப் பாடி மக்களைக் கவர்வது வழக்கம். புகழ்பெற்ற நாடகங்கள் எல்லாம் இசைக்கு முதலிடம் தரும் நாடகங்களாகத்தான் இருக்கும். என்னுடைய ‘தொழில் வாழ்க்கை’யை நாடகக் கம்பெனிகள் மூலம் தொடங்கியதால் எனக்கும் இளம்பிராயத்திலிருந்தே இசையை ரசிப்பதில் அளவற்ற ஆர்வம் இயல்பாகவும், சூழ்நிலை உதவியாலும் எற்பட்டிருந்தது; இசையில் பாண்டித்யம் இல்லாவிட்டாலும், நான் இசையை ரசிப்பதன் மூலம் அமைதியைப் பெற விரும்புகிறேன்.

உண்மையிலேயே கருநாடக இசையின் அடிப்படையில் அமைந்த அழகான சுத்தமான பாடல்களை, படங்களில் அமைக்கச் செய்து நான் ரசித்து அனுபவித்து வந்திருக்கிறேன். கருநாடக இசை பின்னுக்குப் போய் விட்டது என்றும், மெல்லிசை என்ற பெயரில் மலிவான இலக்கணச் சுத்தமில்லாத பாட்டுக்கள் புகழ் பெற்று விட்டன என்றும் பலரும் இன்று குறை சொல்லுகிறார்கள். ஆனால், எனக்குத் தெரியும், ஒரு காலத்தில் பல திரைப்படங்கள் வெற்றியடைந்ததற்கு அவற்றினுடைய கருநாடக இசை மரபின்படி அமைக்கப்பட்ட பாட்டுக்களே காரணம் ஆகும் என்பது; இன்றும் நம்மில் பலர், பாபநாசம் சிவனின் பாட்டுக்களைத் தியாகராஜபாகவதர் திரைப்படங்களிலே பாடியதை, எவ்வளவு ரசனையோடு கேட்டு மகிழ்கிறோம் என்பது எனக்குத்தெரியும்.

இன்று திரைப்படங்களிலும் அத்தகைய நல்ல இசை இடம் பெறுவதற்கு அடிப்படையான ஆர்வமும் எண்ணமும் கொண்டு, திரைப்பட இசை இயக்குநர்கள்

சிலர் அம்முயற்சியை மேற்கொண்டு வருகிறார்கள். இந்த இடத்தில் ஒரு செய்தியைக் குறிப்பிட விரும்புகின்றேன். மேலை நாடுகளிலும் கூட இந்தப் பிரச்சினை இருக்கின்றது. 'வெஸ்டர்ன் கிளாசிக்கல் மியூசிக்' என்ற இசையின்பால் மக்களுக்கு உள்ள விருப்பம் குறைந்து 'பாப் மியூசிக்' போன்ற நாகரிக இசையில் மக்கள் அதிகமாகக் கவனம் செலுத்துகிறார்கள் என்ற குறையை அறிஞர்கள் தெரிவிக்கின்றார்கள். அதே போல இன்று நம்முடைய குடும்பங்களிலும் இசைக்கு உள்ள ரசனை, ஓரளவு மாறுபட்டிருக்கின்றது. இதை நாம் எச்சரிக்கையோடு கவனித்தாக வேண்டும்.

எந்த ஒரு கலையும் ஆற்றின் நீரோட்டம் போல ஓடிக்கொண்டிருக்க வேண்டும். தேங்கிப் போனால் அதனுடைய அழகும், இனிமையும் குறைந்து போய்விடும். இந்தக் கருத்து இசைக்கும் பொருந்தும். நம்முடைய மக்கள் துரிதமான வாழ்க்கையை மேற்கொண்டு வருகிறார்கள். நிதானமாகவும், நீண்டநேரம் கவனம் செலுத்தியும் நுட்பமாகவும் கலைகளை ரசிக்க அவர்களுக்குப் பொழுது இருப்பதில்லை. ஒரு காலத்தில் இசைப் பேரறிஞர் இராஜரத்தினம் பிள்ளை போன்றவர்கள் ஒரு ராகத்தை இரவு முழுவதும் விடிய விடிய நாதசுரத்தில் வாசிப்பார்கள். கிராமங்களில் பல கோயில்களில் இரவு ஒரு மணி வரையில் சங்கீதக் கச்சேரி நடப்பதுண்டு. ஆனால் இன்று சங்கீத சபாக்களில் நிகழும் மேடைக் கச்சேரிகள் மூன்று மணி நேரத்திற்கு மேல் இருப்பதில்லை. வானொலியில் இசைக் கச்சேரியை ஒலிபரப்பும்போது ஒன்றரை மணி நேரம்தான் ஒளிபரப்பப்படுகிறது. அதிலும் நல்ல பாடகர்களைச் சேர்ந்தாற்போல் பாடவிடாமல் நேரத்தை இரு பிரிவாகப் பிரித்துத் தந்து பாடச்சொல்கிறார்கள் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். டெலிவிஷனில் அதே இசைக்கச்சேரி முக்கால் மணிநேரந்தான் இடம் பெறுகிறது. ஆகவே, இன்று நல்ல இசையையும் கூடச் சுருக்கமாகவும், அதே சமயத்தில் இனிமையாவும் கேட்க வேண்டும் என்று தான் மக்கள் விரும்புகிறார்கள். மெல்லிசை இன்று மக்களிடையேயும், இளம் சமுதாயத்தினரிடையேயும் பிரபலமாக இருப்பதற்கு இதுதான் காரணம். நம்முடைய கருநாடக இசையை அழகான, சுருக்கமான வடிவத்தில், இனிமை குறையாமல் பாடச் செய்தால், அது அனைத்து மக்களையும் கவரமுடியும்; இளம் சமுதாயத்தினரையும் ஈர்க்க முடியும்.

சென்னை இசைக் கழகம், இசை வளர்ச்சிக்கு பல விதத்திலும் தொண்டு செய்து வருகிறது. இசை விழாக்களை நடத்துவதுமின்றி இசைப் பயிற்சிக்கும் வழி செய்கிறது. நான் சொன்னபடி, இந்தப் புதிய முயற்சியிலும் ஈடுபட்டு, நமது பழம்பெரும் கலையைப் புதிய வடிவத்துடன் புதிய மெருகுடன் தருவதற்கு அவர்கள் துணை செய்யலாம். சிறப்பாக இசைப்பணி ஆற்றி வரும் ஏனைய இசைக்கழகங்களும் இப்பணியில் ஈடுபடலாம். அப்படிச் செய்வதன் மூலம் இந்தக் கலையின் வளர்ச்சிக்கு அவர்கள் பெரிதும் உதவி செய்தவர்கள் ஆவார்கள்.

இந்தக் கழகத்துக்கு இன்னொரு யோசனையையும் நான் சொல்ல விரும்புகின்றேன். இசை விற்பன்னர்கள் என்றால் பழம்பெரும் இசைவாணர்களைத்தான் எல்லோரும்

நினைவில் கொள்கிறார்கள். புதியவர்களின் திறமையையும் நாம் ஏற்றுக் கொண்டு அவர்களை மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும். இன்று பல துறைகளிலும் புதிய இளம் கலைஞர்கள் திறமையுடன் பிரகாசிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இசைத்துறையும் விதிவிலக்கு அல்ல. இத்துறையில் இளங் கலைஞர்களுக்குப் போதிய வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். அத்தகைய வாய்ப்பு அளிக்கப்படாததால் அவர்கள் மனம் சோர்ந்து விடுகிறார்கள்! உற்சாகம் குன்றிப் போகிறார்கள்! முயற்சியில் தளர்ச்சியை அடைகிறார்கள்.

அவர்களை ஆதரிப்பது எல்லா இசைக் கழகங்களுக்கும் தலையாய கடமை எனச் சொல்ல விரும்புகிறேன். புகழ்பெற்ற இசைவாணர்களுக்கு அளிக்கப்படும் முக்கியமான நேரத்தில் புதிய கலைஞர்களையும் பாடச் சொல்லி ஊக்குவித்தால் அவர்கள் மட்டுமல்லாமல், இசைக் கலையும் வளர்ந்து செழிப்படைய வாய்ப்பு உண்டாகும்.

இந்தத் துறையை நம்பி வருவோருக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தித் தரவேண்டும் வாழையடி வாழையாக இசைக் கலை வளர்வதற்கு இதுவே அடிப்படை.

இங்கே, விழாவில் விருது பெறும் இசை விற்பன்னர் டாக்டர் பால முரளி கிருஷ்ணா அவர்கள், இளம் பிராயத்திலேயே புகழ் பெற்று வளர்ச்சி பெற்ற இசை மேதை ஆவார். இசையிலே டாக்டர் பட்டம் பெற்றவர். இசைப் பேரறிஞர்களை ஒன்று சேர்த்து, தியாகய்யாவின் புனித இடமான திருவையாற்றில் ஆண்டுதோறும் மகத்தான இசை விழாவை நடத்த, டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா அவர்கள் மிகவும் பாடுபட்டிருக்கிறார் என்று அறிகிறேன்.

இளம் இசைவாணர்களை ஊக்குவிப்பதிலும் அவருக்குத் தணியாத ஆர்வம் இருப்பதாக நான் அறிந்தேன். ‘நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ என்ற பரந்த உள்ளத்துடன் அவர் செய்து வரும் பணிகளையும் அவருடைய உயர்ந்த நோக்கங்களையும் பாராட்டுகிறேன்.

‘கலாசாரம்’ என்ற சொல்லைத் தமிழில் ‘பண்பாடு’என்பார்கள். ‘பண்பாடு’ என்னும் சொல் பண்—பாடு என்று பிரிந்து அழகான மற்றொரு பொருளையும் தருகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கையில் முதலிடம் பெற்ற அரிய தன்மை இந்தப் ‘பண்பாடு’ ஆகும். அதோடு, நுண்கலைகளின் காவலராகத் திகழ்ந்த அவர்கள் பண்பாடுவோரைப் பாராட்டிப் போற்றுகின்ற பண்பாட்டைக் கொண்டவர்கள்!

அந்தப் பண்பாட்டைக் கடைப்பிடிக்கின்ற நான் பண்பாடுவோரோடு கலந்து மகிழவும், இசையோடு நெஞ்சை இசையச் செய்யவும் ஒரு நல்வாய்ப்பு அளிக்கப்பட்டதற்கு, எல்லோருக்கும் என் இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க இசை, வாழ்க தமிழ், வாழ்க அண்ணா நாமம்.

(21.12.1978 அன்று, சென்னை இசைக் கழகத்தின் (சங்கீத வித்வத் சபை) 52ஆவது மாநாட்டை தொடங்கிவைத்து ஆற்றிய உரை)



குடிநீர்த் திட்டம்
விழா

நாட்டு மக்களைப் பற்றித்தான் சிந்தித்துச் செயல்படுகிறது அரசு!

பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி இங்கு நடந்த மாபெரும் ஊர்வலத்தைப் பார்த்தபோது, நான் மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றுவிட்டேன்.

அதிக அளவில் பெண்கள் கலந்து கொண்டார்கள் என்பதற்காக நான் மகிழ்ச்சி அடையவில்லை. பெண் உரிமைக்காகப் பாடுபட்டவர் பெரியார். அப்படிப்பட்டவருக்கு நடக்கும் விழாவில் திண்மையோடு பெண்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டதைப் பார்க்கும்போது, பெரியாரின் கருத்துக்கள் கானல் நீராகிவிடாமல் நிறைவேறி வருவதைச் சுட்டிக்காட்டத்தான் அவ்வாறு கூறினேன்.

தமிழக அரசைப் பொறுத்த வரையில் எந்தப் பிரச்சினையையும் நாட்டு மக்களை முன் வைத்துத்தான் சிந்தித்துச் செயல்படுகிறதே தவிர எங்களை வைத்து நாங்கள் பிரச்சினையை அணுகவில்லை. எங்களை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக இந்த விழா நடத்தப்படவில்லை. ஒரு அரசியல் கட்சிக்கு மட்டும் – ஓர் சாதிக்கு மட்டும் விசேஷ முக்கியத்துவம் தரும் விழா அல்ல இது.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் வரப்போகிறது என்றும், அதற்கு இலட்சக்கணக்கான தொண்டர்கள் தயாராக இருக்கிறார்கள் என்றும் கூறினார்கள். அத்தனை மக்களையும் பலி கொடுத்துத் தான் இந்தியைத் தடுக்க வேண்டும் என்ற நிலை ஏற்படாது. இந்தியை இனிமேல் நம் மீது திணிக்கும் துணிவு யாருக்கும் வராது.

வருகிற 23ஆம் தேதி இந்தித் திணிப்பு பற்றி முடிவு எடுக்க அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துள்ளேன். இந்தித் திணிப்புக்கு ஆதாரம் இருக்குமானால், நாம் அனைவரும் சேர்ந்து ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

தமிழர்–தமிழ் மொழி–தமிழ் நாடு என்ற ஒரே குறிக்கோளைத் தவிர வேறு எந்தப் பிரச்சினைக்கும் இடமில்லை நிபந்தனைகளை யார் வேண்டுமானாலும் விதிக்கலாம். 65ஆம் ஆண்டு இருந்த நிலை வேறு. இப்போது உள்ள நிலை வேறு.

இந்தி பேசும் மக்கள் உள்ள மாநிலத்தில் இந்தி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற உரிமை இருக்கும்போது இந்தி தாய்மொழியாக அல்லாத மாநிலங்களில் அந்த மாநில மொழிகள் ஆட்சி மொழியாக வேண்டும் என்று கேட்க உரிமை இருக்கிறது.

“இந்தி ஆட்சி மொழியானால்–தமிழும் ஆட்சிமொழி ஆகும்” என்று பேரறிஞர் அண்ணா சொன்னார். அதுவே நம்முடைய கொள்கையாகும். அந்த முடிவை நாம் எப்போது எடுக்கப் போகிறோம் என்பதுதான் முக்கியம்.

(20.01.1979 அன்று, திருநெல்வேலியில் நடைபெற்ற தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரை)



அச்சம் தவிர்க்க
துணிச்சல் வேண்டும் கலைஞர்களுக்கு!

குடியரசு நாளான நல்ல நாளிலே இந்த நல்ல விழா நடைபெறுகிறது. குடியரசு உரிமை பெற்ற நாளில் கலைஞர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று வாழ்ந்து காட்டிய கலைவாணர் அரங்கில் கலைஞர்களுக்குப் பாராட்டு விழா நடப்பது பொருத்தமானது. சிலருக்கு, காலம் கடந்து பரிசளிக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்கிறேன்.

இளம் கலைஞர்கள் எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பெரியவர்கள் சொல்லும் அறிவுரையைக் கேட்க வேண்டும். யாரோ எதற்கோ சொல்லியது என்று அலட்சியப்படுத்தாத எண்ணம் கலைஞர்களுக்கு வரவேண்டும்.

கலைவாணர் ஒருமுறை குறிப்பிட்டார்; "புகழோடு இருக்கும்போது மறைந்து விடவேண்டு"மென்று! ஆனால் புகழ் எங்கே தொடங்குகிறது? எங்கே போய் முடிகிறது? என்பதை யாராலும் நிச்சயம் சொல்ல முடியாது. கடமையைச் செய்தால் புகழ் வரும்; அதில் தவறினால் புகழ் எங்கேயோ ஓடிச்சென்று விடும்.

கலைஞர்கள் தம் உள்ளத்தில் உள்ள எண்ணத்திற்கும் கலையின்மீது வைத்துள்ள ஆர்வமான தொடர்புக்கும் உறவு வைத்துக் கொள்ள வேண்டும். மக்கள் பின்பற்ற வேண்டிய கொள்கையை–நீதியை–தமது கதைகளில் சொல்ல வேண்டும். இங்கே விருதுபெற்ற முதிய கலைஞர்கள், "நமது தொழில் முடிந்து விட்டது, இனி நமக்கு எதைப்பற்றியும் கவலை இல்லை" என்றிருக்கக்கூடாது. தேவைப்படுகின்றபோது – சந்தர்ப்பம் வாய்க்கும்போது – தங்களது கருத்துக்களைக் கூறவேண்டும்.

தமிழகத்தில் நிறைய நாடகக்கொட்டகைகள் உருவாக்க வேண்டும் என்பதில் அக்கறை உள்ளது இந்த அரசு. தமிழகம் எங்கும் திறந்தவெளி அரங்கங்கள் பலவற்றை அமைக்க வேண்டும் என்று அரசு திட்டமிட்டு வருகிறது. எப்போது என்று கேட்டுவிடாதீர்கள்! விரைவில் இந்தப் பணியைத் தொடங்குவோம்!

கலைஞர்கள் வாழ்ந்தாக வேண்டும். ரஷ்யாவில் முதிய கலைஞர்களின் வாழ்வுக்கு உதவி செய்கிறது அரசு. அங்கே விஞ்ஞானிகளுக்கு முதல் மரியாதை கிடைக்கிறது. அடுத்ததாக, கலைஞர்களுக்குத்தான் சிறப்பு செய்யப்படுகிறது.

எனவே கலைஞர்களுக்கு சொல்லிக் கொள்வேன். அவர்கள் அச்சம் தவிர்க்க வேண்டும்! உண்மையை வெளியிடுகின்ற துணிச்சல் வேண்டும்! ஆய்ந்து பார்க்க வேண்டும்–ஆழமாக ஆய்ந்துப் பார்க்க வேண்டும்–இந்த அரசு கலைஞர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யும்.

அண்ணா நாமம் வாழ்க!

---

*(**26.01.1979** அன்று, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற கலைமாமணி விருது வழங்கும் விழாவில் ஆற்றிய உரை)*

குழந்தைகளின் அறிவு முதிர்ச்சிதான் நாட்டை வளப்படுத்தும்!

இங்கே நடைபெறுகிற நல்லதோர் விழாவில் என்னென்ன பேசவேண்டுமோ அவையனைத்தையும் இரத்தினச் சுருக்கமாக மானசீக ஆசானாக நான் கருதுகிற சாந்தாராம் பேசிவிட்டார்.

இந்தியக் குழந்தைகள் திரைபடக் கழகத்தின் தலைவர் என்கிற மாபெரும் பொறுப்பினை ஏற்றிருக்கிற சாந்தாராம் அவர்கள் இங்கே பேசும்போது "தமிழக அரசு செய்தித்துறை வாயிலாகக் குழந்தைகள் திரைப்பட விழாப்பணிகள் செவ்வனே நடக்கின்றன" என்று புகழாரம் சூட்டினார். அதை நினைக்கும்போது என் உள்ளம் பூரிக்கிறது. நாம் பெருமிதம் அடைகிறோம் என்று சொல்வதிலும் தவறு இல்லை எனக் கருதுகிறேன்.

அமைச்சர் ஆர்.எம்.வீ. பேசும்போது "பெரியவர்களைத் திருத்த முடியாது. எனவே குழந்தைகளைத்திருத்துகிறேன் என்று எண்ணித்தான் சாந்தாராம் குழந்தைகளுக்காக படம் எடுக்கிறார்" என்று குறிப்பிட்டார். அதிலே நான் ஒரு திருத்தத்தைச் சொல்லியாக வேண்டும்.

குழந்தைகள் கெடுவதே பெரியவர்களால்தான். எனவே குழந்தைகளைத் திருத்துவது பெரியவர்களைத் திருத்துவதற்குச் சமமானதாகும். குழந்தைகளைத் திருத்துவது என்பதைவிட, காப்பது என்று சொல்வதே பொருத்தமானதாக இருக்கும். குழந்தைகளைக் காப்பாற்றியாக வேண்டும். நல்லது எது ? கெட்டது எது என்று பிரித்துப் பார்க்க தெரியாத காலம் குழந்தைப் பருவமாகும். நல்லனவற்றைக் குழந்தைகளுக்கு சொல்லித் தர வேண்டும். அதே நேரத்தில் கெட்டனவற்றைக் குழந்தைகளுக்குத் தெரியாமலேயே மறைத்துவிட வேண்டும். கெட்டது என்பது என்ன என்றே தெரியாமல் அல்லது கெட்டது பற்றியவற்றைக் குழந்தைகள் சந்திக்க வாய்ப்பே இல்லாமல் செய்திட வேண்டும். இப்படிச் செய்தால் அது மாபெரும் தொண்டு என்பதில் சந்தேகமில்லை.

அரசியல் கூட்டங்களுக்குக் குழந்தைகளை அழைத்து வராதீர் என்று நான் அரசியல் கூட்டங்களில் அடிக்கடி சொல்வதுண்டு. சாதிமத தாழ்வு பேதம் பற்றிய கருத்துக்கள் குழந்தைகளின் காதுகளிலேகூடபடக் கூடாது என்பது என் எண்ணம்.

நான் எனது படங்களில் கூட புகைபிடிக்கும் காட்சிகளில் நடிப்பதில்லை என்று குறிப்பிட்டனர். பணத்தைப் போட்டுத் திரைப்படம் தயாரிப்பவர்கள் இத்தகைய

தியாகத்தினைச் செய்வார்களா என்றால் சந்தேகம்தான். ஆனாலும் நல்ல கதைகளைப் படமாக்கினால் நிச்சயம் வெற்றி பெறமுடியும்.

பெரியவர்கள் எத்தகைய பழக்க வழக்கங்களுக்குச் சொந்தக்காரர்களோ அதே பழக்க வழக்கத்துக்கே அவர்களின் குழந்தைகளும் செல்லுகின்றன. தமிழனுக்குப் பிறந்த குழந்தை ஒன்று அனாதையாக்கப்பட்டு ஆங்கிலேயனால் வளர்க்கப்பட்டால் அந்தக் குழந்தை தமிழ்ப் பண்பாட்டின்படி இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டுமோ ஒழுங்காக வளர்க்க வேண்டுமோ அத்தகைய ஆற்றலைப் பெரியவர்கள் பெற்றிருந்தால் தான் குழந்தைகளும் ஆற்றல் உள்ளவர்களாக வளர்வர்.

குழந்தைகள் திரைப்படக் கழகத்துக்கு தமிழக அரசு செய்த உதவியைப் பாராட்டினார், சாந்தாராம். அதை உதவி என்பதைவிட காணிக்கை என்றுதான் குறிப்பிட வேண்டும். பண்பாட்டைக் காப்பதில் தமிழர்களை மிஞ்சியவர் யாருமில்லை. இந்த வகையில் நமக்கு மிகுந்த அக்கறை உண்டு. கிராம மக்கள் இன்னமும் பண்பாட்டைவிடத் தயாரில்லை. இப்படிச் சொல்லும் போது தங்கள் குழந்தைகளைச் சில பணக்காரர்கள் கெடுப்பதை நினைக்கும்போது என் மனம் வேதனைப்படுகிறது. தவறானவைகளை நாகரிகம் என்று சொல்லி நம்மை நாமே ஏமாற்றி பின்னுக்குத் தள்ளிக்கொண்டிருக்கிறோம் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

‘தூங்காதே தம்பி தூங்காதே’ என்ற பாட்டைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ‘தூங்காதே தம்பி தூங்காதே’ என்ற தலைப்பில் ஒருகதையையும் உரையாடலையும் நானே எழுதி, திரைப்படமாகத் தயாரிக்கத் திட்டமிருந்தேன். ஆனால் அதற்குள் நிலைமாறி இன்று, முதல்வாராக இருக்கிறேன். ஆனாலும் என்றாவது ஒருநாள் நானே அந்த படத்தை நிச்சயம் எடுப்பேன்.

எப்போது என்று கேட்டால் அது இப்போது சொல்ல முடியாது. நானே அந்தப் படத்தை இயக்க வேண்டும் என்பது என் ஆசை. பெரியவர்களை மதிக்கும் பண்பு நம்மிடம் இல்லை. இந்த நிலை மாற நம் உழைப்பைத் தந்தாக வேண்டும். ஆம் நாம் அனைவரும் உழைத்தாக வேண்டும்.

நடிகர் நடிகைகளுக்குப் பாதுகாப்பான சூழ்நிலை—தேவையான வருவாய்—ஒய்வூதியம் இவற்றுக்கு அரசு உத்திரவாதம் தந்தால்தான் கலைஞர்கள் மத்தியில் தேசிய உணர்வை—லட்சியப் பிடிப்பை உருவாக்க முடியும்.

கலைஞர்களைத் திருத்தும் முன்பாக கதாசிரியர்கள் தங்கள் உரையாடல்களில் அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். குழந்தைகளைப் பாதுகாக்க

அரசு விரும்புகிற நேரத்தில் குழந்தைகளை எப்படிப்பட்ட நற்பண்புகளுக்குச் சொந்தக்காரர்களாக வேண்டும் என்கிற உணர்வினையூட்டும் கதைகளை உருவாக்கிடக் கதையாசிரியர்கள் முயற்சிக்க வேண்டும். திரைப்படத்துறை நல்ல வலுவுள்ள விளம்பர—பிரச்சாரத்துறை .

குழந்தைகள் உள்ளங்களில் ஏற்படுகிற முதிர்ச்சிதான் நாட்டை, வளப்படுத்தும். எனவே திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு எனது வேண்டுகோளாக விடுக்கிறேன். எப்படிப்பட்ட கதைகளை வாங்குவது, தயாரிப்பது என்று திட்டவட்டமாக முடிவு செய்தாக வேண்டும். 105 படங்கள் தயாரிப்பில் உள்ளன என்பதை எண்ணும் போது என்னைவிட மகிழ்ச்சி அடைபவர் வேறு யாரும் இருக்க முடியாது.

எனவேதான் சொல்லுகிறேன். நாட்டுக்குத் தேவையான – கண்ணியமான படங்களை எடுங்கள். நட்டம் ஏற்பட்டால் அரசு எந்தெந்த வகையில் முடியுமோ அந்தந்த வகையில் நிச்சயம் உதவி செய்யும் என்கிற உத்தரவாதத்தினைத் தருகிறேன்.

பணத்தை முதலீடு செய்யும் தயாரிப்பாளர்கள் நட்டமடைய வேண்டும்—ஏழையாக வேண்டும் என்பது எனது நோக்கம் அல்ல. நீங்கள் வாழுங்கள், பிறரையும் வாழ வையுங்கள். நட்டம் ஏற்பட்டால் பாதுகாப்புத் தருவோம். நல்ல படங்களுக்கு நிச்சயம் வரிவிலக்குத் தருவோம்.

அண்ணா நாமம் வாழ்க !

(08.02.1979 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில் குழந்தைகள் திரைப்பட துவக்க விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரை)

கலாச்சாரத்தின் கண்ணாடி கைவினைப் பொருள்களே!

“பரிசு பெற்றார்கள்–வெற்றி பெற்றார்கள்”, என்று நாம் சொல்லும்போது, வெற்றி பெற்றவர்கள் மட்டுமே திறமைசாலிகள் என்றோ, வெற்றி வாய்ப்பைத் தவறவிட்டவர்கள் இனி எப்போதுமே வெற்றி பெறமுடியாது என்றோ அர்த்தமல்ல. இங்கே நடைபெற்ற போட்டி குறித்து நான் ஒரு கருத்தினைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நமது கைவினைப் பொருட்களுக்கு வெளிநாட்டில் நல்ல மதிப்பும் வரவேற்பும் இருக்கிறது.

இந்த நேரத்தில் கைவினைக் கலைஞர்களுக்கு ஒரு யோசனையை வேண்டுகோளாக விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆப்பிரிக்க நாடுகளில் எல்லாம் மகாத்மா காந்தியை மதிப்புடனும் மரியாதையுடனும் போற்றி வணங்குகிறார்கள். கறுப்பர்கள் மத்தியில் சுதந்திர உணர்வு பொங்கியெழ முக்கிய காரணகர்த்தாவாக விளங்கினார் என்பதற்காக மாகத்மா காந்தி அவ்வாறு போற்றி வணங்கப்படுகிறார். ஆனால், அதே நேரத்தில் இந்த ஆப்பிரிக்க நாடுகளில் வசிக்கும் மக்கள் இந்தியாவைப் பற்றிய உண்மை விவரங்களைத் தெரிந்து கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள். நான் ஒருமுறை நைரோபி நாட்டுக்குச் சென்றிருந்தபொது, அங்கிருந்த பலர் என்னிடம் கேட்ட கேள்வி என்னைத் திகைப்பில் ஆழ்த்தியது. “உங்கள் இந்தியாவில் பெரும்பாலோர் பாம்பாட்டி வித்தைகள் செய்து தான் பிழைக்கின்றார்களா ?” என்று அவர்கள் கேட்டார்கள்.

ஆப்பிரிக்க நாடுகளில் மட்டும் அல்ல, பல உலக நாடுகளில் இந்தியாவைப் பற்றித் தவறான அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. இந்தத் தவறான அபிப்பிராயங்களைப் போக்கி, இந்தியாவில் நிலவும் உண்மையான சூழ்நிலை பற்றிய விவரங்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தியாவில் தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்களை வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் மிகுந்த ஆவலுடன், ஆர்வத்துடன், வாங்கிக்கொண்டு செல்கிறார்கள். எனவே, அந்த வெளிநாட்டுக்காரர்களுக்கு நம் நாட்டின் உண்மை நிலவரத்தை எடுத்துச் சொல்லும் வகையில், கைவினைப் பொருட்களை, கைவினைக் கலைஞர்கள் தயாரிக்க வேண்டும்.

சுதந்திரப் போராட்டம் போன்ற, இந்திய வரலாற்றில் இடம்பெற்ற முக்கியமான சம்பவங்களைப் பிரதிபலிக்கும் வகையில் கைவினைப் பொருட்களைத் தயாரிக்கலாம். இந்தக் கைவினைப் பொருட்களின் மூலம் வெளிநாட்டார் நம்முடைய வரலாற்றில்

இடம்பெற்ற முக்கியமான நிகழ்ச்சிகளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளக் கூடிய நிலைமை உருவாகும்.

புறநானூற்றுக் கவிதைகளில் சொல்லப்படும் முக்கியமான நிகழ்ச்சிகளை, சம்பவங்களை, காட்சிகளை எடுத்துச் சொல்கின்ற வகையில் கைவினைப் பொருட்களைத் தயாரிக்கலாம். மக்களின் நலவாழ்வு எவ்வாறு மலர வேண்டும் என்று அமரர் அண்ணா அவர்கள் ஆசைப்பட்டாரோ, அந்த அண்ணாவின் இலட்சிய ஆசைகளை, கொள்கைகளை, கோட்பாடுகளை பிரதிபலிக்கும் வகையில் கைவினைப் பொருட்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

நம்முடைய நாட்டின் கலாச்சாரத்தை, பண்பாட்டை, பாரம்பரியத்தை, நாகரிகத்தைப் பிரதிபலிக்கின்ற வகையில் கைவினைப் பொருட்களை கைவினைக் கலைஞர்கள் உருவாக்க வேண்டும்.

பல்வேறு ஓவியர்கள் வரைந்த பல்வேறு ஓவியங்களைப் பரிசீலித்து சிறந்த ஓவியத்தை, ஓவியக்காரரைத் தேர்ந்தெடுப்பதைவிட வேறொரு முறையைக் கடைபிடித்தால் மிகவும் பொருத்தமாக இருக்கும். ஏதாவது ஒரு குறிப்பிட்ட கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஓவியங்களைத் தீட்டும்படி ஓவியர்களை கேட்டுக் கொள்ளலாம்.

ஒரே கருத்தை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு ஓவியர்கள் தீட்டிய பல்வேறு ஓவியங்களைப் பரிசீலித்து, சிறந்த ஓவியம் எது? சிறந்த ஓவியக்காரார் யார்? என்பதைத் தேர்ந்தெடுப்பதுதான் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

ஒரு பெண் விறகை வெட்டி தலையில் சுமந்து கொண்டு செல்லுவது போன்ற காட்சியை எடுத்துக்காட்டும் ‘காற்று’ என்னும் தலைப்பிட்ட கலைப்படைப்புக்கு முதற் பரிசு வழங்கப்பட்டுள்ளது. அது, ஓவியமா? சிற்பமா? என்று எண்ணி வியக்கும் வகையில்—இரண்டும் கலந்து உறவாடும் வகையில், ஓவியச் சிற்பமான இந்தக் கலைப் படைப்பு புதுமையான முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஓவியச் சிற்பம் நமக்கெல்லாம் புதுமையைச் சொல்லிக் கொண்டிருக்கிறது. இயற்கையையும் இளமைத் துடிப்பையும் அதே நேரத்தில் ஏழ்மைக் கோலத்தையும் பின்னிப் பிணைந்ததாக இந்த ஓவியம் அமைந்திருக்கிறது. வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் ஏழைகளின் அவல நிலையை இயற்கையாக நேரடியாகப் பார்க்கும்போது, பலர் அதை அவ்வளவாகப் பொருட்படுத்துவதில்லை; கவனிப்பதில்லை; ஏழ்மையின் கொடுமைகளை நேரில் பார்க்கும்போது அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அதே காட்சி, ஓவியமாகவோ, சிற்பமாகவோ வடிக்கப்படுமானால் பலர் அதைப்பார்த்து ரசிக்கிறார்கள்.

‘‘எவ்வளவுதத்ரூபமாகசித்தரிக்கப்பட்டிருக்கிறது!’’என்றுதிகைப்புஅடைகிறார்கள். அந்தக் காட்சிக்குப் பின்னணியில் இருக்கின்ற வாழ்க்கையின் பிரச்சினைகளையும் அவர்களால் புரிந்துகொள்ள முடிகிறது. இயற்கையை நேரடியாகப் பார்க்கும் போது, அதை முற்றிலும் உணர்ந்துகொள்ள முடியாத பலர், அதே இயற்கையின் வடிவம் செயற்கையாகச் சித்திரிக்கப்படும்போது அதை முற்றிலும் உணர்ந்து கொள்ள முடிகிறது என்ற திறமை வியப்புக்குரியதுதான்.

இரண்டாவதாகப் பரிசு பெற்ற ஓவியம் கடவுளைப் பற்றிய ஒரு கதையைச் சொல்லுவதாகக் குறிப்பிட்டனர். சிவனையும் விஷ்ணுவையும் மனத்தில் வைத்துப் புராணத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதி இருப்பதாகவும் தெரிவித்தனர்.

சிவனை தீப்பிழம்பு என்றும், தூய்மைக்கும் சீற்றம் கலந்த வீரத்துக்கும் ஆண்மைக்கும் எடுத்துக்காட்டு என்றும், விஷ்ணுவை பெண்மை கலந்த அன்பு என்றும் குறிப்பிடுகிறார்கள். என்னைப் பொறுத்தவரை நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். கடவுளை வணங்குபவர்கள் வணங்கட்டும்; யார் யாருக்கு எது எது பொருத்தமாக இருக்கிறதோ அதை எடுத்துக் கொள்ளட்டும். நன்மை இருந்தால் வரவேற்போம். தீமைகள் இருந்தால் எதிர்ப்போம்.

இங்கே ஓவியத்துக்கென மூன்றாம் பரிசு பெற்ற திரு. மாதவன் பிள்ளை எனது நண்பர். நாடக உலகத்தைச் சார்ந்தவர்களுக்கு அவரை நன்கு தெரியும். நாடகக் காட்சிகளுக்கு எந்த இடம் தேவையோ அந்த இடத்தை இயற்கையாகவே திரைச் சீலை மூலம் உருவாக்கித் தரும் பேராற்றல் பெற்றவர். அப்படிப்பட்டவர், போப் ஆண்டவர் படத்தை எழுதி இருக்கிறார் என்றால் அது தனது எளிமையான அடக்கமான பண்பை மற்றவர்கள் மனத்தில் பதிய வைத்திருக்கிறார் என்றே எடுத்துக் கொள்ள வேண்டும்.

நமது நாகரிகத்தை, பண்பாட்டை, வரலாற்றை விளக்கும் கைவினைப் பெருட்களை உருவாக்கித் தாருங்கள் என்று கைவினைக் கலைஞர்களை மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு செய்தால், நீங்கள் உண்மையை உலகுக்கு உணர்த்தியவர்கள் ஆவீர்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

(09.02.1979 அன்று சென்னை விக்டோரியா நுண்கலைக்கூடம் நடத்திய ஓவிய சிற்பப் போட்டியில் வெற்றி பெற்ற கைவினைஞர்களுக்கு பரிசுகள் வழங்கி ஆற்றிய உரை)

பல்வேறு நல்ல திட்டங்கள் உருவாக வாய்ப்பு ஏற்படும்!

இந்த நிகழ்ச்சி நாலரைக் கோடி தமிழ் மக்களின் உள்ளத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடியதாகும்.

சென்னை–விஜயவாடா இரயில் போக்குவரத்து மின் இணைப்புத் திட்டம் ஓரளவிற்குச் செயல்படத் தொடங்கியிருக்கிறது.

இங்கே வரவேற்புரையாற்றிய நண்பர் பேசுகையில், தமிழக அரசு இந்த இரயில்வே நிலைய விரிவாக்கத் திட்டத்திற்கு நல்ல முறையில் ஒத்துழைத்தது என்று குறிப்பிட்டார்.

சுமார் நாலேமுக்கால் கோடி ரூபாய் பெறுமான நிலப்பரப்பை ஒதுக்கித்தர வேண்டும் என்று கேட்டார்கள்.

இதன் மூலம் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன என்பதை அறிந்த போது அதன் விலையில் பாதியாகக் குறைத்துக் கொடுக்கப்பட்டது.

விரிவாக்கத் திட்டம் விரைவில் செயல்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்திற்கு உதவினோம் என்று வரவேற்புரையாற்றிய நண்பர் குறிப்பிட்டார்.

இந்தியத் துணை கண்டத்தைப் பொறுத்த வரையில் பாகுபாடு இன்றி நல்லகாரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த நல்ல பணிகளில் ஒன்றுதான் இங்கே தொடங்கிவைக்கப்படும் இந்த நிகழ்ச்சி.

குடியரசுத் தலைவர் சஞ்சீவ ரெட்டி அவர்கள் இந்த நல்ல பணியைத் தொடங்கி வைக்கிறார். தமிழக அரசு சார்பிலும் தமிழக மக்கள் சார்பிலும் அவரை வாழ்த்தி வரவேற்று வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடியரசுத் தலைவர் அவர்கள் கொண்ட நல்ல கொள்கைகளை மனப்பூர்வமாக ஏற்று அப்படியே அதை நிறைவேற்றுவதில் தீவிரமாக இருக்கிறார். இந்தியத் துணைக்கண்டத்தில், அவசிய அவசரம் ஏற்படும் நேரங்களில் தனக்கு மனதில் பட்டதைச் சுட்டிக் காட்டி எடுத்துக் கூறும் தைரியம் படைத்தவர். அந்த நல்ல ஆற்றல் படைத்த குடியரசுத் தலைவரைத் தமிழக மக்கள் சார்பில் வாழ்த்துக்கூறி வரவேற்கிறேன். இந்த நாடு அவரை வாழ்த்துகிறது.

அவரது கையால் இங்கே இந்த நிகழ்ச்சி தொடங்கி வைக்கப்படுகிறது. பல்வேறு நல்ல திட்டங்கள் உருவாகும் நிலைமையை இது ஏற்படுத்தும் என்று நம்புகிறேன். இதற்காக உழைத்த அதிகாரிகளைப் பாராட்டுகிறேன்.

(13.04.1979 அன்று, சென்னை மூர் மார்கெட் எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில்
சென்னை–கும்மிடிப்பூண்டி மின்சார இரயில் போக்குவரத்துத் தொடக்க விழாவில் ஆற்றிய உரை)

பாருக்கு நல்ல பணி செய்வோம்!

எனக்கு மன நிறைவு தரக் கூடிய மூன்று நிகழ்ச்சிகள் இணைக்கப் பெற்றிருக்கின்றன. முதலாவது தமிழ் இசை விழா. தமிழ் இசைச் சங்கத்திற்கு மதுரையில் ஒரு நல்ல கட்டடம் கட்டப் பெற்றுப் பல்லோர் பாராட்டுகின்ற வகையிலும், தமிழ் வளர்வதற்கும், காப்பதற்கும் உறுதுணையாக இருக்கின்ற இசையை இணைத்து அதன் மூலம் தமிழைக் காப்பாற்றுகின்ற கடமைக்கு ஒரு பாதுகாப்பு நல்குகின்ற வகையிலும் இந்தச்சிறந்த கட்டடத்தை உருவாக்கி அதனைச் செட்டிநாட்டு அரசர் பெயரால் இராஜா முத்தையா மன்றம் என இங்கு அமைத்திருப்பது என் மனத்திற்கு நிறைவு தரக் கூடிய நல்ல பணி என்று சொல்ல ஆசைப்படுகின்றேன். எனவே, ஐந்தாம் ஆண்டு விழாவினைக் கொண்டாடுகின்ற மதுரைத் தமிழ் இசைச் சங்கத்தினைப் பாராட்டுகின்றேன். அதன்பணி வளர்க என வாழ்த்துகின்றேன்.

முப்பெரும் விழாக்களில் ஒன்றாகச் செட்டிநாட்டு அரசர் முத்தையா அவர்களுக்குப் பாராட்டு விழா இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. செட்டிநாட்டு அரசர் அவர்களுக்குத் தமிழிசைக் காவலர் என்னும் சிறப்புப் பட்டத்தினை நான் வழங்குமாறு பெருமை தந்திருக்கின்றீர்கள். செட்டிநாட்டு அரசர் அவர்களைப் போன்றவர்களுக்குப் பட்டம் அளிக்கின்ற தகுதியோ, அறிவோ, ஆற்றலோ, அனுபவமோ இல்லாத என்னைப் போன்ற ஒரு சாதாரண மனிதனை அழைத்து அந்தப் பெருமையைத் தந்ததற்கு நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன்.

முப்பெரும் விழாக்களில் மற்றொன்று பாவேந்தர் விழா. இங்கு மேலவைத் தலைவர் மாண்புமிகு ம.பொ.சி அவர்களும், என் தம்பி மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும் பாரதியாரைப் பற்றியும், பாரதிதாசனைப் பற்றியும் பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். ஒரு மொழியினுடைய தோற்றம், வளர்ச்சி,வாழ்வு இவைகளை எண்ணிப்பார்த்து அந்த மொழியினுடைய வயது என்ன என்ற கேள்விகளுக்குப் பதில் கிடைக்கும் போதுதான் அந்த மொழிக்கு உரிய மரியாதையும் உயர்வும் எல்லோருடைய உள்ளத்திலும் ஆழமாகப் பதிகின்றன என்பதனை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். தமிழைக் காப்பதற்காக யார் யார் பாடுபட்டிருக்கின்றார்கள்? தமிழை அழிப்பதற்காக யார் யார் முயன்றிருக்கின்றார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த மதுரையை நெருப்புக்கூட அழிக்க முயன்றது என்று மாண்புமிகு ம.பொ.சி. அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அவ்வாறு அழிக்கத் தொடங்கிய நிலையையும் மீறி, மதுரை காப்பாற்றப்பட்டிருக்கின்றது; தமிழ் காப்பாற்றப்பட்டிருக்கின்றது. இந்தி என்று இப்போது பேசப்படுகின்ற மொழியும், வடமொழி என்று கூறப்படுகின்ற சமஸ்கிருதமும்

அதனை ஒட்டியதாய் அதற்கு முன்பிருந்த பிராகிருதமும் அதற்கும் முன்னால் இருந்த பாலிமொழியும் தமிழை அழிப்பதற்காக இங்கே அடியெடுத்து வைத்தனவாகும்.

பாலிமொழிக்குச் சொந்தக்காரர்கள் மதுரை மீது படையெடுத்து வந்து தமிழை அழிக்க முயன்றார்கள். அவர்கள் அரசோச்சும்போது தமிழுக்குச் சொந்தக்காரர்கள் ஒளிந்து வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பாலிமொழிக்குச் சொந்தக்காரர்கள் முதலில் தமிழ் மொழியை அழித்துவிட்டால், தமிழர்களை அடிமைப்படுத்திவிடலாம் என்று எண்ணினார்கள். அப்போதெல்லாம் தமிழ் மக்கள் தமிழுக்கு மரியாதை தந்தார்கள். தமிழ் தங்களின் சொத்து, அதனை அழிக்க விடமாட்டோம் என்று வீரமுழக்கம் செய்தார்கள்.

அயர்லாந்து விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள் எத்தனையோ முறைகளைக் கையாண்டும் மக்களை ஒருங்குகூட்டி விடுதலை பெற முடியாமல் போனபின் அயர்லாந்து மொழியை முன்நிறுத்தி அந்த மொழிக்குத் தனி உரிமை வேண்டும் என்று போராடிய பின்னரே அந்த நாடு இன்றையதினம் விடுதலை பெற்ற நாடாக விளங்குகின்றது.

மதுரையை எத்தனையோ மொழிகள் முற்றுகையிட்டன. வேற்றரசர்கள் மதுரை மீது படையெடுத்தார்கள். அப்பொதெல்லாம் மதுரை மாநகரம் தலைவணங்காமல் தலை நிமிர்ந்து நின்று தமிழால் நிலைபெற்றது. இவ்வகையில் அயர்லாந்து வரலாறும் மதுரை வரலாறும் ஒற்றுமையாக அமைந்திருப்பதனைக் காணலாம். இத்தகைய வரலாற்றுப் புகழ்பெற்ற மதுரையில் தமிழ் இசைச் சங்கத்திற்காகத் தனிக்கட்டடம் உருவாகியுள்ளது. தமிழில் பாடினால் அவர்களைச் சங்கீத வித்துவான்களாக ஏற்றுக் கொள்வதில்லை என்ற நிலைமை, நம் தமிழ்நாட்டில் இருந்தது. திருவாசகத்தை மதித்தார்கள். திருக்குறளை மதித்தார்கள். திருப்பாவையை–திருவெம்பாவையை மதித்தார்கள். ஆனால் அவற்றை இசையோடு பாடும்போது அவ்வாறு பாடிய சங்கீத வித்துவான்களை மதிக்காத காலம் ஒன்று இருந்தது என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது. இசையரசு எம். எம்.தண்டபாணி தேசிகர் அவர்கள் எங்கே இருந்தார்கள் என்பதும், தேவாரம் பாடும் ஓதுவராக வாழ்ந்தார்கள் என்பதும் நமக்கும் தெரியும். பின்னால் அவருக்கு எத்தனையோ சிறப்புப் பட்டங்கள் வழங்கப்பட்டன. அவையெல்லாம் செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் தமிழிசைச் சங்கம் தோற்றுவித்தபிறகு தேசிகர் அவர்களுக்குக் கிடைத்த பட்டங்கள் என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது. எனவே நாம் ஒவ்வொருவரும் செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையாருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் தமிழிசைச் சங்கத்தைத் தோற்றவிக்காமல் இருந்திருந்தால், ஒரு புலவர் அம்முயற்சியில் ஈடுபட்டிருந்தால். புலவர் குழு அம்முயற்சியில் ஈடுபட்டிருந்தால் அந்தத் தமிழிசை இயக்கம்

பணம், பதவி, சாதி உயர்வு இவைகளால் உறுதியாக அழிக்கப்பெற்றிருக்கும். செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் இவ்வியக்கத்தில் ஈடுப்பட்டமையால், பணத்தைக்கொண்டுயாராலும் அவரை விரட்ட முடியவில்லை. அவர் நெஞ்சு உரத்தோடு இவ்வியக்கத்தில் ஈடுப்பட்டமையால் பதவியைக் கொண்டும் அதிகாரத்தைக் கொண்டும் விரட்ட முடியவில்லை. அச்சுறுத்தி அடிமைப்படுத்தவும் முடியவில்லை. அண்ணாமலையார் அவர்கள் தமிழன் என்ற எண்ணத்துடனும், துணிவுடனும் தமிழிசை இயக்கத்தில் ஈடுபட்ட காரணத்தால் அவரை எதிர்த்து நின்றவர்கள் தம் கருத்தை எதிர்த்து வெளியிடமுடியாது தோல்வியடைந்து புறங்கண்டார்கள். கடைசியில் அண்ணாமலையாருடன் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்பட்டார்கள்.

பாராட்டப் படுகின்றவர்கள் பணத்திற்கு சொந்தக்காரர்களாக இருந்தாலும், புகழுக்குச் சொந்தக்காரர்களாக இருந்தாலும், உழைக்கின்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் கண்களுக்கு விரோதிகளாகத் தெரிகின்ற அளவிற்கு வசதி படைத்தவர்களாக இருந்தாலும், அவர்களை அவர்கள் செய்த தொண்டுக்காக நாங்கள் பாராட்டுகின்றோம். செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் அவர்கள்,செட்டிநாட்டு அரசர் முத்தையா அவர்கள் போன்றவர்கள் தமிழிசை இயக்கம் என்ற தியாகத் திருப்பணியில் எதனைப் பற்றியும் கவலைப்படாமல் ஈடுபட்டார்கள்.

இவர்கள் செல்வமும், புகழும் பெருமையும் சுற்றமும் பெற்றவர்கள். எங்கு சென்றாலும் தனக்கென்று ஒரு தனி மரியாதை கொண்டவர்கள். இவ்வளவும் படைத்த இவர்கள்– இவற்றை நாம் ஏன் இழக்க வேண்டும் ? எதிரிகளை எதற்காக உருவாக்க வேண்டும் ? என்று கருதியிருந்தால் இந்தத் தமிழிசை இயக்கம் வளர்ந்திருக்க முடியுமா ? அவர்கள் வளர்க்காவிட்டால் வேறு யாராவது துணிந்து இந்த அளவிற்கு வளர்த்திருக்க முடியுமா ?

ஒருவேளை அரசியல்வாதிகள் முயன்றிருக்கலாம். அவர்கள் அதனால் சிறைச்சாலைக்குச் சென்றிருக்க முடியும். தமிழைக் காப்பாற்ற முடிந்திருக்கும். ஆனால் இந்தத் தமிழிசையின் வளர்ச்சி இடையறாது தொடர்ச்சி, எதிர்காலத்தை வெற்றிகொள்ளுமாறு நமக்குத் தந்திருக்கும் துணிவு, அத்தனையும் அரசியல் வாதிகளால் கிடைத்திருக்க முடியாது. இதனை நான் முதலமைச்சர் என்ற முறையிலும், சாதாரண குடிமகன் என்ற முறையிலும் துணிந்து மனநிறைவுடன் கூறிப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். செட்டிநாட்டு அரசர் முத்தையா அவர்களைப் பாராட்டும்போது எனக்கு உள்ள மனநிறைவே இதுதான்.

பிறரால்ஓரளவுசெய்யமுடிந்ததைமுழுமையாகச்செய்துவெற்றிகிடைக்கச்செய்தவர் செட்டிநாட்டு அரசர் முத்தையா அவர்கள் என்று சொல்வதில் பெருமைப்படுகின்றேன். தமிழிசை விழாவில் கலந்து கொள்ளவேண்டும் என்று செட்டிநாட்டு அரசர்

முத்தையா அவர்கள் பலமுறை என்னிடம் கேட்டார்கள். சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறுகிறது என்பதனை எடுத்துக்கூறி, அது முடிகின்ற நிலையில் நான் வந்து கலந்து கொள்கிறேன் என்று குறிப்பிட்டேன். அவ்வாறு குறிப்பிட்ட பின் நான் வரும்வரை இவ்விழாவினை நடத்தாமல் ஏன் காத்திருந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. நான் பாகவதர் அவர்களோடும், தண்டபாணி தேசிகர் அவர்களோடும், கலைவாணர் அண்ணன் என்.எஸ்.கே.அவர்களோடும் தொடர்பு கொண்டிருந்ததால் இப்பணியை எனக்கு அளிக்க வேண்டும் என்று விரும்பியிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

முதலமைச்சர் என்பதற்காக என்னை அவர்கள் அழைக்கவில்லை. முதலமைச்சர் பதவி என்பது விரும்பினால் வரும்; விரும்பாவிட்டால் போய்விடும். ஆனால், அந்தப் பழைய காலத் தொடர்புகள் யாராலும் மாற்றவும் முடியாது, போக்கவும் முடியாது, ஆகவே, அந்த முறையில் என்னை இங்கே அழைத்திருக்கிறார்கள்.

ஒரு மொழிக்குச் சொந்தக்காரர்களாக யார் யார் இருக்க வேண்டும் என்பதனை முதலிலேயே நாம் புரிந்து கொள்வது சரியாக இருக்கும் என்று கருதுகின்றேன். வசதி படைத்தவர்கள், செட்டிநாட்டு அரசர் முத்தையா போன்றவர்கள் இதற்காக உழைத்தாலும் கூட உழைக்கும் வர்க்கம் தாய்மொழியைக் காக்கத் துணிந்து முன்வந்தாக வேண்டும். அந்த நினைப்பும் நம்பிக்கையும் அவர்களது உயிர்மூச்சாக இருக்க வேண்டும். இங்கே தமிழிசைச் சங்கத்திற்காக பெரிய கட்டடம் உருவாகியுள்ளது. இது பணக்காரர்களுக்காக மட்டும் கட்டப் பெறவில்லை எனும் உணர்வு அனைத்துப் பிரிவு மக்களுக்கும் ஏற்படவேண்டும். இவ்வகையில் சமுதாயத்தின் அடித்தளத்து மக்கள் கலந்துகொண்டு தமிழிசையைக் கேட்டு அனுபவிக்கும் நல்ல வாய்ப்பு ஏற்படுமாறு இத்தமிழிசைச் சங்கம் பாடுபட்டு வருகிறது. அதற்காகத் தமிழிசைச் சங்கத்தைப் பாராட்ட விரும்புகிறேன்.

செட்டிநாட்டு அரசர் முத்தையா அவர்களுக்குத் ‘தமிழிசைக் காவலர்’ என்னும் சிறப்புப் பட்டம் பொறித்த பதக்கத்தை அவர் கழுத்திலே நான் அணிவிக்கும்பொழுது அப்பதக்கம் நன்றாகத் தெரிய வேண்டும் என்று விரும்பினேன். அதனால் அப்பதக்கத்தினை ஒழுங்காக அணிவித்து நன்றாகத் தெரியுமாறு செய்தேன். அப்பதக்கத்தின் விலை என்ன என்பது எனக்கத் தெரியாது. ஆனால் செட்டிநாட்டு அரசர் முத்தையா செய்திருக்கின்ற தொண்டிற்கு விலைமதிக்க முடியாது.

அவர்களின் தொண்டிற்கு அடிப்படையாக அமைந்தவர்கள் உழைக்கின்ற வர்க்கத்தினர் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவ்வர்க்கத்தினர் இன்னிசையைக் கேட்க வேண்டும். இன்னிசை என்பது காதுக்கு இனிமையான ஒலியாக இருந்துவிட்டால் மட்டும் போதாது. அதில் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் மக்களுக்குப் புரிந்தாக வேண்டும். இசையைவிட்டு இறைவனையே பார்க்க முடியாது என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். அத்தகைய நல்ல இசையைத் தாய்மொழியில்

பாடும்போது ஒவ்வொருவனும் உள்ளம் உருகுகின்றான். அதன் விளைவாக உற்சாகம் பெறுகின்றான். அந்தக் கணத்திலிருந்து துணிவு பெறுகின்றான். ஆகவே மொழிப்பற்று உயிர் மூச்சாக மாறுகின்றது. பின் தன்மானம் பிறக்கின்றது. இறுதியில் தன்மானத்திற்குச் சொந்தக்காரன் தமிழன் என்ற உணர்வு மேலோங்கி நிற்கின்றது.

இத்தகைய மாபெரும் திருப்பணியில் ஈடுபட்டிருக்கின்ற செட்டிநாட்டு அரச குடும்பத்தாருக்கு ஒவ்வொருவரும் நன்றி காட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். தமிழ் வளர்ச்சிக்கு நகரத்தார்கள் மிகவும் பணி செய்திருக்கிறார்கள். நகரத்து மக்கள் என்று அழைக்கப்படுகின்ற நகரத்தார்கள், தமிழை வளர்ப்பதற்கு உழைத்தார்கள் என்பதனை எண்ணிப் பார்க்கும் போது அவர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழ் வெறும் வழக்குமொழியாக, பேச்சுமொழியாக, மேடைப்பேச்சு மொழியாக, இருந்துவிடாமல் கருத்துக்கும், இந்த நாட்டின் வாழ்வுக்கும், இந்த நாட்டு மக்களின் மறுமலர்ச்சிக்கும் வழிதேடித்தருகின்ற ஒரு மொழியாக அமைந்தாக வேண்டும். அந்தத் திறமையும் தகுதியும் தமிழ் மொழிக்கு உண்டு என்பதனை நான் இங்கே பெருமையுடன்சொல்ல விரும்புகின்றேன்.

நான் பாரதிதாசன் அவர்களோடு பல காலம் தொடர்ந்து பழகுகின்ற வாய்ப்பைப் பெற்றவன். பாவேந்தர் அவர்கள் தமிழின் அருமை பெருமைகளை மிகத் தெளிவாக உலகுக்கு எடுத்து உணர்த்தியவர்கள். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களிடம் மிகவும் ஈடுபாடு கொண்ட பாவேந்தர் அவர்களின் உயர்ந்த வாழ்க்கையை நாம் ஒவ்வொருவரும் பாராட்ட வேண்டும்.

தமிழைப் பற்றி பேசுவதால் மட்டும் தமிழ் பாதுகாக்கப்பட்டு விடும் என்று யாரும் தயவுசெய்து எண்ணி ஏமாந்து விடாதீர்கள். நம்முடைய உயிர் மூச்சாகத் தமிழ் கலந்திருக்க வேண்டும். தமிழ் என்ற சிந்தனை நம் உள்ளத்தில் ஊறவேண்டும். இதுவே என் வேண்டுகோள்.

எதையும் தாங்கும் இதயம் நமக்கு வேண்டும். இதனைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்கு தந்திருக்கின்றார்கள். ஆனால், தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் எதையும் தாங்கும் இதயம் நமக்கு வேண்டாம். தமிழைத் தாங்குவோம். தமிழை மட்டும் தாங்குவோம். தமிழ் வாழ்வதற்காக இந்த உலகைத் தாங்குவோம்.

தமிழிசைச் சங்கத்தில் தமிழ்வளர, தமிழிசை வளர ஏற்பாடுகள் செய்யப் பெற்றுள்ளன என்பதறிந்து மகிழ்கின்றேன். இவ்வியக்கத்தைக் கட்டிக் காத்து வரும் செட்டிநாட்டு அரசர் முத்தையா அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து, இந்தப் பாருக்கு நல்ல பணி செய்த தமிழுக்குத் தொண்டாற்றி, தமிழ் உள்ளங்களுக்குச் சொந்தக்காராக வேண்டும் என்று வாழ்த்துகின்றேன். அண்ணா நாமம் வாழ்க. தமிழ் வாழ்க.

(29.04.1979 அன்று, மதுரையில் நடைபெற்ற இராஜா முத்தையா மன்றத்தின் ஐந்தாம் ஆண்டு தமிழிசை விழாவில் ஆற்றிய உரை)



கனிம வளங்கள் யாவும் நாட்டுக்கே சொந்தம்!

இந்த நிகழ்ச்சி தமிழகத்தில் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பாக நடந்திருக்க வேண்டும். தாமதமாக இப்போது நடைபெறுகிறது.

கனிம வளங்கள் நாட்டுக்குச் சொந்தமாக இருக்க வேண்டிய நிலையை விட்டு, தனிப்பட்டவர்கள் சிலர் இதனைத் தங்களுக்கு என்று ஆக்கிக் கொண்டு, அதன் மூலம் கிடைக்கும் இலாபத்தால் தாங்கள் மட்டும் பயன்பெறும் அளவிலும் ஆக்கி இருந்தார்கள்.

நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, சிலர் என்னிடம் வந்து, "கறுப்புக் கற்களை வெட்டியெடுக்கும் உரிமங்கள் சில நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இதே உரிமங்களை எங்களுக்கும் கொடுத்தால் நாங்கள் நல்ல முறையில் செயல்பட முடியும்" என்று கேட்டனர். இந்தக் கருப்பு கல்லால் என்ன லாபம் வந்துவிடப்போகிறது என்று நான் அவர்களிடம் சாதாரணமாகக் கேட்டேன். அவர்கள் என்னிடம் "நீங்கள் 2, 3 ஏக்கருக்கு எங்களுக்கு அனுமதி தந்தால் மாதம் ரூ.3 இலட்சம், 4 இலட்சம் என்று வீட்டில் உட்கார்ந்து சம்பாதிப்போம்" என்று கூறினார்.

நான் உடனே அதிகாரிகளை அழைத்து "எத்தனை ஏக்கர்கள் இவ்வாறு யார் யாருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது? என்று குறிப்புக் கொண்டு வாருங்கள்" என்று கூறினேன்.

அந்தக் குறிப்புகளை ஆழ்ந்து பார்த்தபின், இத்தகைய உரிமங்களை என்ன காரணத்தைக் கொண்டும் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்றும் அரசே இந்தப் பணிகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் உத்தரவு போட்டேன்.

சிலர் உரிமை வாங்கிய நிலத்துக்கு மேலாக அதிக நிலத்தில் கற்களை வெட்டி எடுத்ததாகவும் தகவல் கிடைத்துள்ளது.

ஒரு மனிதன், தான் வாழ்வதற்காக ஏதாவது ஒரு வகையில் தொழில் செய்வது அவனது உரிமை. அதைத் தடுக்க முடியாது. ஆனால் மற்றவர்களுக்குக் கிடைக்க வேண்டியதைத் தான் ஒருவனே எடுத்துக் கொள்வதை அனுமதிக்க முடியாது.

நான் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த நேரம், இலண்டன் நகரில் கறுப்புக் கல்லால் ஆன ஒரு கட்டடத்தைப் பார்த்தேன். விரும்பத்தகாத–கோடுகளைக் கிழித்துப் பாழாக்க முடியாத கற்களைக் கொண்டு கட்டப்பட்டிருந்தன.

இந்தக் கற்கள் எங்கிருந்து கொண்டுவரப்பட்டன ? என்று கேட்ட போது, இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டன'' என்றார்கள். நான் மறுபடியும் ''இந்தியாவின் எந்தப் பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்டன ?'' என்று கேட்டேன்.

''அவர்கள் என்னிடம் இந்தியாவில் பல பகுதிகளில் இருந்து வந்தாலும் தமிழ்நாட்டிலிருந்துதான் பெருமளவில் வருகிறது''என்றார்கள்.

இதனால் அரசுக்குக் கிடைத்த பலன் என்ன என்று எண்ணிப் பார்க்கத் தோன்றியது.

இந்த நிறுவனத்தின் மூலமாக ஏற்றுமதி செய்யும் பணிகளை இடைத்தரகர்கள் மூலமாகச் செய்ய வேண்டாம் என்று சொல்லி இருக்கிறேன். அதன்படி இன்று நேரடியாக ஒப்பந்தம் செய்து இருக்கிறார்கள்.

வெளிநாடுகளில் இந்தக் கற்கள் குறித்து விளம்பரம் செய்ய வேண்டும் என்று சொன்னேன். அதன்படி விளம்பரம் செய்யப்பட்டது.

இதனால் எத்தனையோ கோடி டாலர் கிடைக்கவும், அதனால் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படவும் வழி இருக்கிறது.

இந்த நிறுவனத்துக்காக ஓர் ஆராய்ச்சி நிறுவனம் அமைக்க வேண்டும் என்று அண்ணன் கல்யாணசுந்தரம் கூறினார். அப்படிப்பட்ட நிறுவனத்தைத் தமிழக அரசு நிச்சயமாக அமைக்கும்.

ஆக்கபூர்வமான யோசனைகளை அனுபவமிக்கவர்கள் சொன்னால் அதை ஏற்றுக் கொள்ளத் தமிழக அரசு தயாராக இருக்கிறது.

இதில் தவறு இருந்தால் அதற்கு யார் காரணமோ அவர்கள் அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள சிவப்பு மண்ணைத் தேடி வெளிநாட்டினர் பலர் வருகிறார்கள்; இந்த மண்ணை வாங்கிக் கொண்டு போகிறார்கள். ஆனால் அவர்கள் வெறும் மண்ணுக்காக வரவில்லை என்றும், அந்த மண்ணில் இருந்து இரசாயனப் பொருள் எடுக்கலாம் என்றும் என்னிடம் சொல்லிய போது அந்த மண்ணை யாருக்கும் கொடுக்கக் கூடாது என்று உத்தரவிட்டு இருக்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க !

(16.06.1979 அன்று, டாமின் நிறுவன கரும்பாறை ஏற்றுமதி துவக்க விழாவில் ஆற்றிய உரை)

சாதி பேதமற்ற சமுதாயம் அமைய சபதமேற்போம்!

என்னை வாழவைக்கும் தமிழகப் பெரியோர்களே! சுதந்திரத் தியாகிகளே! தாய்மார்களே! என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புக்களே! உங்கள் அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துக்கள்.

ஒரு நாட்டின் வரலாற்றில் சுதந்திர தினம் என்பது பெருமிதத்துடன் குறிக்க வேண்டிய திருநாளாகும். இந்தியத் திருநாட்டைப் பொறுத்த வரையில், எண்ணற்றோரின் தியாகங்களுக்குப் பிறகு விடுதலைக் கனியை நாம் பெற்று, சுவைத்து, மகிழ்ந்து கொண்டு இருக்கின்றோம். விடுதலை பெற்ற நாம் முறையான பாராளுமன்ற ஜனநாயகத்துக்குச் சொந்தக்காரர்களாகி இருக்கிறோம். அமைதியாகப் பொதுத் தேர்தல்களை நடத்தி, மக்களுக்கும் ஆட்சிக்கும் இடையில் தொடர்பை நெருக்கமாக்கி மக்களால், மக்களுக்காக மக்களது அரசு செயல்படுகின்ற ஜனநாயக அமைப்பு உருவாக்கப் பெற்றிருப்பது இந்தியத் துணை கண்ட மக்களின் அரிய சாதனைகளில் ஒன்றாகும். நாட்டு விடுதலைப் போரில் பெருந்தொண்டாற்றிய மூதறிஞர் இராஜாஜி மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று வற்புறுத்தியதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் எண்ணிப் பார்க்கிறேன்.

மூதறிஞர் இராஜாஜி சொல்லுகிறார்:

"மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கும்போது பிராந்தியச் சிந்தனைகள் குறைந்து போக வழி பிறக்கும். மத்திய அரசின் மீது பிராந்தியங்களின் நிர்ப்பந்தம் ஏற்படுவது குறைய முடியும். இதன் விளைவாகச் சிறு பிரச்சினைகளில் நேரத்தை வீணாக்காமல் பெரிய கொள்கை விஷயங்களிலும், திட்டமிடும் விஷயங்களிலும் மத்திய அரசு அதிகமாக கவனத்தைச் செலுத்த சந்தர்ப்பம் எற்படும்."

மூதறிஞர் இராஜாஜியின் இந்தக் கருத்து, சுதந்திரத் திருநாளில் நாம் சிந்திக்கவேண்டிய ஒன்றாகும்.

மாற்றங்களின்றி முன்னேற்றமில்லை. முன்னேற்றமில்லையேல் வரலாறு இல்லை. மாறுதல் என்பது சிறப்பாக அமையும்போதுதான், அதுவே முன்னேற்றத்திற்கான சீரான பாதையினையும் அமைத்துக் கொடுத்துவிடுகிறது. சமூக முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும் ஒரு நாட்டின் இன்றியமையாத தேவை என்றாலும். அதன் பலன்கள் ஏழை, எளிய மக்களுக்குக் கிடைப்பது அவசியம்.

தமிழ்ச் சமுதாயத்தில் 90 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் பரம எழைகள். இவர்களில் பலருக்கு வயிறார உணவு கிடைப்பதில்லை. இருக்க இடமில்லை. குடிநீர் வசதி போதுமான அளவில் இல்லை. தமிழக அரசின் திட்டங்கள் அனைத்தும் இவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் கவனம் வைத்தே போடப்பட்டு வருகிறது.

மக்கள் நல்வாழ்வுக்குக் கல்வி வளர்ச்சி அவசியம். அந்தக் கல்வி வளர்ச்சியைப் பெற, வறுமை தடையாக இருந்து விடக்கூடாது. வறுமை நிலையை வருமானத்தைக்

கொண்டு தான் அளவிட்டு அறிய வேண்டியுள்ளது. எனவே, கல்விச் சலுகையின் பலன் ஏழை, எளியோருக்குக் கிடைக்க வருமான வரம்பை நிர்ணயிப்பது அவசியமாகிறது.

பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் சமுதாயத்தைப் பற்றிக் கூறியுள்ள உண்மைகள் ஒன்றிரண்டை இங்கே குறிப்பிட விழைகிறேன்.

பேரறிஞர் அமரர் அண்ணா அவர்கள் தனது சட்டப்பேரவை உரையில் இந்தக் கொள்கையினைச் சந்தேகத்திற்கு இடமின்றித் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள்.

அண்ணா சொல்கிறார்:

“இலவசக் கல்வி என்று நாம் தத்துவரீதியாகச் சொல்லுகிறபோது பணமில்லை என்பதற்காக, ஒரு மாணவன் மேலே படிப்பதற்குரிய வாய்ப்பை இழந்துவிடக் கூடாது.... கல்வியை இலவசமாகச் செய்து விடலாம் என்று சொல்கிறார்கள். பாகுபாடே பார்க்காமல் இருப்பது நல்லது தான். சில விஷயங்களில் பாகுபடுத்தத்தான் வேண்டியிருக்கிறது. நெல்லும், பதரும் ஒன்றாகத்தான் இருக்கும். நெல்லைப் பாகுபடுத்திப் பார்க்கத்தான் வேண்டும். கல்லும், அரிசியும் ஒன்றாகத்தான் இருக்கும். கல்லை அரிசியிலிருந்து விலக்கத்தான் வேண்டும். ”

அண்ணா அவர்களின் அணுகுமுறையைத்தான் தமிழக அரசு கடைப்பிடித்துச் செயல்பட்டு வருகிறது. பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் காண விரும்பிய சமத்துவச் சமுதாயத்தைக் காண்பதில் ஏற்படுகின்ற தடை எதுவானாலும் அதை அப்புறப்படுத்தி செயல்பட தமிழக அரசு உறுதிபூண்டுள்ளது. சலுகைகள் ஓர் அரசு வெளியிடும்போது அந்தச் சலுகைகள் யாருக்காக வெளியிடப்படுகின்றனவோ அவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும். இல்லாவிட்டால் அரசின் நோக்கம் பூர்த்தியடையாது. இந்தக் கருத்தினை அண்ணாவே சட்டப்பேரவையில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

“சர்க்கார் மூலமாகக் கிடைக்கின்ற சலுகைகள் ஏற்கெனவே சமுதாயத்தில் வசதியோடு உள்ளவருக்குப் போய்ச் சேரவேண்டும். அதுதான் சமத்துவம் என்று யாராவது சொல்லுவார்களேயானால் அந்தச் சமத்துவத்தைப் பற்றி, அதனுடைய இலக்கணத்தைப் பற்றி, மறுபடியும் படிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்” என்று அண்ணா அவர்கள் கூறியுள்ளதை எனது மதிப்பிற்குரிய நண்பர்களுக்கு இந்த நேரத்தில் நினைவுபடுத்துவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். பெரியாரும், ஜாதியில் தாழ்த்தப்பட்டவர்கள் பொருளாதார விடுதலை பெறுவது அவசியம் என்று அடித்துச் சொல்லி இருக்கிறார்கள். 1938இல் ஆதிதிராவிடர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய பெரியார் அவர்கள், “உங்களுடைய கிளர்ச்சியானது பொருளாதாரத் துறையில் நீங்கள் மற்றவர்களால் ஏமாற்றப்படுவதும், வஞ்சிக்கப்படுவதும் ஒழிய வேண்டுமென்பதையே அஸ்திவாரமாகக் கொண்டிருக்க வேண்டும். அதில் தான் உங்களது விடுதலை இருக்கிறது.” எனக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக அரசைப் பொறுத்தமட்டில் பெரியார் அவர்களின் கொள்கைப்படி பேரறிஞர் அமரர் அண்ணா காட்டிய வழியில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழை எளிய

மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

தமிழகத்தின் நாலரைக் கோடி மக்களில் பாதிக்கப்பட்ட சில ஆயிரம்பேர் மட்டுமே எதிர்க்கிறார்கள் என்பதற்காகத் தமிழக அரசு அண்ணாவின் பாதையில் இருந்து மாறிச் செயல்படாது என்று உறுதியுடன் கூறிக் கொள்கிறேன். மத்தியில் நிலையான ஆட்சி இருந்தால்தான் மாநிலங்கள் மக்கள் நலனுக்கான பணிகளில் அமைதியுடனும், ஆர்வத்துடனும் ஈடுபட முடியும்.

மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள், தேசிய மொழிகள்—அனைத்துக்கும் சமநிலை, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழை மக்களின் முன்னேற்றம், உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகள் காக்கப்படுதல், தேர்தல்களில் தாய்க்குலத்திற்கென்று குறைந்தது தொடக்கத்தில் இருபத்தைந்து சதவிகிதமாவது தனித்தொகுதி ஏற்படுத்துதல், மதுவிலக்கை உறுதியுடன் அமல் செய்தல் போன்ற அடிப்படைக் கொள்கைகளை வைத்துத்தான் தமிழக அரசு சில பல நிலைகளை மேற்கொண்டு வருகிறது. இதில் சந்தர்ப்பவாதத்துக்குத் துளியும் இடமில்லை.

மதுவின் கொடுமையை ஒழிக்க வேண்டுமென்பதில் அண்ணல் காந்தியடிகள் பிடிவாதமாக இருந்தார். பெண்களும், மாணவர்களும் மதுக்கொடுமையை ஒழிப்பதில் தீவிர பங்கேற்க வேண்டும் என்று விரும்பினார். இந்த அரசைப் பொறுத்தவரையில் குடிப்பவர்கள் மீது அனுதாபமே தவிர ஆத்திரமில்லை. பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையில் தொல்லை கொடுக்காத குடிப்பழக்கமுள்ளவர்களைத் திருத்த விரும்புகிறதே தவிர தண்டிக்க விரும்பவில்லை. ஆனால், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், கடத்துபவர்கள், விற்பவர்கள் இவர்கள் சமூகத்தையே பாழ்படுத்துகின்றவர்கள். இவர்களை மக்களே காவல்துறையினருக்கு அடையாளம் காட்ட முன் வர வேண்டும்.

''தாய்க்குலமும், மாணவர்களும் மதுவிலக்கை வெற்றி பெறச் செய்வதில் சிறப்பான தொண்டாற்ற முடியும். குடிப்பழக்கம் உடையவர்களிடம் அன்பு செலுத்துவதன் மூலமாகவும், அவர்களுக்கான நற்பணிகளில் ஈடுபடுவதன் மூலமாகவும் அவர்களுடைய மனத்தைத் திருத்தி நல்வழிப்படுத்த இவர்களால் முடியும்'' என்று காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார்.

காந்தியடிகளின் புத்திமதியைச் சுதந்திர தினநாளில் நினைவுபடுத்துவது பயனுடையதாக இருக்குமென்று கருதுகிறேன். நமக்கு வழி காட்டிச் சென்றுள்ள பெரியோர்களின் கருத்தை மனத்தில் கொண்டு ஏற்றத்தாழ்வற்ற, சாதி பேதமற்ற சமுதாயத்தை நிறுவ நாம் அனைவரும் இந் நன்னாளில் சூளுரை மேற்கொள்வோமாக!

வாழ்க இந்திய சுதந்திரம்! வாழ்க அண்ணா நாமம்!

(15.08.1979 அன்று, விடுதலை நாள் விழாவை முன்னிட்டு தொலைக்காட்சியிலும், வானொலியிலும் ஆற்றிய உரை.)

அண்ணா அவர்கள் நூல்களை அரசே வெளியிடும்!

இங்கே எழுத்தாளர் ஜெகசிற்பியன் துணைவியாருக்குப் பரிசு அளிக்கப்பட்டது. அதனை பரிசு என்பதா ? காணிக்கை என்பதா ? இந்தக் காணிக்கையை ஜெகசிற்பியன் உயிரோடு இருந்து பெற்று இருந்தால் மகிழ்ச்சி அதிகமாக இருந்திருக்கும். தமிழகத்தின் துரதிருஷ்டம் பல நல்லவர்களை அவர்கள் மறைந்த பிறகுதான் மதிக்கிறோம். இந்த அம்மையாருக்குத் தந்த காணிக்கை, அவர் இழந்த இழப்புக்கு ஈடு ஆகாது.

பல எழுத்தாளார்கள் நூல்களை எழுதுகிறார்கள். அதை வெளியிட எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை நான் அறிவேன். அச்சகங்களின் படிக்கட்டுகளில் ஏறி இறங்குகிறார்கள். இதனால் நல்ல எழுத்தாளர்கள் சோர்ந்து விடுகிறார்கள். நிறைய பணம் பெற வேண்டியவர்கள் சில ஆயிரத்தைப் பெற்றுக் கொண்டு கொடுத்து விடுகிறார்கள். யாரோ இலட்சக்கணக்கில் பெறுகிறார்கள் இந்த நிலையைத் தடுக்க எழுத்தாளர்களுக்குப் பாதுகாப்புத் தர அரசால்தான் முடியும்.

எழுத்தாளர்கள் தாங்கள் எழுதிய நூல்களை அச்சடிக்க விரும்பி, அதனை அரசிடம் ஒப்படைத்து, அதன் பலனை அரசும் எடுத்துக் கொண்டு, எங்களுக்கும் கொடுங்கள் என்று கேட்கும் நிலை ஏற்படவேண்டும்.

இதனைச் செயல்படுத்த ஒரு குழு அமைக்கப்படும், இதைச் செய்ய அரசுக்கு ஆசை இருக்கிறது. இதற்கு அறிஞர்களும்,ஆன்றோர்களும் ஆசியும் ஒத்துழைப்பும் தரவேண்டும்.

அண்ணா அவர்கள் எழுதிய நூல்களை அரசே உரிமைபெற்று வெளியிட ஆவல் கொண்டுள்ளது. இதனை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்போம். அது போல் பலருடைய நூல்களையும் வெளியிட முயல்வோம்.

அதேபோல் காஞ்சியில் அண்ணா அவர்கள் வாழ்ந்த இல்லத்தை ‘அண்ணா நினைவாலயமாக’ ஆக்க ஆர்வம் கொண்டிருக்கிறோம்.

இதனைச் செயல்படுத்த நல்ல விவரம் தெரிந்தவர்–இதில் நம்பிக்கை உள்ளவர்களைக் கொண்ட சிறுகுழு அமைத்து நடவடிக்கை எடுக்கப்படும். அண்ணா வாழ்ந்த இல்லத்தை விலைபேசி, விலைக்கு வாங்க இருக்கிறோம்.

அண்ணா அவர்கள் பல நாடகங்களை எழுதி இருக்கிறார். சிந்திக்க வைக்கும் நாடகங்கள் அவை. எழுத்தில் ஒரு புதிய மரபை உருவாக்கினார். அதனைப் பலரும் பின்பற்றுகிறார்கள்.

(15.09.1979 அன்று, சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழாவில் ஆற்றிய உரை)

“தவறு செய்வோர் திருந்திட....”

குடித்ததற்காக மட்டுமே கைது செய்யப்பட்டிருப்பவர்களும், தண்டனை அடைந்து சிறையில் இருப்பவர்களும் உடனடியாக விடுதலை செய்யப்படுவார்கள். ஆனால், குடித்துவிட்டுக் கலாட்டா செய்து வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டதற்காகக் கைதானவர்களும், தண்டனை விதிக்கப்பட்டவர்களும் விடுதலை செய்யப்படமாட்டார்கள்.

சாராயம் காய்ச்சியதாகவும், சாராயம் கடத்தியதாகவும், அப்படிப்பட்டவர்களுக்கு உதவியதாகவும் கைதானவர்களும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களும் விடுதலை செய்யப்படமாட்டார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மீதும், சாராயக் கடத்தல்காரர்கள் மீதும் தொடர்ந்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தவறு செய்கிறவர்களின் உள்ளத்தில் அச்சத்தை ஏற்படுத்தவே மதுவிலக்குச் சட்டத்தைக் கடுமையாக்கினோம். மதுவிலக்கைத் தீவிரப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டத்தால் ஒரு பாவமும் அறியாத ஏழைக் குடும்பங்கள் தவிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்றி வந்த கணவன்மார்கள் சிறையில் இருப்பதால் பல ஏழைக் குடும்பங்கள் அவதிப்படுகின்றன. அதன் காரணமாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது. எங்களைப் பொறுத்தவரை, அடித்தளத்தில் உள்ள மக்கள் துன்பப்படக் கூடாது; அவர்கள் திருந்த வேண்டும் என்பதற்காகவே இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தோம்.

இதைச் செய்வதால் குடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுவிட்டது என்று அர்த்தமல்ல. முதல் தடவையாகக் குடித்துவிட்டுக் குற்றம் செய்தவர்களுக்குத் திருந்த வாய்ப்புத்தர வேண்டும் என்பதற்காகவே இதைச் செய்கிறோம். ஆனால், குடித்துவிட்டு வன்முறையில் ஈடுபட்டவர்களையெல்லாம் என்னால் காப்பாற்ற முடியாது. அவர்களை அவர்கள் தான் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

மது அருந்திவிட்டு வீட்டிலேயே இருக்கலாம் என்று நினைப்பவர்கள் அதைச் சட்டப்படி செய்ய வேண்டும். இப்படி நான் கூறிவிட்டதால் எல்லோரும் இனி கள்ளச் சாராயம் குடிக்கலாம் என்று கருதி விடாதீர்கள். அப்படிச் செய்வது நமது நாட்டிற்கும் நல்லதல்ல; உங்கள் வீட்டிற்கும் நல்லதல்ல; கொண்டிருக்கும் கொள்கைக்கும் நல்லதல்ல.

குடித்துவிட்டு வரும் கணவனிடமிருந்து அடிவாங்கும் தாய்மார்களை, அதனால் சோற்றுக்கு வழியின்றித் திண்டாடும் குடும்பங்களைக் காக்க வேண்டும் என்பது

எனது ஆசை. அதை நிறைவேற்றத்தான் சட்டம் கொண்டு வந்தேன். அந்தச் சட்டத்தால் ஏதேனும் விபரீதம் ஏற்பட்டால், அதைத் தவிர்க்க வேண்டியதும் அரசின் கடமையாகும்.

குடிப்பதனால் கைது செய்யப்படுகிறவர்கள் தண்டிக்கப்படும்போது தாய்மார்கள் கஷ்டப்படுவதைப் பற்றியும், சம்பாதித்துப் போட ஆளில்லாமல் கஷ்டப்படுவது பற்றியும், சிந்தித்துப் பார்க்காமல் இருக்க முடியாது. அப்படியிருந்தால் அண்ணாவின் தம்பியாக இருக்க முடியாது! நான் பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்று சொல்ல நான் விரும்பவில்லை. இந்தச் சட்டத்தைக் கடைப்பிடிக்கும் போது கூட, தாய்மார்கள் கண்ணீர் சிந்தக் கூடாது என்பதே என் நோக்கமாகும். அதே நேரத்தில் மதுவிலக்கைத் தீவிரமாக அமல்படுத்தவும் செய்வோம்.

அண்ணா நாமம் வாழ்க!

(20.09.1979 அன்று, தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ஆற்றிய உரை.)

RAJAJI

மாணவர்கள் யாருடைய தூண்டுதலுக்கும் இரையாகக் கூடாது!

அ.தி.மு.க. வை நான் தொடங்கியதும் முதல் முறையாக மூதறிஞர் இராஜாஜியைச் சந்தித்தேன். அவர் ஆசி கூறி என் கையைப் பிடித்து, அவரது உறுதியினால் கண்ணீர் விடவில்லை—என்னைப் போன்றவர்கள் என்றால் கண்ணீர் விட்டுப் பேசியிருப்பார்கள்—கண்ணீர் விடாமல் உறுதியோடு பேசினார்.

மதுவிலக்கு ரத்தினால் நாட்டு மக்களை எங்கேயோ அழைத்துச் செல்கிறார்கள்: அவர்கள் நல்வழியில் வாழ உத்தரவாதம் அளிக்க வேண்டும்'' என்று என்னிடம் சொன்னார்கள். காலம் நிச்சயம் செய்யும் என்றேன். அந்தக் காட்சியைப் பார்க்க நான் உயிரோட இருக்க வேண்டுமே என்றார். அவர் உயிரோடு இல்லா விட்டாலும் இந்தச்சிலை நாம் செய்யும் கொள்கைத் திட்டங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறது.

தமிழக அரசு எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்தியை ஆட்சிமொழியாக ஏற்காது. எந்த வகையிலும் அதை அனுமதிக்காது. நாலே முக்கால் கோடி தமிழக மக்களின் சார்பில் இராமச்சந்திரன் என்ற முறையில் இல்லாமல், முதலமைச்சர் என்ற முறையில் இதைக் கூறுகின்றேன்.

இராஜாஜி சிலை நிறுவப்பட்டுள்ளது. வடக்குக் கடற்கரைச் சாலைக்கு இராஜாஜி சாலை என்றும் பெயரிடப்பட்டுள்ளது. இராஜாஜி பிறந்த ஊர்ப்பக்கத்தில் இருக்கும் சிப்காட் நகருக்கு இராஜாஜி நகர் என்று பெயர் மாற்றப்படும்.

தொழிலாளர்கள் இனி, வன்முறையில் இறங்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையில், உயிருக்கு ஆபத்து விளைவிக்கின்ற வகையில் உள்ள வழக்குகளைத் தவிர, மற்ற எல்லா வழக்குகளும் வாபஸ் பெறப்படும். தொழிலாளர் எந்தக் கட்சியினராக இருந்தாலும் வாபஸ் பெறப்படும்.

இனி, தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபடாமல், பேச்சுவார்த்தையின் மூலம் சமரசமாகத் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவார்கள் என நினைக்கிறேன். மீண்டும் வன்முறையில் இதுபோன்று அரசு வழக்குகளை வாபஸ் பெறும் என்று நினைத்தால் அது நிச்சயம் இருக்காது.

மாணவர்கள் மீதும் பல்வேறு வழக்குகள் உள்ளன. உயிருக்கு ஆபத்து விளைவிக்கின்ற குற்றங்களைத் தவிர, மற்ற எல்லா வழக்குகளும் வாபஸ் பெறப்படும் யாருடைய தூண்டுதலுக்கும் இரையாகாமல் மாணவர்கள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(24.12.1979 அன்று, சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இராஜாஜி முழு உருவச் சிலைத் திறப்பு விழாவில் ஆற்றிய உரை)

காமராஜரைப் போல வாழ்க்கையைக் கடைப்பிடிக்க வேண்டும்!

குலக்கல்வித் திட்டம், தமிழகத்தில் ஒரு பிரச்சினையை உருவாக்கியபோது காமராஜர் அந்தப் பிரச்சினையை முன்னிட்டு தமிழ்நாட்டின் முதல்வராகப் பொறுப்பேற்றார். குலக்கல்வித் திட்டத்தை அமலுக்கு எந்தக் கல்வியமைச்சர் சி.சுப்ரமணியம் அவர்கள் கொண்டு வந்தார்களோ, அவரைக் கொண்டே அந்தத் திட்டத்தை திரும்பப் பெற வைத்தார். இதுதான் காமராஜரது ராஜதந்திரம்.

நாடகத் தடைச் சட்டம் வந்தபோது அதன் கொடுமையைக் குறித்து அவரிடம் நாங்கள் எடுத்துரைத்தபோது அவர் ஆவன செய்வதாகச் சொல்லியதுடன், “நாடகத்தில் நீங்கள் சொல்லி வருகின்ற கருத்துக்களை பிறர் மனம் புண்படாமல் சொல்லுங்கள்” என்ற அறிவுரையையும் கூறினார்.

இந்தியத் துணை கண்டத்தில் மாபெரும் சக்தி வடநாட்டில் இருந்தபோது, தமிழகத்தில் தனித்தன்மையுடன் காங்கிரஸ் இயக்கத்தைக் காமராஜர் வைத்திருந்தார். அவர் ஒரு போதும் தலை வணங்கியதில்லை; யாரும் தலை வணங்கி நடப்பதை அவர் விரும்பியதும் இல்லை.

யாருக்கும் அடிபணியாமல்—அதே நேரத்தில் தம்முடைய கொள்கையையும் விட்டுக் கொடுக்காமல், அவர் தனித் தன்மையைக் காப்பாற்றியது போல இப்போதும் தனித்தன்மை காக்கப்பட்டால்தான் இந்தியத் துணை கண்டம் காப்பாற்றப்படும்.

காமராஜர் நுணுக்கமாகப் பிரச்சினைகளை அறிந்து ஆராய்ந்து வைத்திருந்தார். அவரைப் போல நாமும் ஒழுங்கான வாழ்க்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் – அவரைப் பின்பற்ற வேண்டும் என்பதை நினைவு கூர்வதற்குத்தான் இந்தப் பிறந்த நாள் விழாவை நடத்துகிறோம்.

அண்ணா நாமம் வாழ்க!

(15.07.1980அன்று, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாள் விழாவில் ஆற்றிய உரை)



கலைஞர்களுக்குப் பாராட்டே ஊட்டச்சத்து !

நலிந்த நிலையில் உள்ள கலைஞர்களுக்குப் பொற்கிழியாக இங்கே ரூ.500 வழங்கப்பட்டது. நியாயமாக 3 வேளை உண்ண இந்தப் பணம் ஒரு மாதத்திற்குப் போதுமா ?

ஆனால் இந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டபோது அவர்கள் அடைந்த மகிழ்ச்சியைக் கவனிக்க வேண்டும்.

பணத்தைப் பற்றி நினைக்காமல் நம்மை மதிக்க–நினைவுபடுத்த தமிழக மக்கள் தயாராக இருக்கின்றனரே என்று அறிந்து மகிழ்ச்சி கொள்கின்றனர்.

கலைஞர்கள் யாராக இருந்தாலும் சரி – நடிகராக இருந்தாலும், நாட்டியமாடுபவராக இருந்தாலும், இசை வல்லுனராக இருந்தாலும் அவர்களை மக்கள் மதிக்கும்போது பாராட்டும்போது அவர்களுக்குத் திருப்தி ஏற்படுகிறது.

இதுதான் நாம் அவர்களுக்கு அளிக்கும் ஊட்டச்சத்து ஆகும். பணத்தால் அல்ல.

பிறரால் பாராட்டப்படுகிறோம். மதிக்கப்படுகிறோம். அந்த வகையில் நம் கலைத் தொழில் இருக்கிறது என்று எண்ணும் திருப்தி அவர்களுக்கு மேலும் ஊக்கத்தை அளிக்கும்.

பாராட்டுவிழா நடத்தி கௌரவிக்கும் இந்தச் செயல் பாராட்டுக்குரியது.

(10.08.1980 அன்று, சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் வெள்ளி விழாவில் ஆற்றிய உரை.)

அச்சம் தவிர்ப்போம்! அறவழி நடப்போம்!

அன்புக்குரிய உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களே, நீதிபதிகளே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, தலைமைச் செயலர் அவர்களே, செயலர்களே, சட்ட மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் அவர்களே, சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு இராஜாராம் அவர்களே, சட்டப்பேரவை உறுப்பினர்களே, முப்படைத் தளபதிகளின் பொறுப்பேற்று நாட்டைக் காக்கும் நல்லோர்களே, சட்டம் – ஒழுங்கு – அமைதியைப் பாதுகாத்து வரும் காவல்துறையின் தலைவர்களே, காவல்துறை நண்பர்களே, என் எதிரே இருக்கும் இரத்தத்தின் இரத்தமான அன்பு உடன் பிறப்புக்களே! உங்கள் அனைவருக்கும் சுதந்திர தினத்தின் நல்வாழ்த்துக்களைத் தமிழக அரசின் சார்பிலும் அமைச்சரவை சார்பிலும் நன்றி உணர்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இருக்கின்ற, கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்ற அனைவருக்கும், உங்கள் அனைவரிடமும் மனம் திறந்து பேசுகின்ற வாய்ப்பை நல்கிய தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவருக்கும் கரம் கூப்பி மீண்டும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் விடுதலையை பெற்றுத் தந்த தியாகிகளையும், அறவழியில் போராட்டம் நடத்தி இந்திய நாட்டின் தந்தை என்று நம்மால் போற்றப்படுகின்ற மகாத்மா காந்திக்கும் அவரோடு சேர்ந்து உடமைகளையும், சுகங்களையும் இளமையிலேயே இழந்த இலட்சக்கணக்கானவர்களுக்கும், இழந்து என்றால் யாரோ பறித்து அல்ல, அவர்களாகவே முன்வந்து இந்திய விடுதலைக்காக இழந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் இன்று நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு நாட்டை விடுதலை செய்யும்போது எத்தனையோ பிரச்சினைகள் எழும் என்பதை வரலாற்றைப் பார்த்து தெரிந்து கொண்டு இருக்கிறோம். சுதந்திரம் எதற்காகப் பெறப்பட்டதோ அது இந்திய துணை கண்டத்து மக்கள் அனைவருக்கும் கிடைத்து விட்டதா என்றால் மகிழ்ச்சியோடு பதில் சொல்ல முடியாது என்பதை நேற்று தொலைக்காட்சியிலும், வானொலியிலும் உரையாற்றிய இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் வாக்கியத்திலிருந்து அறிகிறோம். நாட்டில் சுதந்திரம் எதற்காக வேண்டும்? எண்ண, எழுத, பேச உரிமை உண்டாக வேண்டும். நாட்டின் விடுதலைக்குப் பாதகம் இல்லாமல் சட்டம், ஒழுங்கு அமைதிக்குப் பாதகம் இல்லாமல் சோசலிச சமுதாயத்தை உருவாக்க அதைத் தகர்க்காமல் அந்தக் கருத்துக்களை வெளியிட வேண்டும்.

ஆனால் நாட்டின் அப்படிப் பேசப்படுகின்ற நிலைமைகளை, சிறிய குறைகளை மிகைப்படுத்தி பெரிதாக்கி செய்தி வெளியிடுகின்ற நிலைகளை நாம் காண்கிறோம். மக்கள் மனதில் சுதந்திர உணர்வு இல்லாமல், அந்த நாட்டு மக்களை அடிமைப்படுத்த வன்முறையாளர்கள் முயலுகிறார்கள். மக்களிடையே பீதியை உண்டாக்க, சோர்வு மனப்பான்மையை உண்டாக்க, அச்சத்தை உண்டாக்க திட்டமிட்டு

கும்பல்கள் முயலுவதையும், அதைப் பெரிதுபடுத்தி செய்தி வெளியிடுவதையும் பார்க்கிறோம். இதைப் பார்த்து நாட்டிலே அமைதி இல்லை என்று கருத வேண்டும் என்று அந்த வன்முறைக் கும்பல் கருதுகிறது. இந்த வன்முறைக் கும்பல்கள் நாட்டை யாருக்காவது அடிமைப்படுத்த, கொள்கை என்ற பெயரில் நாட்டில் எப்படியாவது நமது சுதந்திரத்தை அழித்து, மனிதர்களை இயந்திரங்களாக்கி அவர்களுடைய உணர்வுகளை அடிமைப்படுத்தி மாசு கற்பிக்க முயற்சி செய்வதை, சுதந்திரத்தில் நம்பிக்கை உள்ள யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற உறுதியை, சபதத்தை நாம் இன்று எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். வழக்கு மன்றத்தில் வழக்குரைஞர்கள் தங்களுக்காக வாதாடுவது என்றால் மக்களுக்காக வாதாட யாரும் இருக்கமாட்டார்கள். ஆலைகளில் வேலை செய்பவர்களாக இருந்தாலும் சரி, நெய்து கொடுக்கும் நெசவாளர்களானாலும் சரி, போக்குவரத்தை இயக்குகின்ற ஓட்டுநர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் அனைவரும் எங்களுக்குத் தேவையானதை மட்டும் செய்வோம், மற்றவர்களுக்குச் செய்யமாட்டோம் என்று கூறினால் அதை நாடு ஏற்றுக்கொள்ள இயலாது. அவர்கள் 60 கோடி மக்களுக்காக உழைக்கிறோம் என்ற உணர்வோடு பணியாற்ற வேண்டும். ஒருவர் உழைப்பு பலர் வாழ்க்கைக்கு உத்திரவாதம் தந்தாக வேண்டும். இதுதான் ஜனநாயகம். அதைத் தியாகத்துக்கு விலை என்று கருதாமல் மற்றவர்கள் தரும் காணிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர மற்றவர்களைத் துன்பப்படுத்தி, வருத்தி வேதனைப்படுத்தி காரியம் ஆற்றுபவர்கள் தமிழகத்தில் இருக்க மாட்டார்கள். இந்தியத் துணைக்கண்டத்திலும் இருக்க மாட்டார்கள்.

உதாரணமாக ஒரு மருத்துவர் தன்னுடைய குழந்தைகளுக்கு மட்டுமே மருத்துவம் பார்ப்பது என்றால் பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து அரசு அவரை மருத்துவராக்கத் தேவையில்லை. அப்படிச் செய்வது நாமே இந்த நாட்டைப் பழி வாங்குவதற்கு ஒப்பாகும். நாடு அவர்களுக்காக மட்டுமல்ல. நாட்டின் நல்வாழ்வுக்காக அவர்கள் இருக்கிறார்கள் என்பதைச் சிந்திப்பதோடு தேவையற்ற கருத்துக்களைப் பரப்ப வேண்டாம் என்று சுதந்திரத்தின் பெயரால் அரசின் சார்பில் நாட்டு மக்கள் அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன். சிந்திப்பது மட்டுமல்ல அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். ஒரு கருத்தைப் பேசுவது, விவாதிப்பது, விவாதித்துப் பிறகு பெரும்பான்மைக் கருத்தை ஏற்றுக் கொள்வதுதான் ஜனநாயகம். ஆட்சியாக இருந்தாலும் சரி, தனிப்பட்டவர்களானாலும் சரி; தாங்கள் விரும்புவதைப் பெரும்பான்மையினர் மீது திணிப்பது சர்வாதிகாரம். நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டு மாதம் முடிகிறது. வெறுப்பு உணர்வை மறந்துவிட்டு ஜாதி மத உணர்வை அறவே தூக்கி எறிந்துவிட்டு, என் பக்கத்தில் இருப்பவர் எந்த ஜாதி என்று தெரியாமல் இன்று சுதந்திர தினத்தைக் கொண்டாடுவது போல எதிர் காலத்திலும் கொண்டாடுவோம் என்ற உணர்வு உங்களுக்கு இருக்க வேண்டும் என்று அமைச்சரவை சார்பில் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். நாம்

அனைவரும் ஒன்றுபட்டால் நாட்டில் நடத்த முடியாதது எதுவும் இல்லை. நாம் அனைவரும் ஒன்றுபட்டு வாழ வேண்டிய நிலை உருவாகுமானால், உணர்வு பூர்வமாக, அச்சத்தை – பீதியைத் தூக்கி எறிந்துவிட்டு குறிக்கோளுக்காகப் பணியாற்றும் மாபெரும் வல்லமை ஏற்படும்.

ஒத்துழைப்பும் ஆதரவும் தந்தால் தமிழகம் மட்டுமல்ல; இந்தியத் துணை கண்டமே மகோன்னத நிலையை அடையும். இந்தியத் துணை கண்டத்தின் மீது படையெடுக்க யாருக்கும் துணிச்சல் வராது. மக்களை அச்சுறுத்த சுயநலக் கும்பல் வன்முறை மூலம் முயலுகிறார்கள். இளைஞர்களை, தாய்மார்களை, நாட்டிலுள்ள அனைவரையும் காக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அந்தப் பொறுப்பை அரசு நிறைவேற்றும்.

நீங்கள் யாரும் கவலைப்படத் தேவையில்லை. அச்சத்தைக் கைவிட்டு, சுதந்திரத்தைக் காப்பாற்றுவோம். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற அமரர்– அண்ணாவின் வழியில் தந்தை பெரியாரின் சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளை– மகாத்மா காந்தியின் அறவழியில் நிறைவேற்ற ஒருங்கிணைந்து பாடுபடுவோம். நன்றி உணர்வோடு உங்களைக் கைகூப்பிக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும்! நமக்காக இரத்தம் சிந்திய, தூக்குமேடை ஏறிய தூக்குமேடை ராஜகோபாலனை நேற்று தொலைக்காட்சியில் பார்த்தேன். அப்படிப்பட்டவர்கள் இலட்சக்கணக்கானவர்கள் எங்கெங்கோ இன்னும் உயிரோடு இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நன்றி கூறி, நம்முடைய வாழ்க்கையைப் பாதுகாத்த பெரியவர்களை வாழ்த்தி வணங்கி மீண்டும் நாம் அனைவரும் ஒன்றுபட்ட உணர்வோடு இருக்க வேண்டும் என்று கேட்டு அண்ணா நாமம் வாழ்க! இந்திய சுதந்திரம் வாழ்க! என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

அண்ணா நாமம் வாழ்க!.

(15.08.1980 அன்று, சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்ற விடுதலை நாள் விழாவில் ஆற்றிய உரை.)

சமாதானம், சமத்துவம், சகோதரத்துவப் பணியில் யுனெஸ்கோ ஆற்றிவரும் பங்கு மகத்தான பணியாகும்!

ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் கலாச்சார நிறுவனத்தின் தலைமை இயக்குநர் டாக்டர் எம்.போ அவர்களையும், அவர்கள் குடும்பத்தினரையும் தமிழகத்தில் வரவேற்கும் வாய்ப்பு பெற்றதை, நானும் என் அரசைச் சேர்ந்த மற்ற அமைச்சர்களும் பெரும் பேறாகவும், பெருமையாகவும் கருதுகின்றோம். யுனெஸ்கோ டைரக்டர் ஜெனரல் தமிழகத்திற்கு வருகை புரிந்துள்ளது இதுவே முதல் முறையாகும். அம்முறையில் எங்களுக்கு இவ்வருகை இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது.

தனிப்பட்ட முறையில் டாக்டர் எம்.போ அவர்கள் ஏற்கெனவே ஒருமுறை செனகல் நாட்டின் அதிபருடன் தமிழகத்திற்கு வந்துள்ளார்கள். யுனெஸ்கோவின் தலைவர் என்ற முறையிலும், தமிழகத்தின் உற்ற நண்பர் என்ற முறையிலும், அவரைத் தமிழகத்தின் நாலரைக் கோடி மக்களின் சார்பில் இன்று வரவேற்பதில் பேருவகை கொள்கின்றேன்.

சமாதானம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய அடிப்படைகளின் பேரில் புதியதொரு சமுதாயத்தைப் படைக்கும் பணியின் முன்னோடியாக, அந்த உணர்வுகளை முதலில் மக்களின் உள்ளத்தில் எழுப்பி, நிலைநிறுத்த வேண்டும் என்பது மனித சமுதாயத்தின் நலனில் நாட்டம் கொண்ட அனைவரின் ஒருமித்த கருத்தாகும். இப்பணியில் யுனெஸ்கோ ஆற்றிவரும் பங்கு மகத்தானது. எழுத்தறிவின்மையை அறவே அகற்றுதல், அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளித்தல், சமூக இன வேறுபாடுகளைக் களைதல், கிழக்கு, மேற்கு நாடுகளின் கலாச்சாரங்களை இரு தரப்பினரும் அறிந்து பாராட்டி போற்றி பேணுவதற்கான சூழ்நிலையை உருவாக்குதல், வாழ்க்கைத்தரம் உயர்வதற்கான வழிவகைகளைக் காண்பதில் அறிவுபூர்வமான ஆராய்ச்சி நடத்துதல் ஆகியவையே யுனெஸ்கோவின் ஐம்பெரும் கொள்கைகளாகும்.

இந்த உயரிய கோட்பாடுகளை இந்திய நாடு என்றுமே ஏற்றிப் போற்றியுள்ளது என்பது வரலாறு கண்ட உண்மையாகும். அதிலும் குறிப்பாக, இந்திய துணை கண்டத்தின் பகுதியான தமிழ்நாட்டின் பண்பாட்டோடும், பாரம்பரியத்தோடும் ஒன்றி நிற்பவை இந்தக் கோட்பாடுகள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ‘‘யாதும் ஊரே; யாவரும் கேளிர்’’ என்ற உலகப் பொதுமையை உணர்த்தியவர் தமிழ்க் கவிஞர் கணியன் பூங்குன்றனார். இன, சமூக, தேசிய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, மக்கள் அனைவரும் வளமான, வாய்மையான வாழ்வு வாழ்ந்து, தங்கள் உயர்வுக்கும், அதன்மூலம், தரணியின் உயர்வுக்கும் பாடுபட வேண்டும் என்ற உணர்வு, இந்திய மக்களுக்கும், குறிப்பாகத் தமிழக மக்களுக்கும் என்றுமே தலையாய உணர்வாக அமைந்துள்ளது.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், தன்னுடைய வருவாயில் ஏறத்தாழ 25 விழுக்காட்டைக் கல்வியின் வளர்ச்சிக்காக ஒதுக்கி, பள்ளிச் சிறுவர்களிடையே

மட்டுமல்லாமல், பாமர மக்களிடையேயும் கல்வி அறிவைப் பரப்பி முற்போக்கான பல திட்டங்களை நாம் நிறைவேற்றி வருகின்றோம். சாதி, மத, இன வேறுபாடின்றி மாணவர் அனைவருக்கும், 12ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வி தமிழ்நாட்டில் அளிக்கப்படுகிறது. 8ஆம் வகுப்பு வரை ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவும் இலவசமாக வழங்கப்படுகின்றது. 1 முதல் 3 வகுப்புகள் வரை பயிலும் ஏழைக் குழந்தைகளுக்குப் புத்தகங்கள், மற்ற கல்வி சாதனங்கள், பள்ளிச் சீருடைகள் ஆகியவற்றை அரசே தன் நிதியிலிருந்து வழங்கி வருகின்றது.

கடல் கடந்து வாழும் தமிழருக்குத் தமிழ் மொழிப் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகளும், வசதிகளும் செய்து தருவதில் இந்த அரசு மிகுந்த நாட்டம் கொண்டுள்ளது.

எங்கள் அமைச்சரவையில், என் தோழர்களாகப் பணியாற்றும் நிதி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன், கல்வி அமைச்சர் திரு.அரங்கநாயகம் ஆகியோர் அண்மையில் மொரிஷியஸ், செஷஸ்ஸ் தீவுகளுக்கும் தமிழர்கள் வாழும் மற்ற பகுதிகளுக்கும் சென்று, அவர்களுடன் தமிழ்த் தாயகம் தொடர்ந்து கலாச்சார உறவு கொள்ள திட்டங்களை வகுப்பதற்குப் பரிந்துரைகள் செய்துள்ளனர். இதற்காக விரிவான திட்டம் ஒன்றைத் தமிழகம் விரைவிலேயே வகுத்து யுனெஸ்கோவிற்கு, மத்திய அரசின் மூலம் அனுப்பி வைக்கும். இத்திட்டத்திற்கு யுனெஸ்கோவின் ஆதரவும், உதவியும் தாராளமாகக் கிடைக்குமென்று நான் எதிர்பார்க்கிறேன்.

''அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும் உள்ளழிக்கலாகா அரண்'' என்று உலகக் குடிமகனான தமிழ்நாட்டைச் சேர்ந்த திருவள்ளுவர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எடுத்துக் காட்டியுள்ளார்கள். சொந்த நாட்டுப் பண்பாட்டிலே உறுதியாக ஊன்றி நின்று, அதே சமயத்தில் உலக நாடுகளின் கலாச்சார வளம், அறிவியல் கோட்பாடுகள் ஆகியவற்றினாலும் பலன் பெறும் வகையில் இந்திய மக்கள் தங்கள் தாய் நாட்டுத் தரையிலே கால் ஊன்றி தரணி முழுவதையும் அரவணைக்கக் கரங்களை எதிர் நீட்டுவார்கள் என்று தேசியக் கவி தாகூரும் நாட்டின் தந்தை மகாத்மா காந்தியும் இலட்சியக் கனவு கண்டார்கள். அந்தக் கனவை நனவாக்கும் பணியில்தான் தமிழக அரசு தமிழ் மக்களின் பேராதரவுடன் முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது.

இதுவரை தமிழ்நாட்டுக் கலாச்சாரத்தைப் போற்றிப் பேண பல்வேறு திட்டங்களின் மூலம் பெரும் உதவி அளித்து வந்துள்ள யுனெஸ்கோ நிறுவனம், நாம் ஏற்றுக் கொண்டுள்ள புத்துலகப் படைப்புப் பணியில் எக்காலத்திலும் நமக்கு உறுதுணையாய் நின்று ஏற்ற உதவிகளைச் செய்ய முன்வரும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

செனகல் குடியரசின் அதிபர் டாக்டர் செங்கோர் அவர்கள் திராவிட மொழி ஆராய்ச்சியில் ஆழ்ந்த ஈடுபாடும், தேர்ந்த புலமையும் பெற்றவர்கள், புகழ்பெற்ற கவிஞரும் கூட அடுத்த உலகத் தமிழ் மாநாடு தம் நாட்டுத் தலைநகரான டக்கார் நகரில் நடக்க வேண்டுமென்று அவர்கள் அழைப்பு விடுத்திருந்தார்கள். அடுத்த உலகத் தமிழ்

மாநாடு, தமிழகத்தில் சங்கம் வளர்த்த மதுரையம்பதியில் 81ஆம் ஆண்டு சனவரியில் கூடவிருக்கின்றது. அம்மாநாட்டிற்கு யுனெஸ்கோவின் தலைவர் என்ற முறையில் தாங்களும், தமிழில் மிகுந்த ஈடுபாடு கொண்ட செனகல் நாட்டு அதிபர் டாக்டர் செங்கோர் அவர்களும் கலந்து கொள்ள வசதிப்படுமென்று நான் எதிர்பார்க்கின்றேன்.

தங்களை வரவேற்க இன்று நடக்கும் இந்த விருந்துபசாரத்தில் திரு.மா.பொ.சி அவர்களும் கலந்து கொள்வது எனக்குப் பெருமகிழ்ச்சியை அளிக்கின்றது. திரு.ம.பொ.சி. மேலவைத் தலைவர் மட்டுமல்ல; அவர் தாய் நாட்டின் விடுதலைப் பேராட்டத்தில் முன்னணியில் நின்றவர். தாய் நாட்டிற்காகவும், தமிழுக்காகவும் பல தியாகங்களைச் செய்தவர்; தொடர்ந்து செய்து வருபவர். அவர் இந்த விழாவில் கலந்து கொள்வது மிகவும் பொருத்தமானதாகும்.

தமிழ் மொழியில் பேரார்வமும், நீங்காத பற்றும் கொண்ட தமிழ் மக்கள் உயர்வடைய வழி காட்டியவர் எங்கள் தலைவர் அண்ணா. தமிழ் அன்பையும், தமிழ் உணர்வையும் அவர் நாட்டுக்குக் காணிக்கையாக்கி அதிகாரப் பொறுப்பை ஏற்றவர். அவர் வழியில் நாங்கள் நடக்கின்றோம் என்று சொல்வதில் பெருமை கொள்கின்றோம். இன்று இந்த அரசு செயல்படுத்தி வரும் முற்போக்கான திட்டங்கள் அண்ணா எங்களுக்கு வகுத்துத் தந்தவை. அண்ணா காட்டிய பாதையில் நாங்கள் உறுதியாக நின்று, மக்கள் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டு வருகிறோம்.

புதிய சமுதாயத்தை உருவாக்க அறிவியல் முறைக்கு ஏற்ப தொண்டாற்றிவரும் யுனெஸ்கோவிற்கும், தொன்று தொட்டே உலகப் பொதுமையைப் போற்றி வந்துள்ள பாரம்பரியப் பெருமையைக் கொண்ட தமிழகத்திற்கும் நெருங்கிய, நிலையான உறவும், அந்த அடிப்படையில் ஒத்துழைப்பும் ஏற்படுவதற்குத் தங்கள் வருகை ஒரு முன்னோடியாக அமையும் என்று கருதுகின்றேன். அந்த உறவு மலர்ந்து, வளர்ந்து உலகே அதனால் பயன்பெறும் நாள் வெகு விரைவில் வருமென்று எதிர்பார்க்கின்றேன். மீண்டும் தங்களுக்கு இனிய வாழ்த்துக்களைத் கூறி, தங்கள் வரவு நல்வரவாகுக, நம் உறவு தழைத்து ஓங்குக என்று வாழ்த்துகின்றேன்.

அண்ணா நாமம் வாழ்க!

(18.08.1980 அன்று, சென்னைக்கு வருகைதந்த யுனெஸ்கோ டைரக்டர் ஜெனரல் டாக்டர் எம்.போ.அவர்களை வரவேற்று பேசியது)

அத்தனைத் தடைகளையும் எதிர்த்து தொடர்ந்து வெற்றிபெற ஒத்துழைப்புத் தேவை!

இன்று நாகரிகம் என்னும் பெயரில் நாம் கைக்கொள்ளும் பழக்க வழக்கங்கள், உண்ணும் உணவு யாவும், நம் உடல் நலத்தைப் பாதுகாக்கத்தக்கதாக இல்லை. சத்தில்லாத உணவை உண்ணுகிறோம். காபி, டீ போன்ற கேடு விளைவிக்கும் பானங்களை அருந்துகிறோம். சிலர் புகை பிடிக்கிறார்கள். இவை நமது உடல் நலத்தைச் சிறிது சிறிதாகக் கெடச் செய்து, நம்மை நோய்க்கு இருப்பிடமாகச் செய்து விடுகிறது. உடற்பயிற்சி என்பது நமது அன்றாட வாழ்க்கையில் ஒரு அம்சமாக இல்லை. இப்படிப்பட்ட இயந்திர வாழ்க்கையில் இன்று மனித இனத்தை அழித்துக் கொண்டிருக்கும் கொடிய நோய் காச நோய்.

உலக நாடுகள் இந்த நோயை எதிர்த்துப் போராடுவதில் முனைந்து செயல்பட்டு ஓரளவு வெற்றியும் கண்டுள்ளன. நமது இந்தியத் துணை கண்டத்தில் காசநோய் ஒரு பெரிய ஆட்கொல்லியாக இருந்து வருகிறது. அறுபத்து மூன்று கோடி மக்கள்தொகை கொண்ட நமது நாட்டில் சுமார் 99 இலட்சம் பேர் காச நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்று புள்ளி விவரம் கூறுகிறது. அதாவது ஆயிரம் பேர்களில் பதினைந்து பேர் காச நோயாளிகள். இந்த 90 இலட்சம் பேர்களில் 25 இலட்சம் பேர், பிறருக்கும் இந்த நோயைத் தொற்றவைக்கும் நிலையில் உள்ளனர்.

இந்தியத் துணைக் கண்டத்தில் காசநோய் காரணமாக ஆண்டுதோறும் ஐந்து இலட்சம் மக்கள் சாவைத் தழுவுகின்றனர். தமிழகத்தின் 4 கோடி மக்களில் 10 இலட்சம் பேர் காசநோய்க்கு உள்ளாகி இருக்கிறார்கள். இவர்களில் 2½ இலட்சம் பேர், முழு காச நோயாளிகளாக உள்ளனர். இது மகிழ்ச்சி தரத்தக்க ஒன்றல்ல. பல துறைகளில் நாட்டு முன்னேற்றத்திற்காகவும் மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் மனித இனத்தின் வளத்துக்காகவும் பாடுபட்டுவரும் இந்நேரத்தில், மக்களில் ஒரு பகுதியினர் காசநோயால் அவதியுற்று வருவது பெரிதும் வேதனைக்குரிய செய்தியாகும். எனவே, இந்த நிலையை மாற்றியே தீரவேண்டும். போர் முனைப்புடனும், தற்காப்பு உணர்வுடனும், நாம் அனைவரும் செயல்பட்டு நமது மக்களை, இந்தக் கொடிய நோயின் பிடியிலிருந்து, விடுவித்தாக வேண்டும்.

தமிழகத்தில் அனைத்து அரசு மருத்துவமனைகள், காச நோய் நிலையங்கள் ஆகியவற்றில் இந்த நோயுற்றவர்களுக்கு இலவசச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இப்படி சுமார் 9½ இலட்சம் பேர் சிகிச்சை பெறுகிறார்கள். தமிழகத்தில் காசநோயால் ஆண்டுதோறும் நாற்பத்தைந்தாயிரம் (45,000) உயிரிழப்புகள் ஏற்படுவதாகத் தெரிகிறது.

ஒரு காலத்தில் காசநோய், தீராத வியாதி என்ற நிலையிருந்தது. இன்று அந்த நிலை மாறிவிட்டது. அறிவியல் ஆராய்ச்சியாளர்களின் முயற்சியால் இந்நோயை எந்தக்

கட்டத்திலும் கட்டுப்படுத்திவிட முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. இப்பொழுது இந்த நோய்க்கிருமிகளை மனித உடலில் இருந்து விரட்டி, அழித்து, நோயை அறவே குணப்படுத்தி விட முடியும் என்பதோடு மட்டுமல்லாமல், நோய் வராமல் தடுத்திடவும் மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு அவை எளிதாகவும், இலவசமாகவும் கிடைக்கின்றன.

நாம் இவைகளையெல்லாம் பயன்படுத்தி இக்கொடிய நோய்க்கெதிராகப் போராடி வருகிறோம். இந்த நோய்வராமல் தடுப்பதில் கவனம் செலுத்தி வருகிறோம். பச்சிளம் குழந்தைகள், பள்ளி சிறுவர்கள், சிறுமிகள் ஆகியோருக்குக் காசநோய்த் தடுப்பு மருந்தான பி.சி.ஜி. அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இதுவரையில் 163 இலட்சம் பேர்களுக்கு இத்தடுப்பு மருந்து செலுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்காகப் புதிய கொள்கைகளையும், வழி முறைகளையும் வகுத்துச் செயல்பட்டு வருகிறோம்.

இப்பிரச்சினையை நாடு தழுவிய வகையில் அணுகி, நமது முயற்சிகளை முறைப்படுத்தி, ஆவன செய்ய இந்திய அரசு 1962ஆம் ஆண்டில் சிறந்த திட்டமொன்றை வகுத்துச் செயல்படுத்தத் துவங்கியது. காசநோயால் பீடிக்கப்படாதவர்களை, அந்நோய்களுக்காளாகாமல் தடுப்பது, ஏற்கெனவே நோய் தொற்றியிருப்பவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குத் தக்க சிகிச்சை அளித்து நோயைத் தீர்க்கும் தீவிரப் பணியில் ஈடுபடுவது ஆகிய இரண்டு செயற்பாடுகளும் அத்திட்டத்தின் அடிப்படை அம்சங்களாகும். காசநோயாளிகளைக் கண்டுபிடித்து, சிகிச்சையளித்து அவர்களைக் குணப்படுத்துவதன் மூலம் அவர்கள் நலம் பெறுவதோடு, அவர்களால் பிறருக்கு நோய் தொற்றக்கூடிய அபாயமும் அகற்றப்படுகிறது. ஏனெனில் ஒரு காச நோயாளி மூலம்தான், அந்நோய் பிறருக்குப் பரவுகிறது. காசநோயாளி இருமும் போதும், தும்மும் போதும் எண்ணற்ற காசநோய்க் கிருமிகள் வெளிப்பட்டு, காற்றில் கலந்து அருகில் உள்ளவர்கள் சுவாசிக்கும் போது அவர்களது உடம்பிலும் தொற்றிவிடுகிறது. இந்த நிலை இருக்கும் வரையில் சமுதாயம் இந்த நோயின் ஆபத்திலிருந்து நீங்கிவிட்டதாகக் கொள்ள முடியாது. இதை நாம் அனைவரும் உணர வேண்டும். நகரங்களில் வாழ்வோரும், கிராமங்களில் வாழ்வோரும், குறிப்பாக ஏழை, எளிய மக்கள், இந்த நோயின் தன்மை பற்றிய உண்மைகளை உணர்ந்து கொள்ளும் வகையில், விரிவான, விரைவான பிரச்சாரம் செய்யப்பட வேண்டும். இந்தப் பணியைக் காசநோய்க் கழகம் முழு மூச்சுடன் செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டில், எல்லா மாவட்டங்களிலும், மாவட்டக் காசநோய் நிலையங்களும் அவற்றைச் சார்ந்து, கிளை நிலையங்களும் உள்ளன. மற்றும் மாநிலத்தின் எல்லா மருத்துவமனைகளிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் காசநோய்க்கு இலவசச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோய் முற்றிய நிலையில் உள்ளவர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற அரசு காசநோய் மருத்துவமனைகள், சென்னை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, திருச்சி, மதுரை, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. இவை தவிர தனியார் மருத்துவமனைகள்,

கோவை, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இவை அனைத்திலும் மற்றும் இதர அரசு மருத்துவமனைகளிலும் காசநோயாளிகளுக்கென 3,583 படுக்கை வசதிகள் தமிழகத்தில் உள்ளன.

காசநோயாளிகள் மருத்துவமனைகளில் தங்கித்தான் சிகிச்சை பெற வேண்டுமென்பதில்லை. அவரவர்களின் இல்லங்களில் இருந்துகொண்டே, மருத்துவ ஆலோசனைகளை அவ்வப்போது பெற்று மருந்துகளை வேளை தவறாமல் முறையாகப் பயன்படுத்தி வந்தால் எளிதில் குணம் அடையலாம். தொடர்ச்சியான ஓய்வோ, உயர்ரக உணவோ தேவையில்லை. சாதாரணமாகக் கிடைக்கும் சத்துள்ள உணவுகளே போதுமானதென்று ஆராய்ச்சியின் பயனாய்க் கண்டறிந்துள்ளார்கள். இந்த விவரங்களைப் பாமர மக்களுக்குத் தெரிவித்தாக வேண்டும். காசநோய் சிகிச்சை சாதாரண மனிதனின் கைக்கு எட்டாத ஒன்று என்ற நிலை, இப்போது இல்லை என்பதையும், ஏழை எளியவர்களும் தக்க சிகிச்சையை எளிதாகப் பெற்று சிரமமின்றிக் குணம் அடையலாம் என்பதையும் அவர்களுக்கு உணர்த்த வேண்டும். இந்த அரிய பணியில் காசநோய்க் கழகம் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு செயலாற்றி வருவது பாராட்டுக்குரியது.

1939ஆம் ஆண்டில் இந்திய காசநோய்க் கழகம் தொடங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழ்நாடு காசநோய்க் கழகமும் துவங்கப்பெற்று சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. 1950 முதல் 1979வரை இக்கழகம், காசநோய் முத்திரை 10 பைசா, 20 பைசா வில்லைகள் விற்பனையின் மூலம் ரூ.95 இலட்சம் வரை திரட்டியுள்ளது.

இந்தப் பணம் ஏழை, எளிய குடும்பங்களைச் சார்ந்த காசநோயாளிகளுக்குச் சிகிச்சைக்காகப் பொருளுதவி புரியவும், காசநோய் மருத்துவ நிலையங்கள், சிகிச்சைப் பிரிவுகள் ஆகியவற்றை அமைக்கவும், விரிவாக்கவும், சிகிச்சை நிலையங்களுக்குத் தேவையான எக்ஸ்ரே போன்ற கருவிகள் வழங்கவும், காசநோய் பற்றிய விவரங்களைப் பொதுமக்களிடையே திரைப்படம், விளம்பரங்கள் மூலமாக பிரச்சாரம் செய்து பரப்புவதற்காகவும், காசநோய்க் கழகத்தால் பயன்படுத்தப்படுகிறது.

இத்தகைய தன்னியக்க நிறுவனம் ஒன்று தனித்து நின்று, இரக்கத்திற்குரியவர்களைப் பிணியிலிருந்து காப்பாற்றி அவர்களுக்கு நல்வாழ்வளிக்கும் சீரிய பணியில் ஈடுபட்டிருப்பது, போற்றிப் பாராட்டத்தக்க அரிய செயலாகும். எனவே, இக்கழகம் ஆற்றிவரும் அரும்பணியில் அதற்குத் துணை நிற்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். காசநோய்த் தடுப்பு முத்திரை வில்லைகளை 20 காசு கொடுத்து வாங்குவதன் மூலம் இந்த நோயால் அழியும் மனித உயிரைக் காப்பாற்ற நமக்குரிய சிறிய பங்கைச் செய்கிறோம் என்ற உணர்வினை நாம் அனைவரும் பெறவேண்டும். பெரிய தொகைகளைத்தான் அளிக்க வேண்டுமென்பதில்லை. சிறு தொகைகளே போதும்.

நாலரைக் கோடி தமிழக மக்கள் அனைவரும் இந்த இயக்கத்தில் தங்கள் பங்கைச் செய்தால், இக்கழகத்திற்குக் கணிசமான தொகை கிடைக்கும். கேளிக்கைக்காகவும்,

காபி, டீ, அருந்துவதற்கும், புகை பிடிப்பதற்கும், வெற்றிலை போடுவதற்கும் ஒவ்வொருவரும் எவ்வளவோ செலவிடுகிறீர்கள். ஒரு சிறிய தொகையைக் காசநோய்க் கழகத்துக்கு வழங்குவது உங்களுக்குச் சிரமமில்லை. எனவே இந்தப் பணியில், இந்த விற்பனை இயக்கத்தில் உங்களது சிறிய பங்கைச் செய்யுமாறு உங்களனைவரையும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் அளிக்கும் சிறிய தொகை உங்கள் உடன் பிறப்புகளின் உயிரைக் காக்க உதவுகிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

இந்த இயக்கத்தில் ஈடுபட்டுள்ள மாநில – மாவட்ட காசநோய்த் தடுப்பு கழகத்தார் அயராது பணியாற்றி, இப்பணியில் இந்தியத் துணை கண்டத்திலேயே முன்னணியில் நின்று, கடந்த 11 ஆண்டுகளாக வெற்றிக் கேடயத்தை ஈட்டித் தந்துள்ளனர். எனவே, காசநோய்க் கழகத்தாரும், அவர்களது வெற்றிக்குக் காரணமாயிருந்து வந்துள்ள உங்களனைவருக்கும் என் நன்றியைக் கூறி இக்கழகம் தனது பணியில் தொடர்ந்து வெற்றி பெற உங்களது முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க, வணக்கம்.

(14.10.1980 அன்று, சென்னை தொலைக்காட்சியில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் உரையை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி.ஹண்டே அவர்கள் படித்தார்கள்.)

நாட்டின் ஆண்மையைக் காப்பாற்றுவோர் காவல்துறையினரே!

திருவள்ளுவர் போக்குவரத்துக்கழக விழா

அரசியல்வாதிகளுக்குக் கோபம் வந்தாலும், மாணவர்கள் போராட்டத்தில் இறங்கினாலும், தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டாலும் அவர்களின் தாக்குதலுக்குரிய இலக்காக இருக்கின்ற ஒரே பொருள் அரசுப்பேருந்துதான். பஸ்களை தாக்கி சேதப்படுத்தினால் அதனால் ஏற்படும் நஷ்டத்தை அவர்களிடமிருந்தோ அவர்களது குடும்பத்தினரிடமிருந்தோ வசூலிப்பதற்கு ஏதுவாக ஒரு சட்டத்தைக் கொண்டு வரலாமா என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்தார்கள். தனது வாழ்க்கையை உதாரணமாக எடுத்துக்காட்டி தொழிலாளச் சகோதரர்கள் வாழ்வில் சேமிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

நம்முன்னே அமர்ந்திருக்கின்ற இந்தச் சிறுவர்களுக்கு உங்கள் வீட்டு இளம் செல்வங்களுக்கு அவர்களின் எதிர்கால வாழ்விற்கு என்ன செய்யப்போகின்றீர்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

(முதல்நாள் நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் முத்தாய்ப்பு வைப்பதுபோல் அமைந்தது காவல்துறையினர் நடத்திய விழா, அண்ணா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற அந்த விழா 123 ஆண்டுகாலக் காவல்துறையின் வரலாற்றின் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கதொரு சம்பவமாகும். நாட்டின் அமைதி காக்க தங்களின் உயிரைப் பணயம் வைத்துப் போராடுகின்ற காவலர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தர வேண்டியது ஒரு நல்ல அரசின் கடமை ஆகும் என்பதை உணர்ந்து அந்தச் செயலுக்குத்தான் ஒரு முன் உதாரணம் என்று உலகிற்குப் பறைசாற்றுவதைப் போல இரண்டு மாபெரும் திட்டங்களைத் துவக்கி வைத்தார் முதல்வர். காவலர்களுக்கு இதுவரை அரசு செய்துள்ள நன்மைகள் அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல் அமைந்திருக்கின்றன அந்த இரண்டு திட்டங்கள். ஒன்று 'காவலர்கள் வீட்டு வசதி வாரியம்', மற்றொன்று 'காவலர்களுக்கு மலிவு விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டம்'.)

காவல்துறை விழா

இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரை எனக்கு மிகவும் மகிழ்ச்சி தரக்கூடிய நிகழ்ச்சியாகும். எனது முதல் மனைவியின் தமையன் ஒரு காவலர்; தற்பொழுது ஓய்வு பெற்றிருக்கிறவர். அவருக்கு எத்தனை குழந்தைகள் – எத்தனை குழந்தைகள் என்று சொல்லும்போது உங்களால் புரிந்து கொள்ள முடியும். அவர் பணியில் இருக்கும்போது எவ்வளவு கஷ்டப்பட்டு குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியிருந்தது என்பதை நான் உடனிருந்து அனுபவித்து உணர்ந்தவன் என்ற வகையில் இப்படிப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்படும் போது என்னைவிட மனநிறைவு கொள்கிறவர்கள் வேறுயாரும் இருக்க முடியாது என்று சொல்வதில் யார் என்னிடம் கோபித்துக் கொண்டாலும் அதனைச் சொல்லியே தீருவேன்.

காவல்துறையைச் சேர்ந்தவர்கள் மீது பழி சுமத்தப்படுகின்றது; குற்றம் சொல்லப்படுகின்றது. சில நேரங்களில் சிலர் அந்தத் தவறுகளுக்கு ஆளாகின்றார்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். லஞ்சம் வாங்குவது என்பது காவல்துறையில் ஒரு மாமூலாகிவிட்டது என்று எங்கு பார்த்தாலும் பேசுகின்ற அளவுக்குச் சிலர் செய்கின்ற குற்றங்கள் பலர் தலையில் விடிகின்ற வகையில் ஒரு பட்டப் பெயரைச் சுமந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள். அதனை மாற்றியமைப்பதற்கு – அந்த கேவலமான கெட்ட பெயரிலிருந்து விடுதலை கிடைக்கச் செய்வதற்கு எந்தெந்த வகையில் முயற்சி செய்ய முடியுமோ அனைத்தையும் செய்ய வேண்டியது முதலமைச்சர் பொறுப்பில் இருக்கின்ற எனக்கும், என்னோடு ஒத்துழைக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கின்ற மாபெரும் பொறுப்பாகும் என்பதை உணர்ந்து நாங்கள் செயல்படுகின்றோம்.

எந்தக் காலத்திலும் குற்றம் சாட்டப்படக் கூடிய நிலையில் பழி சுமத்தப்படக்கூடிய நிலையில் காவல்துறை இருக்கக்கூடாது என்பது என்னுடைய நிச்சயமான உறுதியான கொள்கையாகும்.

என்னுடைய தாயை நான் சந்தேகிப்பது எவ்வளவு அவமானகரமானதாக இருக்குமோ அதுபோலக் காவல் துறையினரைச் சந்தேகிப்பது அவ்வளவு கேவலம் என்ற நினைவு நமக்கு ஏற்படுகின்ற வேளை தமிழகத்தில் உருவாக வேண்டுமென்று நான் எண்ணுகிறேன்.

நான் எங்கே வைத்து காவல்துறையினரைப் பற்றிப் பேசுகிறேன் என்பதை ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரு தாய்த் தன்மைக்கு ஈடாக என்னைப் பெற்றெடுத்த தாய்க்கு ஈடாக வைத்து எண்ணுகிறேன். இந்த நாட்டைக் காக்கின்றவர்கள், நாட்டின் பண்பைக் காக்கின்றவர்கள், பெண்மையைக் காப்பாற்றுகிறவர்கள், தன்மானத்தைக் காப்பாற்றுகின்றவர்கள், பொருளைக் காப்பாற்றுகின்றவர்கள், ஒழுக்கத்தைக் காப்பாற்றுகின்றவர்கள், ஒழுங்கை நிலை நாட்டுகின்றவர்கள், இந்த நாட்டின் ஆண்மையைக் காப்பாற்றுகின்றவர்கள் காவல்துறையினர். ஒரு தாய்த் தன்மைக்கு இலக்கணம் வேறு என்ன வேண்டும்.

சோழன் போக்குவரத்து நிலையத் திறப்பு விழா

நீண்ட தூரம் செல்கின்ற அரசாங்கப் பேருந்துகளில் ‘வயர்லெஸ்’ கருவிகளை அமைக்க வேண்டும் என்பது எனது ஆசை, திட்டமும் கூட, நடுக்காட்டில் பஸ் நின்றுவிட்டால் உடனடியாக அந்தக் கருவியைப் பயன்படுத்தி அடுத்த பஸ் நிலையத்திற்கு அதன் மூலம் தகவல் கொடுக்க முடியும்.

பினாமி நிலங்களைக் கைப்பற்றி நிலமில்லாத ஏழை மக்களுக்குக் கொடுத்தே தீருவோம். அதைத் தடுத்தால் தடுப்பவர்களைச் சட்டம் கொண்டு தடுப்போம்.

அரிசன மக்களுக்கு அரசு வழங்குகின்ற பட்டாக்களை விற்கவோ, அடகு வைக்கவோ கூடாது. சிலர் தங்களது ஏராளமான நிலங்களை தான் பிறந்த மண் என்று சொந்தம் கொண்டாடி அதனைக் காப்பாற்றிக் கொள்ள நினைக்கும்போது நீங்கள் கிடைப்பதை விட்டுவிடக் கூடாது. விவசாயத் தொழிலாளியாக உள்ள ஏழை மக்கள்

யாருக்கும் அடிமைகள் அல்ல என்ற உணர்வை பெற்றாக வேண்டும். பதவிக்கு வந்த பிறகு குற்றச்சாட்டுக்கு ஆளானால் அது நாட்டுக்கு ஆபத்து. நல்ல கொள்கைக்கு ஆபத்து. அதிகாரிகள் தவறு செய்தால் பதவியிலிருப்பவர்கள் ஒழுங்கீனமாக நடந்து கொண்டால் என்னிடம் சொல்லுங்கள்.

(அனைத்துக் கட்சித் தலைவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் உரையாற்றியதற்குப் பின்னர் மாண்புமிகு முதல்வர் சிறப்புரையாற்றினார்கள். அவர் பேசும்போது குறிப்பிட்டதாவது)

நாட்டை வளர்த்தவர்கள், நாட்டு மக்களுக்காக உழைத்தவர்கள், அந்தந்தக் காலத்து சூழ்நிலைக்கேற்ப அந்தந்தக் காலத்து மக்களுக்காக மட்டும் பாடுபட்டார்கள் என்று சொல்ல முடியாது. தான் வாழ்ந்த காலத்தில் இருந்த மக்களுக்காக மட்டுமின்றி வருங்காலத் தலைமுறையினரின் வளர்ச்சிக்கும் அஸ்திவாரமிட்டுக் கருத்துக்களை வழங்கிய தலைவர்கள்தான் பேரறிஞர் அண்ணா போன்றவர்கள்.

யாரும் சாதிக்க முடியாதவற்றைக் குறைந்த காலத்தில் நிறைவேற்றிக் காட்டி வெற்றி கண்டவர்தான் பேரறிஞர் அண்ணா. இன்னும் சில காலம் அவர் நம்மிடம் வாழ்ந்திருப்பாரேயானால் அவர் உலகத் தலைவராக உருவாகியிருப்பார்கள்.

இருக்கின்ற காலம் வரை – நாம் எவ்வளவு காலத்துக்கு இருக்கின்றோமோ அதுவரை, பிறருக்கு நன்மை தரக்கூடிய காரியங்களைச் செய்தோம் என்ற நிம்மதியோடு நமது வாழ்க்கையை முடித்துக் கொள்ள வேண்டும் என்று யாருடைய விழாவை இங்குக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோமோ அவர் – பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்குச் சொல்லித் தந்திருக்கின்றார்கள். அந்த உணர்வோடு நாம் செயல்படவேண்டும்.

சிறு விவசாயிகள் தரவேண்டிய கடன் நிலுவையை ரத்து செய்யக்கூடாது, மாறாக அந்தத் தொகையை வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என மத்திய அரசு தாக்கீது அனுப்பியிருக்கிறது என்றாலும், மாநில அரசு ரூ.62 கோடி கடனையும் ரத்து செய்ய தனது சொந்த நிதியிலிருந்து ஏற்பாடு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே அமைக்கப்படவிருக்கும் நூலகக் கட்டடத்திற்கு அமரர் அண்ணாவின் பெயர் சூட்டப்படும்.

அண்ணா நாமம் வாழ்க!

(1980ஆம் ஆண்டு, திருச்சி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை.)

ஒவ்வொரு குடிமகனின் நெஞ்சிலும் தேசிய ஒருமைப்பாடு நிலைக்க வேண்டும்!

இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை அளித்தமைக்காக மாண்புமிகு பிரதமர் அவர்கட்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாதிரிக் குழுக் கூட்டத்தில் பல்வேறு வகையான கருத்துக்கள் வெளியிடப்படுவதனால் மிக்க பயன் உண்டு. என்னுடைய கருத்தையும் வெளியிட இந்த வாய்ப்பினை நான் பயன்படுத்திக் கொள்வதில் தவறு ஏதுமில்லை என்று கருதுகிறேன்.

தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம் இப்பொழுது முதன் முறையாகக் கூடுகிறது. ஆனால் எங்களுடைய கருத்தைக் குழுவின் முன் எடுத்து வைக்கவும், அவை குறித்து விரிவான விவாதம் நடத்தவும் போதுமான கால அவகாசம் இல்லை. இந்தப் பிரச்சினைகள் குறித்து விரிவாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நான் விரும்பினாலும், எல்லாக் கருத்துக்களையும் முழுமையாக எடுத்துச் சொல்ல எனக்கு நேரம் இருக்காது. என் முன் உள்ள காலமின்மையை நான் உணருகிறேன். எனக்குக் கிடைத்துள்ள சிறிதளவு கால அவகாசத்தில் சில கருத்துக்களை மட்டும் வலியுறுத்தி விளக்கிடப் பெரிதும் விழைகிறேன். அப்படிக் கூறுவதன் மூலம், என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூறுகின்ற வாய்ப்பினை நல்லமுறையில் பயன்படுத்துவதாகவே நான் கருதுகிறேன். இங்கே எழுப்பப்பட்ட பல்வேறுபட்ட பிரச்சினைகள் குறித்து விரிவாக விவாதிக்கும் வகையில் நம் அனைவருக்கும் முழுமையான அளவில் வாய்ப்புகள் எதிர்காலத்தில் அளிக்கப்படும் என நான் நம்புகிறேன்.

தேசிய ஒருமைப்பாடு என்று நான் கூறும்பொழுது, அது ஏதோ நாட்டின் பல்வேறு மாநில அரசுகளுக்கிடையே ஏற்படுத்தக்கூடிய, நிலவ வேண்டிய ஓர் ஒற்றுமை நிலையைக் குறிப்பதாகவோ, மத்திய அரசுக்கும், மாநில அரசுக்குமிடையே அமையக்கூடிய உறவுகள் குறித்துக் குறிப்பிடுவதாகவோ என்னைப் பொறுத்தவரையில், அந்த மாதிரிப் பொருளில் அத்தொடர் பயன்படுத்தப்படுகிறது என்று நான் கருதவில்லை. தேசிய ஒருமைப்பாடு என்பது அப்படிப்பட்ட ஒரு கருத்தினை உள்ளடக்கியதா என்பதை நான் சந்தேகிக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், நமது நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனின் நெஞ்சத்திலே இந்த ஒருமைப்பாட்டு உணர்வு வேரூன்றி நிலைக்க வேண்டும் என்பதே என் கருத்தாகும். இதுவே என்னுடைய இதயக் கிடக்கையுமாகும். தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற வகையில், இந்தக் கருத்தைச் சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது என்றே கருதுகிறேன். இந்தக் கருத்தை நான் வலியுறுத்தும்பொழுது, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் இதே கருத்தை இங்கு எடுத்துக் கூறியதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஓர் அரசியல் கட்சியின் சார்பாக நான் என்னுடைய கருத்தை இங்கே

எடுத்துச் சொல்லவில்லை. அனைவருக்கும் பொதுவான ஒரு கருத்தைத்தான் நான் இங்கே எடுத்து வைக்கிறேன் என்பதை இங்கே குழுமியுள்ள உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என நம்புகிறேன். தேசிய ஒருமைப்பாடு என்று கூறும்பொழுது, சாதிப் பாகுபாடு குறித்தோ, வகுப்புவாரிச் சக்திகள் என்ற கருத்தில் மட்டுமோ அதை எடுத்துக் கொள்ளலாகாது என்பதை நான் வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன். அந்த கருத்தில் அதை எடுத்துக் கொள்வது மட்டும் போதாது. அதற்கு மேலும் முக்கியமான ஒரு கருத்தினை அது உள்ளடக்கியுள்ளது.

இன்றைய நமது சமுதாயத்தில் பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் நம் சமுதாயத்தில் மண்டிக் கிடக்கின்றன. பல்வேறு மாநிலங்களிடையே பொருளாதார மட்டத்தில், ஒன்றோடொன்று மாறுபட்ட பல்வேறு விதமான அளவுகோல் இருக்கக்கூடாது. நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் வாழுகின்ற மக்கள் சமுதாயத்திற்கு ஒளிமயமான எதிர்காலம் அமைய வேண்டும். தேசிய ஒருமைப்பாட்டுணர்வு வேரூன்றி ஓங்கி வளரவேண்டுமெனில் அப்படிப்பட்ட வேறுபாடற்ற சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

பல்வேறு கருத்துக்கள் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டன. அவை குறித்து எந்தவிதக் கருத்தையும் நான் வெளியிட விரும்பவில்லை. என்னுடைய அரசின் சார்பிலும், தமிழ்நாட்டின் சார்பிலும் குறிப்பாகச் சில கருத்துக்களை மட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றுவதற்கு முன், திராவிட முன்னேற்றக் கழகம்; அதற்கு முன்னால் திராவிடக் கழகம் என்பது வரலாறு. அந்தக் காலத்தில் அடிப்படையான சில சமுதாயக் கருத்துக்கள், அரசியல் கோட்பாடுகள்—சமுதாயத்தில் வர்க்க பேதமற்ற சமத்துவ நிலை, அனைவருக்கும் சமத்துவமான வாய்ப்புகள் என்ற இலட்சியக் கோட்பாடுகள் மலர்ந்தன. இப்படிப்பட்ட அடிப்படை இலட்சியங்கள் இன்றும் தொடர்ந்து நிலவி வருகின்றன. இந்தக் கோட்பாடுகளை நாம் தொடர்ந்து ஏற்றுக்கொண்டு செயலாற்றி வருகிறோம். இந்த அடிப்படைக் கருத்துக்களைவிட்டு, நாங்கள் என்றும் விலகி பாதை மாறிச் சென்றதில்லை.

ஒரு காலகட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகமானது பிரிவினையைப் பற்றிப் பேசியிருக்கலாம். அதைப்பற்றி நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். ஜனாப் ஜின்னா அவர்கள் பிரிவினைக் கோரிக்கையை வலியுறுத்திக் கொண்டிருந்த காலக்கட்டத்தில், அந்த மாதிரி ஓர் உணர்வு தமிழகத்திலும் இருந்தது உண்மைதான். ஆனால், அறிஞர் அண்ணா அவர்கள், பல ஆண்டுகளுக்கு முன்பேயே, இந்தப் பிரிவினைக் கோரிக்கையைத் தன்னுடைய கட்சி கைவிட்டுவிட்டது என்று எந்தவிதச் சந்தேகத்திற்குமிடமின்றி திட்டவட்டமாக அறிவித்தார். நாடு முழுமையான அளவில் சுதந்தரம் பெற்ற பிறகு தான், மாநிலங்கள் தங்கள் விருப்பப்படி வாழமுடியும் என்றும் அறிவித்தார். அறிஞர் அண்ணா அவர்கள் இந்தக் கருத்தினைத் திட்டவட்டமாக

எடுத்துக் கூறினார்கள். அதை இங்கே எடுத்துச் சொல்வது என்னுடைய கடமையென நான் கருதுகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், எங்களில் யாருக்குமே இந்தப் பிரிவினை உணர்வு என்பது கிஞ்சிற்றும் கிடையாது.

அதுமட்டுமல்ல; அறிஞர் அண்ணா அவர்கள் மேலும் ஒரு கருத்தை எடுத்துக் கூறினார்கள்; ‘‘தனி நபரைவிடக் குடும்பம் முக்கியமானது; குடும்பத்தை விட வாழ்கின்ற நகரம் முக்கியமானது நகரத்தைவிட நாடு முக்கியமானது; ஓர் அரசியல் கட்சியைவிட நாடு பெரிது, முக்கியமானது’’ என்று அறிஞர் அண்ணா அவர்கள் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். நாட்டுச் சுதந்திரமில்லையெனில் அரசியல் கட்சிகள் வாழமுடியாது; வளர முடியாது. இந்தக் கருத்தை எடுத்துக் கூறிய அறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் நாங்கள் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எங்களால் முடிந்த தியாகத்தை நாங்கள் என்றும் செய்வோம். அறிஞர் அண்ணாவின் கருத்துக்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கவே நாங்கள் விழைகிறோம். அறிஞர் அண்ணாவின் அடிச்சுவட்டை ஒற்றி அவர் காட்டிய வழியில் தொடர்ந்து நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அரிசன நல முன்னேற்ற நலன்களில் நாங்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டு இருக்கிறோம். அவர்கள் நல்வாழ்வுக்கான முன்னேற்றத்திற்காகப் பெரிய பெரிய திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறோம். ஆனால், அதே சமயத்தில் அரிசனக் கிராமம் – அரிசனக் காலனி என்று தனியாக ஒன்று இருக்கக்கூடாது என நாங்கள் விரும்புகிறோம். கிராமம் என்று பேசும்பொழுது எங்களுக்கு விவசாயிகளின் கவனம்தான் வருகிறது. தனியாக ஒரு குடியிருப்பு என்றால் அரிசனங்களை மற்றச் சமூகத்தினரிடமிருந்து தனியாகப் பிரித்து வைக்கிறோம் என்றுதான் பொருள்படும். அப்படிச் செய்வதன்மூலம், சமுதாயத்திலே பல்வேறு சமூகத்தினரிடையே இனவேறுபாடுகளை நாம் தொடர்ந்து உருவாக்கிக்கொண்டு வருகிறோம் என்று தான் சொல்லவேண்டும். நம்முடைய வாழ்க்கை முறையில் நீண்டநாட்களாகப் பிடித்துக் கொண்டுவரும் சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வைப் போக்க நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். அரிசனங்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகின்ற மக்கள், அரிசன மக்களாகவே மட்டும் இருப்பது கண்டு நான் மிகவும் வேதனைப்படுகின்றேன். அரிசனங்கள் முன்னேற்றத்திற்கு அரிசன மக்கள்தான் பாடுபட முடியும் என்று சொல்வது தவறு. அவர்களது முன்னேற்றத்தில் மற்றவர்கள் அந்த அளவு அக்கறை கொள்வதில்லை. அந்த மாதிரியான கருத்துக்கள் இங்கே எடுத்துச் சொல்லப்படும் பொழுது அந்த மாதிரி ஒரு சூழ்நிலை நிலவுகிறது என்பதை நினைத்து நமக்கு வருத்தம்தான் ஏற்படுகிறது.

ஜாதி இந்துக்களிடையேயும் இனவேறுபாடுகள் உள்ளன. இதையும் நாம் போக்கியாக வேண்டும். அரிசனங்களிடையே ஒரு சரிசமமான உணர்வு, ஒரு சரிசமமான நிலை இருக்க நாம் பாடுபட வேண்டும். மறுபடியும் அரிசனத் தலைவர்கள் என்றே பிரித்துப்

பேசுகிறோம். இதற்கு என்ன பொருள்? அரிசனங்களிடையே இன வேறுபாடுகள் ஏராளமாக உள்ளன. இப்படிப்பட்ட இன வேறுபாடுகளைக் களைத்தெறிய அரிசனத் தலைவர்கள் முழுமுயற்சி செய்யவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. அரிசனங்களின் பிரச்சினைகளை அவர்கள் நடுத்தெருவுக்கே கொண்டு வந்து விட்டார்களோ என்று நான் சந்தேகிக்கிறேன். இந்தப் பிரச்சினையில் முதலில் நம் கவனத்தைச் செலுத்தியாக வேண்டும். அரிசனங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நாம் விரும்பினால் அரிசனங்களிடையே நிலவுகின்ற பொருளாதார ஏற்றத்தாழ்வை முதலில் நம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த முறையில் நாம் பிரச்சினைகளை அணுகினோமானால் நாட்டில் வாழும் மக்கள் சமுதாயம் முழுமைக்குமே நல்லது செய்ய நம்மால் முடியும்.

8 மாதங்களுக்கு முன்னால் தமிழ்நாட்டில் ஒரு பெரிய கிளர்ச்சியே நடந்தது. பறையர்கள் என்று ஒரு பிரிவினர்; அவர்கள் சமூகத்தில் கீழ்மட்டத்தில் உள்ளனர். பள்ளர்கள் என்று ஒரு பிரிவினர்; பள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரின் சடலம் இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. பள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரது சடலம் பறையர்கள் வசிக்கும் தெரு வழியாக எடுத்துச் செல்வதைத் தடுக்க ஒரு கிளர்ச்சியே நடைபெற்றது. சடலத்தைத் தூக்கி வந்தவர்கள் அப்படியே கீழே போட்டுவிட்டு உயிர் தப்பினால் போதும் என்று ஓடிவிட்டனர். இப்படிப்பட்ட கொடுமையான செயல்களின் விளைவுகளை அவர்களுக்கு நாம் எடுத்துக்கூறக் கடமைப்பட்டுள்ளோம். இப்படிப்பட்ட கொடுமையான செயல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதை எந்த அளவுக்கு அரிசனத் தலைவர்கள் அந்த மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்களைத் திருத்தி வருகிறார்கள் என்பது குறித்து ஒன்றும் தெரியவில்லை.

இந்து, முஸ்லிம் பிரச்சினை குறித்தும் நாம் பேசி வருகிறோம். தமிழ்நாட்டில் இந்து, முஸ்லிம் என்ற பிரச்சினையே இல்லை. குறிப்பாகச் சொல்லப் போனால், எங்களுடைய ஆளுநர் அவர்கள் இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர். காவல்துறைத் தலைவர் ஒரு முஸ்லீம். உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் ஒரு முஸ்லீம். தமிழ்நாட்டில் இப்பிரச்சினையே இல்லை. இப்படிப்பட்ட இனப்பாகுபாட்டில் நாங்கள் ஈடுபடுவதே இல்லை. சமூகத்தின் எல்லாப் பகுதியினரும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற இலட்சியப் பாதையில் எங்களை நாங்களே ஈடுபடுத்திக்கொண்டு, அப்பயணத்தை நாங்கள் தொடர்ந்து மேற்கொண்டுள்ளோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் என் மனத்தில் எழுகின்ற அச்சத்தையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அரிசன மக்களின் நலனுக்கு நாம் அதிகம் செய்கிறோமோ இல்லையோ, அதைப்பற்றி வெகுவாகப் பேச மட்டும் நாம் தயங்குவதில்லை. அரிசனங்களுக்கு இன்ன இன்ன நன்மைகள் செய்கிறோம் என்று நாம் அதிகமாகப் பேசிக் கொண்டிருப்பதாலேயே, ஒருக்கால் சாதி இந்துக்களின் கசப்புணர்ச்சியை நாம் சம்பாதித்துக் கொண்டு வருகிறோமோ என்று கூட அச்சப்பட வேண்டியுள்ளது.

மேலும், சில விஷயங்களை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். அவற்றைப் பற்றி விரிவாகப் பேச நேரமில்லை. நமது நாட்டில் மொழி அடிப்படையில் மொழிவாரி மாநிலங்களை உருவாக்கியபிறகு, மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்று சொல்வது எந்த அளவு நியாயமான வாதம் என்று எனக்குப் புரியவில்லை. இதைப்பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். பல பிரச்சினைகள் நம்மை எதிர்நோக்கியுள்ளன. இப்பொழுது நாம் தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் திரு.கருணாநிதி அவர்கள் அதைப்பற்றிப் பேசியுள்ளார்கள். மொழி குறித்து அவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் எனக்கு ஒப்புதலானவையே. அதேபோல், பொருளாதார முன்னேற்றத்தில் கூட அதற்குத் தேவையான அடிப்படை அமைப்பு முறை உருவாக்கப்பட வேண்டும். இந்தத் துறையில் நாம் நம்முடைய கவனத்தைச் செலுத்த வேண்டும். இது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். நாட்டின் கல்வி வளர்ச்சியில் நாம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம். மாண்புமிகு பீகார் மாநில முதல்வர் அவர்கள் கல்வி குறித்து ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்தார். அவர் பேசியதன் உட்பொருளை நான் சரிவரப் புரிந்துகொண்டேனோ என்பது தெரியாது. ஆனால், நாடு முழுமைக்கும் ஒரே கல்வித் திட்டம் இருக்க வேண்டும் என்று அவர் சொன்னார். அந்தக் கருத்தைத்தான் அவர் வெளிப்படுத்தினார் என நினைக்கிறேன். அந்த மாதிரி செய்தால் அதற்கு எந்தவிதமான மாறுபட்ட அபிப்பிராயமும் இருக்க இடமில்லை. ஆனால், கல்வியளவில் இந்த மாதிரி செய்யப்படும்பொழுது கல்வியறிவு பெறும்பொழுதே மாணவர்கள் தொழில் குறித்துச் சில விஷயங்களையும் தெரிந்து கொள்வது அவசியம். பள்ளிகளிலேயே இதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.

மத்திய அரசுப் பணியாளர் தேர்வுக் குழுவைப் பற்றி பேசும்பொழுது, சில பிரச்சினைகள் எழுகின்றன. மிகப் புனிதமான ஒன்று என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை நெஞ்சில் நிறுத்தி நாம் செயல்படும்போது குறுகிய எண்ணங்களுக்கோ – செயல்களுக்கோ நம்மை நாமே ஆட்படுத்திக் கொள்ளக் கூடாது. பிரச்சினைகளை விசாலமான கண்ணோட்டத்துடன் பார்க்கத் தவறிவிட்டோமேயானால் நம்முடைய முயற்சியில் வெற்றியைக் காண முடியாத பேச்சாளர்கள் ஒருவர் மீது ஒருவர் குற்றங்களைக் காண முயற்சிப்பது நமக்குத் தெரிகிறது. இது இயற்கையானதுங்கூட, மற்றவர்களுடைய குறைபாடுகளை எடுத்துக் கூறினால்கூட அதனால் ஏதாவது நல்ல பயன் ஏற்படுமேயானால், தேசிய ஒருமைப்பாட்டு உணர்வு வளர அது உறுதுணையாக இருக்குமேயானால், அப்படிப்பட்ட பேச்சுக்களை நாம் வரவேற்கலாம்.

அசாம் மாநிலப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் தமிழ்நாடு அரசும், தமிழக மக்களும் தங்கள் கருத்தினைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள். எந்தக் காலத்திலும் எப்பொழுதும் நாட்டில் பிரிவினை ஏற்படுவதையோ, ஒரு பகுதி நாட்டிலிருந்து துண்டித்துக் கொண்டு போவதையோ தமிழக அரசும், தமிழக மக்களும்

ஒருக்காலும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். தேசிய ஒற்றுமை குலையாமல் காக்க என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ள முடியுமோ அவையனைத்தையும் மேற்கொண்டு ஒற்றுமை காக்கப் பாடுபடுவார்கள். பல்வேறு மாநிலங்களின் தலைவர்களை ஒன்றாக இணைத்துக் கொண்டு வரமுடியுமென்றால், அந்த மாநிலத்திற்குச் சென்று நிலைமையை நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ள அவர்களையும் அங்கே அனுப்பலாம். அசாம் பிரச்சினைக்குத் தீர்வு காண இப்படிப்பட்ட ஏற்பாடு உதவுமென்று மாண்புமிகு பிரதமர் அவர்கள் கருதினால் இந்தக் கருத்தைத் தயவுசெய்து ஆலோசனை செய்யுமாறு அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இக்குழு எத்தனை முறை கூடியுள்ளது? என்னைப் பொறுத்தவரையில் இவ்வாண்டுகளில் எத்தனை முறை கூடியது என்பதைப்பற்றிக் கணக்கெடுப்பதைவிட, ஆண்டில் குறிப்பிட்ட மாதத்தில், குறிப்பிட்ட ஒரு தேதியில் கூட வேண்டுமென்று நிர்ணயித்துக் கொள்வது உசிதமென நினைக்கிறேன். அத்துடன் கூடும் கூட்டத்தில் சில குறிப்பிட்ட பிரச்சினைகளின் மீது முடிவுகள் எடுக்கும்படியான சூழ்நிலையும் உருவாக்கப்பட வேண்டும்.

நிலச் சீர்திருத்தம் பற்றி இங்கே குறிப்பிடப்பட்டது. எங்களது சட்டமன்றத்தில் ஒரு சட்டம் இயற்றி அதைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளோம். அந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் விரைவில் கிடைக்குமென நம்புகிறேன். இதை ஏன் இங்குக் குறிப்பிடுகிறேன் என்றால் மக்கள் முன்னேற்றத்திற்கான ஆக்கப் பணிகளில் தமிழ்நாடு தீவிர அக்கறைகொண்டு பாடுபடுகிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்கே! பல்வேறு பிரச்சினைகள் குறித்து நான் அதிகம் பேச விரும்புகிறேன். நேரம் இல்லை எதிர்காலத்தில் விரிவான முறையில் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்கு அதிகமான வாய்ப்புக் கிடைக்குமென நம்புகிறேன்.

இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். இரண்டாந்தரக் குடிமக்களாக நாம் உள்ளோம் என்று மாநிலத்திலுள்ள மக்கள் நினைக்கத் தொடங்கி விட்டார்களானால், அப்படிப்பட்ட உணர்வு அவர்களது மனத்தில் தோன்றாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்வோமேயானால், தேசிய ஒருமைப்பாடு உணர்வுக்கு நாம் வழிவகுத்தவர்களாவோம். எனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பினை இந்தக் கருத்தினை வலியுறுத்துவதற்காகவே பயன்படுத்தியுள்ளேன். இந்த வாய்ப்பினை அளித்த மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்காலத்தில் மீண்டும் இப்படிப்பட்ட ஒரு வாய்ப்புக் கிடைக்குமென நம்புகிறேன். இந்த வார்த்தைகளுடன் எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

(12.11.1980 அன்று, புதுடில்லியில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை.)

நாட்டு மக்கள் ஒன்றுபட்டு வாழ்க!

ஏழ்மை, வறுமை, வேலையின்மை ஆகிய எந்தச் சங்கடங்கள் இருந்தாலும், நாட்டு மக்கள் ஒன்றுபட்டு வாழ வேண்டும். மனிதனின் உடலில் ஏதாவது ஒரு பகுதியில் வலி ஏற்பட்டாலும், காயம் ஏற்பட்டாலும் அது எப்படி இந்த உடலின் ஊனமாகவே கருதப்படுகிறதோ அதேபோல் – ஒரு நாட்டில் எங்கே வன்முறை ஏற்பட்டாலும் அதை உடனடியாகக் கவனித்தாக வேண்டும். அப்படிக் கவனிக்காதவரை ஒருமைப்பாட்டுக்கு வழியே இல்லை.

இன்று தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழியை வெறும் உதட்டளவில் எடுத்துக் கொண்டால் போதாது. இந்திய சுதந்திரத்தைக் காப்பாற்ற நம்மாலான அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டும்.

எந்த நாட்டுப் படையெடுப்பானாலும் சரி, அதை வலிவோடும், உறுதியோடும் தடுத்து இந்திய சுதந்திரத்தைக் காப்போம் என்ற உறுதியை மனதில் பதியவைத்துக்கொண்டு ஒருமைப்பாடு உறுதிமொழியை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

(25.11.1980 அன்று, சென்னையில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாடு வார விழாவில் ஆற்றிய உரை)

உலகத் தமிழர் அனைவரும் அறிவால் ஒன்றுபடுவோம்!

5ஆவது உலகத் தமிழ் மாநாடு ஓராண்டுக்கு முன்பேயே நடத்தியிருக்கவேண்டும், தவறிவிட்டது. இப்போது கூட, குறிப்பிடப்பட்ட தேதியில் இதை நடத்துவார்களோ, மாட்டார்களோ என்று பலர் சந்தேகப்பட்டனர். தள்ளி வைத்துவிடுவார்கள் என்று கூடச் சிலர் கருதினர். அறிஞர்கள், அதிகாரிகள், இளைஞர்கள், பொறுப்புமிகுந்த கட்சிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு முடிவு எடுத்தால் எதையும் எங்கேயும் எப்படியும் நடத்திக்காட்ட முடியும் என்பதைத்தான் 5ஆவது உலகத்தமிழ் மாநாட்டின் தொடக்க விழா எடுத்துக்காட்டுகின்றது.

உலகத்தமிழ் மாநாடு என்னும் அரிய மாநாட்டை தமிழகத்தில் தொடங்குவதற்கு வித்திட ஒப்புக்கொண்ட முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் அவர்களின் உழைப்பும் எனது தெய்வம் எனது ஆசான்–பேரறிஞர் அமரர் அண்ணா அவர்கள் 2ஆவது மாநாட்டில் ஏற்றிருந்த முழுமையான பொறுப்பும், என்னை ஆட்டிப்படைத்து இந்த மாநாட்டை நடத்துகின்ற வகையில் எனக்கு ஊக்கத்தைத் தருகின்றது. இன்று அமரர் அண்ணா அவர்கள் நம்மிடையே இல்லை; ஆனால் அவர் எனது இதயத்தில் இருந்து எனக்கு ஊக்கத்தையும் நல்ல கருத்தையும் தந்து என்னை வழிநடத்திச் செல்கிறார் என்பதை நான் மறுக்க முடியாது. இது மூடநம்பிக்கை என சொல்லலாம். என்னைப் பொறுத்தவரை இது நியாயமான நம்பிக்கை ஆகும்.

பல பெரியவர்கள் இந்த மாநாடு கூடுவதற்கு ஆதரவு நல்கினார்கள். இந்திபேசும் மாநிலத்தவர்கள், ஆந்திர மாநிலத்தவர்கள்மராட்டியமாநிலத்தவர்கள்தொலைபேசியின் மூலம் அடிக்கடி தமிழ் மாநாடு எப்போது என்று என்னை வினவியவாறே இருந்தார்கள். இங்கே தமிழ் குறித்து பல பிரச்சினைகள் பேசப்பட்டன. அவற்றிற்கு வழிகாணும் முறை பற்றியும் சொல்ல முயன்றார்கள். வெவ்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். அதற்காகத்தான் 5ஆவது உலகத் தமிழ் மாநாடு கூட்டப்படுகிறது.

குழந்தையைப் பெற்றவர் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் மற்றவர்கள் உற்றவர்கள் இந்தச் சட்டையைக் குழந்தைக்குப்போடு–அந்தப் பள்ளிக்கூடத்தில் சேர் இந்த ஆசானைத் தேர்ந்தெடு என்றெல்லாம் கருத்துக்கள் தெரிவிப்பது போல தமிழைப் பாதுகாக்க தமிழை வளர்க்க யோசனை சொல்கிறார்கள் என்பதை நாம் உணரவேண்டும். ஆராய்ச்சிக் கருத்தரங்கில் மாறுபட்ட கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. எல்லோரும் ஒரே எண்ணத்தைத் திரும்பத்திரும்ப சொல்வதற்காக அல்ல மாநாடு, அவர்கள் தங்களது ஆற்றலை, வலிமையை பயன்படுத்தி தமிழைப் பாதுகாக்கும் வழியைச் சொல்கின்ற மாநாடு இது.

தமிழ் எழுத்தில் சீர்திருத்தம் தேவை என்று சிலர் குறிப்பிடுகின்றனர். வரவேற்கிறேன். ஆனால் சீர்திருத்தம் என்று சொல்லிக்கொண்டு மேலும்மேலும்

எழுத்துக்களைச் சேர்த்துக்கொண்டு போகக் கூடாது. ஆங்கிலத்தில் 26 எழுத்துக்கள்தான் உள்ளன. அது உலக மொழியாகும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. எனவே, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் எழுத்துக்களைக் குறைப்பதாக அமையவேண்டும், அதிகமாக்கக் கூடாது.

தமிழ் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று சிலர் குறிப்பிட்டார்கள். இராமநாதபுரத்தில் ஒருவகையாக, மதுரை மாவட்டத்தில் ஒரு விதமாக, நெல்லை மாவட்டத்தில் ஒரு விதமாக, கோவையில் ஒரு விதமாகத் தமிழ் பேசப்படுகிறது. இவற்றை ஒன்றுபடுத்தவேண்டும் என்றால் மிகப் பெரும் பணி செய்யவேண்டும். தமிழக அரசு இதனைத் தக்க வகையில் செய்யும்.

தமிழ் மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து பேசக்கூடிய மொழி வேண்டும் என்றார்கள். ஏற்றுக்கொள்வோம்; ஆனால், இலக்கணரீதியாக அந்த மொழி அமைய வேண்டும் என்பது மட்டுமல்ல, ஏழை மக்களின் உள்ளத்தைத் தொடும் மொழியாக அது இருக்கவேண்டும். பேசும் மொழியும், எழுதும் மொழியும் ஒருங்கிணையும் நிலையை உருவாக்கவேண்டும் என்பது சுமையானதோர் பொறுப்பு. அதனை உணர்ந்து ஏற்றுச் செயல்புரிய வேண்டும்.

உலகத் தமிழ்ச் சங்கம் ஒன்றை இங்கே தமிழக அரசு அமைக்கும், பேரறிஞர்களிடம் அது ஒப்படைக்கப்படும். நிருவாகத்தை மட்டும் அரசு கவனித்துக்கொள்ளும். இந்த உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ் மக்கள் அக்கறை கொள்ள வேண்டும். செப்டம்பர் திங்கள் 15ஆம் நாளில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் உலகத் தமிழ்ச் சங்கம் தமிழ் வளர்ச்சிக்கு விழா எடுக்கும்.

தமிழ் ஆட்சி மொழியில் அரசு அக்கறை கொண்டுள்ளது என்பது எல்லாருக்கும் புரிந்திருக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. தமிழ் வழக்கு மொழியாக, வழக்கத்தில் உள்ள மொழியாக மட்டுமல்ல வழக்குமன்றத்தில் தீவிரமாக்கப்பட முயற்சி நடைபெறும்.

உலகத்தின் பல நாட்டுப் பிரதிநிதிகளும் தமிழைப் பாராட்டிப்பேச வந்திருக்கும் இந்த நேரத்தில் ஒன்றை நினைவுகூர்தல் வேண்டும். நாம் ஒருபோராட்டத்திற்குத் தயாராக வேண்டும். அந்தப் போராட்டம் யாரையும் எதிர்த்தல்ல, எந்த மொழியையும் எதிர்த்தல்ல, யாரையும் சிறையில் தள்ளுவதல்ல, அந்தப் போராட்டம் யாரையும் அழிவுப்பாதைக்கு அனுப்புவதல்ல. அந்தப் போராட்டம் நாமே நமக்குள் நடத்திக் கொள்ள வேண்டிய போராட்டம். தமிழில்தான் பேசுவேன் என்று நமது உள்ளத்து உணர்வுடன் போராட வேண்டும் நாம். தமிழன் என்றொரு இனமுண்டு என்பதைத் திரைப்படத்தில் மட்டும் பாடிக்காட்டுவதோடு நின்றுவிடாமல், தமிழ் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பே இங்கு இருந்தது ? இப்போது எப்படி இருக்கிறது ? என்பதை எல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நான் முன்பு, இலங்கை தி.மு.க வின் அழைப்புடன் இலங்கைக்குச் சென்றிருந்தபோது, அங்கு என்ன பேசுவது என்பது குறித்து அமரர் அண்ணா அவர்களிடம் கேட்டேன். “இலங்கையில் உள்ள தமிழர்களுக்கும் நமக்கும் கலாச்சாரத்தொடர்பு உண்டே தவிர, அரசியல் தொடர்பு கிடையாது’’ என்று அண்ணா அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். அதை அங்கு சென்று நான் தெரிவித்தேன். இலங்கைத் தமிழர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள். இலங்கைத் தமிழருக்கு எந்தெந்த வகையில் ஆதரவு தர முடியுமோ அந்தந்த வகையில் எல்லாம் தருவோம். அந்த நாட்டின் ஆட்சி முறை குறித்து தலையிட முடியாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிப்பது என் கடமை என உணர்கிறேன்.

அரசியல் சம்பந்தம் இன்றி முழுக்க முழுக்க தமிழுக்கு மட்டும் நடத்தப்படும் மாநாடு இது என்பதால் அரசியல் குறித்து நாம் கவலைப்படாமல் தமிழ்மொழி குறித்து, தமிழ் வளர்ச்சி குறித்து, இலக்கியம் குறித்து, கலாச்சாரம் குறித்து இம்மாநாடு கருத்துரை தெரிவிக்கிறது.

உலகத் தமிழர் அனைவரும் ஒன்றுபடுவோம்! உலகத் தமிழர் அனைவரும் அறிவினால் ஒன்றுபடுவோம். தமிழ் இனத்தவரிடம் ஒருமை உணர்ச்சி ஏற்பட– ஏற்றத்தாழ்வு அகன்றிட– மத பேதங்கள் நீங்கிட– ஜாதி வெறி மறைந்திட நாம் பாடுபடுவோம்.

தமிழைப் பயன்படுத்துவது குறித்து நாம் அக்கறை செலுத்தும் போது, சாதாரண உழைக்கும் மக்களுக்குத் தெரிந்த தமிழை நாம் உருவாக்குவோம். அப்படி உருவாக்கும் மொழியில் இலக்கியம் இருக்கவேண்டும். கண்டிராஜன் என்னும் நாடகத்தில் ஒரு பாடல் வரும். அந்தப் பாடலில் நயம் இருக்கும். ஆனால் யாருக்கும் அதன் பொருள் எளிதில் புரியாது. அப்படி இருந்தால் பயன் என்ன ?

வாழ்க்கையில் அனைவரும் பேசும் ஒரே மாதிரி மொழியை அமைக்கவேண்டும். அதைச் செய்ய உலகத் தமிழ் ஆராய்ச்சிக் குழுவைத் தவிர வேறு ஒரு நிறுவனம் கிடையாது. அந்தப் பணிக்கு நீங்கள் எல்லாரும் காட்டுகின்ற ஒத்துழைப்புக்கு அடையாளம்தான் இந்த உலகத் தமிழ் மாநாடு.

அண்ணா நாமம் வாழ்க !

(1981ஆம் ஆண்டு மதுரையில் 5ஆவது உலகத்தமிழ் மாநாட்டு தொடக்க விழாவில் ஆற்றிய உரை)

உலகத் தமிழ்ச் சங்கம் பற்றிய வரலாற்றுத் திரைப்படம்!

இந்தப் படத்திலே சொல்லப்பட்டுள்ள கருத்துக்கள் பற்றி அறிஞர் பெருமக்கள் தங்களது எண்ணங்களை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன். இதற்கு மேலும் ஏதேனும் வரலாற்று உண்மைகள் இருந்து தெரியப்படுத்தினால், ஏதேனும் மாற்றங்கள் செய்து இந்தப்படத்தை இன்னும் எடுக்க முடியும். இலெமூரியா கண்ட வரலாறு இளமை முதலே என்னோடு ஊறிப்போன ஒன்றாகும். இருபத்து நான்கு அல்லது இருபத்தைந்து வயதில் ந.சி. கந்தையா பிள்ளை அவர்கள் எழுதிய புத்தகத்தைப் படித்ததால் தோன்றிய எண்ணம் இந்தப் படத்தைப் பார்க்கின்றபோது நிறைவேறி விட்டதாகக் கருதுகிறேன்.

படம் பார்த்து முடிந்ததும் நீதிபதி மகராஜன் அவர்கள் எனது கையைப் பிடித்துக் கொண்டு மிகவும் அற்புதமாக எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள் என்று மனப்பூர்வமாகப் பாராட்டினார். இந்தப் படத்தைத் தயாரிக்கும் பொறுப்பை ஏற்பவர்கள் தமிழ் தெரிந்தவர்களாக, தமிழிலக்கியங்களில் ஈடுபாடு கொண்டவர்களாக, செம்மையாக எண்ணியதை வெளியிடும் திறமையும் உள்ளவராக இருக்கவேண்டும் எனத் தேடினேன். ப. நீலகண்டன் அவர்கள்தான் எனக்குக் கிடைத்தார். இதற்கு அவர் தான் சரியானவர் என்று நான் நம்பினேன்; நம்பிக்கெடவில்லை; வெற்றியே பெற்றிருக்கிறேன். இதில் ஏதாவது குறையிருந்தால் அதை ஏற்கும் பொறுப்பு என்னையே சேரும்.

தமிழ்ப் பெருமக்கள் அத்தனை பேரும் இதை ஓர் அடையாளச் சின்னமாக வைத்துக்கொண்டு மேலும் ஆராய வேண்டும் என்ற கருத்திலேயே இந்தப் படம் பிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இதற்காகச் செய்யப்பட்ட செலவு வீண் விரயமில்லை. கேரள முதல்வர் அவர்கள் இங்கே பேசும்போது தமிழும் மலையாளமும் சகோதர மொழிகள் என்று குறிப்பிட்டார். தாயும் மகளுமே தவிர அக்கா தங்கை அல்ல. அந்த வகையில் நாயனாரும் தமிழர்தான். நம்முடைய மாநிலங்களுக்கு இடையிலான உறவு பிரிக்கமுடியாதது. ஒன்றைப் பெறுகிற போது ஒன்றை விட்டுக்கொடுக்கத்தான் வேண்டும். எதிர்ப்பு இருக்கத்தான் செய்யும், ஒரு நல்ல காரியம் செய்கிறபோது அதையெல்லாம் பொருட்படுத்தக்கூடாது. எதை விட்டுக் கொடுக்க வேண்டுமோ அதை விட்டுக் கொடுக்க வேண்டும். இதை, கண்ணகி கோயிலுக்காகத்தான் சொல்கிறேன். வரப்புச் சண்டை போல எதற்காக ?

இந்தப் படத்திற்கான உரையாடலையும் எழுதி இயக்கிய நீலகண்டன் அவர்களையும், உடன் ஒத்துழைத்த ஒளிப்பதிவாளர்கள், ஒலிப்பதிவாளர்கள், இசையமைப்பாளர், காட்சிகளை அமைக்கப் பாடுபட்டவர்கள் எல்லோருக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இது மக்களுக்காக எடுக்கப்பட்ட படமே தவிர, வியாபார நோக்கோடு பிடிக்கப்பட்டது அல்ல.

(06.01.1981 அன்று, மதுரையில் நடைபெற்ற 5 ஆவது உலகத்தமிழ் மாநாட்டில் திறந்தவெளி திரைப்பட அரங்கத்தில் திரைப்படத்துவக்க விழாவில் ஆற்றிய உரை.)

தமிழருக்கு, தமிழ்நாட்டிற்கு, தமிழுக்குத் தொடர்ந்து தொண்டாற்றுவோம்!

இங்கே கூடியுள்ள அறிஞர் பெருமக்கள் தங்கள் உள்ளத்தில் உருவாகியுள்ள கருத்துக்களை வெளிப்படுத்தித் தமிழ் மொழி வளரவும், எதிர்காலத்தில் தமிழகம் நன்மை பெறவும் உறுதுணையாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆராய்ச்சிக் கருத்தரங்கில் என்னை வாழ்த்தும்படி கூறினார்கள். என்னால் வாழ்த்த முடியுமா? தமிழ் இலக்கியத்தின் ஒரு கருத்தை குறிப்பிட்டுச் சொல்லி விளக்கிக் கூற இயலுமா? என்ற சிந்தனை என்னிடத்தில் தோன்றினாலும், என் உள்ளத்தில் தோன்றும் கருத்தை, எண்ணத்தை எதையும் தாங்கும் இதயத்தோடு வெளிப்படுத்தப் பின்வாங்க மாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத் தமிழ் மாநாட்டின் பிரதிநிதிகளாக வந்திருக்கும் வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் சிலபிரச்சினைகளைக் குறிப்பிட்டார்கள். அவர்கள் தங்களை வெளிநாட்டவர் என்று கருதிக் கொள்ள வேண்டாம். தமிழுக்குச் சொந்தக்காரர்கள் எல்லோரும் சமம். நமக்கு இருக்கும் உரிமை அவர்களுக்கும் உண்டு. தமிழ் அறிஞர்களைப் பிரித்து நோக்குவது எங்கள் நோக்கமல்ல. ஆராய்ச்சிக் கருத்தரங்கிற்கு மக்கள் கூட்டம் தேவையுமில்லை. அறுவைச் சிகிச்சை நடைபெறும் இடத்தில் மருத்துவர்கள் தங்கள் காலணிகளைக் கூட கழற்றி வைக்க வேண்டும். கட்டுப்பாட்டோடு இருந்தால்தான் அறுவை சிகிச்சை ஒழுங்காக நடைபெறும். அதனால்தான் பொதுமக்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

மாநாட்டின் வெற்றியின் பாராட்டுக்கு நான் மட்டும் சொந்தக்காரனல்ல. இரவு பகலாக உழைத்த அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோரும் பாராட்டுக்குரியவர்கள். அவரவர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து காரியங்கள் ஒழுங்காக நடைபெற ஒத்துழைத்தார்கள். குமரிக்கண்டம் என்பது பற்றி இலங்கையைச் சேர்ந்த அமைச்சர் ராஜதுரை ஒரு பிரச்சினையை எழுப்பினார். நான் சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்லித்தான் ஆக வேண்டும். தமிழகத்தில் முதலில் ஒரு உலகத்தமிழ் மாநாடு நடந்தது. இப்போது இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடக்கிறது. முதலில் நடந்த மாநாட்டின் ஆராய்ச்சிக் கருத்துக்கள் பற்றியும் எதுவும் முயற்சி எடுக்கவில்லை என்று கேட்கலாம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அதற்கெல்லாம் வழி வகுத்திருக்கிறார். அலட்சியப்படுத்தவில்லை. இடையே அதற்குத் தேவையான விளம்பரம் தரப்படவில்லை. அப்படிப்பட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால்தான் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றிருக்கிறது. உலகத் தமிழ்ச் சங்கம் அமைக்கும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இங்கே அமைக்கப்படும் தமிழ்ச் சங்கம் ஐந்தாவது சங்கமாகவோ ஆறாவது சங்கமாகவோ இருக்க வேண்டும் என்று விரும்பவில்லை. உலகம் முழுவதிலும் உள்ள தமிழ் தெரிந்த ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறும் வகையில் இச்சங்கம் அமைக்கப்படும்.

டெல்லி, பம்பாய், காஞ்சி, மதுரை ஆகிய இடங்களில் தமிழ்ச் சங்கம் இருக்கிறது. மதுரையில் மீண்டும் அமைக்கப்படும் சங்கம் எந்த தமிழ்ச் சங்கமாக அமைவதும் சரியாக இராது. வெளிநாடுகளிலும் உலகத் தமிழ்ச் சங்கத்தின் அமைப்புகளை ஏற்படுத்தி அதற்கான விதிகளை ஏற்படுத்தி ஆறுமாதத்திற்கு ஒரு முறையோ, மூன்று மாதத்திற்கு ஒரு முறையோ ஆராய்ச்சியாளர்கள் கூடி தங்களின் புதிய கண்டுபிடிப்பை அனுப்ப வேண்டும். அப்படிச் செய்பவர்கள்தான் அடுத்த உலகத் தமிழ் மாநாட்டுக்கு அழைக்கப்படுவார்கள். தமிழ் நலன், தமிழ்ப் பண்பாடு, தமிழ்ச் சமுதாயம், தமிழ் கலாச்சாரம் வளர வேண்டும் என்பது எங்கள் நோக்கம். இந்த அரசு இருக்கும் வரை அதற்காக ஒத்துழைப்பு தருவோம் என்ற உத்திரவாதத்தைத் தரத் தயார். இந்த மாநாட்டின் அழைப்பிதழ் ஆங்கிலத்தில் அச்சடிக்கப்பட்டிருந்தாகக் குறை கூறினார்கள். சஞ்சீவியே குறையைச் சொன்னார்.

தமிழாராய்ச்சிக் கழகம் அழைப்பிதழைத் தயாரித்தது. வெளிநாட்டவர்களும் புரிந்துகொள்ள வசதியாகத்தான் ஆங்கிலத்தில் அழைப்பிதழ் அச்சடிக்கப்பட்டது. தமிழைப் பின்னால் தள்ளும் எண்ணம் கிடையாது. தமிழிலும் அழைப்பிதழ் அச்சிடப்பட்டது. மொரிஷியஸ் தீவு மக்களுக்குத் தமிழ் படிக்க முடியவில்லை என்று குறிப்பிட்டார்கள். இதற்கு வசதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். நான் ஒரு அரசு உத்தரவில் கையெழுத்திட்டிருக்கிறேன். மூன்று நான்கு மாதமாகிறது. இங்கிருந்த தமிழாசிரியர்களை மொரிஷியஸ் தீவுக்கு அனுப்ப உத்தரவில் கையெழுத்திட்டிருக்கிறேன். மத்திய அரசு அனுமதி கிடைத்ததும் தமிழாசிரியர்கள் அனுப்பப்படுவார்கள்.

நாங்கள் இதையெல்லாம் விளம்பரம் செய்து கொண்டிருக்கவில்லை. எங்களால் முடிந்த அளவு தமிழருக்கும், தமிழ்நாட்டிற்கும், தமிழுக்கும் தொண்டு புரிந்து வருகிறோம். தமிழுக்கு ஒன்றும் செய்யாமல் ஒதுங்கியிருக்கவில்லை. இங்கே நடைபெறும் மாநாட்டில் எப்படிப்பட்ட பேரறிஞர்கள் எல்லாம் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கிறேன்.

பேரறிஞர் அண்ணா உபதேசித்த அறிவுரையில் “ஏதாவது ஒரு வகையில் நம்மைவிட மற்றவர்கள் சிறந்திருப்பார்கள். அவர்களை மதித்து நடக்க வேண்டும்” என்று சொன்னார். என் தாயும் சொல்லிக் கொடுத்திருக்கிறார். அப்படிப்பட்டவர்களை மதித்து வருகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

(08.01.1981 அன்று, மதுரை பல்கலைக்கழகக் கருத்தரங்கில் கலந்துகொண்டு ஆற்றிய உரை)



தமிழகம் தன் கடமையை செய்தே தீரும்!

இந்த மாநாட்டுக்கு வரவேண்டும்; வாழ்த்துக் கூறவேண்டும்; தமிழக மக்களின் அன்பை அவர்கள் காண வேண்டும்; தமிழகம் அவரை எப்படி மதிக்கிறது என்பதைத் தொடர்வதற்காக மீண்டும் ஒரு நல்ல வாய்ப்பை அவர் காண வேண்டும் என்று விரும்பிய எங்கள் உள்ளத்தைப் புரிந்து கொண்டு தமிழுக்கு மரியாதை, உயர்வு, பாராட்டு என்ற வகையில் இன்று எத்தனையோ வேலைகள் இருந்தாலும், உலகப் பிரச்சினைகள் இருந்தாலும், தமிழகத்துக்கு வந்து தமிழ் மொழிக்குத் தரவேண்டிய மரியாதையைத் தரவேண்டும், நடத்துபவர்களை, தமிழ் அறிஞர்களை வாழ்த்த வேண்டும், பாராட்ட வேண்டும் என்ற முனைப்போடு பிரதமர் அவர்கள் இன்று இங்கு கலந்து கொள்வதை எண்ணி எண்ணி நான் உள்ளம் பூரித்து மனநெகிழ்ச்சியோடு நின்று கொண்டிருக்கிறேன்.

இது ஏதோ முகஸ்துதியாகவோ, ஏதோ பாராட்டுவதற்காகவோ சொல்கிற வார்த்தை அல்ல. அவர்கள் தாயாக இருப்பது மட்டுமின்றி இந்த நாட்டின் தலைவியாகவும் இருப்பதை எண்ணி நாம் பெருமைப்படுகின்றோம். இந்த மாநாட்டுக்கு வந்தவர்கள் தமிழகம்பற்றித்தெரிந்துகொண்டுஇருப்பார்கள்.திரும்பிச்செல்லும்போதுதமிழர்களின் பண்பாடு, கட்டுப்பாடு, அன்பு, பண்பு, விருந்தோம்பல் இவை அத்தனையையும் அவர்கள் உள்ளத்திலே பதிய வைத்துக்கொண்டு செல்ல இருக்கிறார்கள். எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் தங்கள் நாட்டுக்கு சென்று அவர்கள் பேசப் போகிறார்கள். நாங்கள் மாநாடு சென்றோம், பிரதமர் வந்தார்கள், அவர்களைப் பார்க்க விரும்பிய மக்கள் எவ்வளவு அடக்கமாக இருந்தார்கள். தொல்லை கொடுக்காமல், துன்பம் ஏற்படுத்தாமல் எவ்வளவு ஒத்துழைத்தார்கள் என்பதை அங்கே போய் சொல்ல இருக்கிறார்கள்.

நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். எத்தனை ஆயிரம் காவல் துறையினரைக் கொண்டு வந்து வைத்தாலும், நாம் நம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டால் ஒழிய வேறு எதுவும் நம்மைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை நீங்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளீர்கள்.

இந்த ஒற்றுமை, கட்டுப்பாடு, கடமை உணர்வு நம்மிடம் இருக்கும் என்பதை நீங்கள் இன்றைய தினம் நமது மாண்புமிகு மரியாதைக்குரிய இந்தியப் பிரதம அமைச்சருக்கு உறுதிமொழியாகத் தந்தாக வேண்டும். உங்களை நான் வேண்டி கேட்டுக் கொள்கிறேன். தமிழகம் தன் கடமையைச் செய்வதில் பின் வாங்காது என்பதை நீங்கள் உங்கள் கர ஒலி மூலம் செய்து காட்ட வேண்டும். எந்தக் காலத்திலும் பிரிவினைக்கும், வன்முறைக்கும் தமிழ்நாடு இடம் கொடுக்காது என்பதை உங்கள் கையொலி மூலம் நீங்கள் எடுத்துக்காட்ட வேண்டும்.

நாம் ஒன்றே குலமாக, சாதி பிரச்சினை, மதபிரச்சினைகளைத் தூக்கி எறிந்து, நாம் ஒருமைப்பாடு உணர்வுக்கு நம்முடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக் காப்பாற்றுவோம் என்பதை உங்கள் கர ஒலி மூலம் நீங்கள் காட்டியாக வேண்டும். இந்த உறுதி மொழிகளைத் தமிழ் கூறும் நல்லுலகத்தின் சார்பாக, தமிழக மக்களின் சார்பாகப் பிரதமருக்குத் தருகிறேன்.

தமிழ் வாழ்க! இந்தியப் பிரதமர் வாழ்க! அண்ணா நாமம் வாழ்க!

❖ ❖ ❖

(10.01.1981 அன்று ,மதுரையில் நடைபெற்ற
5ஆவது உலகத் தமிழ் மாநாடு நிறைவு விழாவில் ஆற்றிய உரை)

திருக்குறளை இந்தியாவின் தேசிய நூலாக ஆக்க வேண்டும்!

திருக்குறளை இந்தியாவின் தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்ற கருத்து உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிடப்பட்டது. அதை எப்படியும் நிறைவேற்ற வேண்டுமென மத்திய அரசுக்கு தமிழக அரசு எழுதும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும். ஏனென்றால் ஒரு மதத்தினருக்கோ, குறிப்பிட்ட சாதியினருக்கோ என்று இல்லாமல் மனித சமுதாய முழுமைக்குமாக எழுதப்பட்ட நூல் திருக்குறள். அப்படிப்பட்ட நூல் இந்தியாவின் தேசிய நூலாக ஆக்கப்படுவதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்கவே முடியாது.

வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு அளிக்கப்பட்ட உதவிப் பணத்தை 100 ரூபாயிலிருந்து 250 ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறோம். இந்தத் தொகை போதுமா என்றால் போதாது. இது பற்றியும் தமிழக அரசு ஆலோசித்து வருகிறது.

அண்ணா நாமம் வாழ்க!

(15.01.1981 அன்று, சென்னையில் நடைபெற்ற திருவள்ளுவர் நாள் விழாவில் ஆற்றிய உரை)

கிராமத் தொழில்களால் கிராம மக்களின் பொருளாதாரம் முன்னேற வேண்டும் !

தேர்தல் நேரத்தில் நாங்கள் என்னென்ன வாக்குறுதிகளைக் கொடுத்தோமோ அதை நிறைவேற்றி வருகின்றோம். எங்கள் கடமையை நாங்கள் செய்து கொண்டு வருகிறோம். சட்டமன்றம் இல்லாவிட்டால் மாவட்டம்தோறும் அமைச்சர்கள் சென்று மக்களின் குறைகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அமைச்சர்களிடம் கூறிஇருக்கிறேன். அதிகாரிகள் சரிவர செயல்பட்டால்தான் நாங்கள் தீட்டுகின்ற திட்டங்கள் சரியாக நிறைவேறும். அதிகாரிகள் பொறுப்புடன் செயல்பட வேண்டும். இந்த மாநிலத்திற்கு நன்மைத்தரக் கூடிய பல்வேறு திட்டங்களைப் பல கோடி ரூபாய் மதிப்புற்ற திட்டங்களை மாநில திட்டக் கமிஷன் மூலமாக நிறைவேற்றி மத்திய அரசிற்கு அனுப்பியுள்ளோம். மத்திய அரசினால் எந்தத் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்பதை எதிர்பார்க்கின்றோம். பொதுமக்களாகிய நீங்களும் அரசு அதிகாரிகளுக்குத் துணையாக இருந்து அரசினால் தீட்டப்படுகின்ற திட்டங்கள் சரிவர நடைபெற உதவவேண்டும். அரசினால் தீட்டப்படுகின்ற திட்டங்கள் சரிவர நடைபெறுகின்றதா ? என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். நாங்கள் போடுகின்ற திட்டங்கள் குறைகள் இல்லாமல் நடைபெறுகின்றதா ? என்பதைப் பார்த்து எங்களுக்கு, அரசுக்குத் துணிச்சலாகத் தெரிவிக்க வேண்டும். இந்த உதவியை நீங்கள் செய்ய வேண்டும். மக்களுக்கு வரிக்கு மேல் வரி போட்டால் எவ்வளவு தொல்லை ஏற்படும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

மக்களிடம் ஒரு மனமாற்றத்தை நாம் உருவாக்க வேண்டும். அவர்கள் முன்னேற பொருளாதார வாய்ப்பைத் தந்தாக வேண்டும். நம்மிடம் உழைக்கின்ற சக்தி அதிகம் இருக்கின்றது. இதை நாம் பயன்படுத்தியாக வேண்டும். எனவே, கிராமத்தொழில்கள் பெருக வழி காண வேண்டும். அதன் மூலம் கிராம மக்களின் பொருளாதாரம் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும். கிராமப்புறங்களில் குடிசைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருளைப் பயன்படுத்த வேண்டும். அரசே தன்னுடைய அனைத்து இலாக்காக்களுக்கும் தேவையான பொருட்களைக் குடிசைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை வாங்கவேண்டும். அரசு குடிசைத் தொழில் முன்னேற பலவித உதவிகளைச் செய்து வருகின்றது. குடிசைத் தொழிலுக்காக தனி அலுவலகங்கள் இயங்கி வருகிறது. இதன் மூலம் குடிசைத் தொழில் வளர அரசு கடன் உதவி செய்துவருகிறது. நாங்கள் எங்கள் கடமையைச் செய்து வருகின்றோம். எங்கள் பலத்தை நம்பியல்ல! உங்கள் ஒத்துழைப்பைப் பெற்று கடமையைச் செய்து வருகின்றோம்.

கூட்டுறவு மூலமாக விவசாயிகளுக்குக் கிணறுவெட்ட கடன் கொடுக்கப்பட்ட பணம் எங்கள் பணமல்ல, மக்கள் பணம். கடன் வாங்குகிறவர்கள் திரும்பக் கொடுக்க மாட்டோம் என்றால் யாருடைய பணத்தைக் கொடுக்க மாட்டோம் என்கிறார்கள்? அது மக்கள் பணம்; மக்கள் பணத்தை கொடுக்கமாட்டோம் என்கிறார்கள். மின்சாரக் கட்டணத்தைக் கட்டமறுக்கின்றார்கள்; மின்சாரக் கட்டணம் வரியா? இல்லையே, அது மின்சாரத்திற்குக் கட்டணம். மின்சாரத்திற்குக் கட்டணமாக செலுத்துங்கள் என்றால் வரிகொடா இயக்கம் என்கிறார்கள். சிந்தித்துப் பார்க்க வேண்டும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகின்ற இந்த நிலைமையை நாம் இந்த நாட்டில் அனுமதிக்க முடியாது.

அண்ணா நாமம் வாழ்க!

(26.01.1981 அன்று, திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை)

கட்டுப்பாடு, ஒழுங்கு, நேர்மை, பண்பாட்டுடன் நடந்து கொள்வதும் கலைதான்!

சிறுவயதில் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் எனக்கு இங்கே நினைவுக்கு வருகிறது. இதுவரை சொல்லாத நிகழ்ச்சிகள் எல்லாம் எனக்கு நினைவுக்கு வருகின்றன. அவற்றைச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே டி.கே. சம்பங்கி அவர்கள் பொற்கிழி வாங்கினார்கள். அவர்களை இன்று எத்தனை பேருக்குத் தெரிந்திருக்க முடியும்? பலருக்கு ஞாபகம் இருக்காது. மைனர் ராஜாமணி என்னும் படத்தை டைரக்டர் ராஜா சாண்டோ அவர்கள் இயக்கிக் கொண்டிருந்த சமயத்தில் நடிப்புலகில் எனது ஆசானாகத் திகழ்ந்த காளி என். ரத்தினம் அவர்கள் என்னை ராஜா சாண்டோ அவர்களிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வாய்ப்புத் தருமாறு கூறினார். அப்போது ராஜா சாண்டோ கூறினார்; "உன்னை விடச் சிறந்த நடிகர் ஒருவரை அந்த வேடத்துக்கு ஒப்பந்தம் செய்துவிட்டேன். அடுத்த படத்தில் பார்த்துக் கொள்ளலாம்" என்று குறிப்பிட்டார். அந்தப் பாத்திரத்திற்கு ஒப்பந்தம் செய்யபட்டிருந்த அந்த நடிகர்தான் டி.கே.சம்பங்கி அவர்கள். மங்கள கானசபா என்ற ஒரு சபையை அவர் நிறுவியிருந்தார். அந்தச் சபையைக் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் விலைக்கு வாங்கி என். எஸ். கே. நாடக மன்றமாக ஆக்கினார். இந்தச் செய்தி பலருக்குத் தெரியாது.

இங்கே இளையவர்களுக்குப் பாராட்டுத் தரும்போது முதியவர்கள் நினைக்கலாம், "நாங்கள் எங்கோ கிடக்கிறோம்; இந்த இளைஞர்கள் சுகமாகத்தானே இருக்கிறார்கள். இவர்களுக்கு ஏன் பாராட்டு" என்று! அதே நேரத்தில் இளைஞர்கள் நினைக்கலாம், "இந்த முதியவர்களுக்கெல்லாம் எதற்குப் பாராட்டு? அவர்கள்தான் ஆண்டு முடித்து விட்டார்களே! எங்களைப் போன்ற இளைஞர்களைப் பாராட்டினால் எங்களுக்கு அது ஊக்கம் தருவதாக அமையும்" என்று!

இங்கு சிலரைத் தேர்ந்தெடுத்துப் பாராட்டியிருக்கிறார்கள். இன்னும் பாராட்டப்பட வேண்டியவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இங்கு சில சகோதரிகளை நானே பேசச் சொன்னேன். தங்களது அனுபவங்களை தங்களுக்கு ஏற்பட்ட சூழ்நிலைகளைச் சொல்ல வேண்டும் என நான் விரும்பினேன். சில அனுபவங்கள், வாழ்க்கையில் ஏற்பட்ட சில சிக்கல்கள், ஆகியவற்றை அவர்கள் மற்றவர்களுக்குச் சொல்லும்போது, தவறான பாதையில் போகும் மற்றவர்களுக்கு அது எச்சரிக்கையாக இருக்கும்.

இங்கே எம்.ஆர். வாசவாம்பாள் அவர்கள் கலைமாமணி விருது பெற்றார்கள். மிகச்சிறந்த ஆர்மோனியக் கலைஞரான இவர் பங்கு பெறும் நாடகத்தைப் பார்ப்பதற்கு மக்கள் போட்டி போட்டுக் கொண்டு டிக்கெட் வாங்கிய காட்சியை நான் கண்டிருக்கிறேன். இத்தகைய புகழ் பெற்ற கலைஞர் பலர் இருந்திருக்கின்றனர்.

கலைஞர்கள் தாங்கள் பாராட்டப்படும்போது அவர்களுக்குக் கிடைக்கின்ற மகிழ்ச்சிக்கு ஈடுஇணை கிடையாது. ஒரு கோடி ரூபாய் கொடுக்கும்போது கூட ஏற்படாத அந்த மகிழ்ச்சி, பாராட்டப்படும்போது அவர்களுக்கு உண்டாகிறது. பாராட்டுப் பெறும்போது, அது அவர்களை உற்சாகப்படுத்தி நம்பிக்கையை அவர்களுக்கு அளித்து மேலும் மேலும் உழைக்க வைக்கிறது. இங்கே ஒரு சிறு பையன் விருது வாங்கினான். அவனது தந்தைதான் சுருளிராஜன். மக்களை எல்லாம் தமது நகைச்சுவை நடிப்பில் சிரிக்க வைத்த பெருமை அவருக்கு உண்டு. இன்று அவரது மனைவியைக் கண்ணீர் வடிக்கவைத்துச் சென்றுவிட்டார்.

நகைச்சுவை நடிகர் என்னத்த கண்ணையா அவர்கள் இங்கே விருது பெற வந்தார்கள். அவர்களைப் பார்த்து நான் கேட்டேன், இன்னும் என்னாத்தே கன்னையா தானா என்று ? மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்ற கலைஞர்கள் தங்கள் சொந்த வாழ்வில் மகிழ்ச்சியோடு வாழ்கின்றார்களா என்றால் அதற்கு உத்தரவாதம் தரப்படவில்லை. இங்கே ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஆடை அலங்காரம் செய்தாலும், என்னதான் சுவையான உணவு உண்டாலும் அதனால் ஏற்படும் மகிழ்ச்சி கொஞ்சநேரம் இருக்கும். ஆனால் கலை உணர்வு கொண்டிருந்தால் கண்ட காட்சியைப் பிறகு எண்ணி எண்ணி மகிழலாம்.

இங்கே விருது பெற்ற பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் அவர்கள் பற்பல நூல்களை எழுதியுள்ளார். அவரது நூல்கள் எல்லாம் படித்து இன்புறத்தக்கது. படிப்போரை அந்நூல் இன்பத்தில் ஆழ்த்துகின்றன. கலைஞன் என்பவன் மனிதனில் இருந்து பிரித்து வைப்பதற்குரிய சொல்லாகும். கலையை யாரும் விலை பேச முடியாது; விலை பேச விடக்கூடாது.

ஒருவன் நடப்பதைப் பார்த்து, என்ன அழகாக நடக்கிறான் பார் என்கிறோம்! சிரிப்பதைப் பார்த்து என்ன அழகாகச் சிரிக்கிறான் பார் என்கிறோம்! அழகாக உடை உடுத்தியிருப்பதைப் பார்த்து என்ன அழகாக உடை உடுத்தியிருக்கிறான் பார் என்கிறோம். சிலர் மனைவியைச் சமாதானப்படுத்துவதற்காக கோபத்தில்கூட நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் என்று கூறுவார்கள். பிறருக்கு மகிழ்ச்சியூட்ட, பிறரை நிம்மதிப்படுத்த கலை பயன்படும் என்பதற்கு இவை எல்லாம் எடுத்துக்காட்டுகளாகும்.

கலை உணர்வுக்குச் சொந்தக்காரர்களாக இருப்பவர்களிடத்தில் ஏற்றத் தாழ்வு உணர்ச்சி தோன்ற முடியாது. ஜாதி, மதபேதங்கள் தலை காட்ட முடியாது. கட்டுப்பாடு, ஒழுங்கு, நேர்மை, பண்பாடு ஆகியவற்றுடன் நடந்து கொள்வதும் கலைதான். மதங்கள் பல இருந்தாலும் அவை போதிக்கும் கோட்பாடுகள் ஒன்றுதான். சைவ மதமாயினும், வைணவ மதமாயினும், புத்த மதமாயினும் சமண மதமாயினும். அந்தந்த மதத்தினர் தாங்கள் ஏற்றுக் கொண்டுள்ள கொள்கை பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை மீறி நடந்தால் மதத்திற்கு விரோதமான செயலாகிவிடும்.

மனித சமுதாயத்தில் தமிழினத்துக்கென ஒரு மரபு பழக்க வழக்கம் உள்ளது. அதை மீறி நடப்பவர்கள் தமிழர் அல்லர்; தமிழ்ச் சமுதாயத்துக்குச் சொந்தக்காரர்

அல்லர். கலைஞர்கள் பண்பாட்டிற்குச் சொந்தக்காரர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களது கலை வெற்றிபெறும், அப்படி இல்லாவிட்டால் அவர்களது கலை, கலைவாணர் அவர்கள் சொல்லியது போல அது கூட்டத்தைக் கலைக்கும் கலையாக ஆகிவிடும்.

கலையை வயிற்றுப் பிழைப்புக்காகப் பயன்படுத்தக்கூடாது. கலையை விலைபேச வேண்டும் என்ற முறையிலே கலைஞர்கள் நடந்துகொள்ளக் கூடாது. கலையை, கலையாக மதித்து, கலைக்காகவே வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள்தான் இங்கே இன்று பாராட்டுப் பெற்றிருக்கிறார்கள். நமது ஆளுநர் அவர்கள் இங்கே கலைஞர்களைப் பாராட்டிப் பேசினார்கள். அவர்களது உரையிலிருந்து, அவர்கள் தமிழை உணர்ந்தவர்களாக இருக்கிறார்கள், தமிழ்க் கலையை அறிந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

எத்தனையோ கலைஞர்கள் நல்ல நிலைக்கு வந்தும் இன்றும் கஷ்டப்படுகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது நடிகர் சங்கத்தைப் பலப்படுத்த வேண்டும் என்னும் எண்ணம் உறுதியாகிறது. அதற்கு அரசும் தன்னாலான உதவிகளைச் செய்யும். இங்கு திறக்கப்பட்டுள்ள கலை மேதைகளின் படங்களை வைக்க மன்றக் கட்டடத்தில் இடம் போதவில்லை என்று செயலாளர் குறிப்பிட்டார். நான் அவருக்கு விளையாட்டாக ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். நீதிமன்றக் கட்டடம் சிறிது ஆனால் தீர்ப்பு பெரிது. இதைச் சொல்லி நான் ஏமாற்றுகிறேன் என்று நினைக்க வேண்டாம்.

கட்டடம் கட்டுவதற்கான திட்டங்கள் விரைவில் செயல்படுத்தப்படும். அழியாத கலைக்கு ஒரு நல்ல கட்டடம் கட்ட எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும்.

அண்ணா நாமம் வாழ்க!

(1981 ஆம் ஆண்டு நடைபெற்ற கலைமாமணி விருது வழங்கும் விழாவில் ஆற்றிய உரை)

மாநிலங்களுக்கு உதவிட மத்திய அரசு முன்வர வேண்டும்!

மத்திய அரசு மாநிலங்களுக்குச் செய்யும் உதவிகள் அந்த மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் தொகை அடிப்படையில் அமைய வேண்டும். காட்கில் முறைப்படி, மக்கள் தொகை அடிப்படையில் உதவிகளைக் கணக்கிடுவது என்பது, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நல்லமுறையில் நிறைவேற்றும் மாநிலங்களைத் தண்டிப்பது போலாகும். மாநிலங்கள் தங்களுடைய நிதி ஆதாரங்களை விரிவுபடுத்த அரசியல் சட்ட திருத்தத்தைக் கொண்டு வரலாம். மேலும், பல்வேறு பொருட்கள் மீது மாநிலங்கள் விற்பனை வரி விதிக்க மத்திய அரசு அனுமதி அளிக்க வேண்டும். இரயில்வே பயணக் கட்டணங்களுக்காக அளிக்கப்படும் மானியத்தை அதிகரிக்க வேண்டும். சிறுசேமிப்பு நிதியில் தற்போது மாநிலங்களுக்கு மூன்றில் இரண்டு பங்கு திருப்பியளிக்கும் கடனாக அளிக்கப்படுகிறது. இதனை 80 சதவிகிதமாக அதிகரிக்க வேண்டும். தேசிய மின்சார இணைப்புத் (GRID) திட்டத்தை மத்திய அரசு உருவாக்க வேண்டும்.

தமிழகத்தில் உள்ள பி. அண்ட் சி. மில் மூடப்படிருப்பதால் 13 ஆயிரம் தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர். ஆகவே மத்திய அரசு பி.அண்ட். சி. மில்லை ஏற்று நடத்த விரைவாக ஒரு முடிவு எடுக்க வேண்டும். தமிழகத்தில் விவசாயிகளின் கடன் ஏறத்தாழ 80 கோடி ரூபாய் அளவிற்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. சிறு விவசாயிகளின் கடனை ரத்து செய்வதில் மத்திய அரசு தமிழக அரசுக்குக் கணிசமான அளவுக்கு நிதி உதவிகளைச் செய்ய முன்வர வேண்டும். வறுமை, பின்தங்கிய நிலைமையை அகற்ற மத்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு அரசு தனது முழு ஆதரவைத் தரும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்கள், முறைகள் ஆகியவற்றில் எங்களுக்கு முழு உடன்பாடு உண்டு. என்றாலும் திட்டங்களை மாநிலத்தில் செயல்படுத்துவதற்கான நிதி ஆதாரம் சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகளைத் தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில் தெரிவிக்காவிடில் நாங்கள் கடமை தவறியவர்கள் ஆவோம்.

6ஆவது ஐந்தாண்டுத் திட்டம் ரூ.97,500 கோடியில் தீட்டப்படுகிறது. இதில் ரூ. 47,250 கோடி மத்திய துறையின் வாயிலாகவும் ரூ.50,250 கோடி மாநிலங்கள் யூனியன் பிரதேசங்கள் மூலமாகவும் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. மாநிலங்களின் பங்கு 51.54 சதவீதம்தான் வருகிறது. மாநிலத்தின் பங்கு குறைந்தபட்சம் ரூபாய் 55,000 கோடியாக உயர்த்தப்பட வேண்டும்.

வறுமையை அகற்றும் திட்டத்திற்கு, தனி நபர் வருமான அடிப்படையில் திட்டமிடுவதைத் தவிர்த்து வறுமைக் கோட்டுக்குக்கீழுள்ளோர் சதவீதத்தின் அடிப்படையில் திட்டமிட வேண்டும். வெளிநாட்டு உதவியுடன் தொடங்கப்படும்

திட்டங்களுக்கான வெளிநாட்டுக் கடன் உதவிகளை முழு அளவில் சுலபமான விதிமுறைகள் அடிப்படையில் வழங்க வேண்டும்.

திட்டங்களைச் செயல்படுத்த விலைவாசிகளையும் பணவீக்கத்தையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியம். திட்டங்களைச் செயல்படுத்தும்போது சிமிண்ட், இரும்பு, நிலக்கரி போன்றவற்றின் விலைகள் உயர்ந்து விடுமேயானால், திட்டம் பற்றாக்குறையில் முடிகிறது. எனவே, அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் அவசியம்.

விவசாயிகளின் பிரச்சினைகளை முக்கியமாகக் குறிப்பிட தமிழ்நாடு அரசு விரும்புகிறது. விவசாயிகளுக்குக் கட்டுபடி ஆகிறமாதிரி உற்பத்திப் பொருட்களுக்கான விலைகள் நிர்ணயிக்கப்படவேண்டும். அப்படி நிர்ணயிக்கிற விலைகள் சில சமயங்களில் விவசாயிகளுக்குப் போய்ச் சேராத நிலையும் உள்ளது. எனவே, இந்த நிலைமையில் விவசாயத்துறைக்கு வழங்கப்படும் மானியங்கள் ரத்து செய்யப்படக்கூடாது. தமிழ்நாட்டில் புயல் வெள்ளச் சேதங்கள் ஏற்பட்ட போதெல்லாம் விவசாயிகளுக்கு மாநில அரசு தனது நிதியிலிருந்து உதவிகளை வழங்கியுள்ளது. முழுக்க முழுக்க மாநில அரசே இதைச் செய்வது கடினம்.

எனவே, அவ்வாறு இயற்கையின் கொடுமை ஏற்படுகிறபோது விவசாயிகளுக்கு உதவ தேசிய நிவாரண நிதி அமைப்பது அவசியம். அத்தியாவசியப் பண்டங்கள் மலிவு விலையில் கிடைக்கத் தமிழகமெங்கும் 17 ஆயிரம் நியாய விலைக் கடைகள் உள்ளன. இதற்கு வழங்கப்படும் மானியத்தில் பாதியையாவது மத்திய அரசு ஏற்க 6ஆவது திட்டத்தில் வகை செய்ய வேண்டும்.

ஆறாவது திட்டத்தில் கிராமப்புற வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் சிறப்பானது. இத்திட்டத்திற்கு உதவும்போதும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் தொகை அடிப்படையில் உதவ வேண்டும். அரிசியை உட்கொள்ளும் மக்களைக் கொண்ட தமிழகத்துக்கு இத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட அளவு அரிசி உடனுக்குடன் கிடைத்திட வகை செய்ய வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் நலத்துக்கான திட்டங்கள் தீட்டும்போது மாநிலத்துக்கு ஏற்ற மாதிரி திட்டங்களைச் செயல்படுத்த அனுமதிக்க வேண்டும். சேதுசமுத்திரத் திட்டம், தூத்துக்குடி அருகே அனல் மின் திட்டம் ஆகியவற்றையும் ஆறாவது திட்டத்தில் சேர்த்து நிறைவேற்ற வகை செய்ய வேண்டும். கடலிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம், காவிரிப் படுகையில் எண்ணெய் வளம் கண்டுபிடிப்பது போன்றவற்றின் பரிசீலனையை இத்திட்டத்தில் சேர்க்க வேண்டும்.

தூத்துக்குடி அகல இரயில்பாதைத் திட்டம், கரூர், திண்டுக்கல் அகல இரயில்பாதை, முதலியவற்றையும் செயல்படுத்த வேண்டும். சென்னை கன்னியாகுமரி கடற்கரை தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தையும் செயல்படுத்த வேண்டும்.

தமிழகத்திலுள்ள முக்கிய சுற்றுலாத்தலங்களுக்கு விமானப் போக்குவரத்து வசதி செய்து தரும் திட்டத்தையும் சேர்க்க வேண்டும். பெட்ரோலிய, ரசாயன, உரத் தொழிற்சாலைத் திட்டத்துடன் 2 ஆவது சுத்திகரிப்பு ஆலை அமைக்கும் திட்டத்தையும் சேர்க்க வேண்டும். பினாமி நிலங்களைக் கைப்பற்றி ஏழைகளுக்கு விநியோகிக்க வகை செய்யும் தமிழக அரசின் நிலச்சீர்திருத்தச் சட்டத்துக்கு மத்திய அரசு உடனடியாக அனுமதி அளிக்க வேண்டும்.

அண்ணா நாமம் வாழ்க !

(1981 பிப்ரவரி 13, 14 அன்று, டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுகூட்டத்தில் ஆற்றிய உரையின் சாரம்.)

அனைவரும் தமது ஆற்றலை, அறிவை, உழைப்பை சமுதாயத்துக்கு உதவும் வகையில் பாடுபடவேண்டும்!

இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் விடுதலை பெறவேண்டும் என்ற இலட்சியத்திற்காகப் போராடியவர்கள் எல்லாரும் எப்படி ஒருமித்த உணர்வுடன் இருந்தார்களோ, அந்த எண்ணம் மீண்டும் இப்போது தமிழகத்தில் தலை தூக்கத் தொடங்கியிருக்கிறது. நிலப் பரப்புக்கு விடுதலை கேட்டார் வ. வே.சு ஐயர். மன உரிமை கேட்கும் நேரம் இது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

44 வயதுக்குள் முழுமையான, முழுவரலாற்றைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறார். அவரது வாழ்க்கைப் போராட்டக் குவியலாகவே இருந்திருக்கிறது. 44 ஆண்டுக்குள் கல்வி கேள்விகளில் சிறந்து பன்மொழிப் புலமை பெற்று, நாட்டுக்காகப் போராடியதுடன் நாட்டுப்போரில் ஈடுபடுவதற்கு இளைஞர்களைத் தயார் செய்து, துப்பாக்கி சுடும் பயிற்சியும் தந்தார் என்பதை நினைக்கின்றபோது அவரது வாழ்க்கை சாதாரண வாழ்க்கை அல்ல என்பதை ஒவ்வொருவரும் ஒத்துக்கொண்டு தான் ஆக வேண்டும். கல்வி கேள்விகளில் சிறப்படையவேண்டும் என்று எண்ணியது போலவே, போர் வீரனாகவும் விளங்கவேண்டும் என்று கருதிய வ.வே.சு ஐயர் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் அது பொருந்தும் என நினைக்கிறேன்.

இப்படிப்பட்ட பாராட்டும் வழிமுறைகளை அமரர் அண்ணா அவர்கள்தான் எங்களுக்குச் சொல்லித் தந்திருக்கிறார்கள். அதே கொள்கைப்படி இன்று வ.வே.சு ஐயர் அவர்களுக்கு இந்த அரசு விழா எடுப்பது அமரர் அண்ணா அவர்களின் கருத்தை பிரதிபலிக்கிறது. இதை பெருமையோடு மட்டுமல்ல மன நிறைவோடு சொல்லிக்கொள்ள உரிமை இருக்கிறது என்று கூறிக்கொள்கிறேன்.

இங்கே சில கோரிக்கைகளைச் சொன்னார்கள். அவற்றில் இரண்டை நிறைவேற்ற ஏற்கெனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை அச்சில் வெளிவராத வ.வே.சு ஐயர் அவர்களின் நூல்களை தமிழக அரசே அச்சிட்டு வெளியிடும். வ.வே.சு ஐயர் பிறந்த ஊரில் இருக்கும் வீட்டைத் தமிழ்நாடு அரசு எடுத்து நினைவுச் சின்னமாகப் பாதுகாக்கும். அதுமட்டுமல்ல, கோரிக்கைகளில் எதை எதைச் செய்ய முடியுமோ அவற்றைத் தமிழ்நாடு அரசு நிறைவேற்றும்.

சமுதாயத்தில் யாரையும் எளிதில் மாற்றிவிட முடியாது என்பதை வ.வே.சு ஐயரின் வாழ்க்கை வரலாறு தெரிவிக்கிறது. அவர் நடத்திய குருகுலத்தில் ஏற்பட்ட பிரச்சினையைக் குறிப்பிடுகிறேன். சமூகத்தில் ஊறிப்போயுள்ள தேவையற்ற சில நம்பிக்கைகளை எதிர்த்துப்போராட முடியவில்லை வ.வே.சு ஐயர் அவர்களால். இதை நான் வேதனையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்று தமிழகத்தில் மட்டுமல்ல இந்தியத் துணைக்கண்டம் முழுதிலும் அமைதி இருக்கிறதா? மக்களின் வாழ்க்கையில் அமைதிக்கு உத்தரவாதம் தரப்பட்டிருக்கிறதா? எல்லாம் இருந்தும் நிம்மதியாக வாழ முடியும் என்று கருத நம்பிக்கை ஊட்டமுடிகிறதா? சுதந்திரம் பெறும்போது எந்த உணர்வு இருந்ததோ, அனைவரும் ஒன்றே என்ற எண்ணத்துடன் ஒரே நிலையில் ஒன்றுபட்டுப் பணியாற்றினோமோ அந்த எண்ணத்துடன் ஒன்று பட்டு இன்றும் செயல்பட்டால் பிளவுகளை, பிரிவுகளை, அதன் விளைவுகளை நாம் எளிதில் களைந்துவிட முடியும். நம்மை வளர்த்துக் கொண்டால் மட்டும் பயன் இல்லை நாட்டை வளர்ப்பதற்காக நாம் பயன்பட வேண்டும். அந்த முயற்சியில் ஈடுபடாவிட்டால் ஜாதிப் பிரச்சினை தீராது. ஏற்றத்தாழ்வு நீங்காது. எனவே அனைவரும் தமது ஆற்றலை, அறிவை, உழைப்பை சமுதாயத்துக்கு உதவும் வகையில் பாடுபட வேண்டும்; ஒதுங்கி நிற்கக் கூடாது!.

தனி மனிதருக்கு இங்கே நாம் நூற்றாண்டு நிறைவு கொண்டாடவில்லை! தனி மனிதரான வ.வே.சு ஐயர் அவர்கள் சமுதாயக் கொள்கையின் சின்னமாக ஆக்கப்பட்டார் என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். அவரது நூற்றாண்டு நிறைவுநாள் மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சியாளரால் எளியமுறையில் சிக்கனமான முறையில் ஆனால் சிறப்பான வகையில் கொண்டாடப்படும்.

அண்ணா நாமம் வாழ்க!

(05.04.1981 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற வ.வே.சு ஐயர் நூற்றாண்டு நிறைவு விழாவில் ஆற்றிய உரை)

அனைத்து மாவட்டங்களிலும் தமிழை ஆட்சிமொழியாக்கி வருகிறோம்!

அமரர் பேரறிஞர் அண்ணா பிறந்த தினத்தில் இருந்து குற்றவியல் நீதிமன்றங்களில் தமிழ் பயன்படுத்தப்படும். சிவில் வழக்கிலும் தமிழைப் புகுத்த இருக்கிறோம், அனைத்து மாவட்டங்களிலும் தமிழை ஆட்சி மொழியாக்கி வருகிறோம். பாவேந்தரின் நம்பிக்கைக்குரிய பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் துணைவியார் இங்கு வந்து இருக்கிறார். அவருக்கு நாம் காணிக்கை செலுத்த இருக்கிறோம். 1958ஆம் ஆண்டு நான் கால்முறிந்து படுக்கையில் படுத்தநேரம். பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தை இழக்க நேரிட்டது. அவர் உடல் நிலை மோசம் அடைந்தபோது இதனை என்னிடம் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறார். அவர் படுக்கையில் இருந்த சமயம் அமைச்சராக இப்போது இருக்கும் மாண்புமிகு ஆர். எம். வீ. அவர்களையும் மற்றும் நண்பர்களையும் அனுப்பி வைத்தேன். ஆனால் இயற்கை நம்மை ஏமாற்றிவிட்டது.

தேவையான சமயத்தில் இயற்கை நம்மை மோசம் செய்து விடுகிறது. தனது பாடல்களில் அவர் தீவிரமான கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார். “தூங்காதே தம்பி தூங்காதே” என்ற பாடல் எல்லாத் தரப்பினருக்கும் பொருத்தமானதாக இருந்தது. “திருடாதே பாப்பா திருடாதே” என்ற பாடலும் அவர் எழுதியதுதான். இவ்வளவு சிறப்பான அவர் பரிசுபெற இத்தனை ஆண்டுகள் காத்துக் கொண்டிருக்க வேண்டியது இருந்தது. இதற்கு முன்பு யாரும் இதனைச் செய்ய முன்வரவில்லை.

ஜீவாவின் துணைவியாருக்கு உதவிகள் செய்து இருக்கிறோம். இது எனது பணம் அல்ல, மக்கள் தந்த பணம். அது மக்களின் தலைவர்களுக்கும் கவிஞர்களுக்கும் தொண்டர்களுக்கும் போய்ச்சேருகிறது. விழா கொண்டாடுவதில் மட்டும் மகிழ்ச்சி அடையவில்லை. மக்களுக்குச் செய்யும் நன்மைகளிலும் மகிழ்ச்சி அடைகிறோம், மக்கள் துணையாக இருந்தால் மேலும் மேலும் பணியாற்ற முடியும்.

கவிஞர் முத்துலிங்கம், ஒரு கவிஞன் எப்படி இருக்கவேண்டும் என்று உலகம் எதிர்பார்க்கிறதோ அந்த வகையில் செயல்பட்டவர். இதுபோல, ஆண்டுதோறும் பரிசுகள் தர இருக்கிறோம். இதைச் செய்வதில் மக்கள் எங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும்.

(1981ஆம் ஆண்டு சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற பாவேந்தர் பாரதிதாசன் விழாவில் ஆற்றிய உரை)

சாதிக் கொடுமைகள் வேண்டாம் – அன்பு தன்னிற் செழித்திடும் வையம்!

என்னை வாழவைக்கும் தெய்வமாகிய தமிழகப் பெரியோர்களே,

தாய்மார்களே,

என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புகளே,

முப்படைத் தளபதிகளே,

தலைமைச் செயலாளர் அவர்களே,

நீதிபதிகளே, செயலகத்தில் செயல் புரிகின்ற வல்லுநர்களே மற்றும் இந்த அரசை நடத்துவதற்கு அதிகாரிகளாக இருந்து பணியாற்றுகின்ற அத்துணை நண்பர்களே,

இந்தச் சுதந்திர தினத்தன்று கோட்டையிலே கொடி ஏற்றுவதற்கும், உங்கள் முன் தமிழக அரசினுடைய கருத்தினை வெளியிடுவதற்கும் வாய்ப்புத் தருகின்ற வகையில் இந்தச் சுதந்திரத்தை நமக்கு ஈட்டுத் தந்த அத்துணை தியாகிகளுக்கும் நாம் முதலில் நம்முடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ள வேண்டும், தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். உலகெங்கிலும் உள்ள பிரச்சினைகள் இந்தியத் துணைக் கண்டத்திலும் எதிரொலிக்கின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது என்பதே எனது முதல் வேண்டுகோள் ஆகும்.

ஒரு மனிதனுடைய உடலில் எங்கேயோ ஏதோ ஒரு பகுதியில் ஒரு வலி வந்தாலும், அந்த மனிதனுடைய வாழ்க்கையில் அது எப்படிப்பட்ட தொல்லைகளை ஏற்படுத்துமோ அதைப்போல் இந்தியத் துணை கண்டத்திலே எங்கே ஒரு பிரச்சினை எழுந்தாலும் அது அனைத்து மாநிலங்களிலும், இந்தியக் குடிமக்கள் இருக்கின்ற ஒவ்வொரு வீட்டிலும் எதிரொலிக்கும் என்பதை இங்கே நான் கொஞ்சம் அழுத்தமாக எடுத்துக் கூறவிரும்புகிறேன். ஏதோ எங்கேயோ நடக்கிறது என்பதை எண்ணி நாம் நிம்மதியாக இருக்க விரும்புவோமானால் அந்த நோய் என்றாவது ஒருநாள் நம்மையே தாக்கலாம் என்பதை நாம் மறந்து விடுகிறோம் என்று பொருளாகும் என்பதை இங்கே குறிப்பிடவிரும்புகிறேன்.

நாட்டிலே இருக்கின்ற பொருளாதாரப் பிரச்சினைகள், வறுமைக் கோட்டுக்கும் கீழே உள்ள மக்களுடைய நிலைமைகள், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய இவைகள் அனைத்துக்கும் பொருளாதார அடிப்படையில் நாம் புதிய வழியை வகுத்துக்கொண்டு புதிய மாற்றத்தை ஏற்படுத்தியாக வேண்டிய கட்டாயம், நெருக்கடி என்று கூட சொல்லலாம் இந்த நாட்டுக்கு இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காத்துக் கிடந்த ஏமாந்த மக்களுடைய உள்ளத்தில் என்னென்ன கருத்துக்கள் உதயமாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கும் பொறுப்பிலே இருக்கின்ற எங்களைப் போன்றவர்கள் மறந்து விடுவதோ, சொல்வதைக் கேட்காமல் மறுத்து விடுவதோ, அலட்சியப்படுத்துவதோ நாட்டினுடைய நலனுக்கு உகந்தது அல்ல என்பதை உணர்ந்து பல திட்டங்களைத் தீட்டுவதற்கு நாங்கள் முயல்கிறோம். இந்த நேரத்தில் ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்களை வாழ்த்துகிறவர்கள், பாராட்டுகிறவர்கள், எங்களுடைய நல்ல காரியத்திற்குத் துணை நிற்கின்றவர்கள், அத்துணை பேர்களுக்கும் நாங்கள் நன்றியையும், வணக்கத்தையும், உணர்வு மிகுந்த பாராட்டுகளையும் சொன்னாலும், அதே நேரத்தில் எங்களை தாக்குகின்றவர்களையும், நாங்கள் மன நிம்மதியோடும், மரியாதையோடும் கவனிக்கிறோம் என்பதையும் அதை எங்களுடைய நல்ல செயல்களுக்கு எருவாக்கிக் கொள்கிறோம் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆத்திரப்படுவது அறிவீனம் என்பதை அமரர் அண்ணா அவர்கள் நமக்கு சொல்லித் தந்திருக்கிறார்கள். ஆத்திரத்திற்கு அடிமைப்பட்டவன் ஆக்க வேலையைச் செய்யமுடியாது என்பதே அமரர் அண்ணா அவர்களின் திட்டவட்டமான கொள்கையாகும். சிந்திக்கிறவனால் தான் அவனால் முடிந்த அளவுக்கு எப்போதாவது செயலில் ஈடுபட முடியுமே தவிர, சிந்திக்க மறுக்கிறவர்கள் இந்த நாட்டினுடைய நிலைமையையும் மக்களின் உள்ளத்தில் எழுகின்ற எரிமலை போன்ற குமுறல்களையும் அறிவதற்குப் பின்தங்கி விடுவார்கள் அல்லது தவறி விடுவார்கள் என்பதை அமரர் அண்ணா அவர்கள் அவர்களுடைய வார்த்தைகளால் எத்தனையோ முறை நமக்கு சொல்லித் தந்திருக்கிறார்கள். அதைப் பின்பற்றி ஆட்சியிலே இருக்கிற நாங்களும் திட்டங்கள் தீட்டினாலும் அவற்றை நிறைவேற்ற வேண்டியவர்கள் அதிகாரிகளும் மக்களும்தான் என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்வதற்குப் பயன்படுத்துவதற்கு, வேண்டுகோளாக எடுத்துவைக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இந்தியா முழுவதும் நாம் அமைதியாக இருக்கிறோம் என்ற ஒரே காரணத்திற்காகவோ அல்லது நாம் வளருகிறோம், வளர முனைகின்றோம் என்ற காரணத்திற்காகவோ அண்டையிலே இருக்கிற எந்த நாடானாலும் சரி, அல்லது வேறு எங்கேயிருந்து காஷ்மீரம் வரை நாம் அனைவரும் ஒன்றுபட்டு நின்று அந்த எதிர்ப்புகளை முறியடிப்போம் என்பதை இந்த நேரத்தில் அதிலும் குறிப்பாக இந்த சுதந்திர தினத்தன்று தமிழகத்தின் எண்ணமாக வெளியிடுகிறேன்.

யார் படை எடுத்தாலும், நம்மில் ஒருவர் உயிரோடு இருக்கும்வரை நமது சுதந்திரத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் விட்டுக்கொடுக்க மாட்டோம். யாருக்கும் தலைவணங்க மாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் நாம் அமைதியாக வாழ்கிறோம். வாழ விரும்புகிறோம். ஜாதியை ஒழித்து, மத பேதத்தைத் தகர்த்து அனைத்து மக்களும் “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்ற நம்பிக்கையில் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்ற கொள்கையை, அமரர்

அண்ணா அவர்கள் சொல்லித் தந்த கொள்கையை உயிராகக் கொண்டிருக்கிறோம். இதிலே மதம் குறுக்கிட்டாலும், ஜாதி குறுக்கிட்டாலும் இந்த அரசும் தமிழக மக்களும் ஒன்று சேர்ந்து அதை எதிர்ப்பார்கள் தகர்ப்பார்கள் என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மதம் என்பது ஒழுக்க நெறிமுறைகளை வகுத்துக் கொடுக்கின்ற ஒன்று ஆகும். அதை எண்ணிக்கையை அதிகரிக்கப் பயன்படுத்துவதோ அல்லது தங்கள் எண்ணத்தை எங்கோ இழுத்துச் செல்லப் பயன்படுத்துவதோ, நாம் அனுமதிக்க முடியாத ஒன்றாகும் என்பதை நம் ஒன்றுபட்ட கருத்தாக வெளியிட விரும்புகிறேன்.

ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு மாறுகிறவர்கள் அந்த மதத்தினுடைய கோட்பாடுகளை ஏற்று மாறினால் அது அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றே தவிர மறுப்பதற்கில்லை. ஆனால் சலுகைகள்காட்டி, வற்புறுத்தி, பயமுறுத்தி, வேறு வசதிகளை, சூழ்நிலையைச் சொல்லி மதம் மாற்றுவது இந்த நாட்டுக்கு ஒவ்வாத ஒரு கொள்கை என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

எந்த மதத்தைச் சார்ந்தவர்களும் சம உரிமையோடு தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியத் துணை கண்டம் முழுவதும் வாழ்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிற சாசனமாகும் இந்திய அரசியல் சட்டம். இந்தியக் குடியரசினுடைய அரசியல் சட்டம் சொல்வது நாம் மதச் சார்பற்ற நாடு என்பதுதான். எந்த மதத்திற்கும் நாம் சார்பாக இருந்து இந்த நாட்டை ஆள விரும்பவில்லை என்பது அது திட்டவட்டமாக வெளியிடும் கொள்கையாகும்.

அதே நேரத்தில் அதையும் அரசியல் ஆக்கி, ஜாதியைத் தங்களுடைய எதிர்ப்புணர்ச்சிக்கு எரு ஆக்கிப் பயன்படுத்துகிறவர்கள் யாராக இருந்தாலும் மீண்டும் நான் வற்புறுத்திச் சொல்கிறேன் சட்டம் அவர்களைத் தடை செய்யும் என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்த மதத்தைச் சேர்ந்தவர்களும் உரிமையோடு வாழலாம், உழைக்கலாம், எந்தக் குடிமகனுக்கும் உள்ள சுதந்திரம் ஒவ்வொரு மதத்தினருக்கும் உண்டு. ஆனால் இந்த ஜாதி பேதம் என்கிற நமக்கு ஒவ்வாத தேவையற்ற, மனசாட்சி ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றை நாம் வலுவிலேயே வைத்துக்கொண்டு, அதைச் சுமந்து, நம்மை நாமே பிரித்துக் கொள்வதற்கு அதைப் பயன்படுத்துகிற கொடுமையிலிருந்து நாம் அனைவரும் விடுபடுவோம் என்கிற உறுதியை இந்தச் சுதந்திர நாளில் எடுத்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறோம்.

சுதந்திரம் உடலுக்குக் கிடைத்தது. உள்ளத்திற்கும் அது கிடைத்தாக வேண்டும். வெளிப்படையாகச் சொல்வதானால், நாம் நடமாட உரிமை உண்டு. ஆனால் நாம் நடமாடும் இடத்தை, நாம் எந்த இடத்தில் நடமாட வேண்டுமென்று விரும்புகிறோமோ அந்த இடத்தைத் தேர்ந்தெடுப்பது மனம் என்கிற வகையில் நம்பிக்கைக்கு உரியவர்கள் வாழ்க்கைக்குத் தடைக் கற்களை உருவாக்கினால் அதைத் தூக்கி எறிந்து அந்தப்

பாதையைச் சமன் செய்வது ஆட்சியாளர்களின் கடமை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்றை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டாக வேண்டும். இலங்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் உண்மையிலேயே நமக்கு நல்ல செய்திகளாகக் கிடைக்கவில்லை என்பதை இந்த சுதந்திர தினத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்படிருக்கிறேன். மைய அரசு அதற்கு ஆவன செய்யும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. இதற்கு ஆதாரமாக நான் அண்மையில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களைச் சந்தித்துப் பேசிய போது அவர்கள் சொன்ன செய்திகளை இங்கே நான் சொல்லியாக வேண்டும். "எந்தெந்த வகையில் எந்தெந்த வழியில் நியாயமுறைப்படி, சர்வதேச முறைப்படி நாம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியுமோ அத்தனையையும், அங்கே வாழ்கிற இந்திய மக்களுக்காக, குறிப்பாகத் தமிழர்களுக்காக, இன்னும் சொல்லப்போனால் அனைத்து நாட்டு மக்களுக்காகவும் பாதுகாப்பைச் செய்யச்செய்வோம் என்று நீங்கள் மக்களிடத்திலே சொல்லலாம்" என்று சொன்னார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை நம்பி நான் காத்திருக்கிறேன். இருந்தாலும் இந்தியா சுதந்திரம் பெற்ற இந்த சுதந்திரத் தினத்தில் சொல்லுகிறேன். இந்தியாவிலிருந்து சென்ற மக்கள் அங்கே வாழுகின்ற மக்கள் அதையே தங்கள் தாயகமாக கொண்டிருக்கிற தமிழக மக்கள் அவதியுறுவதை நான் கேட்டு எந்த எண்ணத்தையும் பிரதிபலிக்காமல் இருக்க முடியாது என்ற வேதனையை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் செய்தி இலங்கை அரசுக்கு இந்தியப் பேரரசால் முறையாக அனுப்பப்படும் என்பதில் எனக்கு கொஞ்சமும் சந்தேகம் இல்லை என்பதைச் சொல்லி பொருளாதாரத்தைச் சீர் குலைக்கிறவர்களைத் தடுக்க, பொருளாதாரத் திட்டத்தை சமத்துவமாக்க, அடிமட்டத்தில் இருக்கிற மக்கள், உழைக்கிற மக்கள் நல்வாழ்வு பெற, அவர்கள் நிம்மதியாக வாழ, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறவர்களை மேம்படுத்த உடல் உறுப்புகள் ஊனமாகிவிட்ட காரணத்தாலே வாழ்வை இழந்திருக்கிற நம்முடைய அன்புக்குரிய மக்கள், அவர்கள் அத்துணைப் பேர்களுக்கும் வாழ்வு அளிக்க, நாம் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறோம். அதை வெற்றிகரமாக ஆக்க வேண்டியது நம் அனைவருடைய கடமை என்பதை இந்த மாபெரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள நீங்கள் இந்தியத் துணை கண்டத்தினுடைய ஒட்டுமொத்தமான பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதோடு அன்றாட நிகழ்ச்சியைப் பற்றிச் சிந்தித்து தேவையற்ற பூசல்களில் நம்மை ஆட்படுத்திக் கொண்டு, மிகப் பெரிய ஆக்க வேலையைத் தடுப்பதற்கு இடைஞ்சல் ஏற்படுத்தி விட இடம் தராமல் ஒத்துழைப்புத் தந்து, விரைவிலேயே சமத்துவ, சமுதாய, பொருளாதார அமைப்பை ஏற்படுத்த உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டில் பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன. நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றங்களுக்குத் தேர்தல்கள் இந்த ஆண்டுக்குள் நடைபெற இருக்கின்றன.அதை நடத்தியே காட்டுவோம். நடத்தியே தீருவோம் என்பதை உங்களுக்குச் சொல்வதோடு மக்கள் இதுவரையில் காட்டிய அந்த ஜனநாயகத்

தத்துவ முறையைச் சீர்பட நடத்திக் காட்ட வேண்டும் என்பதை நான் வேண்டுகோளாக வைக்கிறேன்.

ஜாதி சமயங்கள் நாட்டு மக்களுக்கு நல்லது செய்வதைத் தடுப்பதற்காக இருக்குமானால் அவைகளை அறவே ஒதுக்கித் தள்ளி நாம் எல்லோரும் ஒன்று தான், எல்லோரும் ஒரே ஜாதி தான், அது மனித ஜாதி தான், அது அண்ணாவின் கொள்கையான "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கொள்கைதான் என்பதை மனதில் கொண்டு அந்த முறையில் நல்லவர்களை நல் அறிஞர்களை இந்த நாட்டுக்கு தேவையானவர்களை நீங்கள் தேர்ந்தெடுத்து உங்கள் விருப்பப்படி இந்த நாட்டில் ஜனநாயக மரபை மீண்டும் உருவாக்கித் தர வேண்டுமென்று உங்களை எல்லாம் கேட்டுக்கொண்டு கிராமங்களுக்கு, விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு, உழைக்கும் வர்க்கத்தினருக்கு, வியாபாரிகளுக்கு ஆக அத்துணை பேர்களுக்கும் நாங்கள் வாய்ப்புத் தர வேண்டும், அவர்கள் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தித் தரவேண்டும் என்பதற்காகத் தீட்டுகின்ற திட்டங்களுக்கு ஆதரவு தந்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்வதோடு இந்த சுதந்திர நாளில் நாம் சுதந்திர புருஷர்களாக இருக்க இந்த வாய்ப்பை வாங்கித் தந்த மகாத்மா காந்தி அவர்களுக்கும் அவரைப் பின்பற்றியவர்களுக்கும், தியாகம் செய்த சீலர்களுக்கும் நம்முடைய வணக்கத்தைக் கூறி, இந்தியத் துணைக் கண்டத்தின் சுதந்திரம் வாழ்க, இந்திய மக்கள் வாழ்க, தமிழக மக்கள் வளம் பெறுக, அண்ணா நாமம் வாழ்க! என்று சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.!

அண்ணா நாமம் வாழ்க!

(15.08.1981 அன்று, சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து ஆற்றிய உரை)

வாழ்க சமத்துவ சமுதாயம்!

என்னை வாழவைக்கும் அன்புத் தெய்வங்களான பெரியோர்களே! தாய்மார்களே!

என் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புகளே!

உங்கள் அனைவருக்கும் சுதந்திர தினமாகிய இந்த நன்னாளில் எனது உளங்கனிந்த வாழ்த்துகளையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் விடுதலை பெற்றது ஏதோ நேற்றுத்தான் நடந்தது போலிருக்கிறது.நாம் விடுதலை பெற்று முப்பத்து நான்கு ஆண்டுகள் ஓடிவிட்டன. விடுதலைபெற்ற அன்றைக்கு 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15ஆம் நாள் நள்ளிரவில் அமரர் பண்டித நேரு அவர்கள், "இன்று உலகம் துயில் கொண்டிருக்கும் இந்த நள்ளிரவு நேரத்தில் இந்தியா சுதந்தரத்திற்குள் விழித்தெழுகிறது" என்று குறிப்பிட்டார்கள். அமரர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் "நாளை காலை முதல் நமது தவறுகளுக்காக நாம் வெள்ளைக்காரர்களைக் குற்றம் சாட்டவோ, குறைசொல்லவோ இயலாது" என்றார்கள். என்றைக்கோ எப்போதோ பேசப்பட்ட அவர்களின் வார்த்தைகளை என்றைக்கும் நினைத்துப் பார்ப்பதற்கு நாம் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம்".

நமது விடுதலைப் போராட்டம் வரலாற்றுச் சிறப்புள்ளது. அதற்கு முன்பாக, உலகின் வேறு எந்தப்பகுதியிலும் இந்த அளவு அறவழியில் அன்பு வழியில் போராடி ஒரு நாடு தன்னை விடுவித்துக் கொண்டதில்லை. புத்தரது காலத்திலும், இயேசுவின் காலத்திலும், அகிம்சை என்பது தனி மனித தர்மமாகவே இருந்தது. நமது நாட்டு விடுதலைப் போராட்டக் காலத்திலேயேதான் அண்ணல் காந்தி அடிகள் அகிம்சையை ஒரு சமுதாய தர்மமாக உணரச் செய்தார்கள்.

இன்று பட்டொளி வீசிப் பறக்கிற தாயின் மணிக்கொடியைப் பார்க்கிறோம்! பரவசமடைகிறோம். ஓங்கிப் பறக்கிற இந்தக் கொடியை, உயரப்பறக்க விடுவதற்காக சொந்த பந்தங்களை சொத்து சுகங்களை ஏன் தங்கள் இன்னுயிர்களையே ஈந்தவர்கள் எத்தனை பேர்? பெயர் தெரிந்த பெரியவர்கள் சிலர் நமது நினைவிலே எப்போதும் வாழ்கிறார்கள். ஆனால் நமக்கே தெரியாமல் சுதந்திர மாளிகையின் அடிக்கற்களாக வரலாற்றுப் புதைமணலில் மறைந்துவிட்ட இலட்சக்கணக்கான மாவீரர்களும் உண்டு. அவர்கள் அனைவரையும் இன்று மீண்டும் நன்றியுணர்வோடு நெஞ்சார நினைத்து வணங்கி அவர்களின் நினைவுகளைப் போற்றவும், கனவுகளை நினைவுகளாக மாற்றவும் சூளுரைப்போம்.

இந்தியத் துணைக் கண்டத்தின் விடுதலைப் போராட்டம் இன்னும் முடிந்துவிடவில்லை அது தொடர்கிறது. அரசியல் விடுதலை கிடைத்த ஒரு நாட்டில், பொருளாதார சமுதாய விடுதலைக்கான போராட்டம் தொடர்ந்து நடப்பதொன்றும் ஆச்சரியமானதல்ல. விடுதலை என்பது அந்நியரிடமிருந்து

ஆட்சி அதிகாரம் நமது கைகளுக்கு மாறிவருவது மாத்திரமல்ல, உலக மகாகவிபாரதி நம்பிக்கையோடு சொன்னார். “எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு, நாம் எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு” என்று.

நாம் அனைவருமே சமம் என்றால்தான் நாம் உண்மையாக சுதந்திரம் பெற்றிருக்கிறோம் என்று பொருள்படும். நம்மிடத்தில் இனத்தாலோ மதத்தாலோ சாதியாலோ மொழியாலோ பொருளாதாரத்தாலோ மேலோ, கீழோ என்ற நிலை இன்னமும் நீடிக்குமானால் நமது சுதந்திரம் அர்த்தமற்ற ஒன்றாகிவிடும். சமுதாய பொருளாதார விடுதலை முழுமையாக பெறப்படாத இந்நாட்டில் அரசியல் சுந்திரம் மட்டும் காப்பாற்றப்பட்டு என்ன பயன்? ஜனநாயகம் நம்மைப் பொறுத்தவரை ஒரு அலங்காரமான வார்த்தை அல்ல. அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதுபோல் அது ஒரு வாழ்க்கைமுறை. இந்தியாவின் தொன்மைமிக்க வரலாறு இதற்குச் சான்று இருந்தாலும் நமது மக்களின் எல்லையற்ற பொறுமையை ஆதாரமாக வைத்துக்கொண்டு சமுதாய, பொருளாதார விடுதலையை நாம் தள்ளி வைத்துக்கொண்டே செல்வது இனி மேலும் இயலாது.

அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னது போல அந்த 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 கணக்கு தீர்த்தநாள், இந்த ஆகஸ்டு 15 கணக்குப் பார்க்கிற நாள். ஆனால் கணக்குப் பார்க்கிற நாம் கவனமாகப் பார்க்கவேண்டும். நாம் சில உண்மைகளை இந்த சுதந்திரத் திருநாளில் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

வேறு சில நாடுகளைப் போல அல்லாமல் ஜனநாயக நெறியிலேதான் பொருளாதார மாற்றம் வந்தாகவேண்டும் என்பது நமது தெளிவான கொள்கையாகவே இருந்து வருகிறது. சிலருக்கு நோக்கங்கள் மட்டும் முக்கியமாக இருக்கலாம், நமக்கு அவற்றையடைய நாம் கடைப்பிடிக்கும் வழிகளும் முக்கியமானவை. ஆனால், நமது கொள்கைப்படி நமது நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கு மக்களை ஒருமுகப்படுத்த இயலாத அளவிற்கு சாதி, மதம், இனம், மொழி போன்ற பேதங்கள் வாய் பிளந்து நம்மை எதிர்த்து நிற்கின்றன. இந்தக் கொடுமையை அகற்ற நாம் அனைவரும் ஒன்றுபட்டுப் போராடி வெற்றிபெற்றாகவேண்டும். மனித உழைப்பும் காலமும் வீணாகாமல் இருப்பதற்கு நாம் உத்தரவாதம் அளிக்க வேண்டும். அப்படிச் செய்தோமானால் மாபெரும் மக்கள் சக்தியைக் கொண்ட இந்தியத் துணைக் கண்டம் சாதிக்க முடியாதது எதுவும் இருக்கமுடியாது.

இந்தியா கிராமங்களிலேதான் வாழ்கிறது என்றார் அண்ணல் காந்தியடிகள். நாம் தீட்டுகின்ற திட்டங்கள் அனைத்தும் கிராமங்களின் வாழ்க்கையைச் செப்பனிடுவதையே இறுதி நோக்கமாகச் கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்களும் வலியுறுத்தியுள்ளார்கள். அமரர்கள் காந்தியடிகள், அண்ணா இவர்களின் இந்தக் கனவை நனவாக்குகின்ற வகையில்

தான் தமிழகத்தில் அந்தக்கிராமங்கள் அனைத்தும் தன்னிறைவு பெறுகிற நாளை நோக்கி நாம் நடைபோட்டுக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில்தான் தமிழக அரசு கிராமங்களுக்கெனத் தன்னிறைவுத் திட்டங்களைத்தீட்டி, கடந்த ஆண்டில் 69 பஞ்சாயத்து ஒன்றியங்களில் சுமார் 58 கோடி ரூபாய் செலவில் கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றியிருக்கிறது. மீதமுள்ள ஒன்றியங்களில் சுமார் 270 கோடி செலவில் மூன்றாண்டுக் காலத்திற்குள் நிறைவேற்ற அரசு திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது. எவ்வளவுதான் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டாலும் கிராமங்களின் பிளவுபட்ட சமுதாய அமைப்பு இன்னமும் மாறாமலே இருக்கிறது. பொருளாதார சமத்துவம் ஒன்றே நம்மை உண்மையான சுதந்தர நாட்டின் குடிமக்களாக்கும் என்று பார்த்தால், வசதி படைத்தவன் கூட தாழ்த்தப்பட்டவன் என்றால் அவனைச் சமுதாயத்தில் சில பிரிவுகள் சரிவர ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. தாழ்த்தப்பட்டவர் என்று அழைக்கப்படுகிறவர்களுக்குள்ளேயே எத்தனையோ பிரிவுகள். அவர்களே ஒருவரை ஒருவர் மதிப்பதில்லை, ஏற்றுக்கொள்வதில்லை.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரது சமுதாயப் புரட்சி தமிழகத்தை எவ்வளவோ மாற்றியிருக்கிறது. இருந்தாலும், சாதிபேதம் ஏற்றத்தாழ்வு என்கிற நச்சுமரத்தின் வேர்கள் ஆழமாக, அதுவும் பலநூற்றாண்டுகளாக வேரூன்றியுள்ளது என்பதை நாம் மறந்துவிட முடியாது. “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்பது நமது உயிர்க்கொள்கை. இருந்தும் பேதங்களும், பிரிவுகளும் நமது நீண்ட சரித்திரத்தில் அவ்வப்போது ஆதிக்கம் செலுத்துவதை நாம் மறுக்கவும் முடியாது. மகாகவி பாரதியார் எவ்வளவு அருமையாகச் சொல்லிவைத்தார்கள் “நாமிருக்கும் நாடு நமது என்பதுணர்ந்தோம் அது நமக்கே உரிமையாம் என்பதுணர்ந்தோம்” .

இதுதான் சமுதாய விடுதலையின் உட்பொருள். நாம் இருக்கிற நாடு நமது நாடு என்பது ஏற்கெனவே உணர்ந்துகொள்ளப்பட்ட உண்மை! அது நமக்கெல்லாம் உரிமை என்பதை நிலைநாட்டத்தான் இத்தனை சமுதாய முயற்சிகள். இவ்வளவு பொருளாதாரத் திட்டங்கள்! மகாகவியின் நூற்றாண்டு வருகின்ற நேரத்தில் இவைகளை எண்ணிப்பார்க்கிறோம்.

சமுதாய உணர்வோடு நாம் பிரச்சினைகளை அணுகவேண்டும். நாம் தனி மனிதர்கள் என்பது எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியமானது நாம் ஒரு சமுதாயத்தின் அங்கங்கள் என்பது.

சுதந்திரம் என்கிற பேச்சு வரும்போதெல்லாம் தனி மனித சுதந்திரம் பறிக்கப்படுவதாக எழுதப்படுகிறது. வசதியான தனிமனிதர்கள் சிலர் தங்களிடமிருந்து பறிக்கப்படுவதாகக் கருதுகிற சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காக நீதிமன்றங்களுக்குப் போகிறார்கள். இழப்பதற்கு ஒன்றுமே இல்லாத ஏழைகள் எங்கே போவார்கள் ? இழப்பதற்காகவாது அந்தச் சிலருக்கு ஏதாவது இருக்கிறது. அவர்களைவிட இழப்பதற்கு சொத்தோ சுகமோ இல்லாத கோடிக்கணக்கான இந்த

ஏழைகளின் சுதந்திரம் முக்கியமானதல்லவா? அதைத்தான் அமரர் பண்டித நேரு அவர்கள் தனி மனிதனது உரிமைக்கும் சமுதாய உரிமைக்கும் மோதல் வருகிற போது, சமுதாய உரிமையே மேம்பட்டு நிற்க வேண்டும் என்கிறார்.

நமது சமுதாயத்தின் தீண்டாமை அறவே ஒழிக்கப்பட்டுவிட்டதாகச் சொல்ல முடியாமலிருக்கலாம். இருந்தாலும் முப்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலைமை இப்போது நிச்சயமாக இல்லை. மதமாற்றங்கள் கூட தீண்டாமைக் கொடுமையிலிருந்து மக்களைக் காப்பாற்றியதாக சான்றுகள் இல்லை. தீண்டாமை என்னும் கொடிய நோயால் தாக்கப்பட்டு, மனம் வருந்திய டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ஒருமுறை தந்தை பெரியார் அவர்களிடம் தாழ்த்தப்பட்ட மக்களைப் புத்தமதத்தில் சேர்த்துவிடலாம் என்று மனம் நொந்து சொன்னபோது கூட தந்தை பெரியார் அவர்கள் மதமாற்றம், தீண்டாமை ஒழிப்பிற்கும் பரிகாரம் ஆகாது என்ற கருத்தைத்தான் தெரிவித்தார்கள் என்பது நமக்குக் கிடைக்கிற செய்தியாகும். இந்திய அரசியல் சட்டத்தில் சமயச் சார்பின்மை என்பதற்குப் பொருளே அரசாங்கம் தன்னை எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்தோடும் பிணைத்துக் கொள்ளாது என்பதுதான். அந்த மாபெரும் தத்துவம் அதற்குரிய மரியாதையோடு அணுகப்பட வேண்டும். எந்த ஒரு மதத்தின் ஆதாரத்தையும் அசைத்துவிடுவதற்கான உரிமையாக அந்தத் தத்துவம் பயன்படுத்தப்படக்கூடாது. மேலும் சமயச் சார்பற்ற அரசாங்கத்தில் குடிமகனாக உள்ள ஒவ்வொருவரும் அந்த நாட்டின் பொதுச் சட்டங்களுக்கு, பொதுவிதிகளுக்குத் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டிய கடமையும் பொறுப்பும், அவர்கள் எந்த மதத்தவர்களானாலும் உண்டு என்பதையும் இந்த சுதந்திர நாளிலே நினைவுபடுத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

“எங்கள் குழந்தைகள் விடிவதைப் பார்க்க வேண்டும் என்பதற்காக சில்லிடும் குளிர் காற்றில் நாங்கள் சிதைந்து கொண்டிருந்தோம்” என்றார் அமரத்துவம் பெற்ற கவிக்குயில் சரோஜினி தேவி அவர்கள், அந்தத்தியாக உள்ளத்தோடு, வருங்கால இந்திய மாளிகைக்கான அடித்தளத்தை உருவாக்குவதற்கு இந்த நன்னாளில் நம்மை நாம் முழுமனதோடு அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும். வாழ்க இந்திய சுதந்திரம்! வாழ்க சமத்துவச் சமுதாய மக்கள்!

வணக்கம் அண்ணா நாமம் வாழ்க!

(15.08.1981 அன்று, சுதந்திரதின விழாவினை முன்னிட்டு வானொலி தொலைக்காட்சி ஆகியவற்றில் ஆற்றிய உரை)

கலைஞர்கள் எச்சரிக்கையோடும், துணிவோடும் இருக்க வேண்டும்!

இந்தப் பரிசளிப்பு விழா, திறமைமிக்க கலைஞர்களுக்கு மேலும் ஊக்கமும் உற்சாகமும் தரவும், பாராட்டவும் நடத்தப்படுகின்ற விழாவாகும்.

தமிழக அரசு காம்பவுண்டிங் டாக்ஸ் என்ற வரிவிதிப்பைக் கொண்டுவர முனைந்த போது நிறைய எதிர்ப்புகள் இருந்தது. ஆனால், நாங்கள் எங்கள் அனுபவத்தையே மூலதனமாக வைத்துச் செயல்பட்டோம். அதன் காரணமாக, ஆண்டுக்கு 50 படங்கள் தயாராகிக் கொண்டிருந்த நிலை மாறி, இன்று நூறு நூற்றைம்பது படங்கள் வெளியாகும் நிலை உருவாகியிருக்கிறது. தமிழக அரசு, திரைப்படத் தொழிலின் வளர்ச்சிக்கு, இயன்ற வரையில் உதவி வரும்.

இங்கு ரஜினிகாந்த் அவர்களைக் காண்கிறேன். கலைஞர்கள் இங்கே பெருமளவில் கலந்து கொண்டிருக்கிறார்கள். இங்கே தரப்பட்டது யாருக்கோ தந்த பரிசு என்றெண்ணாமல் மகிழ்ச்சியோடு வந்து கலந்து கொள்ளும் அனைவரையும் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஐந்து படங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசு தருவதாக இருந்தது. ஆனால் இரண்டு படங்களே தரம் மிகுந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள மூன்று இலட்சத்தையும் ஏதாவது படத்திற்குத் தந்திருக்கலாமே என்றார்கள். அப்படிச் செய்தால், பாராட்டி வழங்கும் பரிசு ஆகாது பிச்சை ஆகிவிடும்.

ஆகவே, அந்தத் தொகையையும் சேர்த்து, தரமான படங்களை, நிலைமைக்கு ஏற்றவாறு நல்ல கருத்து உள்ள படங்களைத் தயாரித்தால் அடுத்த ஆண்டில் எட்டு படங்களுக்குக் கூட பரிசளிக்க முயற்சிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நகைச்சுவை நடிகர், நடிகை, படத் தொகுப்பாளர் ஆகியோருக்கும் அடுத்த ஆண்டு முதல் பரிசளிப்பது என்று முடிவு செய்திருக்கிறோம். இங்கே பேசிய பாக்கியராஜ், தன்னுடைய குருவான பாரதிராஜாவுக்கு நன்றி என்றாரே இப்படிப்பட்ட உணர்வு தான் ஒருவரை வளர்க்கும். ஏனென்றால் நன்றி மறந்தவர்கள் அதிகமுள்ள காலம் இது சிரித்துப் பேசுவோர்கள் எல்லாம் நண்பர்களாகிவிட மாட்டார்கள்.

எஸ். பி. முத்துராமன் அவர்கள் பேசுகையில், தமிழக அரசின் நல்ல கொள்கையை, பொதுவான கொள்கையைப் படமாக்குவதில் ஆண்டுக்குப் பதினைந்து அல்லது இருபது நாள் ஒத்துழைப்புத் தருவேன் என்றார். அரசு நிச்சயம் அதைப் பயன்படுத்திக்கொள்ளும்.

சண்டை போடுவதும் நடிப்பா என்றவர்களே, இப்போது சண்டைக்காட்சிகளை நம்பி நடிக்க ஆரம்பித்து விட்டார்கள். குத்துவதுபோல் நடிப்பது, கீழே விழுவதுபோல் நடிப்பது எல்லாம் நடிப்புத்தான். உண்மையிலேயே குத்துவது என்றால், மறுநாள் படப்பிடிப்புக்குப் புதுமுகம்தான் தேவைப்படும்.

அப்படிப்பட்ட காட்சிகளில் டூப் போட்டு நடிக்கும் நடிகர்களுக்கு ஏதாவது பாதகம் ஏற்பட்டால், அவர்கள் குடும்பத்திற்கு எதிர்காலம் கிடையாது. ஆகவே, ஒரு படத்தைத் தயாரிக்கும் பட அதிபர், அவர்களின் எதிர்காலத்தை நினைத்து பத்தாயிரம் ரூபாயோ அதற்கு அதிகமாகவோ நிதி ஒதுக்க ஏற்பாடு செய்தால், அந்த அளவுக்கு அரசும் அவர்கள் நல்வாழ்வுக்கு நிதியளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லைக்காவலன் என்ற பெயரில் சில ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கதையை நான் எழுதினேன். அதை மூன்றாண்டுகளுக்கு முன்பே படம் ஆக்க நினைத்தேன். அதை நண்பர் ஒருவர் படமாக்குவார்.

கலைஞர்கள் ஓரளவுக்கேனும் எச்சரிக்கையோடும், அதேநேரத்தில் துணிவோடும் இருக்க வேண்டும். எதிர்காலக் கலை உலகம் உங்கள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எதிர்காலக் கலை உலகம் காப்பாற்றப்பட என்னென்ன செய்யவேண்டுமோ அதை இந்த அரசு செய்யும்.

அண்ணா நாமம் வாழ்க!

(15.08.1981 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற திரைப்பட விருது வழங்கும் விழாவில் ஆற்றிய உரை)

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இருப்பதற்கு சமுதாயத்தின் உரைகல்லாகக் காவலர் இருக்க வேண்டும்!

முதலில் இங்கே பதக்கங்களைப் பெற வந்த தாய்மார்கள் கண்ணீர் மல்க உணர்ச்சியை அடக்கியவாறு, கடலில் கொந்தளிக்கும் அலைபோல் குமுறும் துன்பத்தால் வேதனைக் கண்ணீரைத் துடைத்தபடி, வந்தனர். அந்தத் தாய்மார்களை நம் இதயக்கோயிலில் வைத்துக் கும்பிடுவதைத் தவிர வேறு வழி இல்லை. உடன் பிறப்புகள் வேதனைப்படும்போது ஆறுதல் கூறி ஆறுதல் பெறுகிறோம். அவர்கள் செய்த தியாகம் தமிழக வரலாற்றின் எதிர்காலத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

இளைஞர் சமுதாயம் வளர வேண்டும். வாழவேண்டும். அவர்கள் கற்று தாங்களும் வளர்ந்து நாட்டுக்குத் தொண்டாற்ற வேண்டும். ஏதோ வழி தெரியாமல் வேறு பாதைக்குச் சென்றுவிடாமல் உண்மை தெரிந்து திருந்தி வாழவேண்டும். இந்த வகையில்தான் சில நாட்களுக்கு முன்பு பத்திரிகை நண்பர்கள் மூலம் என்னுடைய வேண்டுகோளை வெளியிட்டேன். நான் விடுத்த அந்த வேண்டுகோள் பலன் பெற்றிருக்கிறது. அப்படி முன் வந்தவர்கள் ஒருவராக இருக்கலாம். 10 பேராக இருக்கலாம். இவர்கள் இலட்சக்கணக்கானவர்களுக்கு வழிகாட்ட முடியும். இப்படி, பதக்கம் வழங்குவது மற்றவர்களுக்கும், ஒரு உத்வேகத்தை உருவாக்குவதற்காகத்தான்.

நல்ல மாணவர்களை உருவாக்குவது, நல்ல ஆசிரியர்களின் பொறுப்பு. அதுபோல நாட்டில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இருப்பதற்குச் சமுதாயத்தில் உரைகல்லாகக் காவலர் இருக்க வேண்டும். காவல்துறையினர் நியாயமாக நேர்மையாக, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன், அன்பு பாசம் பரிவுக்குச் சொந்தக்காரர்களாக இருக்க வேண்டும்.

இந்தியத் துணைக்கண்டத்திலேயே தமிழகப் போலீசார் புதிய வரலாற்றைப் படைத்து வருகிறார்கள். காவல்துறைக்கு விஞ்ஞான வசதிகளைச் செய்து தர தமிழக அரசு எண்ணி இருக்கிறது. அதற்காகத் திட்டங்கள் தீட்டப்பட்டு உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. அக்டோபர் மாதம் முதல் காவல் துறையினருக்குக் குறைந்த விலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கப்பட இருக்கிறது.

(15.09.1981 அன்று, சென்னை எழும்பூர் இராஜரத்தினம் ஸ்டேடியத்தில் நடைபெற்ற வீரதீர செயல்களுக்கான காவல் படையினருக்கு விருது வழங்கும் விழாவில் ஆற்றிய உரை)

தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் புனிதமான தமிழகக் கோயில்

தமிழ்ப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது என்ற வகையில் மூன்றாவது நாளாக நிகழ்ச்சி நடத்து கொண்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சியை முடித்து வைத்துப் பேசுவதற்காக நான் இங்கு வரவில்லை. பின்னால் நடைபெற இருக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு அச்சாரமாகத் தொடங்கி வைக்கும் பேச்சாகத்தான் நான் இங்கு பேச வேண்டும் என்று கருதுகிறேன்.

தமிழைப் பற்றிப் பேசுவதற்கும், தமிழில் எழுதுவதற்கும், தமிழிலே சிந்திப்பதற்கும் ஒரு முடிவு கிடையாது என்பதை இந்த உலகம் உள்ள அளவும் ஏற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு நம்பிக்கை என்பதையும், உண்மை என்பதையும் உணர்ந்திருக்கின்றோம். அந்த வகையில் தான் இந்தக் கருத்தை நாம் ஏற்றுக்கொள்வோம் என்ற வகையில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமையடைகிறேன்.

எனக்கு மாபெரும் பொறுப்பு ஒன்றைத் தந்திருக்கிறார்கள். பெரியார் அவர்களின் படத்தைத் திறந்து வைக்க வேண்டும் என்று பெரியார் பிறந்த நாளில் பொறுப்பைத் தந்தவர்களுக்கு நான் என்றென்றும் நன்றி சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

15ஆம் தேதியிலிருந்து இதுவரையில் தமிழை நன்கு புரிந்து கொண்டவர்கள், அறிந்து கொண்டவர்கள், ஆய்ந்து கொண்டவர்கள் எத்தனையோ கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். முதலில் நான் தெளிவாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன் இது எந்தக் கட்சிக்கும் சொந்தமான விழா அல்ல, இது தமிழக மக்களுக்குச் சொந்தமான நிகழ்ச்சி என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதில் யாருக்காவது பெருமை என்றால் தமிழ் பேசுகின்ற தமிழை ஏற்றுக் கொண்டிருக்கின்ற, தமிழனாக வாழ்கின்ற, தமிழுக்குச் சொந்தகாரனாக இருக்கின்ற அத்தனை பேருக்கும் பங்குண்டே தவிர, ஆட்சியிலே இருக்கின்றோம் என்பதற்காக எங்களுக்கோ அல்லது எங்களோடு நண்பர்களாக இருக்கின்ற சிலருக்கோ அல்லது இதை வாழ்த்துகிறார்கள் என்பதற்காக அவர்களுக்கோ எந்தவிதச் சொந்த பந்தம் கிடையாது. யார் எங்கே இருந்தாலும் தமிழர்கள் எங்கே இருந்தாலும் அவர்கள் அத்தனை பேருக்கும் சொந்தமுண்டு என்பதை ஆழமாக, அழுத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய பிரச்சினை மிகப்பெரியது. தமிழைப்பற்றிச் சொல்லும் பொழுது தமிழுக்கு யாரும் விளம்பரம் தேடித்தர வேண்டாம் என்று சொல்லிவிடலாம். ஆனால், வேதனையோடு ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 30, 40 வயது வரை ஒரு தமிழன் அதுவரை எழுதப்படிக்கத் தெரியாதவனாக இருக்கின்றான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவன் தமிழை நன்றாகப் படித்து தெரிந்து கொண்டு பல புத்தகங்ளைப் பார்த்து கருத்து விளக்கங்கள் தரக்கூடிய அளவுக்குத் திறமை பெற்ற பிறகு அவன்

பொறியியல் திறமை பெற்றவனாக வரவேண்டுமானால் அதற்கான வழிவகை தமிழில் இருக்கிறதா என்றால் இல்லை. படித்தவன் வர முடியாது. வழக்கறிஞராக வர முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. அதற்குத் தமிழிலே சட்ட விளக்கங்கள் இல்லை.

லிங்கனைப் பற்றிச் சொல்லுவார்கள். மரத்தை வெட்டிக்கொண்டிருந்தார் என்றும், ஏதோ வேலை செய்து கொண்டிருந்தார் என்றும், திடீரென்று ஒருநாள் இந்த வேலை வேண்டாம். நான் படித்து வக்கீலாக விரும்புகிறேன் என்றாராம் படித்துப்பட்டமும் பெற்றாராம், இன்று தமிழனால் அப்படிச் செய்ய முடியுமா ?

தமிழ் தெரிந்த ஒரு குடிமகன் இன்றைய தினம் பல்வேறு தொழில்களைப் பற்றி தெரிந்து கொள்ள முடியுமா என்றால் தமிழில் இல்லை. இதைவிட வேறு வெட்கக் கேடு இல்லை. இதை நாம் தலைகுனிவோடு ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்றாலும், நாம் இந்த உணர்வை யாருக்காவது ஏற்படுத்த வேண்டுமென்றால் நம்முடைய மூதாதையர்கள் எப்படி இருந்தார்கள் ? அவர்கள் என்னென்ன திறமையோடு இந்தத் தமிழை நாட்டுக்குப் பயன்படுத்தினார்கள் என்றும் நாம் சொல்லித்தான் தீரவேண்டி இருக்கிறது.

இந்தத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் நான் கனவு கண்டு கொண்டிருப்பது பல்வேறு கலைகளெல்லாம் அதற்குள் இணைத்து அதை ஒன்றுபடுத்தி உலகெங்கும் சொல்லிக் கொடுக்கும் வகையில் அந்தப் பணியைச் செய்யக்கூடிய திறமையைத் தமிழர்களுக்குக் கொடுக்க இந்தத் தமிழ்ப்பல்கலைக் கழகம் உதவ வேண்டும் என்பது எனது பேராசையாகும்.

நான் 15ஆம் தேதி சொன்னதை அழுத்தமாகச் சொல்கிறேன். இதற்குத் துணைவேந்தராக இருக்கிற திரு. சுப்பிரமணியம் அவர்களும், முத்தமிழ்க் காவலர் அவர்களும், திரு. குழந்தைசாமி போன்றவர்களெல்லாம் எந்த அளவு அக்கறை காட்டினார்கள் என்பதையும், அதன் விளைவு இந்தப் புலங்கள் என்று பிரித்துப்பார்க்க முடிகிறது என்பதையும் எண்ணி அவர்களுக்கு நன்றியும், வாழ்த்தும், பாராட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் குழு தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு இருக்கும். அந்தக் குழு யோசனைகளைச் சொல்லிக் கொண்டே இருக்கும். அந்தக் குழு கலைக்கப்படமாட்டாது. அந்தக் குழு தன் பணியைச் செய்து கொண்டே இருக்க வேண்டும் என்பது தமிழக அரசினுடைய முடிவு.

ஒருவர் சொன்னார். நாங்கள் 600 ஏக்கர் வேண்டுமென்று சொன்னோம். 1,000 ஏக்கர் ஒதுக்கியிருக்கிறார் என்று சொன்னார். அதுகூடப் போதாது என்பது என் பேராசை, ஏனென்றால் ஒவ்வொரு புலங்களும் தனித்தனியாக இருந்துவிட வேண்டும். ஓட்டலில் உணவு அருந்தும் இடம் போல அமைந்து விடக்கூடாது. அவர்கள் பணிகளைச் செய்து முடித்த பின் கூடிப் பேசத் தனியிடம் இருக்க வேண்டும். பஸ் நிறுத்த தனி இடம் இருக்கவேண்டும் கடைகள் இருக்க வேண்டும். ஆனால், வேறு கடைகள் அங்கு இல்லாமல் நாம் கவனித்துக் கொள்ள வேண்டும்! இதையெல்லாம்

நான் சொல்லக் காரணம் நிலைமைகள் நம்மை வற்புறுத்தினாலும் எச்சரிக்கையாக சில காரியங்களைச் செய்யவேண்டும். செய்ய முடியும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பெரியார் படத்தைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றுவார் என்று சொன்னார்கள். எனக்கு அந்தச் சிறப்பு இல்லை. சிறப்புரை ஆற்றுவதைவிட பேசியவர்களின் சிறப்பைப் பற்றிக் கூறுவது நல்லதாக இருக்கும்.

இது இறுதிக் கூட்டம் என்பது இல்லை. இறுதி என்பது தமிழுக்குக் கிடையாது. தமிழ்ப் பெருங்குடி மக்களை நான் கை கூப்பி வணங்கிக் கோருவது ஒன்றுதான். தயவு செய்து இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குள் எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசியலை நுழைய அனுமதிக்காதீர்கள் என்று பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அதே போல் 15ஆம் தேதி சொன்னதை மீண்டும் சொல்கிறேன். சாதி மதம் என்ற எண்ணமே இங்கு வரக்கூடாது. வந்தால் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியும் கெட்டுப்போகும். தமிழர்களின் வாழ்வும் பாழ்பட்டு போகும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். மூன்றையும் உள்ளே நுழைய விடாதீர்கள், மதம் வந்தால் ஜாதி வந்துவடும். இரண்டும் வந்தால் அரசியல் தானாக வந்துவிடும். ஆனால், இதைப் போன்ற புனிதமான தமிழகக் கோயில் என்று சொல்லக்கூடிய பல்கலைக் கழகத்தில் எதையுமே நுழைய விடாதீர்கள்.

சமஉணர்வு, சமவாய்ப்பு, சமத்துவம், சமதர்ம நிலைமை, தர்ம நிலைமை இவைகளை வைத்தே அந்த அடிப்படை இருக்க வேண்டும் என்று சொல்ல விழைகிறேன்.

இந்த நல்ல நேரத்தில் தமிழைப்போற்றி, தமிழை வளர்த்து, தமிழைப் பாராட்டி, தமிழனாக வாழ்ந்து, தமிழின் பெருமையைக் காப்பற்றி, மற்றவர்கள் நம்மைப் பின்பற்றக்கூடிய அளவிற்குத் தமிழை உயர்த்துகின்ற அளவுற்கு நாம் ஒன்றுபட்டு எந்த மனக் கசப்பிருந்தாலும் வேறுபாடு இருந்தாலும் தமிழ் வெற்றி பெற்றாக வேண்டும். தமிழர் வாழ்ந்தாக வேண்டும் என்ற வகையிலே ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தையும் வைத்து இந்த அளவு ஒத்துழைத்தவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

(17.09.1981 அன்று, தஞ்சைத் தரணியில் தமிழ் பல்கலைக் கழக கட்டடத் திறப்பு விழாவில் ஆற்றிய உரை)

சென்னையில் புறநகர் மின்சார இரயில் நிலையம்!

இந்தப் புதிய இரயில் நிலையத் தொடக்க விழா நிகழ்ச்சி தமிழகத்திலுள்ள 5 கோடி மக்களுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாகும். இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசுக்குக் குறைந்த விலையில் நிலத்தைத் தமிழக அரசு கொடுத்திருக்கிறது. மூர் அங்காடிக்குப் பதிலாக 1.5 கோடி ரூபாய் செலவில் கட்டடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். ஓராண்டுக் காலத்திற்குள் அது முடிவடைந்துவிடும் என்று நம்புகிறேன். மிருகக்காட்சிச் சாலை வேறு இடத்தில் நகரத்திற்கு அப்பால் காடுகள் உள்ள இடத்தில் உருவாக இருக்கிறது.

அண்ணா நாமம் வாழ்க!

(17.10.1981 அன்று, சென்னை புறநகர் புதிய மின்சார இரயில் நிலையத்தின் தொடக்க விழாவில் ஆற்றிய உரை)

யாரிடம் எந்தச் செய்தி வருகிறது என்பதன்று; எத்தகைய கருத்து வருகிறது என்பதைப் பார்த்து அதை எடுத்துச் செயல்படுகிறோம்!

எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருந்தவர்கள்கூட சுதந்திரப் போராட்டக் காலத்தில் வெள்ளையனே வெளியேறு என்று குரல் கொடுத்தனர். மகாத்மா காந்தி கூட இந்தியா வேண்டுமா இந்துஸ்தான் வேண்டுமா என்பதனை விட வெள்ளையன் வெளியேற வேண்டும் என்பதே முக்கியம் என்றார். அந்த உணர்வு அடிமை உணர்வு கூடாது என்பது தமிழர்களுக்கு ஆக்கத்தைக் கொடுத்தது. சகோதரர்களால் ஏற்படுகிற எதிர்ப்பு, தாக்குதல், இழிவு ஆகியவை தாங்கிக்கொள்ள முடியாது. மற்றவர்கள் ஒன்றாகி விடுகிறார்கள். நம்மவர்களால் ஒன்றாக முடிவதில்லை என்றார் ம.பொ.சி. காரணம் நம்மவர்களுக்குச் செயலும் அறிவும் அதிகம். அதனால்தான் ஒன்றாக முடிவதில்லை. ஆனால் கடைசியில் அதுவே நன்மையாக முடியும்.

இங்கே வந்திருக்கும் தியாகிகளுக்கு விருது வழங்குகிறோம், அது அவர்களுக்குப் போதுமா என்று கருதலாம். ஒரு மனிதனுக்கு ஒருவேளை உணவு கொடுத்து திருப்திப்படுத்தலாம். அது ஜீரணமாகிவிட்டால் பிறகு மீண்டும் தரவேண்டும்.

விருது வழங்குவது அவர்கள் மன திருப்திக்குத்தான். அதற்கு மேல் எதைக் கொடுத்தாலும் அது விலை பேசுவதாகும். தங்களுடைய வாழ்க்கையை அழித்துக் கொண்டவர்களுக்கு எதைத் கொடுத்தாலும் ஈடாகாது. விருது அளிக்கும் போது சொல்கிறேன். அவர்கள் குடும்பங்களுக்கு ஏதாவது தேவை என்றால் தமிழக அரசு உதவும்.

எல்லைப் போராட்டத்தில் சுடப்பட்ட 11 தியாகிகள் குடும்பத்திற்குத் தலா 10 ஆயிரம் ரூபாய் அளிக்கப்படும். தியாகிகளுக்கு உதவிப்பணம் அளிக்கப்படும். எல்லைப் போராட்டத்தில் தொலைக்கப்பட்ட தியாகிகளின் குடும்பத்தில் பிறந்த குழந்தைகளுக்குக் கல்வி அளிப்பதில் தமிழக அரசு முன்னுரிமை அளிக்கும்.

மொழிப் போராட்டத்தில், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு உதவிப்பணம் அளிக்கப்பட்டபோது தரக்கூடாது என்று சுப்ரீம் கோர்ட் நிறுத்திவிட்டது. மொழியை எதிர்த்தவர்களுக்கு தானே தரக்கூடாது. நாங்கள் அப்படித் தரவில்லை. தமிழ் மொழியைக் காக்கப் போராடியவர்களுக்கு நாங்கள் உதவி செய்வோம். சுதந்திரப் போராட்டத்தை மறந்த மக்கள் இருக்கிறார்கள். 1930ஆம் ஆண்டு கள்ளுக்கடை மறியலை நான் கண்ணால் பார்த்தவன். அந்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாழ்க்கை மக்களுக்குக் குறிப்பாக இளைஞர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அதன் மூலம் பெற்ற சுதந்திரத்திற்கு மதிப்பும் மரியாதையும் இருக்கிறது என்பதும் இளைஞர்களுக்கு எவ்வளவு கடமை இருக்கிறது என்பதையும் உணர முடியும். தேவிகுளம், பீர்மேடு என்று

இங்கே பேசப்பட்டது அதைச் சேர்க்கும் போது 4, 5 மைல் தூரம் தள்ளி வைத்திருந்தால் இத்தண்ணீர் பஞ்சம் வந்திருக்காது.

அடுத்துப் பிர்காவாகப் பிரிக்காமல் கிராமம் கிராமமாக பிரித்திருக்கிறார்கள் இதைப் பற்றி முதலமைச்சர் பேசினால் பிரச்சினை வரலாம். ஆகவே இப்போது காலம் இடம் கொடுக்கும்வரை காத்திருப்போம் என்று நான் சொல்லலாம் அல்லவா ? இதைச் சொன்னால் அமைதியான உறவைக் கெடுக்கப்பார்க்கிறார் என்பார்கள்.

இங்கே வந்திருக்கும் தியாகிகள் அண்ணா தி.மு.கழகத்தைச் சேர்ந்தவர்களா ? திருவிதாங்கூர் காங்கிரஸ் என்றெல்லாம் கட்சியிலிருந்து போராடியவர்கள். எந்த இனத்தை ஜாதியைச் சேர்ந்தவர் என்றா பார்க்கிறோம் ? செங்கோட்டையைப் பற்றி சிலம்புச் செல்வர் ம.பொ.சி சொல்லியது எனக்குப்புரிகிறது. பலர் எதிர்பார்த்தது போலச் செங்கோட்டையில் வாஞ்சியின் சிலை வைக்கப்படும். யாரிடம் எந்தச் செய்தி வருகிறது என்பதல்ல எத்தகைய நல்ல கருத்து வருகிறது என்பதைப் பார்த்து அதை எடுத்து செயல்படுத்துகிறோம்.

இந்த அரசை யார் யாரோ பாராட்டுகிறார்கள் என்றால் அது நாங்கள் செய்யும் நல்ல பணிகளைப் பாராட்டித்தான். நல்லதை நாட்டுக்குத் தேவையானதை நாளும் செய்வதில் நாங்கள் முன்னணியில் இருப்போம். அண்ணாவின் கொள்கைகளைத் தொடர்ந்து நிறைவேற்றுவோம்.

அண்ணா நாமம் வாழ்க !

(01.11.1981 அன்று, தமிழ் மாநிலம் அமைத்த வெள்ளி விழா ஆண்டில் சென்னைக் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை)

10 முதல் 15 வரை உள்ள குழந்தைகள்தான் 21ஆவது நூற்றாண்டில் உலகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய குடிமக்களாக இருப்பார்கள்!

ஏகலைவன் தன் மானசீக குருவாக துரோணரை ஏற்றுக்கொண்டதுபோல, நான் சாந்தாராம் அவர்களை என்ஆசானாக ஏற்றுக் கொண்டவன்.

இளைஞர்களின் துணைவராக இறுதிவரையில் இளைஞராக வாழ்ந்து காட்டிய, நமது இதயத்தை விட்டு நீங்காத ஜவஹர்லால் நேருவின் பிறந்த நாளில் நாம் அனைவரும் ஒன்றுகூடி எதிர்காலச் சந்ததிகளை ஊக்குவிப்பதற்காக, வளர்ப்பதற்காக கண்ணியத்தோடு, நேர்மையோடு கடமை உணர்வோடு, கட்டுப்பாட்டோடு வாழ வழி வகுத்துக்கொண்டு இருக்கும் நாளில் இந்த விழாவை நடத்துவது மிகவும் பொருத்தமானதாகும்.

இந்த விழாவைத் தமிழ் நாட்டில் நடத்துவதற்காக மைய அரசுக்கும், அகில இந்தியக் குழந்தைகள் திரைப்படச் சங்கத்தலைவரான இயக்குநர் சாந்தாராமுக்கும், தமிழக மக்களின் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறோம். இங்கு ராமானுஜம் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தை வெளியிட்டார். மக்கள் தொகையில் 3இல் 2 பங்கு உள்ள பெரியவர்களுக்காக ஆயிரக்கணக்கான படங்களைத் தயாரிக்கும் போது 3இல் 1 பகுதி இருக்கும் குழந்தைகளுக்காக மிகக் குறைவாகவே படங்கள் தயாரிக்கப்படுகின்றன என்றார்.

குழந்தைகளுக்காகப் படம் தயாரிப்பவர்களுக்காகப் பல வசதிகளைச் செய்யத் தமிழக அரசு முன் வந்தபோது, குழந்தைகளுக்காகப் படம் எடுக்க முன் வந்தவர்கள் மிகவும் குறைவு. குழந்தைகளுக்காக என்று சொல்லுபோது நாட்டுக் கலாச்சாரத்துக்கேற்ப ஒழுக்கம் பண்பாடு கண்ணியம் ஆகியவற்றை வளர்க்கக்கூடிய மற்றவர்களை மதிக்கத்தக்க பண்பைச் சொல்லித்தருகிற, குழந்தைகள் வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளைச் சொல்கிற படமாக, செய்திகளைச் சொல்கிற படமாகத் தயாரித்தால் தமிழக அரசு அந்தப் படங்களுக்கு வரிவிலக்கு அளிக்கும். டெக்னீஷியன்கள் எழுத்தாளர்கள் போன்றவர்களுக்கு திறமை இருக்கிறது. பணம் இல்லை என்ற தகுதிக்குச் சொந்தக்காரர்களாக இருந்தால், அவர்கள் இத்தகைய படங்களைத் தயாரிப்பதற்காக உதவி செய்யும் வகையில் 25 இலட்சம் ரூபாயில் ஒரு நிதியைத் தமிழக அரசு தொடங்கும்.

நேரு பதக்கங்கள் என்று 3 பதக்கங்கள் ஏற்படுத்தி, ஆண்டுதோறும் சிறந்த முறையில் குழந்தைகளுக்காகத் தயாரிக்கப்பட்ட முதல் 3 படங்களுக்கு இந்தப் பதக்கங்கள் வழங்கப்படும். நேரு உருவம் பொறிக்கப்பட்ட அந்தப் பதக்கங்கள் அவர்களுக்குத் தரப்படும். குழந்தைகளுக்காக பாலயோகினி படம் எடுத்த

திரு. கே. சுப்பிரமணியத்தை இந்நேரத்தில் நினைவுகூரக் கடமைப்பட்டு இருக்கிறேன். அடுத்த ஆண்டு இதுபோல மாநில அளவில் ஒரு படவிழா அமரர் நேரு பிறந்த நாளில் சென்னையில் நடைபெற வேண்டும் என்று விரும்புகிறேன்.

வேண்டாத இசைகளை, இருபொருள் உள்ள கருத்துக்களைக் கலக்காமல், தமது குழந்தைகளுக்கு என்ன கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறோமோ அதே கருத்துக்களைச் சொல்லும் வகையில், வியாபாரத்தைத் தனியே வைத்துவிட்டு, எதிர்காலச் சந்ததிகளின் வளர்ச்சிக்கென்று இத்தகைய படங்களைத் தயாரிக்க வேண்டும். தமிழக அரசு அந்த முயற்சிக்கு உதவி செய்யும்.

தடம் புரளுகின்ற சினிமாத்துறைக்கு முட்டுக்கட்டைபோட்டு சமுதாயத்துக்கு நல்லவற்றைச் சொல்லி, அல்லவற்றைத் தள்ளி மக்களுக்கு மகிழ்ச்சி தரும் அளவுக்குப் படம் எடுக்க வேண்டும்.

அண்ணா நாமம் வாழ்க!

(14.11.1981 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற குழந்தைகள் திரைப்பட விழாவில் ஆற்றிய உரை)



தியாகம் செய்தவர்களை மக்கள் மனதில் என்றும் நிலைத்து நிற்க வைக்கும் அடையாளச் சின்னமாகப் பதக்கம் கொடுக்கப்படுகிறது !

இத்தகைய நிகழ்ச்சி நடப்பதே தியாகம் செய்த காவல்துறை அதிகாரிகளின் குடும்பங்களுக்கு ஓரளவு உதவி செய்வதற்காகத்தான். தியாகம் செய்தவர்கள் நினைவாக மக்கள் மனத்தில் அவர்கள் என்றும் நிலைத்து நிற்கும் அடையாளச் சின்னமாகப் பதக்கமும், சிலருக்குப் பணமும் இங்கே கொடுக்கப்படுகிறது.

நீண்டகாலமாக காவல் துறையினரின் குறையைத் தீர்க்க வேண்டும் என்ற அக்கறை இந்த அரசுக்கு இருந்து வந்துள்ளது. அதன் விளைவுதான், இந்தப் பதக்கமும் பரிசும் அளிக்கப்படுகிறது என்பதைக் குறிப்பிடவிரும்புகிறேன்.

மேலும், 1982ஆம் ஆண்டு பொங்கல் தினத்தில் மாவட்டங்கள் அனைத்திற்கும் என்ற வகையில் 1,500 காவல்துறையினருக்கு பரிசும், பதக்கமும் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் 52 ஆயிரம் காவலர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்களில் 5 பேருக்கோ 10 பேருக்கோ தங்கப் பதக்கமும் பரிசும் அளிக்கும் நிலை இருந்தால், காவலர்கள் பதவியிலிருந்து ஒய்வு பெறும் காலம் வந்தாலும் இந்தப் பரிசு கிடைக்காமல் போகலாம் என்பதை இந்த அரசு உணர்ந்து இருக்கிறது.

மாவட்டக் காவல்துறை அதிகாரிகளுக்கு வீட்டுவசதி அல்லது வீட்டு வாடகை தரவேண்டும் என்ற கோரிக்கையைக் காவல்துறை அதிகாரி இங்கே எடுத்துவைத்தார். நிச்சயமாக அதை இந்த அரசு நிறைவேற்றும்.

நேர்மையாக நியாயமாக நடந்துகொள்ளும் காவலர்களுக்கு இருபது ரூபாயோ அல்லது இருபத்தைந்து ரூபாயோ கூடுதலாகத் தரப்பட வேண்டும் என்பதை நான் ஏற்றுக் கொள்ளும் போது ஒரு நிபந்தனையையும் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேர்மையாக, நியாயமாகவும் நடந்து கொள்ளும் காவலர்களுக்குக் கூடுதலாக அப்படியொரு தொகை அளிக்கப்படும் பொழுது அவர்கள் எப்போதாவது தங்களுடைய நேர்மையிலும் கடமையிலும் தவறுகிறார்கள் என்று தெரியுமானால், நேர்மைக்காகக் கொடுக்கப்படும் அந்தப் பணம் குறைக்கப்படும் அல்லது பிடிக்கப்படும் என்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதைக் காவலர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என் பதில் ஐயமில்லை.

பெண் காவலர்கள் தங்கள் மேல் சட்டையைக் கால்சட்டைக்குள் போட்டுக்கொள்ளும் முறையை மாற்றி அவர்களுக்கு வசதியாக இருக்க கோட்டு போன்ற மேல் உடை முறையும் வருகிற ஜனவரி மாதம் பொங்கலிலிருந்து அமலுக்கு வரும்.

காவலர் துணை இல்லாத போது மக்கள் தியாக உணர்வோடு சில சமுதாய தீய சக்திகளைப் பிடிக்கும்போதோ தடுக்கும் போதோ ஆபத்து ஏற்பட்டு அவர்கள் உயிர் இழக்கும் நிலை ஏற்பட்டால், காவல்துறை அதிகாரிகள் குடும்பத்துக்குக் கொடுப்பது போன்றே ரூ.10 ஆயிரம், உயிர் இழந்த அந்தத் தியாகிகளின் குடும்பத்திற்கும் கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிச் செய்வதால் சமூக விரோத சக்திகளை ஒடுக்க, மக்களும் காவல் அதிகாரிகளைப் போன்று முன்வர முடியும் என்று நம்புகிறேன். குற்றம் செய்தவர்களைப் பிடித்துக் கொடுக்கும்பொது மக்களுக்கு ரூ.1,000/– முதல் ரூ.5,000/– வரை அரசு பரிசாகத் தரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

❖ ❖ ❖

(30.11.1981 அன்று, சென்னை ராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற காவல் துறையினருக்கு விருது வழங்கும் விழாவில் ஆற்றிய உரை)

ஏற்றத்தாழ்வை அகற்றுவோம்!

சுப்பிரமணிய பாரதியாரின் நூறாவது பிறந்த நாள் இன்றைய தினம் தமிழக மக்களால் அனைத்து மக்களால் கொண்டாடப்படும் விழாவாக உருவாகி இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறேன். அவர் செயல்களெல்லாம் அவர் வாழ்ந்த காலத்தில் செய்த கடமைகளை எல்லாம் நாம் யாரும் மறக்க முடியாது– வரலாறு மறக்காது என்ற வகையில் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. அவரது தியாகங்கள் நமக்கு எடுத்துக்காட்ட – வழி வகுக்க இந்த நாள் பயன்படும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பாரதிக்கு முன்பு எத்தனையோ கவிஞர்கள் இருந்திருக்கிறார்கள். அவருக்குப் பின்னரும் எத்தனையோ கவிஞர்கள் தோன்றியிருக்கிறார்கள், தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். பாரதி எடுத்துச் சொல்லிய கருத்துக்களை எல்லாம் வைத்துச் சில கேள்விகளைக் கேட்டு, நாமே அவற்றிற்கு விடை கூறிக்கொண்டால் அவர் யார் என்பது விளங்கும். சமூக சீர்திருத்தத்தில் அவர் ஆர்வம் கொண்டிருந்தவரா என்று கேட்டால், ஆம் என்ற விடை கிடைக்கும்.

பெண்கள் மறுமலர்ச்சிக்குரிய கருத்துக்களை வெளியிட்டவரா என்ற கேட்டால் ஆமாம் என்று பதில் கிடைக்கும். பெண் உரிமைக்காகப் போராடியவரா என்று கேட்டால், ஆம் என்ற பதிலே கிடைக்கும். ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாக வாழ வேண்டும் என்ற தத்துவத்தை எடுத்துச் சொன்னாரா என்றால், ஆமாம் என்னும் பதிலே கிடைக்கும். சாதிகள் கூடாது என்ற உண்மையை – தனது உணர்வை எழுதி பேசி வந்தவரா என்றால், ஆமாம் என்னும் பதிலே கிடைக்கும். பெண்களை அடிமைப்படுத்தக் கூடாது என்ற தத்துவத்தை வலியுறுத்தியவரா என்று கேட்டால், ஆமாம் என்ற பதிலே கிடைக்கும்.

நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவரா என்று கேட்டால் ஆமாம் என்ற பதிலே கிடைக்கும்.

எந்தப் புரட்சிக் கருத்தையும் இன்று கூற முடியும். ஆனால், அதனைச் சொல்ல முடியாத காலத்தில் சொல்வதற்கு அச்சப்பட்ட காலத்தில் அதனைத் துணிவாகச் சொல்லியிருக்கிறார். எத்தனைத் துணிச்சல் இருந்தால் சொல்லியிருக்க முடியும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அவர் புகழோடு இருந்த காலத்தில் அவர் உயர்ந்த பதவியில் இருந்தபோது இந்த விழா கொண்டாடப்பட்டிருக்குமேயானால் அதில் சிறப்பிருக்காது. மறைந்த பிறகு இந்த விழா கொண்டாடப்படுவதே சிறப்பாகும்.

பஞ்சாப் மாநில முதல்வர் தர்பாரா சிங் அவர்கள் இந்த விழாவில் ஆர்வத்துடன் பங்கேற்றிருக்கிறார்கள். அடுத்த ஆண்டு பஞ்சாபில் பாரதியார் பிறந்த நாள் விழாக்

கொண்டாடப்படும் என்று அவர் சொன்னார். வங்காள முதல்வர் ஜோதிபாசு அவர்கள் நாங்கள் கொண்டாட இருக்கிறோம் உங்களின் உதவி தேவை என்ற கடிதம் எழுதியிருக்கிறார்கள். உத்திரப்பிரதேச முதல்வர் நாங்களும் கொண்டாடப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களும் அவ்வாறே கொண்டாட இருக்கின்றன. பாரதியின் புகழ் தியாகம் ஆற்றல் இந்தியர் அனைவருக்கும் இந்தியத் துணைக் கண்டம் முழுதுக்கும் பயன்பட வேண்டும் என்பது மட்டுமல்ல, உலகுக்கே பயன்பட வேண்டும் என்பது எனது விருப்பம்.

சிலருக்குச் சில நாட்கள் புகழ் இருக்கலாம். சில வாரங்கள் புகழ் இருக்கலாம். சில மாதங்கள் புகழ் இருக்கலாம். ஆனால், பாரதியின் புகழ் நூறாண்டுகளுக்கும் மேலாக இருந்து வருகிறது. இன்னும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு அது இருக்கும். சமுதாயம் அவரைப் போற்றும் வாழ்த்தும் என அறுதியிட்டுக் கூறுகிறேன்.

பாரதிக்குத் துணிவு எங்கிருந்து வந்தது ? பிராமண குலத்தில் பிறந்தவர் அவர். பிறப்பால் தாழ்த்தப்பட்டவர் இல்லை. தனக்காகவோ தனது இனத்துக்காகவோ சமுதாயத்துடன் போராட வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. வசதியாகத்தான் வாழ்ந்திருக்கிறார். அவரது தந்தை ஒரு சிறிய தொழிற்சாலை நடத்துகின்ற அளவுக்கு அவரது குடும்பச் சூழ்நிலை இருந்திருக்கிறது. அப்படி இருந்தும் அவர், தனக்காகப் போராடவில்லை. சமுதாயத்துக்காகப் போராடியிருக்கிறார். அவர் தனி மனிதரல்லர் தத்துவத்தின் சின்னம்.

மற்றவர்கள் சொல்ல அஞ்சும் கருத்துக்களை பிரச்சினைகளைச் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களை அவர் துணிச்சலுடன் தெரிவித்திருக்கிறார். அவரை தேசியக் கவி என்பதா ? மகாகவி என்பதா ? தேசிய மகாகவி என்பதா ? அந்தப் பெருமையை எண்ணித்தான் விழா கொண்டாடப்படுகிறது. அவர் எந்தக் கருத்தையும் பெரிதாகச் சொல்லியிருக்கிறார். பெண்களின் கற்பு நிலை குறித்து விவரமாக வெளியிட்டிருக்கிறார். பெண்களுக்கெனச் சில திட்டங்களைத் தெரிவித்திருக்கிறார்.

"பெண் பக்குவமடைவதற்கு முன் திருமணம் செய்யக்கூடாது" என்று பாரதியார் கூறியிருக்கிறார். அவர் சொல்லிய பிறகு அவ்வாறு திருமணம் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், தடைச் சட்டம் வருவதற்கு முன்பே எவ்வளவு சிந்தனையோடு–துணிவோடு சொல்லியிருக்கிறார் பாரதி என்பதை இளைஞர் சமுதாயம் நினைவிற்கொள்ள வேண்டும்.

இன்று நாம் பேசுகின்ற பல புரட்சித் தத்துவங்களை 50 ஆண்டுகளுக்கு முன்பே பாரதியார் சொல்லியிருக்கிறார். பிதுரார்ஜித சொத்தில் பெண்களுக்கும் சமபங்கு வழங்கப்பட வேண்டும் என்ற பல்லாண்டுகளுக்கு முன்பே தெரிவித்திருக்கிறார். கணவன் இறந்த பிறகு ஒரு பெண் மறுவிவாகம் செய்ய விரும்பினால் அதைத் தடுக்கக் கூடாது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பெண்களுக்குப் படிப்பு வேண்டும் என்று அக்காலத்திலேயே பாரதி கூறியுள்ளார். அவர்களுக்குப் பட்டப்படிப்புக் கொடுக்க வேண்டும் என்று முன்னமேயே சிந்தனையுடன் கூறியுள்ளார் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அண்ணா அவர்கள் வழியில், பெரியார் அவர்களின் வழியில் நடைபோடும் இந்த அரசு அவர்களின் கொள்கைகளில் பலவற்றை நிறைவேற்றியிருக்கிறது. பெண்களுக்கென ஒரு பல்கலைக்கழகத்தை அடுத்த ஆண்டு இறுதிக்குள் தமிழக அரசு துவக்கப் போகிறது. பெண்கள் மறுமலர்ச்சியில் பெரும்பங்கு கொண்டவர் பாரதி. பெண் விடுதலையின் பெருமைக்காக தர்மயுத்தம் தொடங்குவேன், அதற்கு மகா சக்தி துணைபுரிவாள் என்கிறார் பாரதி.

தமிழகத்தைப் பொறுத்தவரை நான்கு மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவராகப் பெண்களே இருக்கின்றனர் என்று நான் பெருமையுடன் குறிப்பிடுகிறேன். கலப்பு மணம் செய்து கொள்ளுங்கள் என்று பாரதி வலியுறுத்தினார். தமிழகத்தைப் பொறுத்த வரையில் இப்போது கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு நாம் பரிசு கொடுக்கிறோம்; பணம் கொடுக்கிறோம். மாபெரும் தியாகம் செய்த பாரதியை, தியாகி என்பதா ! வீரர் என்பதா ! மறத்தமிழன் என்பதா !

தன்னோடு பிறந்தவன் சகோதரன் அவனுக்கு உரிமை கிடையாது என்ற நிலை இருந்தது. அவனை அடிமை என்று கருதி வந்தார்கள். அந்த இழிநிலை ஒழிய வேண்டும் என்று தீவிரமாக இருந்தார் பாரதி. அனைத்து மனிதர்களும் சகோதரர்கள் என்று அவர் கூறினார். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று நமது அண்ணா அவர்கள் வலியுறுத்தி வந்தார்களே, அதுபோல மனிதரத்தம் அனைத்தும் ஒன்றே என்று தெரிவித்தார் பாரதியார்.

சமதர்ம சமுதாயம் வேண்டும் என்கிறார் புரட்சி மனம் கொண்ட பாரதி. இந்தியா முழுமையும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியவர் பாரதி. அதனால், பாரதி பிறந்த நாளை இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டு நாளாகக் கொண்டாடவேண்டும். தமிழகத்தில் ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் பாரதியின் பிறந்த நாள் விழா நடைபெறும்.

இந்த நாளில் ஏற்றத்தாழ்வை அகற்ற நாம் உறுதி எடுத்துக்கொள்வோம். ஒன்றே குலம் என்ற நிலை உருவாகப் பாடுபடுவோம்.

அண்ணா நாமம் வாழ்க !

(11.12.1981 அன்று, எட்டயபுரத்தில் நடைபெற்ற பாரதி நூற்றாண்டு தொடக்க விழாவில் ஆற்றிய உரை)

புதியதோர் சமுதாயம் அமைப்போம்!

நடந்து முடிந்த பாரதி நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் மனநிறைவை – மகிழ்ச்சியை – பூரிப்பை– பெருமையைத் தரத்தக்க வகையில் மூன்று நாட்களாக நடந்து முடிந்திருக்கிறது. இதைப் பார்த்துக் கொண்டிருக்கும் நாம் உள்ளம் நெகிழ்ந்து போயிருக்கிறோம். இங்குள்ளவர்கள் – எட்டயபுரத்து மக்களின் எண்ணம் எப்படி இருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்க்கிறேன். அவர்கள் எல்லாம் பெருமையுடன் கொண்டாடி, 3 நாள் நிகழ்ச்சிகளையும், நடத்தி முடித்திருக்கிறார்கள். பெருமைக்குச் சொந்தம் கொண்டவர்களுடைய ஊரில் பிறந்து வாழ்பவர்கள் என்று அவர்கள் உள்ளம் பெருமைப்படுகிறது.

இங்கே தோன்றிய பாரதிக்கு–பல தியாகம் செய்த புலவருக்கு ஜாதி மதங்களைக் கடந்து நாட்டுக்குக் கடமையாற்றிய கடமை வீரருக்கு – எத்தனை இலட்சம் மக்கள் கோடிக்கணக்கான மக்கள் என்பது கூடப் பொருந்தாது. உலகத்திலுள்ள மனித வர்க்கம் அனைத்துக்கும் வழி வகுத்துக் கொடுக்க நினைத்த மகாகவிக்கு விழா எடுத்து முடித்திருக்கிறோம்.

நாடு எப்படி நலம் பெற வேண்டும்; மக்கள் எப்படி வாழ்ந்து நலம் பெற வேண்டும் என்று எடுத்துச் சொன்ன ஒருவர் – இந்திய மக்களின் வாழ்க்கையை எண்ணிப் பார்த்த ஒருவருக்கு எடுக்கப்பட்ட விழா மிகச் சிறப்பாக நடைபெற்றதை எண்ணி நாம் அனைவருமே மிகுந்த பெருமைப்படுகிறோம். உலகத்தைக் கவனிக்க வைத்த ஈர்த்த விழாவாக இது அமைந்ததைப் பற்றி பாரதியின் ஊரிலேயே பேச வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.

முதலமைச்சராக இருப்பதால்தான் இந்த வாய்ப்புக் கிடைத்தது என்று நான் பெருமைப்படவில்லை. அண்ணாவின் தம்பி என்பதால் இந்த வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்பதனை எண்ணிப் பெருமையடைகிறேன். முதலமைச்சர் பதவி வரும்; போகும்; முதலமைச்சர் பதவி நாம் விரும்பினால் கிடைக்காது மக்கள் விரும்பினால்தான் கிடைக்கும். நாம் ஆசைப்படலாம். ஆனால், மக்கள் ஆசைப்பட வேண்டும். இங்கே நான் அரசியல் பேச மாட்டேன். ஆனால், எனது பேச்சில் அரசியல் கலந்து வந்தால் அதைத் தவறாக எண்ண வேண்டாம்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள் உயிரோடு இருக்கும்போது யாரையும் நமது நாட்டில் மதிப்பதில்லை; மறைந்த பிறகு விழா எடுக்கிறார்கள் என்று கூறினார்கள். அதற்குப் பதில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஒருவர் இந்த நாட்டில் அருஞ்சாதனைகளைச் செய்து, அவர் வாழ்ந்த காலத்தில் எத்தகைய உதவியுமின்றி வாழ்ந்தார் என்று அறிந்து

கொள்ளும்போது, எதிர்கால சமுதாயம் அவரைப் பற்றி, அவரது தொண்டு பற்றி – தெரிந்த பிறகு அவருக்கு விழா எடுக்க வேண்டும் என்று முனைகிறது.

உயிரோடு இருப்பவர்களை யாரும் மறப்பதில்லை. தேசத்தந்தை மகாத்மா காந்தி அவர்கள் உயிரோடிருக்கும் போது அவரை யாரும் மறக்கவில்லை. இப்போது தான் மறந்துவிட்டார்கள். அவரைக் கொன்றுவிட்டார்களே தவிர வாழ வைக்கவில்லை. இந்தியத் தந்தை என்று அவருக்குப் பெயர் வைத்தார்கள். நேரு அவர்கள் இருக்கும் போது அவரைப் பாராட்ட மறந்துவிடவில்லை மக்கள். அவர் மறைந்த பின்னரும் அவரை மறந்துவிடவில்லை.

புலவர்கள் வாழ்ந்த காலத்தில் மற்ற புலவர்கள் அவரது கவிதையில் எதுகை இல்லை மோனை இல்லை, என்ன எழுதுகிறார் இவர், என்றெல்லாம் கூறுவார்கள். அவர் இறந்துவிட்டால் புகழ்வார்கள். புலவர்களுக்கு மட்டுமல்ல, இசைவாணர்களுக்கு, பத்திரிகையாசிரியர்களுக்கு, கலைஞர்களுக்கு, ஆசிரியர்களுக்கு இன்னும் பலருக்கும் இந்த நிலை உண்டு.

பாராட்டினால் வளர்ந்து விடுவார்கள் என்ற எண்ணம் சிலருக்கு இருக்கிறது. பொறாமையைத் தூக்கி எறிந்துவிட்டு தன்னம்பிக்கையுடன் வாழ்வதற்கு நினைத்தால் நல்ல நிலை – நல்ல நேரம் தானாகவே வரும். அறிஞர் அண்ணா அவர்கள் பாரதிதாசன் உயிரோடு இருக்கும்போதே அவரைப் பாராட்டிப் பொற்கிழி வழங்கினார். எப்போது, எந்தக் காரியம் செய்ய வேண்டும் என்பது தமிழக அரசுக்குத் தெரியும்.

நான் முதல்வர் ஆனவுடன், உயிரோடிருப்பவர்களுக்குச் சிலை வைக்கக் கூடாது என்று உத்தரவு போட்டேன். போடாவிட்டால் என்ன ஆகியிருக்கும்? என் சிலையை வைக்கப் போகிறேன். என்று பலர் போட்டி போட்டுக் கொண்டு வந்தனர். நான் அனுமதிக்கவில்லை. ஒருவர், எனது தோட்டத்திலே சிலையை வைக்கப்போகிறேன்! நீங்கள் என்ன செய்ய முடியும்? என்று கேட்டார். மறுத்தேன். "எனது சிலையை வைப்பதற்கு நீங்கள் யார்? நான் அதை அனுமதிக்கமாட்டேன்" என்று தெரிவித்தேன்.

கருநாடக மாநில முதல்வர் குண்டுராவ் அவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். பாஷை ஒரு தடையாக இருக்கிறது. பாஷை தெரியாவிட்டால் எத்தனை கஷ்டம் அடைய வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள்.

ஒரு மொழியை நாம் புரிந்துகொள்ள முடியாதபோது அந்த மொழியை கட்டாயப்படுத்தக் கூடாது. இந்தி மொழியில்தான் பேச வேண்டும் என்று சட்டம் இடும்பொழுது சிக்கல் ஏற்படுகிறது. உயிர்மொழியாம் தாய்மொழியை நீங்கள் யார் தடைசெய்ய? என்று கேட்க நேரிடுகிறது. தமிழிலே சிந்தனை செய்ய வேண்டும். தமிழிலே பேச வேண்டும் என்று பாரதியார் சொன்னார். குழந்தை அழுகிறது. அந்த அழுகையில் அரசியல் இருக்கிறதா இல்லையா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். குழந்தைக்கு அஜீரணம் ஏற்பட்டிருக்கிறது என்றால் மேலும் மேலும்

திணிக்கக்கூடாது என்று சொல்கிறோம். அது அரசியல் இல்லை? நாட்டில் நன்மை எது, தீமை எது என்று தீர்மானிக்க ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்கிறது.

உயர்வு, தாழ்வு என்ற நிலை சமூகத்தில் இல்லாதபடி செய்ய வேண்டும். அதற்குரிய சட்டங்களைச் செய்ய வேண்டும். சமூக சீர்திருத்தம் பேசிப் பயனில்லை. பொருளாதாரவாதி ஒழுங்கான முறையில் திட்டங்கள் மக்களுக்குப் பயன்படவேண்டும் என்று முயற்சி செய்யும்போது அங்கு அரசியல் வந்துவிடுகிறது. எங்களுக்குத் தெரிந்த அளவுக்கு எங்களது பணிகளை நாங்கள் செய்து வருகிறோம். அப்படிப்பட்ட சாதனைகளுக்கு இப்படிப்பட்ட விழா பயன்தரும்.

பெண்களுக்கென ஒரு தனிப் பல்கலைக்கழகம் ஏற்படுத்துவதைப் பற்றி கல்பனாத் ராய் அவர்கள் பேசும்போது, இந்தியாவிலேயே இப்படி ஒரு பல்கலைக்கழகம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். பாரதி எழுதியிருந்த நூல் ஒன்றில் பூனாவில் பெண்களுக்கென ஒரு பல்கலைக்கழகம் இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். அதை ஒட்டித்தான் நான் குறிப்பிட்டேன். தற்போது கல்பனாத் ராய் அவர்களின் உரையைக் கேட்ட பிறகு, மேற்படி பூனாவில் உள்ள பெண்கள் பல்கலைக்கழகம் தற்போது இயங்கவில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது.

பாரதி விழாவையொட்டி பாரதி வலியுறுத்திய சமுதாயச் சீர்திருத்தம், பெண்களுக்கு உரிமை, சட்டம், வறுமை ஒழிப்பு, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, ஆகியவை குறித்து பள்ளி மாணவ, மாணவியர் கல்லூரி மாணவ மாணவியர்க்கும், உடல் ஊனமுற்றவர்கள் ஆகியோருக்கும் கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, பேச்சுப்போட்டி ஆகியவற்றை ஏற்படுத்தி வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

முதல் கட்டமாக எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் இந்தப் போட்டிகள் நடத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் 3 பேர் தேர்ந்தெடுக்கப்பெறுவர், பிறகு அவர்களுக்கு மாநில அளவில் பொதுப்போட்டி நடத்தி அதில் வெற்றி பெற்றவர்களுக்குப் பாரதி நூற்றாண்டு நிறைவு விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

எட்டயபுரம் பகுதியில் பெண்கள் பாலிடெக்னிக் ஒன்று அடுத்த ஆண்டில் தொடங்கப்படும். பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் கணிசமான முறையில் அதிகப்படுத்தப்படும். பெண்கள் அதிகம் உள்ள இருபாலரும் படிக்கும் பள்ளிகள் முழுக்க முழுக்கப் பெண்கள் பள்ளிகளாக மாற்றப்படும்.

பாரதியாரின் வாழ்க்கை குறித்துத் தமிழக அரசு திரைப்படம் தயாரிக்கும் வாய்ப்புக் கிடைத்தால் நானே அதனை இயக்குவேன்.

பாரதியாரின் நூல்கள் 3 தொகுதிகளாகப் பல்வேறு மொழிகளில் பெயர்க்கப்பட்டு வெளியிடப்படும்.

இங்கு காலையில் யாரோ குறிப்பிட்டர்கள் என்று கருதுகிறேன். மத்திய அரசு மொழி பெயர்த்து வெளியிடுவதாகச் சொல்கிறது. அது வேண்டாம். அவர்களிடம்

உதவித்தொகை பெற்று நாமே வெளியிடலாம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அவர்களும் வெளியிடட்டும், நாமும் வெளியிடுவோம்.

எட்டயபுரம் பகுதியில் பாரதியின் பெயரில் நூற்பாலை ஒன்று தொடங்கப்படும். ஏறக்குறைய 400 பேர்களுக்கு வேலைவாய்ப்பை அந்த ஆலை அளிக்கும். இந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படும். பாரதியின் பெயரில் தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்களில் பெலோஷிப் அமைக்கப்படும். சென்னையில் பாரதி நினைவு மண்டபம் அமைக்கப்படும். பாரதியாரின் வாழ்க்கை தொடர்பான நிகழ்ச்சிகள் கொண்ட நினைவுச் சின்னமாக அது அமையும்.

அண்ணா நாமம் வாழ்க!

(13.12.1981 அன்று, எட்டயபுரத்தில் நடைபெற்ற பாரதி நூற்றாண்டு நிறைவு விழாவில் ஆற்றிய உரை)

படத்தின் மையக் கருத்துக்களை வைத்துப் பாத்திரங்களை உருவாக்க வேண்டும்!

நாட்டில் இல்லாத கதாபாத்திரங்களை நாமே உருவாக்கிக் கொண்டு கதையை அமைப்பது ஒருவகை. இருக்கின்ற ஒரு பாத்திரத்தை வைத்துக்கொண்டு இல்லாத குணங்களைச் சொல்வது ஒரு வகை.

படத்தின் மையக்கருத்துக்களை வைத்துப் பாத்திரங்களை உருவாக்க வேண்டும். தயாரிப்பாளர்கள். தமிழகத்தில் உள்ள கலாச்சாரம் காப்பாற்றப்படும் வகையிலே பாத்திரங்களைத்தேர்ந்தெடுக்கவேண்டும் கலைஞர்கள். ஒரு எல்லைக்கோட்பாட்டைத் தாண்டிப் போகாத முறையில் கட்டுப்பாட்டுடன் பாத்திரங்களை உருவாக்கிக் கொண்டால் கலைஞர்கள் வெற்றி பெற முடியும். திரைப்படத்திற்கு மட்டுமல்ல எல்லைக் கோடு–கட்டுப்பாடு. வாழ்க்கைக்கும் இது தேவைதான்.

அண்ணா நாமம் வாழ்க!

(1980–1981ஆம் ஆண்டிற்கான திரைப்படக் கலைஞர்களுக்கு விருது வழங்கும் விழாவில் ஆற்றிய உரை)

தமிழறிஞர்கள் வாழ்ந்தால்தான் எங்கள் பணியைத் தொடர முடியும்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

காலையில் இங்கு பேசிய சில பெருமக்களுக்கு இப்போது நான் பதில் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். குன்றக்குடி அடிகளார் அவர்கள் நல்ல கருத்தைச் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லி இருக்கிறார்கள். அதை நான் மதிக்கிறேன், போற்றுகிறேன், வணங்குகிறேன்.

குறளைத் தேசிய நூலாக்க வேண்டும் என்று தமிழகம் கோரிக்கை விடுத்தபோது, ஏற்க முடியாது; எத்தனையோ நூல்கள் இருக்கின்றன. ஒட்டுமொத்தமாக அவை அனைத்தையும் தள்ளிவிட்டு குறளை மட்டும் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்று இந்திய அரசு தெரிவித்ததாக அடிகளார் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

என் முயற்சியை நான் இத்துடன் நிறுத்திக்கொள்ளமாட்டேன். ஆங்கிலத்தில் இன்னொரு கடிதத்துடன் குறளின் ஆங்கில மொழிபெயர்ப்புப் புத்தகம் ஒன்றையும் இணைத்து அனுப்ப இருக்கிறேன் என்பதை இங்கே சொல்லிக் கொள்கிறேன். தட்டுங்கள் திறக்கப்படும் என்று சொல்வார்களே அதற்கேற்ப என்னால் முடிந்தவரை தட்டிப்பார்க்க வேண்டும் என்று தட்டுகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் அடிகளார் சொல்லியிருக்கிறார்கள். திருக்குறளில் உள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சட்டங்கள் வகுத்து, அமலாக்க வேண்டும். அது அரசியல் கொள்கையாக இருக்க வேண்டும் என்ற அவர்கள் கூறியிருக்கிறார்கள். உளமார – மனமார வரவேற்கிறேன்.

எங்களுடைய கடமைகளை முழுமையாகச் செய்வோம். எந்த அளவு சட்டங்களுக்கு உட்பட்டுச் செயலாக்க முடியுமோ அந்த அளவு செய்ய விழைகிறோம் என்பதை, திருவள்ளுவர் திருநாளில் முதல்வர் என்ற முறையில் அடிகளாரின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறளுக்கு யார் யாரோ உரைகள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அதைக் கட்டுப்படுத்த மையம் ஏற்பட வேண்டும். தமிழ்ப் பெரியார்கள் அம்மையத்தில் இடம் பெற வேண்டும். அவர்கள்தான் குறளுக்கு உரை எழுத வேண்டும். வேறு யாரும் எழுதுவதைச் சட்டப்படி தடை செய்ய வேண்டும் என்று அடிகளார் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இதை அனுபவ வாயிலாக உணர்ந்து, ஏற்றுக்கொள்கிறேன்.

ஒரு சகோதரியிடம் ஒரு குறளைப் பற்றி நான் கூறினேன். அவர்கள் தொலைபேசி வாயிலாக அந்தக் குறளின் எண் என்னவென்று கேட்டார்கள். நான் சொன்னேன்!

பத்து நிமிடம் கழித்து, என்னைக் கோபித்துத் தொலைபேசியில் பேசினார்கள். காரணம் தவறான பொருளை அவர்கள் கொண்டுவிட்டார்கள்.

உடனே நான் கன்னைய நாயுடுவின் பதிப்பைப் படித்துச் சொல்கிறேன் என்றேன். அவர்கள் வேறொருவரின் பதிப்பைப் படித்திருக்கிறார்கள். அதிலே, வேறு வகையில் எண் இடப்பட்டிருக்கிறது. அதற்கு நான் எப்படிப் பொறுப்பாளியாக முடியும் என்று கூறினேன்.

தேசிய நூலாக ஆகப்போகின்றது எனக் கூறப்படும் நூலில் அப்படி ஒரு தவறு வந்துவிடக்கூடாது என்பதில் அடிகளார் மிகுந்த அக்கறை காட்டுகிறார்கள் என்பதை எண்ணி நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆகவே சட்டம் இடம் கொடுத்தால் செய்யத் தயாராக இருக்கிறோம். ஆக்கபூர்வமாகப் பேசியிருக்கும் அடிகளாருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற முயற்சிகளை எங்கள் கடமையாகக் கருதிச் செய்து வருவோம். அண்ணா அவர்களின் கொள்கைப் படி !

5ஆவது உலகத் தமிழ்நாட்டுக்குச் சில எதிர்ப்பு இருந்தது என்பது எல்லாருக்கும் தெரியும். என்றாலும் தமிழ்ப் பெரியார் சிலர் மனம் திறந்து பாராட்டினார்கள். அது அவர்களை வாழ வைத்த தமிழுக்குத் தந்த மாபெரும் பாராட்டு என நான் கருதுகிறேன்.

அண்மையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தைத் துவக்கினேன். இதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தாலும் அதை வரவேற்க வேண்டும். நாட்டு நன்மைக்காக மக்களுக்குப் பயன்படும் பணிகளை யார் செய்தாலும் வரவேற்க வேண்டும்.

தமிழருக்கு, தமிழுக்கு, தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் தொண்டினைச் செய்யும்போது தயவுசெய்து ஒத்துழைப்புத் தாருங்கள். உங்கள் ஆத்திரத்தை வேறுவகையில் காண்பியுங்கள். உங்கள் கோபத்தை வேறுவகையில் செலுத்துங்கள். நாங்கள் செய்கிற பணியில் குறையிருந்தால் அப்படிச் செய்யக்கூடாது. இப்படிச் செய்யுங்கள் என்று யோசனை கூறுங்கள். உலகில் எல்லாவற்றையும் முழுமையாகத் தெரிந்து கொண்டவர்கள் கிடையாது. இன்னும் ஆராய்ச்சியில் தான் பல பிரச்சினைகள் உள்ளன. முடிவைக் கண்டுபிடித்தவர் யாரும் இல்லை. பிளவுகளால் தமிழ் அழிந்துவிடக்கூடாது– தமிழினம் அழிந்துவிடக்கூடாது.

பெண்களுக்குத் தனிப் பல்கலைக்கழகம் வேண்டும் என்று பாரதி விழாவில் சொன்னேன். இதற்கு எத்தனை எதிர்ப்பு. ஆணும் பெண்ணும் சேர்ந்து படிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டுவரும்போது, பெண்களுக்கென்று தனிப் பல்கலைக் கழகம் எதற்காக என்று கேட்கிறார்களே, நான் என்ன செய்யட்டும் ?

தமிழ் கற்றுத்தேர்ந்த நிறைய எழுதி, தமக்கென எதுவும் சேர்த்துக்கொள்ளாது, தமிழை, தமிழருக்காக ஆராய்ந்து தமது சொந்த மூளையைத் தவிரவேறு செல்வம் இல்லாதோர் எத்தனையோ பேர் உள்ளனர். இவர்களை எல்லாம் ஆதரித்துத் தீர வேண்டுமென்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். இத்தகையவர்களின்

கண்ணீர் துடைக்கப்படாமல் தமிழகம் வளர்ந்துவிட்டது என்று சொல்வது தவறு என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இவர்களுக்கு வழங்கப்பட்ட 75 ரூபாய் ஓய்வூதியத்தை 250 ரூபாயாக ஆக்கியபோது பாராட்ட வேண்டும். ஏன் கொடுக்கிறார்கள் என்று கேட்காமலாவது இருக்கக் கூடாதா ?.

பரிசு பெறும் நூல்களைப் பள்ளிகளில், நூலகங்களில் வைக்க வேண்டும் என்ற கோரிக்கை விடப்பட்டது. அந்தக் கோரிக்கையை அரசு ஏற்றுச் செயல்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளும்.

தமிழ் ஆட்சிமொழியாக்கும் பணியில் தி.மு.க. அரசு முனைப்பாக இருந்தது. என்றாலும் இடையில் அதை மறந்துவிட்டது. வழக்குகள் அனைத்தும் தமிழில் நிகழ வேண்டும் என்று அண்ணா அவர்கள் சொல்லிய கருத்தை நிறைவேற்ற முடியவில்லை. அது அப்படியே நிற்கிறது. வருகிற பிப்ரவரி 1ஆம் தேதி முதல் சிவில் கோர்ட்டுகளில் தமிழில் வழக்கு விசாரணை நடைபெறும்.

குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும்போதும் படித்து முடித்த பிறகும் விளையாடுவதற்கு நேரமில்லாமல் இருக்கிறது. அவர்களுக்கு தமிழ்ப் பண்பாட்டுக்கு ஊறுநேராத வகையில்—தமிழ்ப் பண்பாட்டை எதிரொலிக்கக் கூடிய வகையில் அடிப்படை விளையாடல்களின் நுணுக்கங்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

கராத்தே என்னும் விளையாட்டைப் பலர் கற்றுக்கொண்டு வருகின்றனர். இந்த விளையாட்டு தமிழகத்தில் இல்லை என்று கருதுகிறார்கள்; அது தவறு. காலால் அடிப்பதைக் கையால் தடுக்கப் பயிற்சி செய்யும் தற்காப்பு முறை தமிழிலே—தமிழகத்திலே இருந்தது. வன்முறைக்குத் துணை போகிறவர்களைத் தடுக்கவும், நாட்டின் பாதுகாப்புக்கும், மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் உதவும் கராத்தே விளையாட்டைக் கற்றுக்கொள்வது அவசியம். அதில் குழந்தைகள் தேர்ச்சி பெற நாம் அக்கறை காட்ட வேண்டும்.

இங்கே பரிசு பெற்ற எழுத்தாளர்களுக்கு ஒரு தொகையை நாம் வழங்கியிருக்கிறோம். இது அவர்களுடைய தகுதிக்கு ஏற்றதல்ல. நம்மால் முடிந்ததை அவர்களுக்குக் காணிக்கையாக்கியிருக்கிறோம். இவ்வளவுதானா எங்களுக்கு என்று அவர்கள் எண்ணாமல் மேலும், மேலும் முனைந்து எழுத வேண்டும். தமிழறிஞர்கள் வாழ்ந்தால்தான் எங்கள் பணியைத் தொடர முடியும். மேலும், மேலும் யோசனைகளைச் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க ! நன்றி ! வணக்கம் !

(15.01.1982 அன்று, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவரின் 2013ஆவது பிறந்த நாள் விழாவில் ஆற்றிய உரை)


பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்
மதுரை மாவட்டம்
காமராஜர் மாவட்டம்
புதுக்கோட்டை மாவட்டம்
இராமநாதபுரம் மாவட்டம்
சிவகங்கை

ஒழுங்காக நடைபோடுவதும், ஒழுங்காகப் பணியாற்றுவதும் அனைவருடைய இன்றியமையாத கடமை!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

தியாகம் செய்கிறவர்கள், தியாகத்திற்கு மட்டும் தான் சொந்தக்காரர்கள் என்கிற வரலாறு மாற்றப்படும்போதுதான் சாரணர் இயக்கத்தின் முதல் கொடி பறக்கவிடப்படும். எனக்குத் தகுதி இருக்கிறதோ இல்லையோ, தகுதி உள்ளவர்கள் எனக்கு வெள்ளியானை பரிசு அளித்துள்ளனர்.

யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்பார்கள். என்னைப் பொறுத்தவரை இருக்கும்போது என்ன விலை மறைந்த பிறகு என்ன விலை என்று தெரியாது. ஆனால், இந்த வெள்ளி யானையைத் தந்திருப்பதன் மூலமாக என் கடமைக்கு ஒரு பாலம் அமைத்து, நான் செல்லும் பாதையை எச்சரிக்கையாக, சரியாகச் செல்ல வேண்டும் என்று தரப்பட்டது என்று கருதுகிறேன். எனக்கு அளிக்கப்படும் பரிசுப் பொருட்களை உடனே சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்துவிடுவேன்.

ஆனால், இங்கு அளிக்கப்பட்ட வெள்ளி யானைப் பரிசை மட்டும் இன்னும் கழற்றவில்லை. இதனால் இதற்கு எவ்வளவு மரியாதை தருகிறேன் என்பதை அறியலாம். இதனால், மற்றவற்றிற்கு மரியாதை இல்லை என்று பொருள் அல்ல.

அறிவாற்றலும், கடமை ஆற்றலும் உணர்த்துவதால் இதனைப் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று அப்படியே வைத்துள்ளேன்.

திருமதி இலட்சுமி மஜூம்தார் தேசிய சாரணர் சாரணியர் அமைப்புக்கு இந்தியத் துணைக்கண்டம் முழுமைக்கும் 17 ஆண்டுகளாக ஆணையராக உள்ளார். இதனால், அவரது தகுதியை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

இங்கு குழந்தைகள் பற்றிக் கூற வேண்டும். இங்கே பல மொழிகள் பேசும் குழந்தைகள் வந்திருக்கிறீர்கள். மியூசிக் டைரக்டர் திரு. எம்.பி. சீனிவாசன் புகழ் பெற்ற தம் குழுவினருடன் தமிழ்ப் பாடல்களை இசைத்தபோது ரசித்தீர்கள். அவர் திறமைமிக்கவர் என்பது நிரூபிக்கப்பட்டது. பாரதியார் பாடல்களை இசையமைத்துப் பாடினார்கள். பாரதியார் எப்படிப்பட்ட கருத்துக்களைச் சொன்னார் என்பதை நினைத்துப் பார்த்து அவருக்கு ஆண்டு முழுவதும் விழாக்கள் நடக்கின்றன. இந்தியா முழுவதும் வெளிநாடுகளிலும் விழாக்கள் கொண்டாடப்படுவதைப் பார்க்கிறோம்.

இந்தியா ஒரு நாடு என்பதும், அனைவரும் ஒரு குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் உங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. நாம் அனைவரும் ஒருகுலம் என்பதைக்

காட்டும் வகையில் இங்கே பரவியுள்ளார்கள். இங்கே இளைஞர்களாக உள்ள நீங்கள் குறிப்பாக தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் சாரணர் இயக்கத்தில் 4 ஆண்டுக் காலத்தில் 70 ஆயிரத்திலிருந்து ஒன்றரை இலட்சம் பேராக உயர்ந்திருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். அது மட்டுமல்ல இந்தியா முழுமையும் கணக்கிட்டுப்பார்த்தால் 7 இலட்சம் பேர் உள்ளனர். இதில் இந்த ஒன்றரை இலட்சம் எந்த விகிதாச்சாரம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

இது பெருமைக்குரியது என்றாலும் அனைத்து மாநிலங்களிலும் இதைப் பின்பற்றவேண்டும் என்பதுதான் நம் ஆசையாகும். நடை, நடத்தை என்பதை நாம் பிரித்துப் பார்க்கக்கூடாது. நடைதான் நடத்தையாகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏனெனில் நடை ஒழுங்காக இல்லை என்றால் அவர் குடித்துவிட்டார் என்கிறோம். குடித்துவிட்டார் என்றால் நடத்தை கெட்டவர் என்கிறோம். அதுபோல, ஒழுங்காக நடைபோடுவதும் ஒழுங்காகப் பணியாற்றுவதும், நாட்டில் உள்ள அனைவருடைய இன்றியமையாத கடமை—பொறுப்பு என்பதை உணரவேண்டும்.

இன்னொன்றையும் சொல்கிறேன். நாம் பிறரைத்தான் விமர்சனம் செய்கிறோமே தவிர நம்மை அல்ல. தன்னைத்தானே விமர்சனம் செய்து கொள்வதில்லை. முதலில் நம்மைத் திறனாய்வு செய்த பின்னர்தான் மற்றவர்களைத் திறனாய்வு செய்யவேண்டும். அதுபோல நம்மை வலிவாக—உறுதியாக வைத்துக்கொண்டால் தான் மற்றவர்களுக்கு ஆலோசனை கூறமுடியும்.

ஓடுவதிலும், தாண்டுவதிலும், நீந்துவதிலும், எங்கு உதவி தேவையோ அங்கே உதவி தரும் வகையில் கயிற்றின் உதவியினால் பள்ளத்திலிருந்து மேலே வரவும், இங்கேயுள்ள சாரண சாரணியர் ஒவ்வொருவரும் பழக்கப்படுகிறீர்கள். உங்களை நான் பணிந்து கேட்டுக்கொள்வேன். எந்த வயதிலும் இந்தப் பயிற்சியை தேகப் பயிற்சியை நல்ல பழக்கத்தை கை விட்டு விடாதீர்கள் என்பதுதான். நான் இன்னொன்றையும் கூறுவேன். நாட்டு மக்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்த்தால் சாரணர் எண்ணிக்கை மிகவும் குறைவு. அதை அதிகப்படுத்த வேண்டும். ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள குழந்தைகள் அதில் ஈடுபட வேண்டும். அதனால்தான் நாங்கள் உதவி செய்கிறோம். இந்த எண்ணிக்கை வளர வேண்டும் என்பதுதான் என் ஆசை.

நாட்டைக் காப்பாற்ற வேண்டிய இளைஞர்கள் நல்ல கட்டுப்பாட்டுகளைக் கொண்டு விளங்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளைகளும் இரவில் படுக்கப்போகும் வரை காலை முதல் இரவு வரை என்ன செய்தோம் என்று எழுதி வைக்க வேண்டும்.

அன்று என்னென்ன செய்தோம் என்பது வேறு அல்ல; இப்படி பொறுப்புகளில் என்ன செய்தோம் என்பதைக் கோடிட்டு எழுத வேண்டும். உங்களுடைய செயலை மறுநாள் காலை படித்துப்பார்க்க வேண்டும். நேற்று செய்த தவறுகளைத் திருத்தி நன்மை செய்ய வேண்டிய அன்றைய தினத்தின் கடமையை நீங்களே அறிவீர்கள்.

நம்மைப் பெற்ற தாய் தந்தையரிடம் மட்டும் எந்தப் பொய்யும் சொல்லக்கூடாது. மற்றவர்களிடம் சொல்லலாமா என்றால், சில சமயங்களில் அந்த நிலை ஏற்படும். சமூகத்துக்கு விரோதமான காரியம் இல்லை என்றால் அதற்காக நாம் வெட்கப்பட வேண்டிய தேவையில்லை. சமூகத்தைக் காக்க இந்தப் பயிற்சி தொடர வேண்டும்.

அதனால்தான் இதை வளர்க்க என்னென்ன வசதிகள் கொடுக்கப்பட வேண்டுமோ அனைத்தையும் தமிழக அரசு கொடுக்கத் தயாராக உள்ளது. நீங்கள் தாயை–தந்தையை–ஆசானைக் கடவுளாக வணங்கியாக வேண்டும். ஆண்களுக்கு, பெண்கள் சரிநிகர் சமானமாக இருக்க வேண்டும் என்று பாரதி பாடினார். இங்கே இதை இளைஞர்களிடம் காணுகிறோம். சமத்துவம் என்பதற்கு முன்னால் உள்ளத்தில் சமநிலை ஏற்பட வேண்டும்.

ஒய்.எம்.சி.ஏ. திடலில் அந்த உறுதியைச் சமாளிக்க எத்தனை பேர் தயாராகிறார்கள் என்பதை அறிந்து அவர்களுக்குப் பயிற்சி தருபவர்களைப் பாராட்டுகிறேன்.

பெரியவர்கள் சொல்ல முடியாததை ஒரு மாமன்னன் இளம் வயதில் சொன்னான் என்று தமிழ் இலக்கியத்தில் சொல்லுவார்கள். அதுபோல் நீங்கள் அதிகமான பேர்களுக்கு, கல்லாத முதியோர்களுக்கு, கல்வி சொல்லிக்கொடுக்க வேண்டும்.

எனக்குத் தங்க யானை தர வேண்டும் என்று சிலம்புச் செல்வர் ம.பொ.சி. விரும்பினார். வேண்டுமானால் கிடைத்தால் போட்டுக் கொள்ளலாம். தமிழகத்தில் ஏழைக் குடிமக்களுக்கு இன்னும் தங்கத்தாலி கொடுக்க முடியவில்லை. அதை நினைவுப்படுத்தத்தான் வேறு வகையில் நினைவுபடுத்தினார் என்று நினைக்கிறேன். அவருக்குச் சொல்லிக்கொள்வேன். எங்களால் ஆன கடமையைச் செய்வோம். அதை அதிகப்படுத்துவோம். உருவத்தில் சிறிய – கருத்தில் பெரிய யானையைத் தந்தார்கள். துணிந்து சொல்லுங்கள் என்று சிலம்புச் செல்வர் ம.பொ.சி. கூறினார். அண்ணாவின் கொள்கைப்படி எங்கள் கடமையைத் தொடருவோம்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(21.02.1982 அன்று, சென்னையில் நடைபெற்ற 20ஆம் குடியரசுத் தலைவர் அணிவகுப்பு முகாம் நிறைவு நாளில் ஆற்றிய உரை)

கைத்தறித்தொழில் வாழவேண்டும்! வளரவேண்டும்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

சென்ற ஆண்டும் கைத்தறிப் பொருட்காட்சியைத் துவக்கி வைப்பதற்கு வாய்ப்புத் தந்தார்கள். இன்றும் அதே வாய்ப்பை எனக்குத் தந்திருக்கிறார்கள். எனக்கு முன்பு பேசியவர்கள் அனைவரும், இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு இதை அரசியல் கூட்டமாக மாற்றிவிடாமல், சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் சம்பந்தப்பட்ட விஷயங்களை மட்டும் எப்படிப் பேச வேண்டும் என்று எடுத்துக்காட்டும் வகையிலே பேசியமைக்கு நான் பாராட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு காரியம் ஏதாவது நடைபெற்றால் அதற்கு ஒரு காரணம் இருந்தாக வேண்டும். கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றால் அதை ஒட்டிப் பல்வேறு பிரச்சினைகளுக்கு உதவி செய்கிறோம் என்ற பெருமை அதனுடன் தொக்கி உள்ளது.

நாட்டில் விவசாயத்துக்கு அடுத்தபடியாக நிறையப் பேர் பங்கு கொள்வது நெசவுத்தொழில்தான். அதை எண்ணிப் பார்த்து, உதவி செய்ய வேண்டிய நிலையிலிருக்கிறார்கள் நெவாளர்கள் என்பதை எண்ணிப் பார்த்து கைத்தறித் துணிகளை வாங்கும் நல்ல உள்ளம் படைத்த உங்கள் முன்னர் பேசுகிறேன்.

நெசவாளர் பற்றிப் பேசுகின்ற நாம் அவர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையை எப்படிப் பெருமையாக எண்ணி வருகிறோம், என்பதை அவர்களுக்குச் செய்கின்ற உதவியிலிருந்து தெரிந்து கொள்ள முடியும். நெசவாளர்கள் வாழ்வில் கஷ்டம் இல்லையா? தொல்லை இல்லையா? சிக்கல் இல்லையா? வேலையைச் செய்த பின்னர் அவர்களால் நிம்மதியாக வாழ முடிகிறதா? என்றால் இல்லை என்ற பதிலே கிடைக்கும். நெசவாளர்களுக்கு ஏதாவது நன்மை செய்ய நினைக்கும்போது அதற்குக் காரணமான அமரர் அண்ணா அவர்களைத்தான் எடுத்துக் காட்ட வேண்டி வருகிறது. நான் முதலில் குறிப்பிட்டதுபோல எந்தக் காரியம் செய்தாலும் அதற்கு அடிப்படைக்காரணம் இருக்கிறது.

கைத்தறி நெசவாளர்களுக்குக் கடமை ஆற்றும்போது அமரர் அண்ணா அவர்கள் செய்த பணியை நினைத்துப் பார்ப்பது கடமை என்று குறிப்பிட விரும்புகிறேன். பல வருடங்களுக்கு முன்பு புயல் வந்தபோது, கைத்தறி நெசவாளர்கள் தொல்லைப்பட்ட நேரத்தில் 25 ஆயிரம் ரூபாய் நிதி சேர்த்தார். அவர்களுக்குப் பணமாகக் கொடுக்காமல் கைத்தறி ஆடைகளாக அளித்தார். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடித்ததுபோல், 25 ஆயிரம் ரூபாய்க்கும் கைத்தறி ஆடைகளை வாங்கி அந்த

மக்களுக்குக் கொடுத்தார். அன்பளிப்பாகக் கொடுக்காமல் கடமையாகக் கருதிக் கொடுத்தார். அதே முறையில் கடமையாற்றுகின்ற விதத்தில் நெசவாளர்களுக்கு காணிக்கை கொடுக்கமுடிகிறது என்றால் அது அண்ணா அவர்கள் சொல்லிக் கொடுத்த பாடம்தான்.

எந்தக் காரியம் செய்தாலும் பல்வேறு நன்மைகள் கிடைக்கும் வகையில் பணியாற்ற வேண்டும். சாயத் தொழிற்சாலை அமைக்கப்படுவது குறித்து இங்கே குறிப்பிட்டார்கள். அந்தத் தொழிற்சாலை மூலம் சாயம் மட்டும் கிடைக்கவில்லை. அதன் பின்னால் நூற்றுக்கணக்கான பேர் வேலை பெறுகிறார்கள்.

துணிகளை, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு பெட்டிகளைத் தயாரிக்கிறோம், பத்திரமாக அனுப்பி வைப்பதற்காக, அந்தப் பெட்டிகளை தமிழகத்தில் செய்ய முடியும். அந்த வேலையை ஊனமுற்றவர்களிடம் ஒப்படைத்தால் அவர்கள் வேலைவாய்ப்புப் பெற முடியும். ஊனமுற்றோர் நல்வாழ்வு பெற முடியும். தமிழ்நாடு அரசு எந்தத் திட்டத்தைத் தீட்டினாலும் அதன் அடிப்படையில் பல நோக்கங்கள் இருக்கின்றன என்பதைக் கூற விரும்புகிறேன்.

முன்பு, நெசவுத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் துன்பப்பட்டு சேலம் போன்ற இடங்களிலிருந்து சென்னை நோக்கியும் வேறு பல இடங்களுக்கும் சென்ற பழைய நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகின்றன. குடும்பம் குடும்பமாக குழந்தை குட்டிகளுடன் தெருத்தெருவாக வேலை தேடி அலைந்தார்கள் அவர்கள். அவர்களுக்கு என்ன வேலை தெரியும் ? கல் உடைக்கலாம்; மூட்டை சுமக்கலாம்; வீட்டு வேலை செய்யலாம். இவற்றைத் தவிர வேறு தொழில் செய்ய முடியுமா என்றால் முடியாது, அப்படியே முடியும் என்று வைத்துக்கொண்டாலும் படித்துப் பட்டம் பெற்றவர்களே வேலைக்கு அலையும்போது இவர்களுக்கு எப்படிக் கிடைக்கும் ? இன்று நெசவாளர்கள் நிலை உயர்ந்திருக்கிறது என்றாலும் அவர்களது தேவை எல்லாம் பூர்த்தி ஆகிவிட்டது என்று கூற முடியாது. இன்னும் அவர்களுக்கு நிறையச் செய்ய வேண்டியுள்ளது.

கைத்தறியாளர்களுக்கு முக்கியமாக மூலப்பொருள் நூல். பஞ்சு விலை ஏறினால் நூல்விலை ஏறுகிறது; பஞ்சு விலை இறங்கும்போது நூல்விலை இறங்குவதில்லை. இதற்கு யார் காரணம் ? இடையில் இருப்பவர்கள்தான். இதைத் தடுக்க நாங்கள் முயற்சி செய்து வருகிறோம்.

நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன் தமிழ்நாட்டில் 5 இலட்சத்து 56 ஆயிரம் கைத்தறிகள் இருந்தன. அவற்றில் 1இலட்சத்து 82 ஆயிரம் தறிகள் கூட்டுறவுத்துறையில் இருந்தன. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 32 இலட்சத்து 73 ஆயிரம் தறிகள் ஏற்பட்டுள்ளன. கூட்டுறவு நெசவாளர்கள் சங்கத்தில் உள்ள தொழிலாளி இறந்துவிட்டால் ரூ.3 ஆயிரம் கொடுக்கப்படுகிறது. இது எதிர்காலத்தில் 5 ஆயிரம் அல்லது 10ஆயிரம் ரூபாய் ஆக்கப்படலாம்.

1975–1976இல் கைத்தறி ஆடை கொள்முதல் ரூ.13.72 கோடி; 1981–1982இல் ரூ.37 கோடியாக உயர்ந்துள்ளது. 1977–1979இல் கைத்தறித் துணி உற்பத்தி 79.81 மில்லியன் மீட்டர் ஆகும். 1981–1982இல் அது 110 மில்லியனாக உயர்ந்துள்ளது.

ஆதிதிராவிட இனத்தவர்களுக்குக் கூட இந்தத் தொழில் கற்றுத்தரப்படுகிறது. எந்த ஜாதியினரும் எந்தத் தொழிலையும் செய்யலாம் என்ற நிலை தமிழகத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்ன தொழிலை இன்ன ஜாதியினர்தான் செய்ய வேண்டும் என்ற நிலை இருக்கக்கூடாது. முன்பு குலத்தொழில் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஜாதிப்பிரிவு தொழில்களை அடிமைப்படுத்தக் கூடாது. எனவே, ஆதிதிராவிட மக்களுக்குக் கைத்தறித் தொழிலில் வாய்ப்புத் தந்தால் அவர்களது வாழ்வு வளம்படும். அந்தச் சமுதாயம் மேன்மையுறும்.

இந்த நிலையை நாம் மாற்றாவிட்டால் எதிர்காலத்தில் போராட்டம் குறையாது, பூசல்கள் மறையாது.

கைத்தறியாளர்களுக்குப் போதுமான அளவு பணிகளைத் தமிழக அரசு ஆற்றி வருகிறது; ஆதரவு தருகிறது. காரணம் அவர்களுக்கு ஊக்கம் தருவதற்காக நல்லவற்றைச் செய்ய வேண்டும் என்பதற்காக நாம் செய்து தரும் வசதிகள் போதவில்லை என்றால் எதிர்ப்புக் குரல் கொடுங்கள்; தவறுகளைச் சுட்டிக் காட்டுங்கள், அதைத் திருத்த முயற்சிக்கிறோம்.

எட்டயபுரத்தில் 12 ஆயிரம் கதிர்கள் உள்ள நூற்பு ஆலையை உருவாக்குகிறோம் என்றால் அது பாரதி நூற்றாண்டுக்காக மட்டுமல்ல. அது பின்தங்கிய பகுதியின் தேவையைப் பூர்த்தி செய்வதாகவும் அமையும் என்பதால் அதைச் செயல்படுத்த இருக்கிறோம்.

கடந்த 34 ஆண்டு சுதந்திர ஆட்சியில் நிறைவேற்றிய திட்டங்களையும் எங்களது நான்கரை ஆண்டு ஆட்சியில் நிறைவேறிய திட்டங்களையும் புள்ளி விவரமாகத் தயாரிக்கும்படி நான் கூறியுள்ளேன். கடந்த 30 ஆண்டுகளில் கிடைத்த வேலைவாய்ப்புகளை விட இந்த நான்கரை ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அதிகம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் புதுவிதமான கண்ணைக் கவரத்தக்க வகையில் மட்டுமல்ல – நீண்ட காலம் பயன்படும் வகையில் துணிகளைத் தயாரிக்கிறார்கள். கைத்தறி ஆடைத் தயாரிப்பில் உறுதியான சீக்கிரம் சாயம் விலகிப் போகாத தன்மை இருக்க வேண்டும். அத்தகைய ஆடைகளை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் தட்டுப்பாடின்றிக் கிடைக்க விரைவில் மூலப்பொருள் வங்கி ஒன்றை அமைக்க இருக்கிறோம்.

இதற்கென ஒரு வாரியத்தை உருவாக்க இருக்கிறோம்.

அதன் வாயிலாக கைத்தறித் தொழில் வளர்ச்சிடையும்; பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

கைத்தறித் தொழில் இன்ன ஜாதியினருக்குத் தான் உரியது என்று நிலை இருக்கக்கூடாது. எங்கள் குலத்தொழில் என்ற நிலை எவருக்கும் இருக்கக் கூடாது. ஏற்ற தொழிலை எவரும் செய்யலாம். அந்த விதத்திலே கைத்தறித் தொழில் வாழவேண்டும்; வளர வேண்டும்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

❖ ❖ ❖

(09.04.1982 அன்று, அகில இந்திய கைத்தறி பொருட்காட்சியை துவக்கி வைத்து ஆற்றிய உரை)

வேர் நிலைத்தால்தான் மரம் நன்கு வளரும்

பாவேந்தர் பல்கலைக்கழகம் தமிழக மக்களின் ஆசியுடன் இன்று தொடங்கப்படுகிறது. ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க தாய் என்னென்ன சிரமப்படுவாளோ அதைப் போல, தமிழக அரசு, தமிழக மக்களின் ஆதரவில், தொல்லைகளை எல்லாமல் மறந்து இதுபோன்ற நல்ல நிகழ்ச்சிகளை நிறைவேற்றி வருகிறது. நேற்றும் இன்றும் நடைபெறுகிற நிகழ்ச்சிகளைக் கண்டு மக்கள் என்ன நினைப்பார்கள் என்று என்னால் நிச்சயமாக எண்ணிப் பார்க்க முடிகிறது. நாட்டுக்கு என்னென்ன நல்ல பயனுள்ள பணிகளைச் செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்கிறோம் என்பதைத் தமிழக மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

பெண்களுக்காகத் தனிப் பல்கலைக்கழகம் தொடங்க உறுதி பூண்டு அதனைக் கொடைக்கானலில் தொடங்க இருக்கிறோம். கொடைக்கானலில் தொடங்குவதற்கு முக்கியமான காரணம் உண்டு. வேறு இடம் இல்லையா என்று சிலர் கேட்கலாம். இந்தியத் துணை கண்டத்துடன் மட்டும் நின்றுவிடப் போவதில்லை அந்தப் பல்கலைக்கழகம். உலகளாவிய அளவில் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ள விரும்பும் வகையில், உலக மக்கள் எல்லாம் தொடர்பு கொள்ளும் பல்கலைக்கழகமாக அது உருவாக வேண்டும் என்பதால் அதனைக் கொடைக்கானலில் உருவாக்க விரும்புகிறோம்.

அடுத்த ஆண்டிலாவது காரைக்குடியில் பல்கலைக்கழகம் தொடங்க வேண்டும் என்ற நீண்டநாள் வேட்கை நிறைவேறும் என எண்ணுகிறேன். அதுபோல நெல்லை மாவட்டத்திலும் சேலம் மாவட்டத்திலும் பல்கலைக்கழகங்கள் தொடங்க வேண்டும் என்னும் தீராத வேட்கையை நிச்சயம் நிறைவேற்றி ஆக வேண்டும் என்ற உறுதியைக் கொண்டிருக்கிறோம்.

மாணவர்களைவிட மாணவியர் அக்கறையோடு படிக்க முயல்கிறார்கள். அவர்களது எண்ணிக்கை நாளுக்குநாள் பெருகி வருகிறது. நான் எனது கடமைகளை விரைவாகச் செய்ய வேண்டும் என்று கருதுகிறேன். என்னை முதல்வராக ஏற்று ஆட்சியை அமைக்கச் செய்த மக்களை ஏமாற்றாமல் என் கடமைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும். இந்தத் திடலில் பந்தல் போடலாம் என்று சொல்லப்பட்டது. அந்தச் செலவு தேவையில்லை, வெட்ட வெளியில் வெயில் இல்லாத நேரத்தில் விழா நடத்துவோம். காற்றும் வரும். வெயில் நேரத்து நிகழ்ச்சிகளை தியாகராாசபாகவதர் அரங்கில் நடத்திக் கொள்வோம் என்று நான் சொல்லி அவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டது. இதனால் பல இலட்சம் மக்கள் பகல் நேரத்து நிகழ்ச்சிகளைக் காணும் வாய்ப்பை இழந்து விட்டார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திருச்சி, பொன்மலை, ஸ்ரீரங்கம் குடிநீர் சாலை, மின் வசதிக்காக 70 இலட்சம் ரூபாய் அரசு அனுமதி அளித்துள்ளது. கிராமப்புறங்களில் மின்சாரம் கிடைக்கத் தடை ஏற்பட்டால் அதற்குச் சரியான காரணங்களைக் கேட்க அதிகாரிகளைச் சென்னையிலிருந்து அனுப்பி, கிராம மக்களிடம் நேரில் கேட்டறிய இருக்கிறேன்.

100 கோடி ரூபாய்க்கு பள்ளிச் சிறுவர்களுக்கு இலவச மதிய உணவு அளிக்கப்படும் திட்டத்தை இன்று இந்தியாவே கவனித்து வருகிறது. அதனை நகல் எடுத்து மத்திய அரசுக்கு அனுப்பிவையுங்கள் என்று மேதகு ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

குழந்தைப் பருவத்திலிருந்தே பண்பு வளரவேண்டும் என்பதற்குத்தான் இது போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. என் பெயரில் உள்ள பள்ளிக் கூடத்தில் பல்லாண்டுகளுக்கு முன்பேயே சீருடைத் திட்டத்தை அறிமுகப்படுத்த எண்ணினேன். ஒரு குழந்தை சில்க் சட்டையும், மற்றொரு குழந்தை சாதாரண சட்டையும் அணியும் போது சில்க் சட்டையைத் தொட்டுப் பார்த்து அதன் மென்மையை, பளபளப்பை உணர்ந்து அதுபோன்ற சட்டை வேண்டும் என்று அந்தக் குழந்தை தன் பெற்றோர்களைக் கேட்கும் போது "அவர்கள் பணக்காரர்கள், நாம் ஏழைகள்", என்று தாய் தந்தையர் சொல்லும் பதிலிலிருந்து ஏழை பணக்காரர் என்ற வேற்றுமை சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகிறது. வேற்றுமை உணர்வை குழந்தை உள்ளத்தில் அப்போதே ஏற்படுத்தி விடுகிறோம். ஆனால், சீருடை என்றால் வித்தியாசமான உணர்வு வருவதில்லை.

நல்ல பணிகளுக்கு நாம் செலவு செய்ய தாராளமாக முன்வரவேண்டும். 2 அல்லது 3 கட்சிகள் சேர்ந்து ஆட்சியை அமைத்திருந்தால் எப்படிப்பட்ட நிலை வந்திருக்கும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். பல்கலைக் கழகத்திற்கு பாரதிதாசன் பெயரை வைக்க வேண்டும் என்று சொல்ல, மற்றொருவர் 'வேண்டாம்' என்று சொன்னால், என்ன ஆகும்?

பல்கலைக் கழகங்களை அமைப்பது மட்டுமல்ல, அங்கே மாணவர்கள் எப்படி வளரவேண்டும் என்ற திட்டத்தையும் நாம் மேற்கொள்ள வேண்டும். நமது தமிழ்நாட்டில் 2 பேர்தான் கல்லூரிக்குச் செல்கிறார்கள் என்ற நிலை இருக்கிறது. கேரளத்தில் மிக அதிகமான அளவில் செல்கிறார்கள். நம்மை விடச் சிறிய மாநிலமான கேரளம், கல்வியில் மிகவும் முன்னேறியிருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். கல்விக்கு நாம் செலவிடும் தொகை விழலுக்கு இறைத்த நீராகிவிடக் கூடாது. இன்று காலையில் பல்கலைக் கழக வளாகத்தில் மாணவ, மாணவியர் உற்சாகத்துடன் மரம் நடும் பணியில் ஈடுபட்டனர். அதனைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

15 ஆண்டுகளுக்குப் பிறகு 1 கோடி மரம் வளர்க்கப்பட்டுவிட்டால் திருச்சி மாவட்டம் எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நான் ஒரு ஓவியனாக

இருந்தால் படம் தீட்டியும் காட்ட முடியும். அந்த மரங்களின் உதவியினால் எவ்வளவு மழை கிடைக்கும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இன்று உழைப்பவர்கள், நாளைய எதிர்காலத்திற்கு வழிகாட்ட முடியும். நான் 3ஆவது வரைதான் படித்தேன்; மேற்கொண்டு படிக்க வழியில்லை. இன்று படிப்பு உங்களைத் தேடி வருகிறது. நான் வேலைக்குப் போக நினைத்தேன். வறுமையின் காரணமாக முடியவில்லை; இன்று நீங்கள் தொழில் தொடங்க அரசு உதவி தருகிறது. அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தங்களது குழந்தைகளை நன்கு வளர்த்து நிறைய மதிப்பெண்களை அவர்கள் வாங்குவதற்குப் பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டும். தாய்மார்கள் அந்தத் தொண்டினைச் செய்ய வேண்டும். அதற்கு உதவியாக நாங்கள் இருக்கிறோம். வேர் நிலைத்தால்தான் மரம் நன்றாக இருக்க முடியும். அரசு, தனிப்பட்டவர்கள் அமைப்பு எல்லாம் ஒன்று கூடி இந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

அண்ணா நாமம் வாழ்க!

(30.04.1982 அன்று, திருச்சியில் இராணுவத் திடலில் நடைபெற்ற பாரதிதாசன் பல்கலைக்கழகத் தொடக்க விழாவில் ஆற்றிய உரை)

தேசிய ஒருமைப்பாட்டுக்கு இலக்கணம்!

(மாமல்லபுரத்தில், கவின்மிகு கடற்கரைக்கோயில் அருகே, 12 இலட்சம் ரூபாய் செலவில் ‘சுற்றுலாப் பயணியர் முகாம்’ ஒன்று 10 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழாவும், திறந்தவெளி அருங்காட்சியகத்திற்கான கால்கோள் விழாவும் அண்மையில் (30.05.1982) சிறப்புற நடைபெற்றன.

12 தனிக்குடில்கள், 40 படுக்கைகள் கொண்ட இளைஞர்கள் முகாம், 8 துணிக் கூடாரங்கள், சிற்றுண்டி விடுதி ஆகியவை இதில் அடங்கும். சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பத்தாண்டு நிறைவையொட்டி, சிறப்புறப் பணிபுரிந்த 59 பேர்களுக்குக் கைக் கடிகாரம் வழங்கியும், டிராவல் ஏஜென்சியைச் சேர்ந்தவர்களுக்குக் கேடயம் வழங்கியும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பேசியபோது குறிப்பிட்டதாவது.)

இந்த ஊரை மகாபலிபுரம் என்று சிலர் குறிப்பிடுகிறார்கள். அது தவறு. மாமல்லபுரம் என்பது தான் சரி. மகாபலிபுரம் என்றால் மகாபலி சக்ரவர்த்தியைக் குறிப்பிடுவது ஆகிவிடுமே தவிர, மாமல்லனைப் பற்றிய நினைவு வராமல் போய்விடும். ஆகவே, இனியாவது மாமல்லபுரம் என்றே அழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே ஏழரை ரூபாய் வாடகையில் பயணிகள் தங்க விடுதி கட்டப்பட்டுள்ளது. ஏழை, எளிய மக்கள் நலன் கருதியே இவ்வாறு செய்திருக்கிறோம். எந்த மாநிலத்திலிருந்து வந்தாலும் இந்த விடுதியில் தங்கிப் பயனடையலாம். இப்படிச் செய்திருப்பது தேசிய ஒருமைப்பாட்டுக்கு இலக்கணம் வகுத்ததாகும்.

இங்கே 25 ஏக்கர் நிலப்பரப்பில், 50 இலட்சம் ரூபாய் செலவில் அருங்காட்சியகம் ஒன்று இன்னும் சில ஆண்டுகளுக்குள் அமைக்கப்படவிருக்கிறது. இந்தக் காட்சியகத்தில் தமிழ்ப் பண்பாடு, கலை, கலாச்சாரம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் 50 சிற்பங்கள் இடம்பெறும். மாமல்லபுரத்தில் மேற்கொள்ளப்படும் பலவகைப்பட்ட திட்டங்கள் காரணமாக நாம் பாதிக்கப்படுவோமோ என்று இங்கிருப்பவர்கள் அஞ்சத் தேவையில்லை.

முன்பு சென்னையில் உலகத்தமிழ் மாநாடு நடந்த நேரத்தில் அமரர் அண்ணா அவர்கள், பூம்புகாரில் இருந்ததாமே அதைப்போலவே சென்னையிலிருந்து, மாமல்லபுரம் வரை, வழி நெடுகிலும் கடைகள் அங்காடிகள் அமைக்க முடியுமா என்று என்னிடம் கேட்டார்கள். பிறகு அதுபற்றி யோசித்தபோது, அதற்குப் பலகோடி ரூபாய்கள் தேவைப்படும் என்பதால் அத்துடன் நிறுத்தப்பட்டுவிட்டது.

அப்படிப்பட்ட திட்டத்தின் முதற்கட்டமே இந்தப்பணி. எந்த நாட்டிலிருந்தெல்லாமோ வருகிறவர்களுக்கு, எல்லாப் பொருட்களும் கிடைக்கும் விதத்தில் வழி நெடுகிலும், இருபுறங்களிலும் கடைகள் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு என்ற பெயர் வெளிநாடுகளிலெல்லாம் இன்னும் நல்ல முறையில் விளம்பரப்படுத்தப்பட வேண்டியுள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாகப் பல்வேறு புதிய விமானப் போக்குவரத்துக்களைத் தமிழ்நாட்டில் ஏற்படுத்தவிருப்பதாக மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழகம் என் இதயத்தின் அருகே இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதற்காக, அவர்களுக்குத் தமிழக அரசின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

(30.05.1982 அன்று, சென்னை மாமல்லபுரத்தில் நடைபெற்ற இளைஞர் முகாம் திறப்பு விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரை)

பழைய மதிய உணவுத்திட்டத்திற்கும், புதிய சத்துணவுத் திட்டத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன ?

எனது வணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புகளே, உங்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கம்.

தமிழ்நாட்டில் பட்டினியால் வாடும் ஏழைக் குழந்தைகளின் ஒரு வேளைப் பசியைப் போக்கும் திட்டத்தைப் பற்றி உங்களிடையே நான் பேச வந்திருக்கிறேன்.

“அன்னக் குவளையில்தான் இறைவன் ஏழைக்குக் காட்சி அளிக்கிறான்” என்று அண்ணல் காந்தி அவர்கள் கூறியுள்ளார்கள்.

“ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன்” என்று அமரர் அண்ணா சொன்னார்கள். “உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராது இயல்வது நாடு” என்பது வள்ளுவரின் வேதவாக்கு. 70 கோடி என்ற எண்ணிக்கை அளவை எட்டிக் கொண்டிருக்கும் இந்திய நாட்டின் மக்கள் பெருக்கம் ஒருபுறம். மீளமுடியாத வறுமையின் பயங்கரக் கொடுமை மறுபுறம், இவ்விரண்டு சூழலில் பிறந்துள்ள குழந்தைகள் ஒட்டிய வயிற்றோடும், உலர்ந்த உதடுகளோடும், இடுங்கிய கண்களோடும் இளைத்த மேனியோடும் இருக்கும் அவலநிலையை நமது நாட்டு மருத்துவர்கள் பலமுறை வேதனையோடு சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

“கொடிது கொடிது வறுமை கொடிது, அதனினும் கொடிது இளமையில் வறுமை.” ஆம்; பசித்தால் அழ மட்டுமே தெரிந்த வயதில் பசிக்கொடுமைக்காளாகும் அனுபவத்தை நான் இளமையில் அறிந்ததன் விளைவே இத்திட்டம். பக்கத்து வீட்டில் இருந்த ஒரு தாய் முறத்தில் அரிசியைத் தந்து கஞ்சி காய்ச்சிக் குடிக்க எங்களுக்கு உதவியிருக்காவிடில் மூன்று நாட்களாகப் பட்டினியாகக் கிடந்த எங்கள் தாயும் நாங்களும் என்றோ இந்த உலகை விட்டுப் போயிருப்போம். அத்தகைய தாய்க்குலம் முழு நம்பிக்கையோடு என்னை முதலமைச்சராக்கியுள்ளது.

அந்தக் தாய்க்குலத்தின் கண்ணீரைத் துடைக்க எனக்குத் தெரிந்த வழியில் இப்பணியை மேற்கொண்டுள்ளேன்.

ஏழ்மை நிலையில் தவித்துக் கொண்டிருக்கும் பல குடும்பங்களில் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பிசைந்து ஊட்டுவதற்கு சோறு இல்லாமல் கைபிசைந்து, நிற்கும் அவல நிலையைப் போக்கச் சிறிதேனும் முயற்சி செய்வது எனது அவசர, அவசியக் கடமை என்பதை உணர்ந்தேன். இந்த அடிப்படையில்தான், 2 முதல் 10 வயது வரை ஏழைக் குழந்தைகளுக்கு மதியம் ஒரு வேளையாவது சத்துணவு கிடைப்பதற்கு வகை செய்ய ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. 1982 ஜூலைத் திங்கள் முதல்கொண்டு, தமிழ்நாடு முழுவதிலுமுள்ள, ஒருவேளை

உணவிற்கும் வழியின்றித் தவிக்கும் ஏழ்மையில் வாடும் குழந்தைகளுக்கு மதிய உணவு இலவசமாக வழங்க இத்திட்டம் வகை செய்யும்.

தமிழ்நாட்டின் மொத்த மக்கள்தொகை 1981ஆம் ஆண்டு கணக்கின்படி 4.82 கோடியாகும். இதில் 2 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 42.10 இலட்சம். 5 முதல் 10 வயது வரையுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 63.73 இலட்சமாகும். ஆக 2 முதல் 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை மொத்தம் 105.83 இலட்சமாகும். ஏழ்மைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குழந்தைகளுக்கு இந்த இலவச உணவு அளிக்கப்பட வேண்டுமென்று திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் ஏறத்தாழ 60 இலட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தின் பயனைப் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2 முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இந்த உணவுத்திட்டம். தற்போது சமூக நலத்துறை இயக்கி வரும் குழந்தைகள் காப்பகங்கள் மூலம் செயல்படுத்தப்படும். 5 முதல் 9 வயதுள்ள குழந்தைகளைப் பொறுத்தவரை இத்திட்டம் பள்ளிகளில் செயல்படுத்தப்படும். இந்த இரண்டு அம்சங்களுக்கும் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களே முழுப் பொறுப்பையும் ஏற்பார்கள். அவர்களுடைய மேற்பார்வையில் தான், திட்டத்தின் இரு கூறுகளும் செயல்படும். மாநில அளவில் அமைச்சரவையில் இத்திட்டத்தை நேரடியாகக் கண்காணிக்கும் பொறுப்பை நானே ஏற்றுக்கொண்டுள்ளேன். இப்பொறுப்பில் எனக்கு உதவிசெய்ய சில அமைச்சர்களையும், அதிகார சார்பற்ற வல்லுநர்கள் சிலரையும், அதிகாரிகள் சிலரையும் கொண்ட ஓர் உயர்மட்டக் குழு மாநில அளவில் அமைக்கப்பட்டுள்ளது.

சமூகநலத்துறை ஏற்கெனவே 4,343 குழந்தைகள் காப்பகங்களை மாநிலம் முழுவதும் நடத்தி வருகின்றது. இப்போது இப்புதிய திட்டத்தை மாநிலம் முழுவதும் செயல்படுத்துவதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் ஓர் உணவு மையம் இயங்க வேண்டும் என்ற அடிப்படையில் இதுவரை இயங்கி வந்த குழந்தைகள் காப்பகங்களுக்கு மேலாக 15,501 புதிய குழந்தைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றிலும் குழந்தைகளுக்கு அடிப்படைக்கல்வி புகட்டுவதற்கும் உணவோடு உணர்வையும், அறிவையும் ஊட்டுவதற்கு குழந்தைநல அதிகாரி பொறுப்பில் ஒரு பெண் நியமிக்கப்பட்டுள்ளார். பத்தாவது வகுப்புப் படித்து அதில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், என்றும் உள்ளூரைச் சேர்ந்தவராக அப்பெண் இருக்க வேண்டும் என்றும், விதவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் தகுதிநிர்ணயிக்கப்பட்டு அவர்கள் அதிகாரிகளாலும், அதிகார சார்பற்ற உள்ளூர்ப் பிரமுகர்களின் சிலரின் ஆலோசனையின் அடிப்படையிலும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இத்தேர்வுப்பணி முடிந்து இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஜுலை முதல் தேதியில் இருந்து இந்தக் குழந்தைகள் காப்பகங்களில் பொறுப்பேற்க இவர்கள் ஆயத்தநிலையில் உள்ளனர்.

ஐந்துக்கு மேற்பட்டு பத்துக்கு உட்பட்ட வயதுத் தொகுதியைச் சேர்ந்த குழந்தைகளைப் பொறுத்தவரை தமிழ்நாட்டிலுள்ள 36 ஆயிரம் ஆரம்பப் பள்ளிகளின் மூலம் மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பள்ளிகளைப் பொறுத்தவரை, சென்ற சில ஆண்டுகளாக மதிய உணவுத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆனால், அத்திட்டம் செயல்பட்டு வந்த முறைக்கும், இப்போது செயல்படுத்தப்பட இருக்கும் மதிய உணவுத் திட்டத்தின் முறைக்கும் அடிப்படையிலேயே மிகப்பெரிய வேறுபாடு உள்ளது.

பழைய திட்டம் பள்ளியில் பயின்று வந்த மாணவர்களில் மூன்றில் ஒரு பங்கு மாணவர்களுக்குத்தான் பயனளித்து வந்தது. புதிய திட்டம் பள்ளியில் உள்ள ஏழைக் குழந்தைகள் அனைவருக்கும் பயன்தரும். பழைய திட்டத்தின்படி ஆண்டுக்கு 200 நாட்களுக்கு மட்டும்தான் பள்ளியில் உணவு அளிக்கப்பட்டு வந்தது. புதிய திட்டத்தின்படி ஆண்டின் 365 நாட்களிலும் மதிய உணவு வழங்கப்படும். பழைய திட்டத்துக்கு அரசு ஒவ்வொரு குழந்தைக்கு 10 காசு வீதம் செலவு செய்து வந்தது. ஒவ்வொரு ஒன்றியமும் ஒரு குழந்தைக்கு 5 காசு வழங்க வேண்டும் என்ற முறை இருந்தது.

ஆனால், பொருளாதார நெருக்கடியின் காரணமாக பல ஒன்றியங்கள் இந்தத் தொகையை வழங்க இயலவில்லை. ஆகவே, அரசு அளித்த 10 காசுகளைக் கொண்டும், உள்ளூர்வாசிகளின் உதவியுடனும் தான் பழைய திட்டம் செயல்பட வேண்டி இருந்தது.

புதிய திட்டத்திலோ, மதிய உணவு ஒன்றுக்கு ஆகும் 45 காசு செலவு முழுவதையும் அரசே நேரடியாகத் தந்துவிடுகிறது.

ஆகவே, பொதுமக்களிடமிருந்து பணத்தை வசூலித்து இத்திட்டதை நடத்தும் நிர்பந்தத்திற்கு இப்போது ஆசிரியர்கள் யாரும் ஆளாக வேண்டிய அவசியமில்லை. மேலும், பழைய திட்டத்தின்படி, பல பள்ளிகளில் ஆசிரியர்களே சமையல் பொறுப்பை ஏற்க வேண்டிய நிலை இருந்தது. புதிய திட்டத்தின்படி ஒவ்வொரு பள்ளியிலும், சமையல்காரர் ஒருவரும் அவருக்கு உதவியாகச் சிற்றால் ஒருவரும் நியமிக்கப்பட திட்டத்திலேயே வசதி செய்யப்பட்டு இச்செலவுகளையும் அரசே ஏற்க முன்வந்துள்ளது.

ஒரே வகையான உணவை தினந்தோறும் உட்கொள்வதால் குழந்தைகளுக்கு சலிப்பு ஏற்பட்டுவிடக் கூடாதென்பதைக் கருதி, கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு 28 உணவு வகைகளைத் தயாரிப்பதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவ்வாறு தயாரித்து வழங்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 20,000 குழந்தைகள் காப்பகங்கள் மூலமாக, 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட 2 முதல் 5 வயதுத் தொகுதியைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் 36,000 பள்ளிகள் மூலமாக 5 முதல் 10 வயதுத் தொகுதியைச் சேர்ந்த ஏறத்தாழ 40 இலட்சம் குழந்தைகளுக்கும் உணவு அளிக்கும் இந்த மாபெரும் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு, ஆழ்ந்த ஆய்வுக்கும்,

ஆலோசனைக்கும் பின்பு அவசியமான ஆயத்தங்கள் எல்லாம் ஆற்றல்மிக்க வகையில் செய்யப்பட்டுள்ளன.

திட்டம் செயல்படுவதைக் கண்காணிப்பதற்கு அரசுக்கு உள்ளூர் மட்டத்தில் அதிகாரிகளுக்கும் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள் கூறுவதற்கும், உயர்மட்டக் குழுவைத் தவிர, உள்ளூர் குழுக்களை பொதுச்சேவையில் ஆர்வமுள்ள பெரியவர்களையும், குறிப்பாகப் பெண்களையும் கொண்டு அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டு. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைக்கவிருக்கும் குழுவில் பொதுமக்கள் பிரதிநிதிகளும் இடம் பெறுவார்கள்.

இத்திட்டத்தின் குறிக்கோள் உன்னதமானது, உயர்ந்தது என்று அனைவரும் ஏற்றுக் கொண்ட போதிலும் திட்டம் செயல்படும் விதத்தில் கவனமாக இருக்கவேண்டுமென அரசு கருதுகிறது. ஆங்காங்கு உள்ள நிலைமையை ஆய்ந்து அறியவும், உடனுக்குடன் குறைகளைக் களைந்து, நிலைமையைச் சீர்செய்யவும் ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ள குழுவில் பொதுமக்களும், குறிப்பாக தாய்மார்களும் இடம் பெறுவார்கள்.

இத்திட்டத்தின் பயனாகப் பல இலட்சக்கணக்கான ஏழைக் குழந்தைகளுக்கு ஒரு வேளையாவது சத்துணவு கிடைப்பதை நாம் உறுதிப்படுத்துவதோடு, அந்தக் குழந்தைகளைச் சார்ந்த குடும்பங்களுக்கு இதன் மூலம் மிகப்பெரிய சுமை குறைக்கப்படுகிறது.

இது தவிர, இத்திட்டத்தின் கீழ் புதிதாக கிராமப் பகுதிகளில் 13,500க்கும் மேற்பட்ட குழந்தைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டுள்ளதால், 15,500 குழந்தைகள் நல அதிகாரிகள் நியமிக்கப்படுவதுடன் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள ஒவ்வொரு காப்பகத்திலும் இரண்டு உதவியாளர்கள் வீதமும் ஏற்கெனவே இயங்கிவரும் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதலாக ஒரு உதவியாளர் வீதமும் ஏறத்தாழ 40 ஆயிரம் பெண் உதவியாளர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர 36 ஆயிரம் பள்ளிகளிலும், 36 ஆயிரம் சமையல்காரர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

அதிலும், குறிப்பாக ஏழைத் தாய்மார்களுக்கு வேலைவாய்ப்புகள் கிட்டியுள்ளது சிறப்பான அம்சமாகும்.

இதைவெறும் உணவூட்டும் திட்டமாக மட்டும் நான் வகுக்கவில்லை. சாதி, சமய வேறுபாடின்றி இளமைப் பருவத்திலிருந்தே குழந்தைகள் பழகிப் படித்து உண்டு வளரும் நிலையை உருவாக்குகிறோம்.

சமுதாயத்தில் முற்போக்கான மாறுதல் மலரக்கூடிய வாய்ப்பு இதனால் ஏற்படும். குழந்தைகள் காப்பகங்கள் மூலம் சுத்த சுகாதாரப் பழக்கங்களும், நல்லொழுக்கமும் ஒருமைப்பாட்டுணர்வும், கட்டுப்பாட்டுணர்வும் அவர்களுக்கிடையே வளர்க்கப்படும். கிராமப்புறங்களில் தாய்மார்களுக்கென கழிப்பிடங்கள் கட்ட தனியாக ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்தக் கழிப்பிடங்கள் இச்சிறு பிள்ளைகளுக்கு பயன்பட

வேண்டும் என்பது எங்கள் எண்ணம். கழிவுப் பொருள்களில் இருந்து எரிபொருளையும், எருவையும் உருவாக்குவதும் இத்திட்டத்தின் தொடர்ச்சியாகும்.

கழிப்பிடங்களைப் பயன்படுத்தும் சுகாதாரப் பழக்கத்தினை இளம் வயதிலேயே நிலைநாட்ட இது பயன்படும். இந்த உணவுக்கூடங்களில் ஒவ்வொரு குழந்தைக்கும் பயன்படுத்துவதற்காக தனியாக தட்டு, குவளை போன்றவையும் அரசு செலவில் வழங்கப்பட இருக்கின்றன. இதன்மூலம் தங்களது தட்டு குவளைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ள குழந்தைகளுக்குக் கற்றுத்தரப்படும். இந்தக் கூடங்களில் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருக்கவும், வசதியுள்ள இடங்களில் காய்கறி கீரை முதலியவற்றை உற்பத்தி செய்யவும் குழந்தைகளுக்கு ஊக்கம் அளிக்கப்படும்.

இவ்வாறு குழந்தைகளின் உடல் உறுதியையும் உள்ளம் செம்மையையும், பேணி, போற்றி பாதுகாக்கும் வகையிலும், ஊருக்கு நல்லது செய்யும் உணர்வை இளம் வயதிலிருந்தே அவர்களுக்குப் போதிக்கும் வகையிலும் கிராமப்புறச் சமுதாயத்திலே ஒரு புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தவும் இத்திட்டத்தினை ஒட்டிய நடவடிக்கைகள் அமைக்க வேண்டும் என்பதே எங்கள் விருப்பமும், வேட்கையுமாகும்.

இப்போது மதிப்பிட்டுள்ளபடி ரூ.100 கோடிக்கு மேல் இத்திட்டத்தினால் அரசுக்கு நிதி பொறுப்பு ஏற்படும். போகப் போக இச்செலவு அதிகரிக்கவும் நேரிடலாம். நெருக்கடியான இந்நிலமையிலும் இவ்வளவு பெரும் பொறுப்பை மாநில அரசு தாமாகவே ஏற்றுக் கொள்ள முன்வந்துள்ளது என்றால், இத்திட்டத்தினால் மக்களுக்கு ஏற்படக்கூடிய மகத்தான நன்மையில் அரசுக்குள்ள ஆழ்ந்த நம்பிக்கையே காரணமாகும்.

இப்பெரும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ளும் நேரத்தில் இதை வெற்றிகரமாக நடத்திக் கொடுப்பதில், பொதுமக்களும், சேவை உணர்வு கொண்டவர்களும், பண வசதி படைத்தவர்களும் அரசுக்கு உறுதுணையாக நின்று ஒத்துழைப்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறங்களில் இந்த உணவுக்கூடங்களைக் கட்டுவதற்கு ஒவ்வொன்றிற்கும் 38 ஆயிரம் ரூபாய் மதிப்பிடப்பட்டு அந்த அடிப்படையில் வரை படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. பொதுநலனில் அக்கறை கொண்ட ஒருசில பெரியோர்கள் தங்கள் சொந்தச் சார்பிலும் தங்கள் நிறுவனங்கள் சார்பிலும் ஒவ்வொருவரும் நான்கு அல்லது ஐந்து கூடங்கள் கட்டுவதற்குத் தாமாகவே முன்வந்துள்ளது என்பது எங்களுக்குப் பெரிதும் ஊக்கமும் உற்சாகமும் அளிக்கிறது.

குறிப்பாக, இப்போதைய சென்னை ஷெரீப் சிவந்தி ஆதித்தன் அவர்கள், செட்டிநாட்டரசர் அவர்கள், சேஷசாயி விசுவநாதன் அவர்கள், எம்.ஏ.எம் ராமசாமி அவர்கள், எஸ்.எஸ்.எம். சவுண்டப்பன் அவர்கள், ஏ.சி.முத்தையா போன்றோர்களும் பல்வேறு நிறுவனங்களும், தனிப்பட்டவர்களும் உதவ முன்வந்துள்ளனர். இவர்களுக்கெல்லாம் தமிழக அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகத்தின் சார்பிலும் தமிழக அரசின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிறுவனங்களும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு

உதவ முன்வருபவர்கள் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர்களுடனும் மாநில அளவில் இத்திட்டத்திற்கென பொதுத்துறையில் நியமிக்கப்பட்டுள்ள தனி அதிகாரிகளுடனும் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அளிக்கப்படும் நன்கொடைகளுக்கு வருமானவரியிலிருந்து விலக்குப் பெற வழியுண்டு. இவ்வாறு உணவுக்கூடம் கட்ட நன்கொடை அளிப்பவர்கள் குறிப்பிடும் பெயர் அக்கூடங்களுக்குச் சூட்டப்படும். உதவவேண்டும் என்ற நல்லெண்ணம் இருந்தும் ஆனால் உணவுக்கூடம் கட்டித்தரும் அளவுக்குப் பணவசதியில்லாதவர்களும் இத்திட்டத்தினைச் செயலாக்குவதில் பங்குகொள்ளலாம். குழந்தைகளுக்குப் பயன்படுவதற்காகத் தட்டு, குவளை முதலியவற்றை வாங்கித்தரலாம். நிதி உதவி செய்ய வசதியற்றவர்கள் தாங்கள் தங்கள் ஊரில் இத்திட்டம் நல்லமுறையில் நடைபெறுகின்றதா என்பதை மேற்பார்வை செய்யும் பொறுப்பை ஏற்கலாம்.

இத்திட்டத்தைப் பற்றிய விவரங்களை அறிய நம் பாரதப் பிரதமர் ஆர்வம் தெரிவித்துள்ளார் என்ற செய்தி நமக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இருந்து மட்டுமல்லாது. பல அயல்நாட்டு நிறுவனங்களில் இருந்தும் இத்திட்டத்தில் அக்கறை காட்டியும், ஆதரவு அளித்தும் செய்திகள் வந்துள்ளன. நம்முடைய குழந்தைகள் நாட்டின் பொதுச் சொத்து. அக்குழந்தைகளின் வாழ்வை வளமாக்க நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் நாட்டின் எதிர்கால நலத்திற்கு நாம் செய்யும் முதலீடாகும். இந்த மாபெரும் திட்டத்தைச் செயலாக்க இரண்டொரு மாதங்களாக இரவும், பகலும் உழைத்த தலைமைச் செயலாளர் திரவியம் அவர்களுக்கும் அவருக்கு உறுதுணையாயிருந்த அனைத்து அதிகாரிகளுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் இத்திட்டத்தின் பல்வேறு மட்டத்தில் பணிபுரிந்த அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின் மூலம் இந்த மாநிலம் முழுவதும் ஆயிரக்கணக்கான குக்கிராமங்களிலும், சிற்றூர்களிலும் இலட்சக்கணக்கான ஏழைக்குழந்தைகள் ஒன்றுகூடி ஊட்ட உணவு அருந்தும் காட்சி, அவர்கள் தங்கள் மழலை மொழியில் நமக்கு வாழ்த்துக் கூறும் ஒளிமயமான நிகழ்ச்சியாக அமையும் என்ற எதிர்பார்ப்பில் இத்திட்டத்தில் பங்குக்கொள்ள உங்கள் அனைவரையும் உரிமையோடும் பரிவோடும், பாசத்தோடும் இரு கைகூப்பி அழைக்கிறேன்.

வாழ்க தமிழகம்! வாழ்க தமிழக குழந்தைகள்! அண்ணா நாமம் வாழ்க!

❖ ❖ ❖

(30.06.1982 அன்று, வானொலி மற்றும் தொலைக்காட்சியில் ஆற்றிய உரை)

சத்துணவுத் திட்டம்
சமுதாயப் புரட்சித்திட்டம்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

இன்றைய தினம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த நிகழ்ச்சி வெறும் விளம்பரத்திற்காகவோ அல்லது நாங்கள் எத்தகைய திட்டங்களையெல்லாம் அறிமுகப்படுத்துகிறோம் பார்த்தீர்களா என்று சொல்லி மக்களுடைய தேவைகளைப் புரிந்து கொள்ளாமல் அவர்களுக்கு என்னென்ன அவசியத் தேவை இருக்கின்றனவோ அவைகளை அலட்சியப்படுத்திவிட்டு, அவர்களைத் திசை திருப்பி விடுவதற்காகவோ இந்த நிகழ்ச்சி நடைபெறவில்லை; நடத்தப்படவில்லை என்பதை முதலிலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவ்வப்போது நான் பொதுக்கூட்டங்களிலே பேசும்போதும், எங்கள் கட்சிக்காக வாக்குகளைக் கேட்கும் போதும் கூட, முன்னாலே உட்கார்ந்திருக்கிற குழந்தைகளைப் பார்த்து நான் பலமுறை பேசிய அந்தக் கருத்துக்களிலே ஒன்றை மட்டும் நான் குறிப்பிட இங்கே விரும்புகிறேன். நாளைய தினம் இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்புக்குச் சொந்தக்காரர்களான இந்தக் குழந்தைகள் இத்தகைய கூட்டத்திற்கு வரக்கூடாது. தாய் தந்தையர்கள் அனுப்பக் கூடாது என்று நான் பேசியதை இன்றைய தினம் மீண்டும் நான் வற்புறுத்துகிறேன். அரசியல் பொதுக்கூட்டங்களுக்கு இந்தக் குழந்தைகளை எல்லாம் குறைந்தது 15 வயதிற்குக் கீழே உள்ள குழந்தைகளை அந்த அரசியல் கூட்டங்களுக்கு அனுப்பக்கூடாது என்று நான் பல முறை சொல்லியிருக்கிறேன். வாக்குகள் கேட்கும் போதும் என்னைப் பார்த்து விசிலடிக்கும் குழந்தைகள், என்னைப் பார்த்துக் கை தட்டி என்னை அரவணைத்துக் கொள்ள ஓடி வருகின்ற குழந்தைகளை இது என் தமையன், இது என் தம்பி, இது என் தங்கை அல்லது என் தமக்கை என்றே வைத்துக்கொள்ளுங்கள். அப்படி ஓடோடி வந்து அவர்கள் உற்சாகத்தோடு பேசுகின்ற அந்தக குழந்தைகளைக் கூட நான் குறிப்பிட்டுச் சொல்ல நினைக்கின்றேன். நான் பேசுவதாக இருந்தாலும் எங்கள் கட்சிக்காரர் பேசுவதாக இருந்தாலும் கூட அரசியல் கட்சிக் கூட்டங்களுக்கு அந்தக் குழந்தைகளை, இன்றைய நாட்டின் சூழ்நிலையில் நீங்கள் அனுப்பாதீர்கள். காரணம் அவர்கள் திணிக்கின்ற, வேறுபடுத்துகின்ற கருத்துக்களை அந்தப் பசுமையான குழந்தைகள் உள்ளத்தில் பதிய வைத்துவிடக் கூடாது என்பது தான், 25 ஆண்டுகளாக நான் அரசியலில் முழுமையாக முயன்று நேரடியாகப் பங்கு கொள்ள முயன்ற பிறகு பேசிய பேச்சுகளின் கடைசியாக வந்த கருத்துக்கள் என்பது

மட்டும் இன்று வரை விடவில்லை என்றும் இன்னமும் திரும்ப அதையே சொல்வேன் என்றும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இந்தக் குழந்தைகளுக்கு உணவுக்கு வகையில்லை என்பதை மட்டுமல்ல, உணர்வுக்கும் கூட – அந்த நல்ல உணர்வுக்கும் கூட இந்த நாட்டுக்குத் தேவையான சமத்துவ உணர்வுகளுக்குக் கூட சொந்தக்காரர்கள் வளர்க்கப்படுவார்களேயானால் எதிர்காலத்தில் இந்த நாட்டின் நிலைமை என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்னொன்றை நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே என்று நான் குறிப்பிடுவது உண்டு. ஏதேனும் கடிதம் குறிப்பிட்டு எழுதப்படும்போது இந்த வார்த்தைகளை நான் பயன்படுத்துவதுண்டு. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு விதவைத் தாய்மார்களுக்காக என்னென்ன செய்தோம் என்கின்ற பட்டியலை இப்போது நான் சொல்லிக் கொண்டிருக்க விரும்பவில்லை. ஆனால், நியமனங்களில் விதவைகளுக்குத்தான் முன்னுரிமை. அதிலும் உள்ளூர்க்காரர்களுக்கு முன்னுரிமை, என்கின்ற வகையில் பெண்களுக்கு என்று ஏறத்தாழ 40,000 பேர்களுக்கு மேல் அங்கே வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறோம் என்பதை அது மட்டுமல்லாமல் பள்ளிக்கூடங்களில் வேலை செய்கின்றவர்களுக்கு அங்கேயும் அந்த வாய்ப்பை 36,000 பேர்களுக்கு ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் ஏறத்தாழ 76,000 பேர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்றால் அந்த 76,000 குடும்பங்கள் தொழில்களைப் பெற்று அதுவும் தாய்மார்கள் அந்தப் பணியைப் பெற்று நிம்மதியாக வாழக்கூடிய முழு நிம்மதியாக என்று சொல்ல மாட்டேன். முழுமையாக வேலை வாய்ப்புக் கிடைக்கின்ற நிலைமை வந்து, போதிய வருமானம் கிடைக்கும் என்றும் சொல்ல மாட்டேன். இன்னொருவரிடம் சென்று கை ஏந்துகின்ற நிலைமை இல்லாமல் அவர்கள் வாழக்கூடிய நிலைமைக்கு இந்த வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

குழந்தையிலேயே ஒழுங்காக, ஒழுக்கமாக, சுத்தமாக, சீர்மையாகத் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள உபதேசம் செய்யாமல் நடைமுறைப் பழக்கவழக்கங்கள் அவர்களுக்கு வந்தாக வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்க வேண்டுமென்பது எங்கள் ஆசையையும், பசியையும் போக்க வேண்டும், பண்பையும் வளர்க்க வேண்டும். கழிப்பிடங்களுக்கு அவர்கள் போய் வருகின்ற நிலைமைக்குப் பிறகு அந்தக் கழிவுப் பொருள்களிலிருந்து எரிபொருள் உற்பத்தி செய்ய வேண்டும். அதை கோபர்கே என்று அழைக்கப்படுகிற அந்த எரிபொருளைக் கொண்டு சமையல் வேலைக்கு அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பொருள் வாங்கும் செலவைக் குறைத்து அது போலவே அதிலிருந்து கழிவுப்பொருட்கள் இருக்கின்ற மற்ற கீழ்ப்பகுதியை எருவாக்கிக் கொள்ள வேண்டும். இது கஷ்டமல்ல. நாட்டில் நடக்காததும் அல்ல. நாம் செய்யாததும் அல்ல. வயல் புறங்களில் சென்று நாம் காணாதது அல்ல. ஆகவே, விஞ்ஞான ரீதியாக அறிவியல் ரீதியான, அனுபவ

பூர்வமாகப் பயன்படுத்தும் வகையில் குழந்தைகளுக்கு அப்போதிருந்தே அவர்களுக்கு என்ன செய்கிறோம் என்பது தெரியாமேலேயே நாம் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

இந்த மாபெரும் பொறுப்பை இந்தக் காப்பகத்தை நடத்த இருக்கின்றவர்கள் சுமக்க இருக்கின்றார்கள். அவர்களுக்கு மக்கள் உதவி செய்ய வேண்டும். பாதுகாப்புக் கொடுத்தாக வேண்டும்.

கட்சியைத் தயவு செய்து தள்ளி வையுங்கள். 60 இலட்சம் ஏழைக் குழந்தைகளுடைய வயிற்றைப் பாருங்கள். அவர்கள் வாழ்வைப் பாருங்கள். ராமச்சந்திரனைப் பார்க்காதீர்கள். அவர் எந்தக் கட்சி என்ற பார்க்காதீர்கள். எதிர்க்கட்சியா ?எதிரிக்கட்சியா என்று தயவு செய்து கவனிக்காதீர்கள். தமிழகம், தமிழ்மக்கள், அதில் இருக்கின்ற வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள வேலையில்லாமல் இருக்கின்ற ஒரு வேளை உணவு கூட நிம்மதியாகக் கொடுக்க முடியாமல் இருக்கின்ற தாய்மார்கள் கண்ணீர் வடிக்கிறார்களே, அதைத் துடைக்கின்றோம் என்கிற நிலைமையில் ஒத்துழைக்க முன்வாருங்கள் என்று நான் சொல்லிக்கொள்வேன்.

குழந்தைகளின் சொந்தக்காரர்கள் வேலைக்குப் போவார்களேயானால் என் குழந்தை இப்போது என்ன செய்து கொண்டிருக்கும் உணவுக்கு ? என்ற நினைப்பே இல்லாமல் அங்கே சாப்பிட்டுக் கொண்டிருக்கிறது. அதுவும் இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள்தான் அந்தக் குழந்தையும் ஒரு காலத்தில் இந்த நாட்டின் முதலமைச்சராக வரலாம். ஏன் ? குடியரசுத் தலைவராகவே வரலாம். அப்படிப்பட்ட குழந்தைகள் இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள். அவர்கள் கொடுக்கின்ற வரிப்பணம், நாம் கொடுக்கின்ற வரிப்பணம் அவர்களுக்கு உணவாகப் போகிறது. ஆகவே, அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அங்கே சாப்பிடுகிறவர்கள் என்கின்ற எண்ணத்தோடு உரிமையோடு நிம்மதியோடு இருக்கின்ற நிலைமையை உருவாக்க முயலுகின்றோம்.

இந்த நல்ல காரியத்துக்கு யாரும் எதிர்ப்பு சொல்ல முடியாது. நியாயமும் இல்லை. காரணமும் இல்லை. ஆகவே, இதுவரை எதிர்ப்புக் கருத்துக்கள் அதிகமாகச் சொல்லப்படவில்லை. நடக்குமா என்றுதான் சந்தேகப்படுகிறார்களே தவிர இது நடக்கக் கூடாதது. வேண்டாதது என்று யாரும் சொல்லவில்லை. ஆகவே, நடத்த முடியும் என்பதைத் திட்டமிட்டுக் காண்பித்துவிட்டோம். இது நடக்கிறது. நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் விரிவடைய எங்களுடைய வசதியைப் பொறுத்து மக்கள் தருகின்ற ஆதரவைப் பொறுத்து, இது பின்னால் விரிவடையும் என்பதை இப்போது சொல்லி இந்தப் பிரச்சினைக்கு நீங்கள் ஆதரவு தருகின்ற நிலைமையில் குழந்தைகளை அழைத்து இங்கே என்னென்னவோ விளையாட்டுகளைக் காண்பித்து இருக்கிறீர்கள்.

சர்க்கஸ் விளையாட்டுகள் அத்தனையும் இங்கே காண்பித்து விட்டார்கள். இந்த வெய்யிலில் நான் பார்த்து அதிசயித்தேன். கை தட்டவும் மறந்து பார்த்துக் கொண்டிருந்தேன். எவ்வளவு உயரம்? 1 அடி 2 அடி உயரம். அவர்கள் அங்கே கவாத்துப் பழகுகின்றதைப் பார்க்கின்றபோது உடற்பயிற்சி செய்கின்றதைப் பார்க்கின்றபோது, சிலம்பு விளையாட்டுக்களைச் செய்கின்றதைப் பார்க்கின்ற போது, நான் உண்மையிலேயே பெருமைப்படுகின்றேன். இந்த உணவையும் கொடுத்து, பண்பையும் கொடுத்து குழந்தையிலிருந்து அவர்களுக்கு உடற்பயிற்சியையும் கற்றுக் கொடுத்தோமானால் எதிர்கால சந்ததிகள் எந்த நாட்டு விளையாட்டுக்காரர்களோடும் போட்டி போடக் கூடிய அளவுக்கு அவர்கள் வளர முடியும்.

அறிவியிலிலே அவ்வாறு போட்டிபோட வேண்டுமென்றாலும் அங்கே போட்டிபோட அந்தத் திறமையைப் பெற முடியும் என்பதை மகிழ்ச்சியோடு சொல்லி, அங்கே தூரத்திலே கை ஆட்டுகிறவர்களுக்கு என் நன்றியைச் சொல்லி இந்த வாய்ப்பைத் தந்ததற்கு நான் நன்றி கூறி இந்த நிகழ்ச்சியைத் தொடங்கி வைக்க என்தாய் எனக்கு இந்த நீண்ட ஆயுளைத் தந்ததற்காக எனது அன்னையை நான் வணங்கி இது வெற்றி பெறவேண்டும், இது மக்களுக்கு நல்லதாக அமைய வேண்டும் என்று கூறி இதைத் தொடங்கி வைக்கின்றேன். எல்லோர்க்கும் நன்றி.

அண்ணா நாமம் வாழ்க!

(01.07.1982 அன்று, திருச்சி மாவட்டம் பாப்பாக்குறிச்சியில்
இலவச சத்துணவுத் திட்டத்தைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை)

தன் தாயை விட, பல சமூக நீதிகளால் நோய் வாய்ப்பட்டிருக்கும் பல தாய்மார்களுக்கு வாழ்வளிக்கச் செய்த காமராஜர்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

நம்மால் என்றும் போற்றிப் பாராட்டப்பட்ட தகுதி பெற்றவராலும் மறந்துவிட முடியாத பெருந்தலைவர் திரு. காமராசர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர் நாட்டிற்குச் செய்த நற்காரியத்தை மறக்கக் கூடாது.

காமராசர் தன் தாயின் மீது வைத்து இருந்த பக்தி, பாசம், மரியாதையை மிகத் தெளிவாக கூறிய என்.வி. நடராசன் ஒரு சம்பவத்தைக் கூறினார். நோய்வாய்ப்பட்டு இருந்த தன் தாயாரைப் பார்க்கச் சென்ற திரு. காமராசர் நான் இருந்து என்ன செய்ய முடியும்? நான் நாட்டுப் பணியாற்றப் போகவேண்டும் என்று கூறிவிட்டுச் சென்றார் என்று தெரிவித்தார். நான் அப்போது கூறினேன். தன் தாயை விட, பல சமூகநீதிகளால் நோய்வாய்ப்பட்டிருக்கும் பல தாய்மார்களுக்கு வாழ்வளிக்கச் சென்று இருக்கிறார்.

அண்ணா இப்போது இல்லை. இனி அவர் தலைமை ஏற்று வழிகாட்ட முடியாது. ஆனால், சிறந்த தத்துவங்களை, சித்தாந்தங்களைத் தந்துவிட்டுப் போயிருக்கிறார். அவைகள் இந்த நாட்டுக்கு வழி காட்டியாக இருக்கின்றன.

மக்கள் நல்வாழ்வில் காமராசர் அதிக அக்கறை வைத்திருந்தார். முதல்வர் பதவியைக் கூட காமராசர் ராஜினாமா செய்வேன் என்று அறிவித்தபோது ராஜினாமா செய்ய வேண்டாம் என்று சொன்ன என்னிடம், பதவி பெரியதல்ல நாடு தான் பெரியது என்று கூறினார்.

காமராசர் ஆட்சிக் காலத்தில் 17 இலட்சம் ஏழைக் குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு வழங்கப்பட்டது. அவர் முழு திருப்தி அடைந்திருப்பாரா என்றால் இல்லை. பள்ளியில் படித்த மூன்றில் ஒரு பங்கினருக்குத்தான் உணவு அளிக்க முடிந்தது. அத்திட்டத்தில் அரசு 10 காசும் தர வேண்டியிருந்தது. பல யூனியன்கள் வருமானமின்றி இருந்தது. அந்த யூனியனால் எப்படி உணவுக்குக் காசு கொடுக்க முடியும்? அந்தத் திட்டத்தில் ஆசிரியர்கள் சென்று உணவுப்பொருள்களைத் திரட்டி சமைத்துப் போடவேண்டியதிருந்தது. அதில் தவறு இருந்தது. இதைத் திருத்த முயன்றோம்.

இன்று 63 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கப்படும் என்று சொல்லி இருக்கிறோம். ஒரு பகுதியில் 13 இலட்சம் என்ற கணக்கிடப்பட்டு இருந்தது. இப்போது அது 18 இலட்சமாகி இருக்கிறது. இந்த மாத முடிவில்தான் 63 இலட்சம் ஒரு கோடியாக இருக்குமா? 90 இலட்சமாக இருக்குமா? என்று தெரியும். சத்துணவுத் திட்டம்

வெற்றிபெற பொதுமக்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும். மதிய சத்துணவு திட்டம் என் வாழ்க்கை அனுபவத்தையொட்டி ஏற்பட்டது.

திட்டங்களை நிறைவேற்றுவதற்குள் காலம் போய்விடும் என்பதால் தான் பெருந்தலைவர் காமராசர் 'சிகப்புநாடா' முறையைத்தூக்கி எறிந்தார். பொறுப்புகளை ஏற்கும்போதெல்லாம் பெரியவர்களை நினைத்துக் கொள்ள வேண்டும். முதியோருக்கு 20 ரூபாய் உதவித்தொகையைப் பெருந்தலைவர் காமராசர் அறிமுகப்படுத்தினார். நாங்கள் வந்து 25 ரூபாய் ஆக்கினோம்.

தவறுகளைச் சொல்லுங்கள் நடவடிக்கை எடுக்கிறோம். வேடிக்கை மனோபாவத்தை தூக்கி எறியுங்கள். பொறுப்பிலிருப்பவர்கள் குறிப்பாக, இளைஞர்கள் முன்வந்தால்தான் வெற்றி பெற முடியும்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(15.07.1982 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற காமராஜர் பிறந்த நாள் விழாவில் ஆற்றிய உரை)



எங்கெங்கே அன்பையும், பண்பையும் காணுகிறோமோ, அங்கெல்லாம் இறைவனைக் காண்கின்றோம்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்களை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே நபிகள் (ஸல்) அவர்களைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் கிருஷ்ணசாமி அவர்கள் கூறினார்கள்.

உருவ வழிபாடற்ற ஒரு முறையைக் கடைப்பிடிக்கும் இஸ்லாமிய சமுதாயம் எந்த அளவு ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்காதவர்கள் இருக்க முடியாது.

திருக்குரானில் சொல்லப்பட்டிருக்கிறதை ஒன்றிரண்டை நான் குறிப்பிடுவது எனக்கு நினைவுபடுத்திக் கொள்வதாக அமையும். மறந்தவர்களுக்கும் நினைவுபடுத்துவதாக அமையும் என நான் கருதுகிறேன்.

ஒவ்வொருவரும் தனது சொத்தில் மொத்தத்தில் என்று நான் அடைமொழியாகச் சேர்த்துக் கொள்கிறேன். இரண்டரை சதவிகிதத்தை ஏழை, எளியவர்களுக்கு ஒதுக்கித் தரவேண்டும் என்பது ஒகு சித்தாந்தமாகக் கூறப்பட்டிருக்கிறது.

நோன்பிருப்பதை வெறும் நோன்பு என்று மட்டும் எடுத்துக்கொள்ளாமல் அவர் உண்ணாமலிருக்கும் பகல் நேர உணவு இன்னொருவருக்குப் பயன்படப்போகிறது என்கிற சித்தாந்தத்தை நாம் மறந்துவிடக்கூடாது. நாங்கள் இஸ்லாமிய சமுதாயத்தைப் பாராட்டக் காரணம் ஏழை பணக்காரன் என்பது இயற்கையாக ஆண்டவன் சிருஷ்டியில் இல்லை. அவரவர் பொறுப்புதான். சந்தர்ப்பம்தான். அவரவர் செய்கின்ற துணிச்சலான காரியத்தினால்தான் அந்த இடத்தை எய்துகிறான். அதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்; சட்டப்படி ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். ஒரு இஸ்லாமியனாக இருப்பானானால் அதைச் செய்தாக வேண்டும் என்றிருப்பதை எண்ணி எண்ணிப் பாராட்ட வேண்டும்.

அந்தக் கொள்கையைச் சொன்னவர்களுக்கு கடைப்பிடிப்பவர்களுக்கு, கடைப்பிடித்து வருபவர்களுக்குத் தலைகுனிந்து கைக்கூப்பி வணக்கம் தெரிவிக்க விரும்புகிறோம். இங்கே ஏழைகளுக்கு மானத்தை மறைக்க இலவசமாகத் துணிகள்

கொடுக்க இருக்கிறார்கள். என்றைக்கு அவரவர்களால் துணிகள் வாங்க முடிகிறதோ அன்றுதான் இந்தியா சுதந்திரம் பெற்றதற்கு அடையாளமே தவிர இன்னொருவருடைய கையை எதிர்பார்த்து வாழும் வரையில் இந்தியா பரிபூரண சுதந்திரம் அடைந்ததாக யாருமே சொல்ல மாட்டார்கள்.

அமரர் காந்தி சொன்னதில்லை. நேரு சொன்னதில்லை, இந்திராகாந்தி அம்மையாரும் சொன்னதில்லை, லால்பகதூர் சாஸ்திரி சொன்னதில்லை, அபுல்கலாம் ஆசாத் சொன்னதில்லை, மூதறிஞர் இராஜாஜி சொன்னதில்லை, அய்யா அவர்கள் சொன்னதில்லை, அமரர் அண்ணா சொன்னதில்லை இதை நான் எதற்காகக் குறிப்பிடுகிறேனென்றால் இந்த வாய்ப்பை நாம் பெற்றாக வேண்டும்.

எந்த ஒரு வீட்டிலும் எந்த ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்த நம்பிக்கைக்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்டவர்களாக இருந்தாலும் அவர்கள் சமத்துவத்தோடு, சரி நிகராக வாழ்க்கையிலே ஒரு மனிதன் அவசியத் தேவைகளையாவது பிறருடைய தயவில்லாமல் பெற்று வாழ்கின்ற நிலைமையை உருவாக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அந்தக் கடமையை இன்னும் யாரும் முழுமையாகச் செய்துவிடவில்லை என்பதை இங்கே சுட்டிக் காட்டுகிறேன்.

இங்கே மாண்புமிகு அமைச்சர் கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்போது, 63 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் காரியத்தை முதலமைச்சர் செய்துள்ளார் என்று சொன்னார். யாருடைய பணம் ? என்னுடைய தனிப்பட்ட பணமல்ல. மக்களுடைய பணம் மக்களுடைய வரிப்பணத்திலிருந்து, மக்களுக்குச் செலவு செய்கின்ற பணம். இதை உண்டு வளருகின்றவர்கள் எந்த ஒரு தனிமனிதனுக்கும் கட்டுப்பட்டவர்களல்ல; கட்டுப்பட வேண்டியவர்களல்ல. அவர்கள் நன்றிக்கடன் செலுத்த எந்தத் தனிப்பட்ட மனிதனையும் தேடிச் செல்ல வேண்டிய அவசியமில்லை.

இந்தப் பணம் தமிழக மக்களுடைய பணம் என்றால் தமிழக மக்கள் தமிழ்நாட்டின் சொத்து. எனவே, தமிழ்நாட்டிற்குத்தான் இந்தக் குழந்தை வளர்ந்து எதிர்காலத்தில் நன்றி காண்பிக்க வேண்டுமே தவிர, யாருக்கும் அடிமையாகக் கைகட்டி நன்றி காட்டவேண்டிய அவசியமில்லை. நாங்கள் ஒரு குழு அமைத்திருப்பது உங்களுக்குத் தெரியும். ஒரு செய்தி வந்திருக்கிறது. 12,13 வயதுச் சிறுவர்கள் சில வீட்டில் வேலை செய்கிறார்கள். எதற்கு வேலை செய்கிறார்கள் ? என்றால் சம்பளத்திற்காக அல்ல. ஒரு வேளைச் சாப்பாட்டிற்காக, தாய் தந்தையர்கள் வேலைக்குப் போகும்போது ஒரு வேளை உணவுக்காக வேறு வீடுகளுக்கு அனுப்புகிறார்கள்.

இந்த வயதில் ஒரு வேளை உணவுக்காக வேலை செய்துகொண்டு எங்களுக்கு எங்கே சாப்பாடு என்று கேட்கிறார்களாம். இல்லை உங்களுக்கு இல்லை.

குழந்தைகளுக்குத்தான் என்று சொன்னால் நீங்கள் எம்.ஜி.ஆரிடம் சொல்லுவதில்லை. எம்ஜி.ஆரிடம் சொல்லுங்கள், எங்களுக்கும் சாப்பாடு கிடைக்கும் என்கிறார்களாம்.

இதை நான் குறிப்பிடக் காரணம் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை பெரியது. ஆனால் அரசுக்கு இருக்கும் சக்தி மிகமிகச் சிறியது.

ஒரு கொள்கையை நிறைவேற்றும்போது திட்டங்களைப் பிரித்துப் பார்க்க முடியாது. முஸ்லிம் சமுதாயக் குழந்தைகள் பகலில் உண்ணக்கூடாது என்று சொன்னால், அவர்களுக்காக மாற்றி வைக்க வேண்டியிருந்தது. மாலை 7 மணிக்கு மேல் அவர்களுக்குச் சமைத்துக் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருப்பது உங்களுக்குத் தெரியும்.

அதற்காக அந்தத் தாய்மார்கள் சமையல் செய்பவர்கள் 3 மணி நேரம் அதிகமாக இருந்து அந்தக் குழந்தைகளுக்கு உணவு ஊட்டி விட்டு செல்ல வேண்டி இருக்கிறது. அதற்காக அவர்கள் ஓவர்டைம் கேட்கவில்லை; கேட்கமாட்டார்கள்.

ஆனால், இப்போது எங்கு பார்த்தாலும் நாட்டிற்குத் தொண்டு செய்பவர்கள் வேலை செய்யும்போது பல பிரச்சினைகளில் ஏலம் போடுகிறார்கள். தன்னுடைய கடமையை ஏலம் போடுகிறார்கள். தன்னுடைய நாட்டிற்குச் செய்ய வேண்டிய தியாக உணர்வை விலை பேசுகிறார்கள்.

அவைகளையெல்லாம் நீக்க வேண்டுமானால் படித்தவர்கள், விவரம் தெரிந்தவர்கள் மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். சாதாரண மக்களுக்கு அல்ல, அப்படிப்பட்ட பணியிலிருப்பவர்களுக்குக் கூட எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். இன்றைக்கு 500 தாய்மார்களுக்குத் துணிகளை இந்த அமைப்பு வழங்க இருக்கிறது. 100 ஆண்டுக்காலம் பணி செய்யும் அமைப்பு இதனைச் செய்கிறது என்றால், இதிலும் பாதிப்பங்கு சுமார் 20 லிருந்து 30 ஆயிரம் ரூபாயைத் தமிழக அரசு கொடுக்கிறது.

கொடுக்கிறது என்றால் இந்தத் தாய்மார்களுக்கு மாதம் 15 ரூபாய் தருகிறது என்றார்கள். அந்தப் பணத்துடன் அரசு முதியோர்களுக்குத் தரும் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொடுங்கள் என்று மாவட்ட ஆட்சித்தலைவரிடம் சொன்னேன். உடனே மற்றவர்கள், சங்கத்திலிருப்பவர்களுக்கு 50 ரூபாய் எங்களுக்கு 35 ரூபாய் 25 ரூபாய் தானா என்று போட்டிக்கு வந்துவிடக்கூடாது.

சில சந்தர்ப்பங்களில் சிலருக்கு ஒரு ரூபாய், 2 ரூபாய்கூட கிடைக்கலாம். இருக்கின்ற சூழ்நிலையை வைத்து, நமக்கிருக்கிற சக்தியை வைத்து வாழ்க்கையை எப்படி நடத்திக் கொள்ள வேண்டுமோ அப்படி நடத்திச் செல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

“ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்று அமரர் அண்ணா எங்களுக்குச் சொன்னதன் விளைவாகத்தான் இன்றைய தினம் முஸ்லிம் பெரியவர்களைச் சந்திக்கும்போது நெஞ்சாராத் தழுவ முடிகிறது. அது ஒரு மதத்தினுடைய கோட்பாடு– நம்பிக்கையாக இருந்தாலும் அது எங்களுக்கும் பொருந்துகிறது. ஏனென்றால் எங்களுக்கு “ஒன்றேகுலம் தான் ஒருவனே தேவன்தான்“.

எங்கெங்கே அன்பைக் காணுகிறோமோ, பண்பைக் காணுகிறோமா அங்கெல்லாம் இறைவனைக் காணுகிறோம். ஆகவேதான் ஒரு மனிதன் வேறுபட்ட உணர்ச்சிக்கு காழ்ப்புணர்ச்சிக்கு ஆளாக இடமில்லாமல் இருக்க வேண்டுமென்றால் உணவுப் பிரச்சினை இருக்கக்கூடாது. இருக்க வீடில்லை என்ற பிரச்சினை இருக்கக்கூடாது. செய்ய தொழில் இல்லை என்ற பிரச்சினை இருக்கக்கூடாது.

அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15லிருந்து வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குழந்தைகளுக்கும் இந்த உணவுத் திட்டத்தை விஸ்தரிப்பது என்று திட்டமிட்டிருக்கிறோம். நாம் ஆரம்பித்திருக்கிற திட்டம் ஆங்காங்கே செயல்படும் அனுபவத்தை வைத்து நகரங்களிலும் செயல்படுத்த இருக்கிறோம்.

இந்தத் திட்டம் எவ்வளவு மகத்தான திட்டம் என்பதைச் சொல்லும்போது, மகத்தானதா என்று சொல்வது பெருமை சேர்க்கக்கூடியது என்று நான் சொல்லவில்லை. இது ஒரு மிகப் பெரிய சுமையான திட்டம் என்பதைச் சொல்லுகிறேன்.

இதற்கு நிதி சேர்த்தாக வேண்டும். நிதி வேண்டும். ஆண்டுக்கு ஆண்டு நிதி வேண்டும். ஆண்டுக்கு ஆண்டு எண்ணிக்கை அதிகரிக்கும். எவ்வளவுதான் நாம் குடும்பக் கட்டுப்பாடு செய்தாலும் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இவைகளைத் தனிப்பட்ட அரசு நிறைவேற்றிட முடியாது. 63 இலட்சம் குழந்தைகள் என்று சொல்லுகின்றோம். ஒரு பகுதியில் 13 இலட்சம் பேர் என திட்டமிட்டோம். ஆனால், இப்போது 18 இலட்சம் பேர் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சில இடங்களில் தாய்மார்கள், ஏழைக் குழந்தைகளையும் அனுப்பிவிட்டு பெரியவர்களும் வந்து உட்கார்ந்து விடுகிறார்கள். இதையும் கவனிக்க வேண்டும். குழந்தைகளுக்கு உணவு கொடுப்பது என்பது எளிதான காரியம் அல்ல. ஏழை, பணக்காரன் என்ற எல்லைக்கு அப்பாற்பட்டு, சாதி மதத்திற்கு அப்பாற்பட்டு காரியத்தைச் செய்தால் மற்ற மாநிலமும் சத்துணவுத் திட்டத்தினைப் பின்பற்றும்.

ஆந்திர மாநிலக் கல்வி அமைச்சர் சொந்தக் காரியமாக தருமபுரிக்கு வந்தார். மாவட்ட ஆட்சித்தலைவரோடு திடீரென மதிய உணவுத் திட்டம் செயல்படும் இடங்களைச் சென்று பார்வையிட்டார்.

சமையல் செய்த சாதத்தை உண்டு பார்த்து, "சாப்பாடு நன்றாக இருக்கிறது குழந்தைகள் சாதி மத வித்தியாசம் இன்றி உணவு உட்கொள்வதைப் பார்த்துவிட்டு "ஆந்திராவிலும் இதைக்கொண்டு வருவோம். இதுதான் முதல் வேலை!" எனச் சொல்லியிருக்கிறார். இதில் பெருமையைவிட, தேவையும் சூழ்நிலை உருவாவதும் நமக்குத் தேவை. அந்தத் தேவை உருவாகிறது. இதை வெற்றிகரமாகச் செய்ய நீங்கள் ஒத்துழைக்க வேண்டும்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(18.07.1982 அன்று, சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற முஸ்லீம் பெண்கள் சேவா சங்கத்தினர் ஏழை விதவைப் பெண்களுக்கு உதவி வழங்கும் விழாவில் ஆற்றிய உரை)



இன்னொரு மாநிலத்திலிருந்து மின்சாரம் வாங்குவதைத் தவிர்த்திடும் வகையில் மின்சார உற்பத்தியை நாம் பெருக்கிக் கொள்ள வேண்டும்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனேயே இன்னொரு மாநிலத்திலிருந்து மின்சாரம் வாங்குவதைத் தவிர்த்திடும் வகையில் மின்சார உற்பத்தியை நாம் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்று கூறினேன். அந்த வகையில் நம்முடைய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மின் உற்பத்தியைப் பெருக்கும் இப்பணியில் ஈடுபட்டு, பாடுபட்டு வரும் அனைவரையும் பாராட்டுகிறேன்.

கேரள மாநில அரசு, தமிழ்நாட்டுக்கு வழங்கும் மின்சாரத்திற்கு, முன்பு 28 காசுகளாக விலை நிர்ணயித்திருந்ததை இப்பொழுது 48 காசாக உயர்த்திக் கேட்கிறது. கேரளத்தில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தமிழகத்தையும், கருநாடகத்தையும் தங்கள் மின்விசையை விற்பதற்கான வாணிபச் சந்தையாகக் கருதி, வியாபாரம் பேசுகிறார்கள். இது இந்தியா ஒரே நாடு என்று பேசும், ஒருமைப்பாட்டுப் பேச்சுக்க அர்த்தமேயில்லை என்பதைக் காட்டுகிறது.

நாம் இங்கே நெல்லை அதிகமாக உற்பத்தி செய்கிறோம். மத்திய அரசு அதில் ஒரு பகுதியை நம்மிடமிருந்து பெற்று கேரள மாநிலத்திற்குக் கொடுக்கிறது. அப்படி கேரளத்திற்குக் கொடுக்கும் அரிசியை விற்கிற உரிமை தமிழ்நாட்டிடம் இருந்தால், அது மின்சாரத்திற்கு ஏற்றிக் கொடுக்கும் விலைக்கு நிகராக நம்முடைய அரிசிக்கும் நாம் விலை கேட்டுப் பெறமுடியும்.

நமக்கும் கருநாடக மாநிலத்திற்கும் காவிரி நீர் பிரச்சினை தொடர்ந்து இருந்து வந்த போதிலும், நம்முடைய வேண்டுகோளை ஏற்று கருநாடக முதல்வர் 12 டி.எம்.சி தண்ணீர் கொடுத்து உதவியிருக்கிறார். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய ஆறுகளை தேசிய உடைமையாக்குவது தான் இப்பிரச்சினைகளைத் தீர்க்க ஒரே வழியாகும். ஆட்சிக்கு வந்தவுடன் நதிகளை தேசிய உடைமையாக்க வேண்டும் என்று சொன்னேன். நான் அரசியல் தெரியாமல் பேசுவதாகச் சொன்னார்கள். ஆனால் நதிகளை தேசியமயமாக்குவதுதான் பிரச்சினையைத் தீர்க்கும் என்று இப்பொழுது நம்புகிறார்கள்.

நம்முடைய மாநிலத்தின் மின்சாரத் தேவைகளுக்குப் புனல்மின் நிலையங்களையும், அனல்மின் நிலையங்களையும் மட்டும் நம்பியிருந்தால் முடியாது. தமிழ்நாட்டுக்குப் புதிய அணுமின் நிலையங்கள் தேவை. இதற்குத் திட்டக்குழுவும் மத்திய அரசும் முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அண்ணா நாமம் வாழ்க ! நன்றி ! வணக்கம் !

❖ ❖ ❖

(29.07.1982 அன்று, தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் 2ஆம் நிறைவு விழாவில் ஆற்றிய உரை)

மாணவர்கள் தங்களுடைய கடமையில் இருந்து சிறிதும் விலகாமல் பொறுப்பை உணர்ந்து படிக்க வேண்டும்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

தமிழ் இயக்கத்தின் தந்தை பெரியவர் மறைமலை அடிகளார் பெயரால் விளங்கும் இந்தப் பள்ளிக்கூடத்தில் நடைபெறும் பெற்றோர் ஆசிரியர் கழக விழாவில் கலந்துகொண்டு மறைமலை அடிகளார் சிலையைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மாணவ, மாணவியர்கள் இங்கு பேசியவர்களின் பேச்சை எப்படிக் கூர்ந்து கவனித்தீர்கள் என்பதை நான் கவனித்தேன். இங்கு நடனம் ஆடிய மாணவியர்கள் இசைக்கு ஏற்ப ஆடிய விதத்தையும் கவனித்தேன். இவர்கள் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

இந்த மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் கலந்து நிர்வாகிகளாக உள்ளனர். இரண்டு பேரும் சேர்ந்து செயல்படுவது மிகவும் பாராட்டுக்குரியது. மற்ற பள்ளிகளிலும் இதுபோல் செயல்பட வேண்டும். கற்றுக்கொடுக்கிறவர்கள் ஏற்றுக்கொள்கிறவர்கள் கடமையோடு செய்தால் அது நல்ல முறையில் வெற்றி பெறும். ஆண், பெண் இருவரும் சமமாகவே வாழ வேண்டும், அப்போதுதான் நாட்டில் சமத்துவம் ஏற்படும்.

மாணவர்கள் கேள்வி கேட்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். கேள்வி கேட்டால்தான் சிந்தனை வளரும். ஆசிரியர்கள் மட்டும் மாணவர்களைப் பார்த்து கேள்வி கேட்டால் போதாது, ஆசிரியர்களைப் பார்த்து மாணவர்கள் கேள்வி கேட்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.

மாணவர்கள் படித்து முடித்து வெளியே வந்தால் மட்டும் போதாது. பொதுஅறிவு பெற்றவர்களாக வரவேண்டும். தொழிற்கல்வி பயில வேண்டும். அப்படித் தொழிற்கல்வி பெற்றவர்கள் தாங்கள் சுயமாகத் தொழில் தொடங்கும் ஆற்றலைப் பெற்று தொழிலைத் தொடங்குகிறார்கள். தொழில் தொடங்குவதற்கு வேண்டிய உதவிகளை அரசு செய்யும்.

மாணவர்கள் தங்களுடைய கடமையில் இருந்து சிறிதும் விலகாமல் பொறுப்பை உணர்ந்து படிக்க வேண்டும். படித்துவிட்டு வெளியே வரும் மாணவர்கள் வேலையில்லாமல் அவதிப்படும் 4 பேர்களுக்காவது வேலை கொடுக்கும் தகுதியைப் பெற வேண்டும்.

இந்தப் பள்ளியில் ஆளத் தகுந்தவர்கள் உருவாக வேண்டும். மறைமலை அடிகள் போல, பேரறிஞர் அண்ணா போல் நீங்கள் வரவேண்டும். பல்வேறு மாநிலத்திலிருந்து இங்கு வருபவர்களும், வெளிமாவட்டங்களிலிருந்து வருபவர்களும் இந்தச் சிலையைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.”

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(08.08.1982 அன்று, பல்லாவரத்தில் நடைபெற்ற உயர்நிலைப்பள்ளி ஐம்பெரும் விழாவில் ஆற்றிய உரை)

தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்

நமது கடமை!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

அண்ணா அவர்கள் சொன்னார்கள், வீடு நன்றாக இருந்தால், வளமாக இருந்தால், நாடு வளமாக இருக்கும் என்று. அதுபோல் தமிழகம் நன்றாக இருந்தால், பல மாநிலங்கள் அதைப் பின்பற்றலாம். அதுபோல் பல மாநிலங்கள் சீரும் சிறப்புமாக இருக்குமேயானால் இந்திய நாடு வளமோடு வாழ முடியும்.

நான் இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். விரும்புவதை யாரும் தவறாகக் கருத மாட்டார்கள் என்று நம்புகிறேன். இது அரசியல் பிரச்சினை அல்ல, சமுதாயப் பிரச்சினை. எப்படி பின்தங்கிய மக்கள் என்று குறிப்பிடுகின்றோமோ, அதுபோல் பின்தங்கிய மாநிலங்கள் என்று எதுவுமே இருக்கக்கூடாது என்பதை அண்ணாவின் அறவழியில் நின்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். சட்டத்தால் மட்டும் யாரையும் ஒன்றுபடுத்தி விட முடியாது. மனத்தால், உள்ளத்தால், உணர்வால் அவர்கள் ஒன்றுபட்டாக வேண்டும். அப்படி ஒன்றுபட வேண்டிய நிலைமையைப் பொருளாதாரத்தில், சமுதாய அமைப்பில் நாம் சமத்துவத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றிக் காண்பித்தாக வேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை இன்றைய தினம் குழந்தைகளுக்கு உணவளிக்கிறோம் என்றால் அந்த உணவை உண்ணுகின்ற குழந்தைகள், எந்த ஜாதி என்று பாராமல், எந்த மதம் என்று பாராமல் வயிற்றுக்குப் பசி என்ற நிலையில் வயிற்றை நிரப்பிக் கொள்ள எதையோ சாப்பிடாமல் ஊட்டச்சத்து நிறைந்த உணவை உண்டு களிப்போடு, தெம்போடு கல்வியைக் கற்கின்ற நிலைமை சமத்துவத்தில் வரவேண்டும் என்று நாம் விரும்பினால், நான் வேதனையோடு சொல்கிறேன், தாழ்த்தப்பட்ட மக்களிலே ஒரு சிறு வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று சொல்ல மாட்டேன். அதற்குத் தலைவராக இருக்கின்ற ஒரு சில தலைவர்கள் எங்களுக்குத் தனியாக உணவு சமையல் கூடம் தேவை என்று கேட்கிறார்கள் என்றால் சமத்துவம் எங்கே எப்படி வர முடியும்.

எங்கள் சேரிக்காக எங்கள் பகுதிக்காக, எங்கள் ஜாதி மக்களுக்காக ஒரு கூடம் உணவு உண்பதற்காக ஓர் இடம் வேண்டும் என்று கேட்கிறார்கள் என்றால், நாம் ஒற்றுமைப்படுத்த முயல்கிறோம், அவர்கள் உயர்வடைய வேண்டும். அவர்கள் தகுதியைப் பெற்றாக வேண்டும். அவர்களும் இந்நாட்டு மக்கள்தான். அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களே தவிர, தாழ்ந்தவர்கள் அல்ல என்று நாம் வற்புறுத்திக்

கூறும்போது, அவர்களாகவே எங்களுக்கு இடம் ஒதுக்குங்கள் என்று கேட்டால் நாம் யாரை வற்புறுத்திக் கேட்கப்போகின்றோம்.

சில நேரங்களில் பத்திரிகைகளில் செய்தி வருகின்றது. இந்துக்களுக்கும் அரிஜனங்களுக்கும் அங்கே போராட்டம். அப்படி என்றால் அரிசனங்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் இல்லையா ? அவர்கள் தனி மதம், தனி ஜாதியைச் சேர்ந்தவர்களா ? இப்படி எழுதுகின்ற நிலைமையை அடியோடு களைந்து நாம் எல்லோரும் ஓர்குலம் என்பதை அண்ணா வழியில் சொல்லியாக வேண்டும், நிறைவேற்றியாக வேண்டும் என்பதை இங்கே நான் அறைகூவலாக அத்தனை மக்களின் உள்ளத்திலும் பதியும் வகையில் முன்வைக்க விரும்புகிறேன்.

நாம் போராட்டத்தில் இறங்கியாக வேண்டும். முதலில் மனப்போராட்டம். நாம் உயர்ந்தவர்கள் – மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்பதைப் பற்றிச் சிந்தித்து இல்லை. அறிவு தெளிந்த நாள் முதல் எழுதப்படிக்கக் கற்று கொள்வோமேயானால் அவன் உழைக்கும் தகுதி பெற்றவன் என்றால் இந்த நாட்டில் வாழ சமஉரிமை பெற்றவன் என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்ற அளவில், இந்நாடு வளம் பெற்று வாழ்ந்து மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருந்திடும் நிலை பெற்றிட வேண்டும். எந்தப் பிரச்சினை வந்தாலும் சரி, எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் சரி அமரர் அண்ணாவின் கொள்கைகளை இந்த அரசு எப்படியும் நிறைவேற்றித் தீரும் என்பதை இந்த சுதந்திர நாளில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற அடிப்படைக் கொள்கையில் நாம் ஒன்றுபட்டு வாழ்ந்தாக வேண்டும். எல்லோரும் சொல்கிறார்கள், ‘‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’’ என்று, எல்லோரும் நமக்குச் சொந்தம் எல்லா ஊரும் நமது ஊர்தான் என்று சொல்லிவிட்டு நம்முடைய வீட்டுக்குப் பக்கத்தில் இருப்பவர்களை நம்மவர் என்று ஏற்றுக்கொள்ள நாம் தயங்கினால் இந்த வார்த்தைக்கு என்ன பொருள் ? என்பதையே நம்மால் புரிந்து கொள்ள முடியாமல் போய் விடுகிறது.

இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிடுவேன். இந்தியத் துணைக்கண்டம் வளமோடு வாழ வேண்டுமென்றால் ஒவ்வொரு மாநிலமும் வளம் பெற்றாக வேண்டும். வருகிற செப்டம்பர் 15 ஆம் தேதி, அமரர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் மற்ற பகுதிகளுக்கு அங்கே வாழ்கின்ற வறுமையில் வாடுகின்ற குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு இந்த உணவுத் திட்டத்தை விரிவாக்க நாம் திட்டமிட்டு இருக்கின்றோம்.

ஆங்காங்கு உள்ள மதத் தலைவர்களுக்கும், கருத்து வேறுபாடு கொண்ட மற்ற தலைவர்களுக்கும் இந்தச் சுதந்தர நாளில் விடுக்கின்ற முதல் வேண்டுகோள் இந்தத் திட்டத்திற்கு அனைவரும் ஒத்துழையுங்கள் என்பதுதான். ‘‘ஒன்றே குலம் ஒருவனே

தேவன்" என்பது தான் எங்களின் கொள்கை. அதனை நிறைவேற்றுவதற்கு அதற்கான அடிப்படையினை உருவாக்குவதற்கு, எல்லோரும் அமர்ந்து உண்டு; வளர்ந்து வாழ்ந்து இந்த நாட்டுக்குத் தொண்டு செய்கின்ற உணர்வை அந்தப் பசுமையான உள்ளத்தில் களங்கமற்று வெள்ளை உள்ளத்தில் பதிய வைக்கின்ற முயற்சியை தயவு செய்து தடுப்பதற்குரிய காரியத்தில் யாரும் இறங்க வேண்டும். அதற்குப் பதிலாக எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று எல்லோரையும் கைகூப்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(15.08.1982 அன்று, சென்னைக் கோட்டையில் நடைபெற்ற விடுதலைத் திருநாள் விழாவில் நாட்டுக்கொடியை ஏற்றி வைத்து ஆற்றிய உரை)

சமத்துவ சமுதாய மலர்ச்சியே விடுதலைத் திருநாளின் வெற்றி!

என்னை வாழ வைக்கும் தெய்வங்களான தாய்மார்களே!

எனக்கு ஆசி கூறி வழிநடத்தும் வணக்கத்திற்குரிய பெரியோர்களே!

எனது இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புகளே!

இன்று இந்திய சுதந்திரத்தின் 36 ஆவது பிறந்த நாள். சுதந்திரம் மனித உடலுக்கு என்பதோடு மனித மனத்திற்கு முதலிடம் என்றே கொள்ள வேண்டும். மனித மனத்தை ஒழுங்கு, ஒழுக்கம், சமுதாய ஒற்றுமை முதலிய அடிப்படைப் பண்புகள் தான் வழிநடத்திச் செல்ல வேண்டும். அதைச் செயலாக்க என் போன்றோர் வாய்ப்புப் பெறும்போது நமக்கு முன்பிருந்து தியாக வேள்வியில் தங்களைத் தீர்த்துக் கொண்டு நமது நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகத் தியாகம் செய்த மகாத்மா காந்தியடிகள் அமரர்களான நேரு, சாஸ்திரி, காமராஜர், பெரியார், அண்ணா போன்றோரின் செயல் கருத்து, அறவழிப்பாதை இவைகளைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை.

இந்தியக் குடியரசில் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு ஜனநாயக முறையில் சிந்திக்க, பேச, எழுத ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. இது ஏற்கப்பட்ட ஒன்று ஆகும். அதேபோல ஒவ்வொரு மாநிலத்தவரும் தங்கள் தாய் மொழியில் சிந்திக்க, பேசி, எழுதி, கல்வி கற்க உரிமையுண்டு. அந்தச் சுதந்திரத்தைப் பறிப்பது ஜனநாயக வழியில் அமையப்பட்டிருக்கின்ற குடியரசு சட்ட விதிகளுக்கு முரணாகும்.

விடுதலைத் திருநாளைப் பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் நாம் சுதந்திரம் பெற்ற பிறகு நாடு வாழ்ந்திட நாம் தந்தது என்ன? எவ்வளவு தர வேண்டும்? என்று கணக்குப் பார்த்திடும் நாள் என்று குறிப்பிட்டார்கள். அப்படி கணக்குப் பார்க்கும்போது, கடந்த 35 ஆண்டுகளை வீணே கழித்து விட்டோம் என்று சொல்வது நியாயமான மதிப்பீடு ஆகாது. அதே போன்று எல்லாவற்றையும் செய்து விட்டோம் என்று நிம்மதி பெறுவதற்கும் இடம் இல்லை. அரசியல் சுதந்திரம் பெற்றவுடன் நமது குறிக்கோள் நிறைவடைந்து விடவில்லை. அத்துறையில் பெற்ற சுதந்திரம் பொருளதாதாரச் சுதந்திரம் ஆக மலர்ந்து சமுதாயத்தில் சமத்துவ உரிமை பெற்ற மக்கள் எல்லாத் துறைகளிலும் பரவி, பரிணமித்து அடித்தளத்து மக்களில் ஒவ்வொருவருக்கும் அதன் முழுப்பலனும் கிட்டுவதற்கு வாய்ப்பும் வசதியும் செய்யப்படும்போது, தான் சுதந்திரத்திற்குப் பொருளும் பொலிவும் ஏற்படும்.

“இந்தியா கிராமங்களில்தான் வாழ்கின்றது” என்று அண்ணல் காந்தியடிகள் கூறினார். அதன் அடிப்படையில்தான் கிராமப்புறத் தன்னிறைவுத் திட்டத்தை அண்ணா தி.மு.க. அரசு செயலாக்க முன்வந்தது. 1980–1981ஆம் ஆண்டில்

முதல்முறையாகச் செயலாற்றப்பட்ட இந்தத் திட்டம் இந்த நிதி ஆண்டோடு தமிழகத்தில் எல்லா வட்டாரங்களிலும் நிறைவேற்றப்படும். ஏறத்தாழ 225 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும் இத்திட்டத்தின் வாயிலாக இந்த ஆண்டின் இறுதியில் ஏறத்தாழ 30 ஆயிரம் கிலோமீட்டர் தூரத்திற்கு இணைப்புச் சாலையும், மூவாயிரத்திற்கும் மேற்பட்ட கிலோ மீட்டர் தூரத்திற்கு ஆதிதிராவிட குடியிருப்புகளில் இருந்து இடுகாடுகளுக்குச் செல்லும் சாலைகளும், 1,100க்கும் மேற்பட்ட தாய்சேய் நல விடுதிகளும், 450க்கும் மேற்பட்ட ஊரக மருந்தகங்களும், 5,000க்கும் மேற்பட்ட பள்ளிக் கட்டடங்களும் புதிதாக அமைக்கப்பட்டுவிடும். இவ்வாறு கிராமப்புற மக்களின் வாழ்க்கை வளம்பெற ஒருங்கிணைந்த அடிப்படையில், அடிப்படைத் தேவைகளை உருவாக்கித்தரும் இந்த முயற்சியின் பயனாக, கிராம மக்களின் வாழ்க்கையில் புரட்சிகரமான மாறுதல் பிறந்துள்ளது என்பதை நாட்டு மக்களின் நலனில் நாட்டம் கொண்ட நல்லோர் முழு மனதுடன் ஏற்றுக்கொள்வார்கள். இந்தத் தன்னிறைவுத் திட்டம் இந்த ஆண்டு முதல் நகரியங்களுக்கும் நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்பட இருக்கிறது.

கிராமப்புறங்களில் வறுமையை எதிர்த்து நடக்கும் தாக்குதலில் ஒருங்கிணைந்த கிராமிய வளர்ச்சித் திட்டம், தேசிய வேலைவாய்ப்புத் திட்டம் ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்கவையாகும். இவ்விரு திட்டங்களுக்கும் சேர்த்து இந்த ஆண்டு 60 கோடி ரூபாய் ஒதுக்கிடப்பட்டுள்ளது. சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட பிரிவினர் தலை நிமிர்ந்து பொருளாதார வளர்ச்சி பெற்று வாழச் செய்யும் திட்டங்களைச் செயல்படுத்துவதில் இந்த அரசு மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளது. சென்ற ஆண்டு 75 கோடி ரூபாய் செலவில் ‘சிறப்புக்கூறுத் திட்டம்’ செயல்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு ஒரு இலட்சத்து அறுபத்து ஆறாயிரம் ஆதிதிராவிட குடும்பங்கள் பயன் அடையும் வகையில் பெரிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர்களின் நிலை உயர ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டுள்ள அதே நேரத்தில் தீண்டாமையை ஒட்டிய சட்ட விரோதச் செயல்களைத் தடுப்பதற்குக் கொண்டு வரப்பட்டுள்ள சட்டத்தை செயலாற்ற தமிழக அரசு காவல் துறையில் தனிப்பிரிவு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. ஆதிதிராவிடர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை விசாரித்து நீதி வழங்க சிறப்பு நீதிமன்றங்கள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. அந்த நீதிமன்றங்கள் தனித்தன்மையோடு விருப்பு வெறுப்பிற்கு இடம் கொடாது கட்சி மத சாதி கண்ணோட்டமின்றி சுதந்திரமாக இயங்க வேண்டும். கி.பி. இரண்டாயிரம் ஆண்டில் நானிலத்து மக்கள் அனைவருக்கும் நல்வாழ்வு என்ற தேசீய குறிக்கோளை ஒட்டி தமிழகத்தின் தொடக்க சுகாதார நிலையங்களைப் பலப்படுத்தவும், எண்ணிக்கையைப் பெருக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிராமக் குழந்தைகளின் பல்நலப் பாதுகாப்புக்காக முறையாகத் தயாரிக்கப்பட்ட பற்பொடியை இலவசமாக வழங்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இன்னும் ஓரிரு மாதங்களில் இப்பற்பொடி சத்துணவுக் கூடங்களில் உணவு அருந்தும் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்படும்.

உடல் நலனைப் பாதுகாக்க பட்டணத்திற்கும்தான் வரவேண்டும் என்ற நிலை மாறி இப்போது தொடக்க சுகாதார நிலையங்களின் மூலமாக கிராம மட்டத்திலும் சிறப்புச் சிகிச்சைப் பிரிவுகள் மூலமாக தாலுகா மருத்துவமனைகளிலும் கிராமப்புற மக்களுக்கு உடல்நலப்பாதுகாப்பு வழங்க முனைப்புடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கிராமப்புற மக்களின் பொருளாதார நிலையையும் உடல் நலனையும் உயர்த்த உருவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது போலவே, கல்வி அறிவைப் பரப்பவும் உறுதியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் 6 முதல் 11 வயது தொகுதிச் சிறுவர் சிறுமியருள் பள்ளிகளில் சேர்க்கப்படுவர்களின் எண்ணிக்கை 94.76 விழுக்காடாக 1981 – 1982இல் உயர்ந்தது. இப்போது சிறப்பாகச் செயல்பட்டுவரும் சத்துணவுத் திட்டத்தின் காரணமாக, மேலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த இரண்டு மாதங்களில் மட்டும், இத்திட்டத்தின் நேரடிப் பயனாக 1 இலட்சத்து 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர் சிறுமியர் புதிதாகப் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். தொடக்கப் பள்ளிகளில் பயிலும் சிறுவர் சிறுமியரின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டுமென்ற, 20 அம்சத் திட்டத்தின் 16ஆவது அம்சத்தை மிகப் பெருமளவில் நிறைவேற்றுவதற்கு தமிழ்நாட்டின் சத்துணவுத் திட்டம் ஓர் அருட்கொடையாக அமைந்துள்ளது.

இதேபோல, வேளாண்மைத் துறையிலும் நெசவாளர், தொழிலாளர், நலிவடைந்தோர் நலனிலும் இந்த அரசு அதிக அக்கறை கொண்டு பல அரிய திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

இந்த ஆண்டு ஜுலை முதல்நாள் முதல் 120 கோடி ரூபாய்க்கும் மேலான செலவில் செயல்படுத்தப்பட்டு வரும் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டம் பொதுமக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நம்பித்தான் நிறைவேற்றுகிறோம். இத்திட்டத்தினால் இன்று ஏறத்தாழ 58 இலட்சம் குழந்தைகள் பலனடைகின்றனர். இவர்களில் 17 இலட்சத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் ஆதிதிராவிடக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். சுமார் ஒரு இலட்சம் தாய்மார்களுக்கு, குறிப்பாக விதவைத்தாய்மார்கட்கு இத்திட்டத்தில் வேலைவாய்ப்புக் கிடைத்துள்ளது. சாதி சமயமற்ற சமுதாயம் அமைந்திட இத்திட்டம் வழி வகுக்கிறது. மக்களின் பேராதரவின் துணைக்கொண்டு இதுபோன்று இன்னும் பல முற்போக்குத் திட்டங்களைச் செயல்படுத்திட அரசு முனையும்போது அதற்கு ஏற்ற அமைதிச் சூழ்நிலை நாட்டில் நிலவ வேண்டும். இந்நிலையில் வறுமையிலும், அறியாமையிலும், வேலையில்லாக் கொடுமையிலும், பசியிலும் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிற கோடிக் கணக்கான மக்களைக் கவனிக்க முடியாதவாறு, அரசுக்கும், சமுதாயத்திற்கும், தொல்லை கொடுப்போர்தான் இன்று சமுதாயத்தின் பகைவர்கள்.

இன்று நாட்டின் ஒரு சில பகுதிகளில், சற்றும் எதிர்பாராத வன்முறைச் சம்பவங்களை உருவாக்கச் சில சமூக விரோத சக்திகள் முயல்கின்றன. இவைகளைத் தடுக்கவும், மக்களின் உயிர், உடைமைகளைப் பாதுகாக்கவும், அரசின் சார்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. என்றாலும், இத்தகைய வன்முறைச் சம்பவங்களுக்கு

வேர் எது என்பதைப் பார்க்கும்பொழுது, பொது நலத்தில் அக்கறையற்ற தன்மையும், வதந்திகளுக்கு முக்கிய இடம் தருவதும், திட்டமிட்டு பொய்ச் செய்திகளை உலவ விடுவதும், அதாவது வதந்திகளைப் பரவ விடுவதுமான ஒரு நிலவரம்தான், வன்முறைச் சம்பவங்களுக்குத் தூண்டுதல்களாக அமைந்து விடுகின்றன. கோரிக்கைகளை எழுப்பலும், குறைகளைச் சுட்டிக்காட்டவும், முறையான அமைப்புகளும், மன்றங்களும், இருக்கும்போது,பிரச்சினைகளைத்தீர்த்துக்கொள்ள,வன்முறையைத்தூண்டிவிடுவது நமது சமுதாய முன்னேற்றப் பயணத்தைத் தடுத்து நிறுத்தும் தடைக்கல் என்பதை உணர வேண்டும். வன்முறையின் தீய விளைவுகளிலிருந்தும், கிளர்ச்சி, ஆர்ப்பாட்டம், மறியல் போன்ற செயல்களினால் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஏற்படுகின்ற சேதங்களிலிருந்தும், நாட்டைப் பாதுகாக்கிற கடமையைக் காவல் துறையினரும் அரசும் கைவிட்டு விட முடியாது.

வதந்திகள் ஒரு நாட்டின் மிகக் கொடிய தொத்து நோயாகும். வதந்தி பீதியை உருவாக்கும். நோயற்ற மனித மனத்தில் பீதி குடிபுகுமாயின், அது, அவனை மட்டுமல்ல, அவனது நாட்டையே அழித்துவிடும். எல்லா நோய்க்கும் மருந்து உண்டு, வதந்தி அதனால் பீதி—இந்த நோய்க்கு மருந்தே கிடையாது. எனவே, இதை முதலில் ஒழிக்க ஒவ்வொரு மனிதனும் தன்னம்பிக்கை பெற்றாக வேண்டும்.

“தீமையோடு ஒத்துழைக்க மறுப்பதும், நன்மையோடு ஒத்துழைப்பதும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றது” என்றார் மகாத்மா காந்தியடிகள். அதே பாதையில், அரசின் சமுதாய முன்னேற்ற முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தர மக்கள் முன்வர வேண்டும். அது மட்டும் போதாது; நமது மக்களின் உள்ளங்களில் நச்சு விதைகளைப் பரப்பிட முயலும், தீய சக்திகளுடன் ஒத்துழைக்க மாட்டோம் என்கிற முடிவினையும் மக்கள் மேற்கொள்ள வேண்டும். நம்மில் நலிந்தோரை – வறுமைக்குட்பட்ட மக்களை நமது உடன் பிறப்புக்களாகக் கருதுவதைவிட சிறந்த மதக் கோட்பாடு, சிறந்த பண்பாடு, வேறு இருக்க முடியாது. அந்தப் பண்பாட்டை நமது உள்ளங்களில் வளர்த்துக் கொண்டால் சமத்துவம் தானாக மலர்ந்துவிடும். நமது நாட்டில் பிறந்த எந்த மனிதனும் வாழ்வதற்கு வாய்ப்பின்றித் திண்டாடும் அவல நிலைக்கு முடிவு கட்ட இந்த முப்பத்து ஆறாவது சுதந்திர விடுதலைத் திருநாளில் உறுதி எற்போம்.

“மனிதனையே கடவுளாக நேசிக்கும் ஆனந்தத்தைப் பற்றி எண்ணிப் பாருங்கள்” என்றார் விவேகானந்தர். “ஈசன் எனக்கு உடன் பிறந்தார்” என்றார் மகாகவி பாரதியார். “ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்” என்றார் பேரறிஞர் அண்ணா. இந்த மாபெரும் பணியில் நம்நாட்டை அனைத்துத் துறைகளிலும் மேம்படுத்தும் பணியில் நம்மை இன்னும் முழுமையாக ஒப்படைத்துக் கொள்ள உறுதி ஏற்போம்.

நாம் ஆற்றும் கடமைகளில் இருந்துதான் உரிமைகள் பிறக்கின்றன. உரிமையைக் கேட்பதுதான் கடமை என்று எண்ணுதல் கூடாது. கடமையைச் செய்தால் உரிமை

நம்மைத் தேடி வரும் என்கிற மகாத்மாவின் மணிவாசகத்தை மனத்தில் இருத்தி, அவரவர் மேற்கொண்ட பணிகளை, குறையின்றி விரைவாகச் செய்து முடிப்போம். பெற்ற சுதந்திரத்தின் பயன்களை, அனைத்து மக்களும் அனுபவிக்க, வறுமையும், அச்சம், நோயும், இல்லாமையும், பேதங்களும் அற்ற புதிய சமுதாயத்தை அமைத்திட மக்கள் அத்தனை பேரும், கடமை உணர்வுடன் பாடுபட உறுதி ஏற்போம்.

கட்டுப்பாட்டுடன், ஒழுங்குடன், கடமைப் பற்றுடன், நமக்குள்ள பணிகளை ஆற்றி, சமுதாயத்தின் பயணத்தில், தடை ஏற்படுத்த நினைப்போரை ஒதுக்கி– புதிய இந்தியாவை, புதிய தமிழகத்தை உருவாக்க, நம் உழைப்பை நாட்டின் பொது நலனுக்கு ஒன்றுபட்டு காணிக்கையாக்கிட உங்கள் அனைவரையும் அன்புடன் இருகரம் கூப்பி அழைக்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

❖ ❖ ❖

(15.08.1982 அன்று, விடுதலைத் திருநாளையொட்டி தொலைக்காட்சி மற்றும் வானொலியில் ஆகியவற்றில் ஆற்றிய உரை)

சுதந்திரம் என்பது தன்மானத்தைக் காப்பது!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

நாம் எல்லோரும் ஓர் குலம் ஓர் இனம் என்று கருதி எப்படி இந்திய சுதந்திரம் பெற எந்தப் பிரச்சினையையும் கருதாமல் விடுதலை என்பதில் மட்டும் அக்கறை கொண்டு போராடினார்களோ, அதேபோல சுதந்திரத்தைக் காக்க பாடுபடவேண்டும்.

சுதந்திரம் என்பது தன்மானத்தைக் காப்பதுதான். வாழும் இடத்துக்கு தான் சொந்தக்காரன் என்பதை ஏற்படுத்திக் கொள்வது சுதந்திரம். என் மொழியை நான் வைத்துக் கொள்கிறேன் என்பது சுதந்திரம். நான் என்னுடைய உரிமையை இந்த நாட்டிலே பெற்றுத் தீருவேன் என்றால் அது சுதந்திரம். ஆகவே, எந்தமொழி பேசுகிறவர்களுக்கும் அவனுடைய மொழிக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும். எந்தக் கொள்கையையும் இந்த நாட்டில் சொல்வதற்கு அவனவனுக்கு சுதந்திரம் இருந்தாக வேண்டும். இதைத்தான் மகாத்மா காந்தி அவர்கள் சொன்னார்கள். ஆகவே, 35 ஆண்டுகளுக்குப் பிறகு 36 ஆவது ஆண்டு பிறக்கும் இந்தச் சுதந்திர நன்னாளில் இவையெல்லாம் பேசவேண்டி இருக்கிறது.

சுதந்திரம் கிடைத்தும் யாருக்குச் சுதந்திரம் வேண்டுமோ, எதற்குச் சுதந்திரம் கிடைக்க வேண்டுமோ, எந்த சமுதாயத்திற்கு சுதந்திரம் கிடைக்க வேண்டுமோ, யாருடைய மொழிக்கு சுதந்திரம் கிடைக்க வேண்டுமோ, யாருடைய தன்மான உணர்வுக்குச் சுதந்திரம் கிடைக்க வேண்டுமோ, யாருக்குப் பொருளாதாரச் சுதந்திரம் கிடைக்கவேண்டுமோ அதுஇன்னும்கிடைக்கவில்லை. கடவுளுக்காகவதுகிடைக்குமா என்பதற்காகத்தான் இங்கு கூடியிருக்கிறோம். அங்கே போய் இன்னார்தான் போக வேண்டும் என்று இல்லாமல் அந்தக் கடவுளை நம்புகிறவர்கள் அத்தனைப்பேரும் போய் அவரவர்கள் மொழியில் அவர்கள் வேதனையைச் சொல்ல வேண்டிக் கொள்ள உரிமை இருக்க வேண்டும். கடவுளின் முன்னேயாவது அல்லது கடவுள் முன்பாவது தெய்வத்தின் குழந்தைகள் என்று ஒன்றுபட வேண்டும். அதை நிறைவேற்றுவதற்காகத் தான் இத்தகைய காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இங்கே 14 கோடி ரூபாய் செலவில் 2 இலட்சம் பேருக்குத் துணி வாங்கிக் கொடுக்கிறோம் என்றார்கள். இதில் சுதந்திரம் கிடைத்துவிட்டது என்று சொல்வதற்குப் பெருமைப்படுவது ஒன்றுமில்லை. ஏழைகள் முதியவர்கள் அரசிடம் ஏதோ தானம் பெறுவதைப் போல, இந்தத் தாய்மார்கள் கையில் சேலைகளைக் கொடுக்கும்போது "நீ நன்றாக இரு" என்று சொல்கிறார்கள். இது என்னுடைய பணமா? இது மக்கள் பணம். மக்கள் கொடுக்கின்ற வரிப்பணத்திலிருந்து நான் அதை வாங்கிக் கொடுக்கிறேன்.

ஆனால், அந்தத் தாயும், பெரியவர்களும் சொல்கிறார்கள். "நீ வாழ்க!" என்று. என்னைச் சொல்வதாக எடுத்தக்கொள்ளவில்லை. எந்த மக்களிடத்திலிருந்து பணத்தை வாங்கி அதைச் செய்கின்றேனோ அந்த மக்கள் வாழ்ந்தாக வேண்டும் என்று அவர்கள் சொல்கின்ற வாழ்த்தாக நான் எடுத்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இவை அனைத்தும் வாழ்விழந்திருக்கிற அந்தப் பெரும்பான்மையான மக்களுக்கு நாம் செய்கின்ற அடிப்படைத் தொண்டாகும். அந்த வகையில்தான் ஏறத்தாழ தமிழ்நாட்டில் 63 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கிறோம் என்றால் அது இன்னும் அதிகமாகப் போகிறது. நகரங்களுக்கும் விஸ்தரிக்கப் போகிறது என்றால் 125 கோடி ரூபாயாக ஒருவேளை 150 கோடி ரூபாயாக உயர்ந்தாலும் அது மக்களுடைய பணம். குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து கொடுப்பதற்காகச் செலவு செய்கிறோம் என்ற மனநிறைவு அடைகிறோம். நோய் வந்தபிறகு, நோய்தீர்க்கும் மருந்தைக் கொடுப்பதை விட நோய் வராமலே பார்த்துக் கொண்டால் அந்த உடலுக்கு உள்ள தெம்பும், அதற்குள்ள வலிவும் மிக அதிகமானது.

யாரும் கல்வி கற்பதற்கு இன்னொருவருடைய தயவிலே வாழவேண்டிய சூழ்நிலை இந்த நாட்டிலே இருக்கக்கூடாது. யாரும் கடவுளை வணங்குவதற்கு நீ போகாதே முன்னால், நான் தான் போகவேண்டும் என்று சொல்வதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. இதேபோலதான் கலப்பு மணமானாலும் சரி, விதவைத் திருமணமானாலும் சரி அல்லது ஏழைகள் தங்களைத் தாங்கள் காப்பாற்றிக் கொள்வதற்கு உழைக்கிறோம் என்று முன்வந்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது என்று எண்ணித்தான் அடுத்த ஆண்டு முதல் குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை நிச்சயப்படுத்தப்பட வேண்டும் என்று நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம்.

இதன் நோக்கம் என்ன? வேலையில்லாமல் இருக்கிறார்களா தமிழகத்தில்? எந்தக் குடும்பத்திலாவது வேலை செய்யாமல் இருக்கிறார்களா? ஆனால் இன்று ஒருவர் வேலைக்குப் போய்விட்டு வந்தால் நாளைக்கு என்ன வேலை என்பது உத்தரவாதமில்லை. அதை ஒரு அரசு கொடுக்க முடியுமா என்றால் கொடுக்க வேண்டும் என்பது அண்ணாவின் கொள்கை, எங்களது கொள்கை. அதைச் செய்தாக வேண்டும். வழி கண்டுபிடித்தாக வேண்டும். மனம் உண்டானால் மார்க்கமும் உண்டு. விட்டுக்கொடுக்கும் தன்மை இருந்தால் எடுத்துக் கொள்ள வேண்டிய நிலைமை இருக்காது, பங்கு போட்டுக் கொள்ள மத்தியஸ்தம் தேவையில்லை.

எங்களைப் பொறுத்தவரை எந்தக் கட்சியில் யார் நல்லதைச் செய்தாலும் அவர்களைப் பாராட்டுவதில் பின் வாங்குவதில்லை. அதில் விட்டுக்கொடுப்பதில்லை.

இங்கே அமர்ந்திருக்கும் தாய்மார்களை விட, ஏற்றத்தாழ்வை மாற்றியமைக்கிறவர்கள் யாரும் இருக்க முடியாது. மக்கள் என்ன முடிவு செய்கிறார்களோ அதுதான் இந்த நாட்டின் முடிவு. குழந்தைகளைப் படிக்க வைப்பதில்

அக்கறை காட்ட வேண்டும். வதந்திகளை நம்பாதீர்கள். வதந்திகளை நம்புவீர்களானால் நிம்மதியாக இருக்க முடியாது. வதந்தியை நம்புவதற்கு முன் அது உண்மைதானா என்று தெரிந்து கொள்ள வேண்டும். எதையும் நாம் தாங்கிக் கொள்ளலாம். ஆனால் வதந்தியை நாம் தாங்கிக் கொள்ள முடியும், அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. என்ன ஆதாரம் என்று கேட்க வேண்டும்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(15.08.1982 அன்று, சென்னை மாங்காடு அருள்மிகு காமாட்சியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற பொது விருந்தில் ஆற்றிய உரை)

தமிழைக் காத்து வளர்த்துப் பெருமை சேர்த்து, மொழியால், தமிழினத்தை ஒன்றுபடுத்த முடியும் எனக் கூறும் நாள்!

திரு.வி.க. எழுதி என்.வி.என். எனக்கு அளித்த, 'இளமை விருந்து' என்னும் நூலில் உடலை எப்படிக் பேணிப் பாதுகாப்பது? இளமையை எப்படிப் பாதுகாப்பது? எப்படியெல்லாம் வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும்? என்று சொல்லியிருக்கிறார்.

இந்த நாட்டிலே இருக்கிற மக்கள், குழந்தைகள் வலிவூட்டப்பட்ட நிலையில் உள்ளத் திறத்தோடு ஒழுக்கம் மிகுந்த நாணயத்தோடு வாழ்க்கையை அமைத்துக் கொண்டால்தான் எதிர்காலத்தில் எந்த நாட்டோடும் நாம் போராட முடியும்.

திரு.வி.க. பல பிரச்சினை பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார். 50–60 நூல்களை எழுதியிருக்கிறார். அவைகளை நூலகங்களில் வைக்கும்போது மாணவர்கள் படிக்க வேண்டும். அப்படி அவர்கள் படித்தார்களானால் பெண்ணின் பெருமை மாணவியர்களுக்கத் தெரியும். ஆணின் கடமை ஆண்களுக்குத் தெரியும்.

தமிழகத்தில் எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் திரு.வி.க. போன்றவர்களின் சிலைகள் தோன்றவேண்டும். அரசு மட்டும் செய்யாமல் வசதி படைத்தவர்களும் இந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

தமிழைக் காத்து, வளர்த்து பெருமை சேர்த்து–மொழியால் தமிழினத்தை ஒன்றுபடுத்த முடியும் எனக் கூறும் நாள் இது. இந்த விழாவை ஏற்பாடு செய்தவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். இன்னொரு அறிவிப்பையும் இங்கே செய்கிறேன். சென்னை வெலிங்டன் திரையரங்கம் முதல் லஸ் முனைவரையுள்ள ஜெனரல் பேட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை நெடுஞ்சாலை என்று தற்போது அழைக்கப்படும் சாலை இனி, திரு.வி.க. நெடுஞ்சாலை என்று அழைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரிக்குத் "திரு.வி.க. அரசினர் கலைக்கல்லூரி என்று பெயரிடப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்".

அண்ணா நாமம் வாழ்க!

நன்றி, வணக்கம்!

(29.08.1982 அன்று , திரு.வி.க. நூற்றாண்டு விழாவினையொட்டி சென்னை, இராயப்பேட்டை வெஸ்லி உயர்நிலைப் பள்ளியில் நடந்த விழாவில் ஆற்றிய உரை)

சத்துணவுத் திட்டத்தால் பெற்றோர்களுக்குச் சுமை குறைகிறது!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

கட்டுப்பாட்டுடனும், கவனத்துடனும், கண்ணியத்துடனும் நின்று எனக்கு வரவேற்புக் கொடுத்த இளஞ்சிறுமியர்களைக் கண்டு பெருமைப்படுகின்றேன்.

உடல் வலிமையை எடுத்துக்காட்டும் வகையில் இங்கே இளம் சிறார்கள் உடற்பயிற்சி நடத்திக் காட்டினார்கள். அவர்களுக்கும் வரவேற்பு உரை நிகழ்த்திய சிறுமி லோக சுந்தரிக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய எண்ணமெல்லாம் குழந்தைகள் அறிவற்றவர்களாக இருக்கக்கூடாது என்பதுதான். எல்லோருக்கும் அறிவு சொந்தமாக்கப்பட வேண்டும். அதன் அடிப்படையில்தான் சத்துணவுத் திட்டம் கொண்டுவரப்பட்டது.

வேலைகளுக்கு விகிதாச்சாரம் வைக்கலாம். அதன் அடிப்படையில் வேலை கொடுக்கலாம். ஆனால் அறிவை எப்படிக் கொடுக்க முடியும்?

சத்துணவுத் திட்டம் மூலம் பெற்றோர்களுக்குச் சுமை குறைகிறது. குழந்தைகள் ஒருவருடன் ஒருவர் நெருங்கிப் பழகுகிறார்கள். வகுப்பு வேற்றுமையை இளமையிலேயே மறந்திட இத்திட்டம் பயன்படும். எல்லோரும் சமத்துவ நிலையில் இருக்க வேண்டும். இதற்கு ஏற்ப குழந்தைகளை வளர்க்க வேண்டும்.

நாங்கள் யாருடைய பணத்தையோ கொண்டுவந்து பிச்சைபோடவில்லை. ஒவ்வொருவரும் பட்டினி கிடக்காமல் இருக்க வேண்டும். நாட்டில் வறுமை இருக்கும் வரை இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

நாங்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவோம் என்று தேர்தல் வாக்குறுதியில் கூடச் சொல்லவில்லை. ஆனால் செயல்படுத்தி வருகிறோம்.

இன்று ரூ.130 கோடி செலவில் இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது. நாங்கள் திட்டம் தீட்டிக் கொடுக்கின்றோம். அரசு பணம் ஒதுக்குகின்றது. மாவட்ட ஆட்சித்தலைவரும் மற்ற அதிகாரிகளும் செயல்படுத்துகிறார்கள். தவறுகள் செய்பவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள். மக்களாகிய உங்களை நம்பித்தான் இத்திட்டத்தைக் கொண்டு வந்துள்ளேன். என்னை நம்பி அல்ல, நீங்கள் இதைக் கண்காணிக்க வேண்டும்.

தற்போது வயது முதிர்ந்தோர் 1.5 இலட்சம் பேருக்கு உதவிப்பணம், வேட்டி, அல்லது புடவை கொடுக்கப்படுகின்றது. வருகின்ற 1983 ஆம் ஆண்டு சனவரி மாதம் பொங்கல் நாள் முதல் இலவசமாக மதிய உணவு முதியோர்க்கு அளிக்கப்படுவதற்குத் திட்டமிட்டு இருக்கின்றேன். இத்திட்டத்திற்கு நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்யப்படும்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(16.09.1982 அன்று, மதுரையில் நடைபெற்ற சத்துணவுத் திட்ட துவக்க விழாவில் ஆற்றிய உரை)

வனத்தைப் பாதுகாப்பது
நாட்டின் வளத்தைப் பாதுகாப்பதாகும்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

நாம் வாழ்வதற்கு உயிரினங்கள் எந்த அளவுக்குத் துணை புரிகின்றன என்பதை நாம் அன்றாடம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அப்படி இருந்தாலும் அதில் நாம் அக்கறை காட்டுவதில்லை.

தேள் கொட்டி விடுகிறது என்று அடித்துக் கொல்லுகிறோம். ஆனால், விஷப் பூச்சியைக் கொல்லுவதற்குத் தேள் தேவைப்படுகிறது. இப்படி ஒவ்வொரு உயிரினமும் ஒவ்வொரு வகையில் உதவி புரிகின்றது. இப்படிச் சொல்லுவதால் ஏதோ பெரிய ஆராய்ச்சியில் இறங்குகிறேன் என்று யாரும் நினைக்க வேண்டாம்.

ஒரு தடவை மைசூரில் படப்பிடிப்புக்காகச் சென்றபோது, கொக்குகளைத் துப்பாக்கியால் 15 அல்லது 20 முறை எளிதாகச் சுட்டும் அது குறி தவறிப்போய்விட்டது. படப்பிடிப்பும் முடியும் கட்டம் வந்தது. அப்போதும் கூட, மிக அருகில் இருந்து ஒரு கொக்கைக் குறிபார்த்துச் சுட்டேன். அது கீழே விழவில்லை. ஏன் என்றால் குண்டு வெடித்தால்தானே? அன்று முதல் இந்தப் பழக்கத்தை அடியோடு விட்டுவிட்டேன்.

அப்படி வனவிலங்குகளை வேட்டையாடுவது தேவைதானா என்று சிந்தித்துப் பார்த்தால் எப்படிப்பட்ட இழி செயலைச் செய்தோம் என்று நாமே வெட்கப்படுவோம்.

அதனால்தான் என்னையே நான் உதாரணமாக்கிக்கொண்டேன். ஒரு தடவை பழக்கமாகிவிட்டால் அது வழக்கமாகிவிடுகிறது. இப்படி வன விலங்குகளை வேட்டையாடுவதால் நாட்டின் வளம் பாழாகிறது.

சென்னையில் தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். இதற்குக் காரணம் நன்றாக இருந்த மரங்களை எல்லாம் வெட்டி வீழ்த்தியதால் என்பது புலப்படுகிறது. இதே தவறை நாமும் செய்து, வருகின்ற தலைமுறையினருக்குக் கஷ்ட நஷ்டங்களை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதற்காகத்தான் காடுகளை வளர்க்கவும், பாதுகாக்கவும், நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

சத்துணவுத் திட்டத்தால் பயன்பெறும் 9 முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அடுத்த கட்டமாகத் தோட்டக்கலையும் சொல்லிக் கொடுக்கப்படும். இப்படிச் சொல்லிக் கொடுத்து அவரவர்களுக்கு இவ்வளவு என்று பிரித்துப் பராமரிக்க விட்டுவிட்டால் போட்டி மனப்பான்மை ஏற்பட்டு, காய்கறி உற்பத்தி பெருகும்.

அவரவர்கள் வீட்டுத் தோட்டத்தில் காய்கறி போட்டுக் குடும்பத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பகுதி என்று பிரித்துப் பராமரித்தால் காய்கறி உற்பத்தி அதிகரிக்கும். வீட்டுத் தேவையும் பூர்த்தியாகும்.

தமிழ்நாட்டில் 1 கோடி டன் விறகு தேவைப்படுகிறது. 1 இலட்சம் டன் விறகுதான் கிடைக்கிறது. அதனால் விலை ஏறுகிறது. இதை எப்படி அதிகரிப்பது? மரங்கள் வளர்ச்சி பெற்றால்தானே? மரங்களை அடியோடு வெட்டிக் கொண்டே போனால் என்ன ஆகும்? இதை யாரும் புரிந்து கொள்வது இல்லை.

வனத்தைப் பாதுகாப்பது நாட்டின் வளத்தைப் பாதுகாப்பது போன்றதாகும்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

❖ ❖ ❖

(01.10.1982 அன்று, அனைத்து இந்திய வன விலங்குக் கண்காட்சித் துவக்க விழாவில் ஆற்றிய உரை)

அண்ணாவின் எண்ணத்தைச் செயல்வடிவம் பெறச் செய்கிறோம்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

தில்லையாடி வள்ளியம்மை மாளிகை என்ற பெயரில் சென்னை எழும்பூர் பாந்தியன் சாலையில் அமைக்கப்பட்டுள்ள விற்பனைக் கூடத்தைத் திறந்து வைக்கும் வாய்ப்பு நல்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்களுக்கு எத்தகைய ஆபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நினைவுபடுத்திப் பார்த்தால் இந்த நிகழ்ச்சியில் பெருமையும் நிம்மதியும் மனநிறைவையும் பெற முடியும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு புயல் வீசித் தொல்லை தந்தபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் நிதி பெற்று, துன்பத்திற்கு ஆளானவர்களுக்கு அளிக்க வேண்டும் என்றார்.

எவ்வளவோ கஷ்டப்பட்டு உண்டியல்கள் ஏந்தி வசூலித்து 25 ஆயிரம் ரூபாய் தந்தபோது அதைப் பணமாகத் தராமல் கைத்தறி ஆடையாகத் தர வேண்டும் என்றார். துன்பத்திற்குள்ளானவர்களுக்கு ஆடை தரவேண்டும். அதே நேரத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கும் 25 ஆயிரம் ரூபாய் சென்று சேரவேண்டும் என்பதுதான் அண்ணாவின் எண்ணம். ஒரு காரியம் செய்யும்போது அது நேரடியாகச் செல்லாமல் பல்வேறு வகையில் சென்று பயன் தரவேண்டும் என்று அறிஞர் பெருமக்கள் கருதுவார்கள்.

கைத்தறித் துணி விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்தபோது அண்ணா அவர்கள் தலையில் சுமந்துவிற்றார். தம்பியர்களையும் விற்கச் செய்தார். எங்களால் முடிந்தது இதுதான். ஆட்சியிலிருப்பவர், தங்களால் முடிந்ததைச் செய்யட்டும் என்றார் அண்ணா. அந்த வகையில் அண்ணாவின் எண்ணத்தைச் செயல்வடிவம் பெறச் செய்கிறோம் என்பதில் ஓரளவு நிம்மதி பெறுகிறோம்.

கைத்தறி நெசவாளர்களுக்கு முழுமையாகப் பாதுகாப்புக் கொடுத்து விட்டோமா என்றால் இல்லை என்று தான் கூறவேண்டும். சங்கம் வைத்திருப்பவர்கள், அந்தப் பலத்தின் அடிப்படையில் சிலவற்றைத் தங்கள் சலுகைகளாகப் பெற முடிகிறது. 65 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கிறோம். இதனால் அந்தக் குடும்பங்கள் திருப்தி அடைகின்றன. அந்தக் குடும்பங்களுக்கு வசதி இல்லை என்றுதானே பொருள்? வசதி இருந்தால் அனுப்புவார்களா?

சத்துணவுத் திட்டத்தில் ஆசிரியர்களை வேலை வாங்கும் எண்ணம் எங்களுக்கு இல்லை. அவர்கள் பாடம் சொல்லித் தரட்டும். படித்த பெண்களைச் சத்துணவு அளிக்க நியமிக்க இருக்கிறோம். உண்ண வரும் குழந்தைகளை இடைக்காலத்தில் கொஞ்சம்

கவனிக்க வேண்டாமா? ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் ஒத்துழைப்புத் தருகிறார்கள். ஒரு சிலர் மாறான கருத்துக்களை வெளியிடுகிறார்கள். அவர்கள்கூட இதுவரையில் ஒத்துழைப்புத் தந்திருக்கிறார்கள்! ஒத்துழைக்காமல் இல்லை!

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டித் தருகிறோம். அவர்கள் வாழ முடியாதவர்கள் வாழ்வு இழந்தவர்கள் மற்ற பகுதியினரான குடியான மக்களுக்கும் செய்ய வேண்டியிருக்கிறது. கைத்தறி நெசவாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டம் கொண்டு வந்திருக்கிறோம். மக்கள் வீடு வசதி பெற, வீட்டு வசதி வாரியம் வீடுகள் கட்டித்தருகிறது. குடிசை மாற்று வாரியம் வீடு கட்டித் தருகிறது. இதைப் போலவே நெசவாளர்களுக்குச் செய்து கொடுக்கக் கூடாதா? ஒருவருக்கு ஒரு நீதி, மற்றவருக்கு ஒரு நீதியா? நான் எல்லோரையும் ஒரே நிலையில் வைத்துத்தான் பார்க்கிறேன். அறிவுக்கு ஏற்ப, திறமைக்கு ஏற்ப மதிக்க வேண்டியதுதான். ஆனால் பசிபோக்க வழி செய்தாக வேண்டும்.

மற்ற மாநிலங்களில் இருந்துவரும் விசைத்தறித் துணியைத் தடுக்க நமக்கு அதிகாரமில்லை. அதைச் செய்ய அதிகாரம் இருந்தாக வேண்டும்.

கைத்தறித்துறை வளர்ச்சிக்கு மத்திய அரசு உதவி செய்தது குறித்து இங்கே எடுத்துக் கூறினார்கள். இதுபோல மத்திய அரசு எல்லாவகையிலும் ஒத்துழைக்க வேண்டும். நமது உழைப்பு அனைவருக்கும் உதவியாக இருக்க வேண்டும்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(27.10.1982 அன்று, சென்னை எழும்பூரில் புதிதாக அமைக்கப்பட்ட கைத்தறி விற்பனைக் கூடத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை)

நாட்டின் நன்மையே
நமது குறிக்கோளாகட்டும்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

மக்களுக்கு நல்லவைகளைச் செய்ய வேண்டும். அதற்குத் தடையாக யாரும் இருக்கக் கூடாது. அப்படித் தடையாக இருப்பவர்கள் தடுக்கப்பட வேண்டும் என்பதை நான் சொல்ல வேண்டிய சந்தர்ப்பத்தை உருவாக்கிவிட்டார்கள்.

மறைந்த மாபெரும் தலைவர், தமிழர், தமிழன்பர் தியாகி, ஜாதி பேதத்திற்கு அப்பாற்பட்டவர், உணர்ச்சி வசப்படாதவர், நான் – மதிக்கும் நான் என்றும் மறவாத மனிதர் ஜீவானந்தம் அவர்களது பெயரை இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு வைத்துள்ளோம்.

இதற்காக மற்றவர்கள் பாராட்டும்போது நான் பெருமைப்படவில்லை. எல்லோர் உள்ளத்திலும் நிறைந்துள்ள ஒருவருக்கு இது ஒரு சிறு விழாவாகும்.

நாகர்கோவிலில் அமைந்த போக்குவரத்துக் கழகத்திற்கு ஜீவாவின் பெயரை வைக்க விரும்பினோம், ஆனால், அவரது பெயரை அங்கே வைக்க எதிர்ப்பு வந்தது. அதற்காக வேதனைப்படுகிறேன்.

ஓரிடத்தில் ஒருவர் பெயரை வைக்க முற்படும்போது, ஜாதி மற்றும் பல பிரச்சினைகள் குறுக்கிடுகின்றன. ஜாதி ஒழிய வேண்டும் என்று சொல்கிறோம். ஆனால், எங்கிருந்தோ ஜாதிகள் வந்துவிடுகின்றன. மறைந்த நேசமணி எனக்கு எதிரியல்ல. அவரையும்தான் நான் வணங்குகிறேன் போற்றுகிறேன். இப்போது நாகர்கோவில் போக்குவரத்து கழகத்திற்கு அவரது பெயர் வைக்கப்பட்டு இருக்கிறது.

இங்கே ஜீவாவின் பெயர் சூட்டப்படுகிறது. எனக்கும், ஜீவாவுக்கும் தொடர்பு இருந்தது. நான் என் முதல் படமான 'சதிலீலாவதியில்' நடிக்கும்பொழுது மறைந்த கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் ஜீவாவை எனக்கு 1933இல் அறிமுகம் செய்துவைத்தார்.

அப்போது அவர் காங்கிரசில் இருந்தார்; சுயமரியாதை இயக்கத்தில் தொடர்பு கொண்டிருந்தார் அதன்பிறகு அவர் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றினார். இரவு பகல் என்று பாராமல் இந்தியாவின் விடுதலைக்காகத் துன்பங்களைத் தாங்கியவர். வெள்ளைக்கார அதிகாரிகள் ஜீவாவைத் துரத்தியபோது தப்பி ஓடினார். ஒரு குப்பை மேட்டில் அரைமணி நேரம் பதுங்கி இருந்துவிட்டு, மீண்டும் தப்பி ஓடினார்.

நான் தி.மு.கவில் இருந்தபோது பேரறிஞர் அண்ணாவின் மானத்தைக் காக்க வேண்டும் என்பதற்காக எம்.எல்.சி பதவியை ராஜிநாமா செய்தேன். அப்போது ஜீவா அவர்கள் என்னைச் சந்தித்தபோது நீங்கள் ஏன் எம்.எல்.சி. பதவியை ராஜிநாமா செய்தீர்கள். கட்சியைவிட்டு விலகப் போகிறீர்களா ? என்று கேட்டார்.

நீங்கள் கட்சியை விட்டு வெளியே போகக்கூடாது. அப்படி வேறு எப்போதாவது கட்சியை விட்டு வெளியே போக வேண்டிய நேரம் வந்தால் எந்தக் கட்சிக்கும் போகக் கூடாது. தனி மனிதராக இருந்து செயல்படுங்கள் என்ற அறிவுரை கூறினார். நான் கட்சியைவிட்டு விலகாமல் இருப்பதில் அவருக்கு என்ன இலாபம் என்று பார்க்கவில்லை. அப்படிப்பட்ட மனிதர் அவர். அவருடைய பெயரை இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு வைக்கிறோம்.

நான் காலையில் திருப்பூருக்கு ஒரு திருமண விழாவிற்குச் சென்றேன். அங்கே சென்றபோது ஒரு சத்துணவுக் கூடத்திற்குச் சென்றேன். அங்கு இருக்க வேண்டிய ஓர் ஆசிரியர் அந்தப் பணியைக் கவனிக்க வரவில்லை.

ஏன் அவர் வரவில்லை என்று கேட்டேன். வேலை நிறுத்தம் செய்கிறார்; வரவில்லை என்ற கூறினார்கள் இந்த ஆண்டு டிசம்பர் 15ஆம் தேதிக்குள் 33,500 பேர்களை மதிய உணவுப் பணிக்காகத் தேர்ந்தெடுக்க விளம்பரம் செய்திருக்கிறோம். அவர்களும் மனுக்களை அனுப்பி வருகிறார்கள். மனுக்களை ஆராய்ந்து, தக்கவர்கள் தேர்ந்து எடுக்கப்படுவார்கள். இவர்கள் நியமனம் செய்யப்பட்ட பிறகு ஆசிரியர்கள் வேலைப் பளுவைக் குறைக்க முடியும்.

கடந்த ஐந்து மாத காலமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறார்கள். தங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களைத் தாங்கி வருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இன்னும்15 நாள் தாங்க முடியாதா ?

நல்லதை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள், நல்ல எண்ணத்தை எப்படிக் குழந்தைகளுக்குக் கற்றுத் தர முடியும் ? ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்பார்கள்.

நல்லதைச் சொல்லித் தர வேண்டியவர்களே இப்படிச் செய்தால் அவர்களிடம் படிக்கும் பிள்ளைகள் எப்படி மாறுவார்கள் ? இதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எல்லோரும் இப்படி இருக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. ஒருசிலர் தான் இப்படிச் செயல்பட மறுத்து வருகின்றனர்.

நான் சென்ற அந்தச் சத்துணவுக்கூட வேலைகளைக் கவனிக்க அந்த ஆசிரியருக்குப் பதில் பக்கத்தில் உள்ள ஒரு பால்வாடியில் பணியாற்றும் ஒரு தாய் வந்து கவனித்து வந்தார். தன் பணியோடு அந்தப் பள்ளிப் பணியையும் சேர்த்துக் கவனித்தார். அவரது பணியைப் பார்த்தபோது எனக்குக் கண்ணீர் வந்தது. அந்த அளவுக்கு அவரது பணி இருந்தது.

நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம், வருமானம் இல்லாத நிலை, வறுமைக்கோட்டிற்குக் கீழே 50 சதவிகித மக்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் நாம் சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம்.

எத்தனை இலட்சம் ஏழைக் குடும்பத்து குழந்தைகள் சத்துணவு சாப்பிடுகிறார்கள் என்று பார்க்க வேண்டும். மனத்தில் மனிதத் தன்மை இருக்க வேண்டும்.

பல இலட்சம் குழந்தைகள் நலனை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நல்ல பணியை விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர், தங்கள் கட்சித்தலைவர் சொல்லைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக மாறுபட்டுச் செயல்படுவது சரியல்ல.

இந்த நிலை வளர்ந்தால் நாட்டில் நன்மை செய்வதற்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(28.11.1982 அன்று, ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை)

இதயத்தின் குரல்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

அஸ்திவாரம் உறுதியாக இருந்தால்தான் அதன்மீது கட்டப்படும் கட்டடம் உறுதியாக இருக்கும். அப்படித்தான் வங்கம், தமிழகம் இரண்டும் காலங்காலமாக அன்பாலும், பாசத்தாலும் பிணைந்திருக்கின்றன. இந்த இணைப்பு இதயங்களின் கலப்பு தொடர்ந்திருக்க வேண்டும். இந்த இணைப்பு மேம்போக்காக இல்லாமல் இதயத்தின் ஆழத்திலிருந்து எழுவதாக அமைதல் வேண்டும்.

இதயத்திலிருந்துஎழுகிறஎண்ணங்கள்தான்எப்பொழுதும்நிலைக்கும்.பாரதியாரின் கவிதைகளும் நிலைப்பதற்கு அவைகள் இதயத்தின் குரலாக இருந்ததுதான் காரணம். ஆகவேதான் பாரதி, உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறான்.

மேற்குவங்க அரசின் பலமான அஸ்திவாரமும் அதன்மீது எழுப்பப்பட்டிருக்கிற தமிழக அரசின் அன்பளிப்பான பாரதி சிலையும் இரு மாநிலங்களின் இணைப்புகளாக இதய ஒற்றுமையைக் காட்டுகின்றன.

பாரதியார் தமது கருத்துக்களை ஒரு மதத்திற்காகச் சொல்லவில்லை. ஒரு மாநிலத்திற்காகச் சொல்லவில்லை, உலகத்திற்காகச் சொன்னார். உலகம் முழுவதற்குமாகச் சொன்னதால்தான் மகாகவி பாரதியாராக இங்கே வாழ்ந்தார். அவரது வாழ்க்கையில் அவர் எத்தனையோ உதாரணங்களைச் சொல்லியிருக்கிறார். குறிப்பாக அவர் சொன்னதை நான் இங்கே எடுத்துக் காட்ட வேண்டியது எனது பெரும் கடமை என எண்ணுகின்றேன். மனிதர்களுக்குள்ளேதான் சாதியைப் பற்றிச் சொல்லுகின்றார்கள். ஆனால் மிருகங்களைக்கூட சாதி வாரியாக நாம் பிரித்துவிட்டோம் என்று அவர் குறிப்பிடுகின்றார். பார்ப்பனப் பாம்பு, பறப் பாம்பு என்று பாம்புகளில் கூட பிரிவினையை, சாதியை ஏற்படுத்திவிட்டோம் என்று அவர் குறிப்பிடுகின்றார். ஏறத்தாழ 60 அல்லது 70 ஆண்டுகளுக்கு முன்பு சொன்னார் என்பதை எண்ணும்போதுதான் அந்தக் காலத்தில் இருந்த மக்கள் எவ்வளவு நம்பிக்கையோடு இருந்தார்கள்? அவர்கள் மத்தியில் சொல்லும் பொறுப்பினை அன்று பாரதியார் ஒருவரால்தான் பெற முடிந்தது என்பதை எண்ணும்போது அதுதான் மகாகவி பாரதியார் என நம்மால் பாராட்டப்பட வேண்டிய தகுதி உடையவராகிறார்.

மாதச் சம்பளம் பெற முடியாத, நடந்து போகக்கூடச் சக்தியற்ற, தையல் போடாத சட்டடையப் போட்டுக்கொள்ள முடியாத நிலையில் இருந்த ஒருவர் பணத்தைச் சம்பாதிக்கச் செல்லாமல், ஏதோ பாட்டை எழுதினோம் அதனால் புகழ் அடைந்தோம் என்று அதைப்பற்றி மட்டும் கவலைப்படாமல் நாட்டைப் பற்றி, சமுதாயத்தைப்பற்றி அவர் அக்கறை காட்டினார்; அதற்காக எழுதினார் என்றால் நாம் நினைத்து நினைத்து பாராட்டி அஞ்சலி செலுத்த வேண்டிய ஒருவராக பாரதியார் நம்முன் நின்று

கொண்டிருக்கின்றார். எல்லா மதத்தினரும் அவரைக் கோபித்துக் கொண்டார்கள். எங்கும் அவருக்கு வேலை கிடையாது. கொடுக்கப்பட்ட இடத்திலும் அதற்கு எச்சரிக்கையும் சம்பளக் குறைவும்தான் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக பிரிட்டிஷ் ஆதிக்கம் அவரைத் துரத்திப் பாண்டிச்சேரிக்கு அனுப்பி வைத்தது. இவ்வளவுக்கும் இடையில்தான் புரட்சிகரமான கருத்துக்களை நாட்டில் பரப்பினார் என்பது, இரவீந்தரநாத தாகூர் அவர்கள் கவிதை எழுதும்போது பாராட்டினார் என்பதையும், வந்தே மாதரம் கீதத்தை உருவாக்கியபோது அவர்தான் முதலில் அதை எழுதி மக்கள் மத்தியிலே தமிழகத்தில் பரப்பினார் என்பதையும் நான் எடுத்துச் சொன்னால் அதைக் கேட்கின்றவர்கள் அதிசயிக்க மாட்டார்கள். என்றாலும் தங்கள் உள்ளத்திலே கேட்காமல் இருக்கமாட்டார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இன்றைய தினம் நாம் சொல்லுகிறோம் விதவையைத் திருமணம் செய்யலாம் என்று அன்று பேசவே முடியாது. ஆனால், அன்றைய தினம் அவர் அதற்காகப் போராடினார். பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டுமென்று வாதாடினார். பெண்களை யாருக்கும் அடிமையாக்கக் கூடாது என்று அவர் சொன்னார். எல்லாவற்றுக்கும் மேலாக ஒருவன் பட்டினி கிடந்தால் கூட இந்த உலகத்தையே அழிக்க வேண்டும் என்று சொன்ன ஒரே ஒருவர் பாரதியார் மட்டும்தான். அந்தக் குறிப்பிடத்தக்க ஒருவர், இந்தியா முழுமைக்கும் என்றும் சொந்தம் என்று சொன்னால் உலகத்திலே இருக்கின்றவர்கள் எப்பொழுது வேண்டுமென்றாலும் தெரிந்து கொள்ளட்டும். ஆனால், வங்காளத்திலே, வங்காளத் தலைநகரத்திலே இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படும் என்று இன்று அறியும்போது, இந்தியா எந்த அளவிற்கு மாநிலத்திற்கு மாநிலம் தொடர்பு வைத்திருக்கிறது என்பதையும், அண்ணன், தம்பியாக இருக்கிறோம் என்பதையும் இங்கே மற்றவர்கள் சொன்னதை நான் அடையாள பூர்வமாக ஏற்றுக்கொள்வது மட்டுமல்ல, தலைவணங்குகிறேன் என்று கூற விரும்புகிறேன்.

சில ஆஸ்தீக நம்பிக்கையுள்ளவர்களுக்கு மழை வருவது ஒரு நல்ல அடையாளம் என்று சொல்வார்கள். அதிலும் வறட்சிப் பாகத்திலிருந்து வந்திருக்கின்ற நான் இங்கே மழை பொழிவதைப் பார்க்கும்போது பெருமகிழ்ச்சி அடையத் தவறமாட்டேன். இந்தப் பெயரை வைக்கும் போதே மழைத் தூற்றல் போடுகிறது என்றால் இந்தக் கொள்கையை ஏற்றக்கொண்டால் நாம் எவ்வளவு வளமாக வாழ முடியும் என்பதற்கு இதை அடையாளமாகக் கொள்ள முடியும் என்று கருதுகின்றேன்.

அவருடைய கொள்கையை நான் மீண்டும் வற்புறுத்துகிறேன். அந்தக் கொள்கையை பின்பற்றினால் அன்றி இந்தியாவிற்கு விமோசனமில்லை என்பதைச் சொல்லி, இத்தகைய வாய்ப்பைத் தந்ததற்காக முதலமைச்சர் அவர்களுக்கும், குழுவினருக்கும் என் நன்றியைக் கூறி, வாழ்க பாரதி நாமம், அண்ணா நாமம் என்று சொல்லி விடை பெறுகிறேன்.

(1982ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற மகாகவி நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை)

முதியோருக்கும் கல்வி தேவை!

தனக்கெனத் தனி வரலாறு கண்ட இச் சென்னை மாநகரில் அதன் தனிச்சிறப்புக்கு இங்கு நடைபெறும் வயது வந்தோர் கல்வி ஆய்வு அரங்க மாநாடு அமையும் எனக் குறிப்பிட விரும்புகிறேன்.

உலகெங்கிலுமுள்ள கல்வி வல்லுநர்கள் இங்கு பங்கு பெறுகிறார்கள் என்பதை எண்ணி எண்ணி மகிழ்கிறேன். இதற்குத் தனிப்பட்ட முறையிலும்–அமைச்சரவையின் சார்பிலும் தமிழக மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு நடைபெறும் இந்த மாநாடு தமிழகத்துக்குத் தனிச்சிறப்பை வழங்கும் வகையில் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் இங்கு வந்திருப்பதை எண்ணிப் பார்க்கும் போது, தமிழகத்தைப் பெரிதாக மதிக்கிறீர்கள் என்று நான் கருத வேண்டியுள்ளது.

வயதுவந்தோர் கல்வி, அறிவுதரும் பணியாகும்; மற்றவர்களுக்கு வழிகாட்டி இருக்கும். நீங்கள் எடுக்கவிருக்கும் முடிவுகள், தரப்படும் கருத்துகள், மக்களை வாழவைக்கப் போகிறது என்பதை எண்ணிப் பெரு மகிழ்வு கொள்கிறேன்.

படிப்பறிவு இந்தியத் துணை கண்டத்தைப் பொறுத்த அளவில் 31 சதவிகிதம் என்றும், தமிழகத்தைப் பொறுத்த அளவில் 46 சதவிகிதம் என்றும் இருப்பதிலிருந்து உண்மையைப் புரிந்து கொள்ள உதவும் என்று கருதுகிறேன்.ஆனால் நாங்கள் பொறுப்பேற்ற பிறகு படியாதவர்தொகை குறைகிறது என்பதுடன் வயதுவந்தோர் கல்வி அதிகரிக்கப்பட்டு ரூப்ஸ்கயா பரிசு பெறும் அளவுக்கு எங்கள் கடமைகளை ஆற்றியிருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

பால் மாக்கி அவர்கள், ஜனநாயகம் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். ஜனநாயகம் என்பதை நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். அமரர் நேரு அவர்கள், வயது வந்தோர் அத்தனை பேருக்கும் வாக்குரிமை என்று சொன்னார். எந்த அடிப்படையில் சொன்னார் என்பது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

கல்வி எந்த அளவுக்குத் தேவையோ அதைப்போல ஒரு மனிதனுக்கு அனுபவம் தேவைப் படுகிறது. அனுபவத்துக்கு ஈடாக வேறு எதுவும் கிடையாது. மகாத்மா காந்தி ஆதாரக்கல்வி வேண்டும் என்று சொல்லியதை மனத்தில் எண்ணிப்பார்க்க வேண்டும். அடிப்படைக்கல்வி உணர்வு கொள்ளவேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார் என்று தான் நாம் கருத வேண்டும்.

தமிழக அரசைப் பொறுத்த அளவில் நாங்கள் எங்கள் தலைவரென மதிக்கும் அமரர் அண்ணா அவர்கள் சொல்லிய கருத்துக்களை மறக்கவில்லை; அவர் சொல்லிய வழியில் செல்கிறோம். அனுபவத்தைச் சரிவரச் செயல்படுத்த வேண்டுமென்றால் கல்வி வேண்டும் என்பது அவர் கொள்கை.

அந்த வகையில் நாங்கள் 11 ஆயிரம் பள்ளிகளுக்கு முதியவர்களை அனுப்புகிறோம் என்று சொல்வதில் பெருமையடைகிறோம். ஏறத்தாழ 3 இலட்சத்து 60 ஆயிரம் முதியவர் கல்வி கற்கின்றனர். இந்த 3 இலட்சத்து 60 ஆயிரம் பேர் கற்றுக் கொள்ள மாலை நேரத்தை எடுத்துக் கொள்கிறார்கள் என்பது எங்களுக்குத் திருப்தியைத் தருகிறது என்றாலும் சில அடிப்படை மாறுதல்களைச் செய்ய விரும்புகிறோம்.

எழுத்தை, எண்ணைக் கற்றுக் கொடுத்து அவற்றின் மூலம் அனுபவம் கொடுக்க காலம் அதிகமாகிவிடுகிறது. அந்த வகையில் புதிய கல்வி முறையை அறிமுகப்படுத்த ஆவல் உள்ளவர்களாக இருக்கிறோம். அதற்கு உங்களின் யோசனைகள் புதிய திட்டங்களாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்தியத் துணை கண்டத்தில் பல ஜாதி, மதம் உள்ளன. எல்லோரும் ஒன்று என்று பாரதியார் சொல்லியதை இந்த நேரத்தில் நினைவு படுத்த வேண்டியவனாக இருக்கிறேன். குறிப்பாக தமிழ்நாடு, பொதுவாக எந்த அளவு ஒற்றுமையுடன் வாழமுடியுமோ அந்த அளவு ஒற்றுமையுடன் நடந்து வருகிறோம் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு அடிப்படையாக பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்துள்ள பண்பாடுதான் காரணம் ஆகும்.

பண்பாடு இன்றி, கல்வி மட்டும் ஒருவரை நல்லவராக்க முடியாது. ஆகவே கல்வி, பண்பாட்டோடு அமைய வேண்டும். அப்படி இருக்கும் போதுதான் உங்களது போக்கு எங்களின் வரவேற்புக்கு ஒத்துக் கொள்ளும் நிலை உருவாகியுள்ளது என்பதை இங்கு சொல்லிக் கொள்கிறேன். உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்களைப் போலப் பண்பாடு இருக்கிறது. அதன் அடிப்படையில் தோன்றும் நோக்கங்கள் மக்களுக்கு நல்வாழ்வு கொடுக்க வேண்டும் என்ற நேரடி உணர்வு அத்தனையும் நம்மை ஒற்றுமைப்படுத்தியிருக்கிறது. இதற்கு அடிப்படை – குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல், வயதுவந்தோர் அறிவு பெறுவதற்கு நீங்கள் முயற்சி செய்வது, இன்று பலருக்கும் புரியாவிட்டாலும், எதிர் காலத்தில் இதைப் புரிந்து கொள்ளும் நிலை உருவாகும் என்று நம்புகிறேன். இதைக் கூறுவதில் நல்ல அனுபவம் எனக்கே இருக்கிறது.

நான் ஒரு கிராமத்துக்குச் சென்றபோது அங்கு முதியோர் ஒருவரைச் சந்தித்து, “நீங்கள் ஏன் முதியோர் பள்ளிக்குச் செல்லவில்லை” என்று கேட்டேன். “இனிமேல் பள்ளிக்குச் சென்று என்ன பயன் எனக்கு” என்று கேட்டார் அவர். “வயது வந்தோர் இனிமேல் கல்வி கற்று என்ன செய்யப்போகின்றனர்” என்று கேட்பவர்களும் உள்ளனர். முதியவர்கள் ஓர் அகராதி என்பதை அவர்கள் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். முதியவர்கள் தரும் பதில் அகராதிகளில் கூடக் காணமுடிவதில்லை.

நான் அமெரிக்க சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்த போது இரண்டொரு நாட்கள் நைரோபியில் தங்கும் வாய்ப்புப்பெற்றேன். மகாத்மா காந்தியை நைரோபி மக்கள் மதிக்கிறார்கள். ஒவ்வொருவரும் அவரைப் பாராட்டுகிறார்கள். கறுப்பர்

எனப்படும் அவர்களுக்கு விடுதலை வாங்கித்தந்தார் அவர் என்ற உணர்வைப் பெற்றிருப்பதாகச் சொன்னார்கள்.

அமெரிக்கா சென்று பார்த்த போது வெள்ளையர்களும் கறுப்பர்களும் அங்கு ஒற்றுமையாக வாழ்ந்து வருவதைக் கவனித்தேன். முதியவர்கள் எல்லாம் கடவுள் போல எண்ணி வணங்கப்படுகிறார்கள். அதுபோன்ற உணர்வுகளை முதியவர்கள் பெற்றிருந்தாலும் கூட அதை அவர்கள் வெளியில் சொல்ல – எழுதிக்காட்ட நீங்கள் எல்லாம் பணிபுரிகிறீர்கள் என்பதை நான் நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். ஜனநாயகம் காப்பாற்றப்பட பண்பாட்டை – கல்வியை – ஒற்றுமையை – முதியோர்களுக்குக் காட்ட ஒட்டுமொத்தமாக உலாவரச் செய்யும் முயற்சி தேவை.

அண்ணா நாமம் வாழ்க !

(14.12.1982 அன்று, சென்னையில் நடைபெற்ற வயது வந்தோர் கல்விக் கருத்தரங்கில் ஆற்றிய உரை)

ஈடு இணையற்ற கவிஞர் பாரதியார்!

நேற்றைய நிகழ்ச்சியையும் இன்றைய நிகழ்ச்சியையும் எடை போட்டுப் பார்க்க வேண்டும். நேற்றுப் பேசிய பெண்களின் பேச்சு, போராட்டத்திற்குத் தயாராக இருந்தது. இன்று இங்கே பேசிய ஆண்களின் பேச்சு, சமாதானத்துக்கு வழிவகுப்பதாக இருந்தது.

நேற்று எழுச்சியுடன் நடை பெற்ற மகளிர் பேரணியை ஊர்வலம் என்று சொல்வதா? பேரணி எனச் சொல்வதா? போராடச் செல்லும் வீராங்கனைகளின் அணிவகுப்பு என்று சொல்வதா? என்று எண்ணிப்பார்க்கும் போது எந்தப் பெயர் சொல்லி அழைத்தால் பொருத்தமாக இருக்குமோ அந்தப் பெருமைக்கு வழிவகுத்த அந்த வீராங்கனைகளுக்கு நான் தலை வணக்கம் செலுத்துகிறேன்.

அவர்களை ஊர்வலத்தில் கலந்துகொள்ள அனுமதித்த அவர்களது குடும்பத்து ஆண்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எவ்வளவு பெரிய நம்பிக்கையில் பெண்களை அவர்கள் அனுப்பியுள்ளார்கள் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால் அவர்களது தகுதியை உணர முடியும்.

என் வாழ்நாளில் இதுபோன்ற ஊர்வலத்தை இதுவரை நான் கண்டதில்லை. அதிகப் பொதுமக்களும் அரசில் வேலை செய்யும் அதிகாரிகளும் தங்களை ஊர்வலத்தில் இணைத்துக்கொண்டு சில கிலோமீட்டர் தூரம் நடந்து வரும் நிகழ்ச்சியை இது வரை நான் கண்டதே இல்லை. நேற்று, வங்கியில் பணிபுரிவோர், தனிப்பட்ட மகளிர் அனைவரும் ஊர்வலத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று சட்டம் எதுவும் போடவில்லை. அவர்கள் தாங்களாகவே வந்து கலந்து கொண்டது, எதிர் காலத்தைப் பற்றி நம்பிக்கை தரும் வகையில் அமைந்திருக்கிறது.

நேற்று செல்வி ஜெயலலிதா அவர்கள் இங்கே ஒரு பயங்கரமான கருத்தைச் செயல்படுத்த வேண்டும் என்றார். அது பத்திரிக்கைகளில் எல்லாம் வந்திருக்கிறது. வரதட்சணைக்காகக் கொடுமைப்படுத்துபவர்களை தூக்கில் போட வேண்டும் என்று சொன்னார். அதையும் உடனே போடவேண்டுமாம், காலதாமதம் கூடாதாம். கருணை மனு போடுவதற்குக் கூட நேரம் தரக்கூடாதா? என்ன கோபம்? என்ன ஆத்திரம்? நேற்று இது பற்றிச் சிந்திக்க வாய்ப்பு ஏற்பட்டது.

திருமணம் செய்து கொள்ள வரும் ஆண்கள், தட்சணை கேட்பது என்றால் அது நியாயமில்லை. நான் சொல்வதெல்லாம் பெண்கள் ஆண்களிடம் தட்சணை கேட்க வேண்டும் என்பதுதான்.

“நான் படித்தவள்; பணியாற்றுகிறேன்! எனக்கு என்ன கொடுக்கிறீர்கள்?” என்று பெண்கள் கேட்க வேண்டும். சில நேரங்களில் ‘Turn the table’ என்று சொல்வார்கள், அந்த நிலை வர வேண்டும்.

ஸ்ரீதனம் என்கிறார்கள். ஸ்திரீ தனமா, ஸ்திரீ தானமா, எது எப்படி ஆயிற்று என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பெண்களைத் தானமாகக் கொடுத்து, சொத்துக்களையும் கொண்டு செல்கிறார்கள். அப்படிக் கொண்டு செல்பவர்கள் பெண்களை வாழ வைக்க வேண்டாமா? அரைப் பவுன் நகை குறைந்து விட்டது என்பதற்காக ஒரு பெண் தற்கொலை செய்து கொள்ளும் நிலை வந்துவிட்டால், அதை அனுமதிக்கலாமா?

பாரதி நூற்றாண்டு விழாவைப் பொறுத்த அளவில் ம. பொ. சி. அவர்களுக்கு வாழ்த்துக் கூறக்கடமைப்பட்டிருக்கிறேன். இந்த பாரதி நூற்றாண்டு விழா எட்டயபுரத்தில் தொடங்கப்பட்ட போது அவர் மருத்துவமனையில் இருந்தார். நான் போய்ப் பார்த்துச் சென்றேன். அதன் பிறகு அவருக்கு அறுவைச் சிகிச்சை நடைபெற்றது.

எட்டயபுரத்திற்கு வர முடியவில்லை என்பதில் அவருக்கு இருந்த வேதனை இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. அவர், இந்த நூற்றாண்டு நிறைவு விழாவுக்குத் தலைமை வகிக்கிறார். அவர் நூற்றாண்டுக் காலத்திற்கு மேல் வாழ்ந்து ஒவ்வொரு ஆண்டும் அவரது தலைமையில் பாரதி விழா கொண்டாடப்படவேண்டும்.

முன்பு சிவாஜி கணேசன், ம.பொ.சி., படத்தயாரிப்பாளர் எம். ஏ. வேணு மற்றும் பல கவிஞர்கள் ஒருங்கிணைந்து மாபெரும் விழாவை எட்டயபுரத்தில் நடத்தியதை நினைவு கூர்ந்து நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ரா. கிருஷ்ணமூர்த்தி என்ற கல்கி அவர்கள் பாரதிவிழாவை எட்டயபுரத்தில் நடத்தியபோது, பாரதி தேசிய கவியா, மகா கவியா என்ற கருத்தரங்கம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு அவர் தேசிய கவி மட்டுமல்ல, மகாகவி என்று வாதாடினார் என்ற செய்தியைப் பத்திரிகைகளில் படித்ததை வைத்து நினைவுபடுத்திப் பார்க்கிறேன். அவர் தேசிய கவி மட்டுமல்ல, உலக மக்களுக்காகப் பாடிய கவி.

ஒருவர் உயிரோடு இருக்கும் போது கொடுக்கப்படும் பாராட்டை விட அவர் மறைந்து பற்பல ஆண்டுகளுக்குப் பின் அவருக்கு நாட்டு மக்கள் பாராட்டுக் கொடுக்கிறார்கள் என்றால் அதுதான் உண்மையான பாராட்டு அது அவரது அறிவுக்குக் கொடுக்கும் பாராட்டு.

எப்போதோ கொண்டாடப்பட்ட அந்த விழா இன்று வளர்ச்சி பெற்றிருக்கிறது, பல திட்டங்கள், மருந்தகங்கள், பள்ளிக் கட்டடங்கள் எல்லாவற்றையும் 8 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து உருவாக்கி, அவரது பெயரைச் சூட்டியிருக்கிறோம் என்றால், அது அவரது தியாகத்தைப் பாராட்டியதாகும்.

பாரதியார் 39 வயதில் மறைந்தார். இன்று சொல்ல முடியாத விஷயங்களைக்கூட அன்றே சொல்லியிருக்கிறார். கலப்புத் திருமணம் இப்போது சாதாரணமாக இருக்கிறது. அன்று எவ்வளவோ பெரிய பிரச்சனையாக இருந்தது. பிராமண சமுதாயத்தைப் பார்ப்பன சமுதாயம் என்று அந்த நாளிலேயே சொன்னார் அவர். எத்தனை காலத்திற்கு

முன்பு சொல்லியிருக்கிறார் என்று பார்க்க வேண்டும். "பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே – வெள்ளைப் பரங்கியைத் துரை என்ற காலமும் போச்சே" என்று பாரதி அந்நாளிலேயே பாடியிருக்கிறார். அந்தத் துணிச்சலுக்கு எல்லையே கிடையாது. அவரைத் தவிர வேறு யாரும் இவ்வளவு துணிவாகச் சொல்ல முடியாது.

மதிய உணவைப் பற்றிச் சொன்னால் சிலருக்கு ஆத்திரம் வருகிறது. இந்துவிலே ஆதாரம் போட்டும்கூட, பலர் பேசியபடி இருக்கிறார்கள், ஆயிரம்விளக்குப் பகுதியில் 62 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பள்ளிக்கூடத்தில் மதிய உணவு கொடுக்கப்பட்டது.

ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு இலவசமாகக் கொடுக்க வேண்டும்; துணியையும் கொடுக்க வேண்டும் என்று பாரதியார் சொல்லியிருக்கிறார். அதற்கு அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் ? தமிழ்நாட்டில் அறிவுக்குப்பஞ்சம் கிடையாது. பகுத்தறிவு என்று சொன்னவுடன் வேறு இடத்திற்குப் போய்ப் பார்க்கிறார்கள். நேற்று, பேரணியில் கலந்து கொண்ட தாய்மார்கள் கட்சி வேற்றுமை இன்றி, இந்நாட்டு மக்கள் என்ற முறையில் " ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கொள்கையில் ஒன்று திரண்டு வந்தனர்.

ம.பொ.சி. அவர்கள் பேசும்போது, நாமெல்லாம் விலகிவிட்டு, பெண்களிடம் பொறுப்பை ஒப்படைத்து விடலாம் என்றார். இப்போதென்ன ஒப்படைக்காமலா இருக்கிறோம் ? எப்பவோ இந்தியாவை இந்திரா காந்தியிடம் ஒப்படைத்து விட்டோமே ! சரோஜினி நாயுடு கவர்னராக இருக்கவில்லையா ? பெண்கள் முன்பும் இந்தத் தகுதியுடன் இருந்திருக்கிறார்கள். ஆனால் அதை ஏற்றுக் கொள்ளச் சமுதாயத்திற்கு மனம் இல்லை. ஆதிக்கத்திற்கு வந்து விட்டவர்களுக்கு அதை விட்டுக் கொடுக்க மனம் இருப்பதில்லை. பதவி நாற்காலிக்கு வந்தவர்கள், மற்றவர்கள் வெகுநேரமாக நிற்கிறார்களே, அவர்கள் உட்காரட்டும் என்று நினைப்பது கிடையாது. இந்தப் பதவிப் போட்டிகள் நம்மை விட்டு நீங்க வேண்டும்.

ஜாதி உணர்வு, வகுப்புவாதம், விழுக்காடு இப்படிப் பேசப்படுகிறது. வகுப்பு வாதம் என்பது எங்கே தொடங்குகிறது ? நான் இன்ன வகுப்பைச் சேர்ந்தவன். என் நண்பர்கள் இன்னார் என்று நினைக்கும்போது வகுப்புவாதம் ஏற்படுகிறது. தரம் இருக்கிறது. ஆனால் அதற்குரிய தகுதி தரப்படவில்லை. தகுதி பெற வகுப்புவாதத்தை எதிர்த்துப் போராட வேண்டும். இது எந்தக் காலத்தில் நடைபெறுகிறதோ, அதுவரை ஒருமைப்பாட்டை எழுத்தில்தான் காணமுடியும் ! ஜாதிக் கட்சியை ஒழிக்க வேண்டும்; வகுப்புவாதக் கட்சியை ஒழிக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் இந்திய ஒருமைப்பாட்டை ஜாதியற்ற முறையில் அமைக்க முடியும். இதை நான் சொன்னால் கோபப்படுவார்கள். இதைப் பாரதியாரே சொல்லிச் சென்றிருக்கிறார். அவரது கவிதைகளைப் படிக்கிறோம்; ஆனால் வீட்டுக்குச் சென்றவுடன் வேறு மாதிரி அமைத்துக் கொள்கிறோம் வாழ்க்கையை.

"நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி

வஞ்சனை செய்வாரடி—கிளியே—
வாய்ச்சொல்லில் வீரரடி''

என்று பாரதியார் கூறினார். ஆண்களைப் பற்றிப் பெண்களுக்குச் சொல்லியிருக்கிறார். இது ஆண் இனத்துக்கு எவ்வளவு அவமானமாக உள்ளது?

ஜாதி உணர்வு, வகுப்புவாதம் விழுக்காடு இப்படிப் பிரித்துக்கொண்டு போனால் பலர் மனுப்போடுகிறார்கள், எங்களையும் தாழ்த்தப்பட்ட இனத்தில் சேர்த்து விடுங்கள், பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் சேர்த்து விடுங்கள் என்று கேட்கின்றனர். ஏன்? விழுக்காடு பெறுவதற்காக, பதவி பெறுவதற்காக.

மருத்துவர்களிடம் நம்பிக்கையுடன் உடலை ஒப்படைக்கிறோம். அவர் கல்வி கற்று, தேர்ச்சி பெற்று, பயிற்சி பெற்று அந்தப் பணியைச் செய்கிறார். ஒருவர் 30 விழுக்காடு பெற்றால்போதும் தேர்ச்சி பெறுவதற்கு, மற்றொருவர் 90 விழுக்காடு பெற வேண்டும் தேர்ச்சி பெறுவதற்கு என்ற நிலை இருக்குமானால், இதில் யார் செய்கிற அறுவைச்சிகிச்சை வெற்றிகரமாக இருக்கும்— திறமையாக இருக்கும் என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

அதனால்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, தனியாகப் பயிற்சி தர வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. அதற்கேற்ற வகையில் பயிற்சி வகுப்புகள் தரும் நிலையங்களைத் திறந்திருக்கிறோம். இதன் மூலம், வெளிநாட்டு மாணவர்களுடன் கூட இவர்கள் போட்டியிட்டு முன்னுக்கு வர முடியும்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று விழுக்காடு இன்றி அனைவருக்கும் விழுக்காடு ஒன்றுதான் என வைத்தால்தான் சரியாக இருக்கும். நேற்று நடைபெற்ற ஊர்வலத்தில் சுத்தப்படுத்தும் தொழிலாளர் கலந்து கொண்டனர். அவர்களின் பிள்ளைகளுக்கு விழுக்காடு தனியாக வைக்கவேண்டாம். அவர்களுக்குத் தனிக் கல்வி தர வேண்டும் என்று பாரதி சொல்லியிருக்கிறார்.

மக்களுக்கு நெஞ்சுறுதி வேண்டும்; இது உடற் பயிற்சியால் வராது. கொள்கைப் பிடிப்பில் உள்ள உறுதியால்தான் வரும். ''அடுத்த ஜென்மத்தில் உனக்குப் புண்ணியம் வரும் என்பதால் இவருக்குப் பணம் கொடு'' என்று யாரும் சொன்னால் அதற்குச்சீட்டு வாங்கத் தயாராக இல்லை என்று பாரதியார் குறிப்பிட்டிருக்கிறார்.

பாரதியின் கருத்து உயர்ந்தது மட்டுமல்ல – சிறந்ததும் ஆகும். 39 வயதுக்குள் அவ்வளவு கருத்துகளை – மகத்தான கருத்துகளைச் சொல்லிச் சென்றிருக்கிறார். எந்த நாட்டிலும் இப்படி ஒரு கவிஞன் வந்ததில்லை என்று சொல்வதில் தமிழ்நாட்டுக்கு உரிமை உண்டு.

மனிதர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? குழந்தைகள் எப்படி விளையாட வேண்டும்? பெரியவர்களின் நடத்தையை எப்படி வைத்துக்கொள்ள வேண்டும்? என்பதையும் திரும்பத்திரும்பச் சொல்லி இருக்கிறார்.

தமிழைப் பற்றி தமிழ்நாட்டைப் பற்றிப் பாடியிருக்கிறார். தமிழ்நாட்டைப் பற்றிப் பாடும் போது இந்தியத் துணைக்கண்டத்தை இணைத்துப் பாடினார். இந்தியா ஒன்றுதான் என்பதில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். தேசிய உணர்வு கொண்டு விளங்கினார்.

பாரதி விழாவை ஆண்டு தோறும் கொண்டாட அரசு முடிவு செய்துள்ளது. இங்கே, மகாலிங்கம் தலைமையில் உள்ள ஒரு குழு மணி மண்டபம் அமைக்க இருப்பது குறித்தும் அதற்கு அரசு உதவும் என்றும் ம.பொ.சி. குறிப்பிட்டார். அதற்கு 10 இலட்சம் ரூபாய் தரும் என்று மூன்று ஆண்டுகளுக்கு முன்பே சொல்லியிருக்கிறேன். ஆனால் யாரிடம் அந்தப் பணத்தை ஒப்படைப்பது? அது ஒரு தனி அமைப்பாக இருப்பதால் பணம் தருவதில் சில பிரச்சினைகள் உள்ளன. ஆடிட்டர் ஜெனரல் கேட்பதற்கும் எதிர்க்கட்சிகள் கேட்பதற்கும் பதில் அளிக்க வேண்டியுள்ளது. அரசுக்கும் இதில் பொறுப்பிருந்தால் அரசின் பாதுகாப்பும் இருக்கும்; கண்காணிப்பும் இருக்கும்; அதிகாரிகளும் இருப்பார். இதை எல்லாம் நல்ல முறையில் பேசி முடிவு செய்ய வேண்டும்.

தமிழக அரசு இப்போதுதான் செய்ய வேண்டிய கடமையைத் தொடங்கி இருக்கிறது. மதிய உணவு ஒரு தொடக்கம். இல்லாமையைப் போக்கும் போதுதான் அண்ணாவின் கொள்கையை நாங்கள் நிறைவேற்றுகிறோம் என்று பொருள். அந்தக்குறையை நாங்கள் இன்னும் முழுமையாக நிறைவேற்றிவிடவில்லை.

ஆதரவற்ற முதியோர்கள் தாய்மார்கள் ஆடவர்கள் என ஏறக்குறைய 2 இலட்சம் பேருக்கு மாதம் 35 ரூபாயும் ஆண்டுக்கு 2 வேட்டிகள், 2 சேலைகள் கொடுத்து வருகிறோம். பொங்கல் திருநாள் முதல் அவர்களுக்கு மதிய உணவை வழங்க இருக்கிறோம். இந்த நாட்டில் பிறந்தவர்கள் வாழ்ந்தாக வேண்டும். வாழ உரிமை படைத்தவர்கள் வாழ்ந்தாக வேண்டும்.

பாரதி சொன்ன கருத்து அண்ணாவின் கொள்கைக்கு ஒத்து வருகிறதென்பதால் அதை நாங்கள் அமல்படுத்துகிறோம்.

ஏப்ரல் மாதத்திலிருந்து வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பத்தைச் சேர்ந்த– வேலையில்லாத குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வேலை தரும் திட்டத்தை அமல்படுத்த இருக்கிறோம்.

அண்ணா சொன்னார் "நாங்கள் மெல்ல மெல்ல அடி எடுத்து வைக்கிறோம்; ஆனால் அழுத்தமாக, உறுதியாக எங்கள் நடை இருக்கும்" என்று அதுபோல் நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

இந்த பாரதி விழா எந்தக்கழகத்திற்கும் – கட்சிக்கும் நடத்தப்படும் விழா அல்ல. ஊர்வலத்தில் தாய்மார்கள் கொண்டுவந்த பாரதி படம் எதைக் காட்டுகிறது? அவர்களது உள்ளத்தில் உள்ள வெப்பத்தைக் காட்டுகிறது. நேற்று, ஒரு தாய் குதித்துக் கொண்டு ஊர்வலத்தில் சென்றதைப் பார்த்தேன். அதன் பொருள் என்ன? என் வீட்டில் திருமணம் ஆக வேண்டிய பெண் இருக்கிறாள். வரதட்சணை தருவதற்கு

பணம் இல்லாததால் விலை போக முடியவில்லை என்ற எண்ணத்தில்தான் அந்தத்தாய் சென்றார்.

பாரதியின் கருத்து, நாட்டின் கொள்கையாக மாறி, அதுதான் தமிழகத்தின் கொள்கையாக இந்திய நாட்டின் கொள்கையாக உலக நாடுகளில் சமதர்மம் பேசக்கூடிய நாடுகளின் கொள்கை என்ற நிலை எதிர்காலத்தில் வரும் என்பது உறுதி.

தேசிய ஒருமைப்பாடு என்பது வெறும் வார்த்தையில் மட்டுமில்லை – எழுத்தில் மட்டுமில்லை–ஜாதி பாகுபாடு இல்லாத நிலையில் மத உணர்வு இல்லாதநிலையில் மனிதன் என்று பொருளாதாரத்தில் வெற்றி பெறுகிறானோ அன்றுதான் ஒருமைப்பாடு வரும்.

9 ஆயிரம் ரூபாய்க்குக் கீழே வருமானமுள்ள குடும்பத்தினர் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று ஒரு திட்டம் கொண்டு வந்த போது எதிர்த்தார்கள். அதனால் 50 சதவிகிதம் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு எனச் சொல்லி உள்ளோம்.

முற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் பொருளாதாரத்தில் பின் தங்கி இருக்கிறார்கள். அவர்களது நிலையையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது எனவே இன்கம்டாக்ஸ் கட்டாத அனைவரும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் என்று சொல்லலாமா என்று யோசித்து வருகிறோம். சமுதாயத்தில் பிறப்பால் பிற்பட்டவர்களாக யார் யார் இருக்கிறார்களோ அவர்களைப்போல பொருளாதாரத்தால் பிற்பட்ட நிலையில் பலர் இருக்கின்றனர். அவர்கள் எதையும் அனுபவிக்க முடியாதவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கும் பயன்பட வேண்டும் என்ற முறையில், பொருளாகதார ரீதியிலும், சமுதாய ரீதியிலும் பயன் பெறத் தக்க அளவுக்கு ஒரு திட்டத்தைக் கொண்டு வரலாமா என்ற யோசனை இருக்கிறது. நியாயம் எது என்று தெரிந்து அதற்கு நீங்கள் ஆதரவு கொடுங்கள். பதவி நாற்காலி பற்றிக் கொஞ்சம் கூடக் கவலைப்படாமல் எங்கள் பணியைச் செய்கிறோம்.

பாரதி நூற்றாண்டு விழாவை ஊராட்சி ஒன்றியங்களில் எல்லாம் கொண்டாடிய அதிகாரிகள் அனைவருக்கும் நன்றி! மதம், மொழி, ஜாதி, வேறுபாடின்றி பாரதியைக் கொண்டாடிய எல்லாருக்கும் நன்றி. போஸ்டர் ஒட்டியவர் முதல் அத்தனை பேருக்கும் வாழ்த்துக்கள்! பாராட்டுகள்!

அண்ணா நாமம் வாழ்க!

(17.12.1982 அன்று, எட்டயபுரத்தில் நடைபெற்ற மகாகவி பாரதி நூற்றாண்டு விழா தொடக்க நாள் நிகழ்ச்சியில் ஆற்றிய உரை)

தாயகத்திற்குச் சிறப்புச் சேர்ப்பீர்!
சமுதாயத்திற்கு உயர்வு தருவீர்!!

மேதகு பல்கலைக்கழக வேந்தர் அவர்களே, இணை வேந்தர் அவர்களே, துணை வேந்தர் அவர்களே, பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பேராசிரியர்களே, பட்டம் பெறுவதற்காக இங்கே வந்து இந்த அவையினை அணி செய்கின்ற என் அன்பிற்குரிய மாணவச் செல்வங்களே!

இன்றைய தலைமுறையினரான இளைஞர்களைச் சந்திப்பது எனக்கு எப்போதுமே ஒரு மகிழ்ச்சி தருகின்ற அனுபவம். அதுவும் பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டம் பெற்று இந்தச் சமுதாயத்தின் எதிர்காலத்தை உருவாக்குகின்ற மகத்தான பொறுப்பினை ஏற்பதற்கு முதற்படியில் அடி எடுத்து வைக்கின்ற உங்களை இன்று சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நான் கல்வி நிலையங்களில் அதிகம் படிக்காதவன்; படிக்க வேண்டுமென்ற ஆர்வம் இருந்த நாட்களில் உழைத்து வாழ வேண்டுமென்ற கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்டதினால் படிக்கும் வாய்ப்பை இளமையிலேயே இழந்தவன். பல்கலைக்கழகங்களில் திறமையாகக் கல்வி பயின்று பட்டம் பெற்று வெளி வருகின்ற உங்களையெல்லாம் இன்று காணும் பொழுது, ஒரு குடும்பத்தில் கல்வி பயின்று பட்டம் பெறாத ஒரு குடும்பத்தலைவன் தனது குடும்பக் குழந்தைகள் பட்டம் பெற்று வெளி வருகையில் எவ்வாறு பெருமிதம் கொள்வானோ அந்தப் பெருமையை, பெருமிதத்தை நான் இன்று அடைகிறேன்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மாநகரில், ஏழைகளெல்லாம் இலவச பள்ளிக் கல்வி பெற வேண்டுமென்று பாடுபட்டவரும், விடுதலை வீரரும், தன்னலமற்ற தியாகியும், ஏழைகளின் தோழருமான பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் பெயரால் இந்தப் பல்கலைக்கழகம் இயங்க வேண்டுமென எண்ணினேன். அந்த எண்ணத்தைத் தமிழக மக்கள் பேரன்போடு போற்றினார்கள். கல்லூரியில் பட்டம் பெறாத ஒருவரின் பெயராலே ஒரு பல்கலைக்கழகம் இயங்குவது இந்தக் காலத்தில் தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் சிறப்பாகும்.

இந்தச் சிறப்பை மேலும் எடுத்துக் காட்டுகிற வகையில்தான், கல்லூரிப் பட்டத்தைப் பெறாத, பெறுவதற்கான வாய்ப்பை இழந்துவிட்ட என்னை, பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்த அழைத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

அறிவு வளர்ச்சி அல்லது ஆராய்ச்சி அறிவு என்பது கல்லூரிகளில் பெறுகிற பட்டங்களினால் மட்டும் கிடைத்து விடுவதில்லை என்பதை இன்றைய இளைஞர் உலகத்திற்கு, மாணவ சமுதாயத்திற்கு, இந்தப் பல்கலைக்கழகத்தின் வேந்தரும், துணை வேந்தரும் இந்த வாய்ப்பை என் போன்றவர்கட்கு அளிப்பதன்மூலம் உணர்த்த விரும்புகிறார்கள் என்றே நான் இதைக் கருதுகிறேன்.

இதே பல்கலைக்கழகத்தில் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் முதல் பட்டமளிப்பு விழாவில் சொற்பொழிவு ஆற்றியதை இன்று நாம் நினைவு கூர்வது நமது நீங்காத கடமையாகும். பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழக வரலாற்றில் ஒரு சகாப்தம், தந்தை பெரியாரின் பாசறையில் பயின்று தனக்கென தனித்தன்மையான கொள்கைகளை வகுத்துக்கொண்டு, அவற்றிற்கு உதாரணமாக வாழ்ந்து, சமுதாயப் புரட்சிக்கு வழி காட்டிய மாபெரும் சிந்தனையாளர், 'கடமை கண்ணியம் கட்டுப்பாடு', 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்', 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு', 'மறப்போம் மன்னிப்போம்' 'வசவாளர்கள் வாழ்க', 'எங்கிருந்தாலும் வாழ்க', என்ற சொற்றொடர்கள் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களால் வெறும் வார்த்தை அலங்காரங்களுக்காகச் சொல்லப்பட்டவை அல்ல. அவை அவர் கடைப்பிடித்த வாழ்க்கை நெறிகள்; மற்றவர்கட்கு அவர் காட்டிய வாழ்க்கைத்தத்துவங்கள், அதனால்தான் அவர் ஒரு ஈடு இணையற்ற அன்புடையவராக, பேரிதயம் படைத்த ஒரு மாமனிதராக இன்றும் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

அத்தகைய மேதை, கல்வியைப் பற்றியும், மாணவர்களுடைய கடமை, ஒழுக்கம் ஆகியவை பற்றியும் இந்த மன்றத்திலேயும் வேறு பல இடங்களிலும் வாழ்நாள் முழுவதும் எடுத்துக் கூறியவை என்றென்றும் நமது நினைவில் இருத்திக் கடைப்பிடிக்க வேண்டியவையாகும். அவரது கொள்கையைப் பின்பற்றி, அவரை வழிகாட்டியாகக் கொண்டு மக்களுக்குத் தொண்டாற்றும் நான் அவர் சொன்னதற்கு மேலாக புதிதாகச் சொல்வதற்கு ஒன்றுமில்லை, என்றாலும் சமுதாயத்தின் இன்றைய நிலையையொட்டி ஒரு சில கருத்துக்களை உங்கள் முன் எடுத்துரைப்பதை என் கடமையாகக் கருதுகிறேன்.

தொன்மையான பெருமை பெற்றது நம் இந்தியத் திருநாடு. குறிப்பாக, நமது தமிழ்நாட்டிற்குப் பல ஆயிரம் ஆண்டுகளாகத் தழைத்து வளர்ந்து வரும் வரலாற்றுப் பெருமை உண்டு என்றாலும், எவ்வளவு தொன்மையான சிறப்பைப் பெற்றிருந்தாலும் மாற்றங்கள் சமுதாயத்தில் இன்றியமையாதவை. 'பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினானே' என்பது நமது தமிழ் இலக்கணம். அதே நேரத்தில் எந்த மரபுகளையும், பண்பாடுகளையும் நல்லவையென்று காலங்காலமாகப் போற்றி வந்தோமோ, அவைகளை உதறிவிட்டு, புதுமை என்ற பெயரில் போலித்தனத்தை நாடி அலைவதும் நமக்கு உகந்ததல்ல. ஆனால், அதே சமயத்தில் பழமையிலேயே சிறைப்பட்டுப் புதிய சூழ்நிலைகளை உணர மறுத்தால் தேக்கம் தான் மிஞ்சி நிற்கும். இந்த இரண்டு நிலைகளிலும் சிக்குறாமல், பழைமையை ஆதாரமாகக் கொண்டு, புதுமையிலே ஆர்வம் காட்டி, நமது பழைய மரபுகள், பண்பாட்டு நெறிகள் இழையோடுகின்ற சமூகப் பொருளாதார அமைப்புதான் நமது நாட்டுக்கு ஏற்றதாகும். மாறுதலைக் கண்டு அஞ்சாமல் அறிவுடைமையோடும், ஆண்மையோடும் நின்று எதையும் நன்றாய் ஆராய்ச்சி செய்து காலத்திற்கும் அவசியத்திற்கும் தக்க வண்ணம், தன்னைத் தயாரித்துக் கொள்ள வேண்டியது பகுத்தறிவுடைய மனிதனின் இன்றியமையாத கடமையாகும்.

இன்று நாகரிகத்தின் வளர்ச்சி, மிக உச்ச நிலைக்கு எட்டியுள்ள போதிலும் வசதியுள்ள மனிதனுக்குப் பல வாய்ப்புகளும், சாதனங்களும், கிட்டியுள்ளபோதிலும், பெரும்பாலான மனிதர்கள் தங்கள் மன அமைதியைப் பறிகொடுத்துள்ளார்கள். இதற்குக் காரணம் தான் வாழும் சமுதாயத்திற்கு, தான் சொந்தமானவன் (Sense of belonging) என்ற உணர்வு இல்லாமல் போனதுதான். தான் உயரவேண்டும் இல்லை தான் மட்டும் உயர வேண்டும் என்ற வேட்கை உணர்வையும், போட்டி உணர்வையும் நாகரிகச் சமுதாயம் வளர்த்துள்ளதேயொழிய, தான் ஒரு சமூகத்தைச் சார்ந்தவன், அந்தச் சமூகத்திற்குச் சொந்தமானவன் என்ற ஒட்டுறவை இன்றைய நாகரிகச் சமுதாயம் வளர்த்துக் கொள்ளவில்லை. அதற்குக் காரணம் நாகரிகமுள்ள சமுதாயமாக வளர வேண்டுமென்று விரும்புகிறோமே தவிர, அறிவார்ந்த அன்பார்ந்த சமுதாயமாக நம்மை வளர்த்துக் கொள்ள நாம் முனைவதில்லை.

கல்வி அல்லது பட்டப்படிப்பு மட்டுமே ஒருவனை முழுமை பெறச் செய்துவிடாது. மனிதனுடைய அறிவாற்றலையும், திறமைகளையும் வளர்த்து அவனுக்கும், அவன் வாழும் சமுதாயத்திற்கும் பயன்படுமாறு செய்யும் கருவியே கல்வி. மனிதன் என்று ஒருவன் தன்னைச் சொல்லிக் கொள்ள வேண்டுமானால் அவன் கல்வி அறிவைப் பெற்றாக வேண்டும். மக்களாட்சி தத்துவத்தில் எல்லோரும் சமம் என்ற நிலை உருவாவதற்கு ஒவ்வொருவரும் கல்வி கற்கும் வசதியைப் பெறுவது அவசியம். கல்வி வசதியை எல்லோரும் பெறுகின்ற நிலை இல்லையெனில் ஒரு சமத்துவ, சமுதாய அமைப்பு ஏற்பட முடியாது. பள்ளிக்கூடங்களையும், பல்கலைக்கழகங்களையும் அதிக அளவில் ஏற்படுத்தினால் மட்டும் நாம் கல்வியை வளம்பெறச் செய்துவிட்டோமென்று கூறமுடியாது. எல்லோருக்கும் கல்வி கற்க வாய்ப்பு இருந்தால்தான் ஒரு சமத்துவ சமுதாயம் அமைவது சாத்தியம். பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் விளைவாக கல்வி கற்க வேண்டிய இளம் பருவத்தில் வேலைசெய்து பிழைக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படும் நிலையில் குழந்தைகள் கல்வி கற்கும் வாய்ப்பினை இழக்க நேர்ந்தால், அது சமுதாயத்திற்குப் பெரிய இழப்பாகும். எல்லோரும் கல்வி கற்கும் வாய்ப்பினைப் பெற வேண்டுமென்றும், அதற்கு பொருளாதார காரணங்கள் முட்டுக்கட்டையாகி விடக்கூடாதென்ற கருத்தின் அடிப்படையில்தான், குழந்தைகளின் மதிய உணவுத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி, தினமும் சுமார் 65 இலட்சம் குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு வழங்குகிறது. இதனால் அவர்களது குடும்பத்தின் பொருளாதார சூழ்நிலைகள் அவர்களது கல்வியைப் பாதிக்காது என்பது உறுதி செய்யப்படுகிறது. இது எதிர்கால சமுதாயத்தின் நன்மைக்காக நாம் செய்யும் முதலீடு.

கல்வி என்பது ஏட்டுப் படிப்பிலும், எண் எழுத்துப் பயிற்சியிலும் மட்டும் அடங்கியது அல்ல. ஆழ்ந்த அறிவும் சிறந்த அனுபவமும், பண்பட்ட குணமும் சமூக உணர்வும் கொண்ட நோக்கும், நெறிமிக்க நடத்தையும்தான் மாணவர்களை நாட்டின் சிறந்த குடிமக்களாக ஆக்கும். பல்கலைக்கழகப் பரீட்சையிலே வெற்றி கண்டு, பட்டம் பெற்று இன்று வெளியே செல்லத் தொடங்குகிறீர்கள். இனி, வெளியே உங்களுக்குக்

காத்திருப்பது வாழ்க்கைப் பரீட்சை அந்தப் பரீட்சையிலேயும் நீங்கள் வெற்றி கண்டு இந்த நாட்டின் நல்ல குடிமகன் என்ற பட்டத்தையும் நீங்கள் பெறவேண்டுமென்று உங்களை நான் உளமார வாழ்த்துகிறேன்.

'இந்தியா கிராமத்திலே வாழ்கிறது' என்ற உண்மையை இந்திய நாட்டின் தந்தை அண்ணல் காந்தி அடிகள் நமக்கு உணர்த்தினார். நாம் கற்கின்ற நுட்ப அறிவும் கிராம மக்களின் அனுபவ அறிவும் ஒன்றாக இணைந்தால்தான் சமுதாயம் முன்னேற முடியும் என்றார் பேரறிஞர் அண்ணா. அந்த நோக்கிலே நீங்கள் இன்று பல்கலைக்கழகத்தின் தூதுவர்களாகப் பாமரர்களிடம் செல்ல வேண்டும். வாழ்வையே அடகு வைத்து, தங்கள் உடலையே உரமாக இட்டு உழைத்து வரும் இப்பாமர மக்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் சேகரித்துள்ள அனுபவ அறிவு, ஒருசில புத்தகங்களை மட்டும் படித்துப் பெறக்கூடிய ஏட்டு அறிவைவிட, மிக உயர்ந்ததும், உண்மையானதும், நிலையானது மாகும். அவர்கள் அனுபவ அறிவையும், நம் ஆராய்ச்சி அறிவை ஒன்றாகப் பிணைக்க வல்ல, புதிய உத்திகளைக் கண்டுபிடிப்பதுதான் பல்கலைக்கழத்தின் முன் இன்றுள்ள பெரும் பொறுப்பாகும்.

கல்விச் சாலையில் உள்ள ஆய்வுக் கூடங்களில் உங்களில் பலர் பரிசோதனை நடத்தி உள்ளீர்கள். ஆனால், சமுதாயம் என்ற பரந்த ஆய்வுக்கூடத்தில் பரிசோதனை நடத்த இனி உங்கள் இளம் உள்ளங்களை நீங்கள் பக்குவப்படுத்த வேண்டும்.

அண்ணா வேடிக்கையாக "மேல்நாடுகளில் நூற்றுக்கு தொண்ணூறு பேர் படித்தவர்களாக இருக்கிறார்கள். நம் நாட்டில் நூற்றுக்கு அறுபது பேர் எழுத்தறிவு அற்றவர்களாக இருக்கிறார்கள். ஆனால், நூற்றுக்கு எண்பது பேர் அறிவுள்ளோர் வாழும் நாட்டின் மக்கள் நம் நாட்டவரை மதிக்கவேண்டுமென்று நாம் எண்ணுவதற்கு நாம் மெத்த துணிச்சல்காரர்களாகத்தான் இருக்கவேண்டுமென்று" சொன்னார்கள். இன்று மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழகத் தில் கல்வியறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 46 பேர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இன்னும் அண்ணா கூறிய துணிச்சலுக்கு உண்மையிலேயே பொருத்தமுள்ளவர்களாக நம்மை நாம் தயார் செய்து கொள்ளவில்லையென்றே கூற வேண்டியுள்ளது. ஏனெனில் இந்த சதவிகிதம் 100க்கு 60 பேர் என்றோ அல்லது 70 பேர் என்றோ இந்த 15 ஆண்டு காலத்தில் உயர்ந்திருந்தால் நாம் அவ்வாறு கூறியிருக்கமுடியும். இதற்கு என்ன காரணம்? கல்விக்கூடங்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் எண்ணிக்கையில் பெருகியிருக்கின்றன. ஆயினும் நமது முன்னேற்றத்தில் வேகம் இல்லாததற்குக் காரணம் என்ன என்பதை நாம் சிந்திக்கவேண்டும். ஆண்டுதோறும் நாம் கல்விக்காகச் செலவிடும் தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. ஆனால் அதற்கேற்ப நாம் முன்னேற்றம் பெற்றுள்ளோமா என்றால் இல்லை, நமது கல்விச் சாலைகளின் பணி இந்தியாவின் இதயம் போன்ற கிராமங்களை எட்டவில்லையென்பதே காரணம். எனவே, நமது கல்வித் திட்டத்தில், படிப்பு முறையில், அடிப்படையான மாற்றங்கள் தேவையென்று

நான் கருதுகிறேன். இந்தியாவின் மக்கள் தொகையில் மூன்றில் இரு பங்கினர் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். கிராமங்களிலுள்ள கல்வியறிவில்லாத பெரியோர்கள், தாய்மார்கள் ஆகியோர்களுக்கு அடிப்படையான கல்வியையூட்டுகின்ற வழிமுறைகளை நாம் கண்டறிந்தாகவேண்டும். பள்ளி சென்றுதான் படிக்கவேண்டும் என்ற நிலைமையை நாம் படிப்படியாக மாற்றியாக வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், தொழிற்கல்வி தொழில்நுட்பக் கல்வி, சமுதாயக் கல்வி, பொருளாதாரக் கல்வி, அறிவியல் கல்வி இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளுடன் இணைந்த கல்வியே கற்றுத்தரப் படவேண்டும். அடிப்படை ஆதாரக்கல்வியை ஒருவர் பள்ளிக்குச் செல்லாமல் வீட்டிலிருந்தோ அல்லது மாலைக்கல்வி மூலமோ கற்க வசதிசெய்து தரப்படவேண்டும். இந்த வசதி ஏற்பட்டால் தங்கள் தொழில்களைச் செய்து கொண்டே பொதுக் கல்வியறிவைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். பட்டம் பெற்று வெளிவரும் மாணவர்களாகிய நீங்கள் பல்வேறு தொழில்களில் நிபுணர்களாக உங்கள் வாழ்க்கையினை அமைத்துக் கொண்டு வாழ்கின்ற போது வயதுவந்தோருக்கும், பெண்களுக்கும் வாய்ப்புக் கிடைக்கும் வகையில் நீங்கள் அவர்களுக்குக் கல்வி கற்றுத்தருவதற்கு உங்கள் ஓய்வு நேரத்தை அல்லது மாலை நேரத்தை ஒதுக்கலாம். இதன் மூலம் நீங்கள் நாட்டுக்கு ஒரு அரிய தொண்டைச் செய்த பெருமைக்கு உரியவர்களாவீர்கள். எனவே, கல்வியைப் பரவலாக்குவதற்கு இதுவொரு நடைமுறை யோசனை என்று நான் கருதுகிறேன்.

அறிவியல், தொழில்நுட்பவியல், கணிதம், வேளாண்மை ஆகிய பல்வேறு துறைகளில் உலகின் பல்வேறு பகுதிகள் அடைந்துள்ள முன்னேற்றங்கள் யாவும் சாதாரண குடிமகன் அறியும் வகையில் செய்யப்படவேண்டும். இவைகள் அனைத்தையும் தமிழில் கற்பதற்கு வசதி செய்யப்படவேண்டும். அறிவியல், தொழில் நுட்பவியல் போன்ற கல்விகளையெல்லாம் தமிழில் கற்பதற்காக அந்த அடிப்படை இயல்களை விளக்க, தமிழில் நிறையப்புத்தகங்கள் வேண்டும். அவைகள் மாணவர்கள் சுலபமாகக் கற்கும் வகையில் தமிழில் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் மகாகவி பாரதியார் கூறியுள்ளார். ஜப்பான் நாடு, இன்று அமெரிக்கா போன்ற மிகவும் முன்னேற்றமடைந்த நாடுகளுக்குப் போட்டியாக பல்வேறு துறைகளில் முன்னேறியுள்ளதற்குக் காரணம் அங்கு விஞ்ஞானம் நுட்பவியல் உட்பட எல்லாப் பாடங்களும் அந்த நாட்டு மொழியிலேயே கற்பிக்கப்படுவதுதான். சாதாரண குடிமகனும் கல்வியின் பயனை எளிதில் பெற்று மேலும் மேலும் முன்னேறுவதற்கும், அவர்களது ஆர்வத்தை, அறிவாற்றலை வளர்த்துக்கொள்வதற்கு அங்கு முடிகிறது. இந்த முறையை நாம் கையாண்டு அறிவுத் துறையிலே நாம் ஒரு பெரும் புரட்சியைச் செய்யலாமென்று தோன்றுகிறது.

“பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்

இறவாத புகழுடைய புதுநூல்கள்

தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்''

என்று பாரதியார் பாடியுள்ளதை அவருடைய நூற்றாண்டு விழாக் காலத்திலாவது நாம் நினைவில் கொண்டு முயற்சிக்கவேண்டும்.

கல்வி கற்பது, பட்டப்படிப்பு படிப்பது என்பது படித்து முடித்தவுடன் எதாவது ஒரு வேலை பார்ப்பதற்குத்தான் என்ற ஒரு தவறான அடிப்படையில் நீண்டகாலமாக நம்முடைய இளைஞர்களை உருவாக்கி வந்துவிட்டோம். எதாவது ஒரு வேலை பார்ப்பதற்குத்தான் கல்வி பட்டம் என்றால், நாட்டில் உள்ள அனைவரும் கல்விகற்க வேண்டிய அவசியமேயிராது.

ஆங்கிலேயர் காலத்திலே அவர்களுக்குத் தேவையான, நிருவாகத்திற்குத் தேவையானவர்கள் மட்டுமே கல்விகற்கும் வாய்ப்பைப் பெற்றார்களே அந்த அடிப்படைதான் சரியெனத் தோன்றும் “வேலைபார்க்கத்தான் படிப்பு'' என்ற பழைய கல்வித் திட்டத்திலேயே நாம் சென்று கொண்டிருப்பதும், வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவருவதற்கு ஒரு காரணம் எனலாம். தற்போதுள்ள கல்விமுறைக்குப் பதிலாக தொழிற்கல்விமுறை பெருக வேண்டும். கல்வி அறிவு என்பது மனிதனுக்கு அடிப்படை, தொழிற்கல்வி என்பது வாழ்க்கைக்கு அடிப்படை என்ற உணர்வைக்கல்வி நிலையங்கள் வளர்த்தாக வேண்டும். எனவே, கல்வி குறித்து நமது கருத்துக்களில் புரட்சிகரமான மாறுதல் தேவை என்பதையும், அதைப் பற்றி சிந்திக்கவேண்டிய கட்டாயத்திற்குள்ளாகி உள்ளோம் என்பதையும் நான் இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். படித்த இளைஞர்கள் நம்பிக்கையுடன், கிராமங்களுக்குச் சென்று அல்லது தாங்கள் வாழுகிற இடங்களில், கல்வியைப் பரப்பவோ, தொழிலைத் துவங்கவோ அல்லது வியாபாரம் செய்யவோ முனையலாம். அதற்கு அரசும் துணை புரியப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துகிறது. உங்கள் சொந்த முயற்சியிலே தொழிலை மேற்கொள்ள முன்வந்தால் உங்கள் வாழ்க்கையில் வளமும் நாட்டின் பொருளாதார வளமும் உறுதிப்படும்.

“வாலிபர்கள் ஆசிரியர்களாக வேண்டும். உலகத்தைக் கிராமத்திற்குக் காட்டவேண்டும். வாலிபர்கள் வைத்தியர்களாக வேண்டும். உடல், உள்ளம் இரண்டிலுமுள்ள நோய் தீர்க்கும் மருந்து அளிக்க வேண்டும். வாலிபர்கள் பாலம் அமைக்க நீர்த்தேக்கம் அமைக்க, உழவு முறையை மாற்றப் பணிபுரிய வேண்டும். பழமையின் பிடியிலிருந்து மக்களைப் பக்குவமாக விடுவித்துப் புதுமையின் அவசியத்தைக் காட்டிப் புத்துலகம் அமைக்க வேண்டும் படித்த வாலிபர்கள், இதற்கான திறமும் தீரமும் தேவை'' என்று அண்ணா அவர்கள் கூறியதை நாம் இங்கு நினைவு படுத்தக் கொள்வது பொருத்தமுடையது.

நீங்கள் பட்டதாரிகளாக, சமுதாயத்தில் அடியெடுத்து வைக்கும்பொழுது சில பிரச்சினைகள் உங்களைச் சந்திக்கின்றன. சாதி, சமயம் பூசல்கள் அவற்றுள்

முக்கியமானது. கல்லூரிகளில் சாதி, சமய வேறுபாடின்றி வாழ்ந்து வந்த நீங்கள் சமுதாயத்திலே அவைகளைச் சந்திக்கும் நிலையுள்ளது. விடுதலை பெற்று 35 ஆண்டுகள் ஆகியும் நமது நாடு உலக நாடுகளிடையே பின்னடைந்த நிலையில்தான் இன்னும்இருக்கின்றது.இதனைநாம்மாற்றியமைத்தே ஆகவேண்டும்என்றுஉறுதியுடன் உங்கள் செயல் முறைகளை வகுத்துக்கொள்ளுங்கள். ஆண்டு ஆண்டுகாலமாக நம்மைப் பிடித்து வந்துள்ள சாதி சமய வேறுபாடுகளுக்கு நீங்கள் இடம் கொடுத்துவிட வேண்டாம். உயர்வு தாழ்வு என்பது சாதி வேற்றுமையால் மட்டும் இல்லை. படித்தவர் பாமரர் என்றும்கூட உயர்வு தாழ்வு காட்டப்படும் உணர்வை நாம் வளர்த்துக் கொண்டு அதன் விளைவாகச் சமுதாயத்தில் பெரும்பகுதியினரை வாழத்தகுதியற்றவர்கள் என்ற கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டதாக அப்போதிருந்த பெரியவர்கள் சுட்டிக்காட்டிக் கண்டித்தார்கள். அப்படி கீழானவர்களாகக் கருதப்பட்டவர்களை மற்றவர்களுக்குச் சமமான நிலைக்குக் கொண்டு வருவதற்காகக் கல்வி பெறும் வாய்ப்பை அளிக்க வேண்டும் என்ற ஆதங்கத்தில்தான் பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் மக்கள் ஆகியோருக்கு விழுக்காடு முறையில் இடம் ஒதுக்கும் முறை கொண்டுவரப்பட்டது. இந்த உயர்வுதாழ்வுகள் எல்லா மட்டத்திலும் நமது ஒற்றுமையைக் குலைத்து நம்மை பலவீனப்படுத்தி, நமது ஆக்க சக்திகளைப் பாழ்செய்து, நம்மை முன்னேற விடாமல் தடுத்தும், கெடுத்தும் வருகின்றன. இதற்கு மனத்துணிவு வேண்டும். “துணிவுடமை என்பது உடல் உரத்தைக் குறிப்பிடுவது அல்ல, மனத்தின்மையே துணிவுடமை” என்று காந்தியடிகள் கூறினார். நல்லொழுக்கமும், மனத்தின்மையும் உள்ளவர்கள் நம்பிக்கையை எளிதில் உருவாக்குவதோடு தங்களைச் சுற்றியுள்ளவர்களையும் தூய்மைப்படுத்துகின்றனர் என்றும் காந்தியடிகள் கூறியுள்ளார். எனவே, சமுதாயத்தைப் பின்னோக்கி இழுத்துச் செல்லக்கூடிய இதுபோன்ற தீயசக்திகளுக்கு இரையாகாமல் தெளிந்த சிந்தனையுடனும், மனஉறுதியுடனும், துணிவுடனும் செயல்படுவதற்கு நீங்கள் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். எது நன்மை, எது தீமை என்பதை அறிந்து கொள்வதற்கும், எதை ஏற்பது, எதைத் தவிர்ப்பது என்ற முடிவு எடுத்துக்கொண்டு மேலே மேலே முன்னேறுவதற்காகவும்தான் நாம் கல்வி கற்றிருக்கின்றோம்.

“உண்மையான கல்வியின் நோக்கம், ஒழுங்கானவற்றைச் செய்வோராக மட்டுமின்றி, ஒழுங்கானவற்றைச் செய்வோராக மட்டுமின்றி ஒழுங்கானவற்றில் பற்றுக்கொள்வோராகவும் உழைப்போராக மட்டுமின்றி, உழைப்பை மதிப்பவராகவும், கற்றவர்களாக மட்டுமின்றி அறிவின் மீது நாட்டமுடையோராகவும், தூயோராக மட்டுமின்றி தூய்மையான நியாய உணர்வும், நல்வாழ்வும் உடையோராகவும் மக்களை ஆக்குதல் வேண்டும்” என்று காந்தியடிகளைப் பெரிதும் கவர்ந்த பேரறிஞர் ரஸ்கின் கூறியுள்ளார்.

கல்வி கற்றுள்ள நீங்கள் அறிவொளி பெற்றுள்ளீர்கள். கண்மூடித்தனமாக எதையும் ஏற்றுக்கொள்ளாமல், தீர ஆராய்ந்த தெளிவு பெற்று முடிவுகளைத் துணிவுடன் செயலாக்குவதுதான் நீங்கள் பெற்ற கல்விக்கு அழகாகும். எந்த வழியைப் பின்பற்ற

வேண்டும் என்ற தம் கருத்தை உங்கள் மீது சுமத்த எவருக்கும் உரிமையில்லை. ஆனால், எந்த வழியை ஏற்றுக்கொள்கிறீர்களோ அந்த வழி அறவழியாக இருக்கவேண்டும் என்பதை மட்டும் நான் வலியுறுத்திக் கூறுவேன். சில அடிப்படைக் கடமைகள் நம் அனைவருக்கும் உண்டு. அவற்றை ஆற்றும் வகையிலே நான் உங்களைக் கேட்டுக்கொள்வது ஒன்றுதான். தன் ஊனையும், உதிரத்தையும் அளித்து, உங்களுக்கு உயிர் அளித்த உங்கள் அன்னையை என்றென்றும் வணங்குங்கள். ‘‘யாதும் ஊரே, யாவரும் கேளிர்’’ என்று பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பொதுமை நெறி போதித்த, தாய்மொழியாம் செந்தமிழ் மொழியை என்றென்றும்போற்றுங்கள். உங்களை வாழவைத்து எனது குடிமகன் என்ற பெருமையை உங்களுக்கு அளிக்கும் தாய்நாட்டை நேசியுங்கள். ‘‘பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனி சிறந்தனவே’’ என்ற மகாகவி பாரதியின் வாக்கை நினைவில் வையுங்கள். எல்லாவற்றுக்கும் மேலாக உங்களுக்கு நீங்களே உண்மையாக இருங்கள். அப்போதுதான், உங்கள் வாழ்க்கை மட்டும் அல்லாது, உங்களை நம்பி நிற்கும் இந்த நாட்டின் வாழ்வையும் நீங்கள் உருவாக்கமுடியும், உயர்த்த முடியும். கனிவுடனும், பணிவுடனும், துணிவுடனும், பாசத்துடனும், பரிவுடனும், வாய்மையுடனும், வலிமையுடனும், தூய்மையுடனும், நீங்கள் நன்மக்களாக வாழ்ந்து, உங்கள் பெற்றோருக்குப் பெருமை தேடித்தந்து, உங்களுக்கு ஆதரவு அளித்த சமுதாயத்திற்கு உயர்வு தேடித்தந்து, உங்களைக் குடிமக்களாகப் பெற்றுள்ள இந்த நாட்டிற்குச் சிறப்பைத் தேடித்தந்து, எதிர்காலத்தை ஒளிமயமாய் ஆக்க வேண்டுமென்று உங்களை வாழ்த்துகின்றேன்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(18.12.1982 அன்று, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 16ஆம் பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரை)

பெரியார் மாவட்டம்

பால்வளம் பெருக்கி
உடல் நலம் வளர்ப்போம்!

தேசிய பால் பண்ணைகள் வளர்ச்சி வாரியத் தலைவர் குரியன் அவர்கள் இங்கே பேசும் போது சிரிக்கவும் வைத்தார்; சிந்திக்கவும் வைத்தார். இந்தத் தொழிலில் சிக்கலும் உண்டு; அதே நேரத்தில் அதனைச் சீராகச் செய்ய வேண்டும் என்ற கருத்தையும் எடுத்துரைத்தார்.

தமிழ்நாட்டைப் பாராட்டிவிட்டு, குஜராத் மாநிலத்துக்கு இணையாக வளர்ச்சி பெறவில்லை என்றும் குறிப்பிட்டார். ஒரு மகாத்மா தான் தோன்ற முடியும். அதுவும் குஜராத்தில்தான் தோன்ற முடியும். அவருடைய உன்னதமான திட்டங்களை மறக்க முடியாது. எப்போதும் அவற்றைப் பின்பற்றுபவர்கள், பின்பற்றுபவர்கள்தான். வழி காட்டிகள் வழிகாட்டிகள்தான்.

தமிழகத்தைப் பொறுத்த அளவில் எந்த அளவுக்குக் கடமைகள் ஆற்ற வேண்டும் என்று கருதுகிறோமோ அதற்கான முயற்சிகளில் நாங்கள் இறங்கி இருக்கிறோம். இதில் ஒருபடி, இரண்டு படி என நாங்கள் ஏறிவிடவில்லை என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

பால்வளத்தைப் பெருக்கும் அதே நேரத்தில் மக்களுக்கு உடல் நலத்தையும் அளித்துத் தொழில் வளத்தையும் பெருக்குகிறோம். மாண்புமிகு அமைச்சர் கே.ஏ. கிருஷ்ணசாமி பால்வளத்துறையின் பொறுப்பை ஏற்ற பிறகு தமிழ்நாட்டில் பால்வளத்துறை சீரோடும், சிறப்போடும் வளர்ச்சி அடைந்து வருகிறது என்பதைச் சொல்வதில் பெருமை அடைகிறேன்.

பால் உற்பத்தியில் எத்தனை இலட்சம் பேர் ஈடுபட்டிருக்கிறார்களோ அந்த அளவுக்குப் பிரச்சினைகள்—சிக்கல்கள் உருவாகின்றன என்பதைக் கணக்கிட்டுப்பார்க்க வேண்டும். ஒரு நிறுவனத்தைத் தொடங்கும்போது அதை எப்படி நடத்துவது என்ற பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. அதையெல்லாம் தாண்டித்தான் ஒரு செயலை நாம் வெற்றிகரமாக முடிக்க வேண்டும்.

ஏழை, பணக்காரன் என்றும் தொழிலாளி, முதலாளி என்றும் சொல்வதை – அரசியல்வாதிகள் பயன்படுத்துவதைப் போலப் பயன்படுத்தாமல் ஏழ்மையைப் போக்க – தொழில் வசதிகளைப் பெருக்க, உடல்வளத்தை மேம்படுத்த, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கையைக் குறைப்பது என்ற வகையில் நாம் எடுத்துக்கொண்டு ஒவ்வொரு பிரச்சினையையும் தீர்க்க வேண்டும் என்ற நம்பிக்கையுடன் செயல்படுவோம்.

பாலைக் காப்பது என்றால் அதற்கு என்னென்ன வசதிகள் வேண்டும் என்பதையும் கணக்கிட வேண்டி வருகிறது. பால் கறக்கும் பசுக்களை எத்தனை ஆண்டுக்குக்

காப்பாற்றப் போகிறோம் என்று எண்ணிப் பார்த்தால் இதிலும் பிரச்சினை இருக்கிறது என்று தெரிகிறது.

சென்னை நகரில் மாடு வைத்திருப்பவர்கள் மாலை நேரத்தில் வெளியே விட்டு விடுகிறார்கள். அவை எங்கே போகின்றன? போஸ்டர்கள் எங்கே ஒட்டப்படிருக்கின்றனவோ அங்கே செல்கின்றன. போஸ்டரில் உள்ள பசையிலிருந்து தம் பசியைத் தீர்த்துக் கொண்டு, காலையில் பாலைத் தருகின்றன. இப்படிப்பட்ட மாடுகள் தரும் பாலில் எவ்வளவு சத்து இருக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மாடுகளுக்கு நல்ல தீவனங்கள் தரப்பட்டால் தானே நல்ல சத்துள்ள பால் கிடைக்கும்?

35 இலட்சத்திற்குமேல் சென்னை நகரில் மக்கள் வாழ்கிறார்கள். அமுலாயினும், ஆனந்த ஆயினும், ஆவின்பால் ஆயினும், இந்தியா முழுதும் எல்லாருக்கும் பால் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் தோன்ற வேண்டும்.

மொழி பற்றி, ஜாதி பற்றி, எல்லைக்கோடு பற்றிச் சிந்திக்காமல் அனைத்து மக்களும் வாழ வேலைவாய்ப்புப் பெருக, வேளாண்மைக்கும் இத்துறைக்கும் உள்ள தொடர்பு மேலோங்க இந்தத் தொழிலில் வளத்தை அதிகப்படுத்த இம்மாநாடு வழிவகுக்கும் என நம்புகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

(11.02.1983 அன்று, சென்னையில் நடைபெற்ற அனைத்திந்திய பால்பண்ணைத் தொழிலின் 19ஆம் மாநாட்டைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை)

Government of Andhra Pradesh Irrigation Departme
TELUGU GANGA PROJEC
Foundation Stone for Brahmam gari Matham Balancing Res
Badvel Taluk, Cuddapah District.
Laid by SRI M.G.RAMA CHANDRAN, Hon'ble Chief Minister
On the 27 th of April, 1983.
Function Presided over by SRI N.T.RAMA RAO, Hon'ble Chief Minister
N.SRINIVA

சகோதர பாசத்திற்கு எடுத்துக்காட்டாக நடக்கின்ற விழா!

சித்திரா பௌர்ணமியில் நடக்கும் இந்த அடிக்கல் நாட்டுவிழா ஆந்திர மக்களுக்கும் தமிழக மக்களுக்கும் உள்ள சகோதர பாசத்திற்கு எடுத்துக் காட்டாக நடக்கின்ற விழாவாகும். இத்திட்டத்தால், ஆந்திராவில் உள்ள ராயலசீமா போன்ற பகுதிகளில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எவ்வளவு நம்மை என்று இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டனர்.

தமிழகத்தில் 65 இலட்சம் ஏழைக் குழந்தைகளுக்கு அரசு மூலம் இலவச சத்துணவு அளித்து வருகிறோம். அதேபோல் இங்கே எனது தம்பி, ஆந்திர முதல்வர் என்.டி.ஆர் அவர்கள் ஏழை எளிய குழந்தைகளுக்கு ரொட்டியும் பாலும் தந்து வருவதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். இன்றைய குழந்தைகள் நல்ல ஊட்டச் சத்தோடு வாழ்ந்தால்தான் எதிர்காலத்தில் இத்தேசம் ஒளிமயமாகும். இத்தகைய திட்டம் இந்தியா முழுவதும் வரவேண்டும்.

எங்கே போனாலும் வேலை இல்லை; போதுமான சம்பளம் கிடைக்கவில்லை; சொந்தமாகக் குடியிருக்க வீடில்லை என்கிறார்கள். இது தமிழகத்திலோ, ஆந்திராவிலோ மட்டுமல்ல; இந்தியா முழுவதும் இருக்கிறது. இந்த நிலை மாறப் புதிய திட்டங்கள் தீட்டப்படவேண்டும். படித்தவர்கள் நூற்றுக்கு நூறு என இருந்தாக வேண்டும். தாய்மார்கள், நூற்றுக்கு எழுபது சதவீதத்துக்கும் குறைவாகவே படித்தவர்கள் இருப்பதை வருத்தத்தோடு குறிப்பிடுகிறேன்.

ஆந்திர முதல்வர் அவர்கள் இத்திட்டத்திற்கு ஒத்துக்கொண்டது ஏன் என்று சிந்திக்கிறேன். வெறும் விவசாயத்திற்கு மட்டுமல்ல தண்ணீர். இத்திட்டத்தின் மூலம் பல இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலையும் தரவிருக்கிறார். இந்த அணைக்கட்டு கட்டும் போது இலட்சக்கணக்கான வேலையற்றோர் வேலை பெற இருக்கின்றனர். அதுபோலவேதான் கோடிக்கணக்கான ரூபாயில் கால்வாய் வெட்டும் திட்டமும்.

பாசனத்திற்குத் தண்ணீர் – குடிப்பதற்குத் தண்ணீர்–மக்களுக்கு வேலை எல்லாம் இத்திட்டத்தில் இருக்கிறது. உழைக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பு நிச்சயம் கிடைக்கும். அதேநேரத்தில் பல தொழில்கள் பெருகும். இதைச் சுற்றி சிறுசிறு தொழில்கள் இங்கு தோற்றுவிக்கப்படும். வேலைவாய்ப்பு உறுதியிருந்தால், மக்கள் வாழ்வு உத்தரவாதத்தோடு மேம்படும். இன்சூரன்ஸ் போல வாழ்க்கை உத்தரவாதம் கிட்டும்.

மாண்புமிகு ஆந்திர முதல்வர் அவர்கள் இங்கே பேசுகிறபோது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். சொன்னதை நிறைவேற்றுகிறேன் என்றார். எந்த மாநிலத்திலும்,

மூன்றே மாதத்தில் இப்படி திட்டமிட்ட வரலாறே கிடையாது. அது என்.டி.ஆர் ஒருவரால்தான் முடிந்திருக்கிறது, நாட்டு மக்களாகிய உங்கள் துணையுடன். இந்த துணை அவருக்கு எப்போதும் இருக்க வேண்டுமென என் தாயாம் தெய்வத்தை வேண்டுகிறேன்.

இந்திட்டத்தின் மூலம் சென்னையில் உள்ள 45 இலட்சம் மக்களுக்குக் குடிநீர் கிடைக்கவிருக்கிறது. அங்கே தமிழ் பேசுவோர் மட்டுமல்ல; தெலுங்கு பேசுவோரும் இருக்கின்றனர். அதுமட்டுமல்ல; கருநாடக மக்களும், குஜராத், பஞ்சாப், மகாராட்டிரம் இப்படிப் பல மாநில மக்களும் அங்கே இத்தண்ணீரைக் குடிக்கவிருக்கின்றனர். இதை இங்கு நான் கூறக்காரணம், சகோதரர் என்.டி.ஆர். ஆந்திராவுக்கு மட்டுமல்ல; எல்லோருக்கும் சொந்தம். அவ்வகையில் அவர் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

(27.04.1983 அன்று, ஆந்திர மாநிலத்தில் நடைபெற்ற தெலுங்கு கங்கைத் திட்ட தொடக்க விழாவில் ஆற்றிய உரை)

சொன்னதைச் செய்வோம்!

இது தமிழக அரசால் நடத்தப்படுகின்ற விழாவாகும். இது ஒரு அரசியல்கட்சி நடத்துகின்ற விழா அல்ல. இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்ற நான், பள்ளிக் கட்டடங்களையும் திறந்த வைத்திருக்கிறேன்.

சுதந்திரம் கிடைத்து ஏறத்தாழ 35 ஆண்டுகள் ஆகிவிட்டன என்று சொன்னாலும் இதுவரையில் இந்த 4 கோடியே 3 இலட்சத்துக்கு உரித்தான குடிநீர்த்திட்டத்தை யாரும் செய்ய முன்வரவில்லை என்பதும், ஜக்கையன் எம்.பி.யாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவருடைய வற்புறுத்தல், அவர் எடுத்துக்காட்டிய அதைப்பற்றி விளக்கமாகச் சொன்ன நிலைமைகள், அதற்கு ஏற்றாற்போல் உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் கோபால் அவர்கள் முழு முயற்சி எடுத்துத் தமிழக சட்டமன்றத்தில் பேசி, தமிழக அமைச்சர்களை வற்புறுத்தி இதை நிறைவேற்றியே தீரவேண்டும் என்கிற ஒரே பிடிவாதத்தில் பல மாதங்களாக பலமாதக் கணக்காக அவர்கள் முயற்சியெடுத்து இந்த நிலைமையை முடிவாக்கியிருக்கிறார்கள் என்பதை விவரம் தெரிந்த பெரியவர்களுக்கும் தாய்மார்களுக்கும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏறத்தாழ எத்தனை இலட்சம் மக்கள் பயன்பெற இருக்கின்றார்கள் என்பதை மட்டும் இங்கே நான் எடுத்துக்கூற வேண்டியது என்னுடைய மாபெரும் கடமை என்று நான் கருதுகின்றேன். 2 இலட்சத்து 45 ஆயிரம் பேர்களுக்கு இந்தத் திட்டத்தின் வாயிலாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கவிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடும், மன நிறைவோடும், பெரியவர்களுக்கும். தாய்மார்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இந்தத் திட்டம் ஒரு கட்சிக்காகக் கொண்டு வரப்பட்ட திட்டமல்ல.

இந்த ஏழு மாதங்களில் வறட்சி எவ்வளவு தொல்லைகளை நமக்குத் தந்திருக்கிறது. எத்தனை கோடி ரூபாய் அளவில் தமிழ்நாடு முழுவதற்கும் இந்த வறட்சிப் பணிக்காக, வறட்சியைப் போக்குவதற்காக, குறைந்தது குடிக்கத் தண்ணீர் எல்லோருக்கும் கிடைப்பதற்கு ஆழ்கிணறு குழாய்கள் இவைகளெல்லாம் அமைப்பதற்காக என்னென்ன செய்யமுயன்றோம் என்பதை நீங்கள் எண்ணிப்பார்த்தால் அதற்கு இடையிலேயே 4 கோடி ரூபாய்த் திட்டத்தையும் இணைத்து, நாங்கள் மனதிலே வைத்து அதற்காகப் பணம் ஒதுக்கி அதைச் சட்டசபையிலே சொல்லி இன்று இங்கே தொடங்குகின்றோம் என்றால் நீங்கள் ஒன்றை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும், இன்று நாளை என்பதல்ல சொன்னவார்த்தைகளை – தன்னுடைய பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்காமல் தன் பொறுப்பினுடைய நாட்கள் தீர்வதற்குமுன் அந்தப் பணியை நிறைவேற்றிக் கொடுக்க யார் முன்வருகிறார்களோ அவர்கள்தான் உண்மையான மக்கள் தொண்டர்கள் என்பதை இங்கே நான் வற்புறுத்திக் கூற விரும்புகின்றேன்.

2 இலட்சத்து 45 ஆயிரம் பேருக்கு மேல் நல்ல குடிநீர் பெறுவதற்கு இந்தத் திட்டம் வகை செய்கிறது என்பதை எண்ணிப் பார்ப்போமானால் எத்தனையோ ஆண்டுகளாக ஏங்கிக்கிடந்த இந்தத் திட்டத்தை எதிர்பார்த்திருந்த மக்களுக்கு இன்றைய தினம் இத்திட்டத்தைத் தொடங்கியிருக்கிறோம் என்பதை மட்டும் நான் மகிழ்ச்சியோடு சொல்லுவேன்.

அதிகாரிகள் பொறியியல் நிபுணர்களெல்லாம் எவ்வளவு விரைவில் இதைச் சரியாக முடித்துக் கொண்டிருக்கிறார்களோ, பிறர் குறைகூற இடமின்றி முடித்துக் தருகிறார்களோ, அவர்களுக்கெல்லாம் இந்த அரசு வாழ்த்துமட்டுமல்ல அவர்களுக்குத் தேவையான வகையில் அவர்களுக்கு அவர்களுடைய பதவியிலே பெருமை சேர்ப்பதற்கும் இந்தத் தமிழக அரசு தயங்காது, மறக்காது என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்மிடம் இருக்கின்ற அதிகாரிகள் விவரம் தெரியாதவர்கள் அல்ல, செயல்படுத்த அவர்களுக்குத் திறமையில்லாமலுமில்லை அவர்கள் நினைப்பதால்தான் இன்று பல இடங்கள் ஒரு ஆண்டு இரண்டு ஆண்டு என்று திட்டம்போட்டு இதற்குள் முடிக்க வேண்டும் என்று சொன்னபோது, மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே அந்தத் திட்டத்தை முடித்துக்காட்டி விட்டோம் என்று சொல்லுகின்ற திறமைபடைத்த நிபுணர்கள். அதிகாரிகள் தமிழகத்திலே இருக்கின்றார்கள் அந்தக் கடமையை அவர்கள் செய்ய வேண்டுமென்று விரும்பிவிட்டார்களானால், இதை உடனே செய்ய வேண்டுமென்று எண்ணுவார்களானால் அது உடனடியாக நிறைவேறும் என்பதை நான் உணர்ந்திருக்கின்றேன் அந்த வகையிலே திட்டமிட்டபடி வெகுவிரைவில் இந்த நல்ல குடிநீர்த் திட்டம் சரிவரச் செயல்பட்டு எந்தக் குறையும் குற்றமும் இல்லாத அளவுக்கு அதை வெற்றிகரமாக முடித்துத் தருவார்கள் என்ற நம்பிக்கையை நான் இங்கே சொல்லிக் கொள்கின்றேன்.

கிருஷ்ணாநீர்த் திட்டத்தை 1881ஆம் ஆண்டில்தான் தொடங்கினார்கள். 102 ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போதுதான் இந்த ராமச்சந்திரனும் அந்த என்.டி. ராமாராவும் சேர்ந்து கையெழுத்துப் போட்டிருக்கிறோம். அந்தத் திட்டத்தினுடைய அளவு கோல் எல்லைக்கோடு என்ன தெரியுமா? எத்தனை ஆண்டுகளுக்கு இந்த ஒப்பந்தம் என்று கேட்டால் அது நிரந்தரம். எத்தனை எம்.ஜி.ஆர் தோன்றினாலும் சரி எத்தனை என்.டி.ஆர் தோன்றினாலும் சரி ஆயிரக்கணக்காண ஆண்டுகளுக்குப் பிறகும் அதற்கு எல்லையில்லாமல் அவர்கள் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். 12,000 கன அடி தண்ணீர் சென்னை நகருக்கு மட்டும் குடிப்பதற்கு அவர்கள் தரவேண்டும் என்பது ஒப்பந்தமாகும். அந்த 12,000 கன அடி தண்ணீர் சென்னைக்குக் கிடைக்கின்றது என்றால் நான் உங்களுக்குச் சொல்லுவேன் குறிப்பாக ஆங்கிலத்தில் சொல்லும்போது 12 டி.எம்.சி என்று செல்லுவார்கள். ஒரு டி.எம்.சி என்றால் 1,000 கன அடி தண்ணீர்.

இங்கே சத்துணவுத் திட்டத்தின் செலவு இன்றைய தினம் 154.155 கோடிக்குப் போகிறது.முதியவர்களுக்கும்உணவளிக்கவேண்டுமென்றுசொல்லியிருக்கின்றோம். அதற்குப் பணம் வேண்டாமா? நாம் 210 கோடி கேட்டோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

கிணறு தோண்டுவதற்கு, குளம் வெட்டுவதற்கு, பாதை போடுவதற்கு. வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு விதவைத் தாய்மார்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு, படித்தவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு இதுபோல் பல திட்டங்களை உழைக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க இதற்கெல்லாம் வேண்டும். உடனடியாக குடிதண்ணீர் கிடைப்பதற்கு ஆங்காங்கே பல வழிமுறைகளைச் செய்ய வேண்டுமென்று பணம் கேட்டால் 63 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது. நாங்கள் இதுவரை செலவு செய்ததே ரூபாய் 100 கோடிக்குமேல். எங்கிருந்து பணம் வரும்? மற்றவர்கள் பங்கு பெற வேண்டாமா? விற்பனை வரியில் 5 சதவிகிதம் அதிகப்படுத்திக்கொடு என்கிறார்கள். ஆனால், இந்த நுழைவு வரியில் 2 சதவிகிதம் போடாதே என்று எச்சரிக்கிறார்கள், இதற்கு என்ன பொருள்? விற்பனை வரியில் 5 சதவிகிதம் போடு நாங்கள் கோபித்துக் கொள்ளவில்லை. ஆனால் நுழைவு வரியில் 2 சதவிகிதம் போடாதே! உங்களுக்குப் புரிய வேண்டும். ஏன் தெரியுமா? அந்த 2 சதவிகிதம் போடும்போது 2 சதவிகிதம் பணம் பெரிதல்ல கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும். அந்தக் கணக்கு இன்கம்டாக்ஸ் வரைக்கும் போகும். அந்தக் கணக்கில் தவறிருந்தால் ஆபத்துவரும். அந்தக் கணக்கு ஒழுங்காக இருந்தால் அரசுக்கு இன்னமும் அதிக வரிப்பணம் கிடைக்கும். இதைத்தான் இங்கு சொல்லுகின்றேன்.

இந்தத் திட்டங்களை நாம் செய்து தீரவேண்டும். நிறைவேற்றியாக வேண்டும். இதற்குப் பணம் வேண்டும். ஆகவே இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஏழைகளின் மீது வரிவசூலிக்கப்படாமல் பாவப்பட்ட மக்கள் மீது வரிவிதிக்காமல், வசதி படைத்தவர்கள் மீது 2 சதவீகிதம் வரி அதற்குக் குறைவாக குறைந்துக் கொள்வதற்கு சதவிகிதம் குறைவு என்று கூட வைத்துக் கொண்டு வரி விதிக்கலாம். இந்த அரசுக்கு ஒத்துழைக்கின்ற அத்தனை பேருக்கும் நன்றி கூறி இதை வெற்றிகரமாக முடிக்க ஒத்துழையுங்கள் என்று கேட்டுக்கொண்டு அண்ணா நாமம் வாழ்க என்று சொல்லி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்!

அண்ணா நாமம் வாழ்க!

(11.05.1983 அன்று, கம்பம் கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்ட கால்கோள் விழாவில் ஆற்றிய உரை)

என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்ச்சி!

இந்த நிகழ்ச்சி என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்ச்சியாகும்.

ஒரு வரலாற்றுச் சிறப்பான காரியத்தை எதிர்கொண்டு நிற்கிறேன் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1976ஆம் ஆண்டு, சென்னையில் இது போன்ற கூட்டத்தில் பிரதமர் அவர்களின் அறிவிப்புகள்தான் இந்தக் கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் என்பதை நினைத்துப் பார்க்கிறேன். அவர் கூறும் நல்ல கருத்துகள் நிறைவேறுவதைச் சிலர் தாமதப்படுத்தினாலும், அந்த நல்ல திட்டங்கள் நிறைவேறியே தீரும் என்பது புரிகிறது.

இந்த மாநிலத்தின் ஒரு மாவட்டம் என்கிற அளவுக்குச் சென்னையில் மக்கள் தொகை 35 இலட்சத்திலிருந்து 40 இலட்சம் வரை இருக்கிறது. இங்கு குடிநீர்ப் பிரச்சினை எவ்வளவு பெரிது என்பது நமக்குத் தெரியும். நான் எப்போதும் ஒருமைப்பாடு பற்றிப் பேசுபவன் என்பதையும், ஒருமைப்பாடு நாட்டில் இருக்கவேண்டும் என்றால் உள்ளத்தில் இருக்க வேண்டும் என்றும் சொல்பவன் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

இந்த மேடையில் வீற்றிருக்கும் மாநில முதல்வர்கள் எந்தக்கட்சியைச் சேர்ந்தவர்கள், நான் எந்தக் கட்சியைச் சேர்ந்தவன்? கருநாடக முதல்வர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்? இங்கு நான்கு கட்சிகளைச் சேந்தவர்கள் இருக்கிறோம் – இதைப்பார்க்கும் போது ஒருமைப்பாடு மகத்தானது என்பதும், அதை நிறைவேற்ற உள்ளம்தான் வேண்டும் என்பதும் நன்கு புரியும். இந்தியாவில் ஒருமைப்பாடு என்பது பிரிக்க முடியாததாகும். இங்கு ஒருமைப்பாடு சிக்கல் இல்லாத ஒன்றாகிவிட்டது.

இந்தத்திட்டம் நிறைவேற எவ்வளவு கஷ்டப்படவேண்டும் என்று உணராமல் இல்லை. கருநாடக மாநில முதல்வர் இங்கே பேசும் போது, காவிரிப் பிரச்சினை குறித்து மனம் விட்டுப் பேசவேண்டும். அப்படி பேசினால் இந்தப் பிரச்சினை தீர்ந்து விடக்கூடியதுதான் என்று குறிப்பிட்டார். அதற்காக கருநாடக முதல்வருக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நாங்கள் எவ்வளவு காரியமாற்றினாலும் மத்திய அரசின் ஆதரவும் ஊக்கமும் இருந்தால்தான் இந்தத்திட்டம் வெற்றி பெற முடியும், இந்தத்திட்டம் தனிப்பட்டவர்களுக்காக அல்ல – ஆனால் பணம் வீணடிக்கப்பட்டதாகச் சிலர் கூறுகிறார்கள். வாழமுடியாதவர்கள் வாழ்கையில் ஏமாற்றமடைந்தவர்களின் வயிற்று எரிச்சல் அது. இந்தத் திட்டம் காலத்தையும் மீறி நிலைத்து நிற்கும்.

மாராட்டிய முதல்வர் கூறும்போது நான் கஷ்டப்படுகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள் – பிறர் கஷ்டப்படுவதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கமுடியாது.

முதலில் பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்று கூறினார்கள். இதைத்தான் நாமும் சொல்கிறோம். அண்ணாவும் – காந்தியடிகளும் கூறியுள்ளார்கள்.

பிறரை நேசி அவர்கள் உங்களை நேசிப்பார்கள் என்றார் விவேகானந்தர். மாண்புமிகு ஆந்திர முதல்வர் தம்பி என்.டி.ஆர். அவர்கள் நீண்ட உரையாற்றினார். அதற்கு இப்போது பதில் சொல்ல வேண்டுமா என்று எண்ணுகிறேன். நாட்டு நலனுக்காக அவருக்குச் சில ஆசை, ஆதங்கம் இருக்கிறது. அதை பிரதமர் உணர்வார். அதன் அடையாளம் தான் 20 அம்சத் திட்டம்.

20 அம்சத்திட்டம், அதைத்தான் சொல்கிறது. 1976ஆம் ஆண்டு நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது 20 அம்சத் திட்டத்தைத் தெருத்தெருவாகச் சென்று சொல்லிய போது, சிலர் கேலி பேசினார்கள். அவர்களைப் பார்த்து இந்தக் கூட்டம் கேலி செய்கிறது. இந்த விழா தனிப்பட்ட மனிதருக்கோ தனிப்பட்ட கட்சிக்கோ சாதிக்கோ நடக்கும் விழா அல்ல இது மக்களுக்காக நடத்தும் மக்கள் விழா.

முன்பு விளக்கு இருந்தது. திரியும் இருந்தது. எண்ணெய்யும் இருந்தது, ஆனால் அதை ஏற்றிவைக்க ஆளில்லாமல் இருந்தது. இன்று அந்த விளக்கை ஏற்றி வைக்கிறார் பிரதமர். இந்த நாடு முழுவதும் இதுபோல் பல விளக்குகள் பிரதமரால் ஏற்றிவைக்கப்பட வேண்டும். தமிழக மக்கள் மீது பிரதமருக்கு நல்லெண்ணமும் அனுதாபமும் எவ்வளவு இருக்கிறது என்று புரிகிறது. நீங்கள் பல்லாண்டு வாழ்க ! நாட்டிற்கு நல்லது செய்யுங்கள்.

அண்ணா நாமம் வாழ்க !

❖ ❖ ❖

(25.05.1983 அன்று, சென்னை நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்ற தெலுங்கு கங்கைத் திட்ட தொடக்க விழாவில் ஆற்றிய உரை)

நோயை விரட்டுங்கள்;
மனத்தைப் பண்படுத்த உதவுங்கள்!

அனைத்திந்திய அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள் கழகம் 1964ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இப்போது விரிவாக்கம் அடையப்போகிறது என்றார்கள். எத்தனை ஆண்டுகள் என்று கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். அன்று நான் கொடுத்தது ரூ. 50 ஆயிரம். இன்று ரூபாய் இலட்சத்துக்கு சமம் என்று கூறினார். அன்று நான் மட்டும் கொடுக்கவில்லை. டாக்டர் ராமமூர்த்தியும் கொடுத்து இருக்கிறார். அப்போது அவர் மருத்துவர். நான் கலைஞன். சாதாரண நடிகராக இருந்த நான் கொடுத்தாலும், அதைக்கொடுக்கச் செய்வதில் பங்கு கொண்டவர் டாக்டர் நடராஜன்.

ஆண்டுகள் பல கடந்தாலும் இன்று மீண்டும் இந்தக் கட்டட கால்கோள் விழாவில் கலந்து கொள்கிறேன். நல்லதை எண்ணினால் அது விரிவடையும்போது அதில் பங்குகொள்ள வாய்ப்புக் கிடைக்கும் என்பது தெரிகிறது.

இங்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கட்டடத்துக்காக ஒரு பிரிவை ஏற்படுத்தும்போது அந்தப்பிரிவுக்கு ஆகும் செலவான ரூ.3 இலட்சத்தை சென்னை செரீப் திரு. சிவந்தி ஆதித்தன் அவர்கள் அளிக்கிறார். அந்தப்பிரிவுக்கு அவரது தந்தை பெயரை வைக்க வேண்டும் என்று நானும் அவரும் விரும்புகிறோம்.

நான் அதிகமாகக் கவலைப்படுவது புறநகர்ப் பகுதியைப் பற்றியும், கிராமப்புறப்பகுதியைப் பற்றியும்தான். அந்த பிற்பட்ட பகுதிகள் கிராமப்புற பகுதிகள் எப்படி இருக்கிறது என்பதை அங்கு வாழும் மக்களை நன்கு கவனித்தால் தெரியும் மருத்துவர்கள் படித்து பட்டம் பெறுகிறார்கள். நிபுணர்கள் தகுதி வாய்ந்தவர்களுக்குப் பட்டம் அளிக்கிறார்கள். ஆனால், அவர்கள் யாருக்கு மருத்துவம் அளிக்க வேண்டுமோ அங்கு போக மறுக்கிறார்கள். இது வேதனைக்குரியது, தலைக்குனிவை ஏற்படுத்துகிறது.

பக்கத்தில் இருப்பவர்களுக்கு நோய் இல்லாமல் இருந்தால்தான் நோய் பரவாமல் இருக்கும், கிராம மக்கள் வேலைக்கும், பொருளுக்கும் ஏங்கிக் கிடந்து நகரத்துக்கு வருகிறார்கள். இதைத் தடுக்க வேண்டாமா? தடுக்க என்ன செய்கிறோம் வேலைவாய்ப்பைக் கொடுக்கிறோம். வேலை வாய்ப்புக் கொடுத்தால் போதாது நோயைத் தடுக்க வேண்டும். அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டும்.

என் வாழ்க்கையில் நடந்ததைச் சொல்ல வேண்டும். என் வாழ்க்கைத் துணைவிக்குப்

பல ஆண்டுகளுக்கு முன்பு காச நோய் வந்தது. அவர் இப்போது உயிரோடு இல்லை, அப்போது பி.ஏ.எஸ் பவுடர் என்பதுதான் கண்கண்ட மருந்து. வேறு நல்ல மருந்துகள் கிடையாது. ஆணி ஊசி ஏற்றிக் காற்று ஏற்றுவார்கள். தமிழகத்தில் யார் பெரிய மருத்துவராக இருந்தாரோ அவர் தான் என் மனைவிக்குச் சிகிச்சை அளித்தார். கேவிட்டி இருந்தது. சிகிச்சை அளிக்கப்பட்டது. மறுபடியும் வந்தது. இனி ஆபரேஷன் செய்ய முடியாது என்று கூறிய அந்த மருத்துவர், உங்கள் மனைவி இன்னும் 3 மாதம்தான் உயிரோடு இருப்பார். அதற்குள் என்ன விரும்புகிறாரோ அதை வாங்கிக் கொடுங்கள் என்றார். அதன் பிறகு ஒரு அறுவைச் சிகிச்சை டாக்டர் வந்தார். அவர் விசேஷ நிபுணர் அல்ல. இந்தப் பெண் சாகப் போகிறாள். நான் சிகிச்சை அளிக்கிறேன் என்று அவர் கூறினார்.

நிபுணர் கொடுத்த தவணை 3 மாதம் தான். எனவே, சரி சிகிச்சை செய்துவிட்டுப்போகட்டும் என்று நான் விட்டுவிட்டேன். அந்த சர்ஜன் சிகிச்சை அளித்த பிறகு ஒரு ஆண்டு உயிரோடு இருந்தார். என் மனைவியை மறுபடியும் அந்த நிபுணரிடம் அழைத்துச் சென்று இனி என்ன செய்வது ? என்று கேட்டேன். நன்றாக இருக்கிறார். என்ன மருந்து கொடுக்கிறீர்களோ அதையே தொடர்ந்து கொடுங்கள் என்றார்.

என் மனைவி 18 ஆண்டு காலம் அதன் பிறகு உயிரோடு இருந்தாள். கொஞ்சம் கொஞ்சமாக அந்த நோய் தீர்ந்தது. பின்பு வேறு நோயினால் மரணம் அடைந்தாள். நான் அந்த நிபுணரைக் குற்றம் சொல்லவில்லை சட்டப்படி அவர் படித்த திறமைக்கேற்ப இதைச் செய்தால் இந்த ஆபத்து வரும், உயிர் போய்விடும் என்ற ஆய்வைச் சொல்லி இருக்கிறாரே தவிர, அவர் தவறு செய்தார் என்று சொல்ல உரிமை இல்லை. இதுபோல அனுபவத்தில் பலவற்றைத் தெரிந்து கொள்கிறோம்.

நான் துப்பாக்கியால் சுடப்பட்டபோது, உயிரோடு திரும்பி வருவேனா என்பதே சந்தேகமாக இருந்தது. அப்போது எனக்குச் சிகிச்சை அளித்த டாக்டர் வேணுகோபால், நான் படத்தில் திரும்ப நடிக்க வேண்டும், காயத் தழும்புகள் இருக்கக் கூடாது என்று கருதி, கழுத்தில் சுருக்கம் விழும் இடத்தில் தழும்பு தெரியாதபடி ஆபரேஷன் செய்தார். இப்படிப்பட்ட மருத்துவர்கள் வேண்டும்.

அமைச்சர் ஹண்டே மருத்துவ அனுபவம் உள்ளவராக இருப்பதால் எனக்கு மிக உதவியாக இருக்கிறார். பல மாநிலங்களில் இருந்து வந்து இருக்கிறீர்கள். உங்கள் எல்லோரையும் பார்க்கும்போது இந்தியாவைப் பார்க்கும் உணர்வு ஏற்படுகிறது. உங்களிடம் நான் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். குழந்தைகள் நோயைத்

தீர்ப்பதற்கு நோய் வராமல் தடுப்பதற்கு இத்தனை ஆண்டுகளில் வகை செய்வோம் என்ற திட்டத்தைத் தர வேண்டும்.

இந்தக் கட்டடத்துக்கு நானும் ஒரு கடமையைச் செய்யலாம் என்று கருதுகிறேன். என் சொந்தப் பொறுப்பில் ரூ. 1 இலட்சமும், அரசின் சார்பில் ரூ. 5 இலட்சமும் அண்ணா பெயரால் அந்தப் பிரிவை உருவாக்கத் தருகிறேன். நாட்டைக் காப்பாற்றுங்கள், நோயை விரட்டுங்கள், மனத்தைப் பண்படுத்த உதவுங்கள்!

அண்ணா நாமம் வாழ்க!

❖ ❖ ❖

(03.07.1983 அன்று, சென்னையில் நடைபெற்ற அனைத்திந்திய அறுவை சிகிச்சை மருத்துவர்கள் கழகத்தின் புதிய கட்டட கால்கோள் விழாவில் ஆற்றிய உரை)

குடிசையிலே இருக்கிறவர்களை நல்ல வீடுகளில் அமர்த்த வேண்டும்!

குடிசையிலே இருக்கிறவர்களை நல்ல வீடுகளில் அமர்த்த வேண்டும், அவர்களுக்குத் தீப்பிடிக்காத வீடுகள் கட்ட வேண்டும் என்பது அறிஞர் அண்ணாவின் உள்ளத்தில் தொடங்கப்பட்ட திட்டமாகும்.

அறுபது வயதுக்கு மேல் ஆனவர்கள் 4,5,6 என்று மாடிகளில் ஏறிப்போவது கடினம். இது போன்ற குடியிருப்புகளில் லிப்ட் வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். வயது ஆனவர்களை கீழே இருக்கும்படிச் செய்ய வேண்டும்.

இங்கே குடும்பத்தில் ஒருவருக்கு வேலை பற்றிக் கூறினார்கள். காலையில் ஒரு பரிதாபமான விஷயத்தைக் கேள்விப்பட்டேன். ஒரு அம்மாள் என்னைப் பார்க்க வந்தார். அவருக்கு 31 வயது இருக்கும். அவர் கணவர் ஒரு ஆசிரியர். வீட்டிற்கு ஒருவருக்கு வேலை திட்டத்தால் தனக்கு வேலை இல்லை என்று கூறிவிட்டார்கள் என்றார்.

இது எப்படிச் சரியாகும்? இதை நான் கேள்விப்பட்டபோது என் உள்ளம் மிகவும் வேதனைப்பட்டது. நாங்கள் வேலை கொடுக்கத்தான் விரும்புகிறோமே தவிர இருக்கும் வேலையைப் பறிக்க அல்ல. இருக்கிறவர்களை வெளியேற்றுவது அரசின் திட்டமல்ல. அரசு அதைச் செய்யாது. இந்தத் திட்டத்தின் நடைமுறை பற்றி நன்றாக விளக்கிச் சொல்ல வேண்டும்.

இந்தத் திட்டத்தின்படி புதிதாக யாருக்காவது வேலை கொடுக்கும்போது, எந்தக் குடும்பத்தில் யாருக்கு வேலை இல்லாமல் இருக்கிறதோ, அவர்களுக்குக்குதான் முதல் சலுகை தரவேண்டும் என்றுள்ளதே தவிர, வேலையை எடுப்பது இந்தத் திட்டத்தின் நோக்கமல்ல.

பத்திரிகைகளில் இதை தயவு செய்து வெளியிட வேண்டும். அவர்கள் இருவரும் சம்பாதித்தாலும் போதுமா என்பது கேள்வி. நல்லது செய்ய வேண்டும் என்பதற்காக அந்தத் திட்டம் கொண்டுவந்துள்ளோம். இப்படிப்பட்ட விபரீதமான விளைவுகள் தொல்லைகள் ஏற்பட அனுமதிக்கக் கூடாது. இதுபோன்ற தவறுகள் நடக்கக் கூடாது. எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டும்.

குடிசைகளிலிருந்து யாரை வெளியேற்றினோமோ அவர்களுக்கு வீடுகள் கொடுத்தாக வேண்டும். இந்த அரசு யாரையும், நடுரோட்டில் உட்காரவிடாது. நடுவீட்டில் உட்கார வைக்கவே நாங்கள் விரும்புகிறோம்.

இதுபோன்ற குடியிருப்புகளைக் கிராமங்களிலும் கட்ட வேண்டும் என்பது என் விருப்பமாகும். நான் முதல்வராகத் தொடர்ந்தால் இதை நிறைவேற்றிக் காண்பிப்பேன்.

அங்கும் மக்கள் தொகை பெருகுகிறது. அங்கே மக்கள் மாடு வளர்க்க வேண்டும். ஆடுகளை வளர்க்க வேண்டும். அதற்காகத்தான் காம்ப்ளெஸ் என்ற வகையில் 150 வீடுகள், 200 வீடுகள் என்று கட்டும்போது, யார் யார் கால்நடைகளை வளர்க்கிறார்களோ அவர்களுக்கு அதற்காக ஷெட் வைத்துக் கொடுத்தால் மாடுகளை அங்கே வைத்துக் கவனிக்க வசதியாக இருக்கும்.

இந்த எண்ணுள்ள வீடுகளைச் சேர்ந்தவர்கள், இந்த ஷெட்டில் மாடுகளை வைத்துக்கொள்ளலாம் என்று செய்ய உள்ளோம். இப்படி வசதி ஏற்படுத்தித்தரும் திட்டம் உள்ளது. அங்கே பஸ் போக்குவரத்துக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். நாளை திறக்கப்படும் குடியிருப்புப் பகுதிக்கு என். வி. நடராசன் பெயர் வைக்கப்படும். தியாகம் செய்தவர்களை அண்ணாவோடு இருந்தவர்ளை நாங்கள் மறக்க மாட்டோம்.

இந்தக் குடியிருப்புப் பகுதிக்கு என். வி. நடராசன் பெயர் சூட்டப்படும் என்று நேற்று சொன்னேன். அது நிறைவேறி இருக்கிறது. அதற்குக் காரணம் பல உண்டு.

அண்ணாவுடன் இருந்தவர்களை நாங்கள் எப்போதும் மறக்க மாட்டோம். காங்கிரசிலிருந்து விலகி 3 வருடம் எந்தக்கட்சியிலும் சேராமல் அண்ணாவின் புத்தகங்களையும், சோஷலிசப் புத்தகங்களையும் படித்த காலத்தில், நான் முதன் முதலில் திராவிட இயக்கத்தலைவர் ஒருவருடன் அறிமுகப்படுத்திக்கொண்டேன் என்றால் அவர் என்.வி. நடராசன்தான்.

டி.வி நாராயணசாமிதான் அவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அன்று இரவு என்.வி.என். எனக்கு ஒரு புத்தகம் கொடுத்தார். அது இளமை விருந்து, திரு. வி.க. எழுதிய நூல்.

உடலை எப்படிப் பாதுகாத்துக் கொள்வது ? உள்ளத்தை எப்படிப் பாதுகாத்துக்கொள்வது ? வசதிக்கு ஏற்ப சுற்றுச் சார்பை எப்படி வைத்துக் கொள்வது ? என்ற விவரங்கள் அடங்கிய அந்தப்புத்தகத்தைத் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த என்.வி.என். தந்தார்.

அவர், கட்சியைப் பற்றித் தெரிந்து கொள் என்று ஏதாவது கொடுப்பார் என்று நினைத்தேன். ஆனால் உடலைப் பேணிப் பாதுகாத்துக் கொள் என்று அந்த புத்தகத்தைத் தந்தார். அவரை என் முதல் குரு என்று கூடச் சொல்லலாம்.

குழந்தைகள் கல்வியோடு நல்ல உடல் நலத்தோடு இருக்க வேண்டும். இதுதான் முக்கியம். வசதி இருக்கிறதே படித்துத்தான் சம்பாதிக்க வேண்டுமா என்று நினைக்கக்கூடாது. அதுபோல் ஏழைகள் நாம் உழைக்கத்தான் பிறந்தோம் என்று எண்ணக்கூடாது. யார் எந்தப் பதவிக்குப்போவார் என்று நிச்சயமில்லை.

மகாத்மா ஆவார் என்று அவரைப் பெற்றவர்கள் முதலில் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள். அண்ணாவைப் பெற்றவர்களும் அப்படித்தான். பெரியாரைப் பெற்றவர்களும் அப்படித்தான். என்.வி.யென்னைப் பெற்றவர்களும் அப்படித்தான்.

இந்தக் குழந்தை இப்படித்தான் வரும் என்று முதலில் சொல்ல முடியாது. இதையெல்லாம் மனத்தில் கொண்டு கல்வி கற்று சுத்தமாக இருக்க வேண்டும்.

எதையும் உண்ணும் முன் கைகளைச் சோப்புப் போட்டுக்கழுவ வேண்டும். தாய்மார்கள் குழந்தைகளுக்கு இதைச் சொல்ல வேண்டும். இளைஞர்களுக்குச் சொல்வேன் தினமும் தாய் தந்தையரை வணங்கிவிட்டுச் செல்லுங்கள், அதைவிடச் சக்தி தரும் கடவுள் வேறு இல்லை. தாயையும் தந்தையையும் வணங்கிவிட்டு நீங்கள் சென்றால் நீங்கள் வெற்றி மேல் வெற்றி பெறுவீர்கள்.

எனக்கு வெற்றி கிடைத்திருக்கிறது என்றால் என் தாய்க்குப் பிறகு அண்ணா அதற்கு அடுத்து நீங்கள் தான். உங்கள் ஆதரவினால்தான் நான் இந்த நிலையில் இருக்கிறேன். என்.வி. என். செல்வம், என்.வி.என்.னின் துணைவியார் அவர்கள் எல்லாம் இங்கே இருக்கும் போது, இந்தக் குடியிருப்புக்கு என்.வி.நடராசன் பெயர் வைக்கக் கிடைத்த பேற்றைப் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

(09.07.1983 அன்று, சென்னை இராணி அண்ணாநகர் குடியிருப்புகளுக்கான திறப்பு விழாவில் ஆற்றிய உரை)

ஒருமைப்பாடு முக்கியம்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

பெருந்தலைவர் காமராஜருக்குப் பெற்றோர் இட்ட பெயர் காமாட்சி. தாய் ராஜா என்று அழைத்தார். அதைச்சேர்த்து தந்தை காமராஜர் என்று வைத்தார் என்று நான் கேள்விப்பட்டேன். அந்தக் காமாட்சி என்ற காமராஜருக்குத் தான் இன்று பிறந்த நாள் விழாவும் படத்திறப்பும் கொண்டாடுகிறோம்.

எனக்கு உண்மையிலேயே சில ஆண்டுகளாகப் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழாவில் பேசும்போது ஐந்து, ஐந்து வயதாகக் குறைந்து கொண்டே வருகிறது என்று நான் கருதுகிறேன். அவரைத் தலைவர் என்று சொன்னதற்காக நான் பட்டப்பாடு எனக்கல்லவா தெரியும்? இன்று நானும் பெருந்தலைவர் என்று சொல்லுகிறேன். மற்றவர்களும் சொல்கிறார்கள். என்னைத் திட்டியவர்களும் சொல்கிறார்கள். கட்சியை விட்டு வெளியேற்றவேண்டும் என்று சொன்னவர்களும் சொல்கிறார்கள். இப்போதும் நான் ஒழியவேண்டும் என்று சொல்லுகிறவர்களும் பெருந்தலைவர் காமராஜர் என்று சொல்லுகிறார்கள். இப்படி சொல்வதைக் கேட்கும்போது அன்று நான் குற்றம் செய்யவில்லை என்று என் மனசாட்சி சொல்கிறது.

ஒருமைப்பாடு முக்கியம் என்பதை நான் எப்போதும் சொல்பவன். காமராஜர் அவர்களும் ஒருமைப்பாடு வேண்டும் என்பதைச் சொல்லியிருக்கிறார். ஒருமைப்பாடு என்று நாம் சொல்வதே இல்லாத ஒன்றைச் சொல்கிறோமோ என்று மற்றவர்கள் சந்தேகப்படுவார்கள். அதை நாம் செயலில் காட்டவேண்டும் என்றுதான் எல்லோருக்கும் யோசனை வைக்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(16.07.1983 அன்று, சென்னையில் நடைபெற்ற பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 81ஆவது பிறந்த நாள் விழாவிலும், திருவுருவச் சிலைத் திறப்பு விழாவிலும் ஆற்றிய உரை)

இந்திய வல்லுநர்கள் செயல் வீரர்கள்!

கல்பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள அணுமின் நிலையத்தை நாட்டுக்கு அர்ப்பணிக்க பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் வந்திருக்கிறார். அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டுக்கு மின்சாரத்தின் தேவை எந்த அளவில் இருக்கிறது என்பது நம் எல்லோருக்கும் தெரியும்.

போதிய அளவு மின்சாரம் தமிழகத்தில் இல்லை என்பதால் தமிழகத்தின் மின்சாரத்தேவைக்கு உதவும் வகையில் இத்திட்டத்தை நிறைவேற்றித் தந்த பிரதமருக்கு தமிழகத்தின் சார்பில் தமிழக அரசின் சார்பில் அமைச்சர்கள் சார்பில், தமிழக மக்கள் சார்பில் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல ஆண்டுகளுக்கு முன்பு இந்த அணுமின் நிலையப்பணி தொடங்கப்பட்டது என்றாலும் இதை வெற்றிகரமாக நடத்தியே தீருவது என்று நம் விஞ்ஞானிகள் ஒத்துழைத்துப் பணியாற்றினர்.

அவ்வப்போது தேவையான உத்தரவுகளை மத்திய அரசு பிறப்பித்து உதவியது. இந்தத் திட்டம் நிறைவேற உதவிசெய்து இத்திட்டத்தை நிறைவேற்றித் தந்த பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைத் தொடங்கி வைக்கவும் பிரதமர் வந்திருக்கிறார். அவரது உதவிகள் மறக்க முடியாதவை. இதற்கு நன்றி கூறாமல் இருக்க முடியாது. தமிழ்நாட்டில் மின்பற்றாக்குறை இருக்கிறது. இது பற்றியெல்லாம் விரிவாக வேறு நேரத்தில் பேச வேண்டும்.

பேச்சைவிட செயல்பாட்டுக்கு முக்கியம் தரப்பட்டு இருப்பதாகக் கருதுகிறேன். இங்கே குறைந்த அளவு நேரம் பேசுவதற்கு நிர்ணயிக்கப்பட்டு இருப்பதற்கு காரணம் நமது இந்திய வல்லுநர்கள் செயல்வீரர்கள் என்பதைக் காட்டுவதாகக் கருதலாம்.

இங்கே பிரதமர் வந்ததும் விழா களைகட்டிவிட்டது. இத்திட்டத்திற்கு மத்திய அமைச்சர் திரு.ஆர்.வி. முதல் முயற்சிகளை மேற்கொண்டார். இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது மத்திய அரசு மாநில அரசு ஒத்துழைப்புடன் ஆகும். அதன் அடிப்படையில் இத்திட்டம் வெற்றிபெற்றுள்ளது.

அந்த வெற்றிக்கு அஸ்திவாரமாக இத்திட்டத்தை பிரதமர் இங்கு தொடங்கி வைத்திருக்கிறார். அவருக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டின் மின்சாரத் தேவையை நிறைவு செய்யும் வகையில் இத்திட்டத்தைச் செயல்படுத்திய மத்திய அரசுக்கு பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன். பிரதமர் வாழ்க! இத்திட்டத்திற்காக உழைத்தவர்கள் வாழ்க!.

(23.07.1983 அன்று, கல்பாக்கத்தில் நடைபெற்ற சென்னை அணுமின் நிலையத் தொடக்க விழாவில் ஆற்றிய உரை)

சமத்துவ இலட்சியம் வெல்க!

என்னை வாழவைக்கும் தாய்மார்களே! என்னுடைய நல்ல செயல்களுக்கு எப்போதும் ஆதரவு தரும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புகளே!

நமது தாய்த்திருநாடு விடுதலை பெற்று 36 ஆண்டுகள் நிறைவுற்று 37ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த நேரத்தில் நாட்டு மக்கள் அனைவருக்கும் என்னுடைய இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விடுதலைத் திருநாளை நாம் உள்ளத்தின் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றிக் கொண்டாட வேண்டிய கடமை உடையவர்கள் ஆனாலும், நம்முடைய கவனமெல்லாம் அண்மையில் உள்ள இலங்கைத் தீவில் கொடுமைகளுக்கு ஆளாகித் தவித்துக் கொண்டிருக்கும் நமது சகோதரர்களைச் சுற்றியே வட்டமிட்டு வருகிறது.

தமிழக மக்களின் மனவுணர்வுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கின்ற வகையில் தமிழக அரசும், அரசின் அழைப்பை ஏற்று அனைத்துக் கட்சிகளும்செயல்பட்டன என்பதையும், அதன் காரணமாக இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கு ஆதரவாக ஒரு தேசியக் கருத்து எழுந்திருப்பதையும், இருக்கின்ற நிலைமைகளுக்கு ஏற்ப நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இலங்கைத் தமிழர் துயர்தணிய உரிய முயற்சிகளில் ஈடுபட்டு வருவதையும் அனைவரும் அறிந்ததே.

இலங்கைத் தமிழ் மக்கள் அனைத்து உரிமைகளோடு கவுரவமான முறையில் வாழ்ந்திடவும்,இலங்கையில்தமிழ்பேசும்மக்களுடையஉயிருக்கும்உடைமைகளுக்கும், மானத்துக்கும் பாதுகாப்புக் கிட்டிடவும், பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கு வகை செய்யப்படவும் மத்திய அரசின் வாயிலாகத் தேவைப்படும் நடவடிக்கைகள் எடுக்க நாம் தொடர்ந்து கடமை ஆற்றுவோம். இதில் நமக்குள்ள பொறுப்பைச் செவ்வனே நிறைவேற்றுவோம் என்று நாம் உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும்.

பாதுகாப்புக்கும், வழிகாட்டுதலுக்கும் தகுதிவாய்ந்த தலைமையான இடத்தைப் பெற்றுள்ள நம் நாட்டை மேலும் வலிமைமிக்கதாகவும், கட்டுக்கோப்புமிக்கதாகவும், ஆக்கவேண்டிய பொறுப்பை நாம் உணர்ந்து பணிபுரிய வேண்டிய கட்டாயத்தைக் காலம் நமக்கு சுட்டிக்காட்டியிருக்கிறது.

அனைத்து மக்களுக்கும் சம உரிமை, சம வாய்ப்பு, மதச்சார்பற்ற தன்மை ஆகிய கோட்பாடுகள் ஒரு நாட்டு மக்களாலும், ஆட்சியினராலும் கடைப்பிடிக்கப்படவேண்டும். பிளவு மனப்பான்மையும் குறுகிய நோக்கமும் கொண்ட வன்முறைச் சக்திகளை ஒடுக்கி மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் கடமையை ஆட்சியில் உள்ளவர்கள் செம்மையுடன் நிறைவேற்றவேண்டும். இந்த அம்சங்களை ஒருநாடு கடைபிடிக்கத்

தவறினால் அதன் காரணமாக, மக்களுக்கு எத்தகைய இன்னல்களும் இழப்புகளும் ஏற்படும் என்பதற்கு இலங்கை நிகழ்ச்சிகள் ஓர் எச்சரிக்கையாக அமைந்துள்ளன.

வருங்காலத் தலைமுறையினர் உரிமையுடன் இன்பமாக விடுதலை வாழ்வு வாழ்ந்திட, தங்களது மரியாதையும், மதிப்பையும் பெற்றுள்ளது. இத்தகைய தருணத்தில் இந்தியாவின் உண்மையான வலிமை தன் மக்களுடைய சீரான முன்னேற்றத்தில் தான் அடங்கியிருக்கிறது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

எந்த ஒரு நாடும் சலியாத உழைப்பின்றி, குறிக்கோளின்றி முன்னேற இயலாது. நாம் விடுதலை பெற்று 37 ஆண்டுகள் ஆன பிறகும் பல்வேறு துறைகளில் வளர்ச்சி பெற்ற பின்னரும் வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களின் எண்ணிக்கை நம் நாட்டு மக்கள் தொகையில் சரி பாதி என்கிற உண்மையை நாம் மறத்தல் கூடாது. அப்படி நலிந்து கிடக்கும் மக்களைக் கைதூக்கி விடவில்லை என்றால், அதற்கான பணிகளை விரைவாகச் செயல்படுத்தவில்லை என்றால், மக்களாட்சித் தத்துவத்திற்குப் பொருளில்லை என்று ஆகிவிடும்.

"முன்னேறாமல் இருக்கிற சமுதாயம் பலவீனமுற்றுவிடும். அந்தச் சமுதாயத்தின் ஆக்கப்பணிகள் அனைத்திலும் இந்த பலவீனத்தின் விளைவுகளே இடம்பிடித்துவிடும்" என்று அமரர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் மெத்தப் பொருத்தமாகக் கூறினார்கள். அப்படியானால் முன்னேற்றத்திற்கு ஏற்பட்டுள்ள இடையூறுகள் எவை? வளர்ச்சிப் பாதையில் வைக்கப்பட்டுள்ள தடைக் கற்கள் யாவை? என்பதை உணர்ந்த அவற்றை அகற்றுவதன் வாயிலாகத்தான் நாட்டின் உயர்வைக் காண முடியும். இன்றைக்கு எழுந்துள்ள மிகப்பெரிய தடைக் கற்கள் எந்த ஒரு பிரச்சினையிலும் தீர்வு காண வன்முறை வழியை நாடுவதும், நாட்டின் ஒட்டுமொத்த நலனைவிட ஒரு குறிப்பிட்ட பகுதி அல்லது கட்சியின் நலனே பெரிது என்று கருதும் மனப்பான்மையும் நாளடைவில் நம்மைச் சிதைத்துச் சீரழித்துவிடும். வன்முறைக்கும், பிளவு மனப்பான்மைக்கும் இடம் இல்லாத, இடம் தராத ஒரு உன்னதமான பொது வாழ்வை உருவாக்குவோம். அடித்தள மக்களின் நல்வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கின்ற திட்டங்களுக்கு முதலிடம் தருவோம். சமுதாய ஒற்றுமைக்கான முயற்சிகளை விரைவுபடுத்துவோம். இந்த அடிப்படையான தேவைகளை நிறைவேற்றுவதன் வாயிலாக நமது நாட்டின் வலிமையைப் பெருக்குவோம். வலிமையும், ஒற்றுமையும் கட்டிக்காக்கப்படுகிற நிலையில் நம் நாடு திகழ்ந்திடுமானால் அதுவே வாழ்வற்று ஏங்கித் தவிக்கும் பிற மக்களுக்கு நல்லதொரு பாதுகாப்பாக இருக்கும் என்பதை அண்மைக்கால நிகழ்ச்சிகள் காட்டுகின்றன.

தன்னுடைய உரிமைகளுக்காகப் போராடுவதிலும் எந்தக் கட்சி அல்லது தலைவருக்கும் அறவழியில் செல்ல உரிமை உண்டு. ஆனால் தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்ற பொதுச் சொத்துக்களை அழிக்கவோ அல்லது உயிர்களைப் பலிவாங்கவோ எந்த ஒரு தலைவருக்கும், கட்சிக்கும், அமைப்பிற்கும் உரிமை கிடையாது என்பதை நாம் அனைவரும் உணரவேண்டும். அப்படிப்பட்டவர்கள் மக்களின் நல்வாழ்வுக்கு எதிரான

சமூக விரோதிகள் ஆவர். எவ்வளவு உன்னதமான கொள்கையாயிருப்பினும் பிறருக்குத் தீங்கு விளைவிக்காத செயலில் ஈடுபடுகிறவர்கள்தான் தேசப்பற்று உள்ளவர்கள், சமூகத்தைப் பாதுகாப்பவர்கள் ஆவார்கள்.

இப்படிப்பட்ட உன்னதக் கொள்கைகளைக் கொண்ட நல்லவர்கள்தான் புதிய சமதர்ம, சமுதாயக் கொள்கைகளை மக்களுக்குத் தரமுடியும். அத்தகைய புதிய இந்தியாவை புதிய தமிழகத்தை சமதர்ம சமத்துவப் பாதையில் உறுதியோடு செலுத்த அயராது உழைப்போம். இந்த தூய நோக்கம் கொண்ட அனைவரையும் ஒரே அணிவகுப்பாகக் கொண்டு வருவோம் எனும் குறிக்கோளுடன் தொண்டாற்ற இந்த ஆண்டின் விடுதலைத் திருநாள் நமக்கெல்லாம் உணர்வூட்டும் திருநாளாக அமைந்திடும் என்று நம்புகிறேன்; அமைந்திட வேண்டும் என விரும்புகிறேன்.

இந்திய விடுதலை வாழ்க!

நமது ஒற்றுமை முயற்சிகள் வெல்க!

சமத்துவ இலட்சியம் வெல்க!

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

வாழிய பாரத மணித் திருநாடு!

வாழ்க அண்ணா நாமம்!

(1983ஆம் ஆண்டு விடுதலை நாள் விழாவின்போது ஆற்றிய உரை)

பசியைப் போக்கிப் படிப்பை வளர்ப்போம்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

பொருளாதார மாற்றம் உருவாகக் கல்வியிலேயே மாற்றம் செய்யப்படவேண்டும். தமிழகம் முழுவதும் சத்துணவுத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறோம். ஒருசில இடங்களில் தவறுகள் நடக்கலாம். அப்படிப்பட்ட தவறுகள் எந்த இடத்திலும் நடைபெறாமல் தடுக்க சத்துணவுக்கு என்று தனியாக ஓர் அமைச்சரை நியமித்து அந்த அமைச்சரிடம் பொறுப்பை ஒப்படைக்க நினைத்திருக்கிறேன்.

எங்களுக்கு மக்கள் வாக்களித்தனர். அதனால், அமைச்சர்கள் ஆனோம். நாங்கள் பதவியில் இருப்பது எங்களுக்கு வசதிகளை தேடிக்கொள்ள அல்ல, எங்களுக்கு வாக்களித்த மக்களாகிய உங்களுக்கு வசதியை ஏற்படுத்தித்தரத்தான்.

சில நாடுகளில் புரட்சி நடப்பதாகச் சொன்னார்கள். வேலை இருந்தால் ஒரு வேளை உணவாவது கிடைக்கும். இல்லாவிட்டால் பட்டினிதான். பட்டினிதான் புரட்சிக்கு வழி வகுக்கிறது. நக்சலைட்டுகள் பற்றி சிந்திக்க வேண்டும். சில சமயம் அவர்களைச் சட்டத்தைக் கொண்டு, அதிகாரத்தைக் கொண்டு அடக்குகிறோம்.

பட்டினி இருக்க முடியாத நிலை உருவாகும்போது கொள்ளை அடித்தாவது வாழவேண்டும் என்பதால் நக்சலைட்டுகள் உருவாகிறார்கள். இதைத் தடுக்கச் சட்டம் இருந்தாலும் மற்றொரு முறையாக வேலையற்றவர்களுக்கு வேலையை உருவாக்கித்தர அரசு முயற்சித்து வருகிறது. போலீஸ் கொண்டு அடக்குவோம் எனச் சொல்லும் அரசு அல்ல இது.

படித்துவிட்டு பள்ளியைவிட்டு வெளியேவரும் மாணவனிடம் உனக்கு என்ன வேலை தெரியும்? என்று கேட்டால் இனிமேல் பாலிடெக்னிக் போய்த்தான் படிக்க வேண்டும் என்று கூறும் நிலை உள்ளது.

படிக்கும் கல்வி, அறிவு வளர்ச்சிக்கு உதவி செய்ய வேண்டும். அத்துடன் வாழ்வதற்கு ஒரு தொழிலையும் கற்றுத் தருவதாக இருக்கவேண்டும். இதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித்தந்தால் தான் நாடு சுபிட்சம் அடையும். திருடுவது, கொள்ளை அடிப்பது என்பது பழக்கத்தினால் ஏற்படுவது என்பது வேறு. இதைத் தவிர வேறு வழி இல்லை என்பதால் இதைத்தான் செய்தாகவேண்டும் என்ற நிலை வேறு. வருமானத்திற்கு வேறு வழி இல்லாதவர்களுக்கு நாம் வருமானத்திற்கான வாய்ப்பினை உருவாக்கித் தரவேண்டும்.

வாரத்தில் 6 நாட்கள் பள்ளி செல்லும் மாணவன் அதில் 4 நாட்கள் பாடங்களைப் படிக்க வேண்டும். 2 நாட்கள் தொழில் பயிற்சி பெற வேண்டும்.

இத்தகைய பயிற்சியைப் பெற வேண்டுமானால் அந்த மாணவனுக்கு உணவுகொடுக்க வேண்டும். இதற்கு என்ன செய்வது ? இதற்கும் திட்டம் இருக்கிறது.

10 வயது முதல் 15 வயதுவரை உள்ளவர்களுக்கும் சத்துணவு போடும் திட்டத்தை நீட்டிக்கலாமா எனக் கருதுகிறோம்.

தொழில் கற்பதற்குச் சாப்பாடு பாரமாக இருக்கக்கூடாது, அப்படி வருமானால் ஏதோ ஒருவேளை உணவுக்காகத்தான் காத்திருக்கவேண்டும். அந்த வகையில் தொழில் கல்வி ஆரம்பிக்கப்பட வேண்டும். அது விவசாயமானாலும் அல்லது தொழிற்சாலையில் பணியாற்றுவதாக இருந்தாலும், இந்தத் திட்டத்தோடு சேர்ந்து உருவாக்கினால் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வரும்போது வேலை காத்திருக்கிறது என்றால் தான் நாடு முன்னேற முடியும். இது எனது திட்டவட்டமான நம்பிக்கை.

ஆபிரகாம்லிங்கன் தொழிலாளியாக இருந்து பின் வழக்கறிஞராகி அரசியலுக்கு வந்து பின் ஜனாதிபதி ஆனவர். இது எப்படி முடிந்தது ? அவர் வழக்கறிஞர் படிப்பு படித்த மொழி ஆங்கிலம். அவருக்குத் தாய்மொழியும் ஆங்கிலம். நம் நாட்டில் அவ்வாறில்லை.

பள்ளிக் கல்வி தமிழில் பயின்று பின் சட்டக் கல்லூரிக்குப் போகும் போது ஆங்கிலத்தில் கற்கும் நிலை. தாய்மொழி (தமிழில்)யில் கல்வி கற்று, வழக்கறிஞராக முடியும் என்ற நிலையை உருவாக்க நான் தீவிரமாக இருக்கிறேன். தமிழில் எதையும் சாதிக்க முடியும்.

டாக்டர் படிப்பு படிப்பவர் ஒவ்வொருவருக்கும் அரசு சுமார் 1.50 இலட்சம் ரூபாய் செலவிடுகிறது. அவர்கள் படித்துமுடித்துவிட்டு மருத்துவரான பிறகு அரசு ஊதியம் பெறுகிறார்கள். அதில் சிலர் புகழ் பெறுகிறார்கள். நான் அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்ளப் போகிறேன். உங்களைப் படிக்க வைத்தவர்கள் மக்கள். அவர்கள் தந்த வரிப்பணத்தில் இருந்துதான் உங்களுக்குச் செலவிடப்படுகிறது.

அதில் இருந்து படித்துப் பயன்பெற்ற நீங்கள் உங்கள் வருமானத்தில் ஒரு தொகையை இனிமேல் படிக்கும் மாணவர்களுக்கு, நீங்கள் விரும்பும் பிரிவுக்குக் கொடுங்கள் என்று கேட்கப் போகிறேன்.

மக்கள் வரிப்பணத்தில் படிப்பவர்கள் பின்னால் மக்களுக்கு நன்றி சொல்லும்வகையில் நீங்கள் படித்த கல்லூரிக்கு ஒரு தொகையை ஒதுக்கித் தந்தால் அது நீங்கள் நாட்டிற்குச் செய்யும் தொண்டு.

‘‘ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்’’ என்றார் அமரர் அண்ணா. அந்தச் சிரிப்பில் சக்தி இருப்பதை அண்ணா ஒப்புக்கொண்டுள்ளார் என்பதே என் கருத்து.

குழந்தையும் தெய்வமும் ஒன்று என்பார்கள். குழந்தைகள் ஆரோக்கியமாக வாழ வேண்டும். தாய்மார்கள் குழந்தைகளுக்குச் சாப்பிடும்முன் கையை நன்றாகக் கழுவிவிட்டு சாப்பிடும் பழக்கத்தைக் கற்றுத்தர வேண்டும். குழந்தைகளை ஜாதி, மத பேதங்களுக்கு அப்பாற்பட்டவர்களாக வளர்க்க வேண்டும்.

காட்டிலிருக்கும் யானைகள் நான்கைப் பிடித்து ஒன்றைத் தமிழ்நாட்டிலும், ஒன்றைக் கருநாடகத்திலும், ஒன்றைக் கேரளாவிலும், ஒன்றை ஆந்திராவிலும் அந்தந்த மொழி பேசும் மாவுத்தர்களால் வளர்த்தால், எந்த மொழி கற்பிக்கப்படுகிறதோ அதைத்தான் அந்த யானை புரிந்து நடக்கும். நெருக்கடியான நிலைகளான தீ விபத்து போன்றவைகள் ஏற்படும்போது ஜாதி, மதம் பார்ப்பதில்லை, அல்லது கடையில் சென்று அரிசி வாங்கும்போது எங்கள் ஜாதிக்காரர் உற்பத்தி செய்த அரிசி கொடு என்று கேட்டு வாங்குவதில்லை. சென்னையில் பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இரசாயன மருந்துப் பொருட்கள் ஒரு டாக்டர் வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது.

இது அரசு பொது மருத்துவமனையிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், முறையான கணக்கும் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வளவு மதிப்புள்ள இரசாயன மருந்துப் பொருட்களை அவர்கள் எடுத்துக்கொண்டதால் எத்தனை பேர் நோய் தீராமல் வெளியே போய் இருக்கிறார்கள். இதற்கெல்லாம் கடும் தண்டனை வழங்கும் வகையில் சட்டம் திருத்தப்படவேண்டும் எனக் கருதுகிறேன். இதற்கெல்லாம் உங்களின் ஆதரவு வேண்டும்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(28.08.1983 அன்று, பாப்பாக்குறிச்சியில் நடைபெற்ற சத்துணவுக் கூடம் திறப்பு விழாவில் ஆற்றிய உரை)

அண்ணாவின் கனவு நனவாகிறது!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

இந்த விழா விளம்பரத்திற்காக நடத்தப்படும் விழா அல்ல; அரசு நிறைவேற்றும் திட்டங்களை மக்கள் அறிந்துகொள்ள நடக்கும் விழா.

அமரர் அண்ணா அவர்களிடமிருந்து, இத்திட்டம் நிறைவேற எல்லாரும் பெருமுயற்சி எடுத்தார்கள். இதற்கான நில ஆர்ஜிதம் குறித்தும் கடந்த மாதமே தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இங்கு தொழிற்சாலைககள் பெருகவும், தொழிலாளர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புக் கிடைக்கவும் நல்வாய்ப்பாக இந்தக் கால்கோள் விழா அமைவது குறித்துப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(30.08.1983 அன்று, தூத்துக்குடியில் நடைபெற்ற கரூர்–திண்டுக்கல்–மதுரை–தூத்துக்குடி இரயில் பாதை திட்டப்பணிகள் துவக்க விழாவில் ஆற்றிய உரை)

அண்ணாவின் தத்துவங்களை ஆய்வு செய்ய சென்னைப் பல்கலைக் கழகத்தில் தனிப்பிரிவு!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

மூன்று ஆராய்ச்சிப் பிரிவுகளைத் துவக்கி வைக்கும் பணியை எனக்கு அளித்துள்ளார்கள். அதைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறும் முன், இதற்கு முன்பாக எனக்கு டாக்டர் பட்டம் கொடுக்க வந்த பெரியவர்களின் மனத்தைப் புண்படுத்தும் வகையில் நான் மறுத்ததை அவர்கள் பெரிதுபடுத்தாமல் மறந்துவிடும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்போது இதை ஏற்றுக் கொள்வதற்குக் காரணங்கள் உண்டா என்று கேட்டால் இல்லை!

என்னைப் போன்றவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு, இந்த 125ஆவது ஆண்டு விழாவில் இவ்வளவு அறிஞர்களும் கூடி, டாக்டர் பட்டம் கொடுப்பதை ஏற்காவிட்டால் அவர்கள் மனம் பெரிதும் வருத்தப்படும் என்பதுதான்.

என்னையும் தேர்ந்தெடுத்து இந்தப் பட்டத்தைத் தந்ததற்காகக் கைகூப்பி நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். என்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய அண்ணா இல்லையே என்று நினைக்கிறேன்.

மூன்று துறைகளைப் பற்றியும் சொல்ல நான் படித்த அளவில் 3 நாட்கள் போதாது. ஜைன, இஸ்லாமிய, சைவ சமய சிந்தாந்தங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்காக நிதி உதவி தந்தவர்களுக்கு நன்றி கூறிப் பாராட்டுகிறேன்.

மதம் மனிதனை மனிதனாக்க வேண்டுமே தவிர–மதம் என்ற பெயரில் மனிதனைத் தவறான செயல்களுக்கும், தேவை இல்லாத சச்சரவுகளை உண்டாக்குவதற்கும் வழிசெய்யும் வகையில் மதம் இருக்கக்கூடாது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

ஜைன மதம் யாரையும் துன்புறுத்தாமல், நீதி தவறாமல் எல்லோரையும் சமமாகக் கருத வேண்டும் என்று கூறுகிறது. தனக்கெனச் சொத்து சேர்த்துக் கொள்ளாமல் அது எல்லோருக்கும் பயன்பட வேண்டும் என்று கூறுகிறது.

இஸ்லாமிய மதம், மனிதர்களில் உயர்வு தாழ்வற்ற நிலை இருக்கவேண்டும் என்று கூறுகிறது. பின்தங்கிய நிலையும் கூடாது என்று கூறுகிறது. ஒரு மனிதன் அவனுடைய வருமானத்தில் இத்தனை சதவீதத்தைப் பொதுக் காரியங்களுக்கு ஒதுக்கி வைக்க வேண்டும் என்று சொல்கிறது. இதைப்பற்றித் தெரிந்திருந்தால் மட்டும் போதாது. அவைகளை ஏற்றுக் கொண்டு ஆராய்ச்சி செய்ய இந்தத் துறை உதவும்.

சைவ சித்தாந்தம், சாந்தம், தியாகம், ஒழுக்கம், இவைகளை அடிப்படையாகக்கொண்டு தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. யார் இவற்றைத் தோற்றுவித்தார்கள் என்று சொல்ல முடியாமல் பரவி, விரவி இருப்பதை எண்ணிப்

பார்த்தால் அவற்றை மக்களுக்குத் தெரிந்து சொல்ல இந்த ஆராய்ச்சிப் பிரிவு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும்.

மனிதனுக்கு மறதி தேவை. சிலவற்றை மறக்க வேண்டும். சிலவற்றை மறக்கக்கூடாது. இதே பல்கலைக்கழகத்தில் அண்ணாவின் தத்துவத்தை அண்ணாயிசத்தை, கொள்கையை, எது மக்களுக்குத் தேவை, எது எதிர்காலத்தில் மக்களுக்கு ஏற்புடையவை என்று ஆராய்வதற்காக அனைத்திந்திய அண்ணா தி.மு. கழகம் ரூ.15 இலட்சம் தரும். அதை வேந்தரும், துணைவேந்தரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

எது மக்களுக்குத் தேவை என்பதைவிட அண்ணாவின் கட்டுரைகளை, கதைகளை, இலக்கிய சர்ச்சைகளை எடுத்து வைத்துப் பார்த்தால், நமக்குத் தேவையானவை இந்தப் பல்கலைக் கழகத்தில் இருக்கிறது என்று கூறும் வகையில் இருக்கவேண்டும். கோட்பாடுளை, மதத்தை வளர்ப்பதற்காக இந்த மூன்று பிரிவுகளும் உதவும் என்று நம்புகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க ! நன்றி ! வணக்கம் !

(20.09.1983 அன்று, சென்னை பல்கலைக்கழகத்தின் 125ஆவது ஆண்டு விழாவையொட்டி புதிதாகத் தொடங்கப்பட்ட ஜைன இஸ்லாமிய, சைவ சமய சித்தாந்தத் துறைகளை துவக்கி வைத்து ஆற்றிய உரை)

வயிற்றுக்கு உணவு, அறிவுக்குப் படிப்பு, வாழ்க்கைக்கு வேலை!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

மகாத்மா காந்தியடிகளின் பிறந்த தின விழாவில் பேசுகின்ற வாய்ப்புப் பெற்றிருக்கும் நான் முதலில் என் இதயதெய்வம் பேரறிஞர் அண்ணாவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகர காவல்துறை ஆணையர் திரு. ஸ்ரீபால் அவர்கள் இன்று காலையில் விழாவுக்குத் தலைமைவகித்து பேசிய பேச்சுக்களைக் கேட்டேன். அவரது தொலைக்காட்சி பேச்சுக்களையும் பலமுறை கேட்டிருக்கிறேன். ஆனால், பதினைந்து, இருபது நிமிடங்களில், மகாத்மாகாந்தி பிறந்ததிலிருந்து, அவர் இறுதிக் காலம் வரை நடந்த அத்தனை நிகழ்ச்சிளையும் கூறி எடுத்துக்காட்டாகப் பேசினார். அவர் எப்படிப் பணியைச் செய்கிறாரோ அதேபோல அவர் பேச்சும் செம்மையாகவும் அழகாகவும் கட்டுக்கோப்பாகவும் இருந்தது. நாமெல்லாம் ஏன் பேசவேண்டும் என்று எண்ணித் திகைத்துப் போனேன்.

மகாத்மா என்றால் ஒரு தத்துவம் என்று கருதவேண்டும். வேறு எதையும் புகுத்தக் கூடாது. நாம் தெரிந்து கொண்டதை, மக்களுக்குச் சொல்ல மறந்ததை நினைவுபடுத்திக்கொள்ள, அந்தக் காந்தியத் தத்துவம் பயன்படவேண்டும். இதை விடுத்து வேறு எதையும் புகுத்தக் கூடாது என்பது என் ஆசை.

மகாத்மா காந்தியை இங்கே புகழ்ந்து பேசும்போது, பூவோடு சேர்ந்து நாரும் மணம் பெறுவது போல அந்தப் பாராட்டு நிலையில் முதல்வராக இங்கே உட்கார்ந்து இருக்கும் என்னையும் பாராட்டினார்கள்.

இன்றைய தினம் 67 இலட்சம் குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கிறோம். இந்த குழந்தைகள் 5, 6 வயதில் இன்று இருக்கிறார்கள். சத்துணவு பெறுகிறார்கள் என்று சொல்லும்போது இன்னும் 15 ஆண்டுகள் ஆன பிறகு அவர்களுக்கு அப்போது 21 வயது ஆகும்.

மக்களுக்குச் செய்ய வேண்டியதை யாராக இருந்தாலும் அதைச் செய்துதான் தீரவேண்டும். அது காலத்தின் கட்டளை. யாராக இருந்தாலும் நிறைவேற்றித்தான் ஆகவேண்டும்.

பின்னால் யார் யார் ஆட்சிக்கு வருவார்கள் என்பதைப் பற்றி நாங்கள் சிந்திக்கத் தயாராக இல்லை. அது மக்கள் தீர்ப்பு. அவர்கள் யார் வரவேண்டும் என்று விரும்புகிறார்களோ அவர்கள்தான் வருவார்கள். அந்த 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்படும் அந்தப் பிரச்சினைக்கு நாம் இன்றே வழிவகுத்தாக வேண்டும். பின்னால்

வருபவர்களுக்கு பாரத்தை வைத்துவிட்டுப் போக நாங்கள் விரும்பவில்லை. எதிர்கால வாழ்க்கைக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அந்த அடிப்படையில் தொழில் கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தப்போகிறோம். பள்ளியில் படிக்கும் மாணவர்கள் 4 நாட்கள் படிப்பையும் 2 நாட்கள் தொழிற் பயிற்சியையும் பெற வேண்டும். ஒரு நாள் விடுமுறை. அப்படி வேலையைக் கற்றுக் கொள்ளும்போது அந்தப் பயிற்சிச் சான்றிதழைக் காட்டி வேலை வாய்ப்புப் பெறலாம்.

பயிற்சி பெற்றவர்களின் புள்ளிவிவரம் மாணவர்கள் பயிற்சி பெறும் அந்தத் தொழிற்சாலைகளிலும் அரசிடமும் இருக்க வேண்டும். ஒரே தொழிலாக இல்லாமல் பல தொழில்களை அவர்கள் விரும்பிச் செய்யும் தொழிலுக்குச் சொந்தக்காரர்களாக அவர்களை ஆக்கவேண்டும். இதை கிராமப் பொருளாதாரத் திட்டத்தோடு இணைக்க வேண்டும். இதற்கு நான்தான் ரூ.1,000 கோடி தேவை என்று கூறினேன். இது ஒரு ஆண்டுக்கு மட்டும்!

கிராமத்தில் வேலை இல்லை என்ற நிலை இல்லாமல், மக்கள் வாழ்க்கைக்கு அன்றாடம் தேவையான பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும். அப்போதுதான் நாட்டின் பொருளாதாரம் உயரும். இப்படித் திட்டத்தில் இல்லாத சமுதாயப்பணிகளைச் செயல்படுத்துவது நமது மாநிலம்தான். சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தபோது அந்தத் திட்டத்திற்கு எங்கே பணம் என்று கேட்டார்கள்.

பட்ஜெட்டில் அடையாளப் பணமாகப் போட்டீர்களே எப்படி நடக்கும், என்று கேட்டார்கள். இன்று அந்தத் திட்டம் நடக்கிறது. இன்னும் நடக்கும். தொழிற்கல்வி கற்றுக்கொடுக்கவும் நாங்கள் முயற்சிகள் எடுத்து வருகிறோம். அவர்கள் வெளியே வந்தவுடன் அவர்களுக்கு வேலை உத்தரவாதம் வேண்டும். இந்த வகையில் தொழிற்கல்வி பற்றி இரண்டு மூன்று தொழில் உரிமையாளர்களிடம் பேசினேன். தாராளமாக உதவி செய்கிறோம் என்று அவர்கள் கூறியுள்ளனர். இதைப்போல, தமிழகம் முழுவதும் சொல்லவேண்டும்.

நாளைக்கு எனக்கு வேலை உண்டா என்ற கேள்வி எதிர்காலத்தில் எழக்கூடாது. வேலை உண்டு என்ற நம்பிக்கை வந்தால்தான் எந்த மனிதனுக்கும் பணம் சேர்க்கும் ஆசை வராது. அந்தப் பொறுப்பை அரசு ஏற்க வேண்டும்.

அதுதான் மகாத்மா காந்தியின் தத்துவம். அதுதான் கிராமப் பொருளாதார அரசு. நாகரிகம் வளர வளர சமுதாயத்தில் வேண்டாத பழக்கங்கள் வளர்வதைப் பார்க்கிறோம். அதை நீக்க காந்தியத் தத்துவத்தை அறிய வேண்டும். அதற்காகத்தான் இந்த விழா நடக்கிறது. அமைச்சர் இராம வீரப்பனிடம் ஒன்றைச் சொன்னேன். காந்தி பிறந்த நாள் விழாவில் பட்டிமன்றம், விவாதம் இருக்க வேண்டும். அறிஞர் பெருமக்கள் கலந்து கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும்; அவர்கள் வரவேண்டும் என்று ஆசைப்பட்டேன், அது நடந்து இருக்கிறது. அதைப் பார்த்து நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன். காலையில் பேசுபவர் காந்தி படத்தைப் பற்றி பேசினார். காந்தியுடன் மற்றவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளையும் இணைத்து அதைச் செய்திப் படமாக

வெளியிடவேண்டும் என்றார்கள். காந்தி படத்தில் பெரிய அநியாயம் நடந்திருக்கிறது.

காந்தியடிகள் சுடப்படும்போது "O God" என்று கூறியதாக காட்சி உள்ளது. ஆனால், காந்தியடிகள் "ஹே ராம்" என்று தான் சொல்லியிருக்கிறார். ஆன்மீகத்தில் தனக்கு இருந்த நம்பிக்கையில் ராமா என்று அவர் சொல்லியிருக்கிறார். அந்தப் படத்திற்கு 8 பரிசுகள் கொடுத்திருக்கிறார்கள். யார் கொடுத்தார்கள்? அமெரிக்கர்கள். நாமாக இருந்தால் யோசிப்போம். அந்த ஒலியை மாற்றிப் பரிசு கொடுத்திருப்போம். இதை ஏன் சொல்கிறேன் என்றால் இது மக்கள் கவனிக்க வேண்டிய விஷயம். மக்கள் படித்து அறியும்போதுதான் உண்மைகள் தெரிகின்றன.

ஆகவேதான் அண்ணாவைப் பற்றி ஆராய்ச்சிகள் செய்யவேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகம் முடிவு எடுத்திருக்கிறது.

மது விலக்கைத் தளர்த்தியதால் 150 கோடி ரூபாய் வரி வருகிறது. இந்தப் பணம் முன்பு தனி முதலாளிகளுக்குப் போய்ச் சேர்ந்தது. எத்தனை கோடி? 150–160 கோடி அவர்களுக்குப் போய்ச் சேர்ந்தது. இந்த வருடம் 200 கோடி வரும் என்று நினைக்கிறேன். இதை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தி வருகிறோம். முன்பு இந்தப் பணம் தனிப்பட்டவர்களுக்குப் போய்ச் சேர்ந்தது.

மக்கள் குடிக்க வேண்டாம் என்று முடிவு செய்தால் எங்களுக்கு அந்தப்பணம் தேவையில்லை.

மக்கள் குடிக்க மாட்டோம் என்ற முடிவினை எடுத்துக் கொள்ளத் தலைவர்கள் எல்லாம் உதவி செய்ய வேண்டும். இங்கேயுள்ள நீங்களும் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். ஒரு நாட்டில் மாற்றத்தை ஒரே நாளில் கொண்டுவரமுடியாது. மனம் மாற, சூழ்நிலை உருவாக வேண்டும். அதற்காக காந்திய தத்துவத்தையும் அண்ணாவின் தத்துவத்தையும் மக்களுக்கு நாம் சொல்லியாக வேண்டும். அப்படிச் சொல்லும் நிலையில் இந்த விழாவை வாய்ப்பாக நாம் பயன்படுத்திக் கொள்கிறோம்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(08.10.1983 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற காந்தியடிகள் பிறந்த நாள் விழாவில் ஆற்றிய உரை)

பதவி தேடி வரவேண்டும்; தேடிப் போகக்கூடாது!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

வரதராஜனுக்கு இங்கே பாராட்டு விழா நடக்கிறது. அவருடைய நேர்மையான பேச்சுக்காகத்தான் நாடாளுமன்ற உறுப்பினராக ஆக்கினேன். பதவி நம்மை தேடி வரவேண்டும். பதவியைத் தேடி நாம் போகக்கூடாது. அவரால் பதவிக்குப் பெருமை கிடைக்கிறது.

நுழைவு வரியில் சிக்கல்கள் உள்ளது என்று வர்த்தகர்கள் கூறினார்கள். நுழைவு வரியினால் ரூ.300 கோடியை இழந்தாலும் பரவாயில்லை என்று நிறுத்திவைத்துள்ளோம். இதற்கான ஆக்கப் பூர்வமான யோசனையை வர்த்தகர்கள் சொல்லுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். வரியை உயர்த்த வேண்டுமென்ற எண்ணம் அரசுக்குப் கிடையாது. தொழிலாளர்களிடையேயும், முதலாளிகளிடையேயும் இணைப்புப் பாலமாக நாங்கள் இருப்போம்.

நான் வெளிநாடு சென்றிருந்தபோது ஹாங்காங்கில் கைத்தறித் துணிகளைப் பார்த்தேன். கைத்தறித் துணிக்குப் பதிலாக, இந்தியாவிலிருந்து செங்கல்லை வைத்து அனுப்பிவிட்டார்கள் என்று ஹாங்காங்கில் இருந்தவர்கள் சொல்லி வருத்தப்பட்டார்கள். இப்படி இருந்தால் அவர்கள் நம்மை எப்படி நம்புவார்கள்? ஒருவர் செய்த தவறுக்கு எல்லோருக்கும் கெட்ட பெயர் ஏற்பட்டு விடுகிறது. அப்படித் தவறு செய்பவர்கள்மீது இந்தக் கவுன்சில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசும் அத்தகையவர்களுக்கு எந்த உதவியும் செய்யாது.

நாம் தயாரிக்கும் பொருள் தரமிக்கதாக இருக்க வேண்டும். அதற்கு முதலிடம் கொடுக்கவேண்டும்,சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் அருகே சுங்கத் தீர்வை அற்ற விற்பனை நிலையம் அமைக்க 100 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. தற்பொழுது விரிவாக்கம் செய்ய 500 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. வேறு எந்தக் காரியத்திற்கும் இந்த நிலத்தைப் பயன்படுத்தக் கூடாது என்றும் தெரிவித்துள்ளேன்.

கம்ப்யூட்டர் போன்ற மின் அணுத்துறையில் நல்ல வாய்ப்பு இருப்பதைத் தொழில் அதிபர்கள் தக்கபடி பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்யும்.

கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்க முடியும் என்று முன்னர் நான் கூறியபோது சிலர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இன்று இந்தத் திட்டத்திற்கு மைய அரசின் அனுமதி கிடைக்கக்கூடிய நிலையில் உள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தினால் தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை தீரும் என்றும் நம்புகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(10.10.1983 அன்று, சென்னை சோழா ஷெராட்டன் ஹோட்டலில் நடைபெற்ற என்ஜினியரிங் பொருட்களின் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கான பரிசுகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை)

டாக்டர் அம்பேத்கார் பெயரில்
நீரிழிவு ஆராய்ச்சி மையம்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

இந்தக் கட்டடதுக்கு டாக்டர் அம்பேத்கார் பெயரைச் சூட்டுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இதற்குப் பலர், பல பெயர்களைப் பரிந்துரை செய்தனர். ஆனாலும் இந்தத் துறைக்கும், இந்தியத் துணை கண்டத்துக்கும் தேவையான 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கொள்கைக்கு அடிப்படையிலேயே திட்டம் வகுத்த, வாழ்ந்து காட்டிய அம்பேத்கார் பெயரையே சூட்ட வேண்டும் என்று குறிப்பிட்டேன்.

இன்னொரு காரணத்தையும் நினைவுபடுத்துவது பொருத்தம் என்று கருதுகிறேன். மருத்துவர் சாதியைப் பார்த்து, மதத்தைப் பார்த்து, தொழிலைப் பார்த்து மருத்துவம் செய்ய முடியாது; செய்யவும் கூடாது. இது இயற்கையாக அவர்களுக்கு விதிக்கப்பட்ட சமுதாய நிபந்தனை. மருத்துவர்களுக்கு உள்ளத்தில் சாதி அபிமானம் இருந்தாலும் அதைச் செயலில் காட்ட முடியாது.

அறுவைச் சிகிச்சையோ அல்லது வேறு நோய்களுக்குச் சிகிச்சையோ அளிக்கும்போது, ஏழை–பணக்காரன் என்று மருத்துவர்கள் பேதம் பார்க்க முடியாது. மற்றவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவருக்கு, தன் குழந்தைக்கு மட்டும் செய்ய முடியாது. வேறு டாக்டர்தான் செய்யவேண்டும். அது இயற்கை. இதிலிருந்து என்ன தெரிகிறது? மருத்துவர் மற்றவர்களுக்காக தொழில் செய்கிறார். தன் குடும்பத்துக்காக அல்ல. சாதியின்றி, மதமின்றி, எல்லைக்கோடின்றி உலகம் முழுவதிலும் இருந்து வந்தாலும் காப்பாற்றும் பொறுப்பு மருத்துவர்களுக்கு இருக்கிறது.

மதச் சார்பு இல்லாமல் வாழ்ந்து காட்டியவர் அம்பேத்கார். அவர் புத்த மதத்தைச் சார்ந்து இருந்தார் என்று கூறலாம். புத்த மதத்தில் சாதி கிடையாது.

திருச்சியில் ஒரு பிரச்சினை ஏற்பட்டது. இந்து மதத்தில் இருந்து இன்னொரு மதத்திற்குப் போனவர் ஒருவர் இறந்துவிட்டார். அவரை அந்த மதத்தைச் சேர்ந்த எல்லோரையும் அடக்கம் செய்யும் இடத்தில் அடக்கம் செய்ய அனுமதிக்கவில்லை. வலது கம்யூனிஸ்ட் தலைவர் கல்யாணசுந்தரம் மத்தியஸ்தம் செய்து வைத்தார். மதமாற்றம் மனமாற்றமாக இருக்கவேண்டுமே தவிர, வெறும் பேச்சால் 'லெட்டர் பேடில்' இருக்கக் கூடாது. மதம் என்பது வாழும் முறையைக் கடைப்பிடிக்க வழி காட்டுவதாக இருக்க வேண்டும்.

இந்தக் கல்லூரிக் கட்டடங்களை விரிவுபடுத்துவதற்கோ அல்லது வேறு பணிகளுக்கோ எனது சொந்தப் பொறுப்பில் ரூ.50 ஆயிரத்தை நன்கொடையாகத்

தருகிறேன். மத்திய அரசாங்கம் மிகுந்த பொறுப்போடு தனது பணியைச் செய்துகொண்டு இருக்கிறது.

10 ஆயிரம் டன் அரிசி கூடுதலாகக் கொடுத்து இருக்கிறார்கள். புதிய தொழில் போன்றவைகளுக்கு உதவும் திட்டங்களுக்கு அனுமதிகளை விரைவாக அளித்துக்கொண்டு இருக்கிறார்கள். இல்லை என்று கூறிய நாங்கள், காரியங்கள் நடைபெறும்போது, இருக்கிறது என்று சொல்வது எங்கள் கடமையாகும்.

தமிழ்நாடு பிரச்சினை, இலங்கைப் பிரச்சினையை ஒட்டி இருக்கிறது என்பதையும், இப்போது அது இந்தியப் பிரச்சினையாக மாறி இருக்கிறது என்பதையும் அ.இ.அ.இ.தி.மு.க. அரசில் என் தம்பியாக பணியாற்றிக்கொண்டிருக்கும் பண்ருட்டி ராமச்சந்திரன் ஐ.நா. சபையில் பேசி இருக்கிறார். மோசமான, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை எடுத்துக் காட்டிய இலங்கைப் பிரதிநிதிக்கும், அவர் கூறியது தவறு என்று எடுத்துக்காட்டி மீண்டும் பேசி இருக்கிறார். நாங்கள் எதைச் செய்ய விரும்புகிறமோ, அதை விளம்பரம் இல்லாமல் செய்ய விரும்புகிறோம். இந்தப் பிரச்சினை ஐ.நா. சபையில் வரவேண்டுமானால் எப்படிச் செய்யவேண்டுமோ அப்படிச் செய்தோம். விளம்பரத்தோடு செய்ய விரும்பவில்லை. பிரதமரின் அனுமதியோடு ஐ.நா. சென்ற குழுவில் பண்ருட்டி ராமச்சந்திரனை அனுப்பி வைத்தோம்.

இங்கே சத்தம் போட்டுப் பிரயோசனமில்லை. அங்கு இலங்கை தவறு செய்து விட்டது என்று முத்திரை பதிக்கப்பட்டுவிட்டது. எப்படி நிறைவேற்ற வேண்டுமோ அந்த வகையில் நிறைவேற்றுகிறோம். விளம்பரம் இருக்கக் கூடாது; ஆடம்பரம் இருக்கக் கூடாது; அடக்கமும் கடமையும் இருக்க வேண்டும் என்ற வகையில் செயலாற்றுகிறோம்.

சத்துணவுத் திட்டம், தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்தபோது அதைக் குறை கூறியவர்கள்கூட, இப்போது ஊழல் என்கிறார்களே தவிர அந்தத் திட்டத்தைக் குறை கூறுவதில்லை.

எனக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டதைக் குறித்து, 40 ஆண்டுகாலம் சினிமாவில் இருந்து இருக்கிறார், அதற்காகக் கொடுத்து இருக்கிறார்களாம். 'டாக்டர் ஆப் லா' எதற்கு என்ற சந்தேகம் பலருக்கு ஏற்பட்டுள்ளது. நான் கேட்டா கொடுத்தார்கள்? பல்கலைக்கழக 125ஆவது ஆண்டு விழா நடக்கிறது. அவர்கள் வழங்கும் டாக்டர் பட்டத்தை வேண்டாம் என்றால், அந்த அறிஞர் பெருமக்களை அவமானப்படுத்துவது போல் ஆகிவிடுமே என்பதால்தான் ஏற்றுக் கொண்டேன். மற்றபடி என்னை டாக்டர் என்றாலும் சரி, நோயாளி என்றாலும் சரி எனக்குக் கவலையில்லை.

நான் நினைப்பதை முடிக்கவேண்டும். அதற்கு நீங்கள் உதவவேண்டும். நான் நினைப்பது அண்ணாவின் கொள்கையை. அதை எப்படியும் நிறைவேற்ற வேண்டும். மருத்துவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று படிப்பதை வரவேற்கிறேன். ஆனால், படித்து முடித்துவிட்டு அங்கேயே குடியேற்றம் செய்வதை விரும்பவில்லை.

நான் முதல்–அமைச்சராகும் முன்பு வெளிநாடுகளுக்குச் சென்று இருந்தேன். அங்கு ஒருவர் இறால் மீனை இறக்குமதி செய்து பெரிய கோடீசுவரராக இருக்கிறார் என்றார்கள். எங்கிருந்து இறக்குமதி செய்கிறார் என்று கேட்டேன். அவரது தம்பியிடம் இருந்து என்றார்கள். அவருடைய தம்பி எங்கே இருக்கிறார் என்றேன். கேரளாவில் என்றனர். எங்கு இருந்து வாங்குகிறார் என்று கேட்டேன். தமிழ்நாட்டில் இருந்து வாங்கி அனுப்புகிறார் என்றார்கள்.

நான் பதவி ஏற்ற பிறகு மீனவர் சங்கங்களே தங்களுக்குள் ஒரு கூட்டுறவு அமைப்பை வைத்து இத்தகைய மீன்களைப் பிடித்து அனுப்பவேண்டும் என்றேன். நான் முதலமைச்சரான பிறகு வெளிநாடு சென்ற நேரத்தில் ஒரு டாக்டரை அறிமுகப்படுதினார்கள். நல்ல டாக்டர், நல்ல ‘பிராக்டிஸ்’ என்றார்கள். விசாரித்ததில் அவர் தமிழ்நாட்டிலிருந்து லீவு வாங்கிக் கொண்டு போனவர் என்று தெரிந்தது. அவரைத் தமிழ்நாட்டுக்கு வரவழைக்க ஏற்பாடு செய்தேன். ஆனால், அவரோ 50 ஆயிரம் ரூபாயைக் கொடுத்துவிட்டு அங்கேயே இருந்துவிட்டார்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(22.10.1983 அன்று, சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற நீரிழிவு நோய் வார விழாவில் ஆற்றிய உரை)

மாணவ, மாணவியர்களுக்குத் தொழிற் கல்வியையும் சேர்த்து சொல்லிக் கொடுக்கவேண்டும்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

இவ்வங்கி 80 ஆண்டுகளுக்கு முன் எப்படிப்பட்ட நிலையில் ஆரம்பிக்கப்பட்டது என்பதை வரவேற்புரையில் தெரிவித்தீர்கள். பல ஆண்டுகளுக்கு முன் கொடுக்கல் வாங்கல் கிராமங்களில் இருந்தது. நமது நாட்டில் வங்கிகளின் வளர்ச்சி இன்னமும் போதாது. முன்பு எல்லாம் ஒரு கிராமத்தில் நான்கு அல்லது ஐந்து பேர்கள்தான் வங்கியின் மூலம் பயன் அடைந்து வந்தார்கள். ஆனால் இன்று அப்படிப்பட்ட நிலையில்லாமல் 20 ஆயிரம் பேர்கள் வாழும் பகுதிகளுக்கு ஒரு வங்கியின் கிளை உள்ளது என்றால் கூட அது எப்படிப் போதுமானது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை கல்வித் திட்டத்தை மாற்றி அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்; 65 இலட்சம் குழந்தைகளுக்கு இலவச சத்துணவு கொடுக்கப்படுகின்றது. இரண்டு வயதில் இருந்து 5 வயதுவரை உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைத் தவிர்த்துவிட்டு, 6 வயதிலிருந்து 10 வயதுவரை உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கிட்டால் 30 இலட்சத்திலிருந்து 35 இலட்சம் வரை இருக்கும். 15 வயதுவரை உள்ளவர்களுக்குக்கூட சத்துணவு கொடுக்க ஆசைப்படுகின்றேன். அப்படி வரும்போது மேலும் பத்தாண்டுக்கு உணவு, கல்வி கொடுக்கிறோம்.

மாணவ, மாணவியர்கள் படித்துவிட்டு வெளியே வந்தவுடன் அவர்களுக்கு வேலைகொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். பதினைந்தாண்டுகளுக்குப் பிறகு இப்போதுள்ள பிரச்சினையைக் காட்டிலும் அதிக அளவில் பிரச்சினை இருக்கும். அதனால் அவர்களுக்கு இப்போதே கல்வி கற்றுக் கொடுப்பதோடு தொழில் கல்வியையும் சேர்த்துச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

10 வயதுக்குப் பிறகு மாணவ, மாணவியர்கட்கு 4 நாட்கள் படிப்பு, 2 நாட்கள் தொழிற் பயிற்சி, 1 நாள் ஓய்வு கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்த நான் விரும்புகிறேன். எந்தக் குழந்தை எந்தத்தொழில் செய்ய விரும்புகின்றதோ அந்தத் தொழிலில் கல்வி சொல்லிக் கொடுக்கப்படும். பயிற்சி பெறுகிற இடத்திலேயே வேலை வாய்ப்பும் பெற வேண்டும். இதுபற்றி ஒரு தொழில் அதிபரிடம் பேசினேன். அவர் இப்போதே கோவையில் அப்படியொரு தொழிற்கூடத்தைத் தொடங்கிவிட்டார்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(26.10.1983 அன்று, சென்னையில் நடைபெற்ற தி சௌத் இந்தியன் வங்கியின் 80ஆம் ஆண்டு விழாவில் ஆற்றிய உரை)

கடமையைச் செய்யும்போது எச்சரிக்கையுடன் செயல்படவேண்டும்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

பேச்சு வேண்டாம் என்று சொன்னேன். ஆனால், பேசமுடியாத அளவுக்குச் சாப்பாட்டைப் போட்டு என்னைப் பேசச் சொல்கிறார்கள். ஹாஜாஷெரீப் பாராட்டியபோது நான் உண்மையில் பூரிப்படைந்தேன். அவர் ஒரு முஸ்லீம், இன்னொரு கட்சிக்குத் தலைவர், நம்மோடு தோழமையில்லாதவர், அப்படியிருந்தும் அவர் பாராட்டியிருக்கிறார் என்றால் நான் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒரு தாய் குழந்தையைப் பெற்றெடுத்தபோது அதைப் பார்க்க வருகிறவர்களிடமெல்லாம் இது யாரைப்போல் இருக்கிறது, அப்பாவைப்போல் இருக்கிறதா, தாத்தாவைப்போல் இருக்கிறதா, என அபிப்பிராயம் கேட்டுப் பூரிப்படைவாள். குழந்தையைக் காண வந்தவர்களைக் காட்டிலும், பெற்ற தாயே பெருமகிழ்வு கொள்வாள். அதைப்போல நீங்கள் என்னைப் பாராட்டி மகிழ்கிறீர்கள்.

பட்டம் கொடுக்கும்போது என் பெயரைச் சொல்லி என்னை அழைத்தார்கள். என் பெயரைக் கூப்பிட்டபோதுகூட என் காதுக்குக் கேட்கவில்லை. தாமதமாக எழுந்தே பட்டம் வாங்கினேன்.

நான் முதலமைச்சராக இருக்கிற நேரத்தில் இதுபோன்ற பட்டங்களை வாங்கக்கூடாதென்று எச்சரிக்கையாக இருந்தேன். முன் அனுபவம்தான் இதற்குக் காரணம்.

பாராட்டுகள் மகிழ்ச்சியைத் தந்தாலும், அச்சத்தை அதிகப்படுத்துகின்றன. நல்லவர்கள் பாராட்டும்போது, தூற்றும் நிலைக்கு வந்துவிடக்கூடாதே என்பதுதான் அதற்குக் காரணம்.

எனது இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புகள் என்னைப் பார்த்து, இன்னும் நீ நடித்தால் உன்னை யாராலும் மிஞ்ச முடியாது; நீ நடித்த படம் வசூலில் சாதனை ஏற்படுத்தும் என்று கூறுகிறார்கள். அந்தப் புகழுடன் நான் அந்தத் துறையில் இருந்து வெளிவந்து விட்டேன். அதுபோல் மக்கள் நீ முதல் அமைச்சராக இருந்த நாடு எப்படியெல்லாம் திகழ்ந்தது என்று பாராட்ட வேண்டும். அந்த அளவுக்கு நீங்கள் கடமையைச் செய்யவேண்டும். கடமையைச் செய்யும்போது மிக எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

எனக்கு நினைவுப் பரிசு அளித்தார்கள். அது எதை உணர்த்துகிறது? உணவின்றி கஷ்டப்பட்ட ஒருவன், உணவின்றிக் கஷ்டப்படும் மக்களுக்குத் தொண்டு செய்வதன் மூலம் இந்நிலைக்கு ஆளாகலாம் என்பதை உணர்த்துகிறது.

நான் இன்று இந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறேன் என்றால் அதற்கு அண்ணாதான் காரணம். பல்கலைக் கழகம் ஒன்றில் அண்ணாவின் கருத்துக்களை ஆராய்ச்சி செய்யத் தனிப்பிரிவு ஏற்படுத்த விரும்பினேன். இதற்கு என்னைத் தூண்டிவர் இராம. வீரப்பன்தான். பெருமையும் புகழும் எனக்கு மட்டும் ஏற்படவேண்டும் என்பதல்ல. இதற்கு யார் உறுதுணையாக இருந்தார் என்பது மக்களுக்குத் தெரியவேண்டும் என்பதற்காகக் கூறினேன்.

என்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய அண்ணா அவர்கள் இன்று உயிரோடிருந்தால் என்ன சொல்லியிருப்பார்கள் என்று எண்ணிப் பார்க்கிறேன். எனக்கு நோபல் பரிசு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அவ்வாறு கிடைக்க எண்ணும் உள்ளங்கள் உள்ளன என்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த காலத்தை மறக்காமல் நாம் எப்படியிருந்தோம், எப்படி வாழ்ந்தோம் என்பதை நினைவில் கொண்டு ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும். தமிழ்நாட்டில் நாம் செய்ய வேண்டிய கடமைகள் மிகப் பெரியது; அவற்றை நினைத்து நாம் அனைவரும் பாடுபடவேண்டும். அதற்காக உங்களுக்கு என்னென்றும் உறுதுணையாக இருப்பேன் என்று கூறி, இங்கு எனக்கு விருந்தளித்ததற்கும் பாராட்டிப் பேசியதற்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(10.11.1983 அன்று, சென்னைப் பல்கலைக்கழகம், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கியமைக்குத் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களின் பாராட்டு விழாவில் ஆற்றிய உரை)

இசையின் மூலம் அமைதியையும் கோப தாபத்தையும் காட்ட முடியும்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

இதுவரை நான் அரசு இசைக் கல்லூரிக்கு வரவில்லை என்பதை இக்கல்லூரி முதல்வர் தமது வரவேற்புரையில் மிக நாகரிகமான முறையில் சுட்டிக்காண்பித்தார்.

இங்கே பல கலைஞர்களை எனக்கு அறிமுகம் செய்வித்தார்கள். சிலர் பாடினார்கள். சிலர் ஆடினார்கள். சிலர் இசைக் கருவிகளை வாசித்தார்கள். இவர்களையெல்லாம் எனக்கு அறிமுகப்படுத்தினார்கள். இவர்களது கலை நிகழ்ச்சிகளை ரசிகர்களில் பலர் மிகவும் ரசித்துக் கொண்டிருந்ததை நான் கவனித்தேன்.

மனிதர்களுக்குச் சில குணங்கள் உண்டு. அவர்கள் தங்களைக் கட்டுப்படுத்தி வாழ்ந்தால் சரியான முறையில் தங்களது சந்ததியினரை வழி நடத்திச் சென்றால், ஆகா என்ன அழகான குடும்பம் என்று பாராட்டுகிறோமல்லவா? அதுபோலவே இசைக்கும் நல்ல குணங்கள் உண்டு. 11 குணங்கள் உண்டு என்று பெரியவர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

கோப தாபம் மனிதர்களுக்கு மட்டுமல்ல இசைக்கும் உண்டு. இசையின் மூலம் அமைதியையும் காட்ட முடியும்; கோப தாபத்தையும் காட்ட முடியும்.

இங்கே ஆடிய கலைஞர்கள் எல்லாம் சிறப்பாக ஆடினார்கள். கைவழி நயனம் செல்ல கண்போன இடத்திற்கு மனம்போக வேண்டும். அதே அளவில் கால்போக வேண்டும். இப்படிப்பட்ட கட்டுப்பாடு இசையில் இருக்கும்போது, இதைக் கற்றுக்கொண்டிருக்கிற மனிதனிடத்தில் இந்தக் கட்டுப்பாடு இல்லாமல் போய் விடுகிறதே என்பதுதான் வேதனையாக இருக்கிறது.

கடவுளை 2 வழிகளில் அணுக முடியும். ஒன்று இசையால் மற்றொன்று கடுமையான தவத்தால்! மந்திரங்கள் ஓதுவது மட்டும் தவமாகாது. தவம், மனத்தை ஐக்கியப்படுத்துவதன் மூலம் கிடைக்கும்! இசைக்கும்போதும் மனம் ஐக்கியமாகத்தான் வேண்டும்.

பாடல் முதலில் தனக்காகப் பாடப்பட வேண்டும். தான் ரசிப்பதற்காகவே பாட வேண்டும். பிறர் ரசிப்பதற்காக அல்ல! ஆடலும் அதுபோலத்தான்! ஆடுபவர்கள் தமக்காகத்தான் ஆடவேண்டும், பிறர் மகிழ்வதற்காக அல்ல.

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் அமைதியில்தான் ஆரம்பமாகிறது. பிறகு இறுதியில் உச்சக்கட்டம் ஏற்பட்டு, முடிகிறது. இசையும் அப்படித்தான். துவக்கத்தில் ஆரவாரம் இன்றி ஆரம்பிக்கப்படும் தாள நிலை, இறுதியில் உச்சக்கட்டம் பெற்று,

உயர்த்தப்படும்போது, துரிதகதி அடைகிறது. மனிதனும் அது போலத்தான். ‘தீர்மானம்’ என்று வைக்கிறார்களே அது முடிவு! அதுதான் வாழ்க்கையின் நிலையும்.

தமிழ்நாட்டில் பள்ளிசெல்லும் குழந்தைகள் நலனை முன்னிட்டு 10 வயது வரை உள்ள 65 இலட்சம் குழந்தைகளுக்கு இலவச சத்துணவு வழங்குகிறோம். 15 வயது வரை கொடுக்க வேண்டும் என்று திட்டமிட்டு வருகிறேன். இன்று 5 வயதுள்ள ஒரு குழந்தை இன்னும் 16 வருஷம் கழித்து 21 வயது ஆகும். அப்போது வெறும் படிப்பு மட்டுமே அதற்குக் கிடைத்தால் பலன் இல்லை. ஆகவே தொழிற் கல்வியும் அந்தக் குழந்தைக்குக் கற்றுத் தரவேண்டும். 4 நாள் படிப்பு, 2 நாள் பயிற்சி, ஒரு நாள் ஓய்வு.

குழந்தை எந்தத் தொழிலைக் கற்றுக் கொள்ள விரும்புகிறதோ, அதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இங்கே நாம் பார்த்த நடனக் கலையானாலும் சரி, இசைக் கலையானாலும் சரி, எதனைக் கற்றுக்கொள்ள விரும்பினாலும் சரி, அதனைக் கற்றுத்தர வேண்டும். பள்ளியை கல்லூரியைவிட்டு வெளியே வரும்போது அந்தக் குழந்தைக்கு வேலைகொடுக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்குவது எனது கடமை எனக் கருதுகிறேன்.

இப்படிப்பட்ட கலை உணர்வைப் பெற்றால் நல்ல குணத்தை நாம் பெற முடியும். இசையை உண்மையாகக் காதலிக்கிறவர்கள் நல்லவர்களாகத்தான் இருப்பார்கள்.

சாதகம் செய்வதற்கு வசதியாக விடுதிகள் கட்டப்படவேண்டும் என்று சொன்னார்கள். சாதகம் செய்வதற்கு கடற்கரை இருக்கிறதே! நாங்கள் எல்லாம் நாடகத்தில் நடித்த காலத்தில் கடல் நீரில் ஆற்றில் அதிகாலை 4 மணிக்கே நின்று சாதகம் செய்வோம். என்றாலும், இந்த நவீன காலத்தை எண்ணி, விடுதி கட்டித் தருவது பற்றி ஆலோசிப்பதற்குச் சித்தமாக இருக்கிறேன்.

பாடம் படிப்பது போன்றதல்ல சங்கீதம். பிறரைப் பாராட்டி, மதித்திடும் குணம் எல்லோருக்கும் வர வேண்டும். சகோதரி எம்.எஸ் சுப்புலட்சுமி அம்மையார் அவர்களின் முன்பு பாடத் தெரியாத ஒருவர் சென்று பாடினால் அவர் கேலி செய்யமாட்டார். அவரைத் தட்டிக் கொடுத்து ஆதரவு தருவார். இன்னும் முயற்சி செய்து பாடவேண்டும். அவ்வாறு பாடினால் வெற்றி கிடைக்கும் என்று வாழ்த்தி அனுப்புவார்.

இங்கே ஒரு மாணவர், சிவபாலன் என்பவர் இலங்கையைச் சேர்ந்தவர். நான் நிகழ்ச்சிக்கு வந்தவுடனே எனக்கு ஒரு நூலைக் கொடுத்தார். அது குறித்துச் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

இந்த உலகத்தில்தான் நாம் இருக்கிறோம். வேறு எங்கேயும் இல்லை. முதல்வராயினும், அமைச்சராயினும், கவிஞர்களாயினும், பாடகர்களாயினும் இந்த உலகத்தில் தான் இருக்கிறார்கள். அந்த நண்பர் தமது நூலில் ஒரு தவறைச் செய்திருக்கிறார். அது குறித்து அவரிடமே நான் சுட்டிக் கேட்டேன். அவர் “உலகம் என்ற மாற்றாந்தாய் கலைஞனைக் கொடுமைப்படுத்திக் கண்ணீர் முத்துக்களை

அதிக அளவில் வரவழைக்கிறது'' என்று குறிப்பிட்டுள்ளார். உலகம் நமது தாய், அது எப்படி மாற்றாந்தாய் ஆகும்.?

வாழ்வு சிறிது – வளர்கலை பெரிது என்பார்கள். கலை நித்தமும் வளர்கிறது என்று குறிப்பிட்டுக் காட்டுவார்கள்.

கலை எப்போதும் இருக்கும். ஆனால், கலைஞர்கள் இருக்க மாட்டார்கள். பாகவதர் எங்கே ? பி.யு சின்னப்பா எங்கே ? கலைவாணர் எங்கே ?அவர்கள் எல்லாம் மறைந்து விட்டார்கள். அவர்கள் கையாண்ட கலை இன்னும் இருக்கிறது. தற்போது வேறு கலைஞர்கள் வந்திருக்கிறார்கள். பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பார்களே அது இதுதான்.

பிறப்பு இருக்கிறது என்றால் இறப்பு இருக்கிறது

இளமை இருக்கிறது என்றால் முதுமையும் இருக்கிறது.

இயற்கை கலைஞனைக் கண்ணீர்விடச் செய்கிறது.

பிறக்கும்போதும் மனிதன் அழுகிறான். இறக்கும்போதும் அழுகிறான். அதற்கு இடையிலே இயற்கை எத்தனை விளையாட்டுக் காண்பிக்கிறது ?

இன்றைக்கு வாழ்கின்ற நாம் நமது கடமையைச் சரியாகச் செய்தால்தான் எதிர்காலத்தில் வரும் நமது சந்ததியினர் நல்வாழ்வு வாழ முடியும்.

இந்தக் கல்லூரியில் தமிழ் இசைக்காக ஒரு பிரிவு வரவேண்டும். சரிகமபதநி என்று சொல்லித்தருகிறார்கள். அதற்குரிய தமிழ் வார்த்தைகள் என்ன என்பது இங்குள்ள ஆசிரியர்களுக்குத் தெரியாததல்ல!

தெலுங்குப்பாடலைப்பாடுங்கள்!அதற்காகத்தமிழிசையைப்புறக்கணிக்கக்கூடாது. அதையும் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

பழைய கால வைத்தியர்கள் போல எவருக்கும் எதுவும் சொல்லித்தராமல் மறைந்து போனதுபோல கலையை ஆக்கக்கூடாது. அதை ஒரு பொக்கிஷமாக வைத்துவிடக்கூடாது. மக்களுக்குப் பயன்படும்படிச் செய்யவேண்டும். கலைஞர்கள் தமது கலைத்திறமையால் மக்களைச் சொந்தக்காரர்களாக்கிக் கொள்ளவேண்டும்.

இன்று பட்டம் பெற்றுவிட்டீர்கள். இதுதான் உங்கள் காலடியின் முதற்படி. இன்னும் 99 படிகள் உள்ளன. அதனை உணர்ந்து செயல்பட்டு வெற்றியடைய வாழ்த்துகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(21.11.1983 அன்று, தமிழ்நாடு அரசின் இசைக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரை)

களஞ்சியப் பணியில்
தமிழ்ப் பல்கலைக்கழகம்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

இங்கு நிருவாகம் பற்றி அதிகமாகப் பேசவில்லை. நிருவாக முறைபற்றிப் பேசியிருக்கிறார்கள். ஒரிருவர் நல்ல யோசனைகளையும் தெரிவித்திருக்கிறார்கள். புதிய சொற்கள் எல்லாம் களஞ்சியத்தில் இடம்பெற வேண்டும்.

தமிழ்ப் பல்கலைக் கழகம், ஆராய்ச்சியை விரிவடையச்செய்யும் தலைமையிடமாகத் தஞ்சையில் இருக்க வேண்டும் என்றுதான் தஞ்சையில் நாம் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை நிறுவி விழாவெல்லாம் நடத்தத் தொடங்கினோம். தமிழ்ப் பல்கலைக் கழகத்தை அங்கு தோற்றுவிப்பதற்கு எது ஆதாரமான எண்ணமாக இருந்ததோ, அது இப்போது மாற்றப்பட்டுவிட்டது என்பதை நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அடிப்படையான நோக்கமும் தகர்ந்துவிட்டது என்று சொல்லத் தோன்றுகிறது.

சென்னையில் இது இயங்கினால் அரசுத்துறையைச் சேர்ந்த ஒரு அலுவலகம் போலத்தான் இதுகாட்சிதரும். தமிழ்ப்பல்கலைக் கழகம் என்ற பொலிவுமிகு தோற்றத்தைத் தராது.

தஞ்சையில் நாம் ஏன் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை உருவாக்கினோம்? அங்குள்ள சரசுவதி மகால் நூலகத்தில் ஏராளமான நூல்கள் இருக்கின்றன. பாலி மொழியில் கூட அங்கு நூல் உள்ளது. ஏடுகள் உள்ளன. அவற்றை மொழி பெயர்த்துத் தமிழ் மக்களுக்குத் தரவேண்டும், உண்மைகள் அங்கே பொதிந்து கிடக்கின்றன என்றெல்லாம் சொல்லப்பட்ட போது அது கேட்டு மகிழ்ந்தோம்.

இப்போது சென்னைக்கு வந்து ஒரு இடத்தைத் தேடிப்பிடித்துக்கொண்டு, இந்த இடத்திற்கு வாடகை அதிகம், வேறு இடம் போகவேண்டும் என்றும், அங்கு கட்டடம் கட்டித் தாருங்கள் என்றும் கேட்டால், நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?.

நான் முதல்வர் என்ற முறையில் இதைக் கூறவில்லை. சாதாரணக் குடிமகன் என்ன பேசுவானோ, என்ன எண்ணுவானோ அதையே நான் கூறுகிறேன்.

எங்கே உள்ள அறிஞர்களும் இங்கே வருவார்கள், நாம் அவர்களது பேச்சைக் கேட்கலாம் என்று அங்குள்ள சாதாரண மக்கள் விரும்பி எதிர்பார்த்திருப்பார்களே அது என்ன ஆவது?

இங்கே உள்ள மாணவர்களை அறிஞர்களைத் தஞ்சைக்கு வாருங்கள் என்றால் அவர்கள் வரமாட்டேன் என்றா சொல்வார்கள்? எங்கே வேண்டுமென்றாலும் நாம் அவர்களை அனுப்பலாம் சேவை செய்வதற்காக.

திராவிட மொழி வரலாறு மட்டுமல்ல; திராவிட இன வரலாற்றையும் நீங்கள் செய்யவேண்டும். தஞ்சையில் இந்தப் பணி நடந்தால் கரந்தையில் உள்ள மாணவர்கள் பல்கலைக் கழகப் பேராசிரியர்களை அணுகி, தங்களுக்கேற்படும் ஐயங்களைக் கேட்டுத் தெளிவடைய முடியும்.

இங்குள்ள மாணவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டு அதனை நிவர்த்தி செய்துகொள்ள நினைக்கும்போது, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குச் சென்றால் அங்கே பெரியவர்களைச் சந்திக்கலாம். எல்லா அறிஞர்களையும் பார்க்கலாம். அவர்களிடம் விளக்கம் பெறலாம் என்று கருதுவார்கள்.

ஆகவே, தஞ்சையில்தான் இந்தக் களஞ்சிய ஆராய்ச்சி நடைபெறவேண்டும். அங்கு வருமாறு நீங்கள் என்னை அழைத்தால் மாதத்திற்கு ஒரு முறை அல்ல, வாரத்திற்கு ஒருமுறை அழைத்தாலும் வருகிறேன். ஆகவே, இங்கு அலுவலகம் இருப்பது குறித்து நீங்கள் மறுபரிசீலனை செய்யத்தான் வேண்டும்.

திராவிட மொழிகளின் வளர்ச்சிக்கு எல்லாவகை உதவிகளையும் என்றும் தருவதற்கு நாங்கள் தயார். அதிகம் படிக்காத எழுத மட்டுமே தெரிந்த மக்களும் புரிந்துகொள்ளும் வகையில், சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் விதத்தில் அகராதி இருக்கவேண்டும்.

இப்படி எல்லாம் செய்தால் அகராதி பெரிதாக இருக்குமே என்று கூறலாம். ஆனாலும் பரவாயில்லை! பகுதி பகுதியாக வெளியிடலாம். இங்கே ஒரிஸாவைச் சேர்ந்த அறிஞர்ஒருவர் குறிப்பிட்டதுபோல, 5 ஆண்டுக்கு ஒருமுறை புதிய சொற்களை இணைத்து, புதிய பதிப்பு அல்லது திருத்திய பதிப்பு என்று வெளியிடலாம். உங்களால் இதனை தரமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

நண்பர் வி.பி. இராமன் அவர்களின் தந்தையார் ஏ.வி. இராமன் ஒரு அகராதி எழுதினார். அதற்காக 10 ஆண்டுக்காலம் அவர் பட்டபாட்டை நானே பார்த்தேன். அந்த அகராதிப் பணி முடிந்ததா என்பது நினைவில்லை. வேண்டுமென்றால் அதையும் பெற்றுத்தரத் தயாராக இருக்கிறேன். எப்படிச் சேர்ப்பது ? எப்படிப் பிரிப்பது ? என்பதை எல்லாம் உங்கள் அறிவைக் கொண்டு முடிவெடுக்க வேண்டுகிறேன்.

இந்த வெளியீடுகளுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று சொன்னார்கள். உங்கள் உழைப்பு பலகோடி ரூபாய் பெறும். தமிழ் என்று பார்க்கும்போது பணத்தைப் பற்றிக் கவலை இல்லை. யார் அரசில் இருந்தாலும் தமிழுக்குப் பணம் தந்தே ஆகவேண்டும். அந்தவகையில் ஒரு கோடி ரூபாய் அல்ல எத்தனை கோடி ரூபாய் என்றாலும் தருவதற்குத் தயார்.

அண்ணா நாமம் வாழ்க ! நன்றி ! வணக்கம் !

(28.11.1983 அன்று, சென்னை தியாகராயர் நகரில் உள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் களஞ்சிய மையக் கிளையின் கருத்தரங்கில் கலந்து கொண்டு ஆற்றிய உரை)

காவிரிப் பிரச்சினையில் நல்ல முடிவு ஏற்படும்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

நான் டாக்டர் பட்டம் பெற்றதற்காக என்னை வாழ்த்தி நேற்று முதல் இன்றுவரை திருவிழா போல விழாவினை நடத்தி அன்பு காட்டிய அனைவருக்கும் நான் முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பதவிகளெல்லாம் வந்தால் வரும்; போனால் போகும். நான் நடிகனாக இருந்தவன்; அந்த உணர்வை என்னால் மாற்றிக்கொள்ள முடியாது.

ஆந்திர முதல்வர் என்.டி.ஆர் அவர்கள் பேசும்போது என்னைப் பின்பற்றி நடப்பதாகச் சொன்னார்; நான் கொடுத்து வைத்தவன். கர்நாடக முதல்வர் ராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் பேசும்போது தென் மாநிலங்களுக்கு நான் முன்நின்று வழிகாட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். நான் வழிகாட்டத் தயார்; அதனை அவர் ஏற்றுக்கொள்ளத் தயாரா?

நமது உறவால் எந்த மாநிலத்திற்கும் இழப்பு வரக்கூடாது. எந்த மாநிலத்திற்கும் பாதகம் இல்லாத வகையில் தேசிய ஒருமைப்பாட்டுக்கு வலு ஏற்படுகிற வகையில் அவரவர் கொள்கைகளை விட்டுக்கொடுக்காமல் நாம் முடிவுகளை எடுக்க வேண்டும் எங்களைப் பொறுத்தவரை அண்ணாவின் கொள்கைகளிலிருந்து பிறழாத வகையில் முடிவெடுப்போம். அதற்கு என்.டி.ஆரும், ஹெக்டேயும் ஒத்துழைத்தால் தலைமை ஏற்க நான் தயார்.

இப்படி ஒற்றுமை ஏற்படுவது சிக்கலை ஏற்படுத்துவதற்காக அல்ல; அவசியமான நன்மைகளைப் பெறுவதற்கும் தேசிய ஒருமைப்பாடு வலுப்பெறுவதற்குமேயாகும்.

சென்னைக்குக் கிருஷ்ணா நதிநீர் கொண்டுவரும் திட்டம் நீண்டகாலமாக ஆலோசிக்கப்பட்டு வந்தது. பிரதமர் இந்திராவும் அது பற்றிப் பேசினார். அதற்குப் பிறகு நானும் ஆந்திர முதல்வர் என்.டி.ஆரும் அண்ணன் தம்பியாகப் பேசி நல்லதோர் முடிவெடுத்தோம். இதைப்போல கர்நாடகத்துடனும் பேசிவிருக்கிறோம். ஹெக்டே மிக நல்ல உள்ளம் கொண்டவர். கர்நாடகத்தை வறட்சியில் விட்டுவிட்டு தமிழகத்திற்கு உதவவேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. அதேபோலத் தமிழகம் வறண்டுபோக வேண்டுமென்று அங்குள்ளவர்களும் நினைக்கமாட்டார்கள்.

காவிரி நீர்ப் பிரச்சினையில் நல்ல முடிவு ஏற்படும். அப்போது அதை எதிர்க்கட்சிகள் தங்கள் அரசியலுக்குப் பயன்படுத்தக் கூடாது. கர்நாடக அரசுக்கு அங்குள்ள

எதிர்க்கட்சிகள் தொல்லை தரக்கூடாது என்று தமிழ்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள 7 கோடித் தமிழர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் என்னை நல்ல மனிதனாக மனிதாபிமானம் மிக்கவனாக ஏற்றுக்கொண்டு வாழ்த்துவதற்கு நான் என் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

❖ ❖ ❖

(10.12.1983, 11.12.1983 ஆகிய நாட்களில் சேலம் மற்றும் தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்ற புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் டாக்டர் பட்டம் பெற்றமைக்கு பாராட்டு விழாவில் ஆற்றிய உரை)

கெட்டதை மறக்க வேண்டும்
நல்லதை நினைக்க வேண்டும்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

என் மனசாட்சிப்படி நான் தீட்டும் நல்ல திட்டங்களுக்கு எப்போதும் ஆதரவு தந்துவரும் எல்லோருக்கும் வணக்கம்.

பெரியார் மாவட்டத்திற்கு நான் அதிக அளவில் உதவியிருப்பதாக இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். எந்தக் குழந்தைக்கு உடனடி ஊட்டச்சத்து தேவையோ அந்தக் குழந்தைக்கு உடனடி ஆதரவு தருவது என்ற வகையிலே தான் புதிதாக உருவான இந்த மாவட்டத்திற்கு நான் உதவுகிறேனே தவிர மற்ற மாவட்டங்களை ஒதுக்குவதாகக் கருதிவிடக்கூடாது.

என்னையும் உங்களையும் பிணைத்துள்ள பாசம் இன்று நேற்று குறிப்பாக நான் முதலமைச்சர் ஆனபிறகு ஏற்பட்டதல்ல. நான் நடிக்கத் தொடங்கியதிலிருந்தே உண்டானதாகும். நான் உங்கள் வீட்டுப்பிள்ளை என்று சொல்லிக்கொள்வதிலே பெருமைப்படுகிறேன்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கட்டடத்திற்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவாயிருக்கிறதென்றால் கட்டுமானப் பொருள்களுக்கு ஆனதுபோக பாதியாவது இதில் வேலைசெய்த தொழிலாளர்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கும் என்பதை மறக்கக் கூடாது.

பொதுமக்களாகிய நீங்கள் தான் என்னை ஆட்சிக்கு அனுப்பினீர்கள். கெட்டதை மறக்க வேண்டும். நல்லதை நினைக்க வேண்டும் அந்த அடிப்படையில் உங்கள் அரவணைப்பிலிருக்கும் நான் நல்லதையே செய்வேன். எதையும் அகம்பாவத்தோடு செய்யமாட்டேன். நாங்கள் வேண்டாமென்றால் எங்களை நீங்கள் தான் திருப்பியனுப்ப வேண்டும்.

சிலர், மக்களை ஏமாளிகள் என்று கருதுகிறார்கள். அவர்கள் இன்னும் மக்களைப் புரிந்து கொள்ளாததே அதற்குக் காரணம்.

தேர்தல் அறிக்கையில் சொன்னாயே செய்தாயா என்கிறார்கள். பெரியார் மாவட்டம் உருவாக்கப் போகிறோம் என்று அதில் சொன்னோமா? செய்திருக்கிறோம். இப்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டப்போவதாகக் குறிப்பிட்டோமா? கட்டி முடித்திருக்கிறோம். இதற்காக மாலை போடவேண்டாம்; நற்சான்றிதழ் தரவேண்டாம்; பாராட்டி ஒரு வார்த்தை, தமிழிலே வல்லவர்களாயிற்றே; சொல்லியிருக்க வேண்டாமா?

உயர்ந்து வரும் விலைவாசியைக் கட்டுப்படுத்தவில்லை என்கிறார்கள். விலைவாசி ஏன் உயர்கிறது ? உயர்த்தச் சொல்லுகிறார்கள். விவசாயிகளிடம் போய் நெல்லுக்கு விலையை உயர்த்தச் சொல்லிவிட்டு மக்களிடம் அரிசியைக் குறைந்த விலைக்குக் கேளுங்கள் என்றால் எப்படி ? நாங்கள் ஆட்சிக்கு வந்தபின் மக்கள் நலன் கருதி 8 ஆயிரம் நியாயவிலைக் கடைகளை நடத்துகிறோம். அரசுக்கு அதனால் எத்தனைக் கோடி நஷ்டம், எண்ணிப் பார்க்க வேண்டாமா ?

அண்ணாவின் கருத்து என் நெஞ்சில் ஊறியிருக்கிறது. நாங்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற இரண்டாண்டுக்காலம் வரை போராட்டம், போராட்டம் என்ற நிலைதானே இருந்தது ? எதையும் ஆக்குவது கடினம்; அழிப்பது எளிது.

டிஸ்மிஸ் செய்யப்பட்ட பிறகும், அண்ணாமேல் உள்ள நம்பிக்கையால் என்னை மீண்டும் ஆட்சிக்கு அனுப்பினீர்கள்.

ஏழை எளிய மக்களின் குழந்தைகள் நலன் கருதி சத்துணவுத் திட்டம் கொண்டுவந்தோம். இதைக் குறை கூறினார்கள். உங்களால் நடத்த முடியாது; வேண்டாம் என்றார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன். நீங்கள் ஆட்சிக்கு வந்தால் சத்துணவுத் திட்டத்தை நீக்கிவிடப்போகிறீர்களா ? சத்துணவுத் திட்டம் வேண்டாம் என்று சொல்லப் போகிறீர்களா ?

எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இதை மாற்ற முடியாது.

குழந்தைகள் எல்லாம் சமத்துவமான அறிவைப் பெறவேண்டும். இதற்காக பள்ளிப் படிப்பு முடிந்த பிறகு ஒருமணி நேரம் அந்தந்த வகுப்பு ஆசிரியரே பிள்ளைகளுக்கு டியூசன் சொல்லித்தருவது; அவர்களுக்கு அதற்கான ஊதியத்தை அரசே வழங்குவது என்பது பற்றிப் பரிசீலித்து வருகிறோம்.

அண்ணா நாமம் வாழ்க ! நன்றி ! வணக்கம் !

(12.12.1983 அன்று, ஈரோடு மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரை)

மக்கள் எவ்வழி அரசும் அவ்வழி!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

ஒரே கட்சி ஆட்சிதான் இந்தியாவில் இருக்க வேண்டுமென்று யார் விரும்பினாலும் சரி, அது இந்த நாட்டிற்கு நல்லதல்ல, அது இந்த நாட்டிற்கு ஒத்துவராது என்பதை நான் கண்டிப்பாகக் கூறவிரும்புகிறேன்.

அன்றும் சொன்னேன். இன்றும் சொல்கிறேன். ஒரே ஆட்சி என்றிருந்தால் என்ன ஆகும் தெரியுமா? இதுமாதிரி பேசுவதற்கு ஆளே இருக்காது.

ஒரே கட்சி ஆட்சியிலிருந்து ஒருவர் பேசினால் அவருக்குப் பதில் வேறொருவரை நியமிப்பார்.

நாம் கேட்டால் டிஸ்மிஸ், அவர்கள் கேட்டால் சஸ்பெண்ட். இந்த நிலைமை மாற வேண்டும்.

மாநிலக் கட்சிகள் கூடாது என்கிறார்கள். மாநிலக் கட்சிகள் இல்லாது மத்திய கட்சி ஏது? அரசியலை வைத்துக்கொண்டு அச்சுறுத்தல் போக்கு அல்லாத நிலையை உருவாக்கிக் கொண்டால்தான் நாடு ஒருமைப்பாட்டுடன் இருக்க முடியும். இல்லாவிட்டால் அதைக் காப்பாற்ற முடியாது.

இதைத் தயவு செய்து ஆட்சியிலிருக்கின்றவர்கள் சிந்திக்க வேண்டும்.

ஒருவகையில் பிரதமருக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மின்துறை அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் ஐக்கிய நாடுகள் சபையில் பேச பரிந்துரை செய்தது நான் என்றாலும், உலக மன்றத்துக்கு அனுப்பியவர் பிரதமர். அவரைப் பாராட்ட வேண்டும்.

இதுவரை இந்திய வரலாற்றில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு அமைச்சரை இப்படிப்பட்ட குழுவுக்குப் பொறுப்பாக அமைத்தது கிடையாது. இதுதான் வரலாற்றில் எழுதப்பட்டிருக்கிற முதல் வரிகள். அன்று பிரதமர் தலைமையிலும், பின்பு வெளிநாட்டு அமைச்சர் தலைமையிலும் செயல்பட்டது இந்தியக் குழு. இருவரும் டெல்லி திரும்பிய பின் அங்கிருந்த இந்தியக் குழுவுக்குத் தலைவராக பண்ருட்டி ராமச்சந்திரன் செயல்பட்டார்.

அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகத்தைச் சேர்ந்த ஓர் அமைச்சர் இந்திய குழுவுக்குத் தலைவராகச் செயல்பட்டார். இதை ஒத்துக்கொண்டு இவ்வளவு பெரிய நியாயத்தை வழங்கிய பிரதமரை பாராட்டாமல் இருக்க முடியாது. ஆகவேதான்

நான் நம்புகிறேன். இந்தப் பேச்சுக்களையெல்லாம் அவர் அறியும்போது நல்ல முடிவு வருமென்ற நம்புகிறேன். பண்டித நேரு காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் போல பிரதமர் நிச்சயமாக ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற மாநிலங்களுக்கு நியாயமான அதிகாரங்களை வழங்க முன்வருவார்கள் என்று நான் மிகவும் நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கிறேன். சுயநலமில்லா நம்பிக்கை வெற்றி பெறும். இதை நிறைவு விழா என்று சொன்னார்கள். இந்த நிகழ்ச்சிக்கு வேண்டுமானால் இது நிறைவு விழாவாக இருக்கலாம். கொள்கைக்கு நிறைவு விழா அல்ல. அந்தக் கொள்கை நிறைவுபெற இந்தப் பேராசிரியர்கள் கலந்து உரையாடியது மனநிறைவைத் தருகிறது.

மனநிறைவு விழாவே தவிர, கொள்கை நிறைவு விழா அல்ல. ஆகவே, இது தொடர வேண்டும். மக்களிடம் செல்ல வேண்டும்.

இனி தேர்தலுக்கு வருவதாக இருந்தால் இந்த உறுதியை (மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்) தருவதாக இருந்தால் வா – இல்லையென்றால் போ என்று மக்கள் நம்மை கேட்கக்கூடிய நிலைக்கு மக்களைத் தயார் செய்ய வேண்டும்.

எல்லோரும் ஒத்துழைத்தால் மக்களைத் தயார்ப்படுத்த முடியும். முயன்றால் முடியாதது எதுவுமில்லை. இது நமக்காக அல்ல, நாட்டுக்காக. நாட்டு மக்கள் நன்றாக வாழ்வதற்காக. ஏழை மக்கள் பிரதிநிதிகள் சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் இருந்தால் தான் நாம் நினைப்பது நடக்கும்.

அதற்கு சட்ட நுணுக்கம் தெரிந்தவர்கள் எளிமையான நடையில் புத்தகங்கள் எழுதி மக்களுக்குப் புரிய வைக்கவேண்டும். இத்தகைய கருத்தரங்குகள் தமிழ்நாட்டில் நடைபெறுவதற்கு நான் பெருமைப்படுகிறேன்.

இந்தியாவிலிருப்பவர்கள் தமிழ்நாட்டவர்கள் சொன்னார்கள் என்றால் கேட்பார்கள். அந்த அளவுக்குத் தமிழர்களுக்கு இது பெரிய புகழ், பெருமைதரத்தக்கது. பல்கிவாலா பேச்சைக் கேட்க வேண்டுமென்று இருந்தேன். ஆனால், காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி பெங்களூர் செல்ல வேண்டியிருந்ததால் கேட்க முடியவில்லை.

முன்பிருந்தோர் தமிழகத்தை அப்படி ஆக்கிவிட்டார்கள். 1974ஆம் ஆண்டே பேசியிருந்தால் நன்றாயிருந்திருக்குமே! நான் அமெரிக்கா சென்று வந்தவுடன் நதிகளையெல்லாம் தேசியமயமாக்க வேண்டும் என்றேன். அப்போது என்னை முட்டாள் என்று கூடக் கூறினார்கள். இப்போது அவர்களே தீர்மானம் கொண்டு வருகிறார்கள். நதிகளை ஏன் தேசியமயமாக்கிவில்லை என்கிறார்கள். எனக்கு ஒரு சந்தோஷம், என்னைப் போய் எத்தனை முட்டாள்கள் முட்டாள் என்றனர் என்று.

மக்களுக்கு எது தேவையோ அதைச் செய்வதற்குத்தான் அரசு. அந்த அரசைத் தேர்ந்தெடுப்பது மக்கள். அந்த அரசு வகுக்கும் சட்டங்கள் மக்களுக்குப்

பயன்பட வேண்டும். இங்கே நாம் செய்யும் திட்டங்களை மக்கள் எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள்.

எல்லாக் கட்சியினரும் சத்துணவுத் திட்டம் சரி என்று ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால், மைய அரசு பணம் ஒதுக்க முடியாதென்றால் அவர்கள் மக்களிடம் எப்படி வாக்கு கேட்க முடியும்? அந்த நிலையை உருவாக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

சர்க்காரியா கமிஷன் நியாயமான தீர்ப்பு வழங்கும் என்று எண்ணி அதுவரையில் பொறுத்திருப்போம் என்று எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன். என் ஒருவனால் எதையும் செய்து விட முடியாது. மக்கள் செய்ய வேண்டும். முன்பு, அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பார்கள், இன்று மக்கள் எவ்வழி, அரசும் அவ்வழி. இந்த வழி சரியான வழி!

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(08.01.1984 அன்று, தமிழ்நாடு அரசியல் ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில் மத்திய மாநில அரசுகளின் உறவுமுறைப் பற்றிய அனைத்திந்திய கருந்தரங்கில் ஆற்றிய உரை)

இனிய தமிழுக்காக
இந்த அரசு எதையும் செய்யும்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

திருவள்ளுவர் பெயரைச் சொல்லி நாமும் புகழ் பெறுகின்ற நாள், இந்த நாளாகும். சிலரைப் பாராட்டுவதன் மூலம் நாம் புகழ் பெறுகிறோம்.

இங்கே 2 மணி நேரத்துக்கு மேலாக இசை நிகழ்ச்சியை நடத்தி உங்களை எல்லாம் கட்டுப்படுத்திய சீர்காழி கோவிந்தராஜனின் மகன் சிவசிதம்பரத்தை முதலில் நான் பாராட்டுகிறேன்.

இங்கே வட மாநிலத்தைச் சேர்ந்த வங்கியில் பணிபுரியும் அதிகாரிகள் தமிழில் பேச முன்வந்து நம்மை எல்லாம் திகைப்படையச் செய்திருக்கிறார்கள். அவர்களது உணர்வுக்கு நான் தலை வணங்குகிறேன். இந்த உணர்வு அனைவருக்கும் வரவேண்டும் என்பதுதான் நமது கொள்கை. அண்ணா அவர்கள் கொண்டிருந்த கொள்கை.

திருவள்ளுவரையும் திருக்குறளையும் பற்றிப் பேசுவதற்கு முன்னர் தமிழைப் பற்றி பேசலாம் என்று விரும்புகிறேன். ஏனெனில், தமிழை நன்கு தெரிந்தவர்கள்கூட, படித்தவர்கள் கூட சொற்களை உச்சரிக்கும்போது 'ன' என்ற வார்த்தையை 'ண' என்று உச்சரிக்கிறார்கள். மனம் என்பதை மணம் என்றும் "மனிதன் என்பதை மணிதன் என்றும் உச்சரிக்கிறார்கள். சில கவிஞர்கள்கூட, கவிதைகளை நன்றாக எழுதிவிட்டு" படிக்கும்போது இந்த தவற்றை செய்கிறார்கள். நம்மைப் பார்த்துச் சிறுவர்களும் தவறு செய்யத் தொடங்கிவிடுவார்கள். அதனால் அப்படிப்பட்டவர்கள் தங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

டெலிவிஷன், வானொலி ஆகியவற்றில் சிலர் இப்படிப் பேசுகிறார்கள். அவர்கள் யார் என்பதை நான் சொல்லக்கூடாது. ல,ழ, வித்தியாசம் தெரியாமல் உச்சரிக்கிறார்கள். மேற்படி நிறுவனங்கள் இதைத் திருத்த வேண்டும். இந்த இரண்டு நிறுவனங்களும் நிச்சயம் இதனைக் கவனிக்கும் என்று நம்புகிறேன். இப்படிப்பட்ட இழிவான நிலை தமிழகத்தில் வராது காப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கிறேன்.

சிறுவயதில் எனக்குக் கற்றுக்கொடுத்த ஆசிரியர்கள் மிக எச்சரிக்கையாகக் கற்றுக் கொடுத்தார்கள். நாங்கள் அந்த வகையில் வளர்க்கப்பட்டோம். நான் அதிகம் படித்தவன் அல்ல.

நான் சிறு வயதில் பாட்டெழுதலாம் என்று எண்ணி, 'ஆதி அந்தம் இல்லாத ஆதிநாராயணன்' என்று எழுதினேன். அப்போது எனது தாயார் இருக்கிற தரித்திரம் போதாதா என்றார்கள்.

பாட்டு எழுதப் படித்தவர்கள் தரித்திரர்களாக இருப்பார்கள் என்ற நிலை 30, 40 ஆண்டுகளுக்கு முன்பே இருந்தது. தமிழ் படித்தவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள் என்ற நிலை இங்கே எத்தனையோ ஆண்டுகளாக இருந்து வருகிறது. இப்போது அப்படித்தான் இருக்கிறது என்று யாராவது சொன்னால், நான் தலைகுனிந்துபோகும் நிலைதான் இருக்கிறது.

ஆனால், தமிழைக் கற்றவர்கள் மதிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே, ஓரளவுக்கு அவர்களுக்கு நிம்மதியை அளிக்கும் வகையில் சில ஏற்பாடுகளை நாம் செய்து வருகிறோம்.

அரசு அதிகாரிகள் தமிழில்தான் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னால், உடனே பிரிவினை வாதி என்ற பட்டத்தையும், சுயமரியாதைக்காரன் தி.மு.க.விலிருந்து வந்தவன் என்ற பட்டத்தையும் அளித்து விடுகிறார்கள். தன்னுடைய மரியாதையைக் காத்துக்கொள்வது எப்படித் தவறாகும்?

சீர்திருத்தக்காரன் என்றால் கடவுளை நம்பாதவன் பண்பில்லாதவன் அடக்கமில்லாதவன் அகந்தையுடையவன் என்றெல்லாம் பலரும் பொருள் கொள்ளுகின்றனர்.

நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், எந்த ஒரு அதிகாரியும் ஓராண்டுக்குள் தமிழில் படித்து, தமிழில் பேசி, தமிழில் எழுதக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறினேன். அதற்குச் சில அதிகாரிகள் முணுமுணுத்தார்கள், சிலர் கோபித்தார்கள்; அலுவலகங்களில் உணவருந்துகின்ற நேரங்களில், சிறு குழந்தைகள் போல, “இவர் ஆட்சி இன்னும் கொஞ்சகாலம்தானே! இந்த அதிகாரம் நிரந்தரமாக முடியாது!” என்று சொன்னது எல்லாம் எனக்குத் தெரியும்.

இங்கே தமிழில் பேச முயற்சி எடுத்த வங்கி அதிகாரிகள் அடுத்த முறை பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்போது, இன்னும் நன்றாக தமிழைப் பேசுவோம் என்று சொன்னார்கள் இதைக் கேட்கும்போது எப்படி இருக்கிறது தெரியுமா? இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே என்று கூறினார்களே அப்படி இருக்கிறது.

இப்போது கருநாடக மாநிலத்தில் “ஓர் ஆண்டுக்குள் அதிகாரிகள் கன்னடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்“ என்று அரசு சொல்லியிருக்கிறது. “கன்னடம் தெரிந்தவர்களுக்கே அரசு வேலை கொடுக்க வேண்டும்; இல்லாவிட்டால் போராடப் போகிறேன்” என்று எனது சகோதரர் நடிகர் ராஜ்குமார் சொல்லியிருக்கிறார். இந்தப் பிரச்சினையில் சுமுகமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக கருநாடக அரசு ஒரு குழுவை நியமித்துள்ளது.

வங்காளத்தைச் சேர்ந்த வங்கி அதிகாரிகள் தமிழகத்தில் பணியாற்றுகிறார்கள். தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் காஷ்மீரில் மேகாலயாவில் இன்னும் மற்ற மாநிலங்களில் பணிபுரிகிறார்கள். ராஜ்குமார் போடும் நிபந்தனைப்படி பார்த்தால் என்ன நடக்கும் என்று நான் சொல்ல விரும்பவில்லை. இந்த நிலை ஏற்படுமானால் ஒருமைப்பாடு

என்பது சந்தேகத்திற்குள்ளாகிவிடும்; இந்தியா முழுவதும் ஒன்று; எல்லோரும் எங்கும் பணியாற்றலாம்!

நான் அவரைச் சந்தித்துப் பேச இருக்கிறேன். ஆங்கிலம் மட்டுமே தெரிந்த அரசு அலுவலர்கள் வட்டார மொழியைக் கற்றுக்கொள்வதற்கு ஓராண்டு அவகாசம் தர வேண்டும் என்பதை அவரிடம் வலியுறுத்த இருக்கிறேன்.

இங்கே நான் குறிப்பிட விரும்புவதெல்லாம் இதுதான். புலவர்கள் வயது அதிகமானாலும்கூட அவர்களிடம் புலமை அதிகமாகத்தான் இருக்குமே தவிர, குறையாது. அவர்கள், பிரச்சினைகள் பற்றி, நூல்கள் எழுத வேண்டும். நல்ல பாடல்கள் பள்ளிக் குழந்தைகளுக்காக எழுத வேண்டும். பள்ளியிலே பயில அறிவியல், சமுதாய இயல் ஆகியவை பற்றிப் பாடல்கள் எழுதிக் கொடுக்க வேண்டும்; குழந்தைப் பருவத்தில் அவர்களிடம் சொல்லப்படும் கருத்துக்கள் எளிதில் மனத்தில் பதிந்துவிடும்.

பாடல்கள் எப்படி இருக்க வேண்டும்? நான் விளம்பரத்திற்காகச் சொல்கிறேன் என்று கருத வேண்டாம். ஒரு தாய்மக்கள் நாம் என்போம்; ‘ஒன்றே எங்கள் குலம் என்போம்’ என்ற ஒரு பாடல் உண்டு. ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்ற கருத்தில் உள்ள ‘ஒன்றே குலம்’ என்பது இந்தப் பாடலில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இதுபோன்ற பாடல்கள் பசுமையாக மனத்தில் பதிந்துவிடும். சிறுவர்கள் துவக்கத்தில் இதுபோன்ற பாடல்களைப் பாடிப் பழகிவிட்டால், அவர்கள் பிற்காலத்தில் நல்லவராக வளர மனத்தில் ஊக்கம் பெற அச்சத்தை அகற்றி வாழ முடியும்.

அடுத்த ஆண்டு முதல், தொழில் கல்வியைக் கற்றுக்கொடுக்க இருக்கிறோம். தொழில்கல்வியைக் கற்றுக்கொடுப்பதற்குரிய பாடங்களைக் கொண்ட நூல்களை வெளியிட முயற்சிகள் செய்து வருகிறோம். படித்தவன் பயனற்றவன் என்ற நிலையை மாற்ற படித்தவன் பயனுள்ளவன் என்ற நிலையை ஏற்படுத்த முயற்சிகள் செய்து வருகிறோம்.

தொழில் கல்வியைத் துவங்கும் எண்ணம் என்னுடையதென்றாலும் கல்வி அமைச்சர், தலைமைச் செயலாளர், கல்வித்துறை அதிகாரிகள் ஆகியோருடன் கலந்து பேசிப்பேசி ஆலோசனைகள் நடத்தி வருகிறோம்.

உயர்ந்த கல்வி கற்கும்போதே உழைக்கும் கல்வியையும் மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் தீவிரமாக இருக்கிறோம். தனக்கு விருப்பமான தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கற்றுக்கொள்வது மோசமான காரியம் அல்ல என்பதை மாணவர்கள் உணர வேண்டும்.

பந்து, மட்டை, கேரம்போர்டு போன்ற பொருள்களை 40 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள விளையாட்டு பொருள்களை நாம் ஆண்டுதோறும் வெளிமாநிலங்களிலிருந்து வாங்கி வருகிறோம். இந்தப் பொருள்களை இங்கேயே மாணவர்களைக் கொண்டு செய்தால் என்ன? அதனால் பல பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்குமே! அதைப்போலவே

மருத்துவமனைகள், தங்கும் விடுதிகள், அலுவலகங்கள் இங்கெல்லாம் உள்ள மேஜைகளில் பயன்படுத்தப்படும் துணி விரிப்புகளை நமது அரசு தொழிற்சாலைகள் உருவாக்கி அங்கு செய்தால் பல இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் தர முடியும்.

நமது நாடு, நமது மக்கள், நமது மொழி என்ற உணர்வு நமக்கு வேண்டும். அயர்லாந்தில் அவர்கள் தங்கள் மொழியை மிகவும் போற்றுகிறார்கள் என்று அறிகிறேன். பிரிவினை வேண்டாம்; அந்தக் கொள்கையை முன்பே விட்டுவிட்டோம். நமக்கு என்று உள்ள மொழியை நாம் காப்பாற்ற முயலும்போது நம்மை ஏன் பிரிவினைவாதிகள் என்று கருத வேண்டும் ? நம்மீது ஒரு மொழி திணிக்கப்படுவது கூடாது என்று சொன்னோம் சொல்கிறோம். இன்னும் சொல்வோம்! தமிழக அரசு அ.தி.மு.க. அரசு, திணிப்பு மொழியை ஏற்றுக்கொள்ளாது என்று சொல்கிறோம்.

நான் பதவி ஏற்றதும், கோவில்களில் எல்லாம் புலவர்கள் நியமிக்கப்பட வேண்டும்; அவர்கள் தேவாரம் முதலிய நூல்களைச் சொல்லித் தருவார்கள் என்று சொன்னேன். ஆனால், அறநிலையத் துறையிடம் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய பணம் இல்லை. அதற்குக் காரணம், பல சொத்துக்கள் தனியாரிடம் சிக்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றை மீட்கும் வேலையில் ஈடுபட்டால் அதற்கொரு போராட்டம் தொடங்கப்படுகிறது.

டெல்லியிலிருந்து கடிதம் வருகிறது. ஓவர் டிராப்ட் தொகையை உடனே திருப்பிக் கொடுங்கள் என்று! இங்கே உள்ளவர்கள் பட்ஜெட் வர உள்ளதே, புதிய திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற வேண்டியுள்ளதே, அதற்காகப் பணம் கேளுங்கள் என்று சொல்கிறார்கள். அங்கே தடுப்பது இங்கே கேட்கச் சொல்வது! இது முறையா ?

தமிழத்தில் உள்ள அதிகாரிகள் துவக்கத்தில் எங்களுக்கு ஒத்துழைப்புத் தராவிட்டாலும், தற்போது, திட்டங்களைத் தீட்டுவதற்கும் நிறைவேற்றுவதற்கும் எங்களுக்கு ஒத்துழைப்புத் தருகிறார்கள். தமிழகத்தில் உள்ள அதிகாரிகளுக்கு இணையாக, இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எங்கும் கிடையாது. எத்தகைய திட்டத்தையும் நிறைவேற்றும் திறன் அவர்களுக்கு உண்டு.

பல திட்டங்கள் முதலில் ஏட்டளவில் தான் இருந்தன. மக்களுக்குத் தேவை இந்தத் திட்டங்கள் என்று சொன்னதும் அதிகாரிகள் துணிந்து, பொறுப்புகளை ஏற்றுத் திட்டங்களை நிறைவேற்ற ஒத்துழைப்பு நல்குகிறார்கள். அந்தத் திட்டம் தான் சத்துணவுத் திட்டம். இதனைத் தக்க வகையில் நிறைவேற்றுவதற்குத் தலைமைச் செயலர் திரவியம் இருந்தார். அவர் திறமையான அதிகாரியாக இருந்தார். தற்போது இருக்கும் தலைமைச் செயலரும் மிகவும் உதவியாக இருக்கிறார். அண்ணா அவர்களின் காரியதரிசியாக இருந்தவர். அதனால் மக்கள் பிரச்சினையை இவர் நன்கறிவார்.

குழந்தைகளுக்குப் பாடல் எழுதும் புலவர்களின் ஒரு பாடலுக்கு ரூ.500 வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். பொ. திருகூடசுந்தரம்பிள்ளை

எழுதியதுபோல கேள்வி பதில் முறையில் கூட அது அமைக்கப்படலாம். எல்லோரும் நாட்டுக்காக எழுதுங்கள். பாடலைப் புலவர் குழு தேர்ந்தெடுக்கும். அவை நூலாக வடிவம் பெறும், கல்வி அமைச்சர், குழுவின் தலைவராக இருப்பார். கல்வித்துறை அதிகாரிகள் ஓரிருவர் உறுப்பினராக இருப்பார்கள்.

பள்ளிகளில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட வேண்டும் என்ற உத்தரவுபோட வேண்டும். இசைத் தட்டுகளில் ஒலித்தால் மட்டும் போதாது. மாணவர்களுக்கும் அந்தப் பாடல் பாடம் ஆக வேண்டும். எவ்வளவோ நாட்டில் எழுதப்படுகின்றன. ஒரு பத்து, பன்னிரண்டு வரிகளையாவது நாம் மனப்பாடம் செய்து வைத்துக்கொண்டால் அது நமக்குக் கட்டாயம் பயன்படும்.

திருக்குறள் 2 வரிகளில்தான் எழுதப்பட்டிருக்கிறது. திருவள்ளுவர் யாருக்காக எழுதினார்? தமிழர்களுக்குப் பயன்படுவதற்காக எழுதினார். தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படுவதற்காக தன் குடும்பத்திற்காக அல்ல. தனக்காக அல்ல! 2000 ஆண்டுக்குப் பிறகு தமிழகத்தில் நமக்குப் பாராட்டுக் கிடைக்கும் என்பதற்காக அவர் எழுதவில்லை. அவர் தனது கடமையைச் செய்தார். அதன் பலன், இன்று தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்கிறது.

பேரறிஞர்களை அவர்கள் இருக்கும்போது பாராட்டுவது இல்லை. மறைந்தபின் பாராட்டி வருகிறோம். புலவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்கிறேன். தமிழுக்காக இந்த அரசு எதையும் செய்யும்; எதையும் தாங்கும்! அதை நம்புங்கள்! உதவுங்கள்! நல்ல வாழ்க்கை பெறுங்கள்! எதிர்காலச் சந்ததியினருக்கு நல்ல வாழ்வு கொடுங்கள்.

தமிழ் கற்ற புலவர்கள் அத்தனைபேருக்கும் உதவி செய்துவிடவில்லையே என்பது எனது நீண்டநாள் வேதனை. அனைவருக்கும் உதவும் வகையில் ஒரு திட்டத்தை நிறைவேற்ற எண்ணியுள்ளேன். அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாளில் இருந்து, தமிழகத்தில் புலவர் பட்டம் பெற்ற பெருமக்கள் அனைவரின் வாழ்க்கை வசதி, நிதிநிலையை அறிந்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துகொடுக்க நான் முடிவுசெய்திருக்கிறேன். புலவர்கள் துன்பப்பட்டு வேதனைப்பட்டு மறையக்கூடாது. தமிழ் படித்தவர்கள் தமிழுக்காக வாழ்பவர்கள் மனநிறைவோடு மறைய வேண்டும் என நான் கருதுகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(16.01.1984 அன்று, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாளில் ஆற்றிய உரை)

வெள்ளி விழாக் கண்ட மின்வாரியம்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

என்னுடைய பத்தாவது வயதில் மதுரை பாய்ஸ் கம்பெனியில் நானும் நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி அவர்களும் சேர்ந்தோம். எங்களுக்கெல்லாம் முன்னோடியாக இருந்தவர் கே.ஆர்.ஆர். அமரர் அண்ணா அவர்களின் புரட்சிகரமான கதைகளை, தஞ்சாவூரில் நாடகக் கம்பெனி தொடங்கி நாடகமாக நடத்தியவர் அவர். அண்ணாவின் இலட்சியங்களைப் பரப்ப, இலாபம் கருதாமல், தன் சொந்தப் பணத்தைச் செலவிட்டுத் தன்னையே நாட்டிற்கு அர்ப்பணித்துக் கொண்ட நடிப்பிசைப் புலவரின் பெயரை இந்தக் கட்டடத்திற்குச் சூட்டுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அவர் இப்போது இருந்திருந்தால் அமைச்சவையில் ஒரு முக்கிய பொறுப்பை வகித்திருப்பார். ராமச்சந்தர் என்று கையெழுத்துப் போட்டுக் கொண்டிருந்த என்னை ராமச்சந்திரன் என்று கையெழுத்திட வைத்தவரே நடிப்பிசைப் புலவர்தான்.

இந்த ஆண்டுத் தேவையில் 2,000 மில்லியன் யூனிட் மின்சாரம் குறைவாக இருக்கிறது. இதை ஈடுகட்ட அனல்மின் நிலையத்தைக் கொண்டு வருவதென்றால் நிலக்கரி தேவைப்படுகிறது. நிலக்கரிக்கு மத்திய அரசு 25 சதவிகிதம் விலையை உயர்த்திவிட்டது. அதைச் சரிக்கட்ட மின்கட்டணத்தைக் கூட்டினால், போராடுவோம் என்கிறார்கள்.

35 பைசா செலவில் விவசாயிக்கு மின்சாரத்தைக் கொடுத்துவிட்டு 12 பைசாதான் கேட்கிறோம். இதில் 23 பைசா நட்டம். இதனால், ஆண்டொன்றுக்கு அரசுக்கு 150 கோடி ரூபாய் நட்டமாகிறது. இதை எல்லாரும் உணர வேண்டும். அரசுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும்.

மின்வாரியத்தின் வெள்ளிவிழா ஆண்டு இது என்றார்கள். இதனையொட்டி மின்வாரியத் தொழிலாளர்களுக்குத் தலா நூறு ரூபாய் தரப்படும். இது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. இதனால் அரசுக்கு 3 கோடி ரூபாய் செலவாகும். மின்சாரத்தைத் திருடுபவர்களைக் கண்டுபிடிக்கத் தொழிலாளர்கள் முன்வரவேண்டும்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(26.01.1984 அன்று, சென்னை அண்ணாசாலையில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்வாரிய மைய அலுவலகக் கட்டடத் திறப்பு விழாவில் ஆற்றிய உரை)

நமது கலை நாட்டு மக்களுக்காக – மக்களை மகிழ்விப்பதற்காக !

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே ! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே ! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே !

கலைஞர்கள் எல்லோரையும் பாராட்ட வேண்டும் என்பது தான் இந்த அரசின் கொள்கை. நிதிநிலை வசதி, சூழ்நிலை ஆகியவற்றை வைத்து ஆண்டுக்கு 30 கலைஞர்களுக்குத்தான் கலைமாமணி விருது வழங்க முடிகிறது.

இங்கு முதிய கலைஞர்களுக்கும் விருது வழங்கப்பட்டுள்ளது. இளைய கலைஞர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. முதியவர்கள் அவர்கள் செய்த சேவைக்காக விருது பெற்றிருக்கிறார்கள். இளைஞர்கள், வளர்ந்து வருபவர்கள், ஊக்கமுடன் பணியாற்ற வேண்டும் என்பதற்காக விருது பெற்றிருக்கிறார்கள்.

கலைமாமணி பட்டத்தைப் பெற்றுள்ள பலர் ஏழ்மையில் இருக்கின்றனர். அவர்களுக்குக் கிடைப்பது பட்டமே தவிர வாழ்க்கைப் பாதுகாப்பு அல்ல என்பதை மனதில் வைத்து இந்த நிகழ்ச்சியை நாம் கவனிக்க வேண்டும்.

மதிக்கப்பட வேண்டிய கலைஞர்கள் தமிழ்நாட்டில் ஆயிரக் கணக்கில் உள்ளனர். கலைஞர்கள், நாம் நாட்டுக்காக வாழ்கிறோம் என்பதையும், நமது கலைநாட்டு மக்களுக்காக மக்களை மகிழ்விப்பதற்காக என்பதையும் உணர வேண்டும்.

நம்முடைய குழந்தை மூக்குவடித்துக்கொண்டு நின்றால் நாம் அதைத் துடைக்கிறோம். ஆனால் அடுத்தவர்களின் குழந்தை அவ்வாறு இருந்தால் நாம் துடைப்பதில்லை. என்ன இந்தக் குழந்தை இப்படி இருக்கிறது என்று கூறிக்கொள்கிறோம். அதுபோல நமது கலைஞர்களை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கலைஞர்கள் நாட்டுக்காகப் பாடுபட வேண்டும்; அப்போதுதான் அவர்கள் சிரஞ்சீவியாக இருப்பார்கள். அவர்களுக்கு முதுமை வராது. கலைஞர்கள் தமக்கு வயது அதிகம் ஆகிறது என்று நினைக்கக்கூடாது. அப்படி நினைப்பதே ஒரு பலகீனம். வயதைப் பற்றிக் கலைஞர்களே, கவலைப்படாதீர்கள் ! உங்கள் திறமை பிறருக்காகப் பயன்படவேண்டும். உணவு பற்றிக் கவலைப்பட வேண்டாம். உணர்வு பற்றிக் கவலைப்பட வேண்டும். கலைஞர்கள் ஜாதிபேதமின்றிப் பழக வேண்டும். மதபேதமின்றிப் பழக வேண்டும்.

நலிந்த கலைஞர்களின் நல்வாழ்வுக்கு விரைவில் நல்லதிட்டம் தீட்டப்படும். காலம், நேரம் பார்த்து அந்தத் திட்டம் வெளியிடப்படும். சமுதாயத்தில், குழந்தைகளுக்கு, வயது முதிர்ந்தவர்களுக்கு எல்லாம் செயல்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நாடகக் கலைஞர்களாக இருப்பவர்களில் நலிந்தவர்களாக இருப்பவர்களின் நல்வாழ்வுக்கும் திட்டம் தீட்டப்பட வேண்டும். நாடக மேடையில் இருப்பவர்களுக்கு சினிமாவில் இருப்பவர்களுக்கு நல்ல வாழ்க்கை கிடையாது. வருமானம் கிடையாது. வயதாகிவிட்டால் நடிக்கவும் முடியாது. இத்தகையவர்களுக்குப் பாதுகாப்புத் தரும் வகையில் திட்டம் ஒன்று தீட்டிக் கொண்டிருக்கிறேன்; விரைவில் வெளியிடுவேன்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(26.01.1984 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தில் கலைமாமணி விழாவில் ஆற்றிய உரை)

ஆசிரியர்கள் பிரச்சினை
என் சொந்தப் பிரச்சினை!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

என்னுடைய உடல்நலம் கொஞ்சம் சரியில்லை. அது ரொம்பப் பெரிதாக ஆகிவிடாதா என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் 2, 3 நாட்களுக்குள் எனக்கு சரியாகிவிட்டது. நாளைக் காலையில் அண்ணா நினைவாலயம் சென்று மாலை வைத்துவிட்டு வேலையைத் தொடங்கலாம் என்று நினைத்து இருந்தேன்.

அண்ணா அவர்கள் ஆசிரியர்களிடம் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தார் என்பது எனக்குத் தெரியும். அவர் கும்பிட்ட உங்களைக் கும்பிட நான் வந்திருக்கிறேன்.

முதலில் ஒன்றை உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மாதத்திற்குள்ளாக உங்கள் சங்கம் அங்கீகரிக்கப்படும். சட்டசபையில் கவர்னர் உரை படிக்கும்வரை பொறுமையாக இருங்கள். அதற்குள் நல்ல செய்தி வரும்.

உங்கள் நிலைமைகளை ஆட்சிக்கு வரும் முன் நான் தி.மு. கழகத்தில் இருக்கும் பொழுதே உணர்ந்தவன். உங்கள் பிரச்சினைகளை என் பிரச்சினைகளாக்கிக் கொண்டவன். தொழிலாளர், ஆசிரியர்கள், உழைக்கும் வர்க்கத்தினருக்கு நன்மை செய்ய நான் இந்தப் பதவியைப் பயன்படுத்துவேனே தவிர, மாற்றாருக்கு விட்டுக்கொடுத்து உங்களை நான் துன்பப்படுத்தமாட்டேன்.

ஒரு ஆசிரியருடைய தகுதி என்ன என்பதை நான் தெரிந்து கொண்டிருப்பவன். எதிர்காலச் சந்ததிகளை உருவாக்குபவர்கள் நீங்கள்.

நீங்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் இன்னொருவர் காலில் விழக்கூடாது. யாரையும் மரியாதை செய்யுங்கள் ஆனால், கவிதை எழுதத் தகுதியுள்ள நீங்கள் யாருக்கும் தலை வணங்கக்கூடாது.

தமிழ் யாருக்கும் தலை வணங்கக்கூடாது. என்காலில் கூட நீங்கள் விழக்கூடாது நாங்கள் மக்களுடைய வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்து இருக்கிறோம். வாக்குகளைப் பெறாவிட்டால் ஆட்சிக்கு வரமுடியாது. ஆனால், நீங்கள் அப்படி அல்ல. அந்த எண்ணத்தை மனத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

நீங்கள் யாருக்கும் அச்சப்படக்கூடாது. நீங்கள் சுயமரியாதையோடு தன்மானத்தோடு வாழவேண்டும். நாங்கள் ஆட்சிக்கு வந்து 4 வருடம் ஆகிறது. சில மாதத்திற்குள் தேர்தல் வரலாம், 5 ஆண்டு முடிந்தும் வரலாம். அப்போது முடிவு செய்ய

வேண்டியவர்கள் மக்கள். அதைப்பற்றிக் கவலைப்படாமல் பதவியில் இருக்கும் வரை நாங்கள் என்ன சொன்னோமோ அதை நிறைவேற்றுவோம். சாதி இரண்டொழிய வேறில்லை என்பதை நீங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுங்கள். இந்த இணைப்பு, பிணைப்பாக வேண்டும். சாதி, மதம் இதில் குறுக்கிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பள்ளிக் கல்வி இயக்குநர் ரயான் பதவிக்காலம் முடிவடைகிறது என்றாலும் இன்னும் அவருக்கு வாய்ப்புக் கொடுத்து இருக்கிறோம். புதிய திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற அவர் பணி நமக்குத் தேவையாக இருக்கிறது.

படித்தவன் பட்டினி கிடக்கக்கூடாது. வேலை இல்லாமல் திண்டாடக்கூடாது. எல்லோரும் தொழிலுக்குச் சொந்தக்காரர்களாக வேண்டும். சத்துணவுத் திட்டத்தை, மற்ற மாநிலத்தில் உள்ளவர்கள் எப்படி நடத்துகிறீர்கள் என்று கேட்கிறார்கள். நினைத்தால் தமிழக மக்களால் செய்ய முடியும். நல்ல திட்டங்களுக்கு நீங்கள் உதவியாக இருக்க வேண்டும்.

அண்ணா நாமம் வாழ்க ! நன்றி ! வணக்கம் !

05.02.1984 அன்று, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் இணைப்பு இயக்கப் பிரதிநிதிகள் மாநாட்டில் ஆற்றிய உரை)

அன்னை தெரசா பாராட்டிய சத்துணவுத் திட்டம்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

என்னைப் பற்றி இங்கே ஒரு புத்தகம் வெளியிடப்பட்டது; என்னைப் பற்றி நானே ஒரு நூலை வெளியிடவிருக்கிறேன். அது மட்டுமல்ல; ஒரு சிறு தொகுப்பை, என்னைப் பற்றித் திரைப்படமாக வெளியிடவும் இருக்கிறேன்.

வாழும்போதும் சாகும்போதும் நிம்மதியோடிருக்கவேண்டும் என்று அன்னை தெரசா அம்மையார் குறிப்பிட்டார். எந்த நல்லதைச் செய்தாலும் இங்கே குறைகாண்போர் இருக்கும்போது என்னால் அப்படியிருக்க முடியுமா என்று தெரியாது. என் வாழ்க்கை தொடக்கம் முதல் இன்றுவரை ஒரு போராட்டமாகவே இருக்கிறது.

சத்துணவுத் திட்டம் பற்றித் தெரசா அம்மையாரே பாராட்டிவிட்ட பிறகு, அதுபற்றி யார் என்ன குறைசொன்னாலும் நான் இனி கவலைப்படப் போவதில்லை.

நாட்டு மக்கள் வாட்டம் போக்குவதற்காக இங்கே பலரும் பணம் கொடுத்தார்கள். இதெல்லாம் கலைவாணர் அவர்கள் தொடங்கி வைத்த பணி; இனி அந்த நற்பணி தொடரும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு நிறைவேற்றிச் செயல்படுத்தும் சத்துணவுத் திட்டம் முதலான பல திட்டங்களை, ஒரு ஐந்தாண்டுக்குப் பின்னர் நல்லவிதமாகச் செயல்படுத்துகிறீர்கள் என்று இதே அன்னை தெரசா அம்மையார் அவர்கள் வந்து பார்த்து வாழ்த்த வேண்டும் என்பது என் ஆசை.

இங்கே சின்னஞ்சிறு குழந்தைகள் பாடிய பாடல்களைக் கேட்டு நான் பூரித்துப்போனேன். அவர்கள் பல்லாண்டு வாழ என்னைப் பெற்ற அன்னையையும் பெறாத அன்னையையும் வாழ்த்தி வணங்குகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(02.03.1984 அன்று, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற அன்னை தெரசா அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவில் ஆற்றிய உரை)

கடமையைச் செய்கின்றவர்கள் ஒன்றே குலம் என்ற கொள்கைக்குச் சொந்தக்காரர்கள்தான்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

கடமையைச் செய்கின்ற ஒவ்வொருவரும் ஒன்றே குலம் என்ற கொள்கைக்குச் சொந்தக்காரர்கள்தான். இதுபோன்ற பணிகளைச் செய்யும்போது அரசியல் கட்சி தேவைப்படுகிறது. மக்களுடைய நலன்கள் காக்கப்பட வேண்டுமென்றால் அரசியல் கட்சி தேவைதான் என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

சமூகத்திலே தாழ்த்தப்பட்ட நாட்டிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே தாழ்த்தப்பட்ட ஒதுக்கப்பட்ட அந்த மக்கள் வாழ்கின்ற 14 குடிசைப் பகுதிகளுக்கு இந்த ஊர்தி பயன்படப்போகிறது என்பதை அறிந்து மகிழ்ச்சியுறுகிறேன். எந்தக் கட்சி, எந்த மதம், எந்தச்சாதி என்று ஊர்திக்கத் தெரியாது. அதே நிலைமையில் மருத்துவர்களும் சாதி மத பேதமின்றி உழைக்கிறார்கள். இளைஞர்களும் இந்தப் பணியில் ஈடுபடுவது பாராட்டுக்குரியது.

இளைஞர்கள் அரசியலைத் தெரிந்திருக்கவேண்டும். ஆனால், அரசியல்வாதிகளாக இருக்கக் கூடாது. மருத்துவர்களுக்கும் அரசியல் தெரிந்திருக்கலாம். ஆனால், அரசியல்வாதிகளாக இருக்கக்கூடாது என்று அறிஞர் அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஆசிரியப் பணிபுரிபவர்களும் அரசியல், கட்சி, ஜாதி, மதம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும். அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவர்கள் அரசியல் உணர்ச்சியோடு இயங்கினால் அது நல்லதல்ல ; நுட்பமான கருவிகளை எப்படிப் பயன்படுத்துவது என்பதில் மருத்துவர்களின் கவனம் செய்ய வேண்டும்.

நீதித்துறையிலும் அரசியல்கட்சி வரக்கூடாது. வந்துவிட்டால் நீதி செத்துவிடும். நீதித்துறையில் அரசியல் நுழையவில்லை. அதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருமுறை அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். ‘‘பதவிக்கு வரும்போது கட்சிக்காரன். வந்தபின் மக்கள் தொண்டன்’’ என்று.

வட ஆர்க்காட்டிலே குடிநீர்த் திட்டத்திற்காக 98 இலட்சம் ரூபாய் செலவு செய்து வருகிறோம். அங்கு எங்கள் எம்.எல்.ஏ. எவரும் கிடையாது. ஆனாலும் அந்தத் திட்டம் அங்கு தேவை என்பதற்காக அதனை நிறைவேற்றுகிறோம்.

சத்துணவுத் திட்டத்திற்குக் கூட, முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் என்று போட்டது எந்த முதலமைச்சர் வந்தாலும் அவர் திட்டமாக இருக்கவேண்டும் என்பதால்தான் அந்தப் பெயர் சூட்டப்பட்டது.

முதியோர்களுக்கும் சத்துணவு தருகிறோம். உழைத்துச் சாப்பிட முடியாத ஏழை முதியோர்க்கு ஒருவேளை உணவாவது கிடைக்க, தொல்லை இல்லாமல் உணவு கிடைக்க அவர்களுக்குச் சத்துணவு அளிக்கிறோம். ஏழை, எளிய முதியோர்களுக்கும் நிலமற்ற ஏழைவிவசாயிகள், உழைப்பாளர்கள் ஆகியோருக்கும் இலவச வேட்டிசேலை கொடுத்து வருகிறோம்.

பெரிய பணக்காரர்கள் வசதியுள்ளவர்கள் எல்லோரும் ஏழை மக்களுக்கு உதவ முன்வரவேண்டும் மாற்றுச் சேலை கட்டுவதற்கு வசதியில்லை என்கின்ற குடும்பத்தினருக்கு சேலைகள் வாங்கிக் கொடுக்கலாம். ஒரு குடும்பத்திற்கு சேலை வேட்டி எல்லாம் வாங்கித் தந்தால்கூட 300 ரூபாய்க்கு மேல் செலவாகாது. பணம் சேர்த்துவிட்டால் மட்டும் போதாது. அது யாருக்குப் பயன்படவேண்டும் என்று திட்டமிடுவது ஒரு கலையாகும். தருமம் செய்வோர் எண்ணிக்கை பெருக வேண்டும்.

ஆதிதிராவிட மக்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள வீட்டை இலவசமாகக் கட்டித்தருவதற்கு அரசு உத்தரவு போட்டுள்ளது.

இந்த மருத்துவமனையை டாக்டர் சேதுமாதவன் தனியொரு மனிதராக இருந்து கல்லூரி மாணவர்கள் இளைஞர்கள் ஆகியோரின் உதவியுடன் திறம்பட வளர்த்து வருகிறார் அவருக்கு நன்றி!

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(31.03.1984 அன்று, சென்னை சைதாப்பேட்டையில் நடைபெற்ற அரசு மருத்துவமனையின் 'பிரிமேஷன் ஹால்' அறக்கட்டளையினர் ஊர்தி (வேன்) ஒன்றினை வழங்கிய விழாவில் ஆற்றிய உரை)

திட்டங்கள் கிராமத்திலிருந்து நகரங்களுக்குச் செல்ல வேண்டும்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

இந்தத் தொகுதியில் ரூ.10 கோடிக்கு மேல் அரசு மூலம் செலவு செய்யப்பட்டதாக தொகுதி உறுப்பினர் குறிப்பிட்டார். தமிழகத்தில் பின்தங்கிய ஓரளவு முன்னேறிய மாவட்டங்களில் எல்லாம் மக்களின் தேவையை உணர்ந்து எப்படி எப்படித் திட்டம் தீட்டிச் செயல்பட வேண்டும் என்று நினைத்தேனோ அப்படியெல்லாம் திட்டங்கள் தீட்டிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

இந்தப் பாலத்திட்டத்தினை இரண்டு ஆண்டுகளில் முடித்துத் தருவதாக அதிகாரி கூறினார். இரண்டு ஆண்டுகளில் இந்தப் பாலம் ஊர் மக்களுக்குப் பயன்படும் என்று கூறிக் கொள்கின்றேன்.

அண்ணாவின் கொள்கையை நிறைவேற்றவில்லை என்று சொல்பவர்கட்குச் சொல்லுகிறேன். திட்டங்கள் கிராமத்திலிருந்து நகரங்களுக்குச் செல்ல வேண்டும். நகரத்திலிருந்து கிராமங்களுக்குத் திட்டங்கள் போகக் கூடாது என்று அண்ணா சொன்னார். முன்பிருந்தவர்கள் நகரங்களுக்கு அதிக அளவில் செலவு செய்தார்கள்.

முந்தைய அரசு நகரங்களுக்கு ஏறத்தாழ ரூ.34 கோடியும் கிராமங்களுக்கு ரூ.13 கோடியும் செலவிட்டது. ஆனால் இந்த அரசு நகரங்களுக்கு ஏறத்தாழ ரூ.16 கோடியும் கிராம மக்களுக்கு ரூ.60 கோடியும் செலவிட்டது. இந்த அரசுதான் கிராம மக்களுக்கு அதிக அளவில் உதவி செய்கின்றது. நாங்கள் செய்கிற திட்டங்களில் தவறு இருந்தால் சுட்டிக் காட்டுங்கள். திட்டங்கள் செய்வதே இல்லையென்று மட்டும் சொல்லாதீர்கள்.

பச்சையாறுத் திட்டப்பகுதியில் ஆழப்படுத்தும் பணி முதலில் நடைபெற்ற பிறகு அணைகட்டப்படும். அணை கட்டும் பணி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துச் செயல்படுத்தப்படும்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(28.04.1984 அன்று, திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்ற தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலத்தின் அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரை)

தமிழறிஞர்களைத் தமிழக அரசு மறக்காது!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

தமிழ்கூறும் நல்லுலகத்துக்குப் பெருமை சேர்க்கும் முப்பெரும் விழா இது. இந்த முப்பெரும் விழாவில் ஒன்றுக்கொன்று தொடர்பு இருக்கிறது. சிலை வைப்பது, மண்டபம் ஏற்படுத்துவது அரசின் கொள்கையானாலும், அதை யார் விமர்சனம் செய்தாலும் தமிழ் அறிஞர்கட்கு இதுபோன்ற விழாக்களைச் செய்ய வேண்டிய கடமையாக அதைக் கருதுகின்றேன். எனக்குக் கடவுள் நம்பிக்கை உண்டு, ஒரே ஒரு கடவுள்தான். அந்தக் கடவுள்தான் என்தாய். என்னை மனிதனாக வளர்த்தது அண்ணா என்ற கடவுள்.

தமிழைப் பற்றிச் சந்தேகம் வந்தால், அதற்குத் தெளிவான பதில் தேட தொல்காப்பியத்தைப் பார்க்கிறோம். தமிழுக்கு அடிப்படை ஆதாரங்கள் தந்தது தொல்காப்பியம்தான். தொல்காப்பியம் பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

செய்குதம்பி பாவலரைப் பற்றி என் மனத்தில் பதிய வைத்தவர் கலைவாணர்தான். கலைவாணர் தமிழுக்குத் தொண்டு புரிந்தார். எல்லோருக்கும் உரிய நேரத்தில் மரியாதை கொடுத்தார்.

நினைவு ஆற்றல் மிகுந்தவர் செய்குதம்பி பாவலர். எனவே தான் அவர் சதாவதானியாகத் திகழ முடிந்தது. செய்குதம்பி பாவலரைப் பற்றி இக்கால இளைஞர்கட்குத் தெரியாது. அவர் செய்த சாதனைகளையெல்லாம் மக்களுக்குத் தெரிவிக்க அரசு விரும்புகிறது. இங்கு கட்டப்படும் மண்டபத்தில் பாவலரின் நூல்கள் தயாரிக்கப்பட்டு நூலகம் போன்று அமைக்கப்படும்.

1934இல் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் தான் எனக்கு ஜீவாவை அறிமுகப்படுத்தினார். ஜீவாவை முதன் முதலில் பார்த்த போது குஸ்தி வீரனைப் போன்று காணப்பட்டார். அப்போது அவருக்கு வயது 21 . காங்கிரஸ் காரனாக நான் இருந்தேன். நான் முதன் முதலில் கேட்ட அரசியல் கூட்டம், பெரம்பூரில் நடந்த ஜீவா பொதுக்கூட்டம் தான்.

தமிழுக்காகச் சேவை செய்த தமிழ் அறிஞர்களை இந்த அரசு மறக்காது. வெளிநாட்டினரும் தமிழுக்குத் தொண்டு செய்தால் அவர்களையும் இந்த அரசு மதிக்கும்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(29.04.1984 அன்று, நாகர்கோவிலில் அதங்கோட்டாசான் சிலை, அமரர் ஜீவா சிலை திறப்பு விழா, சதாவதானி செய்குதம்பி பாவலர் நினைவு மண்டபம் அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரை)

சிறப்புக்குரிய தமிழகக் காவல்துறை !

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

பல காரணங்களால் பல பிரிவுகளுக்குத் தங்களைச் சொந்தக்காரர்கள் ஆக்கிக்கொண்டு பணியாற்றி வருகிறார்கள், காவல்துறையினர். அவர்கள் அத்தனை பேருக்கும் நான் அறிவுரை கூறுவதைவிட, சில யோசனைகளை அவர்கள் முன் வைப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நல்லவன் என்று பேர் எடுப்பது மிகவும் சிரமமானகாரியம். இவரைவிட அவர் நல்லவர் என்று பேர் பெற்றுவிட்டால் மட்டும் போதாது. இவர்தான் நல்லவர் என்று சொல்லத்தக்க விதம் வேண்டும். அதுபோல் இவர்கள்தான் நல்லவர்கள் என்ற முறையில் தமிழகக் காவல்துறையினர் மேன்மேலும் நாம் பெருமைப்படத்தக்க வகையில் பேர் எடுக்க வேண்டும் என்பதுதான் எனது பேராசை.

தமிழகக் காவல்துறை அனைத்திந்தியாவிற்கும் பெருமை சேர்ப்பது மட்டுமல்ல உலகத்தில் உள்ள நாடுகளின் காவல் துறையினரும் மக்களும் தங்களுக்கு ஏதாவது பிரச்சினை என்றால், அதைத் தீர்ப்பதற்கு தமிழ்நாட்டுக் காவல் துறையினரின் நடவடிக்கைகளைப் பார்த்து அறிந்து கொள்ளமுடியும் என்ற நிலை வரவேண்டும், இதுதான் எனது பேராசை. இது பேராசை என்றாலும் இது நடக்கும் என்று நம்புகிறேன்.

“முகமூடித் திருடர்களை விரைவில் பிடித்து விடுவோம். அந்தச் சாதனைக்குரிய விருதை அடுத்த ஆண்டு இதே திடலில் நிச்சயமாகப் பெறுவோம்” என்று டி.ஜி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்பொழுதே இதற்காகக் காவல் துறையினருக்கு விருது கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

முகமூடித் திருடர்கள் எங்கிருந்து வருகிறார்கள் என்று தெரியவில்லை என்று சொல்லப்படுகிறது. அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்துதான் வருகிறார்கள். பொதுமக்களை நான் வேண்டிக் கொள்கிறேன். சந்தேகத்துக்குரியவர்களைப் பார்த்தால் தயவுசெய்து காவல்துறையினருக்குத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் சமூகவிரோதிகள் பெருகமாட்டார்கள்.

குற்றம் செய்பவர்கள் தப்பித்துச் செல்ல முடியாதபடி, கயவர்கள் தப்பித்துச் செல்ல முடியாதபடி, அவர்களை விமானத்தில் சென்று தாக்கிப் பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அதற்குரிய விமானங்களை வாங்க வேண்டும் என்பதற்குரிய அனுமதியை உள்துறை அமைச்சரிடம் கேட்டிருக்கிறோம்.

காவல்துறையினரும் மனிதர்கள்தான். நாட்டுமக்களின் நல்வாழ்வுதான் முக்கியம் என்று கருதி அவர்கள் செயல்பட்டு வருவது நமது உள்ளத்தை உருக்குவதாக இருக்கிறது. அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல்துறையினர் எப்போதும் துப்பாக்கியுடன் செல்ல வேண்டும். எங்கிருந்தாலும் தொடர்பு கொண்டு பேசும் வகையில் வயர்லஸ் அவர்களிடம் இருக்க வேண்டும் என்று நான் சொல்லியிருக்கிறேன்.

இவற்றின் மூலம் நல்ல பயிற்சி பெற்று உடல்நலத்தைப் பேணி காவலர்கள் தயாராக இருப்பார்களானால், தீயவர்கள் தப்பித்துச் செல்ல முடியாது. காவலர்களுக்கும் ஆபத்து வராது.

தூற்றுபவர்கள் தூற்றட்டும் என்ற முறையில் பாராட்டுகளையும் இகழ்ச்சிகளையும் புகழ்ச்சிகளையும் எதிர்பார்க்காமல் காவல் துறையினர் பணியாற்றுகிறார்கள். தன்னலம் கருதாது சேவை செய்ய வேண்டும். அமைதிக்குப் பயன்படும் காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதும் காவலரின் பொறுப்புகள் ஆகும் என்பதை அழுத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1977இல் நான் பதவி ஏற்றபோது எத்தனை போராட்டங்கள்? எத்தனை முறை நடத்தப்பட்டன என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். இனிமேல் அப்படியெல்லாம் செய்தால் காவலர்கள் தடுத்து நிறுத்துவர் என்பது மட்டுமல்ல, பொதுமக்களும் கூர்ந்து கவனிக்கிறார்கள். போராட்டங்களை அவர்கள் பொருட்படுத்தமாட்டார்கள்

மற்ற பணியாளர்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்தித் தருவது போல, காவல்துறையினருக்கும் வீட்டுவசதி செய்து தர வேண்டும். அவர்கள் ஓய்வு பெறும்போது சொந்தமாக ஒரு வீடு கட்டிக் கொள்ளவேண்டும்.

காவலர்களும் குடும்பத்திலிருந்துதான் வருகிறார்கள். ஆகவே, காவல்துறையினர் மட்டும் விதிவிலக்கல்ல. காவல்துறையினர் நம்பிக்கையோடு வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பதுதான் இந்த அரசின் ஆசை. காவல் துறையினரின் நாணயம், நேர்மை, தியாகம் ஆகியவற்றில்தான் தமிழக மக்களின் எதிர்காலம் உன்னதமாக இருக்கும்.

இந்தியத் துணைக் கண்டத்தில் ஏதாவது ஒரு நிகழ்ச்சி ஏற்படுமானால் தமிழகக் காவல்துறை படையை அனுப்பு என்றால், அப்படி அனுப்புகிற அளவுக்குப் பெருமையானவர்கள் நம்மிடம் இருக்கிறார்கள்.

சென்னை காவல்துறையினர் பல்வேறு விழாக்காலங்களிலும் மிகுந்த பொறுப்புடன் நிருவாகம் செய்தனர். சிறு அசம்பாவிதம் கூட நேராமல் பார்த்துக்கொண்டனர். மாவட்டங்களிலும் காவல்துறையினர் பொறுப்புடன் கடமையாற்றி வருகிறார்கள். அதன் காரணமாக அமைதி நிலவுகிறது.

காவலர்களே! நீங்கள் வாழுங்கள்! நாட்டை வாழ வையுங்கள்!

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(01.05.1984 அன்று, சென்னை இராஜ ரத்தினம் ஸ்டேடியத்தில் நடைபெற்ற முதலமைச்சர் பதக்கம் வழங்கும் விழா மற்றும் சேமப் படைக் காவலர் குடியிருப்பு திறப்பு விழா ஆகியவற்றில் ஆற்றிய உரை)

தமிழினத்தின் அற்புத முத்து!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

சில நாட்களுக்கு முன் முத்தையா செட்டியார் எனக்கு டெலிபோன் செய்தார். “என்ன ? என்று கேட்டேன்” இந்தி மறுபடியும் வரப்போகிறது தயாராக இருங்கள் என்றார். அவருக்கு என்ன தேவை உடல் நிலை இடங்கொடாது என்றிருந்தாலும் தமிழ்மீது அளவிட முடியாத பற்றுக் கொண்டிருந்தார். 27 வயதில் சென்னை மாநகராட்சியில் முதல் மேயரானார்; அவரது பணிக்காக மாநகராட்சி வளாகத்தில் சிலை வைக்கப்படும்.

அவருடைய டிரஸ்ட்டை அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சிலர் சொன்னார்கள். நான் முதலமைச்சராக இருக்கும் வரை அதைச் செய்யமாட்டேன் என்று கூறினேன். இப்படிப்பட்டவர்கள் பற்றி புத்தகம் எழுத வேண்டும். பிற்பட்ட சமூகத்திற்கு இடம் ஒதுக்கி இருக்கிறோம். பிற்பட்ட சமூகத்தில் தகப்பன் என்ஜீனீயர் மகன் டாக்டர், பேரன் வழக்கறிஞர், வசதிமிக்கவர்கள் தான் பெறுகிறார்கள். இன்னொரு பிற்பட்ட சமூகத்தில் தந்தை வண்டி இழுக்கிறான், அவனுடைய மகனும் வண்டி இழுக்கும் நிலையில் இருக்கிறான். இத்தகைய நிலையை முத்தையா செட்டியார் ஏற்றுக்கொள்ளவில்லை. வசதியில்லாத பிற்பட்டவர்களுக்குக் கல்வி அறிவு கிடைக்க வழி செய்ய வேண்டும் என்ற கருத்தை முத்தையா செட்டியார் கொண்டிருந்தார்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(16.06.1984 அன்று, சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற மறைந்த தமிழிசைக் காவலர் டாக்டர் இராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களின் இரங்கல் கூட்டத்தில் ஆற்றிய உரை)

மக்கள் கூட்டமும், அறிஞர் ஆதரவும், இளைஞர் எழுச்சியும் ஒன்றுபட்டால் வெற்றி காணமுடியும்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

ஆட்சிப் பொறுப்பிலிருந்தாலும் சரி, கட்சித் தலைமையை ஏற்றிருந்தாலும் சரி எந்த ஒரு மனிதனும் தனிப்பட்ட வகையில் நிருவாகம் பண்ணிவிட முடியாது. மக்கள் கூட்டம், அறிஞர் ஆதரவு, இளைஞர் எழுச்சி அத்தனையும் ஒன்றுபட்டால்தான் நாம் வெற்றி காண முடியும். பெருந்தலைவர் காமராசர் வெற்றி அந்த வகையிலேதான் அமைந்தது.

மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னால், இராமநாதபுரம் மாவட்டப் பிரதிநிதிகள் என்னை வந்து பார்த்து இந்த மாவட்டம் பிரிக்கப்பட வேண்டியது பற்றி வலியுறுத்தினார்கள் பொறுமையாக இருங்கள் என்றேன். இப்போது பிரிக்கப்பட்டிருக்கிறது.

ஒருவர் இருக்கும்போது கருத்துக் கூறுவது வேறு, அவர் மறைந்த பிறகு அவரைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பது வேறு. பெருந்தலைவர் காமராசர் மீது நான் பெருமதிப்பு வைத்திருந்தேன். அவரும் என்னிடம் அன்பு காட்டினார். அவரைப்பற்றி நான் எப்போதாவது தவறாகப் பேசியிருந்தால், இங்கே மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

காமராசர் பெயரால் புது மாவட்டம் கண்டதற்காக இங்கே எல்லோரும் என்னைப் பாராட்டினார்கள். பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும் என்பதைப் போன்றதே அது என்பதை உணர்கிறேன்.

ஏழைகள் படிக்க வேண்டும் முன்னேற வேண்டும் என்றெல்லாம் கருதியவர் காமராசர் அதனாலேயே அவர் பிறந்த இந்த நல்ல நாளில் மாணவர் தனிபயிற்சித் திட்டத்தைத் தொடங்கி வைத்தேன். தேர்வில் தோல்வி கண்ட மாணவர்கள் டுடோரியல் கல்லூரி சென்றால் அங்கே ஏராளமாகப் பணம் வாங்கப்படுகிறது. அதனால், அப்படிப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பு ஏழை மாணவர்கள் இந்த மையத்தில் மீண்டும் படித்துத் தேர்ச்சி பெறலாம். இப்படி ஆயிரம் மையங்கள் திறக்கப்படும். ஒவ்வொரு மையத்திற்கும் ரூ.4,500 செலவிடப்படும்.

காமராசர் இன்றிருந்தால் இத்திட்டத்தை வரவேற்று ஆனந்தக் கண்ணீர்வடிப்பார் என்று இங்கே தெரிவித்தார்கள். இதுவே எனக்குப் போதுமானது. இன்று புதிதாக மலரும் காமராசர் மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகள் மிகவேகமாக நடைபெறவிருக்கின்றன.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(15.07.1984 அன்று, காமராஜர் மாவட்ட அமைப்பு பணிகளின் தொடக்க விழாவில் ஆற்றிய உரை)

மக்களுக்கு நன்மை அளிக்கும் பல திட்டங்கள் நிறைவேறும்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

இராமநாதபுர மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்படவேண்டும் என்ற எண்ணம் எங்கே தோன்றியது என்பதைக் குறிப்பிட வேண்டியது எனது கடமை.

முத்துராமலிங்கத் தேவர் பெயரில் மாவட்டம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தபோதுதான், மாவட்டத்தை 3 ஆகப் பிரிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

பிரச்சினை பூதாகரமாக எழுந்தபோது முன்பு ஆட்சியில் இருந்தவர்களால் இதைச் சந்திக்க முடியவில்லை. பிரித்தால் என்ன நேருமோ வாக்குகள் கிடைக்காது போய்விடுமோ என்ற கருத்தால் தான் இத்தனை காலதாமதமாகியது என்பதைக் குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன்.

நண்பர் ராமசாமி ஒரு குழுவினரை அழைத்து வந்தார். அவர்களில் ஆதிதிராவிடர்கள் இருந்தனர். முக்குலத்தோர் இருந்தனர். முஸ்லீம் சமுதாயத்தினர் இருந்தனர். அவர்களிடம் நான் கலந்துரையாடினேன். சற்றுப் பொறுத்துக் கொள்ளும் படி கேட்டுக் கொண்டேன். இதை, நிருவாக வசதியை மனத்தில் கொண்டு மூன்று பகுதியாகப் பிரிக்க வேண்டும் என்ற கருத்து எனக்குத் தோன்றியது. என்றாலும் அந்த முடிவை மேற்கொள்ளப் பல மாதங்கள் தேவைப்பட்டன.

ஆதிதிராவிட சமுதாயத்தவர் கோரிக்கையை எழுப்பினர். ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த தில்லையாடி வள்ளியம்மை பெயரால் ஒரு மாவட்டம் அமைய இருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறு எந்த மாநிலத்திலும் உண்டோ இல்லையோ, இங்கே ஆதிதிராவிட இனப் பெண்மணியின் பெயரால் மாவட்டம் அமையப்போகிறது.

மாவட்டப் பிரிவினைகள் நிருவாக வசதிகளை முன்னிட்டு ஏற்படுகின்றன என்றாலும் மாவட்டம் வளர்ந்தாக வேண்டும். கல்வி, தொழில் ஆகியவை சிறந்தோங்க வேண்டும் என்ற அடிப்படையிலும் தான் உருவாக்கப்படுகின்றன.

மாவட்டப் பிரிவினை ஒரு ஜாதிக்காக அல்ல, ஒரு கட்சியினருக்காக அல்ல, ஒரு இனத்தவருக்காக அல்ல, மக்களுக்காக எத்தனை ஆண்டுக் கனவு இப்போது நிறைவேறுகிறது.

முன்பு தன்னிறைவுத் திட்டம் துவக்கிச் சில காரியங்களை நாங்கள் ஆற்றி வந்தோம். சில காலத்திற்குள் வெளியேற்றப்பட்டோம். மறுபடி தேர்ந்தெடுக்கப்பட்டு பணிகளை ஆற்றி வருகிறோம். அதிகாரிகளும் எங்களுக்கு நல்ல வகையில் மனப்பூர்வமாக ஒத்துழைப்புத் தந்து வருகிறார்கள். அதன் காரணமாக சுலபமாகப் பணி செய்ய முடிகிறது. எந்தத் திட்டம் மக்களுக்கு நன்மை அளிக்குமோ அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற நாங்கள் முற்பட்டு வருகிறோம்.

சேது சமுத்திரத் திட்டம் குறித்து இங்கே சொல்லப்பட்டது. அது விரைவில் நிறைவேறும் என்று நம்புகிறேன். துணை ஜனாதிபதியாக தமிழகத்தைச் சேர்ந்தவர் வர வேண்டும் என்று சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் குறிப்பிட்டார்கள். காலம் கனிந்து வரும் சூழ்நிலை உள்ளது. இது குறித்து நாளையே இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதுகிறேன். அவர் இது குறித்துச் சிந்திப்பார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

மாவட்ட அமைப்புகளுக்காக விழாக்கள் நடத்தப்படுவது மக்களுக்குப் பல உண்மைகள் உணர்த்தப்பட வேண்டும் என்பதற்காகத்தான். மாவட்டத்தை சிறந்த மாவட்டமாக மாற்ற இளைஞர்கள் உதவி செய்ய வேண்டும்.

தமிழகம் கேரளத்தைப் போல் படித்தவர்கள் அதிகம் உள்ள மாநிலமாக உருவாகும் நிலை ஏற்பட வேண்டும். அதற்கு என்னால் முடிந்ததை எல்லாம் செய்வேன் – உங்கள் ஆதரவு இருக்குமானால்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(16.07.1984 அன்று, இராமநாதபுர மாவட்டத் தொடக்க விழாவில் ஆற்றிய உரை)

பதவி வரும்போது பணிவு வர வேண்டும்!

இப்படிப்பட்ட விழாக்களில் எல்லாக் கட்சிக்காரர்களும் பங்கேற்க வேண்டும்.

காரைக்குடி அழகப்பா கல்லூரியைப் பல்கலைக் கழகம் ஆக்க வேண்டும் என்று கூறினார்கள். அண்ணா பிறந்தநாளில் இருந்து, டாக்டர் அழகப்பா பல்கலைக் கழகம் துவக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

விழா நடைபெறுகிற 250 ஏக்கர் கொண்ட இந்த இடம் மருதுபாண்டியர் நகர் என்று அழைக்கப்படும். இங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம், நீதிமன்றம் போன்றவைகள் உருவாக்கப்படும்.

புதிதாக அமைகிற இந்த மாவட்டத்தின் எல்லையில் எதிர்காலச் சந்ததியினர் அறிந்து கொள்ளுவதற்காக பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருவருவச்சிலை வைக்கப்படும். அதனருகே ‘மார்பிள்’ கல்லில் அவரது வரலாற்றுக் குறிப்புகள் பொறிக்கப்படும். இதேபோல், இராமநாதபுரம் மாவட்டத்தின் எல்லையில் சேதுபதி சிலைவைத்து வரலாறு குறிக்கப்படும். காமராசர் மாவட்ட எல்லையில் அவரது சிலை வைத்து வரலாறு எழுதப்படும். ஒன்றே செய்க; ஒன்றும் நன்றே செய்க; நன்றும் இன்றே செய்க என்பார்கள். அந்த வகையிலேயே இந்தப் புதிய மாவட்டங்கள் மலர்கின்றன. ‘பதவி வரும்போது பணிவு வர வேண்டும்’ என்றொரு பாடலுக்கு நான் வாயசைத்திருக்கிறேன்.... அந்த வகையிலேயே என் நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டிருக்கிறேன். குழந்தைகள் படிப்பிலே கவனம் செலுத்தும் எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது; அது நாட்டுக்கு நல்ல தல்ல.”

அண்ணா நாமம் வாழ்க!

(17.07.1984 அன்று, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தின் அமைப்பு பணிகளின் தொடக்க விழாவில் ஆற்றிய உரை)



பெண்களுக்குள்ள உரிமை ஆண்களுக்கும் வேண்டுமென்று வாதிடும் நிலை வரும்!

ஆண்டிபட்டியைத் தாய்ப் பாசத்தோடு கவனித்துவரும் மாவட்ட ஆட்சித் தலைவரை நான் பாராட்டுகிறேன். சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு அடுத்த ஆண்டு முதல் இலவசச் சீருடை வழங்கப்படும். 1937 முதல் அரசியலில் இருக்கும் என்னைத் தவறாக விமர்சிப்பவர்கள் ஏமாந்துபோவார்கள். இராமநாதபுரம் புதுக்கோட்டை மக்களுக்கு குடிநீர்வசதி செய்யக் கேரளாவிடம் தண்ணீர் கேட்டுப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இதற்கு ஆயிரம் கோடி ரூபாய் வரை செலவாகலாம். தண்ணீருக்குப் பதில் அரிசி தருவது குறித்தும் பேசிவருகிறோம். படித்த இளைஞர்கள் ஒன்று கூடி ஒரு குழுவாக சாலைபோடுவது போன்ற பணிகளை எடுத்து நடத்த முன்வந்தால் அவர்களுக்கு அரசு உதவத் தயாராக இருக்கிறது. இப்போதெல்லாம் பெண்கள் நன்றாகப் படித்து வருகிறார்கள்; பத்தாண்டுகளில் ஆண்களெல்லாம் கூடி, பெண்களுக்குள்ள உரிமை எங்களுக்கும் வேண்டும் என்று வாதாடும் நிலைமை வந்து விடும்போலிருக்கிறது. எனவே, எல்லோரும் நன்றாகப் படிக்க வேண்டும்''.

அண்ணா நாமம் வாழ்க!

(18.07.1984 அன்று, ஆண்டிப்பட்டியில் நடைபெற்ற கடமலைகுண்டு–வெள்ளிமலை நீளச்சாலை அமைக்கும் பணியைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை)

தொலைநோக்கோடு வருங்காலத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்!

இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். நாங்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்கும் விழாவாக இது இருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். இந்தக் குடிநீர்த் திட்ட நிகழ்ச்சியைத் தடுக்கச் சிலர் முயற்சித்தனர். நிகழ்ச்சி இன்று நடைபெறுமா என்ற நிலை இருந்தது.

குடிக்கத் தண்ணீர் கொடுப்பதைக் கூடவா தடுக்க முயற்சிப்பது? அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபட்டார்கள். முந்தைய ஆட்சியில் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட குடிநீர்த் தொட்டிகள் 1,406 தான். ஆனால், 1977ஆம் ஆண்டு வாக்கில் ஆட்சிக்கு வந்த பிறகு நாங்கள் அமைத்தது 5,037 குடிநீர்த் தொட்டிகள். வட ஆர்க்காடு மாவட்டத்தில் மட்டும் முந்தைய ஆட்சியினர் அமைத்த குடிநீர்த் திட்டப்பணிகள் 66 மட்டும்தான். ஆனால், எங்களது ஆட்சியில் அமைக்கப்பட்டது 249. இப்படி குடிநீர்த் திட்டப்பணிகளை அமைத்த எங்களைப் பார்த்து ஒன்றுமே செய்யவில்லை என்கிறார்கள்.

நீண்ட தொலைநோக்கோடு வருங்கால நிலைமையை எண்ணிப் பார்த்துத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். வயது வந்த ஒவ்வொருவரும் தொழிற்கல்வியைக் கற்றாக வேண்டும். அந்த வகையில்தான் தொழில் கல்வித் திட்டத்தைக் கொண்டு வருகிறோம். அடுத்த ஆண்டு சட்டமன்றத்தில் ஏப்ரல் முதல் தொழிற்கல்வித் திட்டம் குழந்தைகளுக்கு (4 வயது, 5 வயது) விளையாட்டுப்போல சொல்லித்தரத் திட்டம் கொண்டு வரப்படும். அண்மையில் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் தொழில் கல்வி பற்றி விளக்கிப் பேசினேன். பிரதமர் இந்திரா காந்தியும் இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார். மற்ற மாநிலங்களும் பரிசீலிக்க வேண்டும் என்று பிரதமர் கேட்டுக் கொண்டார். தொழிற்கல்வி பயின்றால்தான் நாடு முன்னேறும்.

சத்துணவுத் திட்டம் செப்டம்பர் 15இல் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் முதல் 15 வயது வரை படிக்கும் மாணவர்களுக்கும் விரிவாக்கப்படும். இதன் மூலம் 30 ஆயிரம் பேருக்குப் புதிதாக வேலைவாய்ப்பு கிடைக்கும். கூடுதலாக அரசுக்கு ரூ.40 கோடி செலவாகும். நான் உயிரோடு இருக்கும்வரை இத்திட்டத்தை நிறைவேற்றிய தீருவேன்.

இன்று நிறைவேற்றப்படும் திட்டத்தில் 38 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கிறோம் என்றால் இன்றைய பிரச்சினைகளை மட்டும்

சமாளிப்பதற்கு அல்ல. குறைந்தது 15 அல்லது 20 ஆண்டுகளுக்குப் பிறகு உள்ள நிலைமையை யோசித்துத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

ஊட்டி ஏரியில் தண்ணீர் இருந்தும் ஊட்டி நகரில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. அதற்குக் காரணம் அங்கு போடப்பட்டுள்ள தண்ணீர்க் குழாய்கள் சிறியவை. 50 ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்டவை. அதில் வரும் தண்ணீர் போதுமானதாக இல்லை. இந்தக் குறையைப் போக்க இந்த அரசுதான் நடவடிக்கை எடுத்தது.

கர்நாடக மாநிலத்தில் ஏழைகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்படுகின்றது. அதேபோல் தமிழ்நாட்டில் உள்ள ஏழை விவசாயிகட்கு மின்சாரம் வழங்கத் தீவிரமாக ஆலோசித்து வருகிறோம். செப்டம்பர் 15 இல் அண்ணா பிறந்த நாள் அன்று அதற்கான அறிவிப்பை வெளியிடுவோம்.

தமிழ்நாட்டில் பிளஸ் 2 தேர்வில் பெண்கள் அதிகமாகத் தேறியிருக்கிறார்கள். இந்த நிலை நீடித்தால் தற்பொழுது பெண்களுக்குச் சம உரிமை வேண்டும் என்று பேசப்படுவது மாறி, ஆண்கள் சம உரிமைக்காகப் போராட வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். நான் என்றும் தாய்மார்களுக்கு ஆதரவாகப் பேசுபவன், இன்று இளைஞர்கட்காகப் பேச வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

முதியோர்கட்கு உதவித்தொகையும், வேட்டி, சேலையும் வழங்கப்பட்டு வருகின்றன. அப்படி உங்கள் ஊரில் யாருக்காகவது வழங்கவில்லையென்றால் ஆட்சித்தலைவரிடம் மனுக் கொடுத்து அரசுக்கு அனுப்புங்கள். நடவடிக்கை எடுக்கப்பட்டு உதவி வழங்கப்படும்.

இன்று அடிக்கல் நாட்டப்படும் குடிதண்ணீர் திட்டம் இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். அதை ஒன்றரை ஆண்டுகளுக்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டும் எனக் குடிநீர் வடிகால் வாரியத் தலைவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

(27.07.1984 அன்று, வட ஆர்க்காடு மாவட்டம் வந்தவாசி கூட்டுக் குடிநீர் திட்ட அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரை)

தொலைக்காட்சியில் மாநில மொழிகளைப் பயன்படுத்தி ஒலிபரப்புச் செய்க !

வேலூர் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் எனப் பெயர் வைத்து இதைத் தொடங்கிவைக்கும் பணி இன்று நடைபெறுகிறது. இந்தப் பகுதி மக்களுக்கு நம் மாநிலச் செய்திகளுடன் வெளி மாநில வெளிநாட்டுச் செய்திகளை எடுத்துச் சொல்லவும், வெளி மாநில மற்றும் வெளிநாட்டுக்கலை, அரசியல், பண்பாடு இவைகளைக் குக்கிராமத்திற்கு எடுத்துச் சொல்கிற வகையில் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்க வைத்துள்ள மைய அமைச்சருக்கு அமைச்சரவை சார்பிலும் தமிழக மக்கள் சார்பிலும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு செய்தி மக்களிடம் பரவினால் என்ன ஆகும் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். நல்ல செய்திகள் விரைவாகச் செல்வதில்லை. தவறான செய்திகள் விரைவாகப் பரவி விடுகின்றன. தவறான செய்திகளைத் தடுத்து நிறுத்தவும், உண்மைச் செய்திகளை மக்களுக்குத் தெரியப்படுத்தவும் வேண்டும். தங்கள் வாழ்வைப் பற்றி மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

நாட்டு நடப்பு, எதிர்கால முன்னேற்றத்துக்கான வழி ஆகியவற்றை வானொலி மூலம் கேட்க முடிகிறது. ஆனால் நேரடியாக பார்த்துத் தெரிந்து கொள்வது தொலைக்காட்சி மூலம் தான். வெளியிலுள்ள மக்கள் நிகழ்ச்சிகளைப் பார்த்து அதைப்பயன்படுத்தி அதன் மூலம் தங்களை எப்படி உயர்த்திக்கொள்ளலாம் என்பதற்கு உதவும் சக்திமிகு சாதனமாகத் தொலைக்காட்சி உள்ளது.

தென்மாநிலங்களுக்கு 27 அஞ்சல் நிலையங்களை ஒதுக்கி அதில் தமிழகத்திற்கு 6 தொலைக்காட்சி அஞ்சல் நிலையத்திற்கும், கொடைக்கானலில் அமையும் சக்தி வாய்ந்த நிலையத்திற்கும் அனுமதி அளித்த மைய அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தேசிய வளர்ச்சிக் கவுன்சிலில் பேசும்பொழுது நான் கூறிய கருத்தை இங்கு மீண்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த மாநிலத்தில் செய்திகள் ஒலிபரப்பப்பட்டாலும் அந்த மாநில மக்களுக்குத் தெரியும் வகையில் அவர்கள் பேசும்மொழியில் ஒளிபரப்ப வேண்டும். உண்மையை மக்களுக்கு எடுத்துக் கூறுவதாகவும், வரதட்சணைக் கொடுமை, வர்க்கபேதம், சாதி, மதபேதம் இவைகளைத் தகர்த்தெறியும் கருத்துக்களைக்கொண்ட நாடகம், பேச்சு இவைகளை அந்தந்த மாநில மொழிகளில் வெளியிட்டால் சாதாரண மக்கள் அறிந்துகொள்ள முடியும்.

மக்கள் அறியமுடியாத மொழியில் வெளியிட்டால் நிகழ்ச்சிகளினால் பலனிருக்காது. மக்கள் கருத்தாக இதைச் சொல்லுகிறேன். இதை வற்புறுத்திச் சொல்லவும் அழுத்தமாகச் சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

காலையில் இசையுடன் கூடிய உடற்பயிற்சி பற்றிப் பாடம் தந்தால் குழந்தைகள் அதைக்கற்று ஒழுங்காக வளர முடியும். கல்வியைச் சொல்ல இதைவிடச் சிறந்த சாதனம் இருக்க முடியாது. குழந்தைகள் சிறந்த முறையில் வளர இது போன்ற முறையில் சொல்லித் தருவது எதிர்காலச் சந்ததிக்கு நாம் செய்யும் கடமையாகும். அதன் மூலம் மக்களை மேன்மைப்படுத்தி ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கொள்கையை மக்களுக்கு உணர்த்த முடியும் என்றார்.

அண்ணா நாமம் வாழ்க!

❖ ❖ ❖

(27.07.1984 அன்று, வேலூரில் தொலைக்காட்சி, அஞ்சல் நிலைய தொடக்க விழாவில் ஆற்றிய உரை)

ஓட்டுநரும், நடத்துநரும் மனிதர்கள்தான்!

மக்களின் பிரதிநிதியாக இருந்து தங்கள் உள்ளத்தின் எண்ணங்களை ஆக்கபூர்வமாகச் செயல்படுத்தும் போதுதான் திருப்தி ஏற்படுகிறது. சில நல்ல காரியங்களைச் செய்யும்போது பலர் பழிசுமத்துவார்கள். அதுபற்றிக் கவலைப்படக்கூடாது. நாம் போகிற பாதை நேர்மையான பாதை என்றால் பிறருக்குப் பயப்பட வேண்டிய தேவை இல்லை.

தற்போது 101 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இவை உருவாவதற்கு எத்தனைபேர் வேலை பார்த்திருப்பர்? இலட்சக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பளித்தோம் என்று சட்டமன்றத்தில் நான் சொன்னேன் என்றாலும், வேலை கொடுக்கவில்லை என்று திருப்பி திருப்பிச் சொல்கிறார்கள் சிலர். எங்கள் பணிகளில் தயவு செய்து குறை இருந்தால் சொல்லுங்கள், ஆனால் நாங்கள் எதுவும் செய்யவில்லை என்று மட்டும் சொல்லாதீர்கள்! நமக்கு மனசாட்சி உண்டு. அதைத்தான் நாம் கடவுள் என்கிறோம்.

நான் சிரித்தால் தமிழகத்தின் 41/2 கோடி மக்களும் சிரிப்பார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பழனியப்பன் இங்கே குறிப்பிட்டார். நாம் சிரித்தால் மக்கள் சிரிப்பார்கள். நாம் அழுதால் மக்கள் அழமாட்டார்கள் என்று ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு.

நாட்டில் போராட்டங்கள் வரும்போது, பிரச்சினைகள் உருவாகும்போது எல்லாம் பேருந்துகளைத்தான் இலக்கு வைக்கிறார்கள் போராட்டக்காரர்கள். இது தேவையா?

சத்துணவுத் திட்டத்தின் மூலம் மக்களைச் சோம்பேறியாக்கவில்லை, பிச்சைக்காரர்களாக்கவில்லை என்பதைச் சிலர் இப்போதுதான் உணர்ந்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் தேவையற்றது என்று சொன்னவர்கள் கூட இனி வரும் தேர்தலில் எங்களைத் தேர்ந்தெடுத்தால் நாங்களும் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயலாற்றுவோம் என்று சொல்லத் தொடங்கியுள்ளனர்.

நாங்கள் யாரை நம்பி திட்டங்களில் முதலீடு செய்கிறோம்? மக்களை நம்பி! உலக வங்கிகளிடம் கடன் வாங்கி, பேருந்துக் கட்டணத்தை உயர்த்த வேண்டிய சூழ்நிலை நமக்கு ஏற்பட்டுள்ளது. பேருந்துக் கட்டணத்தை உயர்த்தினால் தான் ரூ.200 கோடி கடன் தர முடியும் என்று உலக வங்கியினர் தெரிவித்திருக்கிறார்கள். அதனால் நாங்கள் விரும்பாவிட்டாலும் கட்டண உயர்வைக் கொண்டு வரவேண்டியவர்களாக உள்ளோம். அதிலும் தமிழகத்தில் சென்னை நகரில் மட்டும் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தத் திட்டமிட்டுள்ளோம்.

படிக்கும்போதே தொழிற் கல்வி கற்க வேண்டும். படித்துவிட்டு ஏதோ வேலை பார்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயலாற்றுவதில் பயன் என்ன ? மாணவன் படித்து விட்டு வெளியில் வரும்போது இந்தத் தொழிலுக்குச் சொந்தக்காரன் என்ற முறையில் வெளிவர வேண்டும்.

அரசு திட்டமிடும்போது உடனடிப் பயனளிக்கும் திட்டங்கள், எதிர்காலத்திற்கு ஏற்ற வகையில் சில திட்டங்கள் என்று திட்டமிட வேண்டும்.

சத்துணவுத் திட்டத்தின் மூலம் தாய்மார்கள், குறிப்பாக விதவைகளுக்கு வேலை வாய்ப்பளிக்கப்படுகிறது.

மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டு, பேருந்தில் கல் எறிகிறார்கள். பேருந்துகள் என்ன பாவம் செய்தன ? பயணிகள் என்ன குற்றம் செய்தார்கள் ? யாருடைய பொருள் நாசம் ஆகிறது ? பெரியவர்கள் கொடுத்த வரிப்பணம் இங்கே பாழாகின்றது ! ஓட்டுநரும் மனிதன்தான். நடத்துநரும் மனிதன்தான் ! அவர்கள் அடிபட்டால், அவர்களது குடும்பம் என்ன ஆகும் ?

உன்னைத் துன்பப்படுத்திக் கொண்டு மற்றவர்களை இன்பப்படுத்து என்றார் மகாத்மா காந்தியடிகள். பலர் தன்னை இன்பப்படுத்திப் பிறரைத் துன்பப்படுத்தி வருகிறார்கள். ஏதாவது ஒரு சிறிய தகராறு என்றால் கூட எதிரியை அழித்துவிட வேண்டும் என்று நினைப்பது எப்படி நியாயமானதாகும்! போக்குவரத்துத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு புதிய கல்லூரி ஒன்று உருவாகிவரும் திட்டத்தைப் போக்குவரத்துத்தறை அமைச்சர் இங்கே குறிப்பிட்டார். அந்தக் கல்லூரிக்குப் பணம் தரும் தொழிலாளர்களை நான் தெய்வமாகக் கருதுகிறேன்.

சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும். அதுபோல் பெரும்பான்மையினருக்கும் பாதுகாப்பு இருக்க வேண்டும். இருவரும் ஒத்துப்போனால் தான் ஜனநாயகம் வெற்றி பெற முடியும் !

அண்ணா நாமம் வாழ்க !

(30.07.1984 அன்று, சேலம் மத்திய பேருந்து நிலைய கால்கோள் விழா, 101 சத்துணவு மையக் கூடங்கள், டேனிடா திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள 101 துணை சுகாதார நிலையங்கள் திறப்பு விழாவில் ஆற்றிய உரை)

நாட்டின் ஒற்றுமைக்குத் தொலைக்காட்சி பாடுபடவேண்டும்!

ஏற்காட்டில் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் தொடங்கப்பட்டிருக்கிறது என்பது மிகச் சிறந்த காரியம் என்பது மட்டுமல்ல, இவ்வளவு விரைவில் அது நடைபெறுவதற்காக பிரதமர் மற்றும் அவரது உதவியாளர்கள், நிபுணர்கள் அத்தனை பேரையும், பாராட்டி, அவர்களுக்கு நன்றி கூறக்கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே வழிநெடுக சிறு குழந்தைகள் ஆர்வத்துடனும் கொடிகளுடனும் நின்றவாறு எங்களை வாழ்த்தி வரவேற்றார்கள். அந்தப்பிஞ்சு உள்ளங்களில் என்ன ஆசை நிரம்பி, பெருகி வழிந்தோடியிருக்கும் என்பதை ஒரு கணம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பெரியவர்களான நாம் சமூக சமுதாய நிலைமைக்கு ஏற்றபடி வாழ நம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் குழந்தைகளுக்குப் புதிய அனுபவங்கள் ஏற்படுகின்றன. இவர்களது எதிர்காலம் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இளைய தலைமுறை முதிய தலைமுறையை விட முற்போக்குச் சமுதாயமாகச் செய்ய, துணிவுள்ளவர்களாக குழந்தைகள் வளர்க்கப் பெற, நாம் ஆவன செய்ய வேண்டும்.

வசதி உள்ளவர்கள் எல்லாம் தொலைக்காட்சி பார்க்கலாம். ஆனால், நிலையம் இல்லாமல் யாரால்தான் பார்க்க முடியும்? நாம் எப்படி இருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு இதுபோன்ற தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் நிறையத் தேவையன்று கருதுகிறேன்.

சேலம் மாவட்டத்திற்கு நான் என்னென்ன நன்மைகள் செய்தேன் என்று, முன்னர் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். இன்னமும் செய்ய வேண்டியிருக்கிறது. மலைவாழ் பகுதிமக்கள் இனம் எந்த அளவு முன்னேற வேண்டும் என்பது பற்றி டெல்லி செல்லும்போது பிரதமர் தனியாக ஒரு கூட்டம் கூட்டிப் பேசினார். மற்ற எந்த மாநிலமும் கொடுக்க முடியாத புள்ளி விவரங்களை நம்மால் மட்டும் தான் கொடுக்க முடிந்தது. உழைக்கின்ற திறமைவாய்ந்த, கடமை உணர்வுமிக்க நமது அரசு அலுவலர்களின் உதவியால் தான் இது முடிந்தது.

இந்திராவின் அரசுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று மைய அமைச்சர் அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள். ஒத்துழைப்புத் தருவதில் நான் பின்வாங்கியது இல்லை. பின் வாங்கவும் மாட்டேன்.

சத்துணவுத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் போன்றவற்றை நிறைவேற்றத் தொடங்கியவுடன் இங்குள்ள சிலர் எதிர்த்தார்கள், அண்ணா பிறந்தநாள் முதல் 15 வயதுடைய குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்க இருக்கிறோம். இந்தத்

திட்டத்தைப் பிரதமர் பாராட்டினார். மற்ற மாநில முதல்வர்களையும் இந்தத் திட்டத்தைச் செயலாற்ற வழிவகை காணும்படி கேட்டுக் கொண்டார். பள்ளியில் தொழில் கல்வியைக் கொண்டுவரும் திட்ட த்தை அவர் அறிந்து, பாராட்டினார். இந்தியத் துணைக்கண்டம் முழுதுக்கும் ஒரே மாதிரி பாடத்திட்டம் இருக்க வேண்டும் என்று நான் சொன்னேன். அனைத்து மாநிலங்களும் இதனைப் பரிசீலிப்பது நல்லது எனப் பிரதமர் குறிப்பிட்டார். தமிழகத்தில் வேறு கட்சி ஆளுகிறது என்று எண்ணாமல், நாம் நல்ல யோசனைகளைச் சொன்னால் அதை ஆதரிப்பவர் நமது பிரதமர் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

இந்த நிலையம் 10 கிலோவாட் சக்தி கொண்ட நிலையமாக உயர்த்தப்பட வேண்டும் என்று மைய அமைச்சரின் மூலமாக பிரதமருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளைஞர்கள் கல்வி கற்பதுடன் உடற்பயிற்சி செய்யவும் பழக வேண்டும். அதற்கு இந்தத் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் பயன்படும். குழந்தைகள், இளைஞர்கள், உடலைப் பேணி பாதுகாக்கப் பழக வேண்டும். எதிர்காலச் சந்ததிக்கு இது செல்வமாக அமையும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையுடன் நாம் இணைந்து வாழ முடியும் என்ற நம்பிக்கை உண்டு. அதற்கு தொலைக்காட்சி நிலையம் பயன்படும் என்று நம்புகிறேன். அண்ணா, நேரு, அண்ணல் காந்தி ஆகியோரின் கொள்கைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் தொலைக்காட்சி நிலையம். நாடு ஒன்றுபட்டு வாழ வேண்டும் அதற்கு தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் பயன்பட வேண்டும் என வாழ்த்துகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

(30.07.1984 அன்று, ஏற்காட்டில் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையத்தை தொடக்கிவைத்து ஆற்றிய உரை)

அன்று சொன்னோம்!
இன்று செய்கிறோம்!

இந்த நிகழ்ச்சியைப் பற்றி எவ்வளவோ துல்லியமாக விளக்கமாக புள்ளிவிவரங்களோடு எடுத்துரைத்தார்கள். முதலில் நாம் சொல்ல விரும்புவது இந்த வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட 1,248 என்கிற கணக்கை நீங்கள் ஒருவகையிலேயே எண்ணிப் பார்த்தால் நாம் எப்படி வளர வேண்டுமோ அதே போல் அமைந்திருக்கிறது. ஒன்றுடன் இன்னொன்றை சேர்த்தால் இரண்டு இன்னொரு இரண்டைச் சேர்த்தால் நான்கு இன்னொரு நான்கைச் சேர்த்தால் எட்டு இதன்படி குடும்பம் வளமாக வாழ–வளமாகப் பெருகிவரவேண்டும் என்பதுபோல் எண்ணிக்கையும் அமைந்துள்ளன என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 45,40,35,30 என்று மாதந்தோறும் கொடுப்பதை அறுதியிட்டு அந்த வசதியினைக் கொஞ்சம் கொஞ்சம் கூடுதலாகப் பணத்தைச் செலுத்தி இந்தத் திட்டம் தோன்றிய விதம் உண்மையிலேயே எனக்கு வியப்பாக உள்ளது.

ஒரு அம்மையார் கண்ணீர் வடித்துக் கொண்டு, தாய்மார்களைக் கூட அழைத்துவந்து ஒரு மனுவைக் கொடுத்தபோது மேடையிலேயே நான் அதைப் படித்துப் பார்த்தேன். இங்கே வாழ முடியவில்லை எந்த வசதியும் இல்லை, கழிப்பிடங்கள் இல்லை, விளக்கு இல்லை, தண்ணீர் இல்லை, குடிசைக்குப் பாதுகாப்பும் இல்லை, குடிசையில் இடவசதியும் இல்லை என்று எழுதப்பட்டிருந்தது அந்த மனுவில்! நான் அதைப் படித்துப் பார்த்தேன். எனது வாழ்வில் நான் எப்படி இருந்தேன் என்பதைக் கொஞ்சம் நினைத்துப் பார்த்தேன், இந்த நேரத்தில்! 18 ரூபாய் வாடகைக்கு ஒரு வீட்டில் குடியிருந்தேன். அப்போது வாடகை ரொம்ப அதிகம். 18 கூட கொடுக்க முடியாத நிலை. ஒரு கூடம், ஒரு ரூம், ஒரு சமையல் கூடம். அதில் தான் நான் 19 ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருந்தேன். அதையும் நினைத்துப் பார்த்து, அந்தத் தாய் எழுதிக் கொடுத்த மனுவையும் நினைத்து எப்படியெல்லாம் கற்பனை செய்தேன்; வருத்தப்பட்டேன் என்பது எனக்குத்தான் தெரியும். ஏதோ மக்களுடைய ஆதரவால் எனக்குக் கிடைப்பது, இவர்களுக்கு யாருடைய ஆதரவினால் கிடைக்க வேண்டும் என்கிற நினைப்பை எனது உள்ளத்திலே தேக்கிய போது எனக்குக் கிடைத்த பதில் ‘உன்னை எதற்காகத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்’ என்று ஒவ்வொரு ஆணும் பெண்ணும் என்னைக் கேள்வி கேட்பதுபோல் உள்ளது. “உனக்கு வாக்கு அளித்து முதலமைச்சராக ஆக்கியிருக்கிறோமே தமிழகத்திற்கு, நீ தான் அந்தப் பொறுப்பை ஏற்கவேண்டும்!” என்பது தான் நீங்கள் தான் எங்களுக்குச் சொல்கின்ற பதில் என் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்த தன் விளைவாக அப்போதே நான் சொன்னேன், இங்கே வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று. 1982இல் சொன்னேன். 1984இல் முடிந்து, இந்தக் கட்டடங்கள் யார் யாருக்குச் சொந்தமாக்கப்பட வேண்டுமோ அவர்களுக்கெல்லாம் உரிமையாக்கப்படுகின்ற நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. இங்கே எனது அருமைச் சகோதரர் மாண்புமிகு எஸ்.ஆர். ராதா அவர்கள் திரைப்படங்களிலே என்னென்ன

சொன்னேனோ அதையெல்லாம் செய்து வந்துள்ளேன் என்று சொன்னார். அதில் கொஞ்சமும் சந்தேகமே இல்லை.

என் வாழ்வில் நான் கண்ட கஷ்டங்கள், நான் அனுபவித்த துன்பங்கள், வேதனைகள் போன்று தானே இந்நாட்டிலுள்ள அத்தனை பேருக்கும் நிலைமை இருக்கும். அதிலும் வறுமைக் கோட்டிற்குக் கீழே வேலையே இல்லாமல் இருக்கின்றவர்களுக்கு அவர் நிலைமை எப்படி இருக்கும் என்ற எண்ணத்தை மனத்தில் தேக்கித்தான் நான் நடித்த பாடங்களிலே எல்லாம் கொள்கைகளைச் சொல்லும்போது ஆர்வத்தோடும் சொன்னேன்; அழுத்தமாகவும் சொன்னேன்; மக்கள் மனத்தில் பதியும்படியும் சொன்னேன். மக்கள் அதைச் சிந்திக்க வேண்டிய நிலையைச் சொன்னேன். ஆனால் ஒரு சிலர் சிந்திக்கத் தவறிவிட்டார்கள்.

சினிமாக்காரன் என்று என்னை நினைத்தார்களே தவிர இந்த மக்களின் தேவையை நினைத்து உண்மையான நிலைமையை இந்த எம்.ஜி.ஆர். சொல்கின்றான் என்று யாரும் எண்ணவில்லை, கேலி பேசினார்கள்.

2 கோடி ரூபாய் செலவு செய்தால் இந்த 2 கோடி ரூபாய் அரசின் பணம் என்று வந்தாலும் உங்கள் பணம் என்று வந்தாலும் நீங்கள் வாடகை கொடுப்பது போல் கொடுத்து வந்து சில ஆண்டுகளுக்குப் பிறகு இது உங்களுக்குச் சொந்தமாக்கப்பட இருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அதேசமயம் ரூ.30,35,40,45 என்று கொடுத்தாலும் அரசு ஒவ்வொரு ஆண்டிலும் எவ்வளவு உங்களுக்காகக் கொடுக்கிறது என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். மாதம் ஒன்றுக்கு 1,248 வீடுகளுக்கு 30,35,40,45 என்று கொடுக்கின்றீர்களே அந்தப் பணம் போக, 83,616 ரூபாய்களைத் தமிழக அரசு வீட்டுவசதி வாரியம் உங்களுக்காகக் கொடுக்கப்போகிறது, மானியமாக. இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். முழுப்பணமும் நீங்கள் கட்டப்போவதில்லை. நீங்கள் கட்ட வேண்டிய பணத்தின் ஒரு தொகையை அரசு உங்கள் வரிப் பணத்திலிருந்து உங்கள் கடனை–சுமையைக் குறிப்பாக வீட்டைக் கட்டிக் கொடுத்து ஓரளவுக்குத் தேவையான பணத்தை வாங்கிக் கொண்டு 83,616 ரூபாய்களை மாதம் ஒன்றுக்குத் தமிழக அரசு இந்தத் தொகையை வீட்டுவசதி வாரியத்துக்குக் கொடுத்தாக வேண்டும். அப்படியானால் உங்களுக்காக வீடு கட்டிக் கொடுத்து நீங்கள் 45,40,30,35 கொடுக்கின்றீர்களே அதுமட்டுமல்லாது நீங்கள் கொடுக்க வேண்டிய பணம் 50 அல்லது 60 என்று இருந்தால் 30ஐ நீங்கள் கொடுக்க வேண்டும் என்ற மீதியை அரசு கொடுக்க வேண்டும் நிபந்தனையில் இந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு உள்ளன. அப்படி நீங்கள் பணம் கொடுத்தால் அது எங்கே போகும்? இந்த வீட்டு வசதி வாரியம் எங்கே கடன் வாங்குகிறதோ அவர்களுக்குத் திருப்பித் தரப்படும். அதே போல் நீங்கள் தருகின்ற பணத்தில் இருந்து இதுபோன்ற குடியிருப்புகள் தமிழகம் முழுவதும் எங்கெங்கே மற்றவர்களுக்கு வீடு இல்லாமல் கஷ்டப்படுகின்றார்களோ இதேபோல் புதிய வீடுகள் கட்டிக் கொடுக்க நீங்கள் கொடுக்கின்ற பணம் மீண்டும் அதற்குப் பயன்படுத்தப்படும் என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்; மனத்தில் பதிய வைத்துக் கொள்ளவேண்டும். எப்படிப்பட்ட குடிசையிலுருந்து சிறிய வீடு ஆனாலும் ஒரு கல் கட்டடத்தில் ஆபத்தில்லாத ஒரு

இடத்தில் வசதியான இடத்தில், பாதுகாப்பான இடத்தில் உங்களுக்காக இடம் தரப்பட்டிருக்கின்றதோ, ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதோ அதேபோல் இன்னும் இலட்சக்கணக்கான மக்கள் குடிசையில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். வீடே இல்லாமல் இருக்கின்றார்கள். நீங்கள் 30,40 என்று கொடுக்கின்ற ரூபாய்கள் அங்கே போய்ச் சேரும்போது அவர்கள் மீண்டும் கடன் வாங்கியோ அல்லது மானியம் பெற்றோ, அரசிடம் பெற்றுக் கொண்டோ அவர்கள் அது போன்ற குடியிருப்புக்களை ஆயிரக்கணக்கில் அல்லது இலட்சக்கணக்கில் மற்றவர்களுக்கு கட்டிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இது முன்பிருந்த ஆட்சியால் கொண்டு வந்த வசதியான தீப்பிடிக்காத வீடுகள் என்று அளவிலே தொடங்கப்பட்ட திட்டம்; எங்கள் ஆட்சிக் காலத்தில் இது நடந்து கொண்டிருந்தாலும் சென்னைக்கு மட்டும் தான் என்ற அளவில் அவர்கள் இந்தத் திட்டத்தைத் தீட்டியிருந்தார்கள். நாம் ஆட்சிக்கு வந்தபிறகுதான் உங்களது ஆட்சி இங்கே நடைபெறுகிறது என்ற நிலைமையில் தான்–இது சென்னைக்கு மாத்திரம் உரிமை உள்ளதுபோல், தமிழகத்தில் எங்கேங்கே வாழ்கிறார்களோ அந்த மக்கள் அனைவருக்கும் கிடைத்தாக வேண்டும் என்று பரவலாக்கினோம்; தேர்தல் நேரத்தில் வாக்குகள் பெறுவதற்காக அல்ல. மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை நாம் செய்ய வேண்டும் என்பதற்காக இதைப் போன்ற செயல்களைச் செய்து கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல; குடிசை மாற்று வாரியம் என்று ஒன்று இருக்கிறது. ஒரு குடிசையை வீடாக மாற்ற வேண்டும் என்கிற அதுவும் சென்னைக்கு மட்டும் தான் என்று வைத்திருந்தார்கள். நான் அதை மாற்றி, தமிழகம் முழுவதற்கும் குடிசை மாற்று வாரியம் அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டு அந்த வசதி வாய்ப்பும் ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று சொல்லி இருக்கின்றேன். நடந்து கொண்டு இருக்கின்றது. இவைகளையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால் 'நாடோடிமன்ன'னில் அமைச்சரவை இல்லை, அதில் ஒரு மன்னன், நாடோடி மன்னன் என்னைப்போல். எனக்கு ஊரும் உறவும் கிடையாது. மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டும் எனவிரும்பிய ஒரு நாடோடிக்கு மன்னனாக இருக்கும் வாய்ப்புக் கிடைக்கிறது. ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். ஒரு பணக்காரர் எழுந்து எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுப்போம் என்று சொல்கின்றீர்களே குடிசைகளை என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு தேவையில்லாத காரணத்தால் குடிசைகள் கொளுத்தப்படும் என்று நான் பதில் கூறினேன். மாணவர்களைப் பற்றிக் கேட்பார்கள். மாணவர்கள் படித்து முடித்து வேலை கேட்கும்வரை அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்கும் என்று அதில் சொல்லி இருக்கின்றேன்.

ஆரம்பக் கட்டத்தில் சத்துணவு கொடுக்கின்றோம். 10 வயது வரை கொடுத்து வருகிறோம். செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாளிலிருந்து 15 வயது வரையுள்ள, படிக்கும் குழந்தைகளுக்குச் சத்துணவு கொடுக்கப்பட இருக்கிறது. அதுமட்டுமல்ல; வயது முதிர்ந்தவர்கள், இங்கே இப்பொழுது உதவித் தொகை கொடுத்தோமே அப்படிப்பட்டவர்களுக்கு, சேலையும் வேட்டிகளும் கொடுக்கும் திட்டத்தைக் சீருடை வழங்கப்படும் என்று நான் சொல்லி இருக்கின்றேன். அந்தத் திட்டத்தில் வேலை

தேடித் தரும் அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். வேறு எங்கும் பணி செய்யாதவர்கள் எத்தனை பேர்கள் என்று கணக்கு எடுத்து மாதம் ஒன்றுக்கு அவர்களுக்கு 50 ரூபாய் கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தோம். மக்கள் வரிப் பணத்திலிருந்து ஏறக்குறைய 400 கோடி ரூபாய்க்கு மேலே ஒரு ஆண்டுக்கு நாம் செலவு செய்கிறோம் கல்விக்காக. அப்படி இருந்தும், படித்து வெளியே வருபவர்களை என்ன வேலை செய்யப் போகிறீர்கள் என்று கேட்டால் தெரியாத அளவில்தான் உள்ளது இது கல்வியா? அல்லது நாளை வீணாக்கும் விளையாட்டுக் கூடமா என்ற கேள்வி எழுகிறது. படித்தவன் புத்திசாலியாகிறான் என்று சொன்னால் மட்டும் போதாது. தன்னைவாழ வைத்துக் கொள்கிற தகுதியுள்ளவனாக வெளியே வருகிறான், தொழில் பயின்றவனாக வருகிறான் என்கிற உரிமை, தகுதி இருக்க வேண்டும். அதற்கு வேலைவாய்ப்பு தயாராக இருக்க வேண்டும். ஐந்து ஆண்டுக் காலத்தில் முடியுமா, மூன்றாண்டுக்காலத்தில் முடியுமா என்று திட்டத்தை எப்படி நிறைவேற்றுவது என்ற சிந்தனையில்தான், இடைக்காலத்தில் அவர்களுக்கு 50 ரூபாய் கொடுக்கப்படும் என்று சொன்னேன். இப்பொழுது இந்தப் புள்ளி விவரங்களைச் சரியாக எடுத்து வந்து கொண்டிருக்கிறோம். அண்ணா அவர்களுடைய பிறந்த நாள் விழாவின்போது இதைப் பற்றிய ஒரு புதிய அறிவிப்பு வரும் என்பதை மட்டும் இங்கே நான் சூசகமாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். இந்தக் காலத்தில் 50 ரூபாய் போதாது, ஆகவே அதைப் பற்றி ஏற்பாடு செய்யப்பட இருக்கிறது. இந்த ஆட்சி செய்யும் என்றும் உறுதி கூறிக்கொள்கிறேன். அந்தப் படத்தில் நான் சொன்ன திட்டம் ஓரளவுக்கு நிறைவேறும். பள்ளிக் கூடத்தில் படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாமல் இருந்தால், வேலை கிடைக்கும் வரையில் அரசு பொறுப்பு ஏற்கவேண்டும் என்று அங்கே சொன்னேனே? அதனுடைய ஒரு பகுதிதான் 50 ரூபாய். அரசினுடைய வேலை, உடனடியாக யாருக்கு என்ன தேவையோ அதைச் செய்து கொடுக்க வேண்டும். உங்களுக்கு தற்காலிகமாகப் பயன்படுவது எதிர்காலத்தில் நன்கு பயன்பட இருக்கிறது. மக்கள் தரும் வரிப் பணத்திலிருந்து நமக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆகவே, மக்களுக்குத் தொண்டு செய்கிறோமே தவிர மக்கள் எஜமானர்களும் அல்ல என்ற வகையில் அரசு அலுவலர்களும் மற்றவர்களும் அந்தப் பணியைச் செய்தால்தான் நிலைமை சீர்படும்; எந்தத் திட்டமும் நிறைவேறும். அந்த வகையில்தான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றியவர்கள் தங்களுக்குச் சம்பளம் கிடைத்தது என்பதற்காக மட்டுமல்லாமல், சமுதாயம் வாழ வேண்டும் என்பதற்காகச் செய்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, வீட்டு வசதி வாரியத்தலைவர் அவர்களையும் அவர்களுடன் ஒத்துழைத்த அலுவலர்கள், பணியாளர்கள் அனைவரையும் பாராட்டுவதோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களையும் பாராட்டி, அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகிறேன், அண்ணா நாமம் வாழ்க!

(31.07.1984 அன்று, சேலம் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் நடைபெற்ற கிராமப்புற மக்களுக்கு தவணை முறை வீட்டுவசதித் திட்டத்தை தொடக்கி வைத்து ஆற்றிய உரை)

நதி நீரைப் பங்கீடு செய்ய மாநிலங்களுக்கிடையே ஒத்துழைப்பு தேவை!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

சில மாநிலங்கள் ஏராளமான நீர்வசதியைப் பெற்றிருக்கின்றன. அதே நேரத்தில் வேறு சில மாநிலங்களில் தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. எனவே, நதிநீரைப் பங்கீடு செய்துகொள்ள மாநிலங்களுக்கிடையே ஒத்துழைப்புத் தேவை. கோவை நகரத் தண்ணீர்ப் பற்றாக்குறை நீங்க சிறுவாணி அணை கட்டப்பட்டபோது கேரள அரசு சிறந்த ஒத்துழைப்புத் தந்தது. அதே மனப்பான்மையை இப்போது கேரளாவில் உள்ள கூடுதல் நதிநீரை வழங்குவதிலும் அம்மாநில அரசு காட்ட வேண்டும்.

தனது தண்ணீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க தமிழ்நாடு அண்டை மாநில உதவிகளை எதிர்நோக்குகிறது. ஆந்திரா, கருநாடகம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்கள் கிருஷ்ணா நதிநீரை உதவ முன்வந்துள்ளன. ஆனால் இப்போது அத்திட்டத்தில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. பிரதமர் தலையீட்டால் இப்பிரச்சினை விரைவில் தீரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது”.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(30.10.1985 அன்று, புதுடெல்லியில் நடைபெற்ற நதிநீர்ப் பங்கீடு பற்றிய மாநாட்டில் ஆற்றிய உரை)

ஏழைகளின் நம்பிக்கை நட்சத்திரம்!

மறைந்த அன்னை இந்திரா அம்மையாரின் நினைவுக்கு நாடு இன்று அஞ்சலி செலுத்துகிறது. தமிழ்நாட்டின் சார்பில் நான் எனது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறேன். அன்னை இந்திரா உலகத் தலைவர், உலக அமைதிக்கு அயராது பாடுபட்டவர். நமது நாட்டு ஏழைகளின் நம்பிக்கை நட்சத்திரமாக இருந்தவர். நாட்டு ஒற்றுமைக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர்.

நான் நோயுற்று இருந்தபோது தாயன்புடன் சிகிச்சைக்காகச் சகல வசதிகளும் செய்தவர். அவருடைய மறைவு என் இதயத்தில் நீங்காத வடுவை ஏற்படுத்தி உள்ளது. நான் நலம் பெற பிரதமர் இராஜீவ் காந்தி எடுத்த முயற்சிக்கும் காட்டிய அன்புக்கும் ஆதரவுக்கும் எப்பொழுதும் கடமைப்பட்டுள்ளேன்.

வலிமைமிக்க ஒன்றுபட்ட இந்தியாதான் அன்னை இந்திராவிற்கு உண்மையான நினைவுச் சின்னம். பிரதமர் இராஜீவ் காந்தியின் தலைமையில் வளமான இந்தியாவை உருவாக்குவோம். அதற்காக அன்னை இந்திரா காந்தியின் பெயரால் சபதம் ஏற்போம்.

(31.10.1985 அன்று, புதுடெல்லியில் நடைபெற்ற அமரர் அன்னை இந்திராகாந்தி அவர்களின் முதலாண்டு நினைவு நாள் அஞ்சலி கூட்டத்தில் ஆற்றிய உரை)

AIR-COND
C A/C

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டம்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

தேசிய வளர்ச்சிக் குழுவின் இக்கூட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். புதிதாகப் பிரதமர் பொறுப்பை ஏற்ற பிறகு பிரதமர் இராஜீவ் காந்தி முதல் முறையாக இக்கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார். தேசிய மட்டத்தில் ஏற்பட்ட பல நெருக்கடி மிக்க சிக்கல்களைத் தீர்ப்பதில் பிரதமர் இராஜீவ் காந்தி எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் மிகவும் போற்றத்தக்கதாகும்.

அறிவியல், தொழில் நுணுக்கம், மின் அணுக் கருவிகள், தொழில்கள் மற்றும் கல்வி முறைகளில் அவர் கொண்டுள்ள முற்போக்கான கருத்துகள் ஏழாவது ஐந்தாண்டு திட்ட நகலில் முழுமையாக பிரதிபலிக்கின்றன.

வேலை இல்லாத் திண்டாட்டம், வறுமை ஒழிப்பு, வளர்ச்சித் திட்டங்கள், குடும்ப நலத்திட்டம், குடும்ப நல வளர்ச்சி மற்றும் மாநிலங்களிடையே சமசீரான நிலையை ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை தந்து அடிப்படை முன்னேற்றங்களுக்கான முனைப்புகள் ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் சிறப்பாக இடம் பெற்றிருப்பதை தமிழக அரசு முழு மனதுடன் ஏற்கிறது.

ஏற்கனவே முதலீடு செய்யப்பட்டவைகளில் உற்பத்தி சக்தியை அதிகரிக்கவும், திறனை மேம்படுத்தச் செய்யவும், பரந்த அளவிலான முனைப்புகளை மேற்கொள்ள வழி செய்யப்பட்டிருப்பதையும் நாங்கள் முழுமனதுடன் வரவேற்கிறோம்.

அடுத்த 15 ஆண்டுகளில் நாட்டின் வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் தொலைநோக்கோடு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் இந்த நோக்கங்களை நிறைவேற்ற வலுவான வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் நான் இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன். இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதிலும் குடும்ப நலத்திட்டங்களை நிறைவேற்றுவதிலும் தமிழகம் முன்னணியில் இருந்து வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கையில் இருந்து ஏராளமான அகதிகள் தமிழகம் வந்துள்ளனர். சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேல் இலங்கை அகதிகள் தமிழ்நாட்டில் உள்ளனர். அவர்களுள் 2,267 பேர் ஆதரவற்றவர்கள். இலங்கை அகதிகள் பிரச்சினை தமிழக அரசை மிகவும் கவலை அடையச் செய்துள்ளது.

இப்பிரச்சினைக்கு நீண்டகால தொலைநோக்குடன் கூடிய ஒரு தீர்வினை விரைந்து காண வேண்டும். அப்போது தான் தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் தாயகம் திரும்ப முடியும்.

அதற்கேற்ற வகையில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குக் கௌரவமான ஒரு நல்ல அரசியல் தீர்வினை எட்டுவதற்கு பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் மேலும் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டி கேட்டுக் கொள்கிறேன். ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் தமிழகத்துக்கு 5,750 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது போதாது. மேலும், 12,850 கோடி ரூபாய் ஒதுக்கினால்தான் தமிழகத்தின் அனைத்து திட்டங்களையும் முழுமையாக நிறைவேற்ற முடியும் என்பதனை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தியாவுக்கு வெளிநாட்டு உதவி பெறும்போது அதே அளவு – அதே அடிப்படையில் மாநிலங்களுக்கும் வெளிநாட்டு உதவி கிடைக்கச் செய்ய வேண்டும். மத்திய அரசு எழுப்பும் கடன்களில் பாதித்தொகையை மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

மத்திய மின் உற்பத்தி சக்தியை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கும்போது அம்மாநிலங்களின் தேவையைக் கருத்தில் கொண்டு விநியோகிக்க வேண்டும் என்பதனையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் மாநிலங்கள் இருக்கின்றன. எனவே, தங்களின் குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் திட்டங்களை உருவாக்கவும் முன்னேற்றங்களை அடையவும் மாநிலங்களும் விரும்புகின்றன.

குறிப்பாக, தமிழ்நாட்டில் சத்துணவுத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் ஆகியவை புதிய உத்வேகத் திட்டங்களாக மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு தமிழகம் மேலும் நிதி ஆதாரங்களைத் தேட வேண்டியதிருக்கிறது.

ஆனால், மத்திய அரசால் அமல்படுத்தும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான நிதி உதவிகள் அளிக்கும் வகையிலேயே கடந்த காலத்தில் நிலைமைகள் இருப்பதால், மாநிலங்களின் நலன் கருதி தமிழகம் போன்ற மாநிலங்கள் தனியாக அமல்படுத்தும் சத்துணவு போன்ற நல்வாழ்வு திட்டங்களுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டு வருகிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மத்திய அரசின் புதிய முயற்சிகளை வரவேற்கும் அதே நேரத்தில் மாநிலங்களை முன்கூட்டியே கலந்து ஆலோசிக்காமலும் திட்டங்கள் பற்றிய விவரங்களைத் தெரிவிக்காமலும் பல திட்டங்கள் மத்திய அரசு மட்டத்தில் உருவாக்கப்படுகின்றன என்பதையும் இங்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இத்தகைய நிலைமை காரணமாக மாநிலங்களின் நிதிநிலை சீர்கேடு அடைவதுடன் மத்திய அரசு அமல்படுத்த விரும்பும் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாநிலங்களுக்குத் தாமதம் ஏற்படுகிறது.

மத்திய அரசின் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யும் போது மாநில அரசுகளின் திட்டங்களையும் கருத்தில் கொண்டு நிதி ஒதுக்கீடுகளை மறுபரிசீலனை செய்யுமாறு இக்குழுவை வலியுறுத்த விரும்புகிறேன்.

அப்பொழுதுதான் 7–ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் குறிக்கோள்களை அதன் உண்மையான பலன்களுடன் நாடு தழுவிய முறையில் அமல்படுத்த வழி ஏற்படும்.

தமிழ்நாட்டில் சேது சமுத்திரத் திட்டம், சென்னை உரத்தொழிற்சாலை விரிவாக்கம், உதகமண்டலம் இந்துஸ்தான் பிலிம் தொழிற்சாலை விரிவாக்கம், சென்னை நகரப் பாதாள இரயில் திட்டம், ஆகியவை துரிதமாக நிறைவேற்றப்படும் வகையில் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் தான் மீட்டர் கேஜ் இரயில்பாதைகள் அதிகம் உள்ளன. அவற்றை அகல இரயில் பாதைகளாக மாற்றுவதற்கான திட்டம் முழு அளவில் மேற்கொள்ளப்படவில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

6,563 கிலோ மீட்டர் நீளமுள்ள மீட்டர் கேஜ் இரயில் பாதையில் 3,925 கிலோ மீட்டர் பாதை மட்டுமே அகல இரயில் பாதையாக மாற்ற திட்டமிடப்பட்டிருக்கிறது.

பெருகி வரும் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்தினை கருத்தில் கொண்டு அனைத்து மீட்டர் கேஜ் பாதைகளையும் அகல இரயில் பாதையாக மாற்ற வேண்டும் என்பதனையும் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

கரூர் – திண்டுக்கல் அகல இரயில் பாதைத் திட்ட வேலைகளை விரைவுபடுத்தப் படுவதுடன் தூத்துக்குடி வரையிலும் அது விரிவாக்கப்படும் பணியும் துரிதமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் வலியுறுத்த விரும்புகிறேன்.

நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் அணுமின் நிலையம் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு பற்றி விரைவாக முடிவெடுக்க வேண்டும் என்பதுடன் கல்பாக்கம் அணுமின் நிலையம் மேலும் விரிவாக்கப்படவும் போதிய நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தின் விவசாய உற்பத்தியைச் சீர்குலைக்கும் வகையில் காவிரி நீர்ப்பிரச்சினை நீடிக்கிறது. நாட்டின் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையும் குறிக்கோளை நிறைவேற்ற உடனடியாக காவிரி நதி நீர்ப்பிரச்சினையில் பிரதமர் தலையிட்டு தீர்த்து வைக்க முன் வர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கேரளத்தில் வீணாகக் கடலில் கலக்கும் நதிநீரை தமிழ்நாட்டுக்குத் திருப்பிவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்த விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் பொது விநியோக முறையை சிறப்பாக அமல்படுத்தி வருகிறோம். வறட்சி மற்றும் பாசன நீர் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் போதுமான அளவு உணவு உற்பத்தி இல்லாததால் பொது விநியோக முறையை சீராக அமல்படுத்த மத்திய அரசு போதிய அளவு அரிசியை மத்தியத் தொகுப்பில் இருந்து தமிழ்நாட்டுக்கு ஒதுக்க வேண்டும் என்றும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(1985ஆம் ஆண்டு, நவம்பர் 8ஆம் மற்றும் 9ஆம் நாட்களில் புதுடெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் ஆற்றிய உரை)

தமிழ்க் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகத்தை நிலைநாட்ட வேண்டும்!

என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்க்குலமே, என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே, என் இரத்தத்தின் இரத்தமான அன்பு உடன் பிறப்புக்களே; தமிழ் அறிஞர் பெருமக்களே!

நம்முடைய நீண்ட நாள் கனவு நனவாகிறது. சங்கம் வளர்த்த மாமதுரையில் இன்று உலகத் தமிழ்ச் சங்கம் அமைகிறது. தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு சிறப்புடன் இயங்கி வருகிறது. இன்று மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் தொடங்கப்படுகிறது. நம்முடைய விருப்பங்கள் செயல்வடிவம் பெற்றதை எண்ணிப் பூரிப்பு அடைகிறேன்.

இன்று தொடங்கும் தமிழ்ச் சங்கம் சங்க காலத் தமிழ்ச் சங்கத்தின் மறுவடிவம் என்றே கொள்ளல் வேண்டும். இது என்றும் புகழ்பட நின்று நிலவிட வேண்டும். தமிழ்மொழி வளர்ச்சியில் அக்கறை கொண்ட அனைவருக்கும் இச்சங்கம் பொதுவானது. இதில் அரசியல் புக இடமில்லை. மீண்டும் சொல்கிறேன் – இதில் அரசியல் புக இடமில்லை. தமிழ்க் கலாச்சாரம், தமிழ்ப் பண்பாடு மற்றும் தமிழ் நாகரிகம் இவற்றின் பெருமைகளை உலகம் முழுவதும் பரப்புவதே இச்சங்கத்தின் பணி. 'தமிழ் வாழ்ந்தால் தான் தமிழர் வாழ்வர்; தமிழ் நாடும் வாழும்' என்று அமரர் பேறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

தமிழர், வாழ்வில் வளம்பெறவும், இச்சங்கம் பாடுபடும். தமிழ்க்கலை, சிற்பம், கலாச்சாரம், இலக்கியம் இவை எல்லாம் நமது ஆற்றலுக்குச் சிறந்த சான்றுகள்.

“காலத்தால் அவை இன்று தூசு படிந்தும் சிதைந்தும் கீறல்கள் விழுந்தும் காணப்படுகின்றன. அவற்றை நீக்கி தமிழ்க்கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் இவற்றின் உண்மையான வடிவத்தையும், பெருமைகளையும் நாம் நிலை நாட்ட வேண்டும்” என்று அமரர் பேறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

அந்த உன்னதக் குறிக்கோளை நிறைவேற்றவே இந்த உலகத் தமிழ்ச் சங்கம் பிறக்கிறது. உலகத் தமிழ்ச் சங்கத்தை நிறுவி, தொடங்கி வைக்கிற அரிய வாய்ப்புக்கு நான் பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

உலகத் தமிழ்ச் சங்க அமைப்புப் பணிக்கு 10 கோடி ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 10 கோடி ரூபாய்க்கு மேல் எவ்வளவு செலவானாலும் அதை அரசு ஏற்றுக்கொள்ளும்.

இந்தச் சங்கத்தை உலகத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்குக் காணிக்கையாக்குகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி வணக்கம்.

(13.04.1986 அன்று, மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்தை துவக்கி வைத்து ஆற்றிய உரை)

கரும்பு சக்கையைப் பயன்படுத்திக் காகித உற்பத்தி செய்யும் தொழிற்சாலை இந்தியாவிலேயே இது ஒன்று தான்!

என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்க்குலமே!

என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே!

என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புக்களே!

இந்த புகளூரில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 236 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. கரும்பு சக்கையைப் பயன்படுத்தி காகித உற்பத்தி செய்யப்படும் தொழிற்சாலை இந்தியாவிலேயே இது ஒன்றுதான்.

இந்த நிறுவனத்தின் உதவியால் செய்தித்தாள் காகித தட்டுப்பாடு வெகுவாகக் குறையும். இந்த நிறுவனத்தின் கழிவுநீரால் சுற்றுப்புறத்தூய்மைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. இந்த நிறுவனத்தினால் ஏறத்தாழ 1,530 பேருக்கு நேர்முக வேலை வாய்ப்பும், சுமார் 5 ஆயிரம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

இந்தத் தொழிற்சாலை அமைவதற்கு மூல காரணமாக இருந்தவர் இதன் தலைவர் விஸ்வநாதன் அவர்கள் தான். கரும்பு சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கலாம் என்ற கருத்தை என்னிடம் சொன்னவரும், உலக வங்கியின் உதவியுடன் அதற்கு முழு வடிவம் கொடுத்தவரும் அவர்தான்.

அவருடன் தோளோடு தோள் நின்று கடுமையாக உழைத்து இந்த ஆலையை உருவாக்குவதற்குப் பெரும்பாடுபட்டவர் நிருவாக இயக்குநர் ராமச்சந்திரன் ஆவார். இவர்களின் முயற்சி இல்லையெனில் இந்த மாபெரும் நிறுவனம் நமக்குக் கிடைத்திருக்காது.

விஸ்வநாதன் அவர்களையும் ராமச்சந்திரன் அவர்களையும் மற்றும் இணைந்து பணியாற்றிய அனைவரையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன். இந்த நிறுவனம் மென்மேலும் வளர்ந்து சிறப்புற என்னுடைய வாழ்த்துக்களைக் கூறிக்கொண்டு இதை நாட்டுக்கு அர்ப்பணம் செய்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்.

(24.05.1986 அன்று, திருச்சி தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின், காகித ஆலையை, நாட்டுக்கு அர்ப்பணிக்கும் விழாவில் ஆற்றிய உரை)

பிரிவுகளைத் தூண்டும் தீய சக்திகளை ஒழிப்போம்!

என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே!

என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புக்களே!

இந்திய விடுதலை திருநாளையொட்டி உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள், நம் உள்ளங்களில் நிறைந்து இருக்கிறார்கள். இந்தியப் பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்கள் சீரிய முறையில் செயலாற்றி வருகிறார்கள்.

பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்களின் ஆலோசனையை ஏற்று இலங்கை நிலைமைக்குச் சுமூகமான முடிவு காண வேண்டும். பிரிவினையைத் தூண்டும் தீய சக்திகளை ஒழிப்போம்.

அமரர் அண்ணா சொன்ன புதிய சமத்துவ, சமதர்ம, சமூக அமைப்பை அடைந்திட அயராது உழைப்போம். கடமைகளைச் சரிவரச் செய்து உரிமைகளைப் பெறுவோம். அமைதி, ஒற்றுமை முன்னேற்றம் இவற்றை முன்னிறுத்தி உழைப்போம்; உயர்வோம்!

வாழ்க சுதந்திரம்!

வெல்க இந்தியா!

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(15.08.1986 அன்று, இந்திய சுதந்திர தின விழாவில், சென்னை கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து ஆற்றிய உரை)

நாட்டு விடுதலைப் போரில் தூத்துக்குடிக்குத் தனிச் சிறப்புண்டு!

என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புக்களே!

இந்த விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். மக்களுக்கும் அரசுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு இருக்க வேண்டும். அதன் அடிப்படையில்தான் புதிய மாவட்டங்கள் உருவாக்க வேண்டும் என்று முடிவு எடுக்கிறேன். புதிய மாவட்டங்களுக்குச் சரித்திரச் சான்றோர்களின் பெயர்களைச் சூட்டுகிறோம். அந்த முறையில் கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் தியாக சீலர் சிதம்பரனாரைப் போற்றும் வகையில்தான், இந்தப் புதிய மாவட்டத்திற்கு சிதம்பரனார் மாவட்டம் என்று பெயர் சூட்டி உள்ளேன்.

சிதம்பரனார் மாவட்டத்துக்குத் தலைநகராகத் தூத்துக்குடி அமைந்துள்ளது. நாட்டு விடுதலைப் போரில் மாபெரும் தியாகிகளைத் தந்த பெருமை தூத்துக்குடிக்கு உண்டு. வீரபாண்டிய கட்டபொம்மனும், மகாகவி பாரதியும் பிறந்த புண்ணிய பூமி இது. சிதம்பரனார் மாவட்டம் தேசிய எழுச்சியின் சின்னமாக அமைகின்றது. இந்த மாவட்டம் எல்லாத் துறைகளிலும் தொடர்ந்து முன்னேற வேண்டும் என்று வாழ்த்துகிறேன். இம்மாவட்ட மக்களுக்கு என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடியைத் தலைநகராகக் கொண்ட சிதம்பரனார் மாவட்டத்தை மகிழ்ச்சியுடன் தொடங்கி வைக்கிறேன். ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்து வீரப்போர் புரிந்த வீரபாண்டிய கட்டபொம்மன் சுதந்திரத்திற்காகத் தன்னையும் தன் உடைமைகளையும் இழந்தார். அவருடைய நினைவாக நெல்லை மாவட்டம் இன்று முதல் 'நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்' என்று அழைக்கப்படும்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(18.10.1986 அன்று, வ.உ.சிதம்பரனார் மாவட்ட துவக்க விழாவில் ஆற்றிய உரை)

ஒற்றுமை, அமைதி, முன்னேற்றம் என்கிற உயர்ந்த நெறிகளுக்காக ஓரணியில் திரள்வோம்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே, என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புக்களே! இன்று அன்னை இந்திராகாந்தி அவர்களின் பிறந்தநாள்.

நாட்டு ஒற்றுமைக்காகத் தன் உயிரையே காணிக்கையாக்கியவர் அன்னை இந்திரா அவர்கள். அவரது மறைவை நினைக்கும்போதே என் நெஞ்சம் பதறுகிறது. வன்முறையின் கோரக்கரங்களுக்கு அவரை நாம் பறி கொடுத்துவிட்டோம்.

அவர் பிறந்த நாளைத் தேசிய ஒருமைப்பாட்டு நாளாகக் கொண்டாடுகிறோம். அன்னை இந்திரா அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைப்பதை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

நமது முன்னோர் பெரும் தியாகம் செய்து விடுதலையை நமக்குப் பெற்றுத் தந்தார்கள். இந்த விடுதலை நமக்கு நிலைத்து நிற்க, நாட்டு ஒற்றுமைதான் முதல் தேவை. மதம், மொழி, இனம் இவற்றின் பெயரால் தீய சக்திகள் ஒற்றுமையைச் சிதைத்து வருகின்றன. இத் தீய சக்திகளை எதிர்த்து உறுதியுடன் போராடுவோம்.

நாட்டு ஒற்றுமைக்குக் கேடு விளைவிப்பவர்கள் மக்களின் விரோதிகள். அவர்களை அடையாளம் கண்டு ஒதுக்கித் தள்ளுவோம். ஒருமைப்பாட்டைக் காக்க, பலம் மிக்க இந்தியாவை உருவாக்க, உலக சமாதானத்தை வளர்க்கப் பாடுபட்டு வருகின்ற பிரதமர் ராஜீவ் அவர்களின் கரங்களுக்கு நாம் வலிவு சேர்க்க வேண்டும்.

ஒற்றுமை, அமைதி, முன்னேற்றம் என்கிற உயர்ந்த நெறிகளுக்காக நாம் அனைவரும் ஓரணியில் ஒன்று திரளுவோம்.அன்னை இந்திராவின் ஒருமைப்பாட்டுக் கொள்கைக்கு உறுதுணையாக இருப்போம். வெல்க இந்தியா, வாழ்க இந்தியா ஒருமைப்பாடு.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(19.11.1986 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டு வார விழாவில் ஆற்றிய உரை)

ஏழை மக்களுக்கான திட்டங்களை நிறைவேற்ற பொதுமக்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும்!

என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே!

என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புக்களே!

அனைவருக்கும் என்னுடைய வணக்கம்.

இந்த மாபெரும் விழாவில் கலந்து கொள்வதின் மூலம் உங்களை எல்லாம் காண்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். பெரியார் மாவட்ட மக்கள் எல்லோரும் என்மீது பற்றும் பாசமும் கொண்டவர்கள். தந்தை பெரியாரின் பாரம்பரியத்தில் வளர்ந்த நீங்கள் எல்லோரும் முற்போக்கு எண்ணமும், செயல்திறனும் படைத்தவர்கள். நாட்டைத் துண்டாட நினைக்கும் தீய சக்திகளை நீங்கள் இனம் கண்டுகொள்ள வேண்டும்.

தீய சக்திகளை முழுமையாக அழிக்க நாம் எல்லோரும் மிகுந்த விழிப்புடன் பாடுபட வேண்டும். நாட்டில் அமைதியை நிலை நாட்டவும், ஒருமைப்பாட்டை வலுப்படுத்தவும் நாம் அனைவரும் அயராது பாடுபாடுவோம். ஒருமைப்பாட்டு வாரமாகிய இந்த நாளில் ஒன்றுபட்ட இந்தியாவைக் கட்டிக் காப்போம் என்று உறுதி கொள்வோம்.

தமிழ்காத்த, தமிழ்த்தலைவர்களின் பெயரால் அமைக்கப்பட்டுள்ள போக்குவரத்துக் கழகங்கள் மூலம் சித்தோட்டில் பொறியியல் கல்லூரி தொடங்குவதிலும், பெருந்துறை காசநோய் மருத்துவமனையை மருத்துவக் கல்லூரியாக மாற்றுவதிலும் நான் மனமகிழ்ச்சி அடைகிறேன். ஏழை மக்களுக்காகக் கொண்டுவரப்படும் அரசின் திட்டங்களை நிறைவேற்றப் பொதுமக்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(24.11.1986 அன்று, ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற மருத்துவக் கல்லூரி தொடக்கத்திற்கான அடிக்கல் நாட்டு விழா, பல்வேறு நலத்திட்டங்களின் தொடக்க விழா, ஜீவா போக்குவரத்துக் கழகம் சார்பில் 16 புதிய பேருந்து வழித்தடங்கள் துவக்க விழாவில் ஆற்றிய உரை)

மக்கள் முன்னேற்றமே என் மூச்சு!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

உங்களை இந்த விழாவில் காண்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இப்போது புதிய தெம்பும் உற்சாகமும் பெற்றிருக்கிறேன். நான் உங்களில் ஒருவன். நான் உங்கள் வீட்டுப்பிள்ளை. உங்களுக்காக உழைப்பவன். நான் உங்களைப் பாதுகாப்பதில் காவல்காரன். உங்கள் முன்னேற்றமே என் மூச்சு. என்னுடைய உயிர், உடல் அனைத்தையுமே உங்கள் வளர்ச்சிக்காக அர்ப்பணித்திருக்கிறேன்.

மக்கள் என்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். மக்களையும் என்னையும் எவராலும் பிரிக்க முடியாது. மக்களுக்காக நான் செய்யும் வளர்ச்சிப்பணிகளை யாரும் எந்த வழியிலும் தடுக்க முடியாது. நாட்டில் அமைதியைக் கட்டிக்காப்போம். வன்முறையையும் பயங்கரவாதத்தையும் ஒழிப்போம்.

நான் உருவாக்கும் வளர்ச்சித் திட்டங்கள் உங்களுக்கு முழுப் பலனளிக்கவேண்டும். இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முறைகேடுகள் இருந்தால் சொல்லுங்கள். அவர்கள் யாராக இருந்தாலும் கண்டிப்பாக தண்டிக்கப்படுவார்கள்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(31.12.1986, 01.01.1987 மற்றும் 02.01.1987 ஆகிய நாட்களில் மதுரை மாவட்டத்தில் அரசின் திட்டங்களைத் தொடக்கி வைத்து ஆற்றிய உரை)

பாரதியார் மகாகவி!

மேதகு இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் அவர்களே! மாண்புமிகு பிரதமர் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! என்னை வாழ வைக்கும் தெய்வங்கள் ஆகிய தாய்மார்களே! என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புக்களே!

நம் தேசிய மகாகவி பாரதியாரின் திருவுருவச்சிலையை நமது பிரதமர் இந்த டெல்லி மாநகரில் இன்று திறந்து வைக்கிறார்கள். அவருக்கு என் நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் பாரதியார் ஒரு
மகாகவி
மக்கள் கவி
வீரக் கவி
விடுதலைக் கவி
தேசியக் கவி
நமது நாட்டைப் பிடித்திருந்த
அடிமைத்தனம்
வறுமை
அறியாமை
மூட நம்பிக்கை

இவை எல்லாம் அகல வேண்டும் என்று போராடியவர்.
"சேதம் இல்லாத இந்துஸ்தானம் – இதைத்
தெய்வம் என்று கும்பிடடி பாப்பா"
"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே"

என்று இந்திய ஒருமைப்பாட்டின் அவசியத்தை எழுபது ஆண்டுகளுக்கு முன்பே வலியுறுத்தி இருக்கிறார். விடுதலைக்குப் பின், ஒளி பொருந்திய இளைய பாரதம் உருவாக வேண்டும் என்று பாரதியார் பாடினார். பெண் உரிமைக்கும், விடுதலைக்கும் பாரதியார் அன்றே தமது பாடல்களின் மூலம் உரத்த குரல் கொடுத்தார்.

இன்று நமது பிரதமர் அவர்கள் இளைய பாரதத்தின் தலைவராக இருந்து பாரதியாரின் எண்ணங்களை உண்மை ஆக்கிக்கொண்டு வருகிறார்கள். பாராதியாரின் சிலை இன்று நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டத்தில் திறந்து வைக்கப்படுகிறது.

இந்திய ஒற்றுமையைக் காப்பாற்றவும்,

நாட்டைப் பலப்படுத்தவும்,

தீய சக்திகளை ஒழிக்கவும்,

அமைதியைக் கட்டிக்காக்கவும்,

நமது பிரதமர் எடுக்கும் எல்லா முயற்சிகளுக்கும் தமிழ்நாடு எப்போதும் துணை நிற்கும் என்று உறுதியளிக்கிறேன்.

பிப்ரவரி நான்காம் தேதி என் வாழ்வில் மறக்க முடியாத நாள்.

அன்னை இந்திரா காந்தியின் அனைத்து உதவியாலும், நமது பிரதமரின் உதவியாலும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இதே தேதியில்தான் சிகிச்சை பெற்றுத் தாயகம் திரும்பி வந்தேன்.

அவர்கள் இருவருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரதியாரின் சிலையைத் திறந்துவைக்கும் இந்த நாள் இந்திய மக்களுக்கு மட்டும் அல்லாமல் உலக மக்கள் எல்லோருக்கும் ஒரு பொன்னான நாள் ஆகும்.

இந்தப் பொன்னான நாளில் பாரதியார் தம் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்திச் சொன்ன கொள்கைகளை நாம் தவறாமல் கடைப்பிடிப்போம் என்று உறுதி எடுத்துக் கொள்வோம்.

பாரதியார் புகழ் ஓங்குக!

அன்னை இந்திரா நாமம் வாழ்க!அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(04.02.1987 அன்று, புதுடெல்லியில் தேசிய மகாகவி சுப்பிரமணிய பாரதியார் திருவுருவச்சிலை திறப்பு விழாவில் ஆற்றிய உரை)

அரசின் வளர்ச்சிப் பணிகளின் பலனை முழுமையாக மக்கள் பெறவேண்டும்!

என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புகளே!

இந்த மாபெரும் விழாவில் கலந்து கொண்டு உங்களைக் காண்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாவட்ட மக்கள் எல்லோரும் என் மீது மிகுந்த அன்பும், பாசமும் பற்றும் கொண்டவர்கள். உங்களையெல்லாம் காணவேண்டும் என்ற என்னுடைய நீண்டநாள் ஆசை இன்று நிறைவேறியது. உங்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவன் நான். உங்கள் முன்னேற்றத்திற்காக என் வாழ்நாள் முழுவதும் பாடுபடுவேன்.

தருமபுரி மாவட்டம் ஒரு பின் தங்கிய மாவட்டம். இந்த மாவட்ட முன்னேற்றத்திற்காக இந்த அரசு பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. நான் போடும் திட்டங்களுக்கு முழுமையான பலன் கிடைக்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டவன் நான்.

திட்டங்களை அமல்படுத்துவதில் தவறுக்கு யார் காரணமாக இருந்தாலும் அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்க நான் தயங்கமாட்டேன். நீங்கள் எல்லோரும் நான் செயலாற்றும் திட்டங்களுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும்.

எங்கே, யார் தவறு செய்தாலும் அவற்றைக் கண்டிப்பாக என் கவனத்திற்கு நீங்கள் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தருமபுரி மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கு ஒசூர் நகரில் ஒரு தொழிற்பேட்டை மையம் அமைக்கப்பட்டது. தொழிற்கூடங்கள் நடத்த முன்வருபவர்களுக்கு அரசு பல சலுகைகள் கொடுத்து அனுமதி அளித்து வருகிறது. இந்த மாவட்டத்தைத் தொழில் நிறைந்த பகுதியாக ஆக்க நான் எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறேன். இங்கு வாழும் மக்களுக்கு அரசு பல வளர்ச்சித் திட்டங்களைச் செய்து கொடுக்கிறது. இந்த வளர்ச்சிப் பணிகளின் பலனை முழுமையாக நீங்கள் பெற வேண்டும்.

வள்ளல் அதியமான் ஆண்ட இந்த ஊரில் உங்களை எல்லாம் காண்பதில் என் உடல் புல்லரிக்கின்றது.

உங்கள் பரந்த உள்ளத்தில் நான் இடம்பெற்று இருப்பது நான் பெற்ற பேறு. இந்த மாவட்டம் நன்கு வளர வேண்டும். அந்த வளர்ச்சியின் பயன்களை நீங்கள் பெற வேண்டும். இதுதான் என்னுடைய குறிக்கோள். இந்த மாவட்டத்தின் வளர்ச்சிக்காகப் பல நல்ல திட்டங்களைப் போட்டு வருகின்றேன். அந்த வகையில்

பொதுப்பணித்துறையின் சார்பில் சுமார் ரூ.6 கோடி செலவில் தொப்பையாறு நீர்த்தேக்கம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சுமார் ரூ.3 கோடியே 13 இலட்சம் செலவில் நாகாவதி நீர்த்தேக்கம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த 2 நீர்தேக்கத்தின் மூலம் 6 ஆயிரத்து 600 ஏக்கர் நிலங்கள் நல்ல நீர்ப்பாசன வசதிபெறும்.

ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ஆதிதிராவிடர்கள் குடியிருப்புகள் மற்றும் பல வளர்ச்சிப்பணிகள் சுமார் ரூ. 1 கோடி செலவிடப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.1 கோடியே 40 இலட்சம் செலவில் பல வளர்ச்சிப்பணிகள் செய்து முடிக்கப்பட்டு இருக்கின்றன. வீட்டுவசதி வாரியம் மூலமும் மற்றும் பலதுறைகளின் சார்பிலும் சுமார் ரூ.4 கோடியே 75 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட இருக்கும் பல திட்டங்கள் இன்று தொடங்கி வைக்கப்பட்டு இருக்கின்றன. இந்த வளர்ச்சிப் பணிகளின் பயனை நீங்கள் அடையும் பொருட்டு உங்களுக்குக் காணிக்கை ஆக்குகிறேன்.

வேளாண்மை மற்றும் தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய இந்த மாவட்டத்தை முன்னேற்றமடையச் செய்ய பல நல்ல திட்டங்களை நான் செயல்படுத்தி வருகிறேன். நான் உங்களில் ஒருவன். உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவன் நான். என் உயிர்மூச்சு உள்ளவரை உங்களுக்காகவே உழைப்பேன். எந்தச் சக்தியும் என்னை உங்களிடமிருந்து பிரிக்க முடியாது.

அப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபட்ட சக்திகளுக்குச் சரியான பாடம் புகட்டி வருகிறீர்கள். பல கோடி செலவில் தொடங்கப்படும் இத்திட்டங்களை எல்லாம் இந்தப் பகுதி மக்களுக்கு நான் பெருமையுடன் காணிக்கை ஆக்குகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

(10.02.1987, 11.02.1987 மற்றும் 12.02.1987 ஆகிய நாட்களில் தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை)

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசு மக்களுக்காகப் பாடுபடும் அரசாக இருக்க வேண்டும்!

என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழி நடத்திச்செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புகளே!

வாழப்பாடியில் இன்று நடைபெறும் இந்த விழாவில் கலந்துகொண்டு உங்களை சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மக்களால் தேர்ந்து எடுக்கப்படும் ஓர் அரசு மக்களின் வளர்ச்சிக்காகப் பாடுபடும் அரசாக இருக்க வேண்டும். பசியால் வாடும் சிறுவர்களுக்குப் பசி நீங்க உணவு கிடைக்க வேண்டும்.

ஆதரவு இல்லாத வயதான ஏழை மக்களின் பசிப்பிணியைப் போக்க வேண்டும்.

இதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்தியே ஆகவேண்டும். பள்ளியில் படிக்கும் ஏழை மாணவர்கள் படிப்பு தடைப்படாமல் இருக்க இலவசப் பாடப்புத்தகங்களும் இலவச சீருடையும் வழங்குகிறோம்.

இந்தத் திட்டங்களால் பள்ளியில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. வசதியின்மையால் படிப்பைப் பாதியில் நிறுத்தும் மாணவர்களின் தொகை வெகுவாகக் குறைந்து வருகிறது.

பல இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்கள் குடியிருக்க வீடுகள் இல்லாமல் வெட்ட வெளிகளிலும், தெரு ஓரங்களிலும் குடியிருக்கிறார்கள். அவர்கள் வெயிலாலும் மழையாலும் பாதிக்கப்பட்டுத் தவிக்கிறார்கள். அவர்களுடைய துயர்போக்கும் விதத்தில் 3 ஆண்டுகளில் 30 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

இன்று மொத்தம் 43 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் பல நல்ல திட்டங்கள் இந்தப் பகுதி மக்களுக்காக நிறைவேற்றப்பட்டு திறக்கப்படவும், தொடங்கப்படவும் இருக்கின்றன. இவற்றை உங்களுக்குக் காணிக்கை ஆக்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!

(06.03.1987 அன்று, சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற விழாவில்,
பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை)

ஏழை, எளிய மக்களுக்கான திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது!

என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புகளே!

இன்று தாரமங்கலத்தில் நடைபெறும் இந்த விழாவில் பங்கேற்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். இந்த விழாவின் மூலம் உங்களைச் சந்திப்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஏழை, எளிய மக்களுக்கு நல்ல பலனளிக்கும் திட்டங்களை அந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்த அரசு வேறு எங்கும் காணாத வகையில் சத்துணவுத் திட்டத்தை சிறப்பான முறையில் நிறைவேற்றி வருகிறது. பள்ளி மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகமும், சீருடையும் வழங்குகிறோம். குடியிருக்க வீடு இல்லாமல் அவதிப்படும் ஏழை, எளிய மக்களுக்கு 3 ஆண்டுகளில் மொத்தம் 30 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். இதன் மூலம் பல இலட்சம் ஏழை, எளிய மக்களுக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

வீட்டுவசதி வாரியம், வேளாண்மைத் துறை, ஊரக வளர்ச்சித்துறை இவற்றின் மூலம் ரூ.2 கோடியே 88 இலட்சம் செலவில் பல திட்டங்கள் தொடங்கிவைக்கப்படவும் திறந்து வைக்கப்படவும் இருக்கின்றன. இவற்றை உங்களுக்கு அர்ப்பணிப்பதில் நான் பெருமை அடைகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

நன்றி! வணக்கம்!

(08.03.1987 அன்று, சேலம் மாவட்டம் தாரமங்கலத்தில் ஆற்றிய விழா நிறைவுச் சிறப்புரை)

மக்கள் முன்னேற்றமே என்னுடைய குறிக்கோள்!

என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புகளே!

நான் அமெரிக்காவில் இருந்து உடல் நலம் பெற்றுத் திரும்பி வந்தேன். 2 ஆண்டுகள் கழித்து இன்று உங்களைக் காண்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் உடல் நலம் பெறுவதற்கு அன்னை இந்திராகாந்தி அவர்களும் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களும் எனக்கு எல்லா உதவிகளும் செய்தார்கள். அவர்களுக்கு என் நன்றி !

நீங்கள் எல்லோரும் என் மீது அக்கறையும், நம்பிக்கையும் உள்ளவர்கள். நான் உங்களில் ஒருவன். உங்களுக்காக உழைப்பவன் நான். உங்கள் முன்னேற்றமே என்னுடைய குறிக்கோள் ஆகும். தீயசக்திகளை ஒழிப்போம். என்னுடைய இந்தக் குறிக்கோளுக்குத் தடையாகச் சில தீய சக்திகள் வேலை செய்கின்றன; வன்முறையைத் தூண்டுகின்றன; அமைதியைக் கெடுக்கின்றன; ஒற்றுமையைக் குலைக்கின்றன.

அந்த தீய சக்திகளை ஒழிக்க, வன்முறையை நீக்க, அமைதியைப் பாதுகாக்க, ஒற்றுமையைப் பாதுகாக்க நீங்கள் எல்லோரும் அரசுடன் ஒத்துழைக்க வேண்டும்.

கடந்த சில நாட்களாக இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது கடுமையான விமானத் தாக்குதல் நடத்தி வருகிறது. ஜெயவர்த்தனாவின் இந்தக் கொடூரச் செயல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இதற்கு விரைவில் நல்ல தீர்வு காணும் பொருட்டு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று நம் பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளேன். இந்த அரசு ஏழைகளின் துயர் போக்கும் நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குழந்தைகளுக்கும், ஆதரவில்லாதவர்களுக்கும் சத்துணவுத் திட்டம், இலவசப் பாடப்புத்தகம் மற்றும் சீருடைத் திட்டம் இவற்றைச் சிறப்பாக நடத்தி வருகிறோம்.

வீடு இல்லாத ஏழை, எளிய மக்களுக்கு 30 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம், ஏழைத் தாய்மார்களுக்கும் பள்ளி மாணவர்களுக்கும் இலவசமாகக் காலணிகள் வழங்கும் திட்டம் ஆகியவை அமல்படுத்தப்படும்.

இந்தத் திட்டங்களினால் 60 இலட்சம் தாய்மார்கள், 60 இலட்சம் பள்ளி மாணவர்கள் பயன் அடைவார்கள். ஆயிரக்கணக்கான காலணி செய்யும் தொழிலாளிகளுக்கு நிரந்தர வேலை கிடைக்கும்.

அண்ணா நாமம் வாழ்க ! நன்றி வணக்கம் !

(09.03.1987 அன்று, சங்ககிரியில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை)

அனைத்து கிராமங்களும் குடிநீர் கிடைக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம்!

என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புகளே! இன்று இந்த விழாவில் கலந்து கொண்டு பேசுவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

என்னுடைய ஆட்சியில் கிராமப்புற மற்றும் நகர்ப்புறக் குடி தண்ணீர்த் திட்டத்துக்கு இதுவரையில் ரூ.394 கோடி செலவு செய்து இருக்கின்றனர்.

இதற்கு முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் மொத்தம் ரூ.47 கோடி தான் குடிநீருக்காகச் செலவு செய்து இருக்கின்றனர். தொடர்ந்து பருவமழை தவறியதால் இந்த ஆண்டு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

உடனடி நடவடிக்கையாக ரூ.28 கோடி செலவில் கிராமம் தோறும் புதிய கிணறுகள் வெட்டுவதற்கு உத்தரவு போட்டு இருக்கிறேன். வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசிடம் ரூ.347 கோடி உதவி கேட்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் எல்லா கிராம மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கும் வகையில் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம்.

ஆலந்தூர், பல்லவபுரம், பம்மல், சிட்லப்பாக்கம், அனகாபுத்தூர், தாம்பரம் விமானப்படைத்தளம், வண்டலூர் பூங்கா, பரங்கிமலை, கன்டோன்மென்ட் ஆகிய பகுதிகளில் சுமார் 2 இலட்சத்துக்கு அதிகமான மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கும்.

வீடு இல்லாமல் அவதிப்படும் மக்களுக்கு 30 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தில் பல இலட்சம் ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

ஏழைத் தாய்மார்களுக்கும், பள்ளிச்சிறார்களுக்கும் காலணி வழங்கும் திட்டத்தால் 60 இலட்சம் தாய்மார்களும் 60 இலட்சம் சிறார்களும் பயன் அடைவார்கள். காலணி அணிவது சுகாதார முறைப்படி நல்லது. கொக்கிப் புழுவால் வரும் இரத்தச் சோகை நோய் தடுக்கப்படும். இந்தத் திட்டத்தால் ஆயிரக்கணக்கான ஏழை செருப்புத் தைக்கும் தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

அண்ணா நாமம் வாழ்க!

நன்றி வணக்கம்!

(12.03.1987 அன்று, செங்கல்பட்டு மாவட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியத்தின் பணிகள் துவக்க விழாவில் ஆற்றிய உரை)

நாடு போற்றும் நல்லவர்!

பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் இமயம் போன்றவர். நெருக்கடியான நேரங்களிலும் நிலை குலையாத மன உறுதி கொண்டவர். தியாகம், தொண்டு, நேர்மை, அஞ்சாமை இவற்றிற்கு அவர் ஓர் எடுத்துக்காட்டு.

எனக்கும், இந்த அரசுக்கும் தக்க சமயங்களில் அரிய யோசனைகளை அளித்து வந்தவர் பெரியவர் பக்தவத்சலம், அவர் நல்லவர். நாடு போற்றும் உத்தமர். கடமையே பெரிது என்று வாழ்ந்தவர், நாட்டுக்காக அயராது பாடுபட்டவர்.

இளமைக் காலத்திலேயே தம்மைத் தேசத் தொண்டுக்கு அர்ப்பணித்துக் கொண்டவர். எழுபது ஆண்டு காலம் பொது வாழ்வில் ஈடுபட்டவர், அவரது மறைவு நமக்கு ஈடுகட்ட முடியாத ஓர் இழப்பு. அவரது மறைவால் பொது வாழ்வில் ஒரு வெற்றிடம் உருவாகிவிட்டது. அதை நிரப்புவது கடினம். அவரது குடும்பத்தினருக்கும், மற்றவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(13.03.1987 அன்று, சென்னை இராஜாஜி மண்டபத்தில் பெரியவர் பக்தவத்சலம் அவர்களின் இரங்கல் கூட்டத்தில் ஆற்றிய உரை)

என் மீது அக்கறைகாட்டி வருபவர் எழுதிய நூல்!

என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புகளே! மேதகு ஆளுநர் அவர்களின் 'ஒரு புதிய நெறியை நோக்கி' என்ற புத்தகம் இன்று வெளியிடப்படுகிறது. இந்த விழாவில் கலந்துகொண்டு இந்தப் புத்தகத்தை வெளியிடுவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

நமது ஆளுநர் அவர்கள் எனது நண்பர், உடன்பிறவாச் சகோதரர். என் உடல்நலம் சரியில்லாத நேரத்தில் என்மீது மிகுந்த அக்கறைகாட்டி என் நல்வாழ்வுக்கு வழி வகுத்த நல்லவர்களுள் ஒருவர். அவர் எழுதிய இந்தப் புத்தகத்தை வெளியிடுவதை எனக்குக் கிடைத்தபேறாகக் கருதுகிறேன்.

நமது ஆளுநர் அவர்கள் பல பதவிகளில் இருந்து சிறந்த பணியாற்றி இருக்கிறார். மிகுந்த செயல்திறன் மிக்க தலைமைச் செயலாளராக இராஜஸ்தான் மாநிலத்தில் பணியாற்றி இருக்கிறார். தகுந்த சமயங்களில் எனக்கும், இந்த அரசுக்கும் சிறப்பான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கி வருகிறார்.

இந்தப் புத்தகத்தைப் படிக்கும்போது ஒவ்வொரு துறையிலும் அவருக்கு இருக்கும் அறிவுத்திறன் நம்மை வியக்கவைக்கிறது. கல்வி, மருத்துவ வசதி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், தொழில் வளர்ச்சி மற்றும் நிருவாகம், சட்டம், நீதி, ஒழுங்கு மற்றும் பத்திரிக்கைத்துறை, நிருவாகத்திறனில் உள்ள சவால்கள், மதம், கலை மற்றும் பண்பாடு ஆகிய அத்தியாயங்களில் அரசின் கொள்கைகள் அரசு ஆற்றிவரும் மக்கள் நலப்பணிகள், மேலும் முன்னேறச் செய்யவேண்டிய ஒழுங்குமுறை நடைமுறைகள் ஆகியவற்றைப் பற்றித் தெளிவாக விளக்கிக்கூறி இருக்கிறார்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நூல் நிலையங்களும் இந்தப் புத்தகத்தை வாங்க வேண்டும். மக்கள் எல்லோரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

(08.04.1987 அன்று, ஆளுநர் மாளிகையின் தோட்டத்தில் நடைபெற்ற, "ஒரு புதிய நெறியை நோக்கி" என்ற தலைப்பிலான 59 சொற்பொழிவுகள் அடங்கிய நூல் வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை)

என்னை மக்களிடமிருந்து யாராலும் பிரிக்க முடியாது!

என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புகளே! தஞ்சை மாவட்ட மேம்பாட்டுக்குப் பின் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறேன். இவற்றின் முழுப் பலனும் உங்களுக்குக் கிடைக்க வேண்டும். இந்த ஆலை மூலம் 500 பேருக்கு நேரடியாகவும், 500 பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பளிக்கப்படுகிறது.

சீர்காழி பழையாற்றில் ரூ.2.5 கோடி செலவில் மீன்பிடி துறைமுகம் துவக்கி வைக்கப்படுகிறது. இதைத் துவக்குவதன் மூலம் பலரும் பயனடைந்திருக்கின்றனர். இந்தத் துறைமுகத்தில் 100 படகுகள் தங்கலாம். இங்கு ஆண்டு ஒன்றுக்கு 500 டன் இறால், 1,500 டன் மீன்கள் பிடிக்கப்படும். இதன் மூலம் ரூ.3 கோடி வருமானம் கிடைக்கும்.

தவிர தற்போது ரூ.1 கோடியே 50 இலட்சம் செலவில் சீர்காழி கழிவுநீர் துப்புரவுப் பணிகளும் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. மேலும், நெடுஞ்சாலை, கிராமப் பணிகள், கால்நடைப் பராமரிப்பு, பால் வளர்ச்சி, போக்குவரத்து, தொழில்துறை ஆகியவற்றின் சார்பில் ரூ.90 இலட்சம் செலவில் பல திட்டங்களையும் துவக்கி உள்ளேன்.

மற்றும் ரூ.4 இலட்சம் செலவில் பல பணிகளை இங்கு துவக்கி வைத்துள்ளேன். இத்திட்டங்களின் பயன்கள் உங்களைப் போய்ச் சேர வேண்டும். 80 இலட்சம் குழந்தைகளுக்கு இலவச சத்துணவு, பாடப்புத்தகம், சீருடை அளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறேன். சிறு விவசாயிகளுக்கும் குடிசை வாசிகளுக்கும் இலவச மின்சாரம் அளித்து வருகிறேன்.

வெயிலிலும் மழையிலும் அவதிப்பட்டு, தங்குவதற்கு இடமில்லாமல் பாதிக்கப்பட்டு வரும் மக்களுக்கு 30 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறேன். கல், முள், வெயில் ஆகியவற்றில் பாதிக்கப்படாமல் இருக்க 80 இலட்சம் தாய்மார்களுக்கும், 60 இலட்சம் பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் இலவசக் காலணி வழங்கும் திட்டத்தைக் கொண்டுவந்துள்ளேன்.

விவசாயிகள் கடன் சுமையைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவர்கள் கட்டவேண்டிய அபராத வட்டி ரூ.125 கோடியைத் தள்ளுபடி செய்தேன். அசல்தொகை கட்டவேண்டிய காலக் கெடுவை 6 மாதத்துக்குத் தள்ளியும் வைத்துள்ளேன்.

காவிரி நீர்ப் பங்கீடு குறித்து உடனடித்தீர்வு ஏற்படவேண்டும் என்பதற்காக நடுவர் மன்றம் (டிரிபியூனஸ்) அமைக்க வேண்டும் என்று பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளேன்.

நான் உங்களில் ஒருவன். உங்களுக்காக உழைப்பவன். என்னை உங்களிடம் இருந்து யாரும் பிரிக்க முடியாது என்று கூறினார்.

அண்ணா நாமம் வாழ்க!

(15.04.1987 அன்று, தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் புதிய நூலகக் கட்டடத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை)

பாமரரைப் படிக்க வைத்த பத்திரிக்கையாளர்!

என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புக்களே!

மறைந்த பெரியவர் சி.பா. ஆதித்தனார் அவர்களுடைய சிலையைத் திறந்து வைக்கும் வாய்ப்புக் கிடைத்ததற்கு நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆதித்தனார் அவர்களுடைய வாழ்க்கையே தமிழ் வாழ்க்கை ஆகும். இலண்டனில் படிக்கும் போதே தமிழ் ஏடுகளுக்கு நிருபராகப் பணியாற்றி வந்தார். நாட்டு விடுதலை இயக்கத்தை ஆதரித்தார். அப்போது 'தமிழன்' என்ற வார இதழ் தொடங்கினார். யுத்த காலம் ஆனதால், காகிதப் பஞ்சம் வாட்டியது. அப்போதே கையால் செய்த காகிதத்தில் 'தமிழன்' ஏட்டை வெளியிட்டார்.

பின்னர் தமிழில் நாளேடு தொடங்கினார். மாவட்டத் தலைநகரங்களில் மாலை நேர நாளேடுகளை முதன் முதலாகத் தொடங்கியவர்.

எழுதப்படிக்க தெரியாத ஏழை மக்கள் எழுத்துக்கூட்டிப் படிக்கத்தக்க வகையில் எளிய தமிழில் 'தினத்தந்தி' பத்திரிகையை நடத்தினார்.

எந்த ஒரு செய்தி ஆனாலும் அதனை கதை போலச் சொல்வது என்ற வாடிக்கையை முதலில் கையாண்டவர், ஆதித்தனார்.

பல கல்வி நிலையங்களை விட ஆதித்தனார் நடத்திய பத்திரிகைகளால் எழுத்து அறிவு, படிப்பு அறிவு பெற்றவர்கள் ஏராளம். அவர் ஐம்பத்தி இரண்டாம் வருடத்தில் மேல்சபை உறுப்பினராக இருந்தபோது, கோவில்களில் உயிர்ப்பலி கொடுப்பதை தடுக்கத் தனிநபர் மசோதா (சட்டம்) கொண்டு வந்து நிறைவேற்றினார்.

மொழிப் பிரச்சினையில் அறிஞர் அண்ணா எடுத்த முயற்சிகளுக்கு ஆதித்தனார் துணை நின்றார். தமிழ்நாட்டில் 1967ஆம் ஆண்டில் அரசியல் மாற்றம் நிகழ்ந்த நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு 'தினத்தந்தி' பத்திரிக்கை வாயிலாக முழு ஆதரவையும் அளித்தார். தமிழ்நாடு சட்டமன்ற சபாநாயகராகத் திறமையாகச் செயலாற்றினார். அமைச்சராக இருந்து தனது நிருவாகத் திறமையைக் காட்டினார்.

இலங்கைத் தமிழ் மக்களுக்காக 30 ஆண்டுகளுக்கு முன்பே குரல் கொடுத்த பெருமை அவருக்கு உண்டு. ஆதித்தனார் அவர்கள் நிறுவிய 'தினத்தந்தி' நாளேடு அவருடைய சீரிய குறிக்கோள்களுக்காக இன்றும் பணி ஆற்றி வருவதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆதித்தனார் அமைத்த நிறுவனங்களை, அவரது புதல்வர் சிவந்தி ஆதித்தன் அவர்கள் கட்டிக்காத்து வருவதுடன் மெச்சத்தகுந்த வகையில் வளர்த்தும் வருகிறார்.

சிவந்தி ஆதித்தன் அவர்களுடைய தீவிர முயற்சியால் இன்று அவருடைய தந்தையின் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்படுகிறது.

அமரர் ஆதித்தனாருடைய இந்தச் சிலை நமக்கு எல்லாம் உழைப்பையும், தமிழ்ப் பற்றையும் நினைவூட்டிக்கொண்டு இருக்கும் என்று நம்புகிறேன். இந்த விழாவுக்கு என்னை அழைத்தவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதித்தனாரின் நினைவுக்கு என் அஞ்சலியைச் செலுத்தி, அவருடைய உருவச் சிலையை மகிழ்ச்சியுடன் திறந்து வைக்கிறேன். இன்று முதல் ஆரிஸ் சாலை ஆதித்தனார் சாலை என்று அழைக்கப்படும்.

அண்ணா நாமம் வாழ்க!

(24.05.1987 அன்று, சென்னையில் நடைபெற்ற 'தினத்தந்தி' நிறுவனர் சி.பா. ஆதித்தனாரின் முழு உருவச்சிலையைத் திறந்து வைத்து ஆற்றிய உரை)

மக்கள் சேவையில் ஈடுபட முழுமையாக அர்ப்பணித்துக் கொள்வோம்!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புக்களே!

தமிழக மக்களாகிய நீங்கள் அளித்த மகத்தான தீர்ப்பை ஏற்று நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, பேரறிஞர் அண்ணாவின் அரசை அமைத்து 10 ஆண்டுகள் நிறைவுற்றுப் பதினோராவது ஆண்டினைத் தொடங்கும் இந்த இனிய நன்னாளில் உங்கள் அனைவருக்கும் என் நன்றியினையும், வணக்கங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடக்கி வைக்கப்பட்ட மக்கள் சக்தி சுதந்திர வடிவம் பெற்று 1972இல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு பெரிய இயக்கமாக மலர்ந்தது. நிறுவப்பட்டு ஐந்தாண்டுகள் முடியுமுன்பே அமரர் பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளை நிலை நிறுத்த இந்த இயக்கத்திடம் நீங்கள் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தீர்கள். தொடர்ந்து நடைபெற்ற மூன்று பொதுத் தேர்தல்களின் முடிவும் என் மீதும் இந்த அரசின் மீதும் உங்களுக்கு உள்ள அசைக்க இயலாத நம்பிக்கையை ஆணித்தரமாக உலகிற்கு எடுத்துக் காட்டின.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசினை மக்கள் கட்டளைப்படி நான் தலைமையேற்று நடத்தி வந்துள்ள 10 ஆண்டுகளைத் திரும்பிப் பார்க்கிறேன். மக்களின் பேராதரவு இருந்ததால்தான் தனித்தன்மை வாய்ந்த பல அரிய சாதனைகளைச் செய்ய முடிந்தது. ஏழைக் குழந்தைகளின் பசிப்பிணி அகல சத்துணவுத்திட்டம், கிராமங்களுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் அளிக்கத் தன்னிறைவுத் திட்டம், நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்கு வீடு வழங்கும் திட்டம், சிறு விவசாயிகளுக்கு இலவச மின்வசதி, தாய்சேய் நலத்திட்டங்கள், படித்து வேலையற்றோருக்கு நிவாரண உதவி, தொழிலாளர்கள் நலம் காக்கும் சட்டங்கள் இயற்றியது போன்ற திட்டங்களை இந்த அரசு முனைப்புடன் செயல்படுத்தியது.

கிராம மக்கள், நலிந்த பிரிவினர், தாய்மார்கள், உழைக்கும் தொழிலாளிகள் ஆகியோர் வாழ்க்கைத் தரம் மேம்பட, சிறப்புத் திட்டங்கள் பல தீட்டி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாண்டு செயல்படுத்தப்பட உள்ள இலவச காலணித் திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாகும். இயற்கை அன்னையின் சீற்றங்களும், தொடர்ந்த வறட்சியும் தமிழகத்தைத் தாக்கினாலும், கடந்த பத்து ஆண்டுகளாக உணவு உற்பத்தி பெருகியதோடு, விலைவாசியும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பல்வேறு சோதனைகளுக்கும் இடையே தளரா முயற்சியோடு மின் உற்பத்தியைப் பெருக்கி உள்ளோம். தொழில்துறை உற்பத்தியிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம்.

வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை 1972 – 1973ஆம் ஆண்டில் 59.7 சதவீதமாக இருந்தது. அரசின் பல்வேறு முன்னேற்றத் திட்டங்கள் பயனால் அது 1983 – 1984இல் 39.6 சதவீதமாகக் குறைந்துள்ளது.

கண்மூடித்தனமான எதிர்ப்புகள், காட்டுமிராண்டித்தனமான காழ்ப்பு உணர்ச்சிகள், தீய சக்திகளின் அறைகூவல்கள், ஒற்றுமையைக் குலைக்கும் முயற்சிகள் இவற்றையெல்லாம் எதிர்த்துப் போராடி, சட்டம் ஒழுங்கு முழுமையாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மத, சமூக ஒற்றுமைகளைக் கட்டிக் காத்து, பிறருக்கு முன்னோடியாகச் செயல்பட்டு வருகிறது இந்த அரசு.

தமிழகத்தின் உரிமைகளைக் காத்து மாநில முன்னேற்றத்திற்காகப் பல்வேறு நலன்களைப் பெற மத்திய அரசிடம் போராடும் அதே சமயம், தேசிய ஒருமைப்பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்து, மத்திய மாநில நல்லுறவை இந்த அரசு வளர்த்து வருகின்றது.

எனினும் குறைகூறியே பழக்கப்பட்ட சில தீயசக்திகள், அரசின் கவனத்தைத் திசை திருப்ப, சில விரும்பத்தகாத முறைகளைக் கையாள்கின்றன. அத்தகைய தீயசக்திகளின் எதிர்ப்புகளை முறியடித்து, தொடர்ந்து மக்கள் சேவையில் ஈடுபட முழுமையாக நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம் என்பதே இந்த 11ஆம் ஆண்டு தொடக்க நாளில் நாம் எடுத்துக் கொள்ளும் உறுதியாகும்.

தமிழக மக்களே!

உங்களில் ஒருவனாகிய என்னை, உங்களிடமிருந்து எந்தச் சக்தியாலும் பிரிக்க இயலாது எனும் உண்மை, வரலாற்றுப் பேருண்மையாகட்டும். எங்கள் பணி சிறக்க உங்கள் நல்லாசிகளை நல்கிடுவீர்.

அண்ணா நாமம் வாழ்க!

❖ ❖ ❖

(30.06.1987 அன்று அமைச்சரவையின் 10ஆவது ஆண்டு விழாவில் ஆற்றிய உரை)

வாழ்க சுதந்திரம்!
வணங்குவோம் தியாகிகளை!

நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புக்களே! இந்தியச் சுதந்திரத் திருநாளையொட்டி உங்கள் அனைவருக்கும் என் நல்வாழ்த்துகளையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விடுதலை பெற்ற இந்தியா இன்று தனது நாற்பதாண்டு நிறைவை விழாவாகக் கொண்டாடுகிறது. இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகத் தங்கள் உடல், பொருள், ஆவி, அனைத்தையும் அர்ப்பணித்த இலட்சக்கணக்கான தியாகிகளுக்கு இந்நாளில் நமது அஞ்சலியைக் காணிக்கை ஆக்குவது நமது நீங்காக் கடமை ஆகும்.

சுதந்திர இந்தியா இன்று உலகின் மிகப்பெரிய சக்தியாக எழுந்து வருகிறது. சமாதான சகவாழ்வு என்கிற மிகப்பெரிய குறிக்கோளுக்கு நமது நாடு குரல் கொடுத்து வருகிறது. கடந்த நாற்பதாண்டுகளில் விவசாயம், தொழில் வளர்ச்சி, கல்வி, பாசனம், மின்உற்பத்தி, போக்குவரத்து போன்ற எல்லாத் துறைகளிலும் பெருத்த முன்னேற்றம் கண்டுள்ளோம். என்றாலும் வறுமை, அறியாமை, சமூகக் கொடுமைகள், வேலையின்மை போன்ற தீமைகளுக்கு எதிராக நாம் தொடர்ந்து போராடி வருகிறோம்.

மைய, மாநில அரசுகள் நிறைவேற்றும் வளர்ச்சித் திட்டங்கள் சரிவரச் செயல்படச் செய்வதும், அவற்றின் பயன் மக்களைச் சென்றடைவதை உறுதி செய்வதும் நமது ஆக்கப்பூர்வமான கடமைகள் ஆகும்.

ஒற்றுமையும், முயற்சியும், உழைப்பும் இல்லாமல் முன்னேற்றம் இல்லை என்பதை முன்னேறிய நாடுகளின் வரலாறு நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

இந்நிலையில் நமது ஒன்றுபட்ட சக்தியின் வலிமையைக் குலைக்கும் வகையில் மதவெறியும், சாதிவெறியும், வன்முறைவெறியும் தலைதூக்கி வருகின்றன. இந்தத் தீய சக்திகளை அடியோடு ஒழிக்க நாம் தொடர்ந்து போராட வேண்டும். இந்தப் போராட்டத்தின் வெற்றியால்தான் நாட்டின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை இந்த ஆண்டு விடுதலை விழாவை ஓரளவு நிம்மதியுடன் கொண்டாடும் நிலை உருவாகியுள்ளது எனலாம்.

கடந்த சில ஆண்டுகளாக தமிழக மக்கள் உள்ளத்தை வாட்டி வதைத்துக் கொண்டிருந்த இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது. இது நமக்கு மகிழ்ச்சியையும், நிம்மதியையும் தருகிறது.

இந்நிலை காண, அண்ணாவின் பெயரால் அமைந்த தமிழக அரசு சிறிதும் தொய்வின்றி கடந்த சில ஆண்டுகளாகப் பெரு முயற்சி செய்து வந்ததைத் தமிழகம் அறியும்.

நமது உள்ளத் தவிப்பை உணர்ந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், தீவிர முயற்சி எடுத்து அயராது பேச்சுவார்த்தை நடத்தி ஒரு உடன்பாடு கண்டுள்ளார். மாபெரும் தேசமான இந்தியாவின் தலைவராகவும், நடுநிலை நாடுகளின் நாயகராகவும், உலக சமாதானக் காவலராகவும் நின்று, பெரும் பொறுப்பை ஏற்று இந்திய—இலங்கை உடன்பாடு கண்டதன் வாயிலாக நமது பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் மிகப்பெரிய சரித்திரச் சாதனை நிகழ்த்தியுள்ளார். இந்த உடன்பாட்டின் காரணமாக இந்துமாக்கடல் பகுதியில் அமைதிக்கு உத்தரவாதம் ஏற்பட்டுள்ளது. இந்த மாபெரும் சாதனைக்காக நமது பிரதமர் அவர்களை வரலாறு என்றென்றும் போற்றிப்புகழும் என்பதில் ஐயமில்லை.

இந்த ஒப்பந்தத்தின் விளைவாகத் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டு இலங்கைத் தமிழ்ப்பகுதிகளில் அமைதி ஏற்பட்டிருப்பதையும், அங்குள்ள மக்கள் சகஜ வாழ்க்கைக்குத் திரும்பி வருவதையும் கண்டு தமிழக மக்கள் பெரிதும் நிம்மதி அடைந்துள்ளனர்.

இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களை சமஉரிமை படைத்தவர்களாக நடத்துவதுதான் இலங்கையின் வளமான எதிர்காலத்திற்கு உத்தரவாதமாக இருக்கும் என்பதை அங்குள்ள பெரும்பான்மையினர் உணரவேண்டும். மாபெரும் தேசமான இந்தியாவின் நல்லெண்ண முயற்சிக்கு வலிவு சேர்ப்பதே இலங்கையில் வாழ்கின்ற சிங்களர்—தமிழர் ஆகிய அனைவரின் கடமை என்பதையும் இந்நேரத்தில் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் உடன்பாடு ஏற்பட்டதைப் போலவே நாட்டின் மிக உயர்ந்த குடியரசுத் தலைவர் பதவியில் நமது ஆர்.வி. அவர்கள் பெருத்த வெற்றிப்புகழுடன் வீற்றிருக்கும் வாய்ப்புக் கிட்டியதால் தமிழக மக்கள் பெருமிதமடைந்துள்ளனர்.

இந்த உணர்வுகளோடு தமிழக மக்கள் கூடுதல் உற்சாகத்துடன் நாட்டுக்கான கடமைகளை ஆற்றிட முன்வர வேண்டும். வளர்ச்சித் திட்டங்களையும், சமூக நலத் திட்டங்களையும் வெற்றியுடன் நிறைவேற்றி சீரான வளர்ச்சிக்கு வழிகாட்டும் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. சாதி மதப் பூசல்கள், வன்முறைகள் தலைகாட்டாத வகையில் அமைதிப் பூங்காவாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது.

தேசிய ஒருமைப்பாட்டு முயற்சிகளுக்கு வலிவு சேர்க்கிற பணிகளில் தமிழ்நாடு ஆர்வமுடன் ஒத்துழைப்பு நல்கி வருகிறது. இதே நிலையைத் தொடர்ந்து கட்டிக் காத்திட உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் நாடுகிறேன்.

வன்முறை, வெறித்தனம், வதந்தி பரப்புதல், மக்களைப் பிளவுபடுத்தல் இவற்றையே நோக்கமாகக் கொண்டுள்ள சீர்குலைவுச் சக்திகளிடமிருந்து நாட்டைப் பாதுகாப்போம் என்று இன்று நாம் அனைவரும் சபதம் ஏற்றிடுவோம்!

கடமைகளை இன்முகத்துடன் ஆற்றி உரிமைகளைப் பெற்றிடுவோம்! அமைதியும், ஒற்றுமையும் காத்து வளர்ச்சிக்கு வழிவகுப்போம்! புதிய சமத்துவ சமதர்ம அமைப்புக்காகத் தொடர்ந்து பாடுபடுவோம்.

நாடு இன்றிருக்கும் சிக்கலான சூழ்நிலையில் சிறுபான்மை மக்களின் நலனைக் காத்தும், ஏழை, எளிய மக்களின் உள்ளக் கிடக்கைகளுக்கு உருவம் கொடுத்தும், பயங்கரவாதத்தை எதிர்த்தும், அந்நியச் சக்திகளின் தீய எண்ணங்களை முறியடித்தும், தனது அயராத உழைப்பாலும், சிறந்த ராஜதந்திரத்தாலும் இந்திய நாட்டைக் கட்டிக்காத்துவரும் நமது பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு நன்றியும், வாழ்த்தும் தெரிவிப்போம்.

இத்திருநாளில் தேசிய ஒற்றுமை ஓங்கவும், இந்த நன்னாடு உலக அரங்கில் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் திறமையான தலைமையின் கீழ் தலைநிமிர்ந்து நிற்கவும், அவரது எல்லா முயற்சிகளுக்கும் நமது ஆதரவை உறுதிப்படுத்தி அவரது கரங்களைப் பலப்படுத்த சபதம் ஏற்போம்.

‘உழைப்பவரே உயர்ந்தவர், உழைப்பே உயர்வு தரும்’ எனும் மூலமந்திரத்தை மனதில் இருத்தி, ‘உழைப்பால் நாட்டை உயர்த்திட வாரீர்’ என அனைவரையும் அன்புக் கரம் கூப்பி அழைக்கிறேன்.

வாழ்க சுதந்திரம்!

வெல்க இந்தியா!

அண்ணா நாமம் வாழ்க!

(1987ஆம் ஆண்டு விடுதலைத் திருநாளையொட்டி, நியூயார்க் நகரில் இருந்து வெளியிட்ட செய்தி)

"எவ்வளவு உயர்ந்த கருத்தானாலும், உலகத்தையே உய்விக்கும் ஆற்றலை அது பெற்றிருந்தாலும், எந்த உள்ளம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறோமோ, அந்த உள்ளத்திற்கு உரிமை படைத்தவர்களை நம்மீது நம்பிக்கை கொள்ளும் நிலையை முதலில் உண்டு பண்ண வேண்டும்."

பாரத ரத்னா புரட்சித் தலைவர்
டாக்டர் எம்.ஜி.ஆர்.

வெளியீடு :
இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத்துறை